சிவமயம்.

ஸ்ரீலஸ்ரீ தாண்டவராயஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

கைவல்லிய நவநீதம

மூலமும்,

ஸ்ரீ சிதம்பரத்திலெழுந்தருளியிருந்த

ஸ்ரீ – கோவிலூர்

ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பலஸ்வாமிகள்

இயற்றிய

தத்துவார்த்த தீபமென்னும் உரையும்.

இவை ஷை ஸ்வாமிகள் மாணாக்கரும்

மடாதிபதியுமான

ஸ்ரீ சிதம்பரஸ்வாமிகளால்

பார்வையிடப்பட்டு,

ஷை ஸ்வாமிகளி னுத்திரவின்படி

சென்னை: வியாசர்பாடி

ஸ்ரீ. க. சிவப்பிரகாச ஸ்வாமிகள் மாணவர்

ஸ்ரீ. மூர்த்தி ஸ்வாமிகளால்

சென்னை அமெரிக்கன் டைமண்ட் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன

[ஐந்தாம் பதிப்பு]

காபிரைட்.] 1922 [விலை ரூபா 3.

16993

பொன்னம்பல ஸ்வாமிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தத்துவவிளக்கப் படலத்தின்

அநுக்கிரமணிகை.

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
1	மங்களாசரணை	3
2	ஆசை யனைத்தும் மூவேடணையுளடங்கல்	4
3	அஞ்ஞானிகளிடத்து விராகம் மந்தம், ஞானிகளிடத்து விராகம் திடம் எனல்	,,
4	பொன்னிலமாதர் என்பதற்கு வேறுபொருள் ..	5
5	சேதனப் பிரபஞ்சமாத்திரத்தில், சாட்சித்தன்மை யுண்மையும், அசேதனப் பிரபஞ்சத்தி லஃதின்மையும் ...	,,
6	விசேஷண லட்சணம், உபாதி லக்ஷணங்களோடு அவச்சேதவாதத்தன்மை, ஆபாசவாதத்தன்மைகள் ...	6
7	இந்நூலாசிரியருக் காபாசவாதமே உடன்பாடு அவச்சேத வாதமன்றெனல்	7
8	அவச்சேத வாதத்திற் றோடம் ...	,,
9	தேகத்திற்குப் புறம்பே ஆபாசம் பிரகாசமும், சாட்சிப் பிரகாசமும்	8
10	உள்ளே ஆபாசப்பிரகாசமும், சாட்சிப்பிரகாசமும் ...	,,
11	சாட்சிப்பிரகாசத்தில் விருத்தி யங்கீகாரபட்சம் ...	9
12	ஆகாச திருஷ்டாந்தத்தாற் கொள்ளக்கிடந்ததோரிரகசியம் ..	,,
13	மனோலயமே பிரஹ்மோபலப்தி ஸ்தானமெனல் ..	10
14	செய்யுளின் மூன்றாம் பாதத்திற்கு வேறொருபொருள் ..	11
15	ஏகநாயகன் என்றதற்குப் பொருள்	,,
16	காரணப்பிரஹ்மத்திற்குச்சாட்சித்தன்மை அசம்பவமாகாமை ..	,,
17	பூதங்கள் என்றது, விவாத விஷயமாதலால், அதற்குச் சமாதானம்	,,
18	வேதாந்தாசாரிய சிரோமணியாகிய வியாசபகவான் கருத்து...	12
19	அந்நியத்தின் நிந்தை, ஒன்றன் றுதியின்பொருட் டென்பதற்குத் திருஷ்டாந்தம்	,,
20	ஐந்து தேவதைகளி னுபாசகர்க்கும் சமபயன் ...	13

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
21	பரமாத்மா வொருவரிடத்து நானா நாமரூபங் கூடுமாறு …	13
22	புராண வாக்கியங்களின் விரோத சங்கைக்கு முக்கிய சமாதானம்	14
23	மந்தப்பிரக்ஞர் காரியப் பிரஹ்மத்தை உபாசிக்குமாறு …	,,
24	காரணப்பிரஹ்மத்தை உபாசிக்குமாறு … …	15
25	உபலட்சணம் … … …	,,
26	வியாசர் அபிப்பிராய மறியாமற் சைவராதியோர் துக்கிக்குமாறு	16
27	ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவம் பேதபரமன்று சுபாவசித்தமா மெனல் … … …	18
28	நூற்கு அதிகாரி … … …	21
29	நூற்கு விஷயம் .. … …	,,
30	நூற்குச் சம்பந்தம் .. .. …	23
31	நூற்குப் பயன் . . …	,,
32	சாதன சதுஷ்டயம் … .. …	25
33	தாபத்திரயம் . . …	28
34	அதிகாரிபேதம் …	29
35	விதிவத்துப சந்நத்துவம் . . …	,,
36	தீட்சைசெய் தியரகைகுணஞ் சோதித்தல் .. …	31
37	18-முதல் 20-வது செய்யுள் வரையும், போதனுப் பிரகாரம்	32
38	ஜீவாதி சத்தவாசியம் …	34
39	சாக்கிராதி அவஸ்தைகளினியல்பு … …	37
40	அத்தியாச சாமக்கிரிகள் … … …	39
41	திருஷ்டாந்தத்தில் அத்தியாரோப விலக்கணம் ..	40
42	சத்கியாதிவாதநிரூபணமும், கண்டனமும் .. …	41
43	அசத்கியாதிவாதிகள் கொள்கை … …	42
44	ஆத்மக்கியாதிவாதிகள் கொள்கை … …	,,
45	அந்நியதாக்கியாதிகள் கொள்கை .. …	,,
46	அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதிகள் ரீதிகண்டனத்தோடு அக்கியாதிவாதிகள் கொள்கை …	43
47	அக்கியாதி மதகண்டனம் … …	,,
48	அத்வைதசித்தாந்தமாகிய அநிர்வசனீயக்கியாதி நிரூபணம்…	44
49	பரிணாமவிவர்த்தங்களினிலக்கணம் … …	45
50	மித்தியா சர்ப்பத்திற் கதிஷ்டானம் இரச்சுவுபஹிதசேதனமெனல்	,,
51	இரச்சுஞானத்தால் சர்ப்பநிவிர்த்தி கூடாதெனல் …	46
52	இரச்சுஞானத்தால் சர்ப்பநிவிர்த்தி கூடுமாறு …	,,
53	இரச்சுஞானத்தால் சர்ப்பஞானநிவிர்த்தி கூடாதெனல் …	,,
54	இரச்சுஞானத்தால் சர்ப்பஞானநிவிர்த்தி கூடுமாறு …	47

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
55	நிவிர்த்தி இருவகைத்தெனல்	47
56	மற்றுமொரு சமாதானம்	,,
57	பின்னுமொரு சமாதானம்	,,
58	சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானமொன்றே யெனல்	,,
59	சதசத் விலட்சணத்திற்குப் பொருள்கூறுவது பொருந்தாதெனல்	49
60	அதற்குச் சமாதானம்	,,
61	அத்தியாச விலக்கணம்	,,
62	அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை கூறினதற்குத் தாற்பரியம்	51
63	அத்தியாச வேறுபாட்டிற்குதாரணம்	,,
64	தார்ஷ்டாந்தத்தில் அத்தியாசவிலக்கணம்	53
65	அவ்வியத்தாதி சத்தங்கட்குப் பொருள்	55
66	முக்குணங்களி னுருவமாதி	,,
67	மற்றொருவகைச் சிருஷ்டி	56
68	சகத்துற்பத்தியில் சுருதிக்கபிப்பிராய மின்றெனல் ...	57
69	சகத்துற்பத்திக் கிரமத்தில், சூத்திரகாரர், பாஷ்யகாரரபிப்பிராயம்	,,
70	அவித்தை அநந்தம் என்பது முதலிய வாசஸ்பதிமதம் ...	60
71	வாசஸ்பதி மதத்தின் றோடம்	,,
72	அஞ்ஞானம் ஏகம், அம்சம் அநேகம்	,,
73	அஞ்ஞானம் சுவாசிரய சுவவிஷயமெனும் பட்சம் ...	,,
74	விரோசனன் மதம்	67
75	சார்வாக ஏகதேசிகளின் இந்திரியாத்மவாதம் ...	68
76	பிராணாத்மவாதம்	,,
77	பாஞ்சராத்திர மதாநுசாரியார் கொள்கை	69
78	க்ஷணிகவிஞ்ஞானவாதம்	,,
79	பாட்டமதம்	,,
80	சூனியவாதியரான பௌத்தர் மதம்	70
81	பிரபாகரமதம்	,,
82	சரீரத்திரயங்களை ஈசுரனுக்குக் கோசமாகக் கூறியதற்குத் தாற்பரியம்	71
83	அத்தியாரோபயுக்தி னுபயோகம்	72
84	சாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதியாகலின், சொப்பனம் சத்தியமென்னும் பூர்வபட்சம்	73

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
85	மற்றும் பூர்வபட்சமாகச் சொப்பனம் சத்தியமெனல் ...	73
86	சொப்பனம் ஸ்மிருதியென்பாரை மறுத்தல் ...	,,
87	பிரத்தியட்சஞானம் இருவகைத்தெனல்	,,
88	சொப்பனம் சத்தியமென்னும் மற்றொரு பூர்வபட்சமறுப்பு ...	74
89	சொப்பன பதார்த்தங்கட்கு அநிர்வசனீயமாக உற்பத்தியுண்டெனல்	75
90	சொப்பனபதார்த்தம் உற்பத்தியாமேல், சத்தியமாமென்னுஞ் சங்கைக்குச் சமாதானம்	76
91	சாக்கிரசொப்பனம் இரண்டிற்கும் அதிஷ்டானமும், உபாதானமும் ஒன்றெனில், அவற்றிற்குப் பேதங்கூடாதென்னுஞ் சங்கையும் சமாதானமும்	77
92	சொப்பனம்போலச் சாக்கிரத்திற்கும் தேசகால சாமக்கிரியின்மை	78
93	சாக்கிரப் பிரபஞ்சத்திற்குத் தேசகால சாமக்கிரியின்றென்பதிற் பிரமாணம்	,,
94	மதுசூதன சுவாமிகளின் வாக்கியம்பற்றிச் சாக்கிரப் பிரபஞ்சத்திற்கு யோக்கிய காலதேசம் உண்டெனல் ...	,,
95	சாக்கிரப் பிரபஞ்சத்திற்கு யோக்கியகாலதேசம் உண்டென்று மதுசூதன சுவாமிகளுக்கு அபிப்பிராயம் இன்றெனல் ...	79
96	மதுசூதன சுவாமிகள் அபிப்ராயம்	,,
97	தேசகாலங்களிற் காரணத்தன்மை யின்மைக்கு ஏதுக்கள் ...	,,
98	பூர்வபட்சமாகத் தேசகாலங்கட்குக் காரணத்தன்மை உண்டென்பதில் ஏதுக்கள்	,,
99	பிரஹ்மத்தின் காரணத்தன்மை தேசகாலங்களில் அந்நியதாக்கியாதி ரீதியாற் றோற்றுகின்றதெனல்	80
100	பிரஹ்மத்தின் காரணத்தன்மை அந்நியதாக்கியாதி ரீதியால் சர்வத்திலுந் தோன்றவேண்டுமென்னும் பூர்வபட்சியின் சங்கைக்குச் சமாதானம்	81
101	திருஷ்டாந்தமுகத்தால் பரமார்த்தமாகத் தேசகாலங்களிற் காரணத்தன்மை இன்றெனல்	82
102	சொப்பனபதார்த்தத்தினும் சாக்கிரபதார்த்தம் விலட்சணமாமெனல்	,,
103	சித்தாந்தம்	83
104, 105, 106	சாக்கிரபதார்த்தங்கள் சொப்பனபதார்த்தங்கள்போல ஓரவித்தையின் பரிணாமமல்ல வெவ்வேறு காரணங்களினின்று முண்டாகின்றனவென்னுஞ்சங்கையும் அதன் மறுப்பும், திருஷ்டி சிருஷ்டிவாதமும்	,,

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
107	46 - வதூ 47 - வது செய்யுளில் அபவாதவிலக்கணம் ..	86
108	49 - வது முதல் 52 - வது செய்யுள்வரையும், ஆவரணசத்தியின்றன்மை	90
109	சாமான்ய விசேஷவிலக்கணம் ..	92
110	ஈசுரனிடத்தில் ஆவரணம் அங்கிகாரம் அத்வைத கிரந்தங்களில் இன்றெனல்	94
111	53 - முதல் 55 - ம் செய்யுள்வரையும், விட்சேபசக்தி, ஆவரணசத்திகளாலுறும் நன்கு நீங்கு	,,
112	விட்சேபசத்தி பொய்யாகலின், அதனால் பெறப்படு முத்தியும் பொய்யாமென்னுங் கடாவும், அதற்கு விடையும் ...	98
113	கற்பிதநிவிர்த்தி அதிஷ்டான ரூபமெனல்	,,
114	அவித்தை நீங்குமாறு	,,
115	58 - முதல் 63 - ம் செய்யுள்வரையும், திருஷ்டாந்தத்தோடு சீவசப்தாவஸ்தை	99
116	64 - முதல் 82 - ம் செய்யுள்வரையும் மஹாவாக்கியவிசாரம் ...	103
117	சக்திவிருத்தி, லட்சணாவிருத்திகளினியல்பு	,,
118	பிரஹ்மத்தினியல்பு	104
119	ஈசுரனியல்பு	105
120	கூடஸ்தனியல்பு	106
121	சீவனியல்பு	107
122	67 - முதல் 68 - ம் செய்யுள்வரையும், பஞ்சகோச விவேகம் ..	108
123	ஆன்மவிலக்கணமும், அநான்மவிலக்கணமும ...	109
124	அப்பிரகாசமாகிய கடஞானம் அநுவியவசாயத்தால் பிரகாசிக்கிறதென்னும் நியாயமதத்தில அநவஸ்தாதோஷம ..	115
125	நியாயமதகண்டனம்	116
126	முராரிமிசிரமதகண்டனம்	118
127	பட்டர்மதகண்டனம்	,,
128	பிரபாகரமதகண்டனம்	,,
129	76 - முதல் 77 - ம் செய்யுள்வரையும், அநுபவரூப ஆன்மா அநுபவ விஷயமாகாதெனல்	119
130	வாச்சியார்த்தங்கள் பேததர்ம முடையனவாகலின், அவற்றிற்கு அயிக்கியங்கூடாதெனில்	120
131	78 - முதல் 82 - ம் செய்யுள்வரையும், மூவகை இலக்கணையும், அவைகளின் உதாரணமும்	121
132	தார்ஷ்டாந்தத்தில் பாகத்தியாகலட்சணையால் சாமவேத மஹாவாக்கியத்திற்குப் பொருள்கோளியல்பு ...	124

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
133	ஏனைய மஹாவாக்கியங்களின் பொருள்கோளியல்பு	125
134	சத்தியாதிபதங்களின் பொருள்கோளியல்பு	,,
135	துவிதவிருத்தியாதி	126
136	அநுபூதிநிலை	127
137	89-முதல் 92-ம் செய்யுள்வரையும், பிரதிபாதத் திரயமும், அவைகளின் விரோதிகளான சிரவணாதிகளினியல்பும்,	131
138	94-முதல் 104-ம் செய்யுள்வரையும் ஜீவன்முத்தரின் பாகுபாடும், அவர்களினியல்பும்	135
139	ஜீவன்முத்தரின் மகிமை	144
140	கர்மத்திரய வொழிபு	145
141	சஞ்சிதாகாமியங்களைப்போலப் பிராரத்தமும் பொருந்தாதென்று ஒரோவிடத்திற் கூறுவதற்கு அபிப்பிராயம்	146
142	நாநா சரீராரம்பகமான ஓர் கருமத்தால் பிரமசரீரத்தில் ஞானம் உண்டாகில, அவனுக்கு அந்நியசரீரப் பிராப்தியுண்டென்னுஞ் சங்கைக்குச் சமாதானம்	,,
143	பிராரத்தாநுபவகாலத்தில் ஞானியின் தேகத்தாலுளதாகும் ஆகாமியம் போமவழி	147
144	விதேகமுத்தியினியல்பு	148
145	ஞானிகள் தேகபாதத்தில் காலதேசாதி நியமமின்மை	149
146	உபாசகர்க்குத் தேகபாதத்தில் காலதேசாதிகளின்பேட்சை	,,
147	ஞானிகடேகம் சவமாய் வீழில் அது விதேககைவல்லியமன்றாமெனனுமாசங்கைக்குச் சமாதானம்	150
148	பிரஹ்மத்துவம் ஏற்கெனவே யுள்ளதன்றி நூதனமாக வுண்டானதன்றெனல்	152

தத்துவவிளக்கப் படலத்தின்

அநுக்கிரமணிகை

முற்றிற்று.

சிவமயம்.

கைவல்லிய நவநீதப்

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.	பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
5	12	விடைய	விடய	134	30	அசங்சி	அசங்கசி
21	31	கூறிய	கூரிய	135	25	கற்பகங்	கற்பங்
22	33	காயச்சி	காய்ச்சி	141	16	பிஹ்ம	பிரஹ்ம
22	36	தார்தம்	தார்த்தம்	141	24	இண்டு	இரண்டு
24	6	தென்பதும்	தெதென்பதும்	159	37	கின்ருர்	கின்ருன்
,,	26	சாவேச்சை	சுவேச்சை	172	12	கணக்கிறெ	கணக்கிறு
27	7	சிக்கபட்ட	சிக்கப்பட்ட	179	34	பெனறு	யென்று
33	24	சற்றி	சுற்றி	179	35	கந்துவ	தத்துவ
,,	31	உபதெசி	உபதேசி	181	32	இசற்	இற்
35	9	உன்னை	உன்னை	186	22	சிறுது	சிறிது
37	27	யெனினும்	எனினும்	188	32	நிவிர்த்திகா	நிவிர்த்திக்கா
,,	32	சுழுத்திலும்	சுழுத்தியிலும்	195	32	அகித்திதி	அகிந்திதி
39	5	தாகாச	சாகாச	200	1	பிராத்தி	பிராப்தி
,,	11	கூறுத்	கூறத்	201	14	வாதாரா	வாதரா
40	17	பனி	பணி	204	14	சிவபிர	சிவப்பிர
51	31	இராஜத்தில	இராஜதத்தில்	208	2	சுஞர்	ஈசஞர்
53	7	பந்த	பந்தம்	208	3	ஈசரன்	ஈசுரன்
,,	39	பந்தமும்	பந்தமுங்	211	14	ஏன்னும்	என்னும்
54	11	அதில	அதில்	225	16	என்றுங்	என்று
60	27	ஆசிரிய	ஆசிரய	227	31	உலமும்	உலகமும்
61	17	நில்லாது	நில்லா[illegible]து	233	16	ஓடு	ஓடி
67	28	கேசமும்	கோசமும்	238	5	பிராபதிச	பிராப்தி
69	9	ஆதாரமே	ஆகாரமே	210	1	பிரஹமா	பிரமா
75	10	கூடிய	கூடி	242	18	சாதிபி	சாதிப்பி
83	7	கூட்	கூட	244	32	திகள	திகள்
91	15	வுணர்வு	உணர்வு	244	32	ரதில	ரதில்
92	1	தென்பர்	தென்பார்	254	24	நிவிர்தநி	நிவிர்த்தி
94	5	அஞ்ஞான	அஞ்ஞாத	255	14	கண	கண்
91	8	ஞான	ஞானம்	259	19	முகமாச்	முகமாகச
97	16	மறறும்	மற்றும்	271	13	டத்தனி	டத்தினி
100	15	சாரச்	சார	277	1	ஓமோரர்	ஓமோர்
102	1	நித்தியப	நித்தியாப	291	35	முசயா	முகசியா
102	17	தகம	சகம	293	25	வதது வதகை	வந்து வதகைத
103	17	றஜோக்	றயோக்	295	25	ஆகிய	ஆசி
107	3	கூறிய	கூடிய	295	31	ஷோற்றுமா	தோற்றுமா
115	1	யத்திரும்	யந்திரும்	296	35	சசிதா	சஞ்சிதா
116	20	மத்தில்	மதத்தில்	310	19	லமலரி	டலயலரி
125	2	பத்திற்கு	பதத்திற்கு	316	17	குருசசு	குருசிசு
125	18	சிவவனும்	சிவனும்	317	36	சும்சதி	சம்சநி
128	20	மெளள	மெள்ள	326	33	ஞானதைத	ஞானத்தை
128	23	குளிமுக	குளிர்முக	326	33	சாததிர	சாத்திர
132	34	பந்தஙக	பந்தங்க	337	17	சநதி	சந்தி
134	26	விகற்பனி	விகற்பங்களி	330	38	மறை ஆமை	மறை யாமை

ஓம்

தத் ஸத்

பரப்பிரஹ்மணே நம

முகவுரை.

உலகின்கண் ஆன்மாக்கள் விரும்பத்தக்கது துக்கத்தினீக்கமும் சுகத்தினடைவுமாமென்பது யாவருநந் தெற்றெனவுணர்ந்த விஷயமேயாம்.

இத்தகையவடைவு கேவலம் பிரஹ்மஞான மொன்றினுலேயே யடையப்படும். இதன்பொருட்டே பரம கருணாநிதியாகிய பரமேசுரன் அதிகாரிகளின் வேறுபாட்டிற் கிணங்க கன்மம், பக்தி, யோகம், ஞானமென்னும் நான்கினையும் வேதங்களின் வாயிலாகக் கூறியருளினர்.

இவற்றுள் கன்மம், பக்தி, யோகம் மூன்றும சித்தசுத்திக் கேதுவாயும் ஞானமொன்றே அநர்த்த நிவிர்த்தி, ஆநந்தப்பிராப்தி வடிவ மோக்ஷத்தைப் பயப்பதாயு மிருத்தலின் பண்டையகாலத்து நம்மகரிஷிகள் ஞானத்தினையே பிரதிபாதிப்பதாகிய உபநிஷத்து, கீதை, பிரம சூத்திரமென்னு மூன்றினையும் அநுசரித்து வழிநூல், சார்பு நூல்களாக வாசிட்டம், பஞ்சதசி, விவேக சூடாமணி முதலிய கிரந்தங்களை இயற்றியருளினர். தமிழ்ப் பாஷையின்கண் அவைகளின் பொருளை யெளிதி னுணருமாறு இவைகளை யெல்லாம் சங்கிரகித்து கைவல்ய நவநீதம் என்னும் நூலை ஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகள் செய்யுள்வடிவா யியற்றியருளினர். அதற்கு எமது பரமகுருவாய் விளங்கிய ஸ்ரீமத். பொன்னம்பல ஞானதேசிகரவர்களால் முதனூல்களைத்தழுவி, "தத்துவார்த்ததீப" மென்னும் உரை யியற்றப்பட்டது. அது மடாலயத்தின்பேரால் காபி ரைட் ரிஜிஸ்தரா யிருக்கிறது அவ்வாறியற்றிய உரையின முதற்பதிப்பு தஞ்சை, "நாஷனல்" பிரஸிலும், இரண்டாம்பதிப்பு கொண்ணூர் மாணிக்க முதலியாரால் சென்னை மநோன்மணி 'விலாஸம் பிரசிலும், மூன்றாம்பதிப்பு சென்னை சாது மஹாத்மா சை இரத்தின செட்டியார் குமாரர் ஸ்ரீமத்.சிவசங்கர செட்டியாரவர்களால் தமது ரிப்பன் பிரசிலும், நான்காம் பதிப்பு

சென்னை ஆநந்தாஸ்ரம சாது மஹாசங்கத்தாரால் சென்னை வைஜயந்தி பிரசிலும் பதிப்பிக்கப்பட்டன.

எங்கள் உத்தரவின்றி சிலர் முன் டைட்டில் பேஜில்லாமல் கள்ளத்தனமாயும், பின்சில புத்தகத்தில் டைட்டில் பேஜுடனும் ராயல் 12-பக்க அளவில் மிகுந்த பிழைகணிறைவுடன் அச்சிட்டு விற்பதாய்த் தெரிகிறது

ஆனதால் இப்புத்தகத்தை வாங்கு மொவ்வொருவரும் கீழ்க்கண்டபடி, சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல ஸ்வாமிகள் மடாலயம் "ஸ்ரீ பரஞ்ஜோதி ஸ்வாமிகள்" கையெழுத்திட்ட புத்தகத்தையே வாங்க வேண்டுகின்றேன்

மேற்கண்ட ராயல 12-பக்கமுள்ள புத்தகத்தை வாங்கி விற்பவர்கள் புத்தகத்தின் நஷ்டத்திற்கும் தண்டனைக்கு முள்ளாவார்களென்பதை இதன்மூலம் அறிவித்திருக்கிறது.

விலாசம்.

குரு ஸ்வாமிகள்,

ஸ்ரீ கர சிவப்பிரகாச ஸ்வாமிகள் மடாலயம்,

முக்கிய அறிவிப்பு.

இப்புத்தகத்தை வாங்கும் ஒவ்வொருவரும் அடியிற்கண்டபடி சிதம்பரம். ஸ்ரீ.பொன்னம்பல சுவாமிகள் மடாலயம் ஸ்ரீ. பரஞ்ஜோதி சுவாமிகளின் கையெழுத்துடன் பார்த்து வாங்கவேண்டியது. ஷெ கையெழுத்து இல்லாத புஸ்தகங்கள் சரியானவை யல்லவாகையால், அவற்றை வாங்குபவர்களும் விற்பவர்களும் சட்டப்படி தண்டனைக் குள்ளாவார்களென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது.

☞ கையெழுத்து :

சிவமயம்.

கைவல்லிய நவநீத
உரைச்சிறப்புப்பாயிரம்.

இஃது திருப்பாதிரிப்புலியூர்

க. ரா. சிவசிதம்பர முதலியாரியற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருவளர் தெய்வச் செழுமறை முடியின்
பொருளதைச் சூத்திரம் புகன்றனன் மேனாட்
டியாவுடை வல்லபத் தனி முனி வரனும்
வியாத னுக்கதற்கு விரித்தனர் பாடியம்
பற்பல ரவையெலாம் பக்க பாதச்
சொற்பயில் வனவே தூயவவ் வியாதன்
பொங்கர வணிந்த புராந்தகன் கலையே
சங்கர நாமந் தயங்கவோர் பார்க்கர
னென்னத் தோன்றி யெனதுசூத் திரத்துக்
குன்னத மெய்ப்பொரு ளுரைத்துமற் றம்பல
அற்புத நடத்தி யவிர்தரு மெனவே
பொற்புறு மற்புத புராண மதனில்
முந்துரைத் திமெருண் மொழிப்படி கலியுள்
வந்தவ தரித்து வேதரிநன் றுத
மூர்த்தியைத் தேவ முழங்குநீர் நதியினின்
றூர்த்தொடுத் தத்தலத் தமர்தரத் தாபனஞ்
செய்துபுன் சமண்முதற் செறிபல மதத்தையு
மைதுவென் றோங்கு மரியசீர்ச் சங்கர
பகவற் பாதர்செய் பாடிய மதுவே
தகவிற் பொதுமையாத் தழைத்துமன் னியாதல்
அன்னபா டியவழி யறிஞர்பற் பலரும்
சொன்னநூல் தமக்கோ தொகையிலை யவையெலாம்
தெள்ளிதி னுய்ந்துணர் சிந்தையன் றெய்வதக்
கள்ளிவர் தருமதுக் காடெனப் பெயரிய
திருநன் னிலத்தொளி திகழ்தரு மயில்
வருமொரு தாண்டவ ராயநா மத்தோன்
நாரா யணப்பெயர் நயந்ததன் னுசான்

சாராத் தனதுயர் சமாதியோ கத்தி கை
அன்பநீ யொருவே தாந்தநூ லறைகு தி
யென்பதா வருளிய வின்னுரை கடைப்பிடி த்
தாய்ந்தபின் னூற்பொரு ளனைத்தையுந் திரட்டி ர்
வாய்ந்தகை வல்லிய மாநவ நீதமா ம்
பெயரிற் புகன்றனன் பேசுமந் நூற் கோ
அயர்வுறு மூரைபல ரறைந்துள ரவைசிற் க
இந்தநா ளினிலோ ரினியநற் பேரு ரை
மூந்துநூற் பொருளெலா முழங்கிமன் விளங்க ய
சொன்னயம் பொருணயந் தொடைநய மா தி
யெந்நயங் களுஞ்சிறந் தெழுந்துமே லோங்க த்
தத்து வார்த்ரதீ பம்மெனத் தகுபெய ர
வைத்தினி தியற்றி மகிழ்க்கு வழங்கின ன்
அங்கவ னொளி வரைகுவன் முன்புக ல்
சங்கர பகவற் பாதர்தம் மரபி ற்
போந்தொரு சமிவனப் புண்ணிய க்ஷேத்திர ம்
ஆந்தகு மான வளிவணி கர்கள்வா ழ்
தருதிருக் கோயிலூர்த் தண்ணறும் பதிக்க ட்
டிருநெல்லை நாயகித் தேவியோ டமர்ந் த
கொற்றவா ளீசர்பொற் கோயில்வா னளா வி
யுற்றகோ புரங்களு மொளிர்விமா னங்களு ம்
வளமலி விடைமதின் மண்டபங் களுந்திரு க்
குளமுநீ ராழிக் கோதிவ் வண டபமு ம்
மற்றைய பிறவும் வயங்கிமன் பொலி வு
பெற்றிட வியற்றிப் பெரியோர் வசித்திட த்
தகுமடா லயமதுஞ் சால்புறச் சமைத்து த்
தொகுமடி யார்க்கெலாந் தூசன முதவி சு
சாற்றுமத் தகுவே தாந்தநன் குணர்த் தி
வீற்றினி திருந்த விழுத்தவசீ ல
முத்துரா மலிங்க முதல்வனுண் மலர டி
சித்தத் திருத்தித் திகழ்தே சிகனு ம்
சிதம்பர முனிபதி சேகர னெவர்க்கு ம்
இதம்பகர் வாய்மை யின்சொன் மாட்சிய ன்
கற்றவர்க் கினியன் கவின்றழை யுருவ ன்
உற்றவர் குறைதப வுதவுசீ ருதார ன்
தென்கலை வடகலை திகழ்ந்துத் தா னி
மன்கலை யாதியும் வாய்மடுத் தயர்ந்தோ ன்
சிவகா ருணியத் தெள்ளமு தக்கட ல்
பாவக வீசுர பத்தியா ரணிய ம்

வரமுறு பாச வயிராக் கியம லை
பிரம ஞானப் பெருந்தனிப் பாற்கர ன்
விரும்புற் றெத்தவ மேலவ ருஞ்சா ர்
பெரும்பற் றப்புலி யூரமர் பெரியோ ன்
தன்னம் பினர்க்கொரு தருவெனு ம்
பொன்னம் பலப்பெயர்ப் புநிதமா தவ னே

கட்டளைக்கலித்துறை.

பெற்றவன் சிற்சபைப் பிஞ்ஞக னோக்கம் பிரமநிலை
யுற்றவன் மெய்த்தவத் தொண்டருக் குற்றவ னோங்குநசை
யற்றவ னாறு சமய வதீத வரும்பொருணூல்
கற்றவன் பொன்னம் பலப்பெயர்ப் போதக காரணனே.

பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நொற்றவா ளீசர்திரு நெல்லைநா யகியொடமர்
கோயிலூர்ப் பதியிலன்னோர்
கோதிலருள் பெறுமுததி ராமலிங் கக்குரவர்
கூறுமநு பவநிலைமையி
னாற்றிடு சிதம்பரக் குரவர்பத சேகர
னோங்குபொன் னம்பலப்பே
ருறுதவன் யௌவனேச் சுராதத்வ தேசிகர்க்
குயர்கோயில் கட்டுவித்தோன்
மற்றும்வே தாந்தசூ டாமணி கைவல்லிய
மலிபகவற் கீதைக்கியன்
மாண்புரை வகுத்தவன் சாலிவா கனசகாப்
தத்தின்மூ வாறுசதமுன்
னுற்றவிரு பானேழ தாகுங்கு ரோதியாண்
டுத்துலை மதிச்சித்திரை
துன்னுநா ளிற்சிதம் பரநகரி லொளிர்சுயஞ்
சோதிபத முற்றனனரோ.

முற்றிற்று.

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
196	28-ம் செய்யுளிலும், 29-செய்யுளிலும் ஞானிக்கு ஞான திடத்தின் பொருட்டுச் சிரவணாதி வேண்டுமேயெனும் வினவும், அதற்கு விடையும்	189
197	30-முதல் 35-ம் செய்யுள் வரையும், ஆரூடரின் கிருத கிருத்தியத்தன்மையை கடாவிடைகளா லுணர்த்துதல் ..	191
198	சமாதியினியல்பு ...	193
199	ஆரூடனுக்குக் கர்த்தவ்விய மின்மையும், வியவகாரமும், ஞானமும் ஒன்றற்கொன்று விரோதமின்மையும்	194
200	ஒருவாற்றான், ஞானி ஈசுரனோடு ஒப்பாமெனல் ...	196
201	37-முதல் 39-ம் செய்யுள்வரையும், ஞானி சர்வான்மாவாயின், அவன் முத்தியடைந்து ஏனையோ ரடையாமைக்குக் காரணமென்னையெனுங் கடாவும், விம்பப் பிரதிவிம்ப நியாயத்தால் அதற்கு விடையும்	,,
202	40-முதல், 42-வது செய்யுள் வரையும், ஈசுர விபூதிகளில்லாத ஞானி அவரோடொப்பாமா றெங்ஙனமெனும் வினவும், அதற்கு விடையும்	198
203	ஈசுரன் அணிமாதி, முனிவனுக்குண்டாயிருத்தற்குக் காரணம்.	200
204	44,-45-ம் செய்யுளில் வாதராயணர் முதலிய பூர்வாசாரியர் போல இக்காலத்து ஞானிகளிடத்துச் சித்தியும், ஞானமும் எனில்லையெனும் வினவும், அதற்கு விடையும் ..	201
205	சித்திகளாற் பயனின்மையின், பூர்வகாலத்து ஞானிகளிலும் சிலர் சித்தியடையாமை ..	202
206	சித்திகளாற் பயனின்றேல், பூர்வகாலத்து ஞானிகளிற் சிலர், அவற்றிற்கு மெய்வருத்தமுற்ற தெற்றிற்கெனும் வினவும், விடையும்	,,
207	49, 50, 51 இம்மூன்று செய்யுளாலும், தாந்தாஞ்செய்த கர்மம் அநுபவித்தாலன்றித் தீராதென்றும், சஞ்சித கர்மங்கண் முழுதையும் ஞானக்கினி சுடுமென்றும் கூறுகிற்குஞ் சுருதி வாக்கியங்கள் ஒன்றற்கொன்று விரோதமாகலின் அவற்றில் யாதுண்மையெனும் வினவும், அதற்கு விடையும்	203
208	அறிந்தோரும் ஞானமான்மிய மறியாமல் கர்மப்படுகுழியில் வீழ்வானேனெனும், வினவும் அதற்கு விடையும் ...	206
209	54-முதல் 58-ம் செய்யுள்வரையும், ஈசுர சிருஷ்டியும், சீவ சிருஷ்டியும் வேறென்று வினவு முன்னிட்டுச் சுருதி யுத்தி யநுபவங்களா லுணர்த்தல்.	207

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
210	அச்சுவத்தமென்னும் சுருதிக்குப் பாவார்த்தம் ...	210
211	வியஞ்சன விருத்தியின் சொரூபம்	211
212	தற்செயலான காமாதிகளை தற்செயலென்னாது ஈசுரச்செயலென்பவரும், அவை ஈசுரச்செயலல்ல தற்செயலேயென்பவரு மடையும் பயன்	,,
213	60-முதல் 61-ம் செய்யுள்வரையும், ஈசுரனிடத்து வைஷம்மிய தோஷமின்றென்பதைக் கடாவிடைகளா லுணர்த்தல்	212
214	தமக்குறுதி வேண்டினரால் செயற்பாலனவான சோபானம் ..	214
215	ஞானத்திற்கு முக்கியவந்தரங்க சாதனமாகிய விசாரசொரூபம்.	215
216	ஞானத்திற்கு அந்தரங்க பகிரங்க சாதனங்கள் ...	216
217	64-முதல் 67-ம் செய்யுள் வரையும், நிஷ்காம கர்மாநுஷ்டானம் சித்தசுத்தி வாயிலாலல்லது, நேரே விசாரம்போல ஞானத்திற்குக் காரணமன்றென்பதைக் கடாவிடைகளா லுணர்த்தல்	218
218	68-முதல் 71-ம் செய்யுள்வரையும், போகசாதனம் ஞானமேயல்லாது, கருமமன்றெனக் கடாவிடைகளா லுணர்த்தல்	220
219	72-முதல் 76-ம் செய்யுள்வரையும், ஞானமே சுகத்தைப் பயவாநிற்குமென்னுஞ் சுருதி கர்மசதாலும் அஃதுளதாமெனனல் எற்றிற்கென வினாவும் அதற்கு விடையும் ...	223
220	77-முதல் 79-ம் செய்யுள்வரையும் அகம் பிரஹ்மமென்னும் அந்தக்கரணத்தின பரோட்ச விருத்தி ஞானமே மூலாஞ்ஞான விரோதியெனக் கடாவிடைகளா லுணர்த்தல் ..	229
221	அஞ்ஞானத்தின் விரோதியை விரித்துரைத்தல் ...	231
222	அவச்சேதவாதத்தில் அஞ்ஞான விரோதி	,,
223	ஆபாசவாதத்தில் அஞ்ஞான விரோதி	,,
224	80-முதல் 83-ம் செய்யுள்வரையும், கருமமும், ஞானமும் அந்தக்கரண காரியமாயினும் அஞ்ஞான விரோதி கர்மமல்ல ஞானமேயென்பதை வினாவை முன்னிட்டுணர்த்தல் ...	232
225	வஸ்துதந்திர கர்த்ததந்திரங்களி னியல்பு	235
226	84-முதல் 85-ம் செய்யுள்வரையும் தியானம் உண்மையன்றாயினும், அதற்குண்மையான முத்திபயக்கும் ஆற்றலுண்டென்பதைக் கடாவிடைகளாலுணர்த்தல் ..	236
227	தியானத்தான் முத்திவரின் விசாரமும் ஞானமும் ஏனென்னும் வினாவிற்கு விடை	238

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
228	அகண்டாநுபவசித்தி கூடுமாறு வினாவும், விடையும் ...	239
229	அகண்டாநுபவஞ் சீவன்முத்தரிடத்திருக்குமாறு ...	240
230	செகத்தில் அநாதரபுத்தி யுண்டாதற்கு ஓர் ஆக்யாயிகை ...	241
131	காரணந் துச்சமாகலின், காரியமும் அங்ஙனேயென வுணர்த்திப் பொய்யிலுறக்கமும் மெய்யில் விழிப்புமா யிருமெனல்.	242
232	91-முதல் 93-ம் செய்யுள்வரையும், மித்தையான செகத்தை மித்தையென்பதால் தோஷமின் றென்பதைக் கடாவிடைகளாலுணர்த்தல்	243
233	மாயையி னியல்பறிய அதனை அறுவகையாக வினாதல் ...	246
234	முதல் நான்கு வினாக்களுக்கு விடை	,,
235	மாயை அவாச்யவடிவாமென்பதை விரித்துணர்த்தல் ...	247
236	96-முதல் 98-ம் செய்யுள் வரையும், மாயையும், பிரஹ்மமும் வேறெனின்—வஸ்து த்விதமாமே? ஒன்றெனின்—வஸ்து மித்தையாமே? என்னும் இரண்டு வினாக்களுக்கு விடை	249
237	99-முதல் 100-ம் செய்யுள் வரையும், பரமார்த்தமாகச் சத்தியில்லையாயினும வியவகாரத்தில், யுத்தியினாற் கொள்ளற்பாலதெனல்	252
238	மாயாநிவிர்த்தி முத்தியாகலின், அதை நீக்குமாறு வினாதல் ...	253
239	மாயாநிவிர்த்தி யுபாயம்	254
240	பிருகதாரணிய சுருதியின் முற்பரியமும், சாந்தோக்கிய சுருதியின் பொருளும்	255
241	திருஷ்டாந்தத்தில் காரியம், சத்தி, ஆதாரம் இவைகளினியல்பு.	256
242	அநுமானத்தாலும் கடமித்தையெனல்	257
243	மண் சத்தியமென்பதில் அநுமானம் .. .	,,
244	பரிணாம ஆரம்பவாதங்களின் மறுப்பும், சித்தாந்தமாகிய விவர்த்த வாதமும்	,,
245	சூட்சும திருஷ்டியால் கடாதி சகல கற்பிதங்களுக்கும் சேதனமே அதிட்டானமெனல்	258
246	உண்மையில்லாத அசத்தாதிகளை நிவிர்த்திக்குமாறு வினாதலும், அதற்கு விடையும்	,,
247	இதனாற் பயனின்று இதனாற் பயனுண்டெனல் .	259
248	அத்வைதாநந்தம் .. .	260
249	சர்வ விருத்திகளிலும், ஆநந்தந் தோன்றாமைக்குக் காரணம் வினாதலும், அதற்கு விடையும்	261
250	சச்சிதாநந்த விலக்கணம் வினாதலும் அதற்கு விடையும் ..	265

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
251	சத்திலக்கண விரி	266
252	சித்திலக்கண விரி	,,
253	ஆநந்த விலக்கண விரி . ..	268
254	112-முதல் 114-ம் செய்யுள் வரையும், ஆன்மாவினிடத்துச் சச்சிதாநந்த வநுபவம் வினாதலும், அதற்கு விடையும்...	269
255	ஆன்மா சுகசாதன மன்றெனல்	173
256	ஆன்மாவிடத்துள்ள பிரியம் நிரதிசயமெனல் ..	274
257	ஆன்மா துவேஷத்திற்கு விஷயமாமோவெனில் —அன்றெனல்	275
258	வித்தபுத்திராதிகளில்|ஆன்மாவைக் கிட்டினதற்குத் தக்க தாரதம்மியப் பிரீதியும், ஆன்மாவின் முக்கியப் பிரீதியும் உளதெனல்	276
259	கௌணான்மா முதலியவற்றுள், இத்தருணத் திவ்வான்மா முக்கியமெனல்	278
260	கௌணீ விருத்தி	279
261	ஆன்மாநந்தம்	280
262	ஆநந்தபேதங் கூறல்	281
263	மூன்றாநந்தத்தில் ஏனைய வாநந்தம் அடங்குமாறு ...	,,
264	தொகுத்து எண்வகை யாநந்தங்களி னியல்புகூறல் ...	282
265	விஷயாநந்த வியல்பு	283
266	பிரஹ்மாநந்த வியல்பு	284
267	சுழுத்தி யாநந்தத்திற்குச் சுருதியிற் கூறும் பருந்து திருஷ்டாந்தம்.	,,
268	குமாரன் முதலிய மூவரை உதாரணங் கூறினதன் றாற்பரியம்.	285
269	சுழுத்தி யாநந்தந்திற்குச் சுருதி யுத்தி யநுபவம் ...	286
270	126-முதல் 127-ம் செய்யுள் வரையும், ஆநந்தமய னநுபவம் விஞ்ஞானமயனிடத்தில் எங்ஙனம் உதிக்கலாமென வினாதலும், அதற்கு விடையும்	287
271	பிரஹ்மாநந்தத்தி லழுந்தினோன் அதை விடவும் வெளிவரவும் காரணம் வினாதலும் அதற்கு விடையும் வாசனாநந்த வியல்பும்	289
272	நிஜாநந்த விலக்கணம்	290
273	முக்கியாநந்த விலக்கணம்	291
274	முக்கியாநந்த மகிமை	292
275	சார்வபூமன் முதலியோர் இனையரெனல்	293
276	முக்கியாநந்த மடைந்தோனைத் துதித்தல்	,,
277	சச்சிதாநந்தங்களி னொருமை யறிய வினாதல்	295

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
278	திருஷ்டாந்த முகத்தால் சச்சிதாநந்தங்களி னொருமை யுணர்த்தல்	296
279	சச்சிதாநந்தங்களி னொருமையைச் சுருதியாலுணர்த்தப் புகுந்து பிரஹ்மத்திற்குச் சுருதிபிற சொல்லிய விதி நாமங் கூறல்	297
280	விலக்கு நாமங்கள்	300
281	விதி விலக்குக் குணங்களாகச் சொன்னதற்குக் காரணமும் அவை குணங்களல்ல பிரஹ்மத்தின் சொரூபமெனலும்...	304
282	141 - முதல் 142 - ம் செய்யுள்வரையும் சச்சிதாநந்தங்களி னொருமையை யுத்தியா லுணர்த்தல்	306
283	சச்சிதாநந்தங்களி னொருமையை அநுபவத்தா லுணர்த்தல் .	308
284	சீடன் குருவருளின்படி அநுபூதியினின்றும் உத்திதனாயாரூடனாதல்	310
285	அஞ்ஞானபூமிகளி னேழும்	312
286	147 - முதல் 148 - ம் செய்யுள்வரையும், அஞ்ஞான பூமிகளினியல்பு	313
287	ஞானபூமிகளினேழும்	315
288	150 - 151 - ம் செய்யுள்வரையும், ஞானபூமிகளி னியல்பு.	,,
289	ஞானபூமிக ளேழையும் முத்தவத்தைகளாகக் கூறல் ..	317
290	விதேககைவல்லியத்தைத் துரியாதீதமென்பவ ரபிப்பிராயம்...	318
291	ஞானபூமிகளை யடைந்தோர்க்குறும் நாமவேறுபாடு ...	319
292	155 - முதல் 156 - ம் செய்யுள்வரையும் ஞானபூமிகளின் பெருமை	320
293	முத்திக்குத் துறவே காரணமெனச் சிலர் கூறுமயக்க மகற்ற வேண்டுமெனல	322
294	158 - முதல் 163 - ம் செய்யுள்வரையும் துறவிக்குக் காரணமும், துறவின் வேறுபாடும் சங்கைக்குச் சமாதானமும் ...	323
295	பிராமண வர்ணமாத்திரத்திற்குச் சந்நியாச வதிகாரம் ..	327
296	துறவறமன்றியும் இல்லறத்தார்க்கும் ஞானமுண்டெனல் ..	,,
297	க்ஷத்திர வைசியர்க்கு வித்துவச் சந்நியாசத்தி லதிகாரமுண்டு விவிதஷா சந்நியாசத்தி லதிகாரமில்லையெனல் ...	,,
298	வார்த்திகக்காரர் கொள்கை	,,
299	மற்றொரு கிரந்தக்காரர் கொள்கை	328
300	சூத்திரர்க்கு ஞானவேதுவான சிரவணத்தி லதிகாரமில்லை யென்னும் ஓர் கிரந்தக்காரர்மதம்	329

14 சந்தேகந்தெளிதற் படலத்தின் அநுக்கிரமணிகை.

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
301	சூத்திரர்க்கு இதிகாச புராணாதிகளின் சிரவணத்தி லதிகாரமும், அவர்க்கு உபதேசநிஷேதத்தின் அபிப்பிராயமும், வித்தையி னுபயோகிகளான கர்மத்தினபாவத்தா லதிகாரமில்லையென்பதற்குச் சமாதானமும், பேதத்திற்குப் பின்னமான அத்தியாத்ம கிரந்த சிரவணாதிகளி லதிகாரமும், இவ்வாறே பாஷ்யகாரர் அபிமதமாமெனலும் ...	329
302	வேதாநுசாரிகளைப்போலச் சகலமநுடர்க்கும் தத்துவஞானத்தி லதிகாரமுளதெனல்	330
303	ஞானஹேதுவான தெய்வசம்பத்தினியல்பும், அது தாரதம்மியமாயிருத்தலும் அதனிலாபத்தால் சூத்திரர்க்குப் புராணாதிகளின் விசாரத்தாலும், அந்நிய ஜாதிகட்குப் பாஷாப்பிரபந்தாதிகளின் சிரவணத்தாலும் ஞான வாயிலாக முக்திபுண்டாமெனல்	,,
304	164-முதல் 167-ம் செய்யுள்வரையும், துக்காபாவம் ...	331
305	168-முதல் 171-ம் செய்யுள்வரையும், சருவகாமாப்தி ...	334
306	172-முதல் 173-ம் செய்யுள்வரையும், கிருதகிருத்தியம் ...	337
307	174-முதல் 177-ம் செய்யுள்வரையும், பிராப்தப் பிராப்பியத்தன்மை	338
308	நூற்பயன்	340
309	நூல் செய்ததற்குக் காரணம்	341
310	திருஷ்டாந்தமுகமாக நூலால் விளை பயன்	342

சந்தேகந்தெளிதற்படலத்தின்

அநுக்கிரமணிகை

முற்றிற்று.

கைவல்லிய நவநீதச்செய்யுளின்

முதற்குறிப்பகராதி

பாடல்.		பக்கம்.	பாடல்.		பக்கம்.
அகமெனு	அ	197	ஆனபாவி		205
அக்கினிக		131	ஆனபின்		29
அசத்திலெ		260	ஆனாலையா		193
அசலநிர		300	இகமான	இ	265
அச்சுவத்		210	இக்குணங்		58
அடங்கிய		32	இங்குமப்படி		222
அதனையி		246	இசயமொத்த		311
அதுதானெ		54	இதுநினைக்		102
அத்தியாரோ		39	இந்தசரீர		211
அந்தக்கண		290	இந்தஞான		215
அந்தமுநடு		21	இந்தநிச்ச		240
அந்தவாறி		331	இந்தநீ		120
அப்படியிரு		337	இந்தமாயை		99
அரவன்று		86	இந்தவாறை		294
அரிதாகு		142	இப்படிப்		53
அரியமெ		148	இப்புவியி		321
அருவமாகு		249	இம்பரின		98
அருளுமை		232	இராசத		63
அழிவிலாத		206	இருவகை		325
அழுக்கொடு		61	இருளாக		271
அளிமகனெ		128	இலக்கமா		203
அறியாதம		102	இல்லையா		252
அறிவிக்கு		114	இவனதி		28
அறுசுவை		186	இவனையன்		198
அனகமை		202	இவ்வாறை		283
அனுபவா		127	இவ்வுடன்		64
அன்னபா		273	இன்னதுதே		35
அன்னதன்		31	இன்னவகை		303
ஆகமப்பிர	ஆ.	160	இன்னவாற		220
ஆடவர்		188	ஈசர்காரிய		209
ஆதாரம		91	ஈசனுக்கிது		59
ஆதிமுக்கு		63	ஈசனுமா		196
ஆரணப்		341	ஈனந்தரு		284
ஆரோப		40	ஈன்றளித்		17
ஆர்க்கு		253	உண்டுறங்	உ.	314

பாடல்.		பக்கம்.	பாடல்.		பக்கம்.
உதவும்புவி		287	குகன்றனை	கு.	295
உத்தமவெ		55	குரவர்சிகா		189
உத்தமகு		194	குலவுசற்		342
உருக்கியத		170	குளிரிளக		296
உருவங்களி		262	கெடலான	கெ.	278
உலகமான		229	கேவலநிலை	கே.	95
உன்முகம்		170	கைதவங்க	கை.	203
எத்தனைநா	எ.	134	சகமதிலி	ச.	92
எரிகின்ற		172	சடமதாகி		237
எல்லாங்க		114	சடமான		264
எல்லாச்சீவ		196	சட்டிகுட		197
எவருடை		17	சத்திசத்தனை		251
எவனுகிலு		293	சத்தேசித்		306
எனவுரைத்		158	சத்தொடுசித்		109
என்மனந்		206	சந்ததம்பு		158
என்னபுண்		339	சமர்தமம்		26
என்னுடை		19	சருவமுத்		236
என்னைத்தா		35	சாதனமின்	சா.	27
ஏகமாய்	ஏ.	180	சிஞ்ஞாசு	சி.	325
ஏமமாயா		62	சிட்டர்புக		323
ஐந்துபூதமு	ஐ.	65	சிட்டனில்		129
ஐயனேயெ		129	சித்துநா		338
ஐயாகேளீர்		191	சிரவணப்		26
ஒருவழியி	ஒ.	56	சிவசொரூ		201
ஒன்றாகிய		289	சிறந்தநன்		207
ஒன்றுகேண்		214	சீரியவீச	சீ.	71
ஓய்ந்தகனு	ஓ.	192	சீவபேத		204
கங்கையிற்	க.	122	சீவன்முத்		144
கடமீரின்		126	சுத்தமாஞ்	சு.	181
கடமெனு		148	சுத்தியில்		98
கண்டறிந்		234	சுருதியுத்தி		308
கரணமா		108	சுழுத்திபி		96
கருதும		174	சூக்குமச	சூ.	65
கருப்பை		252	செய்கையு	செ.	185
களங்கமற்		179	சென்மாந்த		270
கள்ளுமூனு		226	சென்றதுக		140
கற்பனைவந்த		72	சொரூபஞா	சொ.	229
காமமாதிக	கா.	137	சொல்லிய		152
காமியத்த		201	சொற்பன		244
காரணசரீ		336	சொன்னது		32
காரியங்க		250	ஞானங்கார	ஞா.	259
கானனீர்		153	ஞானமார்		135
கிளர்மக	கி.	190			

பாடல்.		பக்கம்.
தசபுமான்		103
தஞ்சமாங்		126
தடத்துமீ		199
தடையெ		131
தத்துவஞா		339
தத்துவத்தி		316
தத்துவமெ		124
தத்துவவநு		132
தத்துவவிசா		101
தர்ப்பணத்தி		221
தன்பதியல்		168
தன்னையுந்		34
தாகப்படும்	தா.	276
தாமதமிரா		263
தாலத்தின்		38
தானன்றி		261
தாணிகர்		90
திகழ்ந்தவீ	தி.	208
தினமுமண்		224
தீரராய்	தீ.	136
துரியநில	து.	318
துருத்திமா		230
துற்சங்க		315
துளங்குத		220
தூங்குஞ்சுக	தூ.	286
தூடணதம		89
தூலசூட்சு		112
தூலமேம		66
தெரிதரும	தெ.	193
தேகத்தனல	தே.	184
தேகமல்லா		36
தொடர்பவ	தொ.	31
தோற்றமாஞ்	தோ.	62
தோற்றமாஞ்சத்திதானு		95
நரரின்ம	ந.	199
நரர்குழிப		156
நலமெய்		212
நல்லவனே		195
நற்கருத்துடை		157
னைவுகண்		37
நன்மையா		223
நாசச்சரீ	நா.	269
நாலாம்பூமி		320
நானென		338
நானென்ற		332
நிசமானது	நி.	291
நித்தியம்பூ		297
நித்தியவநி		25
நிறைந்தவா		333
நிற்குணவ		304
நீநானென்	நீ.	130
நெய்யும்	நெ.	288
பங்கயாசன	ப.	243
பஞ்சகோச		111
பஞ்சினையூழி		145
படமுநூலு		88
படர்ந்தவே		22
பத்தியும்வ		219
பந்தயனைது		326
பலகலைபுமு		310
பன்னிய		123
பாவிமந்த	பா.	324
பிரமஞானி	பி.	144
பிரமபாவனை		132
பிரமமாந்த		100
பிரமரூபத்		238
பிறந்ததுண்		331
பிறிவதெப்		108
பின்னைமூவ		141
புண்ணிய	பு.	102
புலவர்புக		315
புலியுமநு		280
பூச்சியவீச	பூ.	107
பூரிக்குங்க		258
பூன்றமா		90
பேதகர்மத்	பே.	138
பேதமானது		120
பொய்மைமெ	பொ.	245
பொல்லாத		322
பொறுமை		147
பொன்னில		3
போகத்தில்	போ.	282
போகமாரு		225
போனசின்		218
மதுரமுங்க	ம.	119
மதுவிறைச்		226

முதற்குறிப்பகராதி.

பாடல்.			பக்கம்.	பாடல்.			பக்கம்.
மந்தமூந்தி		...	323	மோகவிருள்	மோ.	...	305
மந்திரமூர்		...	159	யோகஞா	யோ.	...	202
மரங்கள்		...	72	வகுத்தகர்	வ.	...	233
மலடிமை		...	241	வஞ்சகமி		...	173
மற்றைறமு		...	161	வடநூல்வல்		...	121
மனதுசத்		...	178	வணங்கிறி		...	30
மனத்திஞ		...	333	வந்தபோ		...	340
மனநாசஞ்		...	180	வாக்கியந்த	வா.	...	168
மனுடன்		...	292	வாதனுவசத்		...	335
மனைக்குள்		...	222	வாயுத்தம்ப		...	254
மனைவிலங்		...	213	வாராயென்		...	33
மாயையென்பது	மா.	...	242	விடயசுக	வி.	...	274
மாயையென்பதே		...	246	விண்ணென்		...	104
மானஞ்சி		...	281	வித்தியாநந்த		...	340
முத்தனைவே	மு.	...	24	விருத்திக		...	409
முத்திநல்		..	200	விருத்திஞா		...	233
மூந்தவகண்		...	313	விருத்தியும்		...	172
மூந்தியசங்		...	169	விவகாரவே		...	183
முற்புவிமூன்		...	317	வினவுமிட		...	312
முன்புகறச		...	111	வீடதாம்பரி	வீ.	..	239
முன்னிலங்க		...	319	வீயாதசத்		...	307
மூவராம்பர	மூ.	...	208	வேகின்ற	வே.	...	275
மெய்யுங்	மெ.	...	188	வேடமாறி		...	219
மேவுமண்	மே.	...	255				

கைவல்லிய நவநீதச்செய்யுளின்

முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

சந்தேகந்தெளிதற் படலத்தின்

அநுக்கிரமணிகை.

ரசங்கத் தொகை.	விஷயம்.	பங்கத் தொகை.
49	சமுசயபேதம்	155
150	ஐவகைப்பேதம் .	159
151	பிரஹ்மம் பிரமாணாதீதமெனல்	161
152	பிரத்தியட்சாதி சட்பிரமாணங்களுள், மதஸ்தர்களுடன்பாடு	,,
153	பிரமாஞானவிலக்கணம்	162
154	பிரஹ்மம் பிரத்தியட்சப்பிரமாண விஷயமாகாமை ...	163
155	அநுமானப்பிரமாணம்	164
156	வேதாந்தார்த்தாநுசாரமாக அநேக அநுமானம் ...	,,
157	பிரஹ்மம் அநுமானப்பிரமாண விஷயமாகாமை ...	165
158	பிரஹ்மம் உபமானப்பிரமாண விஷயமாகாமை ..	,,
159	சப்தப்பிரமாணத்திற்குப் பிரஹ்மம் விஷயமாதலும், விஷய மாகாமையும்	,,
160	இவர் பிரமாணம் நான்கென்றெடுத்ததற் கபிப்பிராயம் ..	166
161	அர்த்தாபத்திப்பிரமாணம்	,,
162	சிஞ்ஞாசுக்கனுகூலமாகிய அர்த்தாபத்தியின் உதாரணம் ...	,,
163	அநுபலப்திப்பிரமாணம்	167
164	சிஞ்ஞாசுக்கநுபலப்தி நிரூபணவுபயோகம்	,,
65	பிரஹ்மம் வாசகுக்கு விஷயமாமாறு	168
66	பிரஹ்மம் வாக்குக்குக் கோசரா கோசரமாமென்பதற்கு வேறு மொரு சமாதானம்	,,
.37	10-முதல் 14-ம் செய்யுள்வரையும், இரண்டாம் சங்கைக் குச் சமாதானம்	169
68	அநான்மபதார்த்தங்களில் விருத்திவியாப்தி பலவியாப்தி ...	170
69	ஆன்மாவில் விருத்தி வியாப்திமாத்திரம	172
70	பிரஹ்மம் மனத்திற்குக் கோசரமாமாறும், அகோசரமாமாறும்	,,

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
171	பிரஹ்மம் மானசஞான விஷயமன்றென்னும் நிஷேதசுதிற் கபிப்பிராயம் ...	172
172	மானதவிஷயத்தன்மை நிஷேதம்போலப் பிரஹ்மம் சப்தவிஷயத்தன்மை நிஷேதத்திற் கபிப்பிராயம்	,,
173	மனது சமாதியடையுமாறு வினுதல்	173
174	16 - முதல் 18 - ம் செய்யுள்வரையும் மனது சமாதியடையுமாறு	174
175	மனதின் சொரூபம்	,,
176	வாசனையின் சொரூபமும், அதன் பேதங்களும் ...	175
177	மலினவாசனை	,,
178	உலகவாசனை	,,
179	உலகவாசனை மலினமென்பதற் குதாரணம்	,,
180	உலகவாசனை நசித்தற்குபாயம்	,,
181	சாஸ்திரவாசனையின் பேதம்	176
182	சாஸ்திரபாடாபிமானம் மலினமென்பதற்குதாரணம் ...	,,
183	சாஸ்திரார்த்தாபிமானம் மலினமென்பதற்குதாரணம் ...	,,
184	அநுஷ்டானுபிமானம் மலினமென்பதற்குதாரணம் ...	,,
185	தேகவாசனையின் பாகுபாடு	,,
186	லௌகிக சாஸ்திரீய பேதத்தால் தேகத்திற்குக் குணசம்பாதனங்கள்	177
187	லௌகிக சாஸ்திரீய பேதத்தால் தேகத்தின் தோஷத்தைப் போக்குவன	,,
188	தேகவாசனை, உலகவாசனை, சாஸ்திரவாசனை மூன்றும் மலினமாதலால், அவை விடற்பாலனவாம் என்பதற்குக் காரணங் கூறி மறுத்தல்	,,
189	சுத்தவாசனையின் சொரூபம்	178
190	மனமிறந்தாற் போகமும், மனமிருந்தால் ஜீவன் முத்தியும் கூடுமாறெங்ஙனெனல்	180
191	இருவகை மனநாசம்	,,
192	அருவமனமிருத்தலாற் போகமும், உருவமனமிருத்தலாற் சீவன் முத்தியுங் கூடுமாறு	181
193	திடஞானம், அதிடஞானம்	183
194	24 - முதல் 25 - ம் செய்யுள்வரையும், மாகர்த்தன் மாபோகி மாத்தியாகிகளினியல்பு	185
195	26 - ம் செய்யுளிலும், 27 - ம் செய்யுளிலும் சரீரதாரியாய்ப் பிராரத்தவசத்தால் கிரியையில் நிற்பவன் எங்ஙன் கிருதகிருத்தியனுவனெனும் வினுவும், விடையும் ...	188

கணபதி துணை.

சிவமயம்.

கைவல்லிய நவநீதம்.

பாயிரம்.

குருவணக்கம்.

வேந்த நாளிகையும் பொருளினை மனத்தகமே நாந்தும்
போதமாய் ஆவதாய் நிறைந்தல் விருந்துருவ நனைந்து
ஏதுமா மாயா சகத்தினை நிறுத்த விளங்கும்
நாதராய் நால்வரால் முயற்சிசேர் மாயிடம் (1)

போதகுரு நாதன் நாகைப் புனையிப் பதந்து போனவர்
அங்குடலி லெனை வந்தாண்ட குருவாய பொருளினை யாசகுமா
அங்கையி னெல்லிபோல் விளக்கு மாமலை நந்த
சங்கரப் பகவற் பாதனை முயலா நந்த லிங்க (2)

உகந்த மேதசிக னெண்டணியி பத்தகைதனில் புல்லைக
இகந்த புகழ்சிரா மயமெய நிறையாவ் தழுவார
செகந்தனை ஞானசிதம்பர நந்தமார் குரோ
அகண்ட நிரைமொபகந்தி நாதசாந்தி நுழைவிமாய (3)

* நமத்துக்கு என்பாலது அத்துச்சாரியை குறைந்து நமக்கென நின்றது.

நூலாசிரியர் வணக்கம்.

மாண்ட மெய்ப்பொருள் கையிலா மலகமே யென்ன
ஈண்டி யாவரு மெளிதினி னுணர்தர வெவ்வையும்
தூண்டு சோதியே வந்தமென் றியாவருந் துதிக்கும்
தாண்ட வப்பெருந் தண்ணருண் மூர்த்திதாள் சார்வாம் (4)

தற்சிறப்புப் பாயிரம்

அன்ப ராய்த்தநன் னிணையவ ரகத்திருந் தருளும்
இன்ப நாடகத் திறையவ னடியிணைத் திருத்தி
முன்பு கன்றமூ தறிஞரா னூன்முறை யிறைப் பூபா
என்பு லத்தள விதற்குரை யியம்புவ னெடுத்தே (5)

உரைப்பாயிர முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS

உ

கணபதிதுணை.

சிவமயம்.

கைவல்லிய நவநீதம்.

மூலமும், தத்துவார்த்த தீபவுரையும்.

நூன்முகம்.

முதனூ லிருக்கவும் வழிநூல், சார்புநூல் செய்யப்புகுவோர் ஆதிக் கண்ணே மங்கலஞ் செயற்பாலது அவசியமே; என்னை? கிரந்த சமாப்திக் குப் பிரதிபந்தகங்களாகவுள்ள எவ்வித விக்கினங்களும் அம்மங்கலத்தால் நாச முறுதலின். விக்கினமென்பது பாவம்: பாவத்தினால் சுபகாரியங்கள் சமாப்தி யாகா; ஆகலின், அப்பாவங்களைப் போக்கவல்ல மங்கலம்வேண்டும். பாவமின் மையராயினாரோவெனின்? அவரானும் மங்கலஞ்செய்யத் தக்கதேயாம்; இன்றேல், அந்நூலை நோக்குவோர்க்கெல்லாம் நூலாசிரியரிடத்து நாஸ்திகப் பிராந்தி யுண்டாகி அந்நூற்கண் ஊக்கஞ்செல்லாதென்க.

(1) அப்படிச் செய்யும் மங்கலம் வஸ்து நிர்த்தேசரூப மங்கலமென்றும், நமஸ்காரரூப மங்கலமென்றும், ஆசீர்வாதரூப மங்கலமென்றும் மூவகைத் தாம். சகுணம், அல்லது நிர்க்குணமாகவுள்ள பரமாத்மாவே வஸ்துவாம். அவ்வஸ்துவின் கீர்த்தனமே வஸ்து நிர்த்தேச மங்கலமெனப்படும். அப்படிக் கன்றி அவ்வஸ்துவுக்கு வணக்கங் கூறுவது நமஸ்காரரூப மங்கலமாம். தனது, அல்லது மாணாக்கரது வாஞ்சித வஸ்துவைப் பிரார்த்திப்பது ஆசீர் வாத மங்கலம்.

[இந்நூலாசிரியர், இங்கே சிஷ்டாசாரத்தாற் பெற்ற இஷ்ட தெய்வ நமஸ்காரரூப மங்கலத்தை அங்கீகரிக்கின்றார்.]

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
என்னிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. (1)

(இதன் பதப்பொருள்.) பொன் நிலம் மாதர் ஆசை பொருந்தினர் பொரு ந்தார்=பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை இயைந்த அஞ்ஞானிகளும், இயையாத ஞானிகளுமாகிய இவர்களது, உள்ளந்தன்னில்=அந்தக்கரணங் களில், அந்தரத்தில்=(தாரதம்மியமான மட்டுடம், பொற்குடங்களிற் பெய்

யும் பண்டங்கட்குந் தாரதம்மியமற அவகாசங் கொடுப்பதுமாத்திரமாய் நிற்கும்) ஆகாயத்தைப்போல, சிவசாட்சிமாத்திரமாய் நிற்கும்=சிவசாட்சிமாத்திரமாக நிற்கின்ற, ஏக நாயகன்=அகண்டைகரஸனான சிவபெருமானுடைய, பதங்கள் போற்றி=சீர்பாதங்கட்கு நமஸ்காரம்.—என்றவாறு.'

நிலத்திற் குரிமையுடைய மைந்தரை ஆகுபெயரால், "நிலம்" என்றார்.

(2) அங்ஙனமாயினும், விடயபேதத்தால் மனோரதங்கள் அநேகமாயிருக்கவும், இவர் மூவகையாகத் தொகுத்தது யாது கருதியோவெனின்? எல்லா ஆசையும் அம்மூவகையுள் அடங்கியிருத்தல்பற்றி என்க. இவ்வாறே,

" மனைவியு மகாரும் பொன்னு மனைசெய் தமுதம் போல
நினைவின னையஞ் செய்து நீணிலத் துள்ள வெல்லா
மனையவர்க் காகச் செய்வர் "—

என வாசிட்டத்தும்.

" விழைவெ னப்படு கின்ற நா மென்மை
மாழலி ரிந்த கனகத் தரும்பிமென்
மழலை மாதர் மருங்கிற் படர்ந்துபைங்
குழவி யீறுகொ ளுந்துவிட் டோங்குமால் "

எனப் பாகவதத்தும் மனோரதங்களனைத்தையும் அம்மூவேடணையுளடக்கிக் கூறியிருக்கின்றமை காண்க. அருணகிரிநாதரும் இக்கருத்தே பற்றியன்றே, "**மூவேடணையென் றுமுடிந் திடுமோ**"—என்றார்.

(3) அற்றேலஃதாகுக. உலகில் அஞ்ஞானிகளுள்ளும் சில்லோர் மனைவி, மக்கள், அர்த்தவேடணைத் தியாகிகளாகக் காணப்படுதலின், "**ஆசை இவையாதார் ஞானிகள்**" எனவிரித்தது * அதிவியாப்தியாமேயெனின்? மூவேடணைமாத்திரமொழித்த அவர்கட்குப் பிரபஞ்சத்திற் றோடதிருஷ்டியினானும், பரோட்ச மித்தியாபுத்தியினானும் விராகமுண்டாயிருப்பினும். பிரபஞ்சத்தின் கண் அபரோட்ச சத்தியபுத்தி பிரபலமாக விருத்தலின் றோடங்கண்ட விடயங்களிற் காலாந்தரத்தில் நல்லதென்னும் புத்தியுளதாம்; அஃதுளதாகவே விராகநீங்கி இராகமுளதாமாகலின். அஞ்ஞானிகள்பாலுள்ள விராகம் மந்த விராகமாம். ஞானிகள்பாலோவெனின்? அவர்கட்குப் பிரபஞ்சத்தில் அபரோட்ச மித்தியாபுத்தியால் விராகமுளதாயிருத்தலின், அது திடவிராகமாம்.

" குறையுமாப் பிணிப்புற் றூலுங் கொண்டவிப் புலன்க ளெண்ணி
லுறைகட லனைய நெஞ்சத் தவாவறு மறிவி னில்லான் "—

---

* "**அதிவியாப்தி**"=இலக்கியமல்லாததன் கண்ணுமிருப்பது: அது "**ஆவிற்குக் கோடுடைமை**" "**அவ்வியாப்தி**"=இலக்கியத்தின் ஏகதேசத்தின் இலக்கணமில்லாமை; அது "**ஆவிற்குக் கபிலநிறத்தன்மை**" "**அசம்பவம்**"=இலக்கிய முழுதினுமின்மை: அது "**ஆவிற்கு ஒற்றைக் குளம்புடைமை.**"

எனக் கீதையில் ஸ்ரீபகவானா லருளிச்செய்யப்பட்டிருப்பதால், ஏடணாத்திரயத் தியாகிகளான அஞ்ஞானிகட்குச் சூட்சுமமான அநுர்புந்த வாசையுள்ளதே; ஆதலால். "ஆசை பொருந்தாதார் ஞானிகள்" என்றது, அதிவியாப்தியாகா தென்க. [அநுர்புந்த வாசை=புலப்படாவாசை] வாசிட்டத்தும்,

"அடக்கமா யுரைத்தே யஃதறிந் தவர்க்கு மறிகிலா தவர்க்குநற் குறிக, டொடக்கரிற் சன்மாத் திரமதா மறிவின் பொருபயின் றுரை யிலா தவரே, விடற்கருங் காய முதற்பகை கடந்தோர் மெய்யறி விலார்கட் பரியோர்"—

என ஆசையின்மையும், உண்மையும் ஞானி, அஞ்ஞானிகட்குச் சின்னமாகக் கூறியிருப்பது காண்க.

(4) "பொன்னிலமாதர்" என்பதை பொன்னில் அம்மாதர் எனப் பிரித்துத் திருமகள்போலும் அழகினையுடைய பஞ்சவிடைய சமஷ்டிரூபமான பெண்களிடத்து எனப்பொருளுரைப்பினும் அமையும்; இஃதமையுமாறு,

"பாரியை யுடையோன் யாவனவனுக்கே பற்றும் போகம்
நாரியை யில்லா தார்க்குப் போகத்தி னலமெங் குண்டாம்
காரிகை தன்னை நீங்கிற் சகத்துறா சகத்து நீங்கும்
பேரியற் சகத்து நீங்கிற் பிரிவில்பே ரின்ப முண்டாம்"—

என வாசிட்டத்திற் கூறியுள்ள இரகுநந்தனர் திருவாக்கானும்,

"நெய்விட்ட கருங்குழலார் தம்பால் வைத்த நெஞ்சொழிந்தா ரைம்புலன்சே ரின்பமோரார், கைவிட்டா ரொழியவா ரநந்த போகந் தாமுகராய் முடிந்தபடி காண்மின் காண்மின்"—

என்னும் அஞ்ஞவதைப் பரணியின் செய்யுளானும் அறிக.

(5) "ஆசைபொருந்தினர் பொருந்தார்" எனச் சிறப்புப்பற்றி உயர்திணைமேல் வைத்துச் சொன்னாரேனும்,

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே"—

என்பதனால், பிரமாமுதற் றம்பபரியந்தமான சேதனப்பிரபஞ்ச முழுவதுங் கொள்ளற்பாலனவாம். "உள்ளம்" என்றது, அந்தக்கரணம். "உள்ளந்தன்னில்" என்றது, சாதியொருமை.

கிரிநதியாதிய வசேதனப்பிரபஞ்சத்தின்கண் ணந்தக்கரணமின்மையின், அவைகளில் அவச்சின்னசேதனம் ஞானமென்றும், சாட்சியென்றுஞ் சொல்லப்படவில்லை.

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலுந் தாக்கிற்சீவ சாட்சிமாத்திரமாய் நிற்கும்"—

என்றதால், அந்தக்கரணமொன்றே பிரமாதாவுக்கு விசேடணமும், சாட்சிக்கு உபாதியுமாம் என்பது பெற்றும்.

(6) அங்ஙனமாயின், அவ்விரண்டின் றன்மையும் யாவையோவெனின்? ஒன்றன் சொரூபத்திற் பிரவேசித்து வியாவர்த்தகமாகி நிற்பது விசேடணம். அந்நியத்தினின்றும் ஒன்றை வேறுபடுத்துவது வியாவர்த்தகமாம். எது வேறுபடுத்துக் காட்டப்படுமோ அது வியாவர்த்தியமாம். நீலக்குட மென்புழி நீலம் குடத்தின் விசேடணம். என்னை? நீலக்குடத்தில் நீலம் பிரவேசித்து அதனைப் பொன்னிறக்குட முதலியவற்றினும் வேறுபடுத்துக் காண்பித்தலான்; அந்நீலம் விசேடணமாம். அவ்வாறு, பிரமாதாவுக்கு அந்தக்கரணம் விசேடணமாம். என்னை? பிரமாதாவின் சொரூபத்தி லந்தக்கரணம் பிரவேசித்து அதனைப் பிரமேய சேதனத்தினின்றும் வேறுபடுத்துக் காண்பித்தலால் என்க.

ஒன்றன் சொரூபத்திற் பிரவேசியாமல வியாவர்த்தகமாய் நிற்பது யாது அது உபாதியெனப்படும். நியாயமதத்தில் *கர்ணசட்குலியின் அவசின்னாகாயஞ் சுரோத்திரேந்திரியமெனப்படும்; அங்கே கர்ணசட்குலி சுரோத்திரேந்திரியத்திற்கு உபாதியாம்; என்னை? சுரோத்திரேந்திரியத்தின் சொரூபத்திற் கர்ணசட்குலி பிரவேசியாமல் வாகிய வாகாயத்தினின்றும் சுரோத்திரேந்திரியத்தை வேறுபடுத்துக் காண்பித்தலால் உபாதியாம். வேறுமொரு திருஷ்டாந்தம்;—கடாகாயமானது †மணுபரிமாண அந்நத்திற்கு அவகாசங்கொடுப்பதால் ஆகாயத்திற்குக் கடம் உபாதியாம், என்னை? மணு அந்நத்திற்கு இடங்கொடுக்கு மாகாயத்தின் சொரூபத்தில் கடம் பிரவேசியாமல் வியாபகவாகாயத்தினும் வேறுபடுத்துக் காண்பித்தலால் மணு அந்நத்திற்கு அவகாசங் கொடுக்கும் ஆகாயத்திற்குக் கடம் உபாதியாம்.

அதுபோல, அந்தக்கரண வுபகிதசேதனம் சாட்சியாமென்புழி, அந்தக்கரணம் சாட்சிக்கு உபாதியாம். என்னை? அந்தக்கரணம் சாட்சியின் சொரூபத்தில் பிரவேசியாமல், பிரமேய சேதனத்தினும் சாட்சியை வேறுபடுத்துக் காட்டுவதால் என்க. அந்தக்கரண மொன்றே சாட்சிக்கு உபாதியாகவும், பிரமாதாவுக்கு விசேடணமாகவும் நின்றமைகாண்க; இவ்வாற்றால், அந்தக்கரண வுபகிதசேதனமோ சாட்சியாம்; அந்தக்கரண விசிட்டசேதனம் பிரமாதாவாம்.

உபாதியுடையது, உபகிதமென்றும், விசேடணமுடையது, விசிட்டமென்றும் கூறப்படும். அந்தக்கரண விசிட்டமான பிரமாதாவே கர்த்தா, போக்தா, சுகி, துக்கி என்னும் சம்சாரியாகிய சீவனும்; இது அவச்சேதவாதத்தின் றன்மை.

இனி ஆபாசவாதம்:—ஆபாசவாதத்தில் ஆபாசசகித வந்தக்கரணம் சீவனுக்கு விசேடணம். ஆபாசசகித வந்தக்கரணம் சாட்சிக்கு உபாதியாம்; ஆத

* கர்ணசட்குலி=செவித்துளை.

† மணு=மணங்கு என்னும் ஓரெடுத்தலளவை.

லால். ஆபாசத்தோடுகூடின வந்தக்கரண விசிட்டசேதனம் சீவனும். ஆபாசத்தோடுகூடின வந்தக்கரண வுபகிதசேதனம் சாட்சியாம். இரண்டு பட்சத்திலும் விசேடணத்தோடு கூடின சேதனம் சீவனும்; அவனே சம்சாரியாம். ஆயினும், விசேடியப்பாகமான சேதனத்தின்கண்ணேயோ, ஜநந மரணமுதலிய சம்சார சம்பவமில்லை. விசேடணமாத்திரத்தில் அச்சம்சாரமுண்டு. ஆதலான், இக்கருத்தைத் தெரிவித்தற்பொருட்டே பிரமகீதையில்,

"பருதி நெஞ்சினு மொழிந்தவா நெஞ்சினும் பரனை
கரிய தாகிநின் றறிபவன்"—எ - ம்,

"உருத்திரன்றான் முதலாகத் தம்பாற்ற வனைத்தொருட்குஞ் சான்றாகுமொருவன்"—எ - ம,

பாகவதத்தில்,

"சொன்ன புந்தியிற் கரியெனத் தோன்றிய வறிவை"—

என்றும் கூறியிருப்பது போல,

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிற் சீவ சாட்சியாய் நிற்கும்"

என்றொழியாது, "சாட்சி மாத்திரமாய் நிற்கும்" என்று "மாத்திர" பதந்தந்து விசேடித்துக் கூறினர்.

(7) ஆபாச சாட்சி யென்னுது "சீவசாட்சி" எனப் பொதுப்படக் கூறினமையின், இவ்வாசிரியர்க்கு அவச்சேதவாதந்தான் உடன்பாடாமோ வெனின்? இரண்டாம் படலத்தில்,

"உன்முகம் போற்கண்ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்"—

என்றாபாசவாதங் கூறியிருப்பதால், இவர்க் கஃதுடன்பா டென்றென்க; இவருடன்பாடாமைக்குக் காரண மென்னையோவெனின்? பாஷியகாரர் ஆபாசவாத மங்கீகரித்திருப்பதானும், வித்தியாரண்ணிய சுவாமிகள் அவச்சேத வாதத்திற் றோடஞ்சொல்லி யிருப்பதானுமென்க.

(8) வித்தியாரண்ணிய சுவாமிகள் அவச்சேதவாதத்திற் சொல்லிய தோட மென்னையோவெனின்? அது கூறுதும். ஆபாசரகித வந்தக்கரண வவச்சின்ன சேதனத்தைப் பிரமாதாவாக வொப்பிடில் கடாவச்சின்ன சேதனமும் பிரமாதாவாகவேண்டும். என்னை? எப்படி அந்தக்கரணம் பூதங்களின் காரியமோ அப்படிக் கடமும் பூதகாரியமாம்; அன்றியும், அந்தக்கரணம் சேதனத்தின் வியாவர்த்தகமாக எப்படியுளதோ அப்படிக் கடமும் சேதனத்தின் வியாவர்த்தகமாம்; ஆதலால், அந்தக்கரண விசிட்டம்போலக் கடவிசிட்டமும் பிரமாதாவாதல் வேண்டும். அந்தக்கரணத்தின்கண் ணாபாசக்கிரகணம் அங்கீகரிக்கில்

இவ்வாறான தோஷமின்றாம். என்னை? அந்தக்கரணமோ பூதங்களின் சத்துவகுண காரியமாகலின் சொச்சமாம்: கடமுதலியவை பூதங்களின் றமோகுண காரியமாகலின் சொச்சமல்ல: யாது சொச்சபதார்த்தமோ அதுவே ஆபாசயோக்கியமாம். மலினபதார்த்தம் ஆபாசயோக்கியமாகா; இஃதெது போலவெனின்; கண்ணாடியும் அதன் மூடியும்போலவென்க; இவ்வாற்றால், அந்தக்கரணத்தின்கண் இருவிதப்பிரகாசமுள: ஒன்றோ, வியாபகமான சேதனப்பிரகாசம் மற்றொன்றாபாசப்பிரகாசம். சரீராதிகளிலும், குடமுதலியவற்றிலும் ஒருவியாபகமான சேதனத்தின் பிரகாசமொன்றுண்டு: மற்றோராபாசப் பிரகாசமில்லை; ஆதலால், இருவிதப்பிரகாசத்தோடு கூடின அந்தக்கரண விசிட்ட சேதனமே பிரமாதாவெனப்படும்: ஒரு வியாபக சேதனப்பிரகாசத்தோடுகூடின கடாதி விசிட்டசேதனம் பிரமாதாவன்று. எவருடைய மதத்தில் அந்தக்கரணத்தில் ஆபாசமில்லையோ, அவருடைய மதத்தில் கடாதிகளைப் போல அந்தக்கரணத்திலும் ஆபாசப்பிரகாசமில்லை: வியாபக சேதனத்தின் யாதொரு ஏகப்பிரகாசம் அந்தக்கரணத்தின்கண் ணுண்டோ, அவ்வியாபக சேதனத்தின் பிரகாசமே கடாதிக்கண்ணும் உளது. ஆதலால், அந்தக்கரண விசிட்டம்போலக் கடவிசிட்டசேதனமும், சரீரவிசிட்டசேதனமும், குட்டிய விசிட்ட சேதனமும் பிரமாதாவாதல் வேண்டும்; அங்ஙனமாகாமையின், ஆபாசவாதமே உத்தமம்: அவச்சேதவாதம் அன்று; இவ்வாறான தோடங் கூறியிருத்தலின், அவச்சேதவாதம் இவர்க்கு உடன்பாடன்றென்க.

(9) எப்படி அந்தக்கரணம் ஆபாசசகிதமாகவுளதோ, அப்படியே அந்தக்கரணத்தின் விருத்தியும் ஆபாசசகிதமாகவேயுளது. அந்தக்கரணவிருத்தி நேத்திரேந்திரிய வாயிலாகப் புறம்போந்து விடயசமானாகார மடையும்; அப்போது அவ்விருத்திபாகத்தால் விடயத்தின்கண் ஆவரணம் பங்கமாம்; ஆகவே, ஆபாசனால் இதுகடம் இதுபடம் என இவ்வாறு விடயம் பிரகாசியாநிற்கும். இவ்வாறே, ஏனைய விந்திரிய வாயிலாகப் புறம்போந்தும் விருத்திகளிலும் ஊகிக்க. புறம்பே சாட்சிப்பிரகாசம் எவ்வாறுளதோவெனின்? கடத்தை நான் கண்டேனென்று கடஞானத்தின் பின்னிகழாநிற்கும் பிரகாசமே சாட்சியாமென்க. [பிரகாசமெனினும், ஞானமெனினும் ஒக்கும்.]

(10) இனி, உள்ளே இருவிதப் பிரகாசங்களைக் கூறுதும். இச்சை, ஞானம், கிரியை, சுகம், துக்கம், துவேடம் இவை ஆறும் பிரதான குணங்கள். நியாயமதத்தில், இவைகளை ஆன்மாவின் குணமென்பர். வேதாந்தத்தில், அந்தக்கரணத்தின் பரிணாமமென்பர். இவைகளில், ஒன்று பிரகாசமாகும்போது சிதாபாசனைக்காணலாம்: அல்லாதபோது அவனைக்காணக்கூடாது; ஆகலின், தப்தாயபிண்டத் தக்கினிபோன்று அவைகளை தானாகப்பிரகாசிப்பவன் ஆபாசன். சாக்கிர சொப்பனங்களில் விருத்திகள், விருத்திகளின் அந்தராளம், சுழுத்தி முதலியவற்றில் விருத்திகளின் அபாவம் ஆகிய இவைகளைப் பிரகாசிப்பிப்பது சாட்சியாமென்க. சாட்சிப்பிரகாசத்தில் விருத்தியாங்காரபட்சம் உரைக்கப்பட்டது.

இனி, விருத்தி யங்கீகாரபட்சம்.

(11) அவித்தை, அந்தக்கரணங்களின் பரிணாமம் விருத்தியெனப்படும். குரோத சுகாதிகளும், ஆகாசாதிகளும் முறையே அந்தக்கரணம், அவித்தை இவைகளின் பரிணாமமாயினும் அவைகளால் யாதொரு விஷயமும் பிரகாசியாமையின், அவை விருத்தியென்று சொல்லப்படவில்லை. மற்றெதை விருத்தியென்பரோவெனின்? அவித்தை, அந்தக்கரணங்களின் ஞானரூப பரிணாமத்தால் விடயங்கள் பிரகாசமாகலின், அதனையே விருத்தியென்பர். சுகதுக்கம், காமக்குரோத முதலிய எவ்வளவு அந்தக்கரணத்தின் பரிணாமமுண்டோ அவைகளனைத்தையும் விருத்தியென்று சாஸ்திரங்களில் விவகரித்திருக்கினும் தத்வாநுசந்தானம், அத்வைத கௌஸ்துப முதலிய கிரந்தங்களில் பிரகாசக பரிணாமமே விருத்தியென்றனர். ஆதலான், மாயை, அந்தக்கரணங்களின் ஞானரூப பரிணாமமே விருத்தி சத்தத்திற்கு அத்வைத மதத்தில் * பாரிபாஷிகப் பொருளாம்; அவ்விருத்தி ஞானம் இருவகைத்தாம்; ஒன்று பிரமாரூபம்: மற்றொன்று அப்பிரமாரூபம். பிரமாணஜந்நிய ஞானத்தைப் பிரமாவென்பர். அதனின் வேறான ஈசுரஞானம், சுகாதி கோசரஞானம், ஸ்மிருதிஞானம், பிரம[illegible]ஞானம் ஆகிய இவை அப்பிரமாரூபமாம்; அவற்றுள், ஈசுரஞான முதலியவை யதார்த்த அப்பிரமா: பிரம[illegible]ஞானம் அயதார்த்த அப்பிரமா. இவைகளின் விரிவை யறியவேண்டின் விருத்திப்பிரபாகர கிரந்தத்திற் காண்க; இது நிற்க, எப்போது அந்தக்கரணத்தின் பரிணாமம் சுகரூபமாக, அல்லது துக்கரூபமாக வுளதாமோ அப்போது அந்தக்கரணத்தின் ஞானரூப விருத்தி சுகதுக்க கோசரமாக வுளதாகும்; அவ்விருத்தியின்கண்ணுருடமான சாட்சி அவைகளைப் பிரகாசிப்பிக்கின்றது. ஆதலின், கிரந்தகாரர் சுகதுக்கம் சாட்சிக்கு விடயமென்றனர். விருத்தியன்றிக் கேவலம் சாட்சிக்கு விடயமாகா.

ஈண்டிது இரகசியம்.

(12) "அந்தரத்தில்" என ஆகாயத்தை உவமானமாகக் காட்டினமையின் ஆகாயத்தின்கண் கடாகாயமென்னு நாமமும், சலம் கொணர்தலாகிய காரியமும் கடரூப உபாதி திருஷ்டியாற்றோன்றிக் கடரூப உபாதி திருஷ்டியன்றி அவை தோன்றாமல் ஆகாயமாத்திரமே தோன்றுவதால் கடாகாயம் எப்படி மகாகாய ரூபமோ அப்படிச் சேதனத்தின்கண் சாட்சியென்னு நாமமும், சுகதுக்காதி தர்மங்களோடு கூடின வந்தக்கரணத்தின் பிரகாச ரூபமாகிய காரியமும் அந்தக்கரண ரூபவுபாதி திருஷ்டியாற்றோன்றி அவ்வந்தக்கரணரூப வுபாதி திருஷ்டியன்றிச் சாட்சியென்னு நாமமும், சுகதுக்காதி தர்மங்களோடு கூடின அந்தக்கரணத்தின் பிரகாச ரூபமான காரியமுந் தோன்றாமற் சைதந்நிய மாத்திரமான பிரமமே தோன்றுவதால் சாட்சி, "பிரமரூபயே" என்னும் ஈதோரிரகசியார்த்தமும் கொள்ளக்கிடந்தமை காண்க.

---

* சாஸ்திரத்தின் அசாதாரண சங்கேதம் பரிபாஷை; பரிபாஷையினாற் சொல்லும் பொருள் பாரிபாஷிகப் பொருளாம்.

கடவுபாதியினுற் கடாகாயமும் நாநாவாய்ப் பரிச்சின்னமாயிருப்பினும், மகாகாயத்திற்குப் பின்னமாக விராமல் மகாகாய ரூபமே யாகின்றதுபோல அந்தக்கரணவுபாதியால் சாட்சியும் நாநாவாய்ப் பரிச்சின்னமாயிருப்பினும் வியாபகமான பிரமத்திற்குப் பின்னமாகாமற் பிரமரூபமாகவே யுள்ளது ; ஆதலால்,

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவசாட்சி மாத்திரமாய் நிற்கு மேகநாயகன்"

என்றார்.

["சீவசாட்சி" என்பது, சீவனது சாட்சி, சீவனுக்குச் சாட்சி, சீவன்கட் சாட்சி என விரியும்.]

"எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவும்"—

என்றது, ஏக நாயகனுக்கு விசேடணம். இ-ள். எந்நிலங்களினும்= (சாங்கியர், யோகியர் முதலிய மதஸ்தர்களால் நாநா பேதமாகக் கூறப்பட்டுள்ளனவாகிய) ஞானபூமிக ளனைத்தினும், மிக்க எழுநிலம்=(நிரதிசயானந்தத்தைத் தருதலால் ஆன்றோர்கட் கபிமதமாகச்) சிறந்தவை (சுபேச்சை முதலிய ஞான) சத்த பூமிகளாம் ; அவற்றில்=அப்பூமிகளுள், மேலாம் நன்னிலம் மருவும்=மேலாகிய துரியபூமியின்கட் பொருந்தி யொளிராநிற்கும், ஏகநாயகன் பதங்கள் போற்றி.—எ-று.

துரியத்திற்குமேல் விதேககைவல்லியமாவதே யல்லாமல் வேறுபூமி யின்மையின், "மேலாம் நன்னிலம்" எ-ம், மகாநந்தமயமாதலின் துரியத்தை, "நன்னிலம்" எ-ம், தன்சொரூபமுள்ளவாறு வெளிப்படுந் தானமாகலின், "நன்னிலமருவும்" என்றுங் கூறினரென்க. இரண்டாம்படலத்தி னந்தத்தில் ஞானசத்த பூமிகளை இவ்வாசிரியரே விஸ்தாரமாகக் கூறியிருப்பதால் அவைகளை ஈண்டு விரித்திலேம். சுபேச்சை, விசாரணை, தநுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்பன அப்பூமிகளின் நாமங்களாம்.

(13) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் அவஸ்தைகளி னபிமானமே பந்தமெனப்படும்; அவ்வவஸ்தைகளும் கோரம், சாந்தம், மூடம் என்னும் மனோவிருத்திகளாதலால் விசாரரூபம், அல்லது, தியானரூபமாகிய பிரமாநுசந்தான வலியால் அவைகளுசமாம்; ஆகவே, அவைகட்குக் காரணமான மனதும் பிரமப்பிரகாசத்தில் விலீனமாம்; ஆகவே, பிரமம் அகண்டைகரசமாய்த் தன்மயமாகவே விளங்காநிற்கும். நெடுங்காலம், நிரந்தரம் ஆதரவோடும் அநுஷ்டித்து வாராநின்ற பிரமாநுசந்தான வலியால் அஞ்ஞானமும், அதன் காரியங்களுமாகிய வனர்த்தங்களின் நீங்கி நிரதிசயானந்த மாத்திரமாகப் புருடன் விளங்காநிற்கும் ஸ்தானமே முடிந்தநிலமான துரியமாம். பிரமவித்து, வரன், வரியான் என்னு மிம்மூவர்க்கு மேலாய் நான்காமவனை வரிட்டனு லடையப்படுவதாகலின், துரியமென்று பெயராம்.

(14) அல்லது, "நன்னிலம்" என்பது, துரியத்திற்கு வேதாந்தத்தின் பரிபாஷையாகிய சத்தமன்மையின்,

" எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மீருவும் "—

என்பதற்கு, எல்லாப்பதிகளினுஞ் சிறந்தொளிராநிற்கும் சத்தபுரியினுஞ் சிறந்த நன்னிலமென்னுந் தலத்தின் கண்ணே எழுந்தருளா நிற்குமென்று வேறுமொரு பொருள் கூறினுமமையும் ; இஃதமையுமாறு,

" நன்னிலந் தனிலெழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய ஞனேன் நான் "—

என்று இந்நூலினந்தத்தில் வித்தியாநந்தங் கூறுங்காலையிற் கூறியிருக்குங் காரணத்தினால் அறிக. " நன்னிலம் " என்பது, சிலேடையாய்த் துரிய பூமியையும், மதுவனமென்னும் ஸ்தலத்தையும் உணர்த்தாநின்றது.

(15) அயனரி யுருத்திர ராதியர்போற் றேற்றமொக்க மின்மையின் " ஏகம் " எ - ம், அன்னோர்க்கும் தான் இறையாகலின், " நாயகன் " என்றுங் கூறினர் ; இவ்வாற்றால், இது காரணப்பிரமமென்பது பெற்றாம்.

(16) மாயாவிசிட்ட சைதந்நியத்தைக் காரணப்பிரமமென்று கூறியிருக்கின்றனராகலின் அதற்கு, "உள்ளந்தன்னிற் சாட்சிமாத்திரமாய் நிற்கை " அசம்பவமாமேயெனின்? அது பரமார்த்தமாகச் சுத்தப்பிரமமேயாகலான், சாட்சித்தன்மை அதற்கு அசம்பவமாகாதென்க.

(17) இவ்வாற்றால், இஃது தோடமின்றாயினருக. "பதங்கள்" என்னுஞ் சத்தம் உபலட்சணமாய் ஆபாதமஸ்தக பரியந்தமான மூர்த்தி போதகமாயிருத்தலின், இது சுத்தப்பிரமத்திற்கும், அப்படியே காரணப்பிரமத்திற்கும் பொருந்தாதாகலின் சரீரவிசிஷ்ட சைதந்நியங்களான காரியப்பிரமங்களுள்ளே, யாதானுமொன்றைக் கூறலாமேயெனின்? அங்ஙனங் கூறுதற்குச் சதுர்ப்புஜ, திரிநேத்திர, ஸதண்ட, அஷ்டபுஜாதிகளான காரியப்பிரமங்களின் சின்னங்களுள்ளே, யாதானுமொரு சின்னங்களையெடுத்து விசேஷித்திருத்தல் வேண்டும் ; அங்ஙனம் விசேஷியாமல், " ஏகநாயகன் பதங்கள் போற்றி " என்றதால், காரியப்பிரமங்களுள், யாதானுமொன்றைக் கூறுதல் பொருந்தாது. ஆயின், " பதங்கள் " என்றது, காரணப்பிரமத்திற்கு அசம்பவமாமேயெனின்? அக்காரணப்பிரமம் ஓரோர் காலையில் பக்தாநுக்கிரகார்த்தம் அவர் வேண்டிய அருளுருக்கொண்டாவிர்ப்பவிக்கும் ஆற்றலுடைத்தானமையின், அதற்குப் பாதங்கூறியது உபசாரமும், அசம்பவமுமாகாது. இதனை,

" புருட னென்றுரை செயப்படு வதுபரி பூரண மாகின்ற
சொருப மின்றவா நிற்கவிங் கருவொடு தோன்றுவல் லவன்றனை
யரனு மன்றுமா லயனுமன் றெவர்க்குமுன் னாகியே யாவர்க்குந்
தெரிவருஞ்சிவ னவனையிங் கொருங்கிய சிந்தையார் தெளிவாரே."

என்னும் பிரமகீதையினானும்,

" சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா
ளுவாவிவ் வுலகுபடு மழிதுயர்நீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினுன் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும்"

என்னும் பகவற்கீதையினுனும்,

" துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்றவண்ண நிற்கவே, துயரின் மலியும் மனிதப் பிறவியிற் றோன்றிக்கண் காணவந்து, துயரங்கள் செய்துதன் றெய்வநிலையுலகிற்புக வுய்க்குமம்மான், றுயரமில்சீர்க்கண்ணன் மாயன்புகழ்துற்ற யானோர் துன்பமிலனே."—

என்னுந் திருவாய்மொழியினுனும்,

" தன்பராபரம தானதிரு மேனிநிலையிற் சலன மின்றியொரு தன்மையினி னின்றருளியே, யன்பரானவர்க ணெஞ்சினி லுவந்த வடிவா யங்கு வந்தவர்க ளுய்யும்வகை செய்தவருளும்"—

என்னும் அஞ்ஞவதைப் பரணியினுனும் அறிக; இது, சிஞ்ஞாசையுடையோர் உபாசிக்கத்தக்கது காரணப்பிரமமே யென்னும் சாஸ்திரார்த்தத்தைத் தனது ஒழுக்கத்தால் உபதேசித்ததாம்.

(18) ஸ்ரீ-வியாசபகவானது அபிப்பிராயமும் இதுவே. என்னை? வியாசபகவான் ஒருவரே ஸ்காந்தபுராணத்தில் சிவனுக்கு, சுதந்தரத்துவமுதலிய ஈசுரத்தன்மங் கூறினர். அந்நியதேவர்க்கு, சிவகிருபையினுல் சர்வ விபூதியின் பிராப்திகூறி அதனுல் சீவதன்மங் கூறினர். அப்படியே ஒருவர்க்குப் புராணத்தினும், ஒருவர்க்கு உபபுராணததிலுமாக விஷ்ணு, சிவன் இவரின் வேறான கணேசாதிகட்கும், ஈசுரத்தன்மை கூறினர்; இவ்வாற்றால், வியாசருடைய வாக்கியங்களில் விரோதந்தோன்றுநிற்கின்றதே எனின்? அதற்குச் சமாதானம்;—சர்வமும் ஈசுரனே. எந்தப்பிரகரணத்தில் அந்நிய தெய்வத்தின் நிந்தை கூறியிருக்கிறதோ, அந்நிந்தை அதனுபாசனுத் தியாகத்தின் பொருட்டன்று; அப்படி வியாசர்க்கு அபிப்பிராயமில்லை; மற்றென்னையோ வெனின்? வைஷ்ணவ புராணங்களில் சிவன் முதலியோர் நிந்தையும், விஷ்ணுவின் துதியும், விஷ்ணுவின் உபாசனையில் பிரவிர்த்தித்தற்கேதுவாயிருக்கிறது. அப்படியே சிவபுராணங்களில் விஷ்ணுவாதிகளின் நிந்தையும், அவர்களினுபாசனுத் தியாகத்தின் பொருட்டாகாமல் சிவனுடைய உபாசனையில் பிரவிர்த்தித்தற்கே ஏதுவாம். ஓர் பிரகரணத்தில் அந்நியத்தினுடைய நிந்தை தியாகத்தின் பொருட்டேயாமாயின், சர்வ தெய்வங்களினுடைய உபாசனைகளுமன்றே தியாகமாகும்; அதனுல், அந்நியத்தின் நிந்தை ஒன்றன் ஸ்துதியின் பொருட்டாகவே உளது; தியாகத்தின் பொருட்டன்று.

[இதற்குத் திருஷ்டாந்தம்.]

(19) வேதத்தில் அக்னிஹோத்திரத்திற்கு இரண்டுகாலங் கூறியிருக்கின்றது; ஒன்று சூரியோதயத்திற்குப் பிரதமம்: மற்றொன்று சூரியோதயத்

திர்கநந்தரகாலம். அங்கே, உதயகாலத்தின் பிரசங்கத்தில் அநுதய காலத்தை நிந்தித்திருக்கிறது : அநுதய காலத்தின் பிரசங்கத்தில் உதயகாலத்தை நிந்தித்திருக்கிறது; அந்நிந்தையின் றாற்பரியம் தியாகத்திலாமாயின், இரண்டு காலத்திலும் ஓமத்தின் றியாகமாம். நித்தியகர்மத்தின் தியாகங்கூடுமோ? ஆகலின், உதயகாலத்தைத் துதித்தற்பொருட்டு அநுதய காலத்தையும், அநுதயகாலத்தைத் துதித்தற்பொருட்டு உதயகாலத்தையும் நிந்தித்திருக்கிறது; அப்படி ஓர் தேவதையின் உபாசனையின் பிரசங்கத்தில் அந்நியத்தின் நிந்தை ஒன்றன் ஸ்துதியில் தாற்பரியமாம் : அந்நியத்தின் நிந்தையில் அன்று.

(20) எப்படிச் சாகாபேதத்தால் ஒருவர் உதயகாலத்தில் ஓமஞ்செய்ய, ஒருவர் அநுதயகாலத்தில் ஓமஞ்செய்ய பயன் இருவருக்குஞ் சமானமாக உண்டாகின்றதோ! அப்படி இச்சா பேதத்தால் ஐந்து தெய்வங்களில் எதனை உபாசித்தாலும் பிரமலோகப் பிராப்தியாம்; அங்கே போகங்களைப் புசித்திருந்து இறுதியில் விதேகமோட்சமும் அடைவர். விஷ்ணுவாதிகளின் உபாசனைகளால் வைகுண்ட லோகாதிகளின் பிராப்தி புராணங்களிற் கூறியிருக்கின்றதன்றிப் பிரமலோகத்தின் பிராப்தி கூறவில்லையே யெனின்? அங்ஙனம் கூறியிருப்பினும் உத்தம உபாசகராய், விதேக முத்திக்கு அதிகாரிகளாயினோர் சகலரும் தேவயான மார்க்கத்தால் பிரம லோகத்திற்கே போகாநிற்பர். பிரமலோகம் ஒன்றே, வைஷ்ணவ உபாசகர்க்கு வைகுண்ட ரூபமாகத் தோன்றாநிற்கும்; அவ்வுலக வாசிகளனைவரும் அவர்க்குச் சதுர்ப்புஜ * பார்ஷதரூபராய்த் தோன்றாநிற்பர்: தாமும் சதுர்ப்புஜ மூர்த்தியாகாநிற்பர்; அப்படியே சைவ உபாசகர்க்கும் பிரமலோகமே சிவலோகமாகத் தோன்றாநிற்கும்; அவ்வுலக வாசிகளனைவரும் திரிநேத்திர மூர்த்திகளாகத் தம்மோடு கூடத் தோன்றாநிற்பர்; இவ்வாற்றால், சர்வ உபாசகர்க்கும் பிரமலோகமொன்றே தமது உபாசியத்தினுடைய லோகமாகத் தோன்றாநிற்கும். என்னை? தேவயான மார்க்கமன்றி அந்நிய மார்க்கத்தால் யாவர் செல்லாநிற்பரோ! அவர்க்கு மீளுதலுண்டாகும்; இது நியமம். தேவயான மார்க்கம் ஓர் பிரமலோகத்திற்கே உள்ளது. ஆகலின், விதேகமோட்சத்திற்கு யோக்கியரான உபாசகரனைவரும் பிரமலோகத்திற்கே போகாநிற்பர்; அது உபாசகருடைய இச்சையின் அநுசாரமாகச் சகல சாமக்கிரிகைகளோடு கூட அவரவர்க்குந் தோன்றாநிற்கும்; இப்படிப்பட்ட அற்புதமகிமை அந்தப் பிரமலோகத்திற்கே உள்ளது. இவ்வாற்றால், ஐந்து தேவதைகளின் உபாசகர்க்கும் பயன் சமமாகவே யுண்டாகாநிற்கும்.

(21) அங்ஙனமாயின், ஐந்து தேவதைகளுக்கும் நாமரூபங்கள் வெவ்வேறாகக் கூறியிருக்கின்றன. ஈசுரனே ஒருவன்; ஒரு ஈசுரனுக்கு நாநா நாமரூபம் எங்ஙனங் கூடுமெனின்? அதற்குச் சமாதானம்; பரமார்த்தமாக நாமரூபங்களொன்றும் பரமான்மாவின்கண்ணே உள்ளதாக இல்லை. மந்தபுத்தி யுடையோர்க்கு உபாசனையின் பொருட்டு நாமரூப ரகிதமான பரமான்மாவுக்கு,மாயையினாற் பண்ணப்பட்ட கற்பித நாமரூபங்கள் கூறினர். ஆதலால், ஓர் பர

* பார்ஷதர்=கணங்கள், அல்லது சபையிலிருப்பவர்.

மான்மாவின்கண்ணே மாயையினாற் பண்ணப்பட்ட நாநாகற்பித நாமரூபங்கள் கூடும்; இவ்வாற்றால் சர்வ புராண வாக்கியங்களின் விரோதமும் நிவிர்த்தியாய் விடும்.

(22) புராண வாக்கியங்களில் விரோத சங்கைக்கு முக்கிய சமாதானம் யாதெனில்? விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்பன முதலாக எவ்வளவு நாமங்கள் ஒவ்வொன்றற்குண்டோ! அவை முழுவதும் காரணப்பிரமத்தினுடைய நாமங்களேயாம். காரியப்பிரமங்கட்கும் அவை முழுவதும் நாமங்களாகப்பொருந்தும்; அது எங்ஙனம்? மாயாவிசிட்டமான காரணத்தைப் பிரமமென்றவர், இரண்யகர்ப்பரான காரியத்தையும் பிரமமென்றனர்; ஆகலின் விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்னும் பதங்கள் காரணப்பிரமத்தையும், காரியப்பிரமங்களையும் உணர்த்துகின்றன; அப்படியே அப்பதங்களின் பரியாய நாமங்களாயுள்ள நாராயணன், நீலகண்டன், விக்கினேசன், சத்தி, பாநு இவைமுதலிய அநந்த பதங்களும் அவ்விருவகைப் பிரமங்களையும் உணர்த்துகின்றன. பிரசங்கத்திற்கு ஏற்க ஓரிடத்தில் காரணப்பிரமத்தையும், ஓரிடத்தில் காரியப்பிரமங்களையும் உணர்த்தும்.

அஃதெப்படியெனின்? சைந்தவபதம் அசுவம், லவணம் இரண்டனையும் உணர்த்துமேனும், போஜனப் பிரசங்கத்தில் லவணத்தையும், கமனப் பிரசங்கத்தில் அசுவத்தையும் உணர்த்துவதுபோலென்க. வைஷ்ணவ புராணத்தில் விஷ்ணு, நாராயணாதி பதங்கள் காரணப் பிரமத்தையும், சிவன், கணேசன், சூரியாதி பதங்கள் காரியப் பிரமங்களையும் உணர்த்தாநிற்பனவாம். ஆதலால், வைஷ்ணவ கிரந்தத்திலுள்ள விஷ்ணுவின் துதிக்கும், சிவன் முதலியோர் நிந்தைக்கும் வியாசரது அபிப்பிராயம் காரணப்பிரமம் உபாசிக்கத்தக்கது: காரியப் பிரமங்கள் உபாசிக்கத்தக்கன வல்லவென்பதாம்; அப்படியே, ஸ்காந்த புராணமுதலிய சைவ கிரந்தங்களில் சிவன், மகேசன் முதலிய பதங்கள் காரணப் பிரமத்தையும், விஷ்ணு, கணேசன், தேவி, சூரியாதி பதங்கள் காரியப் பிரமங்களையும் உணர்த்துவனவாம். ஆதலால், அவைகளிலும் காரணப் பிரமத்தின் துதியும், காரியப் பிரமங்களின் நிந்தையும் உள. கணேச புராணத்தில் கணேசபதம் காரணப்பிரமத்தின் வாசகம். விஷ்ணு, சிவன் முதலிய பதங்கள் காரியப்பிரமங்களின் வாசகங்களாம்; அதிலும் காரணத்தின் துதியும், காரியங்களின் நிந்தையும் உள: காளி புராணம், சூரிய புராணங்களிலும் அப்படியே உண்டு. இவ்வாறு, சகல புராணங்களிலும், காரியகாரணங்களின் நாமசங்கேதங்கட்குப் பேதம் உள; கொள்ளற்பாலதும், தள்ளற்பாலதும் ஆகிய பொருள்கட்குப் பேதமில்லை. சகல புராணங்களிலும் காரணப்பிரமத்தின் உபாசனை கொள்ளற்பாலதும், காரியங்களின் உபாசனை தள்ளற்பாலதுமாம்; அதனால் சகல புராணங்களும் ஓர் காரணப் பிரமத்தை உபாசிக்கத் தக்கதாகவே உணர்த்துகின்றன; அவைகளுக்குத் தம்மில் விரோதமில்லை.

(23) எப்படியும் சதுர்ப்புஜ, திரிநேத்திர, ஸதுண்ட, அஷ்டபுஜாதி மூர்த்திகள் மாயையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம், ஆகலின்,

காரியம்: அவைகளின் உபாசனையுங் கூறியிருக்கின்றது; அங்ஙனங் கூறியிருப்பினும், அச்சதுர்ப்புஜாதி மூர்த்திகளுக்கும், மாயாவிசிட்ட காரணப்பிரமத்திற்கும் விசாரிக்குமிடத்துப் பேதமில்லை. ஆதலால், காரியப் பிரமங்களின் ஆகாரங்களை * வாதித்து அவர்களைக் காரண ரூபமாக உபாசிக்கவேண்டுமென்பது தாற்பரியம். என்னை? ஆகாரம் காரியமாதலின், துச்சம்: காரணம் சத்தியம். யாவரது மந்தப்பிரஞ்ஞை ஆகாரத்திலேயே ஸ்திதமாமோ! அவர் சாஸ்திரத்திற்சொன்ன ஆகாரத்தையே உபாசனை செய்க; அதனாலும் பிரஞ்ஞை நிச்சலமாய்க் காரணப்பிரமத்தின் உபாசனையில் ஸ்திதிபெறும்: இவ்வாறே திருவாய்மொழியினும்,

"உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தவிந் நிலைமை, யுணர்ந்துணர்ந் துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்கா, ளுணர்ந் துணர்ந் துரைத்துரைத் தரியய னரனென்னு மிவரை, யுணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே"—எ-ம்,

"ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினு ணின்ற
நன்னெறி நாரண னான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே"—எ-ம்.

அருளிச் செய்திருப்பது காண்க.

(24) ஜகத்காரணன், சத்தியகாமன், சத்தியசங்கற்பன், சர்வஞ்ஞன், சுதந்தரன், சர்வப்பிரேரகன், கிருபாளு என்றிவ்வாறு ஈசுரத்தன்மங்களைச் சிந்திப்பாயாகவென்று காரணப்பிரமத்தின் உபாசனை கூறியிருக்கின்றது. காரணப்பிரமமன்றி வேறே அநேக மூர்த்திகளும் சாஸ்திரங்களிற் கூறியுள்ளன; அவையெல்லாம் உபாசனையின் நிமித்தம் அன்று. சகலமும் காரணப்பிரமத்தின் உபலட்சணமாகவே கூறியிருக்கின்றன.

(25) உபலட்சணமாவது; ஒன்றன் ஏகதேசத்திருப்பதும், ஓர்போதிருப்பதும், † வியாவர்த்தகமா யிருப்பதும் யாது அது. என்னை? காகமிருப்பது தேவதத்தனது கிரகம்,என்னும் வாக்கியத்தில் காகம் உபலட்சணம், எங்ஙனம் காகமானது தேவதத்தனது கிரகத்தின் ஏகதேசத்திருப்பதாயும், ஓர்போதிருப்பதாயும், வியாவர்த்தகமுமா யிருக்கிறதோ அங்ஙனம் ஜகத்காரண பிரமத்தின் ஏகதேசத்தில் சதுர்ப்புஜாதி மூர்த்திகள் உள்ளன; ஓர்போது உண்டாகின்றன; அச்சதுர்ப்புஜாதி மூர்த்திகள் காரணப்பிரமத்தின்கண்ணேயே உண்டாகின்றன; அந்நியத்தின்கண் இல்லை என வியாவர்த்தகமாக் கிருத்தலின், அவை உபலட்சணமாம். உபலட்சணத்திற்கு விசேஷிய வஸ்து

* வாதித்தல்=காரியம், காரணப்பிரமமே அந்நியமன்று என்பதாம்.
† வியாவர்த்தகம்=அந்நியத்தினின்றும் ஒன்றை வேறுபடுத்துமது; இஃது, கூ - வது பிரசங்கத்திற்காண்க.

வின் சொரூபஞானம் உளதாதலே பிரயோஜனமாம். காகத்தால் தேவதத்தனது கிரகத்தின் ஞானம் உளதாதலே பிரயோஜனமல்லாமல் அந்நியப்பிரயோஜனம் இல்லாததுபோல, சதுர்ப்புஜ முதலிய ஆகாரங்களால் நிராகாரமான காரணப்பிரமத்தின் ஞானமே உபாசனையின் நிமித்தம் மூர்த்திப் பிரதிபாதனத்தின் பிரயோஜனமல்லாமல் அந்நியமில்லை.

(26) மந்தப்பிரஞ்ஞரு யுடையோர், சாஸ்திராபிப்பிராயம் அறியாமல் அவ்வாகாரங்களில் ஆக்கிரகஞ் செய்கின்றதுமன்றி " **சியால சாரமேய நியாயத்தால்**" பரஸ்பரம் கலகமும் விளைக்கின்றனர். " **சியாலன்** " என்பது, மனைவியின் ஸகோதரன் பெயர். " **சாரமேயம்** " என்பது, நாயின் பெயர். " **நியாயம்** " என்பது, திருஷ்டாந்தம். ஒரு ஸ்திரீயினுடைய தமையனுக்கும், அவள் கணவன் வீட்டுக்கு அடுத்தவீட்டு நாய்க்கும் உற்பாலகன் என்று பெயர் இருந்தன. அந்த ஸ்திரீயின் தமையனுடைய சத்துருவுக்கும், அவள் கணவன் வீட்டு நாய்க்கும் தாவகன் என்று பெயர் இருந்தன; இப்படியிருக்க, அந்த ஸ்திரீயானவள் பிரதமத்தில் கணவன் வீட்டுக்கு வந்தாள்; அப்போது மேற்கூறிய இரண்டுநாய்களும் ஒன்றோடொன்று சண்டைசெய்து கொண்டிருந்தன; அதைக்கண்ட அவளுடைய கணவன், அடுத்தவீட்டு நாயாகிய உற்பாலகனைப் பன்றி,கழுதை என்பன முதலிய வார்த்தைகளால் வைது, தன்னுடைய தாவகனைப்போற் கிடையாதென்று பெருமைப்படுத்திக்கொண்டாடினன்; அதைக்கேட்டிருந்த அந்த ஸ்திரீக்குத் தன் தமையனை வைகிறதாகவும்,தமையனுடைய சத்துருவைக் கொண்டாடுகிறதாகவும்,பிராந்தியுண்டாகி அதனால் அவள் துக்கமுடையவளாய்த் தன் பர்த்தாவோடு கிலேசித்திருந்தாள். நாயகன் அபிப்பிராயம் அறியாமல் சமானமான நாமத்தாலே பிராந்திகொண்டு அவள் எப்படிக் கிலேசித்திருந்தாளோ அப்படியே வைணவ கிரந்தங்களில் சிவன்முதலிய நாமங்களால் காரியப்பிரமங்களை நிந்தைசெய்திருப்பதைக்கண்ட சைவர் முதலியோர்களும், சைவ கிரந்தங்களில் விஷ்ணு நாமத்தால் காரியப்பிரமத்தை நிந்தைசெய்திருப்பதைக்கண்ட வைணவர்களும் துக்கத்தை யடைகின்றனர். காரணப்பிரமம் உபாசிக்கத்தக்கது, காரியப்பிரமங்கள் விடத்தக்கனவென்பதே சகல புராணங்களின் அபிப்பிராயமாம். மாயாவிசிட்ட சேதனம் காரணப்பிரமமென்றும், மாயையினாற் பண்ணப்பட்ட காரியவிசிட்ட சேதனம் காரியப்பிரமமென்றுஞ் சொல்லப்படும். பாரதவியாக்கியானத்தின் ஆரம்பத்தில் அறிஞர் சிகாமணியாகிய நீலகண்ட பண்டிதரால் இவ்வாறெழுதப்பட்டிருக்கிறது. சகல வேதாந்தங்களின் சித்தாந்தமும் இதுவே என்று விசாரசாகரத்தின் ஏழாந்தரங்கத்திற் கூறியிருக்கின்றது. இந்நூலாசிரியர், இவ்வபிப்பிராயத்தை அறிவித்தற்பொருட்டே காரியப்பிரமங்களின் சின்னங்களான சதுர்ப்புஜ, திரிநேத்திர, ஸதுண்ட, அஷ்டபுஜாதிகளுள்ளே யாதொன்றையும் எடுத்து விசேடியாமல் "**ஏக நாயகன் பதங்கள் போற்றி**"—என்றார்.

இலக்கணையினால் தன்னநுபூதிமயமான இருக்குவேத மஹாவாக்கியப் பொருளையே சிந்தித்ததாம்.

[ஆன்மசொரூப நமஸ்காரரூப மங்கலம்.]

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனாய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனாய் நாளுந்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே (2)

இ-ள். தானே, ஈன்று—உலகத்தைச் சிருஷ்டித்து, அளித்து—இரட்சித்து, அழிக்கும்—சம்மரிக்கும், செய்கைக்கு—இம்முத்தொழிற்கும், ஏது ஆம்—காரணமாகும், அயன் ஆய்—பிரமனாகியும், மால் ஆய்—நாராயணனாகியும், ஆன்ற ஈசனும் ஆய்—மாட்சிமை பொருந்திய உருத்திரனாகியும், அநந்த மூர்த்தியும் ஆய்—(இன்னும்) அளவிறந்த சுர, நர, திரியக்காதி சேதனப்பிரபஞ்சங்களாயும், கிரி நதியாதிய அசேதனப் பிரபஞ்சங்களாயும், பூன்ற முத்தனும் ஆய்—(அனைத்தினும்) பூரணமாகும் நித்திய முத்தனை ஈசுரனுமாய், நிற்கும்—(நிறைந்து) நிற்கின்ற, இன்பப்புணரி ஆதவன் ஆய்—ஆநந்த சமுத்திரமாயும், (பர) மாதித்தனாயும், நாளும் தோன்றிய—சதாகாலமும் விளங்குவதாகிய, விமலபோத சொரூபத்தை—நிர்மலமான ஆன்ம சொரூபத்தை, பணிகின்றேன்—வணங்குகின்றேன். எ-று.

"தானே, ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனாய் மாலாய்[ம்
யான்றவீ சனுமா யநந்தமூர்த் தியுமாய்ப் பூன்றமுத் தனுமாய் நிற்கு
விமலபோத சொரூபத்தைப் பணிகின்றேன்"—

எனக்கூட்டுக.

"அயனாய் மாலா யான்ற வீசனு மாய்" என்றது, காரியப்பிரமங்களை. "பூன்ற முத்தனுமாய்" என்றது, காரணப்பிரமத்தை. இங்ஙனம் அனைத்துமாய் நிற்பதும் தனது ஏகதேசத்தில்; அதுவும் தோற்றரவு மாத்திரமே என்னும் பொருடோன்ற "இன்பப் புணரியாதவனாய்" என்றார். அன்றியும், "இன்பப் புணரியாதவனாய்" என்றதை, ஏதுகர்ப்ப விசேடணமெனினு மமையும். "இன்பம்" என்பது, பிரசித்த சமுத்திரத்தினும் ஆன்ம மகோததிக்குள்ள விலட்சணத்தன்மையையும், "நாளுந்தோன்றிய" என்பது, பிரசித்த சூரியனினும் பரமாதித்தனுக்குள்ள விலட்சணத்தன்மையையும் குறிப்பித்து நின்றது. "விமலபோதம்" என்றதால், பஞ்சகோசங்களே ஆன்மா வென்பாரையும், "போதசொரூபம்" என்றதால், ஆன்மாவிற்கு ஞானங் குணமென்பாரையும் மறுத்தனர்—எ-ம், "தானே" என்றதால், அந்நிய நிமித்தோபாதானம் இன்மையைக் குறிப்பித்தனர்—எ-ம். கொள்க.

"ஏதனைத்தும் ஆன்மாவே" என்னுஞ் சுருதியால், தன்னை வணங்கினதாம். (2)

[குருவின் நமஸ்கார ரூபமங்கலம்.]

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து

சுவரிடை வெளிபோல் யானென் சொரூபசு பாவ மானேன்
அவருடைப் பதும பாத மநுதினம் பணிகின் றேனே. (3)

இ-ள். எவருடை அருளால்=(தாயினுஞ் சிறந்த) யாவருடைய கிருபையினால், சுவரிடை வெளிபோல்=குட்டியத்தின்கண் (அதனாலாச்சாதிக்கப்பட்டுள்ள) ஆகாயத்தை (அக்குட்டியத்தை யிடிந்தொழித்து அதுவே மகாகாயமென்றறிந்தாற்) போல, யானே=(அசங்க சித்தாத்மாவான வென்னை யாச்சாதித்துள்ள பஞ்சகோசங்களையும், அவை என்னாலறியப்பட்டுச் சடமாயிருத்தலின் இதுநானல்ல, இது நானல்ல என்று நேதித்து, மேலே அவைகளினபாவரூபமான சூனியத்தையும் ஒழித்து அவைகட்குச் சாட்சியாய். அசங்க சித்தாத்மாவான) நானே, எங்கும் ஆம் பிரமம்=அரி, அயன், சிவன், அந்தகன், இந்திரனாதிய விடந்தோறும் (முத்தினுள் நூல்போல அநுசூதமாய், சாட்சியாய்) நிறைந்திருப்பதாகிய பிரமமாமே:—என்பால்=(இப்படிப் பரப்பிரமமான என்னிடத்து,) கவருடைப் புவனம் எல்லாம்=நாநாகூறுபாடுடைய பிரபஞ்ச மெல்லாமும், கற்பிதம்=(கானற் சலம்போல அத்தியஸ்தமாதலின்,) மித்தையாம், என்று அறிந்து=என்று (சமுசயமில்லாமற்) சாட்சாத்கரித்து, சுபாவம்=சுபாவமாக, யான் என்சொரூபம் ஆனேன்=நான் எனது நிசசொரூபமாயினேனே, அவருடைப் பதுமபாதம்=அக்கருணை மூர்த்தியினுடைய தாமரை மலர்போலுந் திருவடியை, அநுதினம் பணிகின்றேன்—நாடோறும் வணங்குகின்றேன். எ - று.

எவருடை யருளால் ஆனேனெனக்கூட்டுக.

யாவரும் முடிமேற் கோடலானும், யாவரினும் பெருமையுடைமையானும், அபக்குவர் அண்மைக்கணிருந்தும் அடையாமையானும், பக்குவர் சேய்மைக்கணிருந்தும் தேடிவந்தடைதலானும் "**பதுமபாதம்**" என்றார். ஞானம் வந்தபின் பணிதலொழியின் "**செய்ந்நன்றி கொன்ற**" தோடம் வருமென்பதை, "**அநுதினம்**" என்னும் பதத்தாற் குறிப்பித்தனர்.

(27) "**சுபாவம்**" என்ற பதத்தால் அம்ஸாம்ஸிபாவம், விகாரவிகாரிபாவம், உபாசகவுபாசியபாவமுதலியனபோல எனக்கும், பிரமத்திற்குங் கொஞ்சமும் பேதமின்றென்பதையும், பேதமின்மையின் காரியத்தன்மை, பிரகாசியத்தன்மை, ஆதேயத்தன்மை ஆகிய பரதந்திர முடையனன்றென்பதையும் குறிப்பித்தனர். "**யானே யெங்குமாம் பிரமம்**" என்பதற்கு, உதாரணம், பிரபுலிங்கலீலை,

"வான மல்லேன் வளியல்லே னழனீ ரல்லேன் மண்ணல்லேன்
ஞான மல்லேன் வினையல்லே னானே சிவமென் றெண்ணினோ
னூன மில்லா வொருசிவமே யாவ னிவ்வா றுன்னுதா
னீன மெல்லா முடையவுடம் பெடுத்துச் சுழிலு மென்ஞான்றும்"

எனவரும் மற்றும் வருவனவற்றுற்காண்க. "**அநுதினம் பணிகின்றேன்**" என்பதற்கு, உ-ம் பிரமகீதை,

"மாயவன்புலத் தெழாவகை தீர்ந்ததன் வாய்மையான் மயிர்க்காலாற்
பாய வின்னமு திருசெவித் துளேவழி பாய்ச்சினுன் பதுமத்தா
டாயுந் தந்தையுஞ் சுற்றமு மற்றுநற் றனமுமென் றடைவான்றன்
காய முள்ளள வும்புகழ்ந் தேத்துவான் கற்றதோர் கலையாலே"—

எனவரும் மற்றும் வருவனவற்ருற்காண்க. "**யானே**" என்பது, மஹா வாக்கியத்தின் "**அகம்**" பதம். "**எங்குமாம் பிரமம்**" என்பது, "**பிரம**" பதம். "**ஆனேன்**" என்பது, "அஸ்மி" பதம்.

அநுபூதி வாக்கியார்த்த ஸ்மிருதியோடு குருவினது பெருங் கருணையை வியந்ததாம். (3)

[குருவின் சீர்பாத வல்லபத்தைத் துதித்தல்.]

என்னுடை மனதூ புத்தி யிந்திய சரீர மெல்லாம்
என்னுடை யறிவி ஞலே யிரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடைக் குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே. (4)

இ-ள். என்னுடை மனது=எனது (சமுசய ரூபமான) மனதும், புத்தி=(நிச்சய ரூபமான) புத்தியும், இந்தியம்=ஞான கருமேந்திரியங்களும், சரீரம்=(பிராணபஞ்சகத்தோடு இவ்விலிங்க தேகத்திற்கிடமான தூல) சரீரமும், எல்லாம்=இவ்விரண்டிற்கும் மூலமான அஞ்ஞானக் கூறென்னும், காரணசரீரமும், இவைகளைப்பற்றி வாராநின்ற, சாக்கிராதி அவத்தாத்திரயமும், விசுவாதி அபிமானித்திரயமும், இன்னும் விராட்டாதி சமட்டி சரீரத்திரயங்களும், சிருஷ்டியாதி அவத்தாத்திரயமும், வைசுவானராதி அபிமானித்திரயமும் ஆகிய துவம்பத, தற்பதங்களிலுள்ள மாயாகற்பிதங்கள் அனைத்தையும், என்னுடை அறிவினாலே=(தம்மாற்போதித்த யுத்தியினாலே யுளதாகிய) எனது பிரஞ்ஞையினாலேதானே, இரவிமுன் இமமே ஆக்கி=சூரியன் முன்னே பனியைப்போலவே (அபாவ) மாக்கி, நீயும்=(துவம்பத லட்சியார்த்தமென்னும் கூடஸ்தனாகிய) நீயும், நானும்=(தற்பத லட்சியார்த்த மென்னும் பிரமமாகிய) நானும், ஏகம் என்று=(கடாகாயம், மடாகாயம்போல) ஒன்றேயென்று, என்னுடைய ஐக்கியம்செய்ய=என்னுடைய ஐக்கியத்தை (எனக்கு) உபதேசித்தருள, என்னுடைக் குருஆய்த் தோன்றும் ஈசனை=என்னுடைய குருமூர்த்தமா யெழுந்தருளிய ஈசுரனை, இறைஞ்சினேன்=வணங்கினேன். எ-று.

தத்துவ சமூகங்களுள் மனதை முன்னே காட்டினது, வாசிட்டத்தில்,

"பரமமா மறிவின் முன்னே புறப்படும் பொய்யா முள்ளம் புவனவிகற் பங்களெனும் பொய்யைக் காட்டும்"

எனக் கூறியபடியே, சகல சக கற்பனைக்கும் மனதே காரணமாதல்பற்றி "**எல்லாம்**" என்ற பதத்தால், சமஷ்டி சரீரத்திரய முதலியவை வருவித்

தாம். "எல்லாம் இரவிமுன் னிமமேயாக்கி" என்பதால், அநர்த்த நிவிர்த்தியும், "ஐக்கியஞ்செய்ய" என்பதால், ஆநந்தப்பிராப்தியும் குருவினால் உளவாயின வென்பது பெற்றும். இப்பேறு குருவின் சீர்பாத வல்லபத்தாலாதலின். இதுவே குருவின் சீர்பாதவல்லபமாமென்க. "நானும்" என்றது, "பிரமவித்து பிரமமே" என்னும் சுருதியாலென்க, ஐக்கியஞானக்கு எற்கனவே உளதாயிருத்தலான்.

"மன்னுடை ஐக்கியம"—எ-ம்,

"ஈசனிங் கருள் செய்யவரு கிருக்கிற விடரின்ற திருமேனி"

என்னும் சுருதியால்,

"என்னுடைக் குருவாய்த்தோன்று மீசனை"

என்றுங்கூறினர். ["ஈசன்" என்பதற்கு, ஐசுவரிய சம்பன்னனென்று பொருள்.] இறைஞ்சாநின்றேன் என்னாது, "இறைஞ்சினேன்" என்று, இறந்தகாலத்தாற் கூறினது ஜகதீசுரன் குருமூர்த்தமாய் வந்தருளியதும், கீழ்ப்போன அநந்த ஜனனங்களில் யான் நிஷ்காமனாய் உபாசிதது வந்த உபாசனையின் பெரும்பேறுமென்னுங் குறிப்பு. "குரு" என்பதில், "குகாரம்"= அஞ்ஞானம்: "ருகாரம்"—ஞானமாம்; ஆகவே ஞானத்தால் அஞ்ஞானத்தை நிவிர்த்திசெய்பவரே குருவாம. மற்றையர் குரு சத்தத்திற்கு அருகரல்ல ரென்றறிக. இதற்கு, உ-ம்-பிரமகீதை,

"உண்டுபோற் றோன்று முலகெலா முண்மை யன்றென வுணர்த்தியெப் பொருளுங், கண்டசான் றதனைக் காட்சிய தறவே கண்டிடக் கரியெனக் காட்டும, பண்டைவே தாந்த வாக்கியஞ் சொன்ன படியிலே பரமனே டொன்றாய், விண்டிடா வண்ண முணர்ந்து வான் றன்னை வியன்குரு வென்றிடும் வேதம்"—எ-ம்,

"காட்சியை யெல்லாங் கண்ணதாய்க் கரைத்துக் கண்ணொறிந் தொருபொரு ளில்லா, மாட்சியை யளிக்க வல்லவன் குருவா மாரிபோன் மாறுவேண் டாதே, மீட்சியில் பதத்தைக் கருணையாலளிக்கும் வித்தகக் குரவனை யெவருந, தாழ்ச்சிசெய் தேத்தற் குரியதத் துவமாஞ் சஙகர னென்றிடத் தகுவான்"—எ-ம் வரும்.

மற்றும் வருவனவற்றாற் காண்க.

குருவின் திருமேனிக்கண் ணிருந்து சாமவேத மஹாவாக்கியத்தை உபதேசிப்பதும, ஈசுரனே யென்னுஞ் சுருதியின் பொருளை யறிவித்ததாம். (4)

[குருவை வணங்கி அவரருளால் நூல்செயப்புகுந்து நூலின் அதிகாரி, சம்பந்தம், விடயம், பயனென்னும் அநுபந்த சதுஷ்டய மறிந்தாலல்லாமல் விவேகிக்கு நூல் கேட்டற்கண்ணூக்கம் பிறவாதாகலின், அவற்றை இரண்டு செய்யுளான் முன்னே கூறத்தொடங்கி இதில் அதிகாரியையும், விடயத்தையுங் கூறுகின்றார்.]

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி வான்போல்
சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம் போற்றிப்
பந்தமும் வீடுங் காட்டப் பரந்தநூல் பார்க்க மாட்டா
மந்தரு முணரு மாறு வத்துதத் துவஞ்சொல் வேனே. (5)

இ-ள். ஆதியும் நடுவும் இன்றி=(தனக்குத்) தோற்றமும், திதியுமில்லாமல், அந்தமும் இன்றி=நாசமுமில்லாமல், வான்போல்=ஆகாயம்போலச் (சூட்சுமமாய், வியாபகமாய், அசங்கமாய்,) சந்ததம் ஒளிரும்=சர்வகாலமும் விளங்காநிற்கும், ஞான சற்குரு பாதம் போற்றி=ஞானமயமான*சற்குருவினுடைய சீர்பாதங்களைத் துதிசெய்து (அப்பாதாம்புஜப் பிரசாதலேசத்தால்), பந்தமும் வீடும்காட்ட=பந்தலட்சணம் இன்னது, மோட்சலக்ஷணம் இன்னதென்று (அதிகாரிக்கு) அறிவித்தற்பொருட்டு, பரந்த நூல்=(வாதராயணர் முதலிய பூர்வாசாரியரால் அருளிச் செய்யப்பட்டுள்ள சூத்திரம், பாடியம், வார்த்திக முதலிய) வேதாந்த நூல்களை, பார்க்கமாட்டா மந்தரும்=விசாரித்தறியச் சாமர்த்தியமின்றிய மந்தபுத்தியுடைய வதிகாரிகளும், உணரும் ஆறு=(அப்பந்தமோட்ச சொரூபங்களையெளி)தறியும்படி, வத்துதத்துவம் சொல்வேன்= வஸ்துவின் உண்மையை (இந்நாலின்கட்)சொல்லுவேன். எ-று.

"**மந்தர்**"=இந்நூலின் அதிகாரி. "**வத்துதத்துவம்**"=இந்நூலின் விடயம்; "**வத்து**"=சீவ பிரமங்கள்; "**தத்துவம்**"=அவைகளின் ஏகத்துவம்.

(28) சகல பிராணிகளின் அந்தக்கரணத்துள்ள † மலம், விட்சேபம், ஆவர்ணம் என்னும் மூவகைத் தோடங்களுள்ளே நிட்காம கர்மாநுட்டானத்தால் மலதோடமும், உபாசனையால் விட்சேபதோடமும், ஞானத்தால் சொரூபாவரணரூபமான அஞ்ஞானதோடமும் நீங்காநிற்குமென்று கூறியிருப்பதால், நிட்காமகருமத்தால் மலதோடமும், உபாசனையால் விட்சேபதோடமும் நீங்கி ஓரஞ்ஞானதோடமாத்திரத்தோடு கூடி நான்கு சாதனங்களையுமுடைய புருடரே இந்நூற்கதிகாரிகளாம்.

(29) பிரதிபாதனம் பண்ணப்படுவது யாது? அது விடயமெனப்படும். இந்நூலின்கண்ணே சீவ பிரமங்களின் ஏகத்துவம் பிரதிபாதனஞ்செய்திருத்தலின், அவ்வேகத்துவமே இந்நூற்கு விடயமாம்.

"**மந்தரும்**" என்பதில், உம்மை இழிவுசிறப்பாய்க் கூறிய மதியுடைய ஏனையோரும் என எதிரது தழீஇ நின்றது.

"மந்தரு முணரு மாறு வத்துதத் துவஞ்சொல் வேன்"—

என்பதன் கருத்து, பூர்வாசாரியரான வாதராயணர் முதலியோரால் தெய்வவாணியால் வெகு கிரந்தங்கள் முன்னமே அருளிச்செய்யப்பட்டிருக்க, மீள நூதனமாகச் செந்தமிழ்ப் பாஷையாலியற்றும் நூலானது நிட்பலமாமென்று வரும் ஆசங்கையைப்பற்றித் தெய்வவாணியாலுள்ள அந்நூல்களாற்

---

* சற்குரு=சத்துபதேசஞ் செய்பவர். † மலம்=பாவம்.

கூரிய மதியுடையோர்க்கே போதம் உளதாம். மந்தபுத்தி யுடையோர்க்குப் பாஷா கிரந்தங்களாலல்லாமல் அந்நூல்களால் போதம் உளதாகாதென்பது துணிவாதலால், நூதனமாக விந்நூலாரம்பிப்பது சபலமாமென்பது. (5)

[ஆனால், செந்தமிழ்ப் பாஷையினும் பிரபந்தங்கள் அனேக மிருத்தலின், நீர் நூதனமாகச் செய்வதில் விசேடமின்மையின் இது நிட்பிரயோஜனமா மென்றாசங்கித்து தாம் நூதனமாகச் செய்யப் புக்கநூலின் விசேடத்தைத் தெரித்துணர்த்துகின்றார்.]

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன் மொண்டு முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
அடைந்தவர் விடய மண்டின் றலைவரோ பசியி லாரே

இ-ள். படர்ந்த வேதாந்தம என்னும்=(அனேகமாய்) விரிந்துள்ள உபநிஷத்துக்களென்று கூறும், பாற்கடல மொண்டு=பாற்கடலில் முகந்து, முன் நூல் குடங்களில்=(சூத்திரம், பாஷியம், வார்த்திகமுதலிய) புராதன கிரந்தங்களென்னும் குடங்களிலே நிறைத்து வைத்தார்=பூரித்து வைத்தார்கள், குரவர்கள் எல்லாம்=(வாதராயணர் முதலிய) பூருவாசாரியர்களெல்லாம், காய்ச்சி=(உபநிஷத்து வாக்கியங்களென்னும் அப்பால்களைச் சற்குரு சந்நிதித் தீயிற்) காய்ச்சி, கடைந்து=என தநுபூதிமத்தான் மதனஞ் செய்து, எடுத்து அளித்தேன்=(திரட்டி) எடுத்துக்கொடுத்தேன், இந்தக் கைவல்ய நவநீதத்தை=இக்கைவல்ய நவநீதமென்னும் ஞானநூலினை, அடைந்தவர்=இதனை யநுபூதியளவிற் பெற்றோர், விடய மண்டின்று=(சாரமற்ற) விடயமாகிய மண்ணையுண்டு, அலைவரோ=(அவ்விடயவாசனையான் மீண்டும், மீண்டும் ஜநநமரணங்களை யடைந்து) வருந்துவரோ (வருந்தார்) என்னை? பசியிலார்=திருப்தராகலின். எ-று.

அர்த்த கெம்பீரத்தால் அளத்தற்கரிதாகலானும், பரிபூரண பரமானந்த ரூபமான சீதளத்தைப் பயத்தலானும், அமலமாயும், அற்புதமாயுமிருத்தலானும் வேதாந்தத்தைப், "பாற்கடல்" எ-ம், பூர்வாசாரியராகிய வாதராயணர் முதலியோர் தாம் உபதேசிக்கும் வகைக்கேற்கத் தமக்கு வேண்டியவாக்கியங்களை அங்கங்கே எடுத்துக்கொண்டதை, "மொண்டு" எ-ம், அவ்வாக்கியங்களை நூலாகப்பூர்த்திசெய்ததை, "முன்னூற்குடங்களில் நிறைத்து" எ-ம். அப்புராதன கிரந்தங்களை இவ்வாசாரியர் குருமுகமாக வாராய்ந்து அவற்றில், இன்னது பூர்வபட்சம், இன்னது சித்தாந்தம் எனத் தாம் தேர்ந்ததை, "காய்ச்சி" எ-ம், சித்தாந்தத்திலும் * ஆக்யாயிகை † ஆக்யான முதலியவற்றை ஒழித்துச் சாராம்சமான பிரகரணார்த்தங்களைத் தமது அநுபவ பலங்கொண்டு கூலபடவிசாரித்ததை, "கடைந்து" எ-ம், பிரமா

* ஆக்யாயிகை=பிரத்தியட்ச நடத்தச்சத்தார்தம்.

† ஆக்யானம்=பரோட்ச விருத்தாந்தம்.

ண்ம வைக்கிய ஞானத்திற்கு முக்கிய உபயோகிகளான பதார்த்தங்களைத் தமது மனதிலே தாரணைசெய்ததை, “**எடுத்து**” எ-ம், அவைகளைப் பத்திய ரூபப் பிரபந்தமாகச் செய்ததை, “**அளித்தேன்**” எ-ம் இக்காரணத்தான் இந்நூற்குக் கைவல்லிய நவநீதமென நாமமிட்டேமென்பார் * “**கைவல்லிய நவநீதத்தை**” எ-ம், இதைக் குருமுகமாகவே கேட்டு அநுபூதிபெற்றவர் செய்யத்தக்கவை யெல்லாஞ் செய்து, அடையத்தக்கவை யெல்லாம் அடைந்தேம் என்னும் அமைதிரூபமான நிரங்குச திருப்தராய்ச் சம்சாரவனர்த்தத்தினின்றும் முத்தராவர் என்பார் “**விடயமண்டின் றலைவரோ பசியி லார்**” என்றுங் கூறினர். “**எடுத்தளித்தேன்**” எ-து, சம்பந்தம். “**விடயமண்டின் றலைவரோ பசியி லார்**” எ-து, அநர்த்தநிவிர்த்தி, ஆநந்தப்பிராப்தி ரூபமான இந்நூலின் பயன்.

(30) கிரந்தத்திற்கும், விடயத்திற்கும் பிரதிபாத்திய, பிரதிபாதகபாவ சம்பந்தம். கிரந்தம், பிரதிபாதகம்; விடயம், பிரதிபாத்தியம்; யாது பிரதிபாதனஞ் செய்வதோ! அது பிரதிபாதகம்: யாது பிரதிபாதனஞ் செய்ய யோக்கியமாமோ! அது பிரதிபாத்தியமாம். அதிகாரிக்கும், பலத்திற்கும் பிராப்பிய, பிராபக பாவசம்பந்தம். பலம், பிராப்பியம்: அதிகாரி, பிராபகன்; யாதொன்று பிராப்தமாமோ! அது † பிராப்பியம் : எவனுக்குப் பிராப்தமாமோ! அவன் ‡ பிராபகன். அதிகாரிக்கும், விசாரத்திற்கும் கர்த்திரு, கர்த்தவ்விய பாவசம்பந்தம். அதிகாரி, கர்த்தா : விசாரம், கர்த்தவ்வியம்; செய்பவன் யாவன், அவன் கர்த்தாவாம். யாது செய்ய யோக்கியமாமோ! அது கர்த்தவ்வியமாம். கிரந்தத்திற்கும், ஞானத்திற்கும் ஜந்நிய ஜநகபாவ சம்பந்தம்: விசாரவாயிலாகக் கிரந்தம், ஞானத்திற்கு ஜநகமாம். ஞானம், ஜந்நியமாம்: உற்பத்தி பண்ணுவது யாது! அது ஜநகமாம். யாது உற்பத்தியாமோ! அது ஜந்நியமாம். இவை முதலான சம்பந்தங்கள் இன்னும் அநேகம் உள.

(31) பிரபஞ்சத்திற்குக் காரணமான அஞ்ஞானமும், பிரபஞ்சமும் ஜநந மரணரூபமான துக்கத்திற் கேதுவாகலின், அவை அனர்த்தமாம்; ஆகவே, அவ்வனர்த்தநிவிர்த்தியும். பரமாநந்தப் பிராப்தியும் மோட்சமெனப் படும்; இதுவே, கிரந்தத்திற்குப் பரமப்பிரயோஜனமாம்: அவாந்தரப்பிரயோஜனம் ஞானமாம். யாதொன்றனிடத்துப் புருடனுக் கபிலாஷை யுண்டாமோ? அது பரமப்பிரயோஜனமாம்; அதனையே புருஷார்த்தமென்ப; அவ்வபிலாஷை துக்கநிவிர்த்தியிலும், சுகப்பிராப்தியிலும் சர்வபுருடருக்கும் உளதாம்; அதுவே மோட்சத்தின் சொரூபமாம். ஆகவே, பரமப்பிரயோஜனம் மோட்சமாம்: ஞானம் அன்று. என்னை? ஞானம் சுகப்பிராப்திக்கும், துக்கநிவிர்த்திக்கும் சாதனந்தான்; ஆயினும், ஞானம் சுகப்பிராப்தி, துக்கநிவிர்த்தி ரூபமானதன்று; இதனான் ஞானம் அவாந்தரப்பிரயோஜனமாம்; யாதொரு வத்துவின் வாயிலாகப் பரமப்பிரயோஜனம் பிராப்தமாமோ அது அவாந்தரப் பிரயோஜனமெனப்படும்; அப்படிப்பட்டது ஞானம். என்னை? கிரந்தத்தினால் ஞானவாயிலாக முத்திரூபமான பரமப்பிரயோஜனம் பெறப்படுதலின்,

---

* “**கைவல்ய நவநீதம்**” என்பது, கைவல்லியத்தை ஞானவாயிலாகப் பயக்கத்தக்க நவநீதம்போன்றது என இரண்டாம்வேற்றுமை உருபும், பொருளும் உடன்றொக்க தொகையாய் நூற்கு உவமவாகு பெயரென்னும் காரணக் குறியாயிற்று. “**கைவல்லியம்**”=மோக்ஷம். “**நவநீதம்**”=வெண்ணெய்.

† பிராப்பியம்=பேறு. ‡ பிராபகன்=பெறுபவன்.

ஞானம் அவாந்தரப் பிரயோஜனமாம். இவ்வாறான சம்பந்த, பிரயோஜனாதிகளை இவ்வாசிரியர் இரண்டு செய்யுளாற் றொகுத்துக் கூறினர்.

சொல்லிய உருவகத்தால் இந்நூலானது சகல வேதாந்த சாஸ்திரார்த்த சாராம்சங்களையும் சூத்திரம்போலச் செய்யுளுள்ளே அடக்கிக்கொண்டிருப்பதென்பதும், ஓரிடத்திலாவது வேதாந்த சாஸ்திரத்திற்கு விரோதமில்லாதென்பதும், ஞானத்திற்கு முக்கிய உபயோகிகளான பதார்த்தங்களைப் பிரதிபாதிப்பதென்பதும், ஏனைய பாஷாக்கிரந்தங்களோடு இணையானதன்று சர்வ பாஷா கிரந்தங்களினும் உத்தமோத்தமமாம் என்பதும் பெற்றாம். (6)

[இந்நூலின் படலவகை கூறுகின்றார்.]

முத்தனை வேங்க டேச முகுந்தனை யெனையாட் கொண்ட
கர்த்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தை
தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளித லென்றும்
வைத்திரு படல மாக வகுத்துரை செய்கின் றேனே. (7)

இ-ள். முத்தனை=சம்சாரபந்தம் விடுபட்டவனை, வேங்கடேச முகுந்தனை=வேங்கடமென்னுமலைக்கிறைவனான திருமாலை, எனை ஆள்கொண்ட கர்த்தனை=என்னை அடிமைகொண்ட கருத்தனை, வணங்கிச் சொல்லும்=(என்மயமாக) வணங்கிச்சொல்ல எடுத்துக்கொண்ட. கைவல்லிய நவநீதத்தை=கைவல்லிய நவநீதமென்னும் பெயரையுடைய இந்த ஞானநூலினை, தத்துவவிளக்கம் என்றும் சந்தேகம் தெளிதல் என்றும், இரு படலமாக வகுத்துவைத்து=இரண்டுபடலமாகப் பிரித்துவைத்து, உரை செய்கின்றேன்=சொல்கின்றேன். எ-று.

“மு” எ-து, முத்தி: “கு” எ-து, புத்தி: இவைகளை முறையே ஞானிகட்கும், பத்திமான்கட்குங் கொடுப்பவன், “முகுந்தன்” ஆம். “முத்தன்” எ-து, விடுபட்டவனென்னுஞ் சுருதியால் சுபாவமாகச் சமுசாரபந்தம் இவனுக்குச் சர்வாத்மனா இல்லை; இதனன், “முத்தன்”. யாதொரு சகாயமும் அபேட்சியாமல் பிரபஞ்ச சிருட்டியைச் சுதந்தரனாகச் சுவேச்சையினாலே பண்ணுகின்றமையால் கர்த்தாவாம்; இங்ஙனம் விஷ்ணு சகஸ்திரநாம பாஷியத்திற் கூறியிருக்கின்றன. நாராயண தேசிகனென்னும் நாமத்திற்கியைய “வேங்கடேசமுகுந்தன்” என்றார். குருவருளுடையோர்க்கே சகல சுருதிப் பொருள்களும் உள்ளவாறு தோன்றுமாகலான், “எனையாட் கொண்ட கர்த்தனை வணங்கிச் சொல்லும்” என்றார். இதனால் குருவினது கிருபாபலங்கொண்டு இந்நூல் சொல்லுகின்றேனல்லாமல் எனது புத்தி வலிகொண்டு சொல்லவில்லை யென்பது குறிப்பு.

இங்ஙனங் கூறியது அவையடக்கம்.

சீவபிரமங்களின் ஐக்கிய ஞானத்தைப் பிரகாசிப்பித்தலால் முதற்படலத்திற்கு “தத்துவவிளக்கம்” எ-ம், அதன்கண் ணுளவாகும் சந்தேகங்களைத் தெளிவித்தலால் இரண்டாம் படலத்திற்கு, “சந்தேகந்தெளிதல்” எ-ம், நாமஞ்சூட்டினர். “படலம்”=கிரந்தபேதம்; அதாவது நூலினுட்பிரிவு. (7)

பாயிரம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

சிவமயம்.

கைவல்லிய நவநீதம்.

முதலாவது,

தத்துவவிளக்கப் படலம்.

[குருசீட சம்வாதரூபமாக அர்த்த நிரூபணஞ் செய்வதால் அநாயாசமாகப் போதம் உண்டாமாகலின், அங்ஙனம் இந்நூல் நுவலத்தொடங்கி இது கேட்கும் அதிகாரிக்குரிய சாதனங்களை இங்கே கூறுகின்றார்.]

(32) நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி வேகம்
மத்திய விகப ரங்கள் வருபோகங் களினி ராசை
சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென் றாறு கூட்டம்
முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே (8)

இ-ள். நித்திய அநித்தியங்கள்=நித்தியா நித்திய வஸ்துக்களினுடைய, நிண்ணயம் தெரிவிவேகம்=நிச்சயமான தன்மையை அறியா நிற்கும் விவேகமும், மத்திய இகபரங்கள்=மத்தியமான இகலோக பரலோகங்களில், வருபோகங்களில் நிராசை=(முறையே கரும ஜந்மியமாய்) வருகின்ற (மாலை, சந்தன முதலியனவும், அப்சரஸ்திரீ, அமுத முதலியனவும் ஆகிய) போகங்களில் விராகமும், சமாதி ஆறு கூட்டம்=சமாதி சட்கசம்பத்தியும், முத்தியை விரும்பும் இச்சை=மோட்சத்தை யடைய விரும்பா நிற்கும் இச்சையும், (ஆகிய இந்நான்கே, சத்தியம் உரைக்கவேண்டும்=உண்மையாக (அதிகாரிக்குரியனவாகக்) கூறத்தக்க, சாதனம் என்று மொழிவர்=சாதனமாமென்று சொல்லுவர் பெரியோர். எ-று.

"நித்தியம்" ஆன்மா. "அநித்தியம்"=தேகாதிப் பிரபஞ்சம். "நிண்ணயம்"=ஆன்மா நாசமின்மையதும், கிரியை யின்மையதுமாம், பிரபஞ்சம் நாசமுடையதும், கிரியை யுடையதுமாம் என்னுந் தன்மை; இவைகளின் பகுத்தறிவு, "விவேகம்" இகலோக பரலோகங்களிலுள்ள போகங்களில் அநித்த துக்காதி தோடதரிசனத்தால் வாந்தாசன மூத்திர புரீஷங்களிற்போல அருவருப்புற்று ஆசைவிடுவதே, "இகாமுத்ரார்த்த பலபோக விராகம்." சமமுதலிய ஆறின் பிராப்தியே, "சமாதி சட்கசம்பத்தி." பிரமப்பிராப்தி

யும், அனர்த்த நிவிர்த்தியும் மோட்சத்தின் சொரூபமாகலின், இவற்றின் கண்ணுளதாகும் இச்சை, " முமுட்சுத்துவம்." சமமுதலிய ஆறையும் ஒரு சாதனமாக எண்ணியிருப்பதால் சாதனம் ஒன்பதல்லவென்பார், "நான்கே" எனத்தேற்றங் கொடுத்தார். " சத்தியி னுரைக்கவேண்டும் " எ-து பாடமாயின், வைராக்கியமும் சரீரவலியினளவு கூறவேண்டுமென்று பொருளுரைத்துக்கொள்க. சாதன நான்கனுள்ளே முன்னர் விவேகத்தைச் சொன்னது, முன்னே விவேகம் உளதாயிற்றன் பின்னர் வைராக்கியாதி உத்தர சாதனங்கள் உளவாம்; அஃதுளதாகாதேல், உத்தரசாதனங்க ளுளவாகாவாகலின் என்க. (8)

[சமாதி சட்கங்களின் நாமமும், அவைகளின் இலக்கணமுங் கூறல்.]

சமந்தமம் விடல்சகித்தல் சமாதானஞ் சிரத்தை யாறும்
சமமகக் கரண தண்டந் தமம்புறக் கரண தண்டம்
அமர்தரு கருமம் பற்று தறுத்தலே விடலென் றாகும்
மமர்செயுங் காம மாதி வரினடக் குதல் சகித்தல். (9)

இ-ள். சமம் தமம் விடல் சகித்தல் சமாதானம் சிரத்தை=சமம், தமம், உபரமம், திதீட்சை, சமாதானம், சிரத்தை (எனும் இவை), ஆறு ஆம்= ஆறன் நாமமாம், [இனிச் சமமுதலிய நான்கன் இலக்கணம்.] சமம்= சமமாவது, அகக்கரண தண்டம்=அந்தக்கரணத்தைத் தண்டித்து விடயங்களினின்றுந் தகைதலாம், தமம்=தமமாவது, புறக்கரண தண்டம்=வாகிய கரணங்களைத் தண்டித்துச் சத்தாதி விடயங்களினின்றுந் தகைதலாம், அமர்தரு கருமம் பற்று அறுத்தலே=(ஸ்திரீ, தனம், சாதி யபிமான முதலிய * சாமக்கிரிகளோடு) பொருந்திய சகல கருமங்களையும் பரிசியாமற் றியாகஞ் செய்தலே, விடல் என்று ஆகும்=உபரமமென்று சொல்வதாம், சகித்தல் =திதீட்சையாவது, மமர் செயும் காமம் ஆதிவரின்=மயக்கத்தைச்செய்யுங் காம முதலியவை (பூருவ வாசனையினால் அந்தக்கரணத்தில்) எழுமாயின், அடக்குதல்=(விவேகத்தினால் அவற்றை விரியவிடாமல்) அடங்கச் செய்வதாம். எ-று.

வெய்யில், சீதம், பசி, தாக முதலியவற்றைச் சுபாவமாகச் சகித்தலை, " திதீட்சை " என்றுங் கூறுவர். மம்மர் எனற்பாலது, தொடைநோக்கி, " மமர் " எனத் தொக்குநின்றது. (9)

[சமாதான, சிரத்தைகளின் இலக்கணம்.]

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்சிந் திக்கு மாறு
சரதமா வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரமசற் குருநூ லன்பு பற்றலே சிரத்தை, யாகும்
வரமிகு சமாதி யாறு வகையின்சொற் பொருளி தாமே. (10)

* சாமக்கிரி=சாதனம்.

இ-ள். சித்தம்=(விடயங்களினின்றுந் தகையப்பட்ட) சித்தமானது, சிரவணப் பொருளைத்தானே=(பெரியோர்களிடத்திற் கேட்ட ஞானசாஸ்திரார்த்தங்களையே, சிந்திக்கும் ஆறு=(அநுபவத்திற்கு வரச) சிந்திக்கும்படி, சரதமா வைக்கும் இத்தை=உள்ளபடி வைக்கும் இதனை, சமாதானம் என்பர் மேலோர்=சமாதானமென்று சொல்லுவர் பெரியோர். பரம சற்குரு நூல் அன்பு பற்றலே=உத்கிருஷ்டமான ஞானாசாரியராலும், ஞான சாஸ்திரங்களாலும் (உபதேசிக்கபட்ட வாக்கியங்களில் இவை சத்தியமாமென்று) விசுவாசம் வைத்தலே, சிரத்தை ஆகும், வரம் மிகு=சிரேஷ்ட மிக்க, சமாதி ஆறு வகையின்=சம முதலிய ஆறு வகைகளின், சொற்பொருள் இது ஆம்=மொழிப்பொருளிவையேயாம். எ-று.

சம தமாதி சாதனமுடையவனே அதிகாரியென்று சாஸ்திரங்களில் ஆங்காங்கு எடுதது வர்ணித்திருத்தலால், "வரமிகு சமாதி" எ-ம், விடயத்தினின்றுமீட்ட மனத்தை ஓர்போதும் விட்சேப மடையவிடாமல் என்னும் பொருடோன்ற, "சிரவணப் பொருளைத்தானே" என்றுங் கூறினர். (10)

[சொல்லிப் போந்த சாதனங்களின் பயனை விதிமுகத்தானும், எதிர்மறை முகத்தானும் உணர்த்துகின்றார்.]

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
ஆதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ள நுழையாது நுழையு மாகில்
பூதசன் மங்கள் கோடி புனிதனும் புருட னாமே (11)

இ. ள். சாதனம் இன்றி=(எழுத்தாணி, மண்வெட்டி முதலிய) சாதனங்களில்லாமல், ஒன்றை=(எழுதுதல், மண்வெட்டுதன் முதலிய காரியங்களுள்) ஒரு காரியத்தை, சாதிப்பார்=செய்து முடிக்க வல்லோர், உலகில் இல்லை=உலகின்கண் (ஒருவரும்) இல்லை; ஆதலால் இந்த நான்கும் அடைந்தவர்க்கு=ஆகையால் விவேகம், விராகம், சமாதி சட்கசம்பத்தி, முமுட்சுத்துவம் என்னும் இந்நான்கு சாதனங்களையும் (அவதி பரிபந்தம்) பெற்றோர்க்கே, அறிவு உண்டாகும்=பிரமான்ம வைக்கியஞானம் (* பிரதிபந்தமின்றி) உண்டாகும், நூதனவிவேகி உள்ளம் நுழையாது=புதிய விவேகியின் உள்ளமானது (ஞான வழியிற்) செல்லாது, நுழையும் ஆகில்=செல்லுமாயின், (அவன்) பூதசன்மங்கள் கோடி=கீழ்ப்போன அநந்த ஜநநங்களில், புனிதன் ஆம் புருடன் ஆம்=(நிஷ்காம கர்மங்களை அநுட்டித்து வந்தநால்) அந்தக்காண சுத்தியை யுடையவனான புருடனும். எ-று.

நான்கும் என்னும் முற்றும்மை, அவைகளிலொன்று குறையினும் ஞானம் பலியாதென்பதை விளக்கி நின்றது. சற்சங்க சகவாசத்தால் வெகுகாலந் தொடுத்துச் சாதனங்களை யநுட்டித்து வாராமையால், தீவிர வைராக்கியாதி சாதனங்களின்றிச் சன்மாந்தர புண்ணியத்தா லுண்டான மந்தனிஞ்

* பிரதிபந்தம்=சமுசய விபரீதங்கள்.

ஞாசையினூற் குருவை யடைந்து ஞானம் கேட்கும் புதிய விவேகிக்கு அவர் தயையினு லுபதேசிப்பினும், அவன் உள்ளமானது அவ்வுபதேச வழியிற் சென்று பிரமான்ம வைக்கிய ஞானத்தைப் பிரதிபந்தமின்றி அடையமாட் டாது என்பார், "நூதன விவேகி யுள்ள நுழையாது" என்றூர். "இந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண்டாகும் நூதன விவேகியுள்ள நுழை யாது" என்பதற்கு, உ-ம்- அந்துவிதவுண்மை.

"மேலாஞ் சதுட்ட சாதனங்கள் மேவி நிறைந்த பேர்க்குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு மைவையில் லாதவர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கி யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாத னங்கள்வர மேவவேண்டுஞ் சாது சங்கம்"—எ-ம்,

வாசிட்டம்—

"தியக்குறபோ கந்தாசை நீர்ந்துபுந்தி தெளிந்தவுணேப் போல் வார்க்கே திகழுத்தே தான்றாம்"—எ-ம் வருகும்.

மற்றும் வருவன வற்றுற் காண்க.

[தீவிரமான வைராக்கியாதி சாதனநந்தரம் அதிகாரியின் செய்கையைக் கூறுகின்றூர்.]

இவனதி காரி யானே னிந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும்
தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞான தீர்த்தம் படிந்திடப் பதறி னனே. (12)

இ-ள். இவன் அதிகாரி ஆனேன்=இச்சாதன சதுட்டய சம்பன் னனே (இந்நூல் கேட்டற்குரிய) அதிகாரியாம், இந்திரியங்களாலும்=அத் தியான் மிகத்தினுனும், புவன தெய்வங்களாலும்=புவனத்திற்குரிய தெய் வங்களினுலும், பூத பௌதிகங்களாலும்=பூத காரியங்களானும், தவனம் மூன்று அடைந்து=(உளவாகும்) தாபத்திரய மென்னும் அக்கினியை யடை ந்து, வெய்யில் சகித்திடாப் புழுப்போல்=வெய்யலின் (ரூபத்தைச்) சகிக்க மாட்டாத புழுவைப்போல, வெம்பி=வாடி, பவம் அறும்=சம்சார (தாபம்) ஒழிதற்கேதுவாகும், ஞானதீர்த்தம் படிந்திட=சுவான்ம தீர்த்தத்தின் கண் ணே மூழ்க, பதறினன்=விரைந்தனன். எ-று.

பிராமணுதி வருணம், பிரமசரியாதி ஆச்சிரமங்களுள்ளே இவ்வருணத் தன், இவ்வாச்சிரமத்தன் இந்நூற்கு அதிகாரியென்னும் நியமமின்று; எவ்வரு ணத்தனுயினும், எவ்வாசிரமியாயினும், விவேகாதி சாதன சம்பன்னனே அதி காரியாமென்பது தோன்ற, "இவனதிகாரியானேன்" என்றூர். இது, இந் நூலின் அந்தத்தில் விரித்து உரைக்கப்படும்.

(33) வியாதி, பசி முதலானவைகளால் உண்டாகும் துக்கம், அத்தி யான்மிக துக்கம். இயக்க, இராக்கத, பிரேத, கிரகாதிகளானும், சீத, வாத,

ஆதபங்களானும் உண்டாகாநிற்குந்துக்கம், அதிதெய்வ துக்கம். சோர, வியாக்கிர, சர்ப்பாதிகளால் உண்டாகுந் துக்கம், அதிபூத துக்கம். இவ்வதிகாரி மந்தன், மத்திமன், உத்தமன் என்னும் இம்மூவர்க்கும் மேலான உத்தமோத்தமனாதலால், "வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பி" என்றார். அம்மூவரோவெனின்? வெய்யிலைத் தாரதம்மியமாகச் சகிக்கும் எருமை, பறவைக்குஞ்சு, நீர்ப்பாம்புகள் போலத் தாரதம்மியமாகச் சகிப்பரென்க.

(34) விவேகாதி நான்கு சாதனங்களையும் ஏதுமாத்திரமாக வுடையவன் மந்தன், சொரூபபரியந்தமுடையவன் மத்திமன், காரியபரியந்த முடையவன் உத்தமன், அவதிபரியந்த முடையவன் உத்தமோத்தமன் என்றறிக; இதனை, அத்வைதபோத தீபிகையிற்காண்க. ஆன்ம அஞ்ஞானத்தினால் உண்டாகிய துக்கம் ஆன்மஞானத்தினாலேயே நிவிர்த்தியாவதால், "பவமறு ஞான தீர்த்தம்" எ-ம், அத்தியந்த துக்க நிவிர்த்தியும் பிரதிபந்த ரகிதமான ஆரூட ஞானத்தினாற்றானே உண்டாகத் தக்கதாகலின், "படிந்திட" என்றுங் கூறினார்.

"பதறினன்" எ-து, சம்சார துக்கம் நமக்கு எதனால் வந்தது? எதனால் நிவிர்த்தியாம்? இதன் நிவிர்த்தி யுபாயத்தை உபதேசிக்க வல்ல பெரியோர் யாவர்? அவர் எங்குளர்? அவரை எவ்வாறடைவேம்? என்றடிக்கடி விசாரிப்பதை யென்க.

"பதறினன்" எ-கு, உ-ம்-அஞ்ஞுவதைப்பரணி,

"தெருளுறு றுங்கலை பலவு ணர்ந்தொரு சிறித லம்பிறவா,வருளுறு றுங்குரு பரனி ருந்திட மறிய வென்றெழுமே" என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (12)

[தீவிர சிஞ்ஞாசையி னநந்தரம் அதிகாரியின்
வியவகாரத்தைச் சொல்லுகிறர்.]

(35) ஆனபின் மனைவி மக்க ளர்த்தவே டணைகண் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போல்
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்முக வணங்கி னானே. (13)

இ-ள். ஆனபின்=இவ்வாறான தீவிர சிஞ்ஞாசையினநந்தரம், மனைவி மக்கள் அர்த்த எடணைகள் மூன்றில்=தாரம், புத்திரர், தனமென்னும் எடணாத்திரயங்களி னின்றும், கானவர் வலையில் பட்டு=வேடர்களுடைய வலையி லகப்பட்டு, கைதப்பி ஓடுமான்போல்=(அவ்வலையைக் கிழித்துக் கொண்டு அவர்கள்) கையிலகப்படாமல் ஓடாநிற்கும் மானைப்போல, போனவன்=(துறந்து சற்குருவைத்தேடிப்)போன அதிகாரியானவன், வெறுங்கையோடே போகாதவண்ணம்=வெறுங்கையோடே போகாதபடி, சென்று=(கரதலத்திற் பத்திர, புஷ்ப, பலாதிகளைக்கொண்டு) சென்று, ஞானசற்

குருவைக்கண்டு=ஞானசாரியரைத் தரிசித்து, நன்றாக வணங்கினான்=(அவர்க்குச்) சந்தோஷமுண்டாகப் (பத்திர, புஷ்பாதிகளால் திருவடியில் அர்ச்சித்துப் பன்முறை வலம்வந்து) பணிந்தனன். எ - று.

எடணை=விருப்பம்; அது விரும்பப்படு பொருள்களுக்கு ஆகுபெயராயிற்று. "மான்போற் போனவன்" என்று மானை உவமானமாகச் சொன்னது, இடமனைத் துறந்தோனுக்குக் குடும்பத்தின்கண் மீட்டு எண்ணம் எழாமையின் என்க. "ஞானசற்குரு" எ - து, ஆசாரியர் இலக்கணம். "ஞானசற்குருவைக் கண்டு" என்றதால் சரியை, கிரியை, யோகங்களை உபதேசிப்பவரும், உதர நிமித்தம் பொருள் விழைவான் ஞானியென்று பெயரிட்டுக்கொண்டிருப்பவரும் ஆகிய அநாசாரியரை விட்டென்பது அருத்தாபத்தியாற் பெற்றும், "வணங்கினான்" எ - து, குரு சேவை; சேவையினாலேதான் உபதேசரூபமான திருஷ்டபலத்திற் கேதுவாகிய சந்தோஷங் குருவுக்குளதாகுமென்று அறிஞர் கூறுவதால், "நன்றாக" என்பதற்குச் சந்தோஷமுண்டாகவென்று பொருளுரைக்கப்பட்டது. இதற்குத் திரிகரண சுத்தியாகவென்று பொருள் கூறுவாரும் உளர். குரு சேவை ஆத்தம், அங்கம், தானம், சற்பாவம் என நான்காம்; இவைகளை "வேதாந்த சூடாமணியிற்" காண்க. விரிவாய் அறியவேண்டில் விசாரசாகர கிரந்தத்தின் மூன்றாந் தரங்கத்திற் கண்டாவது, கேட்டாவது அறிக. (13)

[சேவையினாற் குருவைச் சந்தோஷிப்பித்துத் தனது குறையிரத்தல்.]

வணங்கிநின் றழுது சொல்வான் மாயவாழ் வெனுஞ்சோ கத்தால்
உணங்கினே னைய னேயென் னுள்ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்ன மாக்கி
இணங்கிய குருவே யென்னை யிரட்சித்தல் வேண்டு மென்றான் (14)

இ - ள். வணங்கி நின்று அழுது சொல்வான்=பணிந்து (எழுந்து இரு கரங் கூப்பி) நின்று இரங்கி விண்ணப்பஞ்செய்வான், மாயவாழ்வு எனும் சோகத்தால்=பொய்யான சம்சார வாழ்வென்னுந் துக்கத்தினால், உணங்கினேன்=(யான் அநேக காலமாக) வாடினேன், என் உள்ளம் குளிரும் வண்ணம்=என்னுடைய அந்தக்கரணம் சீதளமாகும்படி, பிணங்கிய=(ஒன்றினுள் ஒன்றாக) நெருங்கிய, கோசபாசப் பின்னலை=பஞ்சகோசங்களில் (யான், எனது என எழும்) அபிமான ரூபமான பந்தத்தை, சின்னம் ஆக்கி=நாசமாக்கி, இணங்கிய=(துக்கிகளான என்போலிகளை இரட்சிக்கக் கருணையே திருவுருவாகப்) பொருந்திய, ஐயனே குருவே=(எனது) பிதாவாகிய ஆசாரியரே, என்னை இரட்சித்தல் வேண்டும் என்றான்=நாயேனைக் காத்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தான். எ - று.

[சின்னமாக்கி இரட்சித்தல் வேண்டும் எனக்கூட்டுக.]

உள்ளம், சம்சார வபிமானத்தினால் அடைந்துள்ள துக்கம் அதனோடு சம்பந்தத்தாற் றனக்கு வந்ததாகலான், அது சீதளமாகிற் றானும் சீதளமாகலாமென்னுங் கருத்தினால், "உள்ளமே குளிரும் வண்ணம்" என்றான். ()

[குறையிரந்த சீடனுக்கு ஆசாரியர் செய்த அருளினை இனிக் கூறுகின்றார்.]

(36) அன்னதன் சிசுவை யைய னாமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சந் நிதியி ருத்தி
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பாயாகிற் றொடர்பவந் தொலையுமென்றார் ()

இ-ள். அன்ன=அப்படிக் குறைகூறி யிரந்த, தன்சிசுவை=தனது சீடனை, ஐயன்=குருவானவர், ஆமை (போல)=ஆமையானது (கரைக் கண்ணின்றமுட்டையைத் தனதகத்திற்பாவிப்பது) போல, தன் அகம் கருதி=(அஞ்ஞானம்ஒழிந்து அவன் தனது நிசரூபமாகும்படி) தமது திருவுள்ளத்திற் பாவித்து, மீன் (போல)=மீனனது (தனது சினையைப் பார்ப்பது) போல, நோக்கி=(அவனது சஞ்சிதவினைகள் கெடும்படி அநுபூதியோடுகூடி விளங்காநிற்குந் தமது கிருபாவீட்சணத்தால்) ரட்சித்து, பறவைபோல=பறவையானது (தன் சிறகினால் முட்டையைத் தடவுவது) போல, தடவி=(முடிவான ஆன்மவிசாரம் இவனுக்குதயமாகுகவென) அஸ்த மஸ்தக சையோகஞ் செய்து, சந்நிதி இருத்தி=எதிரே இருக்கவைத்து, உன்னது பிறவி மாற்றும்=உனது சம்சார துக்கத்தை ஒழிவிக்கும், உபாயம் ஒன்று உண்டு=ஒருபாயம் உளது, சொல்வேன்=(அதனை உனக்கு) உபதேசிப்பேன், சொன்னதுகேட்பாய் ஆகில்=(யான்) உபதேசிப்பதைத (தவறாமல்) அநுஷ்டிப்பாயாகில், தொடர்பவம்=(அநாதிகாலமாய் உன்னைத) தொடர்ந்து வந்துள்ள சம்சாரமானது, தொலையும் என்றான்=நிவிர்த்தியாய் விடுமென்று அருளிச் செய்தார். எ-று.

அன்னை தன் சிசுவைஎனவும் பாடமுளது. "சொன்னது கேட்பாயாகில்" எ-து, அவனது இறைகுணஞ் சோதிக்கற்பொருட்டெனக. (15)

[சீடன் ஆசாரியர் செய்த ஆதரவினாலும், உபாய முபதேசிப்பேனென்றமையாலும் தனது காரியசித்தியாவதிற் சந்தேகமின்றென்று கருதி ஆநந்தமடைந்து விண்ணப்பஞ் செய்யத் தொடங்கல்.]

தொடர்பவந் தொலையு மென்று சொன்னதைக் கேட்ட போதே
தடமடு மூழ்கி னான்போற் சரீரமுங் குளிர்ந்துள் ளாறி
அடருமன் பொழுகு மாபோ லாநந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாத மீண்டும் வணங்கிநின் றீது சொல்வான். (16)

இ-ள். தொடர்பவம் தொலையும் என்று சொன்னதை=(அநாதிகாலமாய்த்) தொடர்ந்துவந்த ஜநநமானது நிவிர்த்தியாய் விடுமென்று (ஆசாரியர்) அருளியதை, கேட்டபோதே=கேட்ட அந்தக்ஷணமே, தடமடு மூழ்கினான் போல்=(வெய்யிலாற் றபிக்கப்பட்டு வாடி) விசாலமான மடுவிலே மூழ்கினவனைப்போல, உள் ஆறி=மனவெப்பந் தணிந்து, சரீரமும் குளிர்ந்து=தேக

மும் சீதளமாய், அடரும் அன்பு=(உள்ளே) நெருங்கிய அன்பானது, ஒழுகுமாபோல் = (ததும்பி வெளியே) ஒழுகுமாறுபோல, ஆநந்த பாஷ்பம் காட்டி=ஆநந்தக் கண்ணீர்விட்டு, மடல் மலர்ப்பாதம்=இதழ்களை யுடைய தாமரைப் பூப்போலுந் திருவடியை, மீண்டும் வணங்கி நின்று=மீட்டும் பணிந்தெழுந்து (இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி) நின்று, ஈது சொல்வான்= இதனை விண்ணப்பஞ் செய்வான். எ - று. (16)

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னாலுஞ் சுவாமி
நின்னது கருணை யாலே நீரெனை யாள லாமே
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி யீடேற்றல் வேண்டு மென்றான். (17)

இ - ள். சொன்னது கேட்கமாட்டா=(தேவரீர்) உபதேசிப்பதைக் கேட்டுத் தவறுதல் அநுட்டிக்கமாட்டாத, தொண்டன் ஆனாலும்=அடிமையாயினும், சுவாமி நின்னது கருணையாலே=குருவே தேவரீரது கிருபையினாலே, நீர் எனை=தேவரீர் அடியேனை, ஆளல் ஆம்=ஆளுதல் முறைமையாம். உன்னது பிறவி மாற்றும்=உனது ஜநநத்தையொழிக்கும், உபாயம் ஒன்று உண்டு என்றீரே=உபாயமானது ஒன்றுளதென் றருளினீரே; இன்னது என்று=இப்படிப்பட்டதென்று, அதை=அவ்வுபாயத்தை, நீர் காட்டி=தேவரீர் போதித்து, ஈடேற்றல் வேண்டும் என்றான்=(ஜநந சங்கடத்தினின்றும்) கடைத்தேற்றல் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தான். எ - று.

உலகின்கண் ணரசராயினோர், தமது ஆணைவழிச் செல்லாதோரைச் சதுர்வித வுபாயங்களான் வசமாக்கித் தமது ஆணைவழியே செலுத்தியாள்வது போல, நீர் சுவாமியாகலானும், அடியேன் உமது ஆளாகலானும் எவ்வாற்றானும் என்னை யாள்வது உமக்குக் கடமையே யாகலான யான்முகமன் சொல்ல வேண்டுவது என்னை! என்பான்,

"சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னாலுஞ் சுவாமி,
நின்னது கருணை யாலே நீரெனை யாள லாமே"—என்றான். (17)

[பரீட்சையினால் சீடனது இயற்கைகுணஞ் சோதித்த ஆசாரியர் பின் உபதேசிக்கத் தொடங்கல்.]

(37) அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னாதுங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி
உடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே. (18)

இ - ள். அடங்கிய விருத்தியான் என்று அறிந்தபின்=(இவன் அகம் பாவ) விருத்தி யொடுங்கினவனென்று சோதித் தறிந்தபின்னர், செறிந்த மண்ணின் குடம்பை உள்=நெருங்கிய மண்ணினாலாகிய கூட்டினுள்ளே

(சோதித் தெடுத்து வந்து வைத்த), புழுமுன்=புழுவுக்கு முன்னே, ஊதும் குளவியின் கொள்கைபோல=(அக்கீடந் தன்னுருவ மாகும்படி) தொனி செய்யும் பிரமரத்தின் றன்மைபோல, தொடங்கிய குருவும்=(உபதேசிக்க) ஆரம்பித்த குருவும், ஆன்மசொரூபமே மருவவேண்டி=(அவன் ஸாபாசவந் தக்கரண அபகிதமான) தனது விசேடரூபத்தைத் (தாதான்மியமாகப்) பொருந்த வேண்டி, உடம்பின் உள்=அவனது தேகத்தினுள்ளே, சீவனைப் பார்த்து=(ஸாபாச வந்தக்கரண விசிட்டனான) சீவனைப் பார்த்து, உபதேசம் ஓதுவார்=உபதேசஞ் செய்வாராயினர். எ - று.

குளவியானது புழுவைக் கொட்டிப் பார்த்து மிகத் துடிப்பதையும், துடியாமற் கிடப்பதையும் ஒழித்து மத்திய துடிப்புடையதை யெடுப்பதுபோல, குருவும், "இயற்கைகுணஞ் சோதித்து" என்னும் விதிப்படி சோதித்தே உபதேசிக்கப் புகுந்தமையின், "குளவியின் கொள்கைபோல" எ-ம், பக்தமுடையவன் சீவனாதலால், "சீவனைப் பார்த்து" என்றுங் கூறினர். (18)

[சம்சார நிவிர்த்தியுபாயம் இனி உபதேசிக்கத் தொடங்கி அது வந்ததற்குக் காரணமும், அதற்கவதியும் உபதேசிக்கின்றார்.]

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே. (19)

இ - ள். வாராய் என் மகனே, தன்னை மறந்தவன்=(பிரத்திய கபின்ன பரமான்மாவான) தன்னை (நான் யாரென்று விசாரித்து) அறியாதவன், பிறந்து இறந்து=(சுர நர திரியக்காதி யோனிகளிற்) சநித்து, மரித்து, தீராத சுழல்காற்று உற்ற செத்தைபோல்=நீங்காத சுழற்காற்றில கப்பட்ட திரணம் போல, சுற்றிச் சுற்றி=இகலோகத்தினின்று பரலோகத்திற்குப் போவதும், பரலோகத்தினின்றும் மீட்டிகலோகத்திற் றலைகீழாக வீழ்வதுமாய், பேராத காலநேமிப் பிரமையில் திரிவன்=ஒழியாத காலசக்கரமாகிய சுழற்சியிற் சுழலாநிற்பன், போதம் ஆராயும் தன்னை=ஞான திருஷ்டியினால் (யானாரென்று) விசாரித் தறியத்தக்க பிரத்தியகான்மாவாகிய தன்னை, தான் என்று=பிரமமென்று, அறியும் அவ்வளவும்=சாட்சாத்கரிக்கும் பரியந்தமும். எ - று.

தனது சந்நிதியிற் கேட்டுக்கொண்டிருப்பவனை, "வாராயென் மகனே" எ-து, யான் உபதேசிக்கு முபாயத்தில் சித்தத்தையும், சிரவணத்தையும் சாவதானமாக்கிக் கொண்டு கேளென்றவனை அபிமுகமாக்கியதென்க. நாள், மாதம், ஆண்டு, உகங்களாகக் காலம் மீண்டு மீண்டுற்பவித்தலால், "நேமி" எ-ம், படைப்பதும், படைத்தவையனைத்தையுந் துடைப்பதுங் காலமாகலால், "பிறந்திறந்துகால நேமிப்பிரமையிற் றிரிவன்" என்றுங் கூறினர். இங்ஙனங் கூறியவாற்றான், ஆன்மசாட்சாத் காரமுடையவன் காலாதீதனாவனென்பது பெற்றாம்.

[ஈண்டிது விவேகம்.]

(38) ஆபாசனுனவன் தன்னையும், தனக்காதாரமும், தன்னிஜரூபமுமாகிய கூடஸ்தனையும் தனது சொரூபமாகக் கருதியுளன். யாண்டும் ஆபாசனென்னும் சத்தத்திற்கு, அந்தக்கரண சகிதமாகவே ஆபாசனைக் கொள்ளல் வேண்டுமெனக் கூறியிருத்தலின், தான் எ-ம், சீவன் எ-ம், ஆன்மா எ-ம், சாஸ்திரங்களில் எங்கேயாயினும் அவைகட்கு ஆபாசம், ஆசிரயம், அதிஷ்டானம் ஆகிய மூன்றனையும் பொருளாகக் கொள்ளல்வேண்டும்; அங்ஙனம் கொள்ளாக்கால் பாகத்தியாகலட்சணை வியர்த்தமாம்; இதனை ஊகித்துணர்க.

[இனி உபாயம் உபதேசித்தல்.]

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே. (20)

இ-ள். தன்னையும்=(ஆபாசனுன)தன்னையும், தனக்கு=(ஆபாசனுன) தனக்கு, ஆதாரத் தலைவனையும்=ஆதாரமாகிய கூடஸ்தனையும்=கண்டானேல்=ஒருவன் கண்டானுயின், பின்னை=கண்டபின், அத்தலைவன்தானுய்=அக்கூடஸ்தன் தானுய், பிரமம் ஆய்=கூடஸ்தனுன நானே பிரமமென்னும் அநுபூதியுடையவனுய், பிறப்புத்தீர்வன்=ஜநநமரணத்தினின்றும் விடுபடுவன், உன்னை நீ அறிந்தாய் ஆகில்=நீ இப்படி உனது நிஜரூபமான கூடஸ்தனை (அகம் பிரமமென்று) அறிந்தாயாயின், உனக்கு ஒருகேடும் இல்லை=உனக்கு (சம்சார வனர்த்தஙகளுள்ளே) ஓரனர்த்தமும் உளதாத லில்லை; (நீ ஆநந்தக்கடல் வடிவே யாவாய்), என்னை நீ கேட்கையாலே=என்னை நீ (சரணடைந்து) கேட்டமையின், ஈது உபதேசித்தேன்=(அதி ரகசியமான) இதனை உனக்குபதேசித்தேன். எ-று.

"என்னை நீ கேட்கையாலே யீதுப தேசித்தேன்" எ-து, இது ஏனைய உபதேசம் போலச் சாதாரணமாக வுபதேசிக்கத் தக்கதன் றென்னும் அதனருமை தோன்றக் கூறினதாம். பகவற்கீதையில்,

"நல்ல காதல்செய் நண்பனு மாயெனை, யல்ல தியாவு மறியலை யாதலாற், சொல்லன் மேயினன்"

என்று ஸ்ரீ பகவானாலு மருளிச் செய்யப்பட் டிருக்கின்றது. "தன்னையும்" எ-கு, கூடஸ்தனையும் என்று பொருள் கூறுவாருமுளர்; அங்ஙனங் கூறின், கூடஸ்தனுக்கு ஆதாரம் பிரமமென்று கொள்ளல் வேண்டும்; கொள்ளவே, கூடஸ்தன் ஆதேயமாம். இங்ஙனங்கூடஸ்த பிரமங்களை ஆதேயவாதாரமென்றுதல், காரிய காரணமென்றுதல், ஆரோப வதிஷ்டானமென்றுதல் கூறுவது சம்பிரதாயப் பொருளன்றாம்; இதனை, இப்படலத்தின் கஅ-ம், செய்யுளில், "என்னிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டும்" என்னும் சீடன் கடாவினானும் உய்த்துணர்க. (20)

[அருளிய உபதேசத்தினற் சீடன் அமையாது மீண்டும் வினதல்.]

என்னைத்தான் சடனு வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ
பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் துழலு வானேன்
நின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளு வீரே (21)

இ-ள். ஐயா=எனது குருவே, என்னை=அடியேனை, சடனு=மூடனுக, உள்ளத்து=திருவுளத்தின்கண், எண்ணியோ=கருதியோ, சொன்னீர்=("உன்னை நீ யறிந்தாயாகி லுனக்கோரு கேடுமில்லை") என்று அருளினீர், தன்னைத்தான் அறியாமாந்தர்=தம்மைத்தாம் அறியாத மநுடர், தரணியில்=பூமண்டலத்தில், ஒருவர் உணடோ=யாரேனும் ஒருவர் உளரோ! (இலர்.) பின்னை அவர்கள் எல்லாம், பிறந்து இறந்து=ஜநித்து, மரித்து, உழலுவான் ஏன்=சுழலா நிற்பது என்னை?, நின்னை=தேவரீரையே, நம்பினேற்கு=(மாதா, பிதா, குரு, தெய்வமாக) விசுவசித்துள்ளவெனக்கு, நிண்ணயம் அருளுவீர்=அந்நிசசயத்தை உள்ளவா றுபதேசிப்பீராக. எ-று.

தான், எ-து, மூன்றிடத்தும் அசைநிலை. "தன்னைத்தா னறியா மாந்தர்" எ-து, ஒருமையிற் பன்மை மயஙகிய வழுவமைதி.

சாதன சம்பன்னனுய்க் குடும்பக் குற்றஙகணடு எடணுத் திரயத்தினின்று நீங்கி எஙகெஙகுந் தேடிவந்து மகேசனுக் கொப்பான உம்மைச சரணடைந்த சுமதியான வென்னை இங்ஙனஞ் சொல்லன முறையையா வென்பான்,

"என்னைத்தான் சடனு வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா"—எ-ம்,

"கரசரணுதி மட்டா நானிவ னென்று காணுங், திரமது தானே மூன்று மகங்கரஞ் செகத்தோர் க்கெல்லா, முரியதாம்"

என்னும் அபிப்பிராயத்தினுல்,

"தன்னைத்தா னறியா மாநதர் தரணியி லொருவ ருண்டோ"

என்றுங் கூறினுன். (21)

[தேகான்ம விவேகியே தன்னைத்தான் அறிந்தவனு மெனல்.]

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வான் யாவன்
அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னுகுமென்ரு
சொன்னபின் றேசி யாரித் தாலமால் லாமலென்ருன்
பின்னது கேட்ட வையர் பிழையு நகையுங் கொண்டார். (22)

இ-ள். இன்னது தேகம்=(கடம்போல, அறியப்படுவதான) இது தேகம், இவன் தேகி=(அறிபவனான) இவன் இதற்கு வேறானதேகி, என உணர்வான்யாவன்=என்றிவ்வாறு (சிற்சடங்களைப்) பிரித்தறிபவன் யாவனோ!, அன்னவன்=அப்படிப்பட்ட விவேகியே, தன்னைத்தான் என்று அறிந்தவன் ஆகும் என்றார்=தன்னைப் பிரம மென்றறிந் தவனாமென் றாசாரியரருளினார், சொன்னபின்=(இவ்வாறாசாரியர் தன்னையறியும் நிர்ணயத்தை) அருளியபின்னர், இத்தூலம் அல்லாமல்=இந்தத்தூல தேகமே தானல்லாமல், * தேகியார்=வேறேதேகியாவன்? (காணேன், இருந்தாற் காணப்படானோ! படாமையின், அவன் இல்லை,) என்றான்=என்று (சீடன்) கூறினான், பின்=பின்னர், அது கேட்ட ஐயர்=அதனைக்கேட்ட ஆசாரியர், பீழையும் நகையும் கொண்டார்=துன்பமும், மகிழ்வுங்கொண்டனர். எ-று.

"தேகியாரித் தூலமல்லாமல்" என்னும், இவ்வியவகாரத்திற் கேதுவே ஆவரணமா மென்க. துர்க்கட கடனா சமர்த்தையான அவித்தையினால் நமது உபதேசத்தை இவன் அறியாமற் போயினான். வெறும்பொய்யான இவ்வவித்தையினா லன்றோ! சகல பிராணிகளும் ஜநந மரண ரூபமான சம்சார சமுத்திரத்தின் மூழ்கி வருந்தா நிற்கின்றன வெனத் தமது திருவுள்ளத்தின் கண்ணே எழும் இரக்கத்தை, 'பீழை' எ-ம். இவ் வவித்தியா நாசகமான அநேகசுருதி, யுத்தி, அநுபவம் நம்பால் இருத்தலின், ஓர் முகூர்த்த நேரத்தில் இதனை நிவிர்த்தித்து இவனை ஆநந்தக் கடலின்கட் டிளைக்கப்பண்ணுவாம், இது நமக்கு ஓர் அருமையா! எனத் தமது திருவுள்ளத்தி லெண்ணி மந்தகாசங் கொண்டருளியதை, "நகை" என்றுங் கூறினார். இதற்கு, வேறுபொருள் கூறுவாரு முளர். (22)

[சந்தேக விபரீதங்களி னிவிர்த்தி சுருதி, யுத்தி, அநுபவம்
என்னு மூன்றனுள் அநுபவத்தின் கண்ணதே யாகலின்
தேகத்திற்குத் தான் வேறென்ப தவனுக்குத் தானே
அநுபவமாகும் படிக்கு அவனைத்தானே வினாதல்.]

தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்றாய்
மோகமாங் கனவில் வந்து முளைத்தவ னெவனீ சொல்வாய்
சோகமாங் கனவு தோன்றாச் சுழுத்திகண் டவனார் சொல்வாய்
ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்வாய். (23)

இ-ள். தேகம் அல்லாமல்=(நான் மநுடனென்னும் அநுபவத்தால்) தேகமே தானென்பதற்குப் பொருளல்லாமல், வேறேதேகி ஆர் காணேன் என்றாய்=அதற்கு அந்நியமாகத் தேகியென்பவன் யாவன் (இருந்தாற்) காணப்படானோ? (படாமையின், அவன் இல்லை) என்று சொன்னாய்; (அங்ஙனமாமேல்), மோகம் ஆம் கனவில் வந்து=(ஆன்மாவென்றுனக் கபிமதமானதேகம்.

---

* "தேகியாரித் தூலமல்லாமல்" என்புழி, இருந்தாற் காணப்படானோ? படாமையின் அவன் இல்லை என்னுந் தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப் பொருளை வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சம்.

சேட்டையற்றுக் கிடக்கவும்) நித்திரா மோகத்தா லுளதாகுஞ் சொப்பனத்தின் கண்வந்து, மூளைத்தவன் எவன் நீ சொல்வாய்=தோற்றி (ச்சத்தாதி விடயங்களை) யறிபவன் யாவன்? நீசொல்லு, சோகம் ஆம் கனவு தோன்றா=(இஃதன்றிச் சத்துரு, சர்ப்பாதிகளால்) துன்ப முளதாகும் அச்சொப்பனமுந் தோன்றாத,சுழுத்தி கண்டவன் ஆர்சொல்வாய் ஆக=சுழுத்தியின்கண்ணே (அஞ்ஞானத்தை) யறிந்தவன் யாவன்? சொல்லுவாய். நனவில் எண்ணும் அறிவுதான் ஏது நீ சொல்வாய்=(தாருவினாற் செய்தயானையினுட்புகுந்து அதனை யியக்காநிற்கு மவன்போலச் சொப்பன,சுழுத்திகளிற் சேட்டை யற்றுக்கிடந்த இத்தேகத்தைத் தரித்து நின்று அக்கினி, சந்திராதித்தியப் பிரகாச மொழிந்தபோதும்) சாக்கிரத்தில் (சத்தாதிவிடயங்களை) அறியாநிற்கும் அறிவுதான்யாது? நீ சொல்லுதி. எ - று.

[தடஸ்த லட்சணங் கொண்டிங்ஙனம் வினவினரென்க.]

(39) சொப்பனாவத்தை, சுழுத்தியவத்தைகளின் வேறாய் இந்திரியங்களாற் றோன்றும் ஞானத்திற் காதாரகாலம் யாது? அது சாக்கிராவத்தை. இந்திரியங்களாற் றோன்றுவதல்லாத விடயகோசரமான அந்தக்கரணத்தின் அபரோட்ச விருத்தியின் அவத்தை சொப்பனாவத்தை. சொப்பனத்தில் ஞேய, ஞானங்கள் அந்தக்கரணத்தின் பரிணாமமாம். சுக கோசரமும், அவித்தியாகோசரமுமான சாட்சா தஞ்ஞானத்தின் பரிணாம ரூபவிருத்திபி னவத்தையைச் சுழுத்தியென்பர்; சுழுத்தியில் அவித்தியா விருத்தியின் கண் ஆரூடமான சாட்சி அவித்தையையும், சொரூப சுகத்தையும் பிரகாசிப்பிக்கின்றது. சுழுத்தியவத்தையிற் சுகாகார அவித்தியாகார பரிணாமமாக எவ்வஞ்ஞானக் கூறுண்டோ! அவ்வஞ்ஞானக்கூற்றில் அப்புருடனுடைய அந்தக்கரணம் விலீனமாகி நிற்கும். சாக்கிரகாலத்தில் அவ்வஞ்ஞானக் கூற்றின் பரிணாமமாக அவ்வந்தக்கரண முண்டாகின்றதாகலின், அஞ்ஞானவிருத்தியினால் அநுபவித்த சுகத்தினது ஸ்மிருதி சாக்கிரத்தி லுண்டாகின்றது; உபாதானத்திற்கும், காரியத்திற்கும் பேதமின்மையினால் அநுபவ, ஸ்மரணத்திற்கு விரோத மின்றென்றறிக. [கூறு எனினும் அம்சமெனினு மொக்கும்.] சாக்கிர, சொப்பனங்களிரண்டிலும் அந்தக்கரண விருத்தியுண்டு; சுழுத்தியிலோ! அஞ்ஞான விருத்தியுண்டு; ஆகலின், அவத்தை மூன்றும் விருத்தியின் அதீனமாம்: சுகாதிஞானகாலத்தையும், உதாசீனகாலத்தையும் சாக்கிரத்தில் அந்தர்ப்பாவமாகக் கூறுவர்; மரணம், மூர்ச்சை இவைகளைச் சிலர் சாக்கிரத்திலும், சிலர் சுழுத்தியிலும் அடக்கிக்கூறுவர். "அவத்தை" எ - து காலத்துக்குப்பெயர். (23)

[சுவாமிகளநுபநேசித்தவண்ணம், தேகத்திற்குத் தேகி
அந்நிய மென்பது இவ்வநுபவத்தினால்
எனக்கு ஒக்கு மெனல்.]

நனவுகண் டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கிக்
கனவுகண் டதுஞ்சு ழுத்தி கண்டதும் வேறொன் றேபோல்

தினமநு பவிப்ப தொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னே மறைக்கும தருளு வீரே. (24)

இ-ள். நனவு கண்டதும்=சாக்கிரத்தில் (திரமானசத்தாதிவிடயங்களை) அறிந்ததும், நான்கண்ட=யானறிந்த, நனவுஉள நினைவு நீங்கி=சாக்கிரத்திலுள்ள நினைவுகளொழிந்து, கனவு கண்டதும்=சொப்பனத்தின் கண்ணே (அஸ்திரமான சத்தாதிவிடயங்களை) அறிந்ததும், சுழுத்தி கண்டதும்=சுழுத்தியில் (மூலாஞ்ஞானவிருளை) அறிந்ததும், வேறு ஒன்றே போல்=(இத்தேகத்திற்கு) அந்நியமான ஒரு தேகியேபோல, தினம் அநுபவிப்பது ஒக்கும்=நாடோறும் (யான்) அநுபவிப்பது ஒவ்வும்; [ஆயின், அவ்வநுபவத்திலிருந்தியேனின்?] தெரியவும் இல்லை=(அஃதுள்ளபடி சார்வகாலமுந்) தோற்றவில்லை, சற்று மனதினில் உதிக்கும் பின்னே மறைக்கும்=இமைப்போது (சுவாமிகளுபதேசத்தினு லுண்டாகிய) விவேகத்தில் விளங்குகின்றது, பின்னர், (இமைநேரத்தில் இருளாக அஞ்ஞானமானது) மறைக்கின்றது, அது அருளுவீர்=அது (அங்ஙனம் மறைபடாமற் சார்வகாலமும் அபரோட்சமாகும்படியான உபாயம்) உபதேசிப்பீராக. எ-று.

("மனது" எ-து, விவேகத்தை.) "சற்றே மனதினி லுதிக்கும் பின்னே மறைக்கும்" எ-து, உ-ம்-வாசிட்டம்.

"இம்மொழிகளா லிமைப்போ திருளா மீள விமைப்போது வெளியாகு மிவ்வாறாகி, மைம்முகிலா லற்பமாய் வெய்யிற் சீதம் வந்துவந்து போகின்ற மழைநா ளொத்தேன்"—எ-ம்,

"இந்தவடி வாமெனக்கோ ரேதுகாணே னிடர்மலத்தா ருவின் விதையா மகங்காரத்தை, யுந்தும்வகை யறிகிலே னுந்தவுந்த வோடி வரு மதனுலுள் ளுடைந்தேன்" எ-ம், வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (24)

[இனி, விசேடமாக உபதேசிக்கத் தொடங்கல்.]

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே. (25)

இ-ள். தாலத்தின் மரங்கள்காட்டி=பூமியின் கண்ணுள்ள விருட்சங்களின் (சாகைநுனியை முன்னே) காட்டி, தனிப்பிறை காட்டுவார்போல்=(பின்னே) மூன்றாம் பிறையைக் காட்டுபவரைப்போலவும், ஆலத்தின் உடுக்கள்காட்டி=ஆகாயத்தின்கண்ணே (வசிட்டர் முதலிய தூல) நட்சத்திரங்களை முன்னேகாட்டி, அருந்ததிகாட்டு வார்போல்=(சூட்சுமமான) அருந்ததி நட்சத்திரத்தை (ப் பின்னே) காட்டுபவரைப்போலவும்,

தூலத்தை முன்புகாட்டி—தூலமான சக சீவ பரங்களை முன்னே தரிசிப்பி த்து, சூக்கும சொரூபம் ஆன மூலத்தை—சூட்சுமரூபமான சகத்காரணப் பிர மத்தை, பின்புகாட்ட—பின்னே தரிசிப்பிக்க, முனிவரர்—மனனசீலருள் சிரேஷ்டரான ஆசாரியர், தொடங்கினர்—ஆரம்பித்தனர். எ - று.

"தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டல்" சாகாசந்திர நியாயம். "ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டல்" தூலாருந்ததி நியாயம். "ஆலம்"—பெருமை; அது குணவாகுபெயராய் ஆகாயத்தையுணர்த்திற்று. (25)

[பந்த மோட்சங்களுக்கு முறையே காரணங்களாகிய அத்தியாரோ பாபவாதங்களுள் அத்தியாரோபங் கூறத்தொடங்கல்.]

அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லும்
உத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும்வே தாந்த மெல்லாம்
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா தத்தான்
முத்தியா மிவ்வி ரண்டின் முந்தியா ரோபங் கேளாய். (26)

இ - ள். வெளி.

"மித்தை" என்ற பதத்தை, ஆரோபத்திற்கு விசேடணமாகக்கொள்ளில், சுத்தியின்கண் அத்தியஸ்தமான இரஜதத்தையும், ஊஷர பூமியில் அத்தியஸ்தமான சலத்தையும் சத்தியமென்று கூறுஞ் சத்கியாதிவாதத்தை மறுத்தனர் எ - ம், பந்தத்திற்கு விசேடணமாகக் கொள்ளில், சித்தாந்தத்தில் அத்தியாச சாமக்கிரிகள் கூடாமையின் பந்தம் மித்தையன்று, சத்தியமாம் ஆகலின், தனக்குறுதிவேண்டின் நித்தியாதிகருமங்கள் செய்யற்பாலதேயாமென்னும் ஏகபவிக வாதத்தை மறுத்தனர் எ - ம் கொள்க.

(40) அத்தியாச சாமக்கிரியாவன:—அதிஷ்டானம் சாமான்யரூபத்தால் ஞாதத்துவமும், விசேடரூபத்தால் அஞ்ஞாதத்துவமும், வஸ்துஞான ஜந்நிய சம்ஸ்காரமும், பிரமாத்ருதோடமும், பிரமாணதோடமும், பிரமேய தோடமுமாம் என்க. விஸ்தாரபயத்தால் இவைகளை இங்குவிரித்திலேம்; சிஞ்ஞாசையுளதேல், விசாரசாகர கிரந்தத்தி லிரண்டாந்தரங்கத்திற் கண்டுகொள்க. அகங்காராதிகளும், அவைகளின் ஞானங்களும் பந்தமாம்; அவைகளின் அத்தியந்தநிவிர்த்தியே முத்தியாம்.

"பந்தத் துருவங் கேட்டிணிற் பரவீட்டுருவு மேல்வெளியாம்"—

என வாசிட்டத்திற் கூறியிருப்பதால்,

"முந்தியா ரோபங்கேளாய்" எனக்கூறினர். பந்தமுத்தி இலக்கணம் வாசிட்டத்தில்,

"இந்தச் சகமீ நான்முதலா மிவைமெய் யென்றல் பந்தமதா, மந்தக் கருத்து நிற்பளவு மரிதா முத்தி" எ - ம்,

"துன்றுவா தனையே பந்தந் தொல்லைவீ டதனைத் தீர்தல்"— எ - ம்,

"ஏணமான வகம்பாவப் பிராந்தி யன்றோ விடார்பந்த, மான வீடா வதுமடமை யகந்தகாரங் கெடலன்றோ"— எ - ம்,

மற்றுங் கூறியிருப்பன கொண்டுகொள்க. (26)

(41) [அத்தியாரோபத்தின் பரியாய நாமங்களோடு திருஷ்டாந்தத்தில் அதன் இலக்கணங்கூறல்.]

ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லாம்,
ஓரோர்வத் துவினில் வேறே யோரோர்வத் துவினை யோர்தல்
நாரூடு பணியாய்த் தோன்ற னரனாகித் தறியிற் றோன்றல்
நீரூடு கானற் றோன்ற னிறநதலம் வெளியிற் றோன்றல் (27)

இ - ள். ஆரோபம் அத்தியாசம் கற்பனை, ஆவ எல்லாம்=ஆவன வனைத்தும், ஓர் வத்துவினில்=ஒவ்வொரு வத்துவினிடத்து, வேறே ஓர் ஓர் வத்துவினை ஓர்தல்=அந்நியமான ஒவ்வொருவத்துவை உணர்தலாம், (அது) நார் ஊடு பணி ஆய்த் தோன்றல=(சர்ப்பமின்மையிடமான) இரச்சுவின்கட் சர்ப்பமுளதாகித் தோற்றுதலும், தறியில் நரன் ஆகித் தோன்றல்=(புருடனின்மையிடமான) தாணுவின்கட் புருடனுளனாகித் தோற்றுதலும், கானல் ஊடு நீர் தோன்றல்=(நீரின்மையிடமான) கானலிடத்துச் சலமுளதாகித்தோற்றுதலும், வெளியில நிறம் தலம தோன்றல=(நிறந் தலங்களின்மையிடமான) ஆகாசத்திலே நீலவர்ணமும், (கொப்பரை கவித்தாற்போலுள்ள) இடமும் உளதாகித்தோற்றுதலும, (பிறவுமாம்.) எ - று.

"பணியாய்" என்றதால், அர்த்தாத்தியாசமும், "தோன்றல்" என்றதால், ஞானத்தியாசமும்பெறரும். இன்மையெனினும், அபாவமெனினும் ஒக்கும். தோன்றலெனினும், அவபாசமெனினும் ஒக்கும். "ஓரோர்வத்துவினைவேறேயோ ரோர்வத்து வினையோர்தல்" எனவும் பாடமுளது; அங்ஙனம் பொருள் கொள்ளில், நியாயவைசேடிகமதாநு சாரியரான சிந்தாமணிகாரர்க்குடம்பாடான அந்நியதாக் * கியாதி என்னும். வேதாந்த சித்தாந்தத்தில் அநிர்வசனீயக் கியாதியே உடம்பாடாகலின் அது பாடமன்று; ஏட்டிலெழுதினவர்களுடைய புத்திதோஷத்தாற் பிறழ்ந்ததேயாம்.

"நாரூடு பணிமை யோர்த னரன்மைதா ணுவிலோர்தல்பேய்த், தேரூடு நீர்மை யோர்த றெரியுநீ லிமைவிண்ணோர்தல்"—எ - ம், பாடமுளது.

* கியாதி=ஞானம், அல்லது வார்த்தை.

திருஷ்டாந்த ஞானமின்றித் தாஷ்டாந்த ஞானமுதியா தாதலால், திருஷ்டாந்தத்தைத்தானே நன்முக விரித்து விசாரிப்பது ஆவசியகமா மாகலின் அதனை விரிக்குதும்:—இரச்சுசர்ப்பம், சுத்திரஜத முதலிய பிரம[ஷ்ட]ஸ்தலத்தில் சத்கியாதி, அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதி, அக்கியாதி எனவைந்து மதங் கேட்கப்படுகின்றன. வைணவர் முதலியோர், சத்கியாதிவாதிகள். சூனியவாதி, அசத்கியாதிவாதி. க்ஷணிக விஞ்ஞானவாதி, ஆத்மக் கியாதி வாதி. நியாய வைசேடிகர், அந்நியதாக்கியாதி வாதிகள். சாங்கிய பிரபாகரர், அக்கியாதி வாதிகளாம்.

(42) இவர்களுள், க-வது சத்கியாதிவாதிகள், சுத்தியினுடைய அவயவங்களோடு இரஜதத்தி னவயவமும் எப்போது மிருக்கின்ற தெனவும், சுத்தியினவயவம் சத்திய மாவதுபோல இரஜதாவயவமுஞ் சத்தியம், மித்தையன்றெனவும், தோடத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையின் பரிணமமாக அநிர்வசனீய ரஜதம் உண்டாவது போலத் தோடத்தோடு கூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாவயவங்களி னின்று சத்திய ரஜதமும் உண்டாகின்ற தெனவும். சித்தாந்தத்தில் அதிஷ்டான ஞானத்தால் அநிர்வசனீய ரஜதநிவிர்த்தியாவது போலச் சுத்தி ஞானத்தால் சத்திய ரஜதமும் தனதவயவத்திற் றொம்சமா மெனவுங் கூறுவர்; அது நிரா கரிக்கத் தக்கது. யாதினு லெனின்? சுத்திரஜத திருஷ்டாந் தத்தினுல் பிரபஞ்சம்மித்தையென்னும் அநுமிதி யுண்டாகின்றது. சத் கியாதி வாதத்தில் சுத்தியில் ரஜதஞ் சத்தியமாம்; ஆகவே, அதைத் திருஷ்டாந்தமாக வைத்துப் பிரபஞ்சத்தில் மித்தியாத்வ சித்தி பெறுவது கூடா தாதலா லென்க; இன்னும், இந்தப்பட்சத்திற் பிரபல தோடங்கள் அநேகமுள; அவை சுத்தி ஞானத்திற்குப்பின் சுத்தியில் காலத்திரயத்திலும் இரஜதமே இல்லையென்று சுத்தியினிடத்துத் திரைகாலிக ரஜதாபாவப் * பிரதீதி யுண்டாகின்றது; சித்தாந்தத்தில் அநிர்வசனீய ரஜதமோ! மத்திய காலத்தில் மாத்திரம் உண்டு; வியாவகாரிக ரஜதா பாவம் திரைகாலிகமாக இருக்கின்றது. சதகியாதி வாதிமதத்தில் வியாவகாரிக ரஜதம் உண்டாகுங் காலையில் வியாவ காரிக ரஜதாபாவங்கூடாது; ஆகலின், திரைகாலிக ரஜதா பாவப்பிரதீதியினுல் வியாவகாரிக ரஜதஞ் சொல்லுகை விருத்தமாம்; அன்றியும், அநிர்வசனீய ரஜதத்தின் உற்பத்தியில் பிரசித்த ரஜதத்தின் சாமக்கிரி வேண்டுவதில்லை. தோஷசகித அவித்தையினுல் அதனது உற்பத்திகூடும்; வியாவகாரிக ரஜதத்தின் உற்பத்தி பிரசித்த ரஜதத்தின் சாமக்கிரியின்றிக் கூடாது. சுத்தியின் கண்ணே இரஜதத்தின் பிரசித்த சாமக்கிரியில்லை; ஆதலால், சத்தியரஜத உற்பத்தி சுத்தியில் உளதா மென்கைகூடாது. சுத்தியின்கண் இரஜதாவயவம் உண்டு; அதுவே சத்திய ரஜதத்தின் சாமக்கிரியாம் எனின்? அது உற்பூதரூபமா? அநுற்பூதரூபமா? உற்பூதரூபமெனின்? இரஜதத்தினுற்பத்திக்கு முன்னரே அது பிரத்தியட்சமாதல் வேண்டும். அநுற்பூத ரூபமெனின்? இரஜதமும் அநுற்பூத ரூப முடையதாம்; ஆகவே, அவ் விரஜதம் பிரத்தியட்ச மாகாது.

* பிரதீதி—ஞானம்.

அன்றியும், ரிரச்சுவின்கட் பத்துப்புருடர்க்கு வெவ்வேருக ஒருவனுக்குத் தண்டம், ஒருவனுக்கு மாலை, ஒருவனுக்குச் சர்ப்பம், ஒருவனுக்குச் சலத்தின்ருரை என இப்படிபிரம [ஹ்ரூ]ம் உண்டாகிறது. அங்கே தண்டமுதலிய பதார்த்தங்களின் அவயவங்கள் சொற்ப ரச்சுதேசத்தில் உண்டெனல் கூடாது. என்னை? மூர்த்தத் திரவியங்கள் ஸ்தானத்தைத் தகையுமாதலால் என்க. சித்தாந்தத்தில், அநிர்வசனீயங்களாகத் தண்ட முதலியவை உண்டாகின்றனவாகலான் வியாவகாரிக தேசத்தை அவை தகையாவாம். சத் கியாதி வாதியும் தண்டமுதலியவற்றில் ஸ்தானத்தைத் தகைவது முதலிய பயனை ஒப்பாவிடின், தண்ட முதலியவற்றைச் சத்தியமென்று கூறுதல் விருத்தமும், நிஷ்பலமுமாம. தண்ட முதலியவை தோற்றரவு மாத்திரந்தான், அந்நியமான காரியம் அவைகளால் உளதாகாதென்னின்? அப்போது அநிர்வசனீய வாதமே சித்தமாம். பிரம [ஹ்ரூ] ஸ்தலத்தில் சத் பதார்த்த உற்பத்தி ஒப்பிடில், அக்கினியோடுகூடிய ஊஷர பூமியில் சலப்பிரம [ஹ்ரூ]ம் உண்டாமாயின், ஆங்கே அச்சலத்தால் அவ்வக்கினி சாந்தமாதல் வேண்டும். பஞ்சின் மீதுவைத்த குன்றிமணிக் கொத்தில் அக்கினிப்பிரம [ஹ்ரூ]ம் உண்டா மாயின் அங்கே பஞ்சானது எரிதல் வேண்டும். தோடந்தோடு கூடிய காரணத்தினின்றும் உண்டான பதார்த்தம் அந்நியனுக்குத் தோற்ற மாட்டாது; யாவனுடைய தோடத்தினுலுண்டாயிருக்கிறதோ! அவனுக்கே தோற்றுநிற்கும். தோடத்தின் காரியமான சலத்தினுலும், அக்கினியினுலும் நனைதலும், தகித்தலும் உளவாகாவென்னில்? அப்போது அவைகளைச் சத்தியமென்று சொல்லுதல் கேவலம் நகைத்தற்கே எதுவாகுமல்லது வேறில்லை; அதனுல், சத் கியாதி வாதிகளின் வார்த்தை யுத்தியில்லாத வார்த்தை என அந்தப்பட்சம் நிராகரிக்கத் தக்கதேயாம்.

(43) ௨-வது சூன்யவாதி, இரச்சுவினிடத்துச சர்ப்பம் அத்தியந்தம் அசத்தாம்; அப்படியே அந்நிய தேசத்திலும் அத்தியந்தம் அசத்தாம்; இப்படி அத்தியந்தம் அசத்தாகிய சர்ப்பம் இரச்சுவினிடத்துத் தோன்று நின்றதென்பன்.

(44) ௩-வது க்ஷணிக விஞ்ஞானவாதிகள், பழுதையினிடத்தும், அப்படியே அந்நிய தேசத்தும் புத்திக்குப் புறம்பே ஓரிடத்தும் சர்ப்பமானது இல்லை; சகல பதார்த்தங்களும் புத்தியினும் வேருக இல்லை; சகலபதார்த்தங்களின் ஆகாரத்தையும் புத்தியே தரிக்கின்றது; அந்தப் புத்தியும் க்ஷணிக விஞ்ஞான ரூபம்; க்ஷணத்தில் நாசமும், க்ஷணத்தில் உற்பத்தியும் அடையாநின்ற விஞ்ஞானமே சர்ப்ப ரூபமாகத் தோன்று நின்றதென்பர்.

(45) ௪-வது நியாய வைசேடிகர், புற்றுமுதலிய ஸ்தானங்களில் யதார்த்தமாகிய சர்ப்பமுளது; அது நேத்திரத்தினுற் காணப்படுகின்றது. நேத்திரத்திலுள்ள தோடபலத்தால் எதிரே சமீபத்தில் இரச்சுதேசத்திற்றோன்றுகின்றது. யதார்த்த சர்ப்பத்திற்கும், நேத்திரத்திற்கும் மத்தியில்

பித்தியாதிய * அந்தராயங்கள் இருப்பினுந் தோடசகித நேத்திரத்தால் அது காணப்படுகின்றதென்பார். சிந்தாமணிகாரர், தோட சகித நேத்திரத்தினால் புற்றினிடத்துள்ள சர்ப்பஞானம் உண்டாமாயின், மத்தியிலுள்ள ஏனைய பதார்த்த ஞானங்களும் உண்டாதல் வேண்டும்; ஆதலால் பித்தியாதி அந்தராயசகித வத்துவின் ஞானம் நேத்திரத்தால் உண்டாகாது. பின்னையோ? தோடசகித நேத்திரத்தினால் இரச்சுவானது சிசரூபமாகத் தோன்றாமல் சர்ப்பரூபமாகத் தோன்றுகின்றது; இப்படி ஒன்று மற்றொன்றாகத் தோன்றுநிற்பதே அந்நியதாக்கியாதி யென்பர்.

(46) ரு - வது அக்கியாதி வாதியர், அசத்தானது தோன்றுமாயின் வந்தியாபுத்திர, சச சிருங்கங்களுந் தோன்றவேண்டும்; அங்ஙனந் தோன்றாமையின், அசத்கியாதி அசங்கதம். க்ஷணிக விஞ்ஞானத்தின் ஆகாரமே சர்ப்பாதிகளாமாயின், க்ஷணிகமாத்திரத்தால் அதிககாலத் தோற்றரவு கூடாது; ஆதலால், ஆத்மக்கியாதியும் அசங்கதம். அந்நியதாக்கியாதியின் பிரதமரீதி சிந்தாமணி மதத்தால் தூஷிக்கப்பட்டதுபோலவே சிந்தாமணி மதரீதியினாற் கூறும் அந்நியதாக் கியாதி மதமும் அசங்கதமாம். எதனாலெனின்? ஞேயவநுசாரமாகவே ஞானமுண்டாகின்றது. ஞேயம் இரசசு; அதில் சர்ப்பஞானங் கூறுதல் அத்தியந்த விருத்தமாமாதலின் என மறுத்து. எங்கே இரச்சுவின்கட் சர்ப்பப் பிரம [ஹூ8] முண்டாமோ! அங்கே இரசசுவினுடனே நேத்திரத்திறகுத் தன் விருத்திவழியாகச் சம்பந்தமுண்டாய் அவ்விரசசுவினிடத்து இதுவென்னும் ரூபமாகச் சாமான்யஞானமும், சர்ப்பத்தின் ஸ்மிருதியும் உண்டாகின்றன; அவ்விரண்டில், இது வென்னுங்கூறு இரச்சுவின் சாமான்யப் பிரத்தியட்ச ஞானம். சர்ப்ப மென்பது ஸ்மிருதி ரூப ஞானம். ஆகலான், இது சர்ப்பமென்புழி இரண்டு ஞானமுண்டாம்; அப்படி யுண்டாதற்குப் பிரமாதாவின்கட் பயதோடமும், பிரமாணத்தின்கட் டிமிரதோடமுமே காரணமாம்; அவற்றின் வலியால் புருடனுக்கு இதுவென்பது இரச்சுவின் சாமானியப் பிரததியட்ச ஞானமென்றும், சர்ப்பமென்பது பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதி ஞானமென்றும் விவேகம் உண்டாகவில்லை; இவ் விருவகை ஞானத்தின் அவிவேகமே பிரம [ஹூ] மென்பர். சத்கியாதியும், அக் கியாதி வாதியால் மறுக்கப்பட்ட அசத் கியாதி, ஆத்மக் கியாதி, அந்நியதாக் கியாதிகளும் ஆகிய நான்கு மதங்களும் யுத்திஹீனமாவதால் எப்படி அசங்கதமென்று தள்ளப்பட்டனவோ! அப்படியே அக்கியாதிமதமும் அசங்கதமாம்.

(47) எதனாலெனின்? இது சர்ப்ப மென்னும் ஞானத்தில் முன்னே இது வென்னுங் கூறு இரசசுவின் சாமானியப் பிரத்தியட்ச ஞானமாம், சர்ப்ப மென்னுங் கூறு பூர்வங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மரண ஞானமாம் என்பது அக் கியாதி வாதிகள்மதம்; அங்கே பூர்வங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மரணமே ஒப்பி எதிரே இரச்சுதேசத்தில் சர்ப்ப ஞானம் ஒப்பாவிடில் எதிரே

* அந்தராயம்=மறைப்புக்குக் காரணம்.

இடக்கும் இரச்சுவினின்றும் புருடனுக்குப் பயமுண்டாகித் திரும்பி ஓட வேண்டுவதில்லை; எதிரேகண்ட இரச்சு தேசத்திலேயே சர்ப்பஞானம் உண்டாகின்றதாதலால் அது பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதியல்ல; அன்றியும், இரசசுவின் விசேடரூப யதார்த்தஞானம் உண்டானதன் பின்னர் எனக்கு இரச்சுவினிடத்துச் சர்ப்பஞானம் மித்தையாக உண்டாயிற்றென்னும் *பாதமானது உண்டாகின்றது; இப் பாதத்தினாலும் இரச்சுவினிடத்து சர்ப்பஞானம் உணடாகின்றதே யல்லாமற் பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதி யுணடாக வில்லை. இது சர்ப்பமென்புறி, ஞானம் ஒன்றே தோன்றுகின்றது; இரணடில்லை. ஏககாலததில் அந்தக்கரணத்தினின்று ஸ்மிருதி ரூபமும், பிரததியட்ச ரூபமும் ஆகிய இரண்டு ஞானமுளவாகா; ஆதலால் அக் கியாதி மதமும் அததியந்தம் அசங்கதமாம் என்க. இம் மதங்களின் பிரதிபாதனமும், கணடனமும் விவரணம், ஸ்வாராஜ்யசித்தியாதிய கிரந்தங்களிலும், விருத்திப்பிரபாகர கிரந்தத்துங் காண்க.

(48) இனிச் சித்தாந்த மாகிய அநிர் வசனீயக் கியாதியின் கொள்கை கூறுதும்:—அந்தக்கரணத்தின் விருத்தி நேத்திராதி இந்திரிய வாயிலாகப் புறம்போந்து விடய சமான காரத்தை யடையும்போது அதனால் விடயத்தின் ஆவரணம் பஙகமாம்; ஆகவே, அவ்விடயந்தோன்று நிற்கும். அங்கே பிரகாச சகாயமும் வேணடும்; இன்றேல் பதார்ததஙக டோற்றாவாம். ஆதலால், எஙகே இரசசுவில் சாப்பப்பிரமமுணடு அஙகே முற்கூறியவாறு அந்தக்கரணத்தின் விருததி நேததிரேந்திரிய வாயிலாகப் புறம்போந்து இரசசுவோடு சம்பந்தமாயினும், திமிராதி தோடப்பிரதிபந்தமிருக்கில் விருத்தியின் சொரூபம் இரசசுவின் சமானகாரமாகாது; அஃதஙஙன மாகாதபோது இரச்சுவின் ஆவரணம் பஙகமாகாது. இவ்வாறு ஆவரணபங்கநிமித்தம் விருத்தி சம்பந்தமுளதேனும், எப்போது இரசசுவின் ஆவரணம் பஙகமாகவில்லையோ! அப்போது இரச்சுசேதனததுள்ள அவித்தையினிடதது †க்ஷோபமுண்டாய் அவ்வவித்தை சர்ப்பாகார பரிணாமத்தையடையும்; அவ்வவித்தையின் காரியமாகிய சர்ப்பம் சத்தெனின்? இரச்சுஞானத்தாற் பாதமாகாது; பாதமாகலின் சத்தன்று. அசத்தெனின்? வந்தியாபுததிரன் போலத் தோற்றரவாகாது; ஆகலின், அசத்துமன்று; மற்றெததன்மையதோ வெனின்? சதசத் விலக்ஷண அநிர்வசனீயத் தன்மையதாம். இஙஙனம் சர்ப்பமானது அவித்தையின் பரிணாமமாவதுபோல அதன் ஞானரூபவிருத்தியும் அவித்தையின் பரிணாமமே; அந்தக்கரணத்தின் பரிணாமமன்றாம். என்னை? இரசசுஞானத்தால் சர்ப்பம் பாதமாகின்றதுபோல அதன் ஞானமும் பாதமாகின்றது. அந்தக்கரணத்தின் பரிணாமமாயின் அது பாதமாகாது. ஆதலால், சர்ப்பஞானமும் சர்ப்பம்போல அவித்தையின் காரியமாய்ச சதசத் விலட்சண அநிர்வசனீயத் தன்மையதேயாம். இஙஙனம் சர்ப்பமும், அதன்ஞானமும் அவித்தையின்

* பாதம்=மித்தையென்னும் நிச்சயம். [ബാധഃ] எனும் வடமொழி தற்பவமாய், பாதம் எனவரும்; ஏனைய விடங்களினும் இதுவே பொருள்.

† க்ஷோபம்=காரியாபிமுகாவஸ்தை.

பரிணாமமேயாயினும் இரச்சு வுபகித சேதனத்துள்ள தமோகுணப் பிரதான வவித்தைக்கூற்றின் பரிணாமம் சர்ப்பமும், சாட்சி சேதனத்துள்ள வவித்தையின் சத்துவகுணப் பரிணாமம் விருத்திஞானமுமாம். எச் சமயத்தில், இரச்சு சேதனத்துள்ள வவித்தை சர்ப்பாகார பரிணாமமாமோ! அச் சமயத்திலேயே சாட்சியாசிரிதமான வவித்தை ஞானாகாரபரிணாமமாம். என்னை? இரச்சு சேதன வாசிரிதமான வவித்தையிடத்து யாதொருக்ஷோப நிமித்தமுளதோ! அந் நிமித்தத்தினாலேயே சாட்சியாசிரித வவித்தைக் கூற்றினிடத்தும் க்ஷோபம் உளதாதலினென்க; இங்ஙனங் கூறியவாற்றால் சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அவித்தை உபாதானகாரணமும், இரச்சுவின் அப்பிரதீதியினால் இரச்சுவவச்சின்ன சேதன வாசிரிதமான வவித்தையின்கண்ணுளதாகும் க்ஷோபம் நிமித்தகாரணமும் ஆம். இவ்வாறு பிரம [ஹ்ர॰] ஸ்தலத்தில் சர்ப்பாதி விடயங்களும், அவற்றின் ஞானங்களும் கூடவே உண்டாய் இரச்சுவாதி அதிஷ்டான ஞானத்தாற் கூடவே இலீனமாம்; இவ்வாற்றால், சர்ப்ப முதலிய பிரம[ஹ்ர॰]த்தில் புறவவித்தைக்கூறு சர்ப்பமுதலிய விடயங்களுக்கும், சாட்சியாசிரிதமான அகவவித்தைக்கூறு அவ்விடய ஞானரூப விருத்திகட்கும் உபாதான காரணமெனப்படும். சொப்பனத்தினிடத்துச் சாட்சியாசிரிதமான வவித்தையின் தமோகுணக்கூறு விடயரூப பரிணாமத்தையும், சத்துவகுணக்கூறு ஞானரூப பரிணாமத்தையும் அடைகின்றமையின், சொப்பனத்தில் அகவவித்தையே விடயத்திற்கும், ஞானத்திற்கும் உபாதானகாரணமாம்; இவ்வாற்றால், வாகியமான இரசசுசர்ப்பாதிகளும், ஆந்தரமான சொப்பன பதார்த்தங்களும் சாட்சிபாசியமென்று சொல்லப்படும். அவித்தியாவிருத்தியின் வாயிலாக யாதொன்றைச் சாட்சியானது பிரகாசிப்பிக்குமோ! அது சாட்சிபாசியமாம். இரச்சுவாதிகளில் அநிர்வசனீயமான சர்ப்பாதிகளும், அவைகளின் ஞானங்களும் பிரம [ஹ்ர॰] மென்றும், அத்தியாசமென்றுஞ் சொல்லப்படும். அந்தப் பிரம[ஹ்ர॰]ம் அவித்தையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம்.

(49) உபாதானகாரணத்திற்குச் சமானசுபாவமுடையதாயும், அந்நியதா சொரூபமாயு முள்ளது பரிணாமம். அதிஷ்டானத்தினும்விபரீதசுபாவமுடையதாயும், அந்நியதா சொரூபமாயுமுள்ளது விவர்த்தம். உபாதானகாரணமான அவித்தை எப்படி அநிர்வசனீயமோ! அப்படியே இரச்சுசர்ப்பமும், அதன் ஞானமும் அநிர்வசனீயமாவதால் அவித்தைக்குச் சமானசுபாவமுடையன; அந்நியதாசொரூப மென்பது அவித்தையினும் வேறுபிரகாரமான ஆகாரம்; அப்படியே இரச்சுவவச்சின்ன வதிஷ்டானசேதனம் சத்ரூபம்; சர்ப்பமும், அதன் ஞானமும் சத்தினும் விலக்ஷணமாவதால் விபரீத சுபாவமுடையனவாம். அந்நியதாசொரூபமென்பது சேதனத்தினும் வேறு பிரகாரமான ஆகாரம்.

(50) மித்தியா சர்ப்பத்தின் அதிஷ்டானம் இரச்சு வுபகித சேதனமாம்; இரச்சுவல்ல. என்னை? சர்ப்பத்தைப்போல் இரச்சுவும் கற்பிதம்; கற்பித

வத்து அந்நிய கற்பிதத்திற்கு அதிஷ்டானமாதல் கூடாது. ஆதலால், இரச்சு வுபஹிதசேதனமே அதிஷ்டானமாம்; இரச்சுவல்ல. இரச்சுவிசிட்டத்தை அதிஷ்டானமென்று சொல்வோமாயின், இரச்சுவும், சேதனமும் ஆகிய இரண்டும் அதிஷ்டானமாம்; ஆகவே, இரச்சு பாகத்திலும் அதிஷ்டானத் தன்மை பாதிக்கப்பட்டிருத்தலின், இரச்சு வுபஹித சேதனமே அதிஷ்டானமாம்; இரச்சு விசிட்ட சேதனம் அதிஷ்டானமன்று அப்படியே சர்ப்பஞானத்திற்குச் சாட்சிசேதனம் அதிஷ்டானமாம்; இவ்வாற்றால், பிரம [ஹ்ருசி] ஸ்தலத்தில் விடயத்திற்கும், அதன் ஞானத்திற்கும் உபாதிபேதத்தால் அதிஷ்டானம் பின்னமாம்; ஒன்றன்று. விசேடரூபமாக இரச்சுவினது அப்பிரதீதி அவித்தையில் க்ஷோபவாயிலாக இரண்டின் உற்பத்தியிலும் நிமித்தமாவதுபோல இரச்சுஞானமும் இரண்டன் நிவிர்த்தியிலும் நிமித்தமாம்.

(51) சங்கை—மித்தியாவஸ்துவிற்கு யாது அதிஷ்டானமோ! அவ் வதிஷ்டான ஞானத்தினால் மித்தியாவஸ்து நிவிர்த்தியாமென்பது அத்வைத வாதத்தின் சித்தாந்தம்; இங்கே மித்தியாசர்ப்பத்திற்கு அதிஷ்டானம் இரச்சுவன்றாம், இரச்சு வுபஹித சேதனமாம் என்று கூறினமையின் இரச்சுஞானத்தால் சர்ப்பநிவிர்த்தி கூடுமாறெங்ஙனே யெனின்?

(52) உத்தரம்—இரச்சுவாதி ஜடபதார்த்தங்களின் ஞானம் அந்தக்கரணத்தின் விருத்திரூபமாக உண்டாகுமேல் அங்கே ஆவரணபங்கம் விருத்தியின் பிரயோசனமாம்; அவ் வாவரணம் அஞ்ஞானத்தினது சத்தியாகலான் ஆவரணம் ஜடத்தின் ஆசிரிதமன்று; ஜடத்திற்கு அதிஷ்டானசேதனத்தின் ஆசிரிதமாம். ஆகலான், இரச்சுவின் சமானாகாரமான அந்தக்கரணத்தின் விருத்தியினால் இரச்சு வவச்சின்ன சேதனத்தின் ஆவரணமே பங்கமாம். விருத்தியின்கண்ணுள்ள சிதாபாசனால் இரச்சுமாத்திரம் பிரகாசிக்கும். சேதன பாகம் சுயம்பிரகாசமாவதால் அதன்கண் ஆபாசனுக்கு உபயோகமில்லை; இவ்வாற்றால், சிதாபாசனோடுகூடின அந்தக்கரண விருத்திரூபமாகிய ஞானத்திலுள்ள விருத்திபாகத்திற்கு ஆவரணபங்கரூபப்பயன் சேதனத்திலும், சிதாபாசபாகத்திற்குப் பிரகாசரூபப்பயன் இரச்சுவிலும் உள்ளன. ஆதலால், ஸாபாச விருத்தி ஞானத்திற்குக் கேவலம்சடமாகிய இரச்சு விடயமன்று. பின்னையோவெனின்? அதிஷ்டான சேதனத்தோடு கூட இரச்சுவானது ஸாபாசவிருத்திக்கு விடயமாம்; இக்காரணத்தால், சித்தாந்தகிரந்தங்களில் அந்தக் கரணத்தினின்றுஞ் சனியாநிற்கும் விருத்திஞானங்கண் முழுதும் பிரமத்தைவிடயம் பண்ணுகின்றனவென்று கூறப்பட்டிருக்கின்றது; இவ்வாறு இரச்சுஞானத்தால் நிராவரணமாய்ச் சர்ப்பத்திற் கதிஷ்டானமாகிய இரச்சுவி னவச்சின்ன சேதனமும், தனது பிரகாசத்தால் விளங்குவதால் இரச்சுவின் ஞானமே சர்ப்பத்தின் அதிஷ்டான ஞானமாகலின் சர்ப்பநிவிர்த்திகூடும்.

(53) சங்கை—இங்ஙனும் சர்ப்பநிவிர்த்தி இரச்சுஞானத்தாற் கூடுமேல் கூடுக. சர்ப்பஞானத்திற் கதிஷ்டானமாகிய சாட்சிசேதனம் அஞ்ஞானமாயிருத்தலின், சர்ப்பஞான நிவிர்த்திகூடுமாறு எங்ஙனே யெனின்?

(54) உத்தரம்—விடயத்தின் அதீனமாக ஞான முளதாகலின் விடயத்தினபாவத்தால் சர்ப்பஞானந் தானே நிவிர்த்தியாம். கற்பித நிவிர்த்தி அதிஷ்டான ஞானமின்றி உளதாகாதென்று மீட்டும் சங்கிக்கிற் கூறுதும் :—

(55) நிவிர்த்தி இருவகைத்தாம்: ஒன்று அத்தியந்த நிவிர்த்தி மற்றொன்று காரணத்தில் லயரூபமான நிவிர்த்தி. சகலகற்பித வஸ்துக்களின் காரணம் அதிஷ்டானவாசிரிதமான அஞ்ஞானம்; அவ்வஞ்ஞானத்தோடு கூடக் காரியங்களி னிவிர்த்தி அதிஷ்டான ஞானத்தினாலேயே யுளதாம். காரணத்தின்கண் லயரூபமான நிவிர்த்தி அதிஷ்டான ஞானத்தினாலன்றியும் சுழுத்தியிலும், பிரளயத்திலும் சர்வபதார்த்தங்கட்குமுளவாம். அங்கே, சர்வபதார்த்தங்களினது லயத்தில் போகப்பிரதமான கர்மங்களினபாவம் நிமித்தமாக விருப்பதுபோல, அதிஷ்டான ஞானமின்றியே சர்ப்பஞானம் லயமாமிடத்துச் சர்ப்பஞானத்திற்கு விடயமான சர்ப்பத்தினபாவம் சர்ப்பஞானலயத்தில் நிமித்தமாகவுளது; இவ்வாறு சர்ப்ப நிவிர்த்தி இரச்சுஞானத்தாலும், சர்ப்பஞானத்தினதுலயம் அதன்விடயமான சர்ப்பத்தி னபாவத்தாலும் உளவாம்.

(56) அல்லது சர்ப்பமும், அதனது ஞானமுமாகிய இரண்டனது நிவிர்த்தியும் இரச்சு ஞானத்தாற் றானே யுளவாம். என்னை? எப்போது இரச்சுவின் பிரத்தியட்ச ஞானமுளதாமோ! அப்போது அந்தக்கரணத்தின் விருத்தி நேத்திர வாயிலாகப் புறம்போந்து இரச்சுதேசத்தை யடைந்து இரச்சுவிற்குச் சமானமாகிய ஆகாரமா மாதலால், இரச்சுவின் பிரத்தியட்ச சமயத்தில் விருத்தி உபகிதசேதனமும், இரச்சுவுபகித சேதனமும் பேதமின்றி ஏகமாம்; இதற்கேது கூறுதும் :—சேதனத்திற்கு உபாதிபேதத்தாலன்றிச் சொரூபத்தால் யாண்டும் பேதமில்லை. விருத்தி உபகிதசேதனம், இரச்சு வுபகித சேதனங்களின் பேதகவுபாதி விருத்தியும், இரச்சுவுமாம்; அவ்விருத்தியும், இரச்சுவும் வெவ்வேறு தேசத்திருக்கில் அப்போது உபாதியுடைய சேதனங்கட்குப் பேதமுண்டு. இரண்டுபாதியும் ஓரிடத்திருக்கில் அப்போது உபகிதசேதனங்கட்குப் பேதமின்று. இவ்வார்த்தை வேதாந்த பரிபாஷாதி கிரந்தங்களிற் கூறியிருக்கின்றது. இவ்வாற்றால், இரச்சுவின் பிரத்தியட்ச ஞான சமயத்தில் இரச்சுவுபகித சேதனமும், விருத்தி உபகித சேதனமும் ஏகமாம். அந்தக்கரணத்திலும், அதன் விருத்தியிலும் உள்ள அவைகளின் பிரகாசகமான சேதன மாத்திரம் சாட்சியெனப்படுதலின், இரச்சுஞான சமயத்தில் இரச்சுவுபகித சேதனத்தோடு அபின்னமான சாட்சியும் அவ்விரச்சுஞானத்தாற்றானே பாநமாவதால் கற்பிதசர்ப்பஞான நிவிர்த்திகூடும்.

(57) அன்றியும், சாட்சியானது தான் அஞ்ஞாதமாயின் திரிபுடிஞானம் அச்சாட்சியினாற் பொருந்தாது; ஆதலால், சர்வ திரிபுடிகளின் ஞானத்திலும் சாட்சிஞானம் அவசியமிருக்கின்றது; அச்சாட்சி ஞானத்தால் சர்ப்பஞான நிவிர்த்தி கூடும். சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் வெவ்வேறாகக்கூறினமையின் இவ்வளவு சங்கை சமாதானங்க ளுண்டாயின.

(58) இனி சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றே என்னும் பட்சங்கூறுதும்; வாகியமான் ஓரிரச்சு சேதனத்தைச் சர்ப்

பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானமென்னல்கூடாது. எதனாலெனில்? எத்துணை ஞானமுளவாகா நின்றனவோ அத்துணையும், பிரமாதா அல்லது சாக்ஷியினாசிரிதமாம். வாகியமான இரச்சுசேதன வாசிரிதமாக ஞானங்கூடாது; அப்படிச் சர்ப்பத்திற்கும், ஞானத்திற்கும் அதிஷ்டானமாக அந்தக்கரண வுபகிதசாட்சி சேதனத்தை யொப்பினால் சரீரத்தினுள்ளே அந்தக்கரண தேசத்தில் சர்ப்பந் தோன்றவேண்டும். இரச்சுதேசத்திற் சர்ப்பந்தோன்ற வேண்டுவதில்லை, அகத்தே உதியாநின்ற சர்ப்பத்தின் றோற்றம் புறத்தே மாயையின் வலியாலுளதாமென வொப்பினால் ஆத்மக்கியாதிமதம் சித்தியாம் ஆகலின், இரச்சுவுபகித சேதனம் ஞானத்திற் கதிஷ்டானமாதலும், அந்தக்கரணவுபகித சேதனம் சர்ப்பத்திற் கதிஷ்டான மாதலுங்கூடாது. இவ்வாற்றால் சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றென்கை பொருந்தாதேனும், நேத்திரேந்திரிய வாயிலாகப் புறம்போந்து இரச்சுவின்சமீபமடைந்த இதுவெனும் ஆகாரமான அந்தக்கரணத்தின் விருத்தியுபகிதசேதனத்தின் ஆசிரிதமாயுள்ள வவித்தையின் தமோகுணக்கூறு சர்ப்பாகாரபரிணாமமும், சத்துவகுணக்கூறு ஞானாகார பரிணாமமுமாம். ஆதலால் விருத்தி உபகிதசேதன வாசிரிதமானவவித்தை சர்ப்பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் உபாதான காரணமாம்; விருத்தியுபகிதசேதனம் அதிஷ்டானமாம். விருத்தி இரச்சு தேசத்தில் புறம்பே நேத்திரவாயிலாகப் போந்திருத்தலால் விருத்தி உபகித சேதனமும் புறம்பே உளது. இக்காரணத்தால், சர்ப்பத்திற் காசிரயமாதல் கூடும். அந்தக்கரணத்தினது சொரூபம் எவ்வளவுளதோ! சாட்சியினது சொரூபமும் அவ்வளவேயுளது. சரீரத்தினகத்தேயுள்ள அந்தக்கரணமே விருத்திரூப பரிணாமமடைதலின், விருத்தியுபகிதசேதனம் சாட்சியாம்; ஆகவே அது ஞானத்திற் காசிரயமாதலுங்கூடும். எப்போது, இரச்சுவினது சாட்சாத்காரமாமோ! அப்போது இரச்சுசேதனம், விருத்தி சேதனம் எனும் இரண்டும் ஏகமாம். ஆதலால் இரச்சுவின் ஞானத்தால் சர்ப்ப நிவிர்த்தியும், அதன்ஞான நிவிர்த்தியுங்கூடும். ஓரிரச்சுவில் பத்துப் புருடர்க்குச் சர்ப்பம், தண்டமுதலிய பத்துப் பதார்த்தங்கள் வெவ்வேறாகத் தோன்றுக; அல்லது, சகலர்க்கும் சர்ப்பம் ஒன்றே தோன்றுக; அங்கே எவனுக்கு இரச்சுவின் சாட்சாத்காரமாமோ! அவனுக்கு அவனது விருத்தி சேதனத்திற் கற்பிதமாகிய அத்தியாசம் நிவிர்த்தியாகிறது; மற்றவனுக்கு இல்லை. ஆதலால், விருத்தி சேதனமே கற்பிதத்திற்கு அதிஷ்டானம். இரச்சுமுதலிய விடயவுபகித சேதனம் அல்ல. இரச்சுவுபகித சேதனத்தைச் சர்ப்ப, தண்டாதிகட்கு அதிஷ்டானமாக வொப்பினால் பத்துப்புருடர்கட்குத் தோன்றாநிற்கும் பத்துப் பதார்த்தங்களும் ஒவ்வொருவனுக்குந் தோன்றவேண்டும். நமது கொள்கையால், எவனுடைய விருத்திசேதனத்தில் எப்பதார்த்தங் கற்பிதமோ! அஃதவனுக்கே தோன்றும்; அந்நியனுக்கு இல்லை. இவ்வாற்றால் வாகியசர்ப்பாதிகட்கும், அவைகளின் ஞானங்கட்கும் விருத்தி உபகிதசாட்சியே அதிஷ்டானம்; சொப்பன பதார்த்தங்கட்கும், அவைகளின் ஞானங்கட்கும், அந்தக்கரணவுபகித சாட்சியே அதிஷ்டானம். இவ்வாறு சதசத்தின் விலட்சணமான அநிர்வசனீயவவித்தையின் பரிணாமமாகிய அநிர்வசனீய சர்ப்பாதிகள் அநிர்வசனீயக்கியாதி எனப்படும்.

(59) சங்கை—சதசத்தின் விலட்சணம் அநிர்வசனீயமென்னல்கூடாது. யாதினாலெனின்? யாது சத்திற்கு விலட்சணமோ! அஃதசத்தாம்; ஆகவே, சத்திற்குவிலட்சணம் அசத்தல்லவென்று சொல்லுதல் அசங்கதமாமாகலின் எனின்? உத்தரம்—சொரூபரகிதத்தைச் சத்விலட்சணமென்றும், * வித்தியமான சொரூபத்தை அசத்விலட்சணமென்றுஞ் சொல்லில் ஓர் பதார்த்தத்திலே சொரூபராகித்தியம்,சொரூபஸாகித்தியம் என்னும் இரண்டும்பொருந்தாது; ஆதலின் சதசத்விலட்சணசத்தத்திற்குப் பொருள் அங்ஙனமன்று.

(60) மற்றெங்ஙனமெனின்? காலத்திரயத்திலும் யாதொன்றிற்கு நாசமில்லையோ! அதுசத்து; யாதொன்றுபாதமாமோ? அது சத்விலட்சணம். சசசிருங்கம் வந்தியாபுத்திரன்போலச் சொரூபமில்லது அசத்து; அதனின் விலட்சணம் சொரூபமுடையதாம்; இவ்வாற்றால், பாதயோக்கிய சொரூபமுடையது சதசத்விலட்சண சத்தத்திற்குப் பொருளாம்; சத்விலட்சணசத்தத்திற்குப் பாதயோக்கியமென்று பொருள்; சொரூபமுடையது என்னும் இவ்வளவு சத்தத்திற்கு அசத்விலட்சண மென்று பொருள்; ஆகலின், சதசத்விலட்சணம் அநிர்வசனீயமென்னல் அசங்கதமாகாமைகாண்க. இவ்வாற்றால், எங்கே பிரம [ஹ்ரு] ஞானமுண்டு! அங்கே அநிர்வசனீய பதார்த்தங்கண் முழுதும் உற்பத்தியாகின்றன. அந்நியசாஸ்திரங்களில் இரஜதத்தின் உற்பத்தி ஒப்பவில்லை. சத்கியாதிவாதி ஒருவர் ஒப்பினர்; அவர் மதத்தினும் அநிர்வசனீயக்கியாதி விலட்சணமாம்.

(61) இனி அத்தியாசவிலக்கணம்:—தனரபா † வாதிகாணத்திற்றனதவபாசம் அத்தியாசமாம். பாரமார்த்திகமாகவும், வியாவகாரிகமாகவும் இரஜதாபாவத்தின் அதிகரணமான சுத்தியில் இரஜதமும், அதன்ஞானமும் அநிர்வசனீயமாகத் தோன்றுகின்றமையின், இவ்வத்தியாச விலக்கணம் பொருந்துமாறுகாண்க; அல்லது, அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடையதினவபாசம் அத்தியாசமாம். அந்நியசாஸ்திரகாரர் ஒப்பியிருக்கும் அத்தியாசவிலக்கண மனைத்தினும் பாஷியகாரர் அருளிச்செய்திருக்கும் இவ்வத்தியாசவிலக்கணம் அசாதாரணமாம். வியாகரணரீதியால், அத்தியாசவவபாசபதங்கட்கு விடயமும் ஞானமும் வாச்சியமாம். ஆகலின், அர்த்தாத்தியாச, ஞானாத்தியாச பேதத்தால், அத்தியாசம் இருவகைத்து; அவற்றுள், அர்த்தாத்தியாசம் அநேக பிரகாரமாம். ஓரிடத்தில், கேவலம் சம்பந்தமாத்திரம் அத்தியாசமாம். ஓரிடத்தில், சம்பந்த விசிஷ்ட சம்பந்தி அத்தியாசமாம். ஓரிடத்தில், கேவலம் தருமம் அத்தியாசமாம். ஓரிடத்தில், தரும விசிஷ்ட தருமி அத்தியாசமாம். ஓரிடத்தில், அந்நியோந்நியாத்தியாசமாம். ஓரிடத்தில், அந்நியதராத்தியாசமாம். இவ்வந்நியதராத்தியாசமும் இருவகைத்து. ஒன்று ஆத்மாவில் அநாத்மாத்தியாசம், மற்றொன்று அநாத்மாவில் ஆத்மாத்தியாசமாம்; முறையே இவற்றைச் சொரூபாத்தியாசம், சம்ஸர்க்காத்தியாசமென்ப. யாதொரு பதார்த்தத்தின் சொரூபம் அநிர்வசனீயமாகத் தோன்றுமோ அதைச் சொரூபாத்தியாசமென்பர்; அது இப்பியில் வெள்ளிபோல;இவ்வாறு,

* வித்தியமானம்=இருப்பது. † அதிகரணம்=இடம்.

ஆத்மாவில் அகங்காரமுதலிய அநாத்மாக்கள் சொரூபாத்தியாசமாம். யாதொரு பதார்த்தத்தின் சொரூபம் வியாவகாரிகமாகத்தான், பாரமார்த்திக மாகத்தான் முன்பேயிருக்க அதனது சம்பந்தம் பிறிதொன்றனிடத்து அநிர் வசனீயமாகத்தோன்றுமோ! அதனைச் சம்சர்க்காத்தியாசமென்பர்; அஃதெ வ்வாறேனெனின்? முகத்துக்கும், கண்ணாடிக்கும் யாதொரு சம்பந்தமு மின்றாய் இரண்டும் வியாவகாரிகமாக இருக்கக் கண்ணாடியில் முகத்தின் சம்பந்தந் தோற்றுகின்றதால் அதில் அநிர்வசனீயமாக முகத்தின் சம்பந்த முண்டாயிருப்பதும், அப்படியே சிவப்பு நிறமுடையது புடவையென்னுந் தோற்றரவால், சிவப்பு நிறமுடைய பதார்த்தத்தின் தாதாத்மியசம்பந்தம் புடவையில் உண்டாயிருக்கின்றது. சிவப்புநிறமுடையது குசும்பாத்திரவிய மாகலின், சிவப்பு நிறத்தின் தாதாத்மியம் குசும்பாத்திரவியத்திலுண்டு, புட வையில் இல்லை; சிவப்புநிறமுடைய குசும்பாத்திரவியமும், புடவையும் வியா வகாரிகம்; குசும்பாத்திரவியத்திலுள்ள சிவப்பு நிறமுடையதின் தாதாத்மிய சம்பந்தம் அநிர்வசனீயமாகப் புடவையிலுண்டாயிருப்பதும், அப்படியே சிவப்புப் படிகமென்னுந் தோற்றரவால், புஷ்பத்திலிருக்கும் சிவப்பு நிறத் தின் தாதாத்மிய சம்பந்தம் அஃதில்லாத ஸ்படிகத்தில் அநிர்வசனீயமாக வுண்டாயிருப்பதுங் காண்க.

இவ்வாறு, அநேகவிடங்களில் சம்பந்திகள் வியாவகாரிகமாக இருக்க அவைகளின் சம்பந்தங்களும், சம்பந்தஞானங்களும் அநிர்வசனீயமாக வுண் டாகின்றன. ஆத்மத்தன்மை சேதனத்தின்கண் உண்டு; அது அகங்காரத்திற் றோற்றுகின்றதால் ஆத்மசேதனத்தின் தாதாத்மியசம்பந்தம் அநிர்வசனீய மாக வகங்காரத்தி லுண்டா யிருக்கின்றது; ஆதலால், சேதனம் கற்பித மன்று; மற்றியாது கற்பிதமெனின்? அகங்காரத்தில் சேதனத்தின் தாதாத் மிய சம்பந்தங் கற்பிதமாம். இவ்வாறு, எங்கே பாரமார்த்திக பதார்த்த மில் லாதிருந்து தோற்றரவாமோ! அங்கே வியாவகாரிக பதார்த்தத்தில் பாரமா ர்த்திக பதார்த்தத்தின் சம்பந்தமும், சம்பந்தஞானமும் அநிர்வசனீயமாகவே யுண்டாகின்றன. வியாவகாரிக பதார்த்தம் இல்லாதிருந்து எங்கே தோற்ற ரவாமோ! அங்கே சம்பந்தியும், சம்பந்தியின் ஞானமும் அநிர்வசனீயமாக வேறே யுண்டாகின்றன.

ஓரிடத்தில் சம்பந்தமாத்திரமும், சம்பந்தமாத்திரத்தின் ஞானமும் அநிர் வசனீயமாக உண்டாகின்றன. சகல வதிஷ்டானங்களினும் அத்தியாசத் தின் விஷமசத்தை அநிர்வசனீயசத்தையே. எங்கே அநாத்மாவில் ஆத்மா வின் அத்தியாசமுண்டாமோ! அங்கேயும், அதிஷ்டானமாகிய அநாத்மா வியாவகாரிகம். ஆத்மா அத்தியஸ்தமன்று, ஆத்மாவின் சம்பந்தம் அநாத்மா வில் அத்தியஸ்தமாம்; ஆகலின், அஃதநிர்வசனீயமாம். யாதொன்றனிடத்து ஆதாரத்தன்மை தோற்றுமோ! அஃததிஷ்டானமெனப்படும். அவ்வாதாரத் தன்மை பரமார்த்தமாமேல் ஆகுக; அல்லது, ஆரோபிதமாமேல் ஆகுக. பர மார்த்தமாக ஆதாரமிருக்கில் அஃததிஷ்டானமாம் என்னும் ஆக்கிரகம் இத் தப்பிரசங்கத்தில் இல்லை. என்னை? ஆத்மாவில் அநாத்மாத்தியாசம் எப் படியோ! அப்படி அநாத்மாவில் ஆத்மாத்தியாசம் உண்டு. அநாத்மாவில்

பரமார்த்தமாக ஆத்மாவின் ஆதாரத்தன்மை இல்லை; ஆரோபித ஆதாரத் தன்மையே உண்டு. ஆகலால், ஆதாரமாத்திரத்தை இப்பிரசங்கத்தில் அதிஷ்டானமென்றனர். எங்கே அநாத்மாவில் ஆத்மாத்தியாசமுண்டு! அங்கே அதிஷ்டானம் அநாத்மாவாம்; அது வியாவகாரிகசத்தையும், ஆத்மா பாரமார்த்திக சத்தையும் உடையனவாகலின் அதிஷ்டானத்தின் விஷமசத்தையுடையதின் அவபாசமே அத்தியாச விலக்கணமாதல் காண்க.

(62) அத்தியஸ்தத்திற்குப் பாமார்த்தசத்தை கூறினதற்குத் தாற்பரியம்:—சுத்தபதார்த்தத்தினும் விசிட்டம் பின்னமாம்; ஆகலின் அநாத்மாவில் ஆத்மாவின் சம்பந்தத்தின் அத்தியாசஞ் சொன்னோம்; அங்கே சம்பந்த விசிட்டஆத்மாவுக்கே அத்தியாசமாம்; சொரூபமாக ஆத்மா சத்தியமாகலின், அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை சொரூபதிருஷ்டியாற் கூறினர். அத்தியஸ்தங்கற்பிதமா மாகலின், அநாத்மசம்பந்தவிசிட்டம் கற்பிதமாயினும் சுத்தங்கற்பிதமாகாது; என்னை? சுத்தத்துக்கு விசிட்டம் பின்னமாகலின், விசிட்டத்தின் கற்பிதத்தன்மை சுத்தத்திலுண்டாகாது. கேவலம் ஆன்மசம்பந்தத்திற்கு அத்தியாசஞ்சொல்வதினும் சம்பந்தவிசிட்ட வான்மாவுக்கு அத்தியாசஞ்சொல்லுதலும், அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை சொல்லுதலுமே சிரேஷ்டமாம். எதனாலெனின்? கேவலம் சம்பந்தத்திற்கு அத்தியாசஞ் சொல்லில் அதிஷ்டானத்திற்கு ஆரோபிதத்தினும் விஷமசத்தைகூடாது. சேதனசம்பந்தத்தினதிஷ்டானமாகிய அந்தக்கரணமும், கடாதியும் வியாவகாரிகம்; அவைகளில் சேதனத்தின் சம்பந்தமும் வியாவகாரிகம், பிராதிபாசிகமன்று. சேதனத்தின் சம்பந்தம் பிராதிபாசிகமாயேல், பிரமஞானததாலல்லாமல் பாதமாகவேண்டும்; பாதமாகாமையின் ஆன்ம சம்பந்தமும், அதிஷ்டானஅநாத்மாக்களும் வியாவகாரிகசத்தையாம்; ஆகவே விஷமசத்தையாகாமையின் அத்தியாசவிலக்கணங்கூடாது. ஆகையால், சம்பந்தவிசிட்ட வான்மா அநாத்மாவில் அத்தியாசமாம். விசேஷியபாகம் பாரமார்த்திக சத்தையாகலின், விசிட்டம் பரமார்த்தசத்தையும், அதிஷ்டானம் வியாவகாரிக சத்தையுமாய் இரண்டும் விஷமசத்தையாகலின், அத்தியாசவிலக்கணங் கூடுமென்பது எங்கே பிரம [ஹ்ரூ°] ஞானமுண்டோ! அங்கே சகல அநிர்வசனீய பதார்த்தங்களும் உற்பத்தியாம்.

(63) ஓரிடத்தில் சம்பந்தியின் உற்பத்தியுண்டு; அது சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தியாம். இரஜதத்தில் சுத்தியிலிருக்குந் தாதாத்மியசம்பந்தத்தின் உற்பத்தியாம். சுத்தியிலிருக்கும் நன் தாதாத்மியம் இரஜதத்தில் அந்நியதாக்கியாதியன்று; அப்படியே சுத்தியில் முன்னேயுள்ளதென்னுந் தன்மையாகிய தருமம் உண்டு; அதன் அநிர்வசனீயசம்பந்தம் இரஜதத்தில் உற்பத்தியாம்; அதுவும் அந்நியதாக்கியாதியன்று; இவ்வாறுால் அந்நியோந்நியாத்தியாசத்திற்கும் இது உதாரணம், சம்பந்தாத்தியாசத்திற்கும் இது உதாரணம். சம்பந்தி அத்தியாசத்திற்கும் இது உதாரணம். அநிர்வசனீயவத்துவின்றோற்றரவை ஞானாத்தியாசமென்பர். ஞானத்தின் அநிர்வசனீயவிஷயத்தை அர்த்தாத்தியாசமென்பர். ஆதலால் ஞானாத்தியாசம், அர்த்தாத்தியா

சங்கட்கும் இது உதாரணமாம். சுத்தியில் இரஜதத்வ தருமவிசிட்ட இரஜதத்தின் அத்தியாசம் உண்டு; ஆதலால், தருமி அத்தியாசத்திற்கும் இது உதாரணம். எங்கே அந்நியோந்நியாத்தியாசம் உண்டு! அங்கே இரண்டும் பரஸ்பரம்சொரூபமாக வத்தியாசமாகா. மற்றெப்படியெனின்? ஆரோபிதம் சொரூபமாகவத்தியாசமாம். சத்தியவஸ்துவின் தருமம், அல்லது சம்பந்தம் அத்தியாசமாம். சம்பந்தாத்தியாசமும் இருவகைத்தாம். ஓரிடத்தில் தருமத்தின் சம்பந்த அத்தியாசமாம்; அது சொல்லிய உதாரணத்தில் சுத்தியிலிருக்கும் இதுவென்னுந் தன்மைரூபமான தருமத்தின்சம்பந்தம் இரஜதத்திலத்தியாசமாவதாம். சிவப்புப்புடவை என்புழி, குசும்பாவிலிருக்குஞ் சிவப்புநிறமாகிய தருமத்தின் சம்பந்தவத்தியாசம் புடவையிலுண்டு. அந்தக்கரணததிற்கு ஆன்மாவில சொரூபமாக வத்தியாசமுண்டு. அந்தக்கரணத்தில் ஆன்மாவுக்குச் சொரூபமாக அததியாசம் இல்லை; பின்னை எப்படியெனின்? ஆன்மசம்பந்தம் அத்தியாசமாமாகலின், ஆன்மாவிற்குச் சம்சர்க்காத்தியாசமுண்டு. ஞானசொரூபம் ஆன்மாவாம்; அந்தக்கரணமன்று. ஞானத்தின் சம்பந்தம் அந்தக்கரணத்திற் றோன்றுகின்றது. ஆகலின் ஆன்மாவின் சம்பந்தாத்தியாசம் அந்தக்கரணத்திலுண்டு. அப்படியே கடம் விளங்குகிறது, படம் விளங்குகிறது என்றிவ்வாறு ஸ்புரணசம்பந்தம் சர்வ பதார்த்தங்களிலுந் தோன்றுகின்றதாகலின், நிகிலபதார்த்தங்களிலும் ஆன்மசம்பந்தத்தினத்தியாசமுண்டு. ஆன்மாவில் குருடு முதலிய இந்திரியதருமந் தோன்றுகின்றதாகலின், குருடு முதலிய தருமங்களின் அத்தியாசம் ஆன்மாவிலுண்டு. ஆன்மாவில் இந்திரியங்களின் தாதாத்மிய வத்தியாசமில்லை. என்னை? நான் குருடனென்று தோற்றரவாகின்றதல்லாமல் நான் நேத்திரமென்னுந் தோற்றரவாதலில்லை. ஆதலால், நேத்திரதருமமாகிய குருட்டுத்தன்மையின் அத்தியாசம் ஆன்மாவிலுண்டு; நேத்திரத்தின் அத்தியாசம் இல்லை; இது தருமாத்தியாசத்திற்கு உதாரணம். நேத்திர முதலிய நிகிலப்பிரபஞ்சத்தின் அத்தியாசமும், ஆன்மாவிலுணடெனினும், பிரமசேதனத்தில் சர்வப்பிரபஞ்சத்தின் அததியாசமும் உண்டல்லாமல் துவம்பதார்த்தத்தில் நிகிலப்பிரபஞ்சத்தின் அத்தியாசம் இல்லை. ஒரே பதார்த்தத்தின் ஓர் தருமவிசிட்டத்தின் அத்தியாசம் உண்டாகிறதேயன்றி மற்றோர் தருமவிசிட்டத்தின் அத்தியாசம் உண்டாகிறதில்லை. அவித்தைக்கு இப்படிப்பட்ட வற்புத மகிமையுண்டு; அஃதெங்ஙனம்? பிராமணத்தன்மை முதலிய தருமவிசிட்டமாகிய சரீரத்தின் தாதாத்மியவத்தியாசம் ஆன்மாவிலுண்டாயிருக்கிறதல்லாமல் சரீரத்தன்மை விசிட்ட சரீரத்தின் அத்தியாசம் உண்டாகவில்லை; இதனால், விவேகியும் நான் பிராமணன், நான் மநுடனென்று விவகரிக்கின்றனன்; நான் சரீரமென்று விவகரிக்கிலன். அவித்தைக்கு இப்படிப்பட்ட வற்புதமகிமை யிருத்தலால், ஆன்மாவில் இந்திரியங்களின் அத்தியாசமின்றிக் குருட்டுத்தன்மை முதலிய தருமாத்தியாசம் பொருந்துகின்றது; இது தருமாத்தியாசத்திற்கு உதாரணம். யாது அந்நியாசிரிதமாக விருக்குமோ! சுதந்தரமாக விராதோ! அதைத்தருமமென்பர்; ஆதலால், சம்பந்தமுந் தருமமே; அதன் அத்தியாசமும்

தருமாத்தியாசமேயாம். சொல்லியவாற்றால், அதிஷ்டானத்தினும் * விஷமசத்தையுடையதின் † அவபாசம் அத்தியாசமெனவும், அல்லது தனது அபாவாதிகரணத்திற் றனதவபாசம் அத்தியாசமெனவும் அத்தியாசவிலக்கணம் இருவகைப்படுதல் காண்க. (27)

(64) [தாஷ்டாந்தத்தில் அத்தியாசவிலக்கணங் கூறுகின்றார்.]

இப்படிப் போலநாம ரூபங்க ளிரண்டு மின்றி
ஒப்பமா யிரண்டற் றொன்று யுணர்வொளி நிறைவாய் நிற்கும்
அப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாம்
செப்புகற் பனையி னாலே செனித்தவென் றறிந்து கொள்ளே (28)

இ - ள். இப்படிப்போல=மேற்சொல்லிய சர்ப்ப முதலியவை தமதபாவாதிகரணங்களான இரச்சு முதலியவற்றில் அவபாசமாவனபோல, நாமரூபங்கள் இரண்டும் இன்றி=பேர் நாமமும், ஒருருவமும் தன்கணில்லாமல், ஒப்பம் ஆய்=சமமாயும், இரண்டு அற்று ஒன்று ஆய்=துவிதமற்றேகமாயும், உணர்வு ஒளி நிறைவு ஆய்=ஞானமாயும், ஸ்புரணமாயும், பூரணமாயும், நிற்கும்=(தான் நின்றவண்ணமே) நிற்கின்ற, அப்பிரமத்தில் தமதபாவாதிகரணமானபிரமத்தில், ஐம்பூதவிகாரம் எல்லாம்=பஞ்சபூத முதலிய ‡ விகாரங்களனைத்தும், தோன்றும்=அவபாசமாம். [ஆயின், இரச்சுவில் சர்ப்பாத்தியாசத்திற்கு இரச்சுவவச்சின்ன சேதனசிரிதவவித்தை, அல்லது இரச்சுவின் இதுவென்னும் ஆகாரமான அந்தக்கரணவிருத்தியவச்சின்னசேதனவாசிரிதவவித்தை உபாதானகாரணமும், இரச்சுவின் விசேஷரூப அப்பிரதீதி நிமித்தகாரணமுமாயிருப்பனபோல ஜகத்தத்தியாசத்திற்கு உபாதானநிமித்தம் யாவையோவெனின்?] செப்புகற்பனையினாலே=இனிக்கூறப்படும் கற்பனைகளாலே, செனித்த என்று=உண்டாயினவென்று, அறிந்துகொள்=தெரிந்துகொள்வாய் எ-று.

"கற்பனைகள்" என்றது அவ்வியத்தம், ஈசுரஞானமுதலியவை; இனிவருஞ் செய்யுட்களால் இவை வெளியாம். இவைகளைக்கற்பனை என்றது,

"அவித்தைவிச்சைகடாமோது மாத்திரயா முலகுறை வழக்கத்துள்ளன வுண்மையிலில்லை"—

என்னுஞ் சுருதியாலென்க; அல்லது, கற்பனைக்குக் காரணங்களை ஆகுபெயரால் கற்பனையென்றாரெனினும் ஆம்.

"நாம ரூபங்க ளிரண்டு மின்றி, ஒப்பமா யிரண்டற்றொன்று யுணர்வொளி நிறைவாய் நிற்கும்"—

என்று இவ்வளவு விசேடணங்கூறினது சகத்தின் அபாவாதிகரணம் பிரமமென விளக்குதற்பொருட்டாமென்க.

* விஷமசத்தை=சமமல்லாத சத்தை.
† அவபாசம்=தோற்றரவு. ‡ விகாரம்=காரியம்.

அங்ஙனமாயின் அதற்கு,

"நாம ரூபங்க ளிரண்டு மின்றி, ஒப்பமாய்"—

எனும் இத்துணை விசேடணமே போதுமாகலான், ஏனைய விசேடணங்கள் எற்றிற்குக் கூறினரோவெனின்? சாங்கியமதத்தில் பிரகிருதிக்கு முக்குணமும் சமமாகும்போது "பிரதானம்" எ-ம், "அவ்வியாகிருதம்" எ-ம், அதுவே "சகத்காரணம்" எ-ம் கூறியிருப்பதால் அதில் அதிவியாப்தி நீக்குதற்பொருட்டு,

"நாம ரூபங்க ளிரண்டு மின்றி ஒப்பமாய்"—

என்றொழியாது, "இரண்டற்றொன்றாய்" எ-ம், ஆகாசம் இரண்டற்றொன்றாயிருத்தலினானும், நியாயமதத்தில் அதனை "நித்தியம்" என்றொப்பி யிருத்தலினானும் அதில அதிவியாப்தி நீக்குதற்பொருட்டு, "உணர்வொளிநிறைவாய்" எனவுங் கூறினரென்க, ஞானம் அந்தக்கரணத்திலண்ணும், ஸ்புரணம் கடாதிக்கண்ணும் நிகழாநிற்கும்; இதனை 63 வது பிரசங்கத்திற்காண்க. பிரமம் பாரமார்த்திகசத்தை யுடையதாகலானும், ஆகாசாதிகள் வியாவகாரிகசத்தை யுடையனவாகலானும், அதிஷ்டானத்தினும் விஷம சத்தையுடையதனவபாசம் அத்தியாசமென்னும் இலக்கணமும் பொருந்து மாறறிக. (28)

[முன்தோகுத்துக் கூறியதை வகுத்துக் கூறுகின்றார்.]

அதுதானெப் படியென் றக்கா லநாதியாஞ் சீவ ரெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருநதுமவ் வியத்தந் தன்னில்
இதுகால தத்து வப்பே ரீசனுட் பார்வை யாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே. (29)

இ-ள். அது தான்=(அத்தியாச ரூபமான) அச்சிருஷ்டிக்கிரமந்தான், எப்படி என்றக்கால்=எங்ஙனம் உண்டாயின வென்று கேட்பாயாகின், அநாதி ஆம் சீவர் எல்லாம்=அநாதியாயுள்ள சீவகோடிகளியாவும் பொது ஆன சுழுத்திபோல=(சகலர்க்கும்) சாதாரண வநுபவமான சுழுத்தியிற்போல, அவ்வியத்தந்தன்னில்=(சிருஷ்டிக்கு முன்னே அநாதியாய், சதசத் விலட்சணபாவ பதார்த்தமாயுள்ள) மாயையின் கண்ணே, பொருந்தும்=(கருமவாசனைகளோடுகூட) விலீனமாயிருக்கும், இது=இம்மாயையானது, காலதத்துவப்பேர்=காலதத்துவமென்னும் நாமமுடைய, ஈசன் உட்பார்வையாலே=(சீவர்களின் கர்மபரிபாகவசத்தா லெழுவதான) ஈசுரனுடைய சிருஷ்டிபரியாலோசன ரூபமாகிய திருஷ்டியினாலே, முதுமூல சுபாவம் விட்டு=முன்னிருந்த (சாமியாவஸ்தாரூபமான) காரணத்தன்மையையொழித்து, முக்குணம் வியத்தம் ஆம்=(குலாலாதிகளின் சகாயத்தி னால் மண்முன்னிற் கடசத்திபோல) மூவகைக் குணங்களாகப் பிரகாசமாம்: —()

சீவத்துவ, ஈசுரத்துவங்கள் அஞ்ஞானுதீனமாதலால் அவ்வஞ்ஞானத்திற்கு அநாதிபாவ ரூபத்தன்மை சித்தியாமல் சீவேசுரர்களுக்குச் சித்தியாதாகவின், சீவர்க்கு அநாதியென்னும் விசேடணந் தந்ததால் மாயைக்கும் அது தந்துவிரித்தாம். அவ்வியத்தம், அஞ்ஞானம், அவித்தை, பிரகிருதி, மாயை, சத்தி என்பன ஒரு பொருட் சொற்கள். அவித்தை, மாயை என்பவற்றிற்கு ஏகதேசிகள் பேதங்கூறுவர். நையாயிகர் முதலியோர், ஞானுபாவத்தையே அஞ்ஞானமென்பர். சித்தாந்தத்தில் ஆவரண விக்ஷேபசத்திகளையுடையதாய், அநாதியாய், பாவ [ஸாவ] ரூபமாயுள்ள பதார்த்தம் அஞ்ஞானம்.

(65) நாமரூபங்களாக வெளிப்படாமையின் அவ்வியத்தம், வித்தையினுல் நாசமாதலின் அவித்தை, பிரபஞ்சத்திற்குபாதானமாகலின் பிரகிருதி, துர்க்கடத்தையும் சம்பாதித்தலின் மாயை, சுதந்தரத் தன்மையின் மையின் சத்தி என்பர். அஞ்ஞானத்திற்கு அநாதிபாவரூபத்தன்மை இரண்டாம்படலத்தில் மாயாலட்சணங் கூறுமிடத்து விரித்துரைக்கப்படும்; ஆண்டுக்காண்க. "சுழுத்திபோலப் பொருந்தும்" என்றதால், கர்மவாசனைகளோடு கூட என விரித்தாம். சர்வப்பிரபஞ்சத்தையும் நாசம்பண்ணுவதால் ஈசுரனுக்கு, "காலதத்துவம்" என்று பெயர்; இதனை கீதையிலும், விஷ்ணுசகஸ்திர நாமபாஷ்யத்துங் காண்க. "ஈசனுட்பார்வையால்." எ-கு, உ-ம் பிரமகீதை.

"காலமுங் கன்மந் தானும் பரிபாக மான வாறே
ஞாலமுண் டாக நல்ல குணத்தினைக் கலந்து நிற்கும்
பாலதொன் றில்லா விந்தச் சத்திமான் படைத்தற் காக
வேலையே யெல்லா மாயோ மென்றுகொண் டிசைந்து பார்த்
தான்"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (29)

(66) [முக்குணங்களின் றுருவமுதலியவற்றைக் கூறுகின்றார்.]

உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாகும்
சத்துவ குணத்தி னேடு ரசோகுணந் தமோகு ணந்தான்
சுத்தமோ டூமுக்கி ருட்டாச் சொல்லுமுக் குணமு மூன்றாய்
ஒத்துள வேனுந் தம்முளொருகுண மதிக மாமே (30)

இ-ள். வெளி.

"சத்துவ குணத்தி னேடு ரசோகுணந் தமோகு ணந்தான்"—எ-கு, உ-ம் பகவற்கீதை,

"சத்து வம்ரச சோடு தமசென
வுய்த்து வந்த பெயரை யுடையன
வெத்து வந்துவ முந்தரு கிற்பன
மெத்து வந்தவற் றின்செயல் கேள்"—என வருதம்.

" உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாதும் "—
எ-கு, உ-ம் பகவற்கீதை,

" பற்று மாசின்மை யாற்பளிங் கொப்பது
வுற்ற நல்லறி வானதுண் டாக்குவ
தெற்று மின்பமல் லாற்றுன்ப மென்பது
சற்று மில்லது சத்துவ மாவதே "—எ-ம்,

" ஓது ராக வுருவ முடையது
தாது கற்புரை யுண்ணிறஞ் சார்ந்தது
பேது செய்வினை யோடறி வைப்பின்னற்
கேது வாய திராசத மென்பதே "—எ-ம்,

" குறியு நீல மயக்கமுங் கோதிலா
நெறிக டம்மை யிகழ்தலு நித்திரை
செறித லானது மற்றிவற் றுற்றிண்ணென்
றறிவை மாய்க்கு மதுதம மாவதே "—எ-ம் வரும்

" சுத்தமோ டழுக்க நட்டாச் சொல்லுமக் குணமும் " எ-கு, உ-ம்
ஈசுரகீதை,

" ஒத்தமுக் குணங்களாம் பகுதி யுத்தமஞ்
சத்துவ ஞானமாந் தமமஞ் ஞானமாம்
மத்திமங் கலப்பதா மற்றிம் மூன்றையும்
புத்தியின் விகாரமே புலப்ப டுத்துமால் "—எ-ம்,

" தம்முளொரு குணமதிகமாம் "—எ-கு, உ-ம் பகவற்கீதை,

" வாழுஞ் சத்துவ மற்றைய விரண்டையு மறைத்துத்
தாழு மற்றைய விரண்டுமத் தமோகுணந் தழைப்பின்
வீழுஞ் சத்துவந் தமங்களவ் விரசதம் விளைவி
னூழின் மற்றிவை யிரண்டுந்தாழ்ந் தொன்றாமிக் குளதாம் "—
என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (30)

(67) [சகத்தின் உற்பத்திப்பிரதிபாதனத்தில் வேதத்திற் கபிப்பிராய
மின்றேனும் பலவகை அறிவித்தற்பொருட்டு இடையே மற்றொருவகைச்
சிருட்டி கூறுகின்றார்.]

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறுச் சொல்வர்
மருவுமவ் வியத்தந் தானே மகதத்வ மாகு மந்த
அருண்மக தத்து வந்தா னகங்கார மாகு மென்றும்
கருவகங் கார மூன்றுக் காட்டிய குணமா மென்றும். (31)

இ - ள். இது ஒரு வழி ஆம்=(உபநிடதங்களிற் சொல்லுஞ் சகத்துற்பத்திக்கிரமங்களுள்ளே,) இது ஒருகிரமமாம்; இதை—வேறு ஒருவழியாச் சொல்வர்=மற்றொரு கிரமமாகவும் பெரியோர்சொல்லுவர், மருவும் அவ்வியத்தந் தானே=(கர்மவாசனைகளோடு சீவர்கள்) விலீனமாயிருக்கும் அவ்வியத்தமே, மகதத்துவம் ஆகும் (என்றும்)=(சமஷ்டி புத்திரூபமான) மகதத்துவமாகத் தோன்றுமென்றும், அருள் அந்த மகதத்துவந்தான்=சொல்லிய அந்த மகதத்துவமே, அகங்காரம் ஆகும் என்றும்=அகங்கார தத்துவமாகத் தோன்றுமென்றும், கரு அகங்காரம்=காரணமான அவ்வகங்காரதத்துவமானது, மூன்றாக்காட்டிய குணம் ஆம் என்றும்=மூவகையாக முன்னே அறிவித்த சத்துவாதிகுண ரூபங்களாமென்றும். எ-று.

"காட்டிய குணமாமென்றும, ஒருவழி வேறாச்சொல்வர்"—என ஒட்டுக

இதனை,

"சத்துவ குணத்திற் றோன்றுந் தயங்குமுட் கரண நான்கும்
புத்தியிந் திரியங்க ளைந்தும போந்துதித் திடு மிராச
தத்தில்வாக் காதி யைந்தும் தகும்பிரா ணாதி யைந்து
மத்தமோ குணத்திற் றோன்று மகல்விசும் பாதி பூதம்"—

"அப்பெரும் பூதம் பஞ்சீ கரித்துல காகி நிற்கும்"—

என வேதாந்த சூடாமணியிற் கூறியபடி விரித்துக்காண்க.

(68) இன்னும் சாந்தோக்கியத்தில் சத்துரூப பரமாத்மாவினின்றும் அக்கினி, சலம், பிருதிவி என்னும் இவை கிரமமாக உண்டாயிற்றென்றும், தைத்திரியத்தில், ஆகாசம், வாயு, அக்கினி, சலம், பிருதிவி என்னும் இக்கிரமத்தால் பஞ்சபூதங்கள் உண்டாயினவென்றும், பிரிடதில் சர்வசகத்தையும் பரமேசுரர் சிருட்டித்தாரென்று முறைதெரிககாதும் உற்பத்தி கூறியிருக்கின்றது. வாஸ்தவமாகச சகத்திருந்தால் அதனது உற்பத்தி அநேக பிரகாரமாக வேதஞ்சொல்லாது. அநேக பிரகாரமாகச சொல்லியிருப்பதாற் சகத்தினுற்பத்திப் பிரதிபாதனத்தில் வேதத்திற கபிப்பிராய மின்றாம்; பின்னையாது! அதனபிப்பிராயம் என்னில்? அத்வைதப் பிரமத்தை யறிவித்தற்பொருட்டுச் சகத்தை நிட்டேதஞ் செய்வதேயாம்; ஆகலின், மித்தையான சகத்தை யாதானும் ஒருவழியாக ஆரோபஞ் செய்ததென்க. எதுபோலெனின்? விநோதத்தினிமித்தம் மேலே கிளப்புதற்கு வாணமருந்தை யுள்வைத்துத் தாருவினால் யானையுருவமைப்பவன் அதன் செவி, வால் முதலிய அவயவங் கோணிப் போமாயின், அவற்றை ஒழுங்குறச் செய்யவேண்டு மென்று முயற்சியாதது போலவென்க.

(69) சூத்திரகாரரும், பாஷியகாரரும் இரண்டாம் அத்தியாயத்தில் உற்பத்திகூறுஞ் சுருதிவாக்கியங்களின் விரோதங்களைப்போக்கி தைத்திரிய

சுருதி கூறியபடி ஒரே வழியாகச் சகத்துற்பத்தியில் சர்வ உபநிடதங்கட்கும் அபிப்பிராய முளதெனவருளிச்செய்தது எற்றிற்கோவெனின்? உற்பத்தி வாக்கியங்கட்குப் பூருவஞ்சொன்ன அபிப்பிராயமறியாத ,மந்த சிஞ்ஞாசையுடையோர்க்கு உபநிடதங்களில் நாநாவிதமாகச் சகத்துற்பத்தி கூறியிருக்கின்றதைப் பார்த்துப் பிராந்தியுளதா மாகலின், அதை நிவிர்த்தித்தற்பொருட்டும், பிரம விசாரத்தால் யதார்த்த ஞானம் உதியாதோர்க்கு லயசிந்தன நிமித்தமும் அங்ஙனம் அருளிச்செய்த தென்க. சகத்துற்பத்தி நியமமின்றென்பதை,

"வான்முதலா மண்முதலா நீர்முதலாந் தீமுதலா மற்றைவாயுத், தான்முதலா மிப்படியே சிருட்டிதொறு மோரொன்று தலைமையாகும், யான்முதலோ ரயன்சிருட்டி சிலைடையா வுனக்குரைத்தேனிந்தவாற்றான், மேன்முதலா நியமமிதற் கொன்றாக விலதுபல விதமாய்த்தோன்றும்"—

என்னும் வாசிட்டத்தானும் அறிக. (31)

[தான் எடுத்துக் கூறப்புகுந்த சிருட்டிக்கிரமத்தை இனி விவரணஞ் செய்கின்றார்.]

இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்றும்,
முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகும்
அக்குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றோதோ னிமித்தகா ரணனு மீசன். (32)

இ-ள். இக்குணங்களிலே=மேலேகூறிய சத்துவாதி குணங்களில், விண் போன்று இருக்கும்=ஆகசப்போல (அசங்கமாய், வியாபகமாய் சூட்சுமமா) யிருக்கும், சிற் சாயை தோன்றும்=சித்தின் பிரதிபிம்பம் உண்டாகும், முக்குணங்களினும்—தூய்து ஆம் முதற்குணம்=சுத்தமான சத்துவ குணம், மாயை ஆகும்=மாயையென்று சொல்லப்படும், அக்குணப் பிரமச் சாயை=அந்தச் சுத்தசத்துவப் பிரதான மாயையிற் பிரதிபலிக்கும்பிரமத்தின் பிரதிபிம்பமானது, அந்தரியாமி= அந்தரியாமியாம், மாயை எக்குணங்களும் பற்றோதோன்=(அவனே தனக்குச் சரீரமான) மாயையிலும், அதன் பரிணமமாகிய சர்வஞ்ஞத்வாதி கல்யாண குணங்களுள்ளே எந்தக்குணங்களிலும அகந்தை, மமதை ரூப அபிமானமுறாத, நிமித்தகாரணன் ஆம் ஈசன்=நிமித்தகாரணனாகிய ஈசனும். எ-று.

"இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்றும்" —

எனக்கூறியதால், தமோகுணத்திற் பிரதிபிம்பம் எதென்று ஆசங்கை வரில், அங்ஙனங்கூறியது சத்திரிரியாயத்தால் என்க; அல்லது, அதன்காரியமான பஞ்சதன்மாத்திரையின் சத்துவாமச சமஷ்டியினுற்றோன்றும் அந்தக்

கரணத்திலும், அதன்காரியமான ஞானாகாரவிருத்தியிலுந் தோன்றும் பிரதிபிம்பத்தை அங்ஙனங் கூறியதாம் என்க. இராசத தாமதகுணங்களால் தான் அமிழ்த்தப்படாமல், அவைகளையமிழ்த்தி மேலிட்டிருப்பது சுத்தசத்துவமாம். இரசோகுண தமோகுணங்களால் அமிழ்த்தப்பட்ட சத்துவம் மலினசத்துவமெனப்படும். சகல சீவர்கட்குள்ளுமிருந்து பிரேரணைசெய்வதால், "அந்தரியாமி". "மாயை எக்குணங்களும் பற்றதோன்" எ-து, இவர்கு உபாதியானமாயை "அமோககாரணியாகலின்;" இதனானே ஈசுரன் நித்தியமுத்தன் என்பதும், "நிமித்த காரணனும் ஈசன்" என்றதால், பிரமம் அசங்கமாகலின் சகத்திற்குக் கேவலம் சத்தாஸ் பூர்த்தியைக் கொடுப்பது மாத்திரமாய் இருப்பதேயல்லது சக சிருஷ்டியாதி யாதொரு சம்பந்தமுடைத் தானதன்றென்பதும், சக சிருட்டியாதி செய்பவனும், பக்தாநுக்கிரகார்த்தம் ஆவிர்ப்பவிப்பவனும், சகலவிபூதிகளை யுடைத்தானவனும் காரணப்பிரமமென்னும் இவ்வீசுரனே என்பதும் பெறப்படுகின்றன. சுத்தசத்துவகுண சகிதமாயையும், மாயைக்கதிஷ்டான சேதனமும், மாயையின்கண் ஆபாசமும் மூன்றுங்கூடி ஈசுரனெனப்படும்; இவ்வீசுரனே சகத்துக்குக் காரணமாம்; காரணம் இருவகைத்து. ஒன்று உபாதான காரணம்; மற்றொன்று நிமித்தகாரணம். கடத்தின் சொரூபத்தில் மண்போல யாது காரியத்தின் சொரூபத்திற் பிரவேசமாமோ யாதின்றிக் காரியத்தின் ஸ்திதிகூடாதோ! அது உபாதான காரணமெனப்படும். யாது சொரூபத்திற பிரவேசமாகாமல் காரியத்திற்கு வேறாயிருந்து குலாலன்போலச் செய்கிறதோ! யாது நசித்ததால் காரியங்கெடாதோ! அது நிமித்தகாரணமெனப்படும். உலண்டுபோல், ஈசுரனுடைய சரீரமான சடமாகியமாயை சகத்துக் குபாதானகாரணம், சேதனபாகம் நிமித்தகாரணமென் றறிக. (32)

[இதுவுமது.]

ஈசனுக் கிதுசு ழுத்தி யிதுவே காரண சரீரம்
கோச மா நந்த மாகுங் குணமிரா சதம வித்தை
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க்கப் போது நாமமும் பிராஞ்ஞ னாமே. (33)

இ-ள். ஈசனுக்கு=ஈசுரனுக்கு, இது=இம்மாயையே, சுழுத்தி=சுழுத்தி யவத்தையாம்; இதுவே காரணசரீரம் கோசம் ஆநந்தம் ஆகும்=இதுவே காரணசரீரமும், ஆநந்தமய கோசமுமாகும், இராசதகுணம் அவித்தை=இரசோகுணம் அவித்தை (யென்று சொல்லப்படும்;), தேசறும் அவித்தைதோறும்=மலினசத்துவமான அவித்தைகடோறும், சிற்சாயை சீவகோடி=(பிரதிபிம்பித்துள்ள) சித்தின் பிரதிபிம்பங்களே சீவ கோடிகளாம், நாசம் ஆம் உயிர்க்கு=நாசமாகாநிற்கும் உயிர்களுக்கு, அப்போது=(காரிய சரீரங்களையடையாமல் அவித்தைமாத்திர வுபாதியுடைத்தாயிருக்கும்) அச்சமயத்தில், நாமமும்=பெயரும், பிராஞ்ஞன் ஆம்=பிராஞ்ஞனென்று சொல்லப்படும். எ-று.

(70) "தேசறு மவித்தை தோறும்" என, அவித்தைக்குப் பன்மைப் பொருடரும் இடைச்சொற் கொடுத்ததனால் அவித்தை அநந்தம்; அந்த அநந்த அவித்தைகளினால் அநந்த ஈசுரனும், அநந்த பிரமாண்டங்களுங் கற்பிதமா மென்றும், யாதொரு சீவனுக்கு ஞான முண்டாமோ! அவனது அஞ்ஞானமும், ஈசுரனும், பிரமாண்டமுமே நிவிர்த்தியாம், மற்றைச் சீவர்கட்குப் பந்த முண்டென்றுங் கூறுகின்ற வாசஸ்பதிமதமே இவ்வாசிரியர்க்கும் உடம்பா டென்றுமாலோ வெனின்?

(71 அதில் ஈசுரன், சீவனுடைய அஞ்ஞான கற்பிதமென்று சொல்லியிருக்கிறது; அது சுருதி, ஸ்மிருதி, புராணங்கட்கு விருத்தமாம்; அதுவேயன்றி, ஈசுரன் அநந்தம் என்பதும், தனித்தனி சீவரிடத்துச் சிருஷ்டிபேதஞ் சொல்லுவதும் விருத்தமாம். நாநாவாக அஞ்ஞானத்தை யொப்பி ஈசுவரனும், சிருட்டியும் ஒன்றென் றொப்புவதுங் கூடாதாதலால் இவர்க்கு அஃதுடம் பாடன்று.

(72) பின்னையாதோ! இவர் உடம்பாடெனின்? அஞ்ஞானம் ஒன்றே; அந்தகாரம்போல அம்ஸம் அநேகமாம். எவ் வந்தக்கரணத்தில் ஞானம் உண்டாமோ! அவ் வந்தக்கரணவச்சின்ன சேதனத்துள்ள அஞ்ஞானக்கூறு ஞானத்தால் நிவிர்த்தியாம்; அது நிவிர்த்தியாகப் பெற்றவனே முத்தனும். எவ்வந்தக்கரணத்தில் ஞானம் உண்டாகவில்லையோ! அவ் வந்தக்கரணத்தில் அஞ்ஞானக்கூறும் உண்டு; பந்தமும் உண்டு. இவ்வாறு, அஞ்ஞானம் ஒன்றென்னும்பட்சத்தில் பந்தமோட்சவியவகாரங் கூடுமாகலின், அஞ்ஞானம் ஒன்றென்னும் பட்சமே இவர்க்குடம்பாடாம்.

(73) அன்றியும், அஞ்ஞானம் சிவேசுர விபாகரகிதமான சுத்தப்பிரமத்தின் ஆசிரிதமாய் அசுசுத்தப் பிரமத்தைத் தானே * ஆச்சாதனம் பண்ணுகின்றது. எதுபோலெனில்? அந்தகாரமானது கிரகத்தையே ஆசிரித்துக் கொண்டு அககிரகத்தைத்தானே ஆச்சாதனம் பண்ணுவதுபோலென்க; இந்தப்பட்சத்தைச சுவாசிரய, சுவவிஷய பட்சமென்பர்; இதற்கு, சுத்தப் பிரமமே மாயைக்கு ஆசிரியம், சுத்தப் பிரமமே மாயைக்கு விஷயம் என்று பொருள். மாயை சுத்தப் பிரமத்தை மறைப்பதே அதனை விஷயம் பண்ணினதாம். சஞ்சேபசாரீரகம், விவரணம், வேதாந்தமுக்தாவலி, அத்வைதசித்தி, அத்வைத தீபிகை முதலிய கிரந்தகாரர் அஞ்ஞானம் சுவாசிரயம், சுவவிஷயம் என்னும்பட்சமே அங்கீகாரஞ்செய்திருக்கின்றனர். வாசஸ்பதியென்பவர், அஞ்ஞானம் சீவன் ஆசிரிதமாய்ப் பிரமத்தை விஷயம் பண்ணுகிறதென்று ஒப்பினர். எதனாலெனின்? நான் அஞ்ஞானி, பிரமத்தை யறிகின்றிலேன் என்னுந் தோற்றரவால் நான் என்னுஞ் சத்தத்துக்குப் பொருளான சீவன் அஞ்ஞானியென்பதால் அஞ்ஞானத்திற்கு ஆசிரயமாக விளங்குகின்றனன். பிரமத்தை யறிகின்றிலேன் என்பதால், அஞ்ஞானத்திற்கு விடயமாகப் பிரமந்தோற்றுகின்றது. இவ்வாற்றால், அஞ்ஞானம் சீவனாசிரிதமாய்ப் பிரமத்தை விடயம் பண்ணுகிறதென்பது வாசஸ்பதியினுடையமதம். சீவபாவம்

* ஆச்சாதனம்=மறைத்தல்.

அஞ்ஞானத்தின் காரியம்; அஞ்ஞானம் சுதந்தரமாக ஒருகாலும் இராதாதலால், நிராசிரய அஞ்ஞானத்தால் சீவபாவங்கூடாது. முன்னே ஏதேனும் ஒன்றனுசிரிதமாக அஞ்ஞானம் இருக்குமாகில், அப்போது அஞ்ஞானகாரியமாகச் சீவபாவம் உண்டாகும் சீவத்துவம்போல ஈசுரத்துவமும் அஞ்ஞானகாரியமா னாகலின், ஈசுரனுசிரிதமாகவும் அஞ்ஞானம் இன்றும்.பின்னே எதனது ஆசிரிதமாமெனின்? சுத்தப்பிரமத்தை ஆசிரிதமாய் அநாதியாம். சேதனமும், அஞ்ஞானமும் அநாதி; அவைகளின் சம்பந்தமும் அநாதி; சேதன அஞ்ஞானங்களின் அநாதிசம்பந்தத்தால் சீவபாவமும் ஈசுரபாவமும் அநாதியாம்; அங்ஙன மாயினும் சீவபாவமும், ஈசுரபாவமும் இரண்டும் அஞ்ஞானத்தின் அதீனமாம். ஆதலால், அஞ்ஞானத்தின் காரியமென்று சொல்லப்படும். சீவன் அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானரூப வாசிரயமென்னல் கூடாது: சுத்தப்பிரமமே அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானரூப வாசிரயமாம்; சுத்தப்பிரமமென்னும் அதிஷ்டானத்தினுசிரிதமாகிய அஞ்ஞானம் அந்தச் சுத்தப்பிரமத்தையே ஆச்சாதனஞ் செய்கிறது; அதன் பின்னர் நான் அஞ்ஞானியாயிருக்றேன் என்னும் இவ்வாற்றால், சீவன் அஞ்ஞானத்திற்கு அபிமானிரூப வாசிரயமாகின்றானென்பதும் இவர்க்கு உடம்பாடாமெனக்கொள்க. உற்பத்திக்கு ஆதியென்றுபெயர்; அஃதில்லாது அநாதி. "அநாதியாஞ் சீவரெல்லாம்" என்று, 29-ம் செய்யுளிற் கூறியிருத்தலின், அநாதிக்கு நாசங்கூடாதென்றுவரும் ஆசங்கையை, பிராகபாவத்திற்குப்போலச் சீவத்துவத்திற்கு ஞானோதயத்தால் புலிகண்டோன்போல நாசங்கூடுமென்று நிவிர்த்தித்தற்பொருட்டே "நாசமாம் உயிர்க்கு" என்றார். (33)

[இதுவுமது.]

அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா னந்த கோசம்
சுழுத்திகா ரணச ரீரஞ் சொன்ன திம்மட்டு மோக
முழுக்குணத் திரண்டால் வந்த மூலவா ரோபஞ் சொன்னோம்
வழுத்துசூக் குமவா ரோப வழியுநீ மொழியக் கேளாய். (34)

இ-ள். அழுக்கொடு பற்றும் சீவர்க்கு=மலின சத்துவமான அவித்தையையும், (அதன் காரியமான கிஞ்சிஞ்ஞத்துவ முதலிய ஈன குணங்களையும் யான் எனதென்று) விசுவசிக்குஞ் சீவர்கட்கு, அதுவே ஆனந்தகோசம்=அவ் வவித்தையே ஆநந்தமயகோசமாம், சுழுத்தி காரணசரீரம்=(அதுவே) சுழுத்தியவத்தையும், காரணசரீரமுமாம், இம்மட்டும் சொன்னது=இதுவரையிற் கூறியது, முழுமோக இரண்டுகுணத்தால் வந்த=முழுமோகமான சுத்தசத்துவம், மலினசத்துவம் என்னும்மாயை, அவித்தைகளாலுண்டான, மூல ஆரோபம் சொன்னோம்=காரண அத்தியாசத்தைக் கூறினோம். வழுத்து சூக்கும ஆரோபவழியும்=இனிக்கூறத்தக்கதான சூட்சுமப் பிரபஞ்சவத்தியாசக் கிரமத்தையும், மொழிய நீகேளாய்=கூற நீகேட்பாய். எ-று.

அவித்தையின்கண்ணே ஆவரணசத்தி உண்மையின், அது தமது நிசரூபமான கூடஸ்தசொரூபத்தை மறைத்துக்கோடலால் அவித்தையிலும்,

அதன்காரியமான கிஞ்சிஞ்ஞத்வாதிகளிலும் யான், எனதென்னுஞ் செருக்குச் சீவர்கட்குளவாகலின், "அழுக்கோடு பற்றுஞ் சீவாத்து" எ-ம், அவித்தை, மாயைகள் காரியப் பிரபஞ்சத்திற்கு மூலமாகலானும், தமோகுணம் போற் பிரியாமையானும் "மோக முழுக்குணத் திரண்டால் வந்த" என்றுங் கூறினர். (34)

[இதுவுமது.]

ஏமமா யாவி னோதை யீசனா ரருளி னாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும். (35)

இ-ள். ஏமமாயாவினோதை ஈசனார்=(ஆவரணமின்மையின் சுத்தப்பிரமாஹமென்னும் அநுபூதியினால் எழுங் களிப்பினையும், மாயையினால் சகசிருட்டியாதி, திரிபுரசம்மாராதி, இராவணசம்மாராதி) லீலைகளையும் உடையனை ஈசுரனுடைய, பூமலி அருளினாலே=சிறப்புமிக்க தண்ணருளினாலே, உயிர்கட்கு எல்லாம்=(சேடகருமத்தோடு அவ்வியத்தத்திற் கிடந்த) சீவர்களுக்கெல்லாம், போகசாதனம் உண்டாக=போகசாதனமான (சூட்சும தேகங்கள்) உளவாதற் பொருட்டு, தாமதகுணம்=தமோகுணப் பிரதான மாயையானது, வீமம் ஆம் மூடல் என்றும்=கனமான ஆவரணமென்றும், விவிதம் ஆம் தோற்றம் என்றும்=நாநாவான விட்சேபமென்றும், இரண்டு சத்தி ஆய்=இருவகைச்சத்திகளாக, பிரிந்து தோன்றும். எ-று. (35)

[இதுவுமது.]

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணிற்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணாம்
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்று பேராம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தநுவுண் டாகும். (36)

இ-ள். சொல்லியதோற்றம் ஆம் சத்திதன்னின்=முன்சொல்லிய (அவ்விருவகைச் சத்திகளுள்ளே,) விட்சேபமாகிய சத்தியினின்றும், விண் ஆம்=(சத்ததன்மாத்திரையான) ஆகாசமுண்டாம், விண்ணின் காற்றது ஆம்=ஆகாசத்தினின்றும் (பரிசதன்மாத்திரையான) வாயுவுண்டாம், காற்றின் தீயாம்=வாயுவினின்றும் (ரூபதன் மாத்திரையான) அக்கினியுண்டாம், கனலின் நீர்=அக்கினியினின்றும் (ரசதன்மாத்திரையான) அப்புவுண்டாம், நீரின் மண் ஆம்=அப்புவினின்றும் (கந்ததன்மாத்திரையான) பிருதிவியுண்டாம், போற்றும் இவ்வைந்தும்=சொல்லாநின்ற இவ்வைந்து தன்மாத்திரைகளுக்கும், நொய்ய பூதங்கள் என்று பேர் ஆம்=சூட்சும பூதங்களென்றும் (அபஞ்சீகிருத பூதங்களென்றும்) நாமமாம், சாற்றும்=சொல்லாநிற்கும், இவற்றின்=இவ் வபஞ்சீகிருத பூதங்களினின்றும், போக சாதன தநு உண்டாகும்=போகசாதனமென்னுஞ் சூட்சும தேகங்களுளவாம். எ-று. மற்று-அசைநிலை. (36)

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR

[இதுவுமது.]

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவி யாகும்
ஓதிய பின்னை யைந்து முளம்புத்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே. (37)

இ - ள். ஆதிமுக்குணம்=தமக்குக்காரணமான தமோகுணப் பிரதான மாயையின்கணுள்ள தமசில் சத்துவம், தமசில் இராசதம், தமசில் தமசு என்னும் முக்குணங்கள், இப்பூதம் அடங்கலும்=இத் தன்மாத்திரைகள் முழுதினும், தொடர்ந்து நிற்கும்=சம்பந்தித்து நிற்கும், கோதில் வெண்குணத்தில் ஐந்துகூறு=(பஞ்சபூதங்களின்) குற்றமற்ற சத்துவகுணக்கூற்றில் (எடுத்து வெவ்வேறாக வைத்த) ஐந்துகூறும், உணர்கருவி ஆகும்=ஞானேந்திரியங்களாம், ஓதிய பின்னை ஐந்தும்=சொல்லிய அப்பூதங்களின் சத்துவ குணக்கூற்றில் (எடுத்து ஒன்றாகவைத்த) ஐந்துகூறும், உளம் புத்தி இரண்டு ஆம்=மனம், புத்தியென்னும் இருவித பரிணாமமுடைய அந்தக்கரணமாம், இவ்வேழும்=இவ்வேழு தத்துவங்களும், சற்குணப் பிரிவினால்=சத்துவகுணக்கூறாதலால், ஞானசாதனம் ஆம்=ஞானசாதனமென்று சொல்லப்படும். எ - று. (37)

[இதுவுமது.]

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவா யுக்க ளென்றும் பெருந்தொழிற் கருவி யென்றும்
பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம். (38)

இ - ள். இராசதகுணத்தில்=(அபஞ்சீகிருதபூதங்களின்) இரசோகுணக் கூற்றில், எடுத்து வேறு இட்ட ஐந்துகூறும்=எடுத்துத் தனித்தனியே வைத்த ஐந்து கூறுக்கும், ஐந்தும்=(ஒன்றாகவைத்த) ஐந்து கூறுக்கும், பெருந்தொழில் கருவி என்றும்=(முறையே) பெரிய கருமேந்திரியங்களெனவும், பிராணவாயுக்கள் என்றும்=பிராணாதிவாயுக்களெனவும், பராவியபெயர் ஆம்=சொல்லாநின்ற நாமங்களாம், இந்தப் பதினேழும்=இப்பதினேழு தத்துவங்களும், சுரர் அசுரர் நரர் விலங்கு ஆய்=தேவர், அசுரர், மநுடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்களாய், தோன்றிய=உண்டாகிய, உயிர்கட்கு எல்லாம்=சீவகோடிகளனைத்திற்கும், இலிங்கதேகம்=சூட்சுமதேகங்களாம். எ - று.

பஞ்சபூதங்களின் சத்துவகுணக் கூறுகள்கூடிச் சத்துவமென்னும் அந்தக்கரணத்தை யுண்டாக்கின ; அந்தக்கரணம் ஞானத்திற்கு ஏது ; ஞானத்தினுற்பத்தி சத்துவகுணத்தால் அங்கீகரித்திருப்பதால், அந்தக்கரணம் பூதங்களினுடைய சத்துவகுண காரியமாம். பஞ்சபூதங்களின் காரியமான பஞ்ச ஞானேந்திரியங்கட்கும் சகாயமாமாதலின், பஞ்சபூதங்களின் சமட்டி சத்துவ குணத்தில் அந்தக்கரணவுற்பத்தி சொல்லப்பட்டது. ஞானத்திற்குச் சாதன

மாகத் தேகத்திலுள்ளே இருத்தலின் அந்தக் கரணமெனப்பட்டது. பூதங்களின் சத்துவகுண காரியமாகலால் அந்தக்கரணத்திற்குச் சத்துவமென்றும் நாமமாம். அந்தக்கரணத்தின் பரிணாமத்தை விருத்தியென்பர்; அவ்விருத்தி நான்குவகையாம்: பதார்த்தங்களின் நன்கு தீங்குகளை நிச்சயிக்கின்ற விருத்தியைப் புத்தியென்றும், சங்கற்ப விகற்ப விருத்தியை மனமென்றும், சிந்தா விருத்தியைச் சித்தமென்றும், நான் என்னும் அபிமான விருத்தியை அகங்காரமென்றுஞ் சொல்லுவர்; சித்தத்தை மனத்திலும், அகங்காரத்தைப் புத்தியிலும் அடக்கி இவ்வாசிரியர் அந்தக்கரண விருத்தி இரண்டென்றார். பஞ்சபூதங்களின் சமட்டி இரசோகுணக்கூற்றால் பிராணனுற்பத்தியாம்; அப்பிராணன் கிரியா பேதத்தினாலும், ஸ்தான பேதத்தினாலும் ஐவகைப்படும். இருதயஸ்தானத்திருந்து பசிதாகக் கிரியைகளைச்செய்வது பிராணன், குதஸ்தானத்திருந்து மூத்திரமலங்களின் அதோ நயனக் கிரியை செய்வது அபானன், நாபிஸ்தானத்திருந்து உண்ட அன்னந் தண்ணீர்களைப் பாக யோக்கியமாகச் சமம் பண்ணுவது சமானன், கண்டஸ்தானத்திலிருந்து உசுவாச நிசுவாசக் கிரியை செய்வது உதானன், சரீரமுழுதும் வியாபித்து இரசத்தைச் சேர்க்குங்கிரியை யுடையது வியானன். ஒவ்வொருபூதங்களின் சத்துவ குணக்கூறுகள் ஒவ்வொரு ஞானேந்திரியங்களையும், இரசோகுணக்கூறுகள் ஒவ்வொரு கருமேந்திரியங்களையும் உண்டாக்கின. ஆகாசத்தின் சத்துவகுணக் கூற்றினாற் சுரோத்திரமும், வாயுவின் சத்துவகுணக் கூற்றினால் துவக்கும், தேயுவின் சத்துவகுணக் கூற்றினால் நேத்திரமும், சலத்தின் சத்துவகுணக் கூற்றினால் * ரசனையும், பிருதிவியின் சத்துவகுணக்கூற்றினால் கிராணேந்திரியமும் உற்பன்னமாம்; இவை ஞான சாதனங்களாகலின், ஞானேந்திரியமெனப்பட்டன. ஞானம் சத்துவகுணத்தினாலுண்டாவதாதலால் பூதங்களின் சத்துவ குணத்தினின்றும் அவற்றிற்கு உற்பத்தி சொல்லப்பட்டது. சுரோத்திரேந்திரியம் ஆகாசத்தின் குணத்தைக் கிரகணஞ் செய்வதால், அதற்கு ஆகாசத்தினின்றும் உற்பத்தி சொல்லப்படும். இப்படியே எப்பூதத்தின் குணத்தை எவ்விந்திரியங்கிரகணஞ் செய்கின்றதோ! அப்பூதத்தினின்றும் அவ்விந்திரியத்திற்கு உற்பத்திசொல்லப்படும். ஆகாசத்தின் இரசோகுணக் கூற்றினால் வாக்கிந்திரியமும், வாயுவின் இரசோகுணக் கூற்றினால் பாணீந்திரியமும், தேசசின் இரசோகுணக்கூற்றினால் பாதேந்திரியமும், சலத்தின் இரசோகுணக் கூற்றினால் உபஸ்தேந்திரியமும், பிருதிவியின் இரசோகுணக்கூற்றினால் குதேந்திரியமும் உற்பன்னமாம். [கருமம்=கிரியை.] அப்பஞ்சேந்திரியங்களும் கிரியைக்குச் சாதனங்களாகலின், கருமேந்திரிய மெனப்பட்டன. கிரியை இரசோகுணத்தினாலுண்டாவதாதலால் பூதங்களின் இரசோகுணக் கூற்றில் அவற்றிற்கு உற்பத்திசொல்லப்பட்டது. (38)

[இதுவுமது.]

இவ்வுடன் மருவுஞ் சீவ னிலிங்கதை சதனென் றவன்
இவ்வுடன் மருவு மீச னிரணிய கர்ப்ப னாவன்

* ரசனை=ஜிஹ்வேந்திரியம்.

இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக் குமச ரீரம்
இவ்வுடற் கோச மூன்று மிதுகனு வவத்தை யாமே. (39)

இ - ள். இவ்வுடல் மருவுஞ்சீவன்=இந்தச் சூட்சும சரீரத்திற்பொருந்திய சீவனானவன், இலங்கு தைசதன் என்று ஆவன்=விளங்காநின்ற தைசதனென்று சொல்லப்படுவன், இவ்வுடல் மருவும் ஈசன் இரணிய கர்ப்பன் ஆவன்=இந்தச்சூட்சும சரீரத்திற்பொருந்திய ஈசுரன் இரணிய கர்ப்பனென்று சொல்லப்படுவன், இவ்வுடல் இரண்டு பேர்க்கும்=இப் பதினேழு தத்துவ மயமான தேகமே சீவேசர் இருவர்க்கும், இலிங்க சூக்கும சரீரம்=இலிங்க தேகமென்னும் பெயரையுடைய சூட்சுமசரீரம், இவ்வுடல் மூன்று கோசம் ஆம்=இவ்விலிங்க தேகமானது பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் எனும் மூன்று கோசங்களாம், இது கனு அவத்தை ஆம்=இது சொப்பனுவத்தையாம். எ - று. (39)

[இதுவுமது.]

சூக்கும சடமிம் மட்டுஞ் சொல்லினோ மிப்பாற் றூலம்
ஆக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தநுவும்போ கமுமுண் டாகக்
காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் றானே. (40)

இ - ள். சூக்கும சடம் இம்மட்டும் சொல்லினோம்=சூட்சுமசரீர (அத்தியாசத்தை) இதுகாறுங்கூறினோம், இப்பால்=இனி, தூலம் ஆக்கும் ஆரோபந் தானும்=தூலதேக (முதலிய பிரபஞ்சத்தைச்) சிருட்டிக்கும் அத்தியாரோபத்தையும், அடைவினில் மொழியக் கேளாய்=கிரமமாகச்சொல்லுதுங்கேட்பாய், தாக்கும் இவ்வுயிர்க்கு=(லிங்கதேகங்களிற்) சம்பந்தித்துள்ள இவ்வுயிர்கட்கு, தூல தநுவும் போகமும் உண்டாக=(தத்தங் கருமத்திற்குத் தக்கதாகத்) தூலதேகங்களும், (அவ்வத் தேகங்களுக்குசிதமான) போகங்களும் உளவாதற்பொருட்டு, காக்கும் அவ்வீசன்=(யாவரையும்) காவல்செய்யும் அவ்வீசுரன், பஞ்சீகரணங்கள் செய்தான்=(தன்மாத்திரைகள் ஐந்தனையும்) பஞ்சீகரணஞ் செய்தனன். எ - று. தான் - ஏ - அசை. (40)

[இதுவுமது.]

ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம். (41)

இ - ள். ஐந்து பூதமும் பத்து ஆக்கி=ஐந்துபூதங்களுள், ஒவ்வொன்றையும் (சமமாக) இரண் டிரண்டு பாகம்பண்ணி, அவைபாதி நந்நான்கு ஆக்கி=அவைகளின் (ஒவ்வோர் பாதியைவைத்து) மற்ற ஒவ்வோர் பாதியை நான்கு நான்கு பாகங்களாகப் புண்ணி, நந்துதம் பாதி விட்டு=பெரிய

(அரைப் பாகங்களில்) தத்தம் பாகத்தைவிட்டு, நான்கொடு நான்கும் கூட்ட =(மற்றை) நான்கு பூதங்களின் அரைப் பாகங்களோடு நான்கு பாகங்களையுஞ் சேர்க்கவே, தூலபூதம் வந்தன=தூலபூதங்களுண்டாயின, மகாபூதம் இவற்றின் நின்றும்=(பஞ்சீகிருத) மகாபூதங்களான இவைகளினின்றும், அண்டம் புவனம் போகம் நான்கு ஆம் தூல தநு தந்தன=(இந்திரியங்களின் விடயமான ஸ்தூலப்) பிரமாண்டமும், (பிரமாண்டத்தினுள்ளே பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் மேலேழு புவனங்களும், அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்னும் கீழேழு புவனங்களும் ஆகிய சதுர்த்தச) புவனங்களும், சீவர்களின் போக்கியத்திற்கு யோக்கியமான அந்நாதிகளும், போகத்திற்கு ஸ்தானமான சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உற்பீஜம் என்னும் நால்வகைப் பிறப்பாகிய (தேவர், மநுடர், பசுவாதிய) தூலசரீரங்களும் (ஈசுரனுற்) சிருஷ்டிக்கப்பட்டன. எ-று.

பிரமாண்டலட்சணம், அஞ்ஞவதைப்பரணி,

"இரையுமெழு கடலும்வளை யாநின்ற வேழ்புவியு
மெழுமலையு முலகுபதி ஞலுந்த னாடுருவு
வரையுமிரு சுடரடைய வோரண்ட மாகுமிது
வடவிதையி னளவுமில தாலென்கொ லோதுவதே"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஒவ்வொரு பூதங்களில் ஐவைந்து பூதங்களைச் சேர்த்துப் பண்ணுகிறதற்குப் பஞ்சீகரணமென்று பெயர். எந்தப்பூதங்கள் பஞ்சீகரணஞ் செய்யப்பட்டனவோ அவைகளைப் பஞ்சீகிருதமென்பர். பஞ்சீகரணத்திற்கு, உ-ம். பிரமகீதை,

"தன்மாத் திரைகளைந்தினையு மோரொன் றிரண்டாய்ப் பகுத்தொன்றை, நந்நா லாக்கித் தன்பாதி யொழிந்த நாலி னுடன் கூட்டி, யின்னே யல்லா தவைநான்கி னியல்பிற் கூட்ட வானுதி, பின்னே தூல பூதமெனப் பிறக்குமெனவே பெயர்த்துரைத்தான்"-எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (41)

[இதுவுமது.]

தூலமே மருவுஞ் சீவன சொல்லிய விசுவ னுகும்
தூலமே மருவு மீசன் சொனும்விராட் புருட னுகும்
தூலமே யன்ன கோசந் மூன்னுஞ்சாக் கிரவ வத்தை
தூலகற் பனையீ தென்று தெரிகுத்தது மனத்திற் கொள்வாய். (42)

இ-ள். சொல்லிய தூலமே மருவுஞ் சீவன்=(பஞ்சீகிருத பூதகாரியமாக) முன்னே சொல்லிய தூலதேகத்திற் பொருந்துஞ் சீவனுனவன், விசுவன்

ஆகும்= விசுவன் என்னும் நாமமுடையனும், தூலமே மருவும் ஈசன்=அத்தூலதேக சமஷ்டியிற் பொருந்தும் ஈசுரன், சொலும் விராட்புருடன் ஆகும்=சொல்லாநின்ற விராட் புருடனென்னும் நாம முடையனும், தூலமே அன்ன கோசம்=ஸ்தூலதேகமே (அந்ந வீரியத்தினு லுண்டாய், அந்நத்தினல் விருத்தியாதலால்) அந்நமய கோசமாம்; துன்னும் சாக்கிர அவத்தை=(அத்தூலதேகமே சீர்வேந்திரியங்களுஞ்) சம்பூர்ணமாக விவகரிக்கும் சாக்கிராவத்தைக் கிடமென்று சொல்லப்படும், தூலகற்பனை ஈது என்று=தூலப்பிரபஞ்ச அத்தியாரோபம் இதுவாமென்று, தொகுத்தது=(நாம)சங்க்ஷேபமாகக் கூறியதை, மனதில் கொள்வாய்=(உனது) அந்தக்கரணத்தின்கண்ணே தாரணஞ்செய்து கொள்வாய். எ - று.

விளக்கிருக்கு மிடத்தையும் விளக்கென்றாற்போல அவத்தை நிகழும் சரீரத்தை, "அவத்தை" என்றார். மாயையிலும், அதன் காரியங்களிலும் மூன்று சரீரங்களும், பஞ்சகோசங்களும் உள. சுத்த சத்துவகுண சகித மாயை ஈசுரனுடைய காரணசரீரம்; மலினசத்துவ குணசகித அவித்தைக்கூறு சீவனுடைய காரணசரீரம். மனம், புத்தி, பிராணபஞ்சகம், கருமேந்திரிய பஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம் என்னும் இப்பதினேழு தத்துவம் சீவனுடைய சூட்சும சரீரம்; சர்வ சீவர்களுடைய சூட்சும சரீரங்களுங்கூடியே ஈசுரனுடைய சூட்சுமசரீரம். சம்பூர்ண ஸ்தூலப்பிரமாண்டம் ஈசுரனுடைய தூலசரீரம்; சீவர்களுடைய வியட்டி தூலசரீரம் பிரசித்தமாம்; இம்மூன்று சரீரங்களிலே பஞ்சகோசங்களுள. காரணசரீரத்தை ஆநந்தமய கோசமென்பர்; விஞ்ஞானமயம், மனோமயம்; பிராணமயம் என்னும் மூன்று கோசங்களுஞ் சூட்சுமசரீரத்திலடக்கம்; ஞானேந்திரியங்களைந்தும், நிச்சயரூப அந்தக்கரண விருத்தியாகிய புத்தியும் விஞ்ஞானமய கோசமெனப்படும்; சங்கற்ப விகற்பரூப அந்தக்கரண விருத்தியாகிய மனமும், ஞானேந்திரியமும் மனோமய கோசமாம்; பிராணதிவாயுக்களைந்தும்; கருமேந்திரியங்களைந்தும் பிராணமய கோசமாம்; தூலசரீரத்தை அந்நமய கோசமென்பர்; இவ்வாற்றால் மூன்று சரீரங்களிலே பஞ்சகோசங்களும் உள. ஈசுரனுடைய சரீரத்தில் ஈசுரனுடைய கோசமும், சீவனுடைய சரீரத்தில் சீவனுடைய கோசமும் உள. உறைக்குக்கோச மென்றுநாமம்; உறையைப்போலப் பஞ்சகோசங்கள் ஆன்மாவின் சொரூபத்தை ஆச்சாதனஞ்செய்தலின், அந்நமய முதலியவை கோசமென்று சொல்லப்பட்டன. அனேக மந்தமதியுடைய புருடர்கள் பஞ்சகோசங்களாகிய அநான்ம பதார்த்தங்களில் யாதானும் ஒன்றை ஆன்மாவாகக் கொண்டு முக்கிய சாட்சியாகிய ஆன்மசொரூபத்தில் பராமுக மாகவே யிருக்கின்றனர்; அங்ஙனமிருத்தற்கு அவை ஆன்மாவை ஆச்சாதித்திருத்தலே காரணமா மென்க.

(74) 1-வது, விரோசன மதாநுசாரியரான பாமரர், தூலசரீரமான அந்நமய கோசத்தையே ஆன்மாவென்பர், எதனாலெனின்? யாதொன்றினிடத்து அகம் புத்தியுண்டாமோ! அது ஆன்மாவாம் அவ்வகம்புத்தி தூலசரீரத்திலேயே உண்டாயிருக்கின்றது; நான் மநுஷியன், நான் பிராமணன் என்னுமிடத்து யாவர்க்கும் மநுடத்தன்மை, பிராமணத்தன்மை தூலசரீரத்திலேயே

காணப்படுகின்றது ; ஆகலின், தூலசரீரமே ஆன்மாவென்பதிற் சந்தேகமில்லை. அன்றியும், யாதொன்றில் முக்கியப் பிரீதியுண்டாமோ! அது ஆன்மாவாம் ; ஸ்திரீ, புத்திரர், தனம், பசு முதலியவை தூலசரீரத்திற்கு உபகாரமாமேல் அப்போ தவைகளிற் பிரீதியுண்டாகின்றது; உபகாரமில்லையேற்பிரீதியில்லை! இவ்வாறு தூலசரீரத்திற்றுனே முக்கியமான பிரீதியிருத்தலின் தூலசரீரமே ஆன்மாவாம் எனவும், அதனை வஸ்திர, பூஷண, அஞ்சன, மஞ்சன, நாநாவித போஜனுதிகளால் இனிதுறப் பேணுவதே பரம புருஷார்த்தமாம் எனவுங்கூறுவர்;இது அசுரசுவாமியான விரோசனனுடைய சித்தாந்தம்.

(75) ௨-வது, வேறேசிலர், தூலசரீரமே ஆன்மாவன்று; தூலசரீரத்தில் யாதொன்றிருப்பதாற் சீவன வியவகாரமும், யாதொன்றில்லாமற் போவதால் மரண வியவகாரமுமுண்டாமோ அதுவே ஆன்மா ; அவ்வான்மா தூல சரீரத்தைப் பார்க்கிலும் வேறாம்; சீவன, மரணங்கள் இந்திரியங்களின் அதீனம் ; எவ்வளவுகாலஞ் சரீரத்தில் இந்திரியங்களியங்குமோ! அவ்வளவு காலஞ் சீவனமுண்டு; இந்திரியங்கள் எப்போதில்லாமற்போமோ! அப்போதே மரணமென்று சொல்லப்படுகின்றது ; நான் பார்க்கிறேன், கேட்கிறேன், சொல்லுகிறேன், என்று அகம்புத்தியும் இந்திரியங்களிலுண்டாகிறது ; ஆதலால் இந்திரியங்களையே ஆன்மாவென்பர்.

(76) ௩-வது, இரணியகர்ப்பவுபாசிகள், பிராணனை ஆன்மாவென்பர். எதனுலெனின்? ஒருவற்கு மரண சமயமான மூர்ச்சை எப்போதுண்டாகின்றதோ! அப்போது அவனுடைய சம்பந்திகளான புத்திராதிகள் பிராண சேடமிருந்தாற் சீவித்திருக்கிறதாகவும், அஃதில்லையாயின் மரணமாயினனென்றும் அறிகின்றனர்; அன்றியும், சரீரத்தில் நேத்திரேந்திரியமில்லாமல் அந்தன் சரீரமும், சுரோத்திரேந்திரிய மில்லாமற் செவிடன் சரீரமும் வாக்கின்றி மூகன் சரீரமுமிருக்கின்றன ; இந்திரியங்களும், அவற்றின் வியாபாரங்களுமின்றியும் சரீரம் நிலைத்திருக்கிறது ; பிராணனின்றேல், அந்தக் கணமே மயானசமானமாக அமங்களமாயும், பிறர்க்குப்பயங்கரமாயும் வீழ்ந்து விடுகின்றது ; நான்பார்க்கிறேன், கேட்கிறேன் என்னும் ஞானத்திலும் இந்திரியத்தினும் வேறாகவே ஆன்மா சித்தித்திருக்கிறது ; எப்படியெனின்? நேத்திரசொரூபனுன நான் பார்க்கிறேன், சிரவணசொரூபனுன நான் கேட்கிறேன் என அறிவுண்டாமாயின் நேத்திராதிரூபந்தான் ஆன்மாவென்று சித்திக்கும் ; அப்படிக்கின்றி நேத்திரமுடைய நான்பார்க்கிறேன், சுரோத்திரமுடைய நான் கேட்கிறேனென அறிவுண்டாவதால் இந்திரியத்தினும் ஆன்மா வேறுதான் ; அன்றியும், சுழுத்தியில் சர்வ இந்திரியங்களும் அபாவமாயிருந்தும் பிராணனுடைய இருப்பினுல் சீவன வியவகார முண்டாகின்றதாகலின் சீவனமும், மரணமும் இந்திரியங்களுடைய அதீனமல்ல ; தூலசரீரங்களினின்றும் பிராணவியோகத்தையே மரணமென்பராதலானும், சீவன மரணங்கள் பிராணனுடைய அதீனமேயாகலானும் அதுவே ஆன்மாவாமென்பர்.

(77) ச-வது, வேறுசிலர், பிராணன் சடமாகலின் கடம்போல அநான்மாவாம்; பந்தமோட்சம் மனத்தின் அதீனம்; விடயத்தில் ஆசக்தியுள்ள மனம் பந்தத்திற்கேது; விடயவாசனைவிட்ட மனம் மோட்சத்திற்கேதுவாம்; மனத்தின் சம்பந்தத்தாலேயே இந்திரியங்கள் ஞானத்திற் கேதுவாகின்றன; மனத்தின் சம்பந்தமின்றி இந்திரியங்களால் ஞானமுண்டாகமாட்டாது. ஆதலால், சர்வ வியவகாரத்திற்கும் ஏது மனந்தான்; அதுவே ஆன்மாவாமென்பர்.

(78) ரு-வது, க்ஷணிக விஞ்ஞான வாதிகளான பௌத்தர், மனத்தின் வியாபாரம் புத்தியின் அதீனமாம்; புத்தியின் ஆதாரமே மனமாகத் தோன்றுகின்றதாகலின், க்ஷணிக விஞ்ஞானரூப புத்தியே ஆன்மாவாம்; மனமன்று. என்னை? சம்பூர்ண பதார்த்தங்களும் விஞ்ஞானத்தினாகாரமே; அவ்விஞ்ஞானம், பிரகாசரூபமாம்; க்ஷணத்துக்கு க்ஷணம் அவ்விஞ்ஞானம் நாசமாம்; பூர்வவிஞ்ஞானத்திற்குச் சமானமாக அந்நியவிஞ்ஞானமுண்டாவதால் பூர்வவிஞ்ஞானம் நாசமாம்; அப்படியே மூன்றும் விஞ்ஞானத்தி னுற்பத்தியால் இரண்டாம் விஞ்ஞானமும், நான்காம் விஞ்ஞானத்தினுற்பத்தியால் மூன்றும் விஞ்ஞானமும் நாசமாம்; இவ்வாறு நதியின் பிரவாகம்போல விஞ்ஞான தாரை யுண்டாகாநின்றது; அவ்விஞ்ஞான தாரை இருவகைத்தாம்; ஒன்று ஆலய விஞ்ஞானதாரை, மற்றொன்று பிரவிர்த்தி விஞ்ஞானதாரை; அகம், அகம் எனும் விஞ்ஞானதாரை ஆலய விஞ்ஞானதாரை, அதுவே புத்தி. இதுகடம். இது சரீரம் என்னும் விஞ்ஞானதாரை பிரவிர்த்தி விஞ்ஞானதாரை. ஆலய விஞ்ஞான தாரையினின்றும் பிரவிர்த்தி விஞ்ஞான தாரை உண்டாம். மனத்தின்சொரூபமும் பிரவிர்த்தி விஞ்ஞான தாரையில் உள்ளது; ஆகலின் அது ஆலய விஞ்ஞான தாரை ரூபமான புத்தியின் காரியமாம்; அப்புத்தியே ஆன்மாவாம். ஆலய விஞ்ஞானதாரையில் பிரவிர்த்தி விஞ்ஞான்தாரையின் பாதசிந்தனத்தால் உளதாகும் நிர்விசேஷ க்ஷணிக விஞ்ஞானதாரையின் ஸ்திதியே மோட்சமாமென்று இவ்வாறு புத்தியையே க்ஷணிக ரூபமாகவும், சுயம் பிரகாசரூபமாகவுங் கற்பனைசெய்து அதனையே ஆன்மாவென்பர்.

(79) கூ-வது, பூர்வமீமாஞ்சையின் வார்த்திககாரரான பட்டர், மின்னலைப்போன்ற க்ஷணிகரூபம் ஆன்மாவன்று; ஆன்மா ஸ்திரசொரூபம்; அது சடரூபமும், சேதனரூபமுமாய் இருக்கும்; எதனாலெனின்? சுழுத்தியினின்றும் விழித்த புருடன் நான் சடனாக நித்திரைபண்ணினேனென்பதால் ஆன்மா சடரூபமாம்; ஆயினும், விழித்தவுடன் ஸ்மிருதி யுண்டாகின்றது; அஞ்ஞாதத்தின் ஸ்மிருதியுண்டாகமாட்டாது; ஆன்மசொரூபத்தினும் வேறாகச் சுழுத்தியில் ஞானத்திற்கு வேறுசாதனங்களில்லை; ஸ்மிருதிக்கு ஏதுவாகச் சுழுத்தியிலும் ஞானமுண்டு; அந்த ஞானம் ஆன்மாவின் சொரூபமாகவே இருக்கின்றது; இப்படிச் சடரூபமாகவும், ஞானரூபமாகவுமிருத்தலால் ஆன்மா மின்மினிபோலப் பிரகாச, அப்பிரகாசரூபமாமென்பர்; இப்படிப் பிரகாச, அப்பிரகாச ரூபமாகவுள்ளது ஆநந்தமயகோசமாம். எதனாலெனின்? சுழுத்தியிலுள்ள சேதனத்தின் ஆபாசசகித அஞ்ஞானமே ஆநந்தமய கோச

மென்பர்; அங்கே ஆபாசனே பிரகாசரூபம்: அஞ்ஞானம் அப்பிரகாசரூபம்; இதனால் பட்டருடைய மதத்தில் ஆநந்தமயகோசமே ஆன்மாவாம்.

(80) எ - வது, சூனியவாதியரான பௌத்தர், ஏகமான ஆன்மாவைப் பிரகாசரூபமாகவும், அப்பிரகாசரூபமாகவும் சொல்லுதல் கூடாது; மின்மினியினுடைய ஒருகூறு பிரகாசரூபம், மற்றொருகூறு அப்பிரகாசரூபம்; அதைப்போலக் கூறுபாடில்லாத ஆன்மாவின்கண்ணே உபயரூபஞ் சொல்லுதல் அசங்கதம்; உபயரூப சித்தியின்பொருட்டு ஆன்மாவைக் கூறுபாடுடையதாகவே ஒப்பவேண்டும், கூறுபாடுடைய பதார்த்தங்களான கடாதிகள் உற்பத்தி நாசமுடையனவாம்; அப்படியே ஆன்மாவுங் கூறுபாடுடையதாமேல் உற்பத்திநாசமுடையதாகவே ஒப்பவேண்டும். உற்பத்தி, நாசமுடைய பதார்த்தம் யாது அது உற்பத்திக்கு முன்னும், நாசத்திற்குப்பின்னும் அசத்தாம்; யாது ஆதியந்தத்தில் அசத்தாமோ! அது மத்தியிலும் சத்தாக மாட்டாது; அசத்தேயாம். ஆதலால், ஆன்மா அசத்துரூபமாம்; அப்படியே ஆன்மாவிற்கு வேறான சம்பூர்ண பதார்த்தங்களும் உற்பத்தி நாசமுடையனவும், அசத்துரூபமுமாம்: இவ்வாற்றால் ஆன்மா, அநான்மாக்களான சகலவத்துக்களும் அசத்துரூபமேயாவதால் சூன்யமே பரமதத்துவமாமென்பர்; இது சூன்யவாதிகளான மாத்தியமிக பௌத்தருடைய மதம்; அவர்களும் அஞ்ஞானரூபமான ஆநந்தமயகோசத்தைப் பிரதிபாதனஞ் செய்தனர்.

(81) அ - வது, பூர்வமீமாஞ்சையின் ஏகதேசியானபிரபாகரரும், நையாயிகரும் ஆன்மாச்சூன்யரூபமன்று; எவனொருவன் ஆன்மாவைச் சூன்ய ரூபமாக ஒப்புவனோ! அவனை நீ சூன்யரூபத்தை அநுபவித்தனையா? அல்லது, இல்லையா? என்று வினவுவாம். சூன்யத்தை அநுபவிக்கவில்லையெனின்? அப்போது சூன்யமில்லையென்று சித்தித்தது, சூன்யத்தை அநுபவித்தேனெனின்? யாவன் சூன்யத்தை அநுபவித்தனனோ? அவ்வான்மாச் சூன்யத்தினும் விலட்சணமென்று சித்தித்தது. ஆகலின், சூன்யத்தின் விலட்சணமாய் ஆன்மாவுளது; அதன்கண் மனத்தின் சையோகத்தால் ஞானமுண்டாகின்றது. ஞானகுணத்தினால் ஆன்மாச்சேதனமென்று சொல்லப்படும். சொரூபமாக ஆன்மாச்சடமாம்; அப்படியே சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம் முதலிய குணங்கள் ஆன்மாவின்கணுண்டென்பர். அவர்கள் மதத்திலும் ஆநந்தமயகோசமே ஆன்மாவாம். விஞ்ஞானமயகோசத்திலுள்ள புத்தியை ஆன்மாவினுடைய ஞானகுணமென்பர். என்னை? ஆநந்த மயகோசத்தில், சேதனங் கூடமாயிருப்பதால் அது விவேகமின்மையர்க்கு விளங்காது; ஆதலால் பிரபாகரரும், நையாயிகரும் ஆன்மாவைச் சுழுத்தியில் ஞானமின்மையதாக ஒப்பிச் சொரூபமாகச் சடமென்பர். இதனால், ஆநந்தமய கோசத்திலேயே அவர்கட்கு ஆன்மப்பிராந்தியிருக்கின்றது. நித்திய ஞானத்தைச் சீவனிடத்து ஒப்பவில்லை; அநித்தியஞானத்தை ஒப்பினர்; அவ்வநித்திய ஞானம் சித்தாந்தத்தில் அந்தக்கரண விருத்தியாகிய புத்திரூபமாம்; ஆகலின், அவர்கள் மதமும் நன்றன்று. என்னை? ஞானத்திற்கு வேறான கடாதி சடவத்துக்கள் அநித்தியங்களாம்; அப்படியே ஆன்மாவும்

ஞானரூபமன்றெனில் கடாதிகளைப்போலச் சடமாவதால் அநித்தியமாம்; ஆகவே, மோட்ச நிமித்தமான சாதனங்கள் நிஷ்பலமாம். இவ்வாறு வேதாந்த வாக்கியங்களில் விசுவாசமின்மையரான பகிர்முகமுடைய அநேகர் பஞ்ச கோசங்களில் யாதானும் ஒவ்வொன்றை ஆன்மாவாக ஒப்பி முக்கிய ஆன்ம சொரூபமான சாட்சியை ஒப்பாதிழக்கின்றனர்; இங்ஙனம் ஆன்மசொரூபந் தெரியவொட்டாமல் மறைத்திருத்தல்பற்றி அந்நமய முதலியவை கோசமெனப்பட்டன.

(82) சீவனுடைய பஞ்சகோசங்கள், சீவனுடைய யதார்த்த சொரூபமான சாட்சியை எப்படி ஆச்சாதனஞ் செய்திருக்கின்றனவோ! அப்படியே ஈசுரனுடைய சமட்டி பஞ்சகோசங்கள் ஈசுரனுடைய யதார்த்த சொரூபத்தை ஆச்சாதனஞ் செய்திருக்கின்றன. எதனாலெனின்? ஈசுரனுடைய யதார்த்த சொரூபம் தற்பதத்தி னிலட்சியமாம்; அதனை விடுத்துச் சிலர் மாயாரூப ஆநந்த மயகோச விசிட்டனென்னுந் தற்பதவாச்சியமாகிய அந்தரியாமியையே பரம தத்துவமென்பர். அப்படியே இரணியகர்ப்பன், வைசுவாநரன், விஷ்ணு, பிரமன், சிவன், கணேசன், தேவி, சூரியன் முதல் அசி, குந்தாலம், அரசு, எருக்கு, மூங்கில் பரியந்தமான பதார்த்தங்களில் பரமான்மாவென்னும் பிராந்தியை அடைந்துளர். சர்வ பதார்த்தங்களிலும் லட்சியபாகம் பரமான்மாவினும் பின்னமில்லை; அங்ஙனமிருப்பினும் அவ்வவ்வுபாதி சகிதங்களைப் பரமான்மாவாக ஒப்பியிருப்பது அவர்களது பிராந்தியேயாம்; இவ்வாறு பஞ்சகோசங்களால் ஆவிருதமான சீவேசுரருடைய பரமார்த்த சொரூபத்தினின்றும் பராமுகமாய்த் தேகாதிகளில் ஆன்மப்பிராந்தி யுடையராய்ப் புண்ணிய பாப கர்மங்களைச்செய்கின்றனர். அந்தர்யாமிமுதல் மூங்கில் பரியந்தமான ஒவ்வொன்றையுமே ஈசுரரூபமாகக் கருதி ஆராதனஞ்செய்து சுகத்தையிச்சிக்கின்றனர்; அவர்கள் ஆராதிக்கும் உபாதியினுடைய தாரதம்மியத்துக்குத் தக்கபயனும் அவைகளால் அவர்கட்கு உளதாம்; ஆயினும் பிரம ஞானத்தினாலன்றி மோட்சமுளதாகாது. மோட்சவிச்சையுடையோர் சீவேசுரருடைய சொரூபத்தைப் பஞ்சகோசத்தினின்றும் வேறு பிரித்தறியக்கடவர்கள். மாயா காரியங்களை விஸ்தாரமாக நிரூபணஞ்செய்யப்புகில் கோடி பிரமருடைய ஆயுளாலும் அந்தமாகாவென்று வான்மீகி பகவான் அநேக இதிகாசங்களால் வாசிட்டத்தில் நிரூபித்திருப்பதால், "தோகுத்தது மனத்திற் கொள்வாய்" என்றார். (42)

சீரிய வீச னார்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றேல்
ஆரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்கால்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிகுச மட்டி வியட்டியாற் பேத மாமே. (43)

இ-ள். சீரிய ஈசனார்க்கும் சீவர்க்கும்=(சர்வஞ்ஞத்வாதி கல்யாண குணங்களினாற்) சிறந்த ஈசுரனுக்கும், சீவர்கட்கும், உபாதி ஒன்றேல்=(தூல சூட்சும) உபாதி ஒன்றாயின், ஆரிய குருவே=சன்மார்க்கத்திருக்கும் ஆசிரி

யரே, பேதம் அறிவது எப்படி என்றக்கால்—(இவன் சீவன், இவன் ஈசுரனென்னும்) வேறுபாடறிவதெங்ஙனமென்று கேட்பாயாகில், காரிய உபாதி சீவன்—காரியவுபாதியையுடையவன் சீவன், காரண உபாதி ஈசன்—காரணவுபாதியினையுடையன் ஈசுரன், (இவ்விருவரும்) வீரியம் மிகுசமட்டி வியட்டியால் பேதம் ஆம்—மகத்துவமிக்க சமட்டியினாலும், வியட்டியினாலும் பேதமுளராமென்றறிதி எ-று. ஏ-அசை.

ஆரியத்தன்மை, "சேயலினுரிய" என்னும் வாசிட்டச்செய்யுளான் அறிக. காரணவுபாதி, காரியவுபாதிகள் முறையே மாயை, அந்தக்கரணம் என்று சங்க்ஷேபசாரீரகத்திற் கூறியுள்ளன. (43)

[சமஷ்டிவியஷ்டிகளினியல்பு.]

மரங்கள்போல் வியட்டி பேதம் வனமெனல் சமட்டி பேதம்
சரங்கடா வரங்கள் பேதத் தனியுடல் வியட்டி யென்பார்
பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பதே சமட்டி யென்பர்.
இரங்கிய பலசீ வர்க்கு மீசர்க்கும் பேத மீதே. (44)

இ-ள். வெளி.

இதற்கு, உ-ம். வேதாந்த சூடாமணி,

"மிகுமரப் பன்மை தண்டலை யெனல்போன் மிகுமுயிரெலா முநா னெனுமோர், தகுமபி மான மிறைசமட் டியதாந் தனித்தனி மரம்பெயர் கொளல்போற், பகுமுடன் றோறும் வேறுவே றுகப் படுமபி மானமோர்ந் துரைப்பிற், றொகுமுயிர் வியட்டி யுருவமென் குவர் மேற் றொம்பத விலக்கிய முரைப்பாம்"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற்காண்க. (44)

(83) [அத்தியாரோபங் கூறிப்போந்ததற்குபயோகத்தை இனிக்கூறுகின்றார்.]

கற்பனை வந்த வாறு காட்டினேங் காண்ப வெல்லாஞ்
சொற்பனம் போலு மென்றே துணிந்தவன் ஞானி யாவான்
செற்புதை மழைக்கா லம்போய்த் தெளிந்தவா காசம் போல
அற்புத முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய். (45)

இ-ள். கற்பனை வந்த ஆறு—அத்தியாரோபமுண்டான வழியை, காட்டினேம்—அறிவித்தோம், காண்பு எல்லாம்—அகங்காராதிப் பிரபஞ்ச மனைத்தும், சொற்பனம்போலும் என்று—*சொப்பனப் பிரபஞ்சம்போலும்

* சொப்பனம் என்னும் வடமொழி எதுகைநோக்கி, "சொற்பனம்" எனத்திரிந்தது.

(துச்ச) மென்று, துணிந்தவனே=(சமுசயமின்றி) அபரோட்சமாக நிச்சயித்தவனே, ஞானி ஆவான்=ஞானியாம், செல்புதை மழைக்காலம் போய்=மேகநெருங்கிய வருடாகால மொழிந்து, தெளிந்த ஆகாசம்போல=(சரற்காலத்திற்) றெளிந்துள்ள ஆகாயம்போலும், அற்புத முத்தி சேரும்=(சகலவனர்த்தமும் ஒழிந்து) நிரதிசயாநந்தரூப மோட்சமடையக் காரணமாகும், அபவாதவழியுங் கேளாய்=அபவாத வழியையுங் கேட்டி. எ-று.

"சேற்புதை மழைக்காலம் போய்த் தெளிந்தவா காசம்போல" என்னும் உவமானத்தால், அனர்த்த நிவிர்த்தி வருவித்தாம் "சொற்பனம் போலும்" என்றது பற்றிப் பூர்வபட்சிகளின் சங்கை:—

(84) பூர்வம் அத்தியந்தம் அஞ்ஞாதமாவுள்ள பதார்த்தத்தின் ஞானம் சொப்பனத்திலுண்டாதலில்லை. சாக்கிரத்தில் எதனுடைய அநுபவஞானமுள்ளதோ! அதனுடைய ஸ்மிருதிதான் சொப்பனத்திலு முண்டாகின்றது; அங்ஙனம் சொப்பனத்திலுண்டாகும் ஸ்மிருதி ஞானத்தின் விடயமான சாக்கிரபதார்த்தம் சத்தியமாகலின், சொப்பனத்திலும் அதனது ஸ்மிருதிஞானஞ் சத்தியமாம்; ஆகவே, சொப்பன திருஷ்டாந்தத்தாற் சாக்கிர பதார்த்தங்களை மித்தையென்னல் பொருந்தாது.

(85) அல்லது, சொப்பனவஸ்தையிற் றூலசரீரத்தை விடுத்து லிங்கசரீரம் வாகியத்திற்சென்று சத்தியமாயுள்ள கிரி, சமுத்திராதிகளைப் பார்க்கின்றதாகலின் சொப்பனஞானமும், அதன் விடயமான பதார்த்தங்களுஞ் சத்தியமே; மித்தையன்றாம்; ஆகவே, சொப்பனம்போலும் சாக்கிரப்பிரபஞ்சந் துச்சமென்னல் கூடுமாறெங்ஙனே எனின்?

(86) உத்தரம், அந்த யானை என்றுண்டாகின்ற பூருவகால சம்பந்திகளான பதார்த்தங்களின்ஞானம் ஸ்மிருதியாம். எதிரே நிற்கின்ற யானையைக்கண்டு இது யானை, என்றுண்டாகின்றஞானம் ஸ்மிருதியல்ல; பிரத்தியட்சமாம். சொப்பனத்தில் இது யானை, இது பருவதம், இது நதி என்றிவ்வாறான ஞானமுண்டாகின்றதாகலின் அது சாக்கிரத்திற்கண்ட பதார்த்தங்களினுடைய ஸ்மிருதியல்ல; பிரத்தியட்சஞானமேயாம். சாக்கிரத்தில் அறியப்படாத பதார்த்தங்களின் ஞானம் சொப்பனத்திலுண்டாகவில்லை; அறியப்பட்ட பதார்த்தங்களின் ஞானமே உண்டாகின்றதாகலின், சொப்பனத்தின் ஞானம் ஸ்மிருதிரூபமே யென்னில் அது கூடாது.

(87) ஏனெனில்? பிரத்தியட்சஞானம் இருவகைத்து; ஒன்று அபிஞ்ஞாரூபப்பிரத்தியட்சம்; மற்றொன்று பிரத்தியபிஞ்ஞாரூபப் பிரத்தியட்சமாம். கேவலம் இந்திரியசம்பந்தத்தாற் றோன்றும் ஞானம் அபிஞ்ஞாபிரத்தியட்சம்; அது நேத்திர சம்பந்தத்தால் இது யானையென்று தோன்றும் ஞானம். பூர்வஞானசம்ஸ்காரத்தாலும், இந்திரியசம்பந்தத்தாலும் தோன்றும் ஞானம் பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியட்சமாம்; அது பூர்வங்கண்டயானை எதிரே வரில் அந்தயானை இந்தயானை என்றுதோன்றும் ஞானம்; அங்கே பூர்வங்கண்ட யானையின்ஞான சம்ஸ்காரமும், யானையோடு நேத்திர சம்பந்தமும்

பிரத்தியபிஞ்ஞாப் பிரத்தியட்சத்திற்கேதுவாம். ஆதலால், சம்ஸ்காரஜந்நிய ஞானம் *ஸ்மிருதிரூபமே என்னும் நியமமில்லை. இந்திரிய சம்பந்தமின்றிக் கேவலம் சம்ஸ்காரஜந்நியஞான முண்டாமாயின், அதுவே ஸ்மிருதிஞான மெனப்படும். சொப்பனத்தில் யானைமுதலியவைகளின் ஞானம் கேவலம் சம்ஸ்காரஜந்நியமல்ல; நித்திராரூப தோஷஜந்நியமாம். சொப்பனத்தில் யானைமுதலியவைகளைப்போலக் கற்பித இந்திரியங்களுமுண்டு; ஆகலின், இந்திரியஜந்நியமுமாம். சொப்பன பதார்த்தங்கள் சாட்சிபாசியமேயல்லாமல் இந்திரியஜந்நிய ஞானவிடயமல்ல; ஆயினும், அவிவேகியினுடைய திருஷ்டியினுல் சொப்பனஞானம் இந்திரியஜந்நியமென்று சொல்லப்படுகிறது. நித்திரையினின்றும் விழித்தபுருடன் நான் சொப்பனத்தில் யானை முதலியவைகளைக் கண்டேனென்று சொல்கின்றனன்; ஆதலால், சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாசகிரபதார்த்தங்களின் ஸ்மிருதியல்ல. யானைமுதலியவைகளின் ஸ்மிருதியே உண்டாமாயின், விழித்து நான் சொப்பனத்தில் யானைமுதலியவைகளை ஸ்மரித்துக் கொண்டிருந்தே னென்று சொல்லவேண்டும்; அப்படி ஒருவருஞ் சொல்லவில்லை. ஆதலால், சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதியல்ல. சாக்கிரத்திற்கண்ட, கேட்ட பதார்த்தங்களின் ஞானமே சொப்பனத்திற்றோன்றுமென்னு நியமமில்லை; சாக்கிரத்தில் அஞ்ஞாத பதார்த்தங்களினுடைய ஞானமும் சொப்பனத்திற் றோன்றும். தான் கண்டதாகவேனும், கேட்டதாகவேனுமில்லாத பதார்த்தங்களும் ஒவ்வொருகால் சொப்பனத்திற் காணப்படுகின்றன: ஆகலின், அவைகளின் ஞானம் ஸ்மிருதியல்ல. ஆயினும், இந்தச்சன்மத்தின் பதார்த்த ஞானசம்ஸ்காரமே ஸ்மிருதிக்கு எதுவாமென்னும் நியமமில்லை; அந்நியஜன்ம ஞான ஜந்நிய சம்ஸ்காரத்தினுலும் ஸ்மிருதி உண்டாகாநிற்கும், என்னை? அநுகூல ஞானத்தினுல் பிரவிர்த்தி யுண்டாகின்றது: அநுகூலஞானமன்றிப் பிரவிர்த்தியுண்டாவதில்லை. பாலகனுக்கு ஸ்தநபானத்தில் பிரதமப் பிரவிர்த்தியுண்டாவதற்குக்காரணம் தான் அந்நியஜன்மங்களில் ஸ்தநபானம் தனக்கநுகூலமென்றநுபவித்துள்ள சம்ஸ்காரமாம்; ஆகலின், ஜன்மாந்தரத்தின் ஞானசம்ஸ்காரத்தினுலும் ஸ்மிருதி யுண்டாகாநிற்கும். அப்படியே இந்தஜன்மத்தில் அஞ்ஞாதபதார்த்தத்தின் ஸ்மிருதியும் அந்நியஜன்மத்திலுளதாகிய ஞான சம்ஸ்காரத்தினுல் சொப்பனத்தி லுண்டாகக்கூடும். ஆயினும், சாக்கிரத்தில் யாதொரு ஜன்மத்திலும் அநுபவியாதிருக்கும் பதார்த்தமும் சொப்பனத்திற் றோன்றுகின்றது; அது தனதுசிரச்சேதனத்தைத் தான் நேத்திரத்தால் சொப்பனத்திற் பார்க்கின்றது; ஆதலால், சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தங்களின் ஞானசம்ஸ்காரத்தினுற்றோன்றும் ஸ்மிருதியல்லவென்று சொப்பனத்திற்கு ஸ்மிருதிரூபகண்டனத்தில் அநேகயுத்திகிரந்தகாரர் கூறியுளர்.

(88) தூலசரீரத்தினின்றும் இலிங்கசரீரமானது வெளிப்பட்டு வாகியத்திற் சத்தியமாயுள்ள கிரி, சமுத்திர முதலியவற்றைப் பார்க்கின்றதெனின்?

* ஸ்மிருதி=சம்ஸ்காரஜந்நியஞானம்.

இலிங்கசரீரம் வெளிப்படுமாயின், மரணாவத்தையைப்போலத் தூலசரீரம் பயங்கரரூபமாகத் தோற்றவேண்டும்; சொப்பனாவத்தையில் அப்படித் தோற்றாமல் சாக்கிரத்திற்போல மங்களரூபமாகவே தோற்றாநிற்கிறது; ஆதலால், தூலசரீரத்தைவிட்டு லிங்கசரீரம் வெளியேபோகவில்லை; அந்தக்கரணத்தின் இயக்கம் பிராணனுடைய அதீனமாதலால் பிராணன் வெளிப்படாமல் அந்தக்கரணமும், ஞானேந்திரியமும் வாகியத்திற்செல்லாவாம். சொப்பனாவத்தையில தூலசரீரம் பிராணனோடு கூடத்தோற்றுவதால், இலிங்கசரீரம் வாகியத்திற் சென்று சத்தியமாயுள்ள பதார்த்தங்களைச் சொப்பனத்திற் பார்க்கின்றதென்பது கூடாது. அன்றியும், ஓர் புருடன் சொப்பனத்திற தன் சம்பந்தியோடுகூடிய ஓர் வியவகாரத்தைச் செய்ததாகக்கண்டு விழித்துப் பின் அச்சம்பந்தியைத் தான் கண்டபோது இராத்திரி நாம் இருவரும் கூடி இவ்வித வியவகாரத்தைப் பண்ணினோமென்று அவன் சொல்லவில்லை. பூருவபட்ச ரீதியினால் வாகியத்தில் வெளிப்பட்டுச் சம்பந்தியோடுகூடிச் சத்தியமாக வியவகரித்தால்; அந்தச் சம்பந்தியோடுகூடின ஞானமும், வியவகாரஞானமும் சம்பந்திக்கும் உளவாதல்வேணடும்: எப்போது அவன் கூடினானோ! அப்போது அவன் சொல்லவும்வேண்டும். சிததாந்தத்தில் சம்பந்தியும், அவனுடைய கூட்டரவுமுதலியவும் உள்ளேயே கற்பிதமாம். அன்றியும், வாகியத்திற்சென்று சத்தியமான பதார்த்தத்தைப் பார்த்த துண்டானால், இராத்திரியில் நித்திரை செய்தபுருடன் சிதம்பரத்தில் மத்தியானசூரியனால் வீடுகள் தபிக்கப்படுகிறதாகவும், சிதம்பரத்திற்கு வடக்கே மதுரை இருப்பதாகவும், மதுரைக்குத் தெற்கே சிதம்பரம் இருப்பதாகவும் காண்கின்றனன்; அங்கே இராத்திரியில் மத்தியான சூரியனும், சிதம்பரத்திற்கு வடக்கே மதுரையும், மதுரைக்குத் தெற்கே சிதம்பரமும் இலலை; ஆகலானும், சொப்பனத்திற் சத்திய பதார்த்தங்களைப் பார்க்கப்படுகிறதென்பதுகூடாது.

(89) பருவதம், சமுத்திரம், நதி, வனம், கிராமம், புரி, சூரியன், சந்திரன் முதலிய எவ்வளவு பதார்த்தங்கள் சொப்பனத்திற் காணப்படுகின்றனவோ! அவை நூதனமாகவே உண்டாகின்றன. சொப்பன பதார்த்தங்களில் நேத்திராதிகளின் விடயத்தன்மை பாதமாகின்றது. வியாவகாரிக நேத்திராதிகளின் விடயததன்மை சொப்பனத்தில் பிராதிபாசிக பதார்த்தங்களிற் பொருந்தாது. எதனாலெனின்? சமசத்தையுடைய பதார்த்தங்களே தம்மிற் சாதகபாதகங்களாம்; அதனால் சரீரத்தின்கண் ணிருக்கும் வியாவகாரிக நேத்திராதிகளும், சொப்பன பதார்த்தங்களும் ஒன்றற்கொன்று விஷமசத்தையாவதால் அந்நேத்திராதிகளுக்குச் சொப்பனத்திற் பருவதாதிகள் விடயமாகு மென்கைபொருந்தாது. அன்றியும், வியாவகாரிக இந்திரியங்கள் தத்தம் கோளகைகளைவிட்டுக் காரியஞ்செய்வதில் சமர்த்தமாகா. சொப்பனாவத்தையில் அஸ்த, பாத, வாக்குகளின் கோளகைகள் நிச்சலமாக அந்நியனுக்குக் காணப்படுகின்றன; அஸ்தத்தில் ஓர் திரவியத்தை எடுத்துக் கூப்பிட்டுக் கொண்டு ஓடுகின்றான்; ஆகலின், சொப்பனத்தில் இந்திரியங்களின் உற்பத்தி அவசியம் ஒப்பவேண்டும்; அப்படியே சுகதுக்கமும், அவற்றின் ஞான

மும், சுகதுக்கங்களின் ஆசிரயமான பிரமாதாவும், சொப்பனத்தின்கட்டோற்றுகின்றன ; இல்லாத பதார்த்தங்களின்தோற்றம் உண்டாகமாட்டாது; அதனால் சகல திரிபுடிகளும் அந்தச் சொப்பனத்தின்கண்ணே உற்பத்தியாகின்றன. எவ்வளவு பிரம [ஹ்ரீ] ஞானமுண்டாமோ ! அவைகளின் விடயங்கண் முழுதும் அநிர்வசனீயமாக உற்பன்னமாகின்றன. விடயமின்றி யாதொருஞானமும் உண்டாகாதென்பதே அநிர்வசனீயக் கியாதியின் சித்தாந்தமாம். எவ்வளவு சொப்பன பதார்த்தங்கள் பிரதீதியாகின்றனவோ ! அவைகளினுற்பத்தி அங்கீகரிக்கின் சாக்கிர பதார்த்தங்களைப்போலச் சத்தியமாவதால் சொப்பன திருஷ்டாந்தத்தினுற் சாக்கிர பதார்த்தங்கள் மித்தையென்று சித்தாந்தத்திற் சொல்லாநிற்பது கூடாது. சொப்பனத்திற் பிரதீதியாகின்ற பதார்த்தங்களினுற்பத்தி ஒப்பாவிடின் இவ்வாருன தோடமின்றும் என்று சங்கிக்கில் :—

(90) யாதொரு வஸ்துவின் உற்பத்திக்கு எவ்வளவு தேசகாலாதி சாமக்கிரிவேண்டுமோ ! அவ்வளவு சாமக்கிரியு மின்றியே அது உண்டாமாகில் மித்தையெனப்படும். சொப்பனத்தில் யானை முதலியவைகளி னுற்பத்திக்கு யோக்கியமான தேசகாலங்களில்லை. வெகுகாலத்தில், வெகு தேசத்திலுண்டாக யோக்கியமான யானை முதலியவை க்ஷணமாத்திரகாலத்தில் சூட்சுமமான கண்டதேசத்தி லுண்டாகின்றன வாதலால் மித்தையாம். எப்படியும், சொப்பனுவத்தையில் காலதேசமும் அதிகமாகப் பிரதீதியாகின்றன ; அப்படியானுலும், அந்நிய பதார்த்தங்களைப்போலச் சொப்பனத்தில் அதிககாலம், அதிகதேசம் அநிர்வசனீயப் பிராதிபாசிகமாக உற்பன்னமாகின்றன. எதனுலெனின் ? விடயமின்றிப் பிரத்தியட்ச ஞானமுண்டாகமாட்டாது. சொப்பனத்தில் அதிகமான தேசகாலங்களின் ஞானமுண்டாகின்றது ; வியாவகாரிக தேசகாலங்கள் நியூனமாக வுள்ளன. இதனுல் பிராதிபாசிகமாக உற்பன்னமாகின்றன; இங்ஙனம் சொப்பனுவத்தையிலுண்டாகின்ற யாதொருபிராதிபாசிக தேசகாலங்களுண்டோ! அவை சொப்பனுவத்தையின் யானை முதலியவைகட்குக் காரணமல்ல. எதனுலெனின் ? யாதுகாரணமாமோ ! அது முன்னே உண்டாயிருக்கும்; காரியம் பின்னே உண்டாம். சொப்பனத்தின் தேசகாலங்களும், யானை முதலியவையும் ஒரே சமயத்திலுண்டாகின்றன ; ஆதலால், அவைகட்குக் காரிய காரணபாவங் கூடாது. வியாவகாரிக தேசகாலங்கள் நியூனமாய் உள்ளன. ஆதலால், அவை யானை முதலியவைகட்கு யோக்கியமாக இல்லை ; இங்ஙனம் தேசகால சாமக்கிரியின்றி உண்டாகின்றன வாதலால் சொப்பன பதார்த்தங்கள் மித்தையாம். இவ்வாற்றுல், சொப்பன பதார்த்தங்களி னுற்பத்தியில் வேறே ஒரு சாமக்கிரிகளுமில்லை ; நித்திராரூப தோஷசகிதமான அவித்தையே காரணமாம். யாதொன்று தோஷசகித அவித்தையினுல் ஜந்நியமாமோ ! அது சுத்தி ரஜதம்போல மித்தையாம் ; ஆதலால், சொப்பன பதார்த்தங்கள் சத்தியமல்ல : மித்தையாம். அவைகட்கு உபாதானகாரணம் அந்தக்கரணம், அல்லது சாட்சாதவித்தையேயாம். முதற்பட்சத்தில் சாட்சி சேதனஞ் சொப்பனத்திற்

கதிஷ்டானம்; இரண்டாம் பட்சத்தில் பிரமசேதனம் சொப்பனத்திற் கதிஷ்டானமாம்; இவ்வாற்றால், அந்தக்கரணத்தினுடைய அல்லது அவித்தையினுடைய பரிணாமமும், சேதனத்தினுடைய விவர்த்தமும் சொப்பனமாம். முன் சொல்லிய பட்சம் இரண்டனுள் இரண்டாம் பட்சத்தில் பிரமசேதனஞ் சொப்பனத்திற்கு அதிஷ்டானமென்றும், அவித்தை உபாதான காரணமென்றுஞ் சொல்லப்பட்டது; அங்கே அதிஷ்டான ஞானத்தினால் கற்பித நிவிர்த்தியாம். சொப்பனத்திற்கு அதிஷ்டானம் பிரமமாதலின், பிரமஞானமின்றி அஞ்ஞானிக்குச் சாக்கிரத்தில் சொப்பனம் நிவிர்த்தியாக வேண்டுவதில்லை.

(91) மற்றோர் சங்கை.—எப்படிச் சொப்பனத்தின் அதிஷ்டானம் பிரமமும், உபாதானகாரணம் அவித்தையுமோ! அப்படியே வேதாந்த சித்தாந்தத்தில் சாக்கிரத்தின் * வியாவகாரிக பதார்த்தங்கட்கும் அதிஷ்டானம் பிரமம்: உபாதானகாரணம் அவித்தை; ஆதலால், சாக்கிரம், சொப்பனம் இரண்டும் வியாவகாரிகமாக வேண்டும், அல்லது பிராதிபாசிகமாக வேண்டும். இங்ஙன மன்றிச் சாக்கிரபதார்த்தங்கள் வியாவகாரிக மென்றும், சொப்பன பதார்த்தங்கள் பிராதிபாசிகமென்றுங் கூறுகிற்பது எவ்வாறுகூடும் எனின்? இவ்விரண்டு சங்கையுங்கூடாது. எதனாலெனின்? பிரதமசங்கைக்கு சமாதானம்; நிவிர்த்தி இருவகையாம்; இது முன்னே ௭-வது செய்யுளின் உரையிலுங் கூறப்பட்டிருக்கின்றது. காரணத்தோடுகூடக் காரியத்தின் விநாசரூபமான அத்தியந்த நிவிர்த்தி சொப்பனத்திற்குச் சாக்கிரத்தில் பிரமஞானமின்றிக்கூடாது; ஆயினும், தடிகொண்டடிப்பதால் கடத்திற்கு மிருத்திகையில் லயம் எப்படி உண்டாமோ! அப்படிச் சொப்பனத்திற் கேதுவான நித்திராதோட நாசத்தினால், அல்லது சொப்பனத்தின் விரோதியான சாக்கிரத்தின் உற்பத்தியினால் அவித்தையின்கண் லயரூபமான நிவிர்த்தி சொப்பனத்திற்குப் பிரமஞானமின்றியே கூடும். சாக்கிர சொப்பனங்கள் இரண்டும் சமானமாக வேண்டுமென்னுஞ் சங்கையுங் கூடாது. எதனாலெனின்? சாக்கிரதேகாதி பதார்த்தங்களின் உற்பத்தியிலோ! அந்நியதோஷரகிதமான கேவலம் அநாதியவித்தையே உபாதானகாரணம்: சொப்பனபதார்த்தங்களிலோ ஸாதிநித்திராதோஷமும், அவித்தைக்குச் சகாயமாம்; ஆதலால், அந்நியதோஷரகிதமான கேவலம் அவித்தையினா லுண்டாவது வியாவகாரிகமென்றும், ஸாதிதோஷசகித அவித்தையினா லுண்டாவது பிராதிபாசிகமென்றுஞ் சொல்லப்படும். இவ்வாற்றால், சொப்பன பதார்த்தங்களில் சாக்கிர பதார்த்தங்களைப் பார்க்கிலும் விலட்சணத்தன்மை உண்டு; இவை முழுதும் மூவிதச

* வியாவகாரிக, பிராதிபாசிக, பாரமார்த்திக பேதத்தால் சத்தை மூவகைத்தாம்; அம்மூவகையுள், பிரமஞானமின்றி இரச்சுவாதிகளினவச்சின்ன சேதன ஞானத்தால் பாதமாகா நிற்கும் இரச்சு சர்ப்பாதிகள் பிராதிபாசிக சத்தை; பிரமஞானமின்றிப் பாதமாகாமல் பிரமஞானத்தால் பாதமாகாநிற்கும் அவித்தையும், அதன் காரியமாகிய ஆகாசாதிகளும் வியாவகாரிகசத்தை; மூன்று காலத்தும் பாதமாகாதது யாது! அது பாரமார்த்திகசத்தை; இப்படிப்பட்டது சேதனமாம்.

சத்தையை யொப்பித் தூலதிருஷ்டியினாற்சொன்னது. விசாரதிருஷ்டியினாற் பார்க்கில் மூவகைச்சத்தை கூடாது : சாக்கிர, சொப்பனங்கட்குப் பரஸ்பரம் விலட்சணத்தன்மையுங் கூடாது. வேதாந்த பரிபாஷாதி கிரந்தங்களில், முற் கூறிய பிரகாரமாகவே வியாவகாரிக, பிராதிபாசிக பதார்த்தங்கட்குப் பேதங் கூறியிருக்கின்றது. ஆதலால், மூன்றுசத்தையும் ஒப்பியிருக்கின்றது. வித்தியாரண்ய சுவாமிகளும் சீவசிருட்டியே சுகதுக்கத்திற்கேதுவாம், ஈசுரசிருட்டி சுகதுக்கத்திற் கேதுவன்று, சீவசிருட்டி பிராதிபாசிகம், ஈசுரசிருட்டி வியாவகாரிக மென்றருளிச் செய்திருக்கின்றனர். வேறே கிரந்தகாரரும் சத்தை மூன்று பிரகாரஞ் சொல்லியிருக்கின்றனர். சேதனத்தினுடைய சத்தை பாரமார்த்திகம்: சேதனத்தினும் வேறான சடபதார்த்தங்களின் சத்தை இருவகையாம்: அவைகளில் ஒன்று வியாவகாரிக சத்தை; மற்றொன்று பிராதிபாசிக சத்தை. சிருட்டியின் ஆதிகாலத்தில் ஈசுரசங்கற்பத்தினாலுண்டான கேவலம் அவித்தையின் காரியமாகிய பஞ்சபூதங்களும், அவைகளின் காரியங்களும் ஆகிய இவைகளின் சத்தை வியாவகாரிகசத்தை; தோஷசகிதமான அவித்தையின் காரியமாகிய சொப்பனமும், சுத்திரஜதாதிகளும் ஆகிய இவைகளின் சத்தை பிராதிபாசிக சத்தையாம்; இவ்வாறு சாக்கிர பதார்த்தங்களுக்கு வியாவகாரிக சத்தையும், சொப்பனபதார்த்தங்களுக்குப் பிராதிபாசிக சத்தையுங் கூறியிருக்கின்றனர்.

(92) தேசகால சாமக்கிரியின்றிச சொப்பனத்தில் யானை, பருவதங்கள் தோன்றுகின்றன; ஆதலால், அவை மித்தை. அப்படியே ஆகாசாதிப்பிரபஞ்ச சிருஷ்டியும் பிரமத்தினின்றுந் தோன்றுகின்றன; அப்பிரமத்தில் தேசகாலங்கள் லேசமுமில்லை. சொப்பனத்தில் யானை, பருவதாதிகளுக்கு யோக்கியமான தேசகாலங்களில்லையாயினும், சொற்ப தேசகாலங்களுண்டு: ஆகாசாதிகளின் சிருஷ்டியில் அவ்வளவுகூடத் தேசகாலங்களில்லை. என்னை? தேசகாலரகித பரமான்மாவினின்றும் ஆகாசாதிகளின் சிருஷ்டிகூறப்பட்டிருத்தலினென்க.

(93) தைத்திரீயசுருதியில் ஆகாசாதிகளின்சிருஷ்டி கிரமமாகக் கூறியிருக்கின்றன; அதிலும் தேசகாலங்களின் சிருஷ்டிகூறவில்லை. சூத்திரகாரர், பாஷியகாரர்களேனுங் கூறியிருக்கின்றனரோவெனின்? அவர்களும் தேசகாலங்களின் சிருஷ்டிகூறவில்லை; அதனால் தைத்திரீயசுருதிக்கும், சூத்திரகாரர், பாஷியகாரர்கட்கும் ஆகாசாதிப் பிரபஞ்சங்களின் உற்பத்தி தேசகாலசாமக்கிரியின்றி உண்டாமென்பதே அபிப்பிராயமாம்; ஆகலின், ஆகாசாதிகள் சொப்பனம்போல மித்தையாம்.

(94) மதுசூதனசுவாமிகள் தேசகாலங்கள் சாட்சாதவித்தையின் காரியமென்று கூறியிருப்பதுகொண்டு மாயாவிசிஷ்ட பரமான்மாவினின்றும் முன்னே தேசகாலங்கள் மாயையின் பரிணாமமாகத் தோன்றும், அதன்பின்னர் ஆகாசாதிகளின் சிருஷ்டிதோன்றும் என இங்ஙனம் பெறப்படுதலின் யோக்கியமான தேசகாலங்களாலேயே ஆகாசாதிப் பிரபஞ்சங்களின் உற்பத்தி சித்தித்ததே எனின்?

(95) அங்ஙனம் தேசகாலங்கள் முன்னேயுண்டாய், அதன்பின்னே ஆகாசாதிகளுண்டாம் என்பது, மதுசூதன ஸ்வாமிகளின் அபிப்பிராயம் அன்று. எதனாலெனின்? ஆகாசாதிகளின் உற்பத்திக்கு முன்னே தேசகாலங்கள் உண்டாமெனின்? ஆகாசாதிகளின் உற்பத்தி காலத்திற்குப் பூர்வகால வுபகிதமான பரமான்மா தேசகாலங்கட்கு அதிஷ்டானமா மென்பது சித்திக்கும்; அது சித்திக்கவே, தேசகாலங்களின் உற்பத்தியில் பூர்வகாலமுண்டென்றவரும். காலத்தின் உற்பத்தியே இல்லாதபோது பூர்வகாலம் எவ்வாறு சித்திக்கும்; இதனால் ஆகாசாதிகள் உண்டாவதற்குப் பூர்வகாலத்தில் தேசகாலாதிகள் உண்டெனல் கூடாதாகலின் என்க.

(96) மற்றியாதோ! மதுசூதன ஸ்வாமிகளின் அபிப்பிராயம் எனின்? பூதபௌதிகப் பிரபஞ்சந் தோன்றி நிற்பதுபோலத் தேசகாலங்களுந் தோன்றி நின்றன. ஆன்மாவுக்கந்நியமாக யாதொன்றும் நித்தியமாகாமையின், தேசகாலங்களும் நித்தியமல்ல: உண்டாகாதவை தோற்றரவாகா வாகலின் ஆகாசாதிகள் போலத் தேசகாலங்கட்கும் உற்பத்தியுண்டு; ஆதலால், அவித்தையின் காரியமாமென்பது மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயமாம் என்க.

(97) அத்தேசகாலங்கள் மாயையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம். யாது விவர்த்தமாம் அது ஒன்றிற்குக்காரணமாகாது; ஆகலின், ஆகாசாதிப்பிரபஞ்சத்தின் உற்பத்தியில் தேசகாலங்கட்குக் காரணத்தன்மை பொருந்தாது. அன்றியும், காரணம் முன்னே யுண்டாகும்: காரியம் பின்னர் உண்டாகும். ஆகாசாதிப்பிரபஞ்சம் உண்டாவதற்குமுன்னே தேசகாலங்கள் உண்டாமென்னல் பொருந்தாது; இதனானும் தேசகாலங்கட்கு ஆகாசாதிப் பிரபஞ்சகாரணத்தன்மை பொருந்தாது. மற்றெங்ஙனெனின்? சொப்பனப் பிதா புத்திரன்போலத் தேசகாலத்தோடுகூட ஆகாசாதிப்பிரபஞ்சம் மாயாவிசிட்டமான பரமான்மாவினின்றும் உற்பன்னமாம். யாதானும் ஒரு பதார்த்தம் யாதானும் ஒரு தேசத்தில், யாதானும் ஒரு காலத்தில் உண்டாகாநிற்கும்: அந்நியதேசத்தில், அந்நியகாலத்தில் உண்டாகாது; இவ்வாறு சகலபதார்த்தங்களும் பிரளயகாலத்தில் உண்டாகா: சிருஷ்டிகாலத்தில் உண்டாகும். ஆதலால் தேசகாலங்கட்குக் காரணத்தன்மையுங் காணப்படுகின்றது; அதுவும், எந்த மாயையினின்றும் தேசகாலத்தோடுகூடப் பிரபஞ்சம உற்பத்தியாகின்றதோ! அந்த மாயையினாலேயே அத்தேசகாலங்களில் காரணத் தன்மையும், அந்நியமான பிரபஞ்சத்தில் காரியத்தன்மையுங் காணப்படுகின்றன; ஆதலால் ஆகாசாதிப் பிரபஞ்சத்திற்குத் தேசகாலங்கள் காரணமல்ல.

(98) சங்கை - உண்டாகாத பதார்த்தந் தோற்றரவாகாது. சித்தாந்தத்திலோ அது அங்கீகாரமில்லை; அங்ஙனம் அங்கீகரிக்கில் அசத்கியாதியாம். அன்றியும், தேசகாலங்களில் காரணத்தன்மை யில்லையாயின் சசசிருங்காதிகள்போல மாயையின்வலியாலும் அது தோற்றரவாக வேண்டுவதில்லை; தோற்றரவாகலின், தேசகாலங்கள் சர்வப்பிரபஞ்சத்திற்குங் காரணங்களாம். அங்ஙனமன்று பிரமமே பிரபஞ்சத்திற்குக் காரணம்; பிரமத்தின் கார

ணத்தன்மை தேசகாலங்களில் தோற்றரவாகாநின்றதென்று சித்தாந்திசொல்லில் அதுவும் பொருந்தாது; ஏதனாலெனின்? எப்படித் தேசகாலங்கட்கு அதிஷ்டானம் பிரமமோ! அப்படிச சர்வப்பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டானம் பிரமம். தேசகாலங்களில் மாத்திரந்தான் பிரமத்தின் காரணத்தன்மை தோற்றரவாம், அந்நியத்தில் தோற்றரவாகாதென்பதற்கு ஓரேதுவும் இல்லை. ஆதலால், சர்வப்பிரபஞ்சத்திலும் அக்காரணத்தன்மை ஓரேதன்மையாகத் தோற்றரவாதல் வேண்டுமேயல்லாமல் ஒன்றிற் காரணத்தன்மையும் ஒன்றிற் காரியத் தன்மையுமாக இவ்வாறு தோற்றரவாதல் கூடாது. அன்றியும், தேசகாலங்களில் காரணத்தன்மை இல்லை: பிரமத்தின்கண்ணே தான் காரணத்தன்மை உண்டு; அது தேசங்களிற் றோன்றுகின்றதெனின்? அது அந்நியதாக்கியாதி என்றுவரும். சித்தாந்தத்தில் அது அங்கீகரிக்கவில்லை. ஈண்டு அந்நியதாக்கியாதி ஒப்பிடில், சுத்தியில் அநிர்வசனீயரஜத உற்பத்தி சித்தாந்தத்தில் ஒப்பினது நிஷ்பலமாம் என்னை? அந்நியதாக்கியாதி மதம் இருவகைத்து; ஒன்று அந்நியதேசத்திலுள்ள பதார்த்தம் அந்நியதேசத்திற் றோன்றுவது: அது காந்தையின் கரத்திலுள்ள இரஜதம் எதிரே சுத்தி தேசத்திற் றோன்றுவது. மற்றொன்று அந்நியபதார்த்தம் அந்நியரூபமாகத் தோன்றுவது; அது இப்பியே வெள்ளியுருவாகத் தோன்றுவது. இவ்வாறு சகல பிரம [ஹர்]ஸ்தலத்திலும் அந்நியதாக்கியாதியால் நிர்வாகங்கூடும்; கூடவே, அநிர்வசனீயரஜதாதிகளின் உற்பத்திகூறுவது அசங்கதமாம். விஷயத்தின் சமானாகாரமாக ஞானம் உண்டாகும்: அந்நியவஸ்துவில் அதற்கந்நிய ரூபமாக ஞானம் உண்டாகாது. ஆதலால் இரஜதாகார ஞானத்திற்கு விடயமான அநிர்வசனீயரஜதமும் உற்பத்தியாகின்றதென்னும் அத்வைதசித்தாந்தத்தில் காரணத்திற்கு அந்நியமாகிய தேசகாலங்களில் பிரமத்தின்காரணத்தன்மை ஞானம் பொருந்தாதாகலின் தேசகாலங்களிற் றோன்றுகிற்குங் காரணத்தன்மையானது உண்டாகாமற் பாநமாகின்றதென்பதும், பிரமத்திலுள்ளது பாநமாகின்றதென்பதுங்கூடாது. தேசகாலங்களிலேயே காரணத்தன்மை உண்டு; அது பாநமாகின்றது. இதனால், ஆகாசாதிப் பிரபஞ்சத்திற்குத் தேசகாலங்கள் காரணமல்லவென்கை அசங்கதமாம் என்னின்? அதுகூடாது.

(99) ஏதனாலெனின்? பிரமத்தின் காரணத்தன்மை தேசகாலங்களிற் றோன்றுகின்றது; அஃதெங்ஙனமெனின்? செம்பரத்தம் பூவைச்சம்பந்தித்த ஸ்படிகத்தில் புஷ்பத்தின் செம்மைநிறந் தோன்றுழி, அநிர்வசனீயமாக அஃது உற்பத்தியாயிற்றென்று அங்கீகாரமில்லை. அந்நியதாக்கியாதியென்றே அங்கீகரித்திருக்கின்றது; அந்தப்படி சொப்பனத்தின்கண் மித்தியாபதார்த்தங்களில் சத்தியத்தன்மை தோற்றரவாகின்றதால் அங்கே அப்பதார்த்தங்களில் அநிர்வசனீயமாகச் சத்தியத்தன்மை உற்பத்தியாம் என்னின்? அது சத்தியம், மித்தையாம் என்னும் வசனம்போலும். ஆகலின், மித்தியாபதார்த்தங்களிற்றோன்றும் சத்தியத்தன்மையின் ஞானம் அந்நியதாக்கியாதியென்றே எங்ஙனம் கொள்ளற்பாலதோ! அங்ஙனம் அதிஷ்டானப்பிரமத்தின் காரணத்

தன்மை தேசகாலங்களில் அந்நியதாக்கியாதியென்றே கொள்ளற்பாலதாம்; ஈண்டு அந்நியதாக்கியாதி ஒப்பிடில் சகல பிரம [ஹ்ரம] ங்களிலும் அந்நிய தாக்கியாதியே ஒப்பவேண்டுமென்னல் கூடாது. என்னே? சுத்தி ரஜதாதி களில் அந்நியதாக்கியாதி ஒப்புவதில் விடயத்தின் விலட்சண ஞானங்கூடா தென்னுந் தோடங்கூறி யிருக்தலின் என்க. எங்கே ஸ்படிகத்தில் செம்மை நிறத்தின் ஞானம் உண்டு! அங்கே செம்பரத்தம்பூவின் சம்பந்தம் ஸ்படிகத் தில் உண்டு. எப்போது அந்தக்கரணத்தின் விருத்தி செம்பரத்தம்பூவின் ஆகாரமாமோ! அப்போது அவ்விருத்திக்கு விடயமாகவே செம்பரத்தம் பூவின் சம்பந்தியான ஸ்படிகமும் இருப்பதால் புஷ்பத்தின் செம்மைநிறத் தன்மை ஸ்படிகத்திற் றோன்றுகின்றது. அப்படிச்சுத்தியிலோ! இரஜத ரூபஞானங்கூடாது. என்னே? சுத்தியினிடத்து அநிர்வசனீயமாக அல்லது, வியாவகாரிகமாக இரஜதம் அந்நிய மதத்தில் இல்லை: சுத்திதான் உண்டு; அச்சுத்தியின் சம்பந்தத்தால் சுத்தியின் சமானுகாரமாகவே அந்தக்கரணத் தின் விருத்தி உண்டாகும். இரஜதாகாரமாக அந்தக்கரணத்தின் விருத்தி உண்டாகாது. ஆதலால் அவித்தையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த் தமுமாக அநிர்வசனீய ரஜதமும், அதன் ஞானமும் உற்பன்னமாம் இதனால் எங்கே இரண்டுபதார்த்தங்களின் சம்பந்தம் உண்டு! அங்கே ஒன்றன் தருமம் மற்றொன்றில் தோற்றரவாம்; அஃது அந்நியதாக்கியாதியேயாம். எங்கே இர ண்டுபதார்த்தங்களின் சம்பந்தம் இல்லை! அங்கே அந்நியதாக்கியாதியில்லை: அநிர்வசனீயக்கியாதியே. எங்ஙனம் புஷ்ப சம்பந்தியான ஸ்படிகத்தில் புஷ் பத்தின் செம்மைநிறத்தன்மை பிரதீதியாகின்றதோ! அங்ஙனம் சொப்ப னத்தின் யானை, பருவத முதலியவற்றிற்கும் அதிஷ்டான சேதனத்தோடு சம் பந்தம் உண்டாகின்றது. ஆகலின், சேதனதர்மமாகிய சத்தியத்தன்மையும் சேதனசம்பந்திகளான யானை, பருவத முதலியவற்றிற் றோன்றுகின்றது; அஃதந்நியதாக்கியாதியேயாம்; இவ்வாறு அதிஷ்டான சேதன தர்மமான காரணத்தன்மையும், அதிஷ்டான சேதன சம்பந்திகளான தேசகாலங்க ளிற் றோன்றுகின்றது.

(100) அதிஷ்டான சேதன சம்பந்தம் சர்வப்பிரபஞ்சத்திற்கும் உண்டு. ஆதலால், சம்பந்தி தர்மமாகிய காரணத்தன்மை அந்நியதாக்கியாதியால் சர் வப்பிரபஞ்சத்திலுந் தோன்றவேண்டுமென்று பூர்வஞ் சங்கித்தது கூடாது. என்னே? சொப்பனத்தில் பிதா ரூபமாகவும், புத்திர ரூபமாகவுந் தோன்று கின்ற இரண்டு சரீரங்கட்கும் சொப்பனத்தின் அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்த முண்டேனும், பிதாசரீரத்தில் அதிஷ்டான சேதனத்தின் காரணத் தன்மை தோன்றுகின்றது; புத்திர சரீரத்தில் அது தோன்றாமல் பிதாவினு லுண்டான புத்திரனென்று புத்திரசரீரத்தில் "காரியத்தன்மை தோன்றுகின் றது. இவ்வாறு அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தம் சர்வத்திற்கும் உண் டேனும் தேச காலங்களில் சேதன தர்மமான காரணத்தன்மையும், மற்ற வற்றிற் காரியத்தன்மையுந் தோன்றுகின்றன.

(101) அல்லது, அதிஷ்டான சேதனம் அசங்கம்; அஃதொன்றற்கும் பரமார்த்தமாகக் காரணமன்று. மாயையின்கண்ணுள்ள ஆபாசமே காரணமாம்; ஆயினும், ஆபாச சொரூபம் மித்தை; யாதொன்று தானே மித்தையாம் அது மற்றொன்றற்குக் காரணமாதல் கூடாது. பரமான்மாவில் பிரபஞ்சத்தின் காரணத்தன்மை இருக்குமாயின், அது பிரமையினால் தேசகாலங்களிற் றோன்றக்கூடும்; அப்பரமான்மா காரணமுதலிய தர்மரகித அசங்கமாகலின், அதனது காரணத்தன்மை தேசகாலங்களிற் றோன்றுகின்றதென்னும் வார்த்தை பொருந்தாது. பின்னையோ! மாயையாற் பண்ணப்பட்ட அநிர்வசனீய தேசகாலங்கள் அநிர்வசனீய காரணத்தன்மை யுடையனவாயுள்ளன. பரமார்த்தமாகத் தேசகாலங்கள் காரணமல்ல. புத்திரனில்லாத ஒரு புருடன் சொப்பனத்தில் புத்திர பௌத்திரர் இருவரையுங் கண்டானாக; அங்கே புத்திர, பௌத்திர சரீரங்கள் அநிர்வசனீயமாக வுண்டாயிருக்கின்றன. புத்திர சரீரத்தில் பௌத்திர சரீரத்தின் காரணத்தன்மை அநிர்வசனீயமாக வுண்டா யிருக்கின்றது; அங்கே பரமார்த்தமாகப் புத்திர, பௌத்திர சரீரங்கள் ஒன்றற்கொன்று காரியகாரண பாவமாக எப்படி உண்டாயிருக்கவில்லையோ! அப்படி அநிர்வசனீயமாகிய காரணம் தேசகாலங்களிற் றோன்றுகின்றது. பரமார்த்தமாகத் தேசகாலங்களும், ஆகாசாதிப் பிரபஞ்சங்களும் காரிய காரணபாவமாக இருக்கவில்லை; இவ்வாற்றால், தேசகால சாமக்கிரியின்றிச் சாக்கிரப்பிரபஞ்சம் உண்டாகின்றதாகலின், சொப்பனம்போலச் சாக்கிரமும் மித்தையாம்; அன்றியும், சொப்பன ஸ்திரீ, புத்திராதிகள் சொப்பனத்திலேயே சுகதுக்கங்கட் கேதுவாயிருந்து சாக்கிரத்தில் அபாவமாவது போலச் சாக்கிர பதார்த்தங்களும் சொப்பனத்தில் அபாவமாவதால் இரண்டும் சமானமாம்.

(102) சாக்கிரத்தினின்றும் சொப்பனம் உண்டாய் மீண்டு சாக்கிரம் உண்டாமாயின், அங்கே முன் சாக்கிரத்திலுள்ள பதார்த்தங்களே சொப்பன * வியவகித மற்றைச் சாக்கிரத்திலுள்ளன; முன் சொப்பனபதார்த்தங்கள் மற்றைச் சொப்பனத்திலில்லை ஆகலின், சொப்பன பதார்த்தங்களிலும் சாக்கிர பதார்த்தங்கள் விலட்சணமாமென்பர், அச்சங்கையும், சித்தாந்தத்தை யறியாமையினால் உண்டாகின்றது. என்னை? சம்சாரப்பிரவாகம் அநாதி: அதில் சீவர்கட்குச் சாக்கிர சொப்பன சுழுத்திகள் உண்டாகின்றன; சாக்கிரகாலத்திற் சொப்பனசுழுத்திகளும், சொப்பனகாலத்தில் சாக்கிர சுழுத்திகளும், சுழுத்திகாலத்திற் சாக்கிர சொப்பனங்களும் நஷ்டமாகின்றன, சொப்பன சுழுத்தி யுண்டாமாயின் அப்போது சாக்கிர காலத்திலுள்ள ஸ்திரீ, புத்திர, தனாதிகள் நீங்காமலிருக்கின்றன: அவைகளின் ஞானமே நீங்குகின்றன; மீண்டு சாக்கிரம் உண்டாமாகில் அப்போது முந்தின சாக்கிரத்திலிருந்த பதார்த்தங்களின் ஞானம் உண்டாகின்றன என அஞ்ஞானிகட்கு இவ்வாறான திருஷ்டி உளதாகலின் அச்சங்கையும் உண்டாகின்றதென்க.

---

* வியவகிதம்=மறைப்புடையது.

(103) சித்தாந்தமோவெனின்? சகல பதார்த்தங்களும் சேதனத்தின் விவர்த்தம்: அவித்தையின் பரிணாமமாம். ஆகலின், சுத்தி ரஜதம்போல எந்தக் காலத்தில் யாதொரு பதார்த்தம் பிரதீதியாகின்றதோ! அந்தக்காலத்தில் அதிஷ்டான சேதனத்தின் ஆசிரிதமான அவித்தையின் தமோகுணக்கூறு கடாதி விஷயரூபமாகவும், சத்துவகுணக்கூறு ஞானரூபமாகவும் பரிணமிக்கின்றன. இவ்வாற்றால், சாக்கிர பதார்த்தங்களும், அவைகளின் ஞானங்களும் கூடவே யுண்டாய்க் கூடவே நஷ்டமாகின்றன; இது வேதத்தின் கூடமான சித்தாந்தமாகலின், சாக்கிரபதார்த்தம் மற்றைச் சாக்கிரத்தில் உண்டாமென்னல் கூடாது.

(104) சொப்பனத்தினின்றும் விழித்த புருடனுக்குப் பூர்வம் யாதொரு பதார்த்தமிருந்ததோ: அதுவே இந்தப் பதார்த்தமென்று இவ்வாறு பிரத்தியபிஞ்ஞை யுண்டாகின்றதாதலால் சாக்கிர பதார்த்தங்கள் ஞானசமகாலத்தில் உற்பத்தி நாசமுடையனவல்ல, ஞானத்திற்கு முன்னே உள்ளன, ஞான நாசத்தின் பின்னரும் உள்ளன எனத்தோற்றினும் சொப்பனத்தில் தற்காலத்திலுண்டான பருவதம், சமுத்திர முதலியவற்றில் நான் ஜநித்தற்கு முன்னே இவை உண்டாயினவென்று வெகுகால ஸ்திரத்துவ பிராந்தி உண்டாகின்றதாகலால் எவ்வவித்தையினால் மித்தையாகிய பருவதம், சமுத்திர முதலியவை உண்டாயினவோ! அவ்வவித்தையினால் வெகுகால ஸ்திரத்தன்மையும், ஸ்திரத்தன்மையின் ஞானமும் அநிர்வசனீயமாக எப்படி உண்டாகின்றனவோ! அப்படிச் சாக்கிர பதார்த்தங்களினிடத்தும் அநேக கால ஸ்திரத்தன்மை அவித்தையின் வலியால் மித்தையாகப் பதார்த்தங்களோடு கூடவே யுண்டாய்த் தோற்றரவாகின்றது. சொப்பன பதார்த்தங்கள் சாட்சாதவித்தையின் பரிணாமம். சாக்கிர பதார்த்தங்கள் அப்படிச் சாட்சாதவித்தையின் பரிணாமமாக இல்லாமல் கடத்தினுற்பத்தி தண்ட சக்கர குலாலரால் உண்டாகின்றது; அப்படியே சர்வ பதார்த்தங்களினுற்பத்தியும் தத்தங் காரணங்களால் உண்டாகின்றது; சாட்சாதவித்தையினாலல்ல: சாட்சாதவித்தையின் பரிணாமமாமேல் ஆகாசாதிக்கிரமத்தால் பஞ்சபூதங்களினுற்பத்தியும், பஞ்சீகரணமும், பஞ்சீகரணத்தால் பிரமாண்டத்தினுற்பத்தியுஞ் சுருதியிற் கூறியிருப்பது அசங்கதமாம், ஆதலால் ஈசுரசிருஷ்டியாகிய சாக்கிர பதார்த்தங்கள் தத்தம் உபாதானங்களின் பரிணாமங்களாம்; சாட்சாதவித்தையின் பரிணாமமல்ல. சொப்பனத்தின் சகல பதார்த்தங்களும் அவித்தையின் பரிணாமங்களாம்; அவைகட்கு அவித்தை ஒன்றே உபாதானமாகலின் அப்பதார்த்தங்கட்கும், அவற்றின் ஞானங்கட்கும் ஒரே அவித்தையினால் ஒரே காலத்தில் உற்பத்தி பொருந்தும். சாக்கிர பதார்த்தங்கள் வெவ்வேறு காரணங்களால் உற்பத்தியாகின்றன. காரியத்திற்கு முன்னே காரணம் உண்டாயிருக்கும்: காரணத்திற் காரியம் லயமாம் ஆதலால் கடத்தினுற்பத்திக்கு முன்னும், கடநாசத்திற்குப் பின்னும் மண்டிரளை உள்ளது; இவ்வாறு, சில பதார்த்தங்கள் அற்பகால ஸ்திரமாயும், சில தீர்க்ககால ஸ்திரமாயும், காரிய

காரணமாயும் உள்ளன: சொப்பன பதார்த்தங்கள் அப்படியில்லையே யெனின்? அது கூடாது.

(105) என்னை? சாக்கிர பதார்த்தங்கள் போலச் சொப்பன பதார்த்தங்களிலுங் காரிய காரணத்தன்மை தோற்றுகின்றன. அஃதெங்ஙனம்? ஒருவனுக்கு எனது பசு கன்றீன்றது, அல்லது எனது ஸ்திரீ பிரசவித்தாள் என்று இவ்வாறான சொப்பனம் உண்டாகில் அங்கே பசுவினிடத்தும், ஸ்திரீயினிடத்துங் காரணத்தன்மையின் றோற்றரவும், வெகுகால ஸ்திரத்தன்மையின் றோற்றரவும் உண்டாகின்றன. கன்றினிடத்தும், புத்திரனிடத்துங் காரியத்தன்மையும், அற்பகால ஸ்திரத்தன்மையுந் தோற்றரவாகின்றன: முழுதும் சமகாலமாம். ஒன்று ஒன்றற்குக் காரணமாக இல்லை. பசு, கன்று, ஸ்திரீ முதலியவற்றிற்கு அவித்தையே உபாதானம்; இதுபோலச் சாக்கிரத்திலும் சில பதார்த்தங்கள் அதிககால ஸ்தாயியாயும், காரணரூபமாயும், சில பதார்த்தங்கள் அற்பகால ஸ்தாயியாயும், காரிய ரூபமாயும் சொப்பனம்போலத் தோற்றரவாகின்றன: ஒன்று ஒன்றற்குக் காரிய காரணமாக இல்லை; பின்னையோ சாட்சாதவித்தையின் காரியமாம்.

(106) சுருதியிற் கிரமமாகச் சிருஷ்டி கூறியிருப்பது அத்வைதத்தைப் போதித்தற்பொருட்டேயாம்: வேறபிப்பிராயங் கொண்டல்ல. சகல பதார்த்தங்களும் பரமான்மாவினின்றும் உண்டாயிருக்கின்றன வாகலான், அதன் விவர்த்தமாம்; யாது யாதொன்றன் விவர்த்தமோ! அது அதனது சொரூபமேயாதலால் சகல நாமரூபங்களும் பிரமத்தின் வேறல்ல, பிரமமே யென்னும் பொருளை உணர்த்துதற் பொருட்டுச் சிருஷ்டி கூறிற்று. கிரமமாகச் சிருஷ்டி கூறினது ஸ்தூலதிருஷ்டியுடையோர்க்கு விபரீதக் கிரமமாக லய சிந்தன நிமித்தம் அதற்கும் அத்வைத ஞானமே பிரயோஜனம்; இதனால் கிரமமாகக் கூறுவதிலும் அபிப்பிராயமில்லை: சிருஷ்டியிற் கிரமமில்லை; சகல பதார்த்தங்களும் ஓரவித்தையினு லுண்டாயிருக்கின்றன; அவைகட்குப் பரஸ்பரங் காரியகாரணபாவமும், பூர்வோத்தரபாவமும் அவித்தையாற் பண்ணப்பட்ட சொப்பனம்போலும் மித்தையாகத் தோற்றரவாகின்றன. சகல பதார்த்தங்களும் சாட்சாதவித்தையின் காரியமாம். சுத்தி ரஜதம்போலும், அல்லது சொப்பனம்போலும் அவித்தையா விருத்தி உபகிதமான சாட்சியினால் அவைகள் பிரகாசிக்கின்றன; ஆதலால், சகல பதார்த்தங்களும் சாட்சிபாசியங்களாம். ஞானகார, ஞேயாகாரமான அவித்தையின் பரிணாமங்கள் ஒரேகாலத்தி லுண்டாய்க் கூடவே நஷ்டமாகின்றன. அதனால் எப்போது பதார்த்தஞானமுண்டாகின்றதோ அப்போதே ஞானத்திற்கு விஷயபதார்த்தமு முண்டாகின்றது: அந்நியகாலத்தி லுண்டாகவில்லை; இதையே திருஷ்டி, சிருஷ்டிவாதமென்பர். இந்தப்பட்சத்தில் பதார்த்தங்களின் அஞ்ஞாத சத்தை இல்லை; ஞாதசத்தைதானுண்டு, அத்வைதவாதத்தில் இது சித்தாந்த பட்சமாம்; இந்தப்பட்சத்தில் இரண்டு சத்தை தானுண்டு; மூன்றில்லை எதனாலெனின்? அநான்ம பதார்த்தங்கண் முழுவதும் சொப்பனம்போலப் பிராதிபாசிகமாம்: பிரதீதிகாலத்தினன்றி அந்நியகாலத்தில் அநான்மாவிற்குச்சத்தை

இல்லை; இதனால் மூன்றாவதான வியாவகாரிகசத்தை இல்லை; இந்தப்பட்சத்தில் சகல அநான்மபதார்த்தங்களும் சாட்சிபாசியமாம்: பிரமாதா பிரமாணங்கட்கு விடயமாகயாதொன்றுமில்லை. எதனாலெனின்? அந்தக்கரணம், இந்திரியம், கடாதிகள் ஆகிய சகலதிரிபுடிகளும், அவைகளின் ஞானமும் சொப்பனம்போல் ஏககாலத்திலுண்டாகின்றன: அவைகட்கு விஷயவிஷயீபாவங் கூடாது. கடாதி விடயங்கள், நேத்திராதி இந்திரியங்கள், அப்படியே அந்தக்கரணம் இவைகள் ஞானத்திற்கு முன்னரே யிருந்தால் நேத்திராதி வழியாக அந்தக்கரணத்தின் விருத்திரூப ஞானம் பிரமாண ஜந்நியமாம்; அவ்வந்தக்கரணம், இந்திரியம், விடயம் இம்மூன்றும் ஞானத்திற்குப் பூருவகாலத்தில் இருக்கவில்லை: ஞானசம காலத்திலேயே சொப்பனம்போலத் திரிபுடி உண்டாகின்றன. ஆதலால், திரிபுடி ஜந்நிய ஞானம் யாதொன்றுமில்லை. அங்ஙனமாயினும், ஞானத்திற் சொப்பனம்போலத் திரிபுடி ஜந்நியத்தன்மை பிரதீதியாகின்றது. ஆதலால், சாக்கிர பதார்த்தங்கள் சாட்சிபாசியமாம்: பிரமாண ஜந்நியஞானத்திற்கு விடயமல்ல; இதனாலும் சொப்பனத்திற்குச் சமானமாக மித்தையாம் என்பது பெறப்படும். அன்றியும், சாக்கிரத்தில எவ்வளவோ பதார்த்தங்கள் மித்தையா ரூபமாக அறியப்பட்டிருக்கின்றன: வேறு சில பதார்த்தங்கள் சத்திய ரூபமாகவே அறியப்பட்டிருக்கின்றன; அவைகள் அநாதிகால பதார்த்தங்கள்; அவைகளிற் சில நஷ்டமுமாகின்றன: வேறே அவைகட்குச சமானமாக உற்பன்னமுமாகின்றன. இவ்வாறான பிரபஞ்சதாரை ஓர்போதும் நாசமாவதில்லை. எவனுக்கு ஞானமுண்டாமோ! அவனுக்குப் பிரபஞ்சந் தோன்றுவதில்லை; மறைறயோர்க்குத் தோற்றவாம்; அந்த ஞானத்திற்குச் சாதனம் வேதமும், குருவுமாம்; அவைகளால் பரமசத்தியம் பெறப்படும் என்று இவ்வாறான தோற்றரவு சாக்கிரத்திலுண்டாகின்றது; அங்கே சில பதார்த்தங்கட்கு மித்தியாத்தன்மை, சில பதார்த்தங்கட்கு நாசம், சிலவற்றிற்கு உற்பத்தி, வேதத்தினாலும், குருவினாலும் பரமபுருஷார்த்தப்பிராப்தி இவை முழுவதும் அவித்தையினாற் பண்ணப்பட்ட சொப்பனம் போல மித்தையேயாம். வாசிட்டத்தில் க்ஷணமாத்திர சொப்பனத்தில் வெகு காலத்தோற்றரவும், சாக்கிரம்போல நிலையாகப் பதார்த்தங்களின் றோற்றரவும், அவற்றால் வெகுகாலம் போகமும் உண்டாமென்று அநந்த இதிகாசம் உண்டு. இவ்வாற்றால். சாக்கிரபதார்த்தங்களுக்குச் சொப்பனத்தைப் பார்க்கிலும் கிஞ்சித்தும் விலட்சணத்தன்மை இல்லை ஆன்மாவுக் கந்நியமான சகலமும் மித்தையாம்; ஆகவின், "சொப்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்" என்றார். இவ்வாறு சொப்பனத்தைப்பற்றி விசாரசாகர கிரந்தத்தில் விசாரிக்கப்பட்டிருக்கின்றது.

இனி விருத்திப் பிரபாகர கிரந்தத்தில் எடுத்துக் கிஞ்சித்துக் காட்டுதும்: அத்வைத வாதத்தின் முக்கிய சித்தாந்தம், சேதனம் சத்தியம்; அதற்குப் பின்னமான சகலமுமித்தை: அநிர்வசனீயத்தின் மித்தையென்பர். ஆதலால், சேதனத்திற்குப் பின்ன பதார்த்தங்களைச் சத்தியமென்று சொல்லுதல் அப்பிரசித்த கற்பனை. சேதனத்திற்குப் பின்னபதார்த்தங்களில் அநிர்வசனீ

யத்தன்மை அதிப்ரசித்தமாம். யுத்தியினால் விசாரஞ்செய்யும்போது யாதோர் அநான்ம பதார்த்தங்களின் சொரூபமும் சித்திக்கவில்லை; தோற்றரவாகின்றன வாதலால் சகல அநான்ம பதார்த்தஙகளும் அநிர்வசனீயமாம். சித்தாந்தத்தில் அநான்ம பதார்த்தங்களொன்றும் சத்தியமல்ல; கந்தர்வநகரம்போலச் சகல பிரபஞ்சமும் திருஷ்ட நஷ்ட சுபாவமாம். சொப்பனத்தைப்பார்க்கிலும் சாக்கிர பதார்த்தங்களிற் கிஞ்சித்தும் விலட்சணத்தன்மையில்லை. சுத்தி ரஜதம் பிராதிபாசிகம்: காந்தையின் கரமுதலியவற்றிலுள்ள இரஜதம் வியாவகாரிகம். இவ்வாறு அநான்ம பதார்த்தங்களில் மித்தியாத்வ, சத்தியத்வமான விலட்சணத்தன்மை பரம்பரங் கூறியிருக்கின்றது, அது ஸ்தூலபுத்தி யுடையோர்க்கு அத்வைதபோதத்தில் பிரவேசத்தின்பொருட்டு அருந்ததி நியாயத்தாற் கூறினதாம். என்னை? ஸ்தூலபுத்தி யுடையோனுக்கு முன்னமே முக்கிய சித்தாந்த ரீதியைச்சொல்லில் அற்புதமான அர்த்தத்தைக்கேட்டு அநான்மாவில் சத்தியத்வபாவனையுடைய அப்புருடன் சாஸ்திரத்திற் பராமுகனாய்ப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனாவன்; வியாவகாரிக பிராதிபாசிக பேதத்தால் அநான்ம பதார்த்தங்களுக்கு இருவித சத்தைகூறிச சேதனத்திற்குப் பாரமார்த்திகசத்தைகூறிடில் சேதனத்தினும் நியூனசத்தை பிரபஞ்சத்திற்கு உளதென்பது புத்தியில் ஆரூடமானபின் சொப்பனமுதலிய திருஷ்டாந்தத்தால் சகல அநான்ம பதார்த்தஙகளையும் பிராதிபாசிகமாக அறிந்து நிஷேதவாக்கியங்களால் அவற்றிற்குச் சத்தாஸ்பூர்த்தி யின்மையை அறிந்து கொள்ளுவனென்றே சத்தை பேதம் கூறினர். அநான்ம பதார்த்தங்கட்குப் பரம்பரம் சத்தை பேதம் கூறுவதில் அத்வைதசாஸ்திரத்திற்குத் தாற்பரியமில்லை என்றிவ்வாறு விருத்திப் பிரபாகரகிரந்தத்திற் கூறியிருக்கின்றமை காண்க.

"சொப்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்" எ-கு, உ-ம். வாசிட்டம்,—

"வானகிக ராயனைத்துங் கற்பனையாத் திரம்லாவா வளரா நின்ற, தானசக நனவுதனிற் கனவுபோ லிராகவனே யறிதி யன்றே, யீனமுறப் பிறப்பில்லை யிறப்பில்லை யெவ்விடத்து மொன்று மென்றும், ஞானபர மார்த்தத்தா லிவையெல்லாம் பொய்யாக நண்ணு மன்றே."—எனவரும்

மற்றும் வருவனவற்றுற் காண்க. (45)

(107) [இனி அபவாதவிலக்கணம்.]

அரவன்று கயிறென் றுற்போ லாளன்று தறியென் றுற்போல்
குரவன்சொல் லுபதேசத்தாற் கூறுநூ லொளியைக் கொண்டு
புரமன்று புவன மன்று பூதங்க ளன்று ஞானத்
திரமென்னும் பிரம மென்று தெளிவதே யபவா தங்காண். (46)

இ-ள். அரவு அன்று கயிறு என்றாற்போல்=இது சர்ப்பமன்று இரச்சுத்தான் என்று தெளிந்தாற்போலும், ஆள் அன்று தறி என்றாற்போல்=இவ்வுரு புருடனன்று கட்டைதான் என்று தெளிந்தாற்போலும், குரவன் சொல் உபதேசத்தால்=தேசிகர் உபதேசித்த உபதேசவலிகொண்டும், கூறும் நூல் ஒளியைக்கொண்டு=(அத்தேசிகர் உபதேசித்தபடியே) உபதேசித்தருளும் சாஸ்திர விசேஷத்தைக்கொண்டும், புரம் அன்று புவனம் அன்று பூதங்கள் அன்று=இது சரீரமன்று, இது புவனமன்று, இவை பூதங்களல்ல, திரஞானம் என்னும் பிரமம் என்று=ஸ்திரமான சொரூபஞான மென்னும் பிரமமே என, தெளிவதே அபவாதம்=(சமுசயமின்றித்) துணிவதே அபவாதமாம். எ-று.

காண்=முன்னிலையசை.

“தெளிவதே அபவாதம்” என்றதால், சமுசயமின்றி என்பது வருவித்தாம். நாம் வேறு, உலகு வேறு என்னும் அவிவேக விருளைப் போக்குதலின் நூலால் உளதாகும் விவேகத்தை “ஒளி” என்றார் “கூறுநூலால் வெளிச்சங்கொண்டு” எ-ம், “ஞானத்திரமென்றும் பிரமமென்றும்” எ-ம் பாடமுளது. “திரம்” எ-து, சொரூபஞானமாகிய பிரமம் அந்தக்கரணவிருத்திரூப ஞானம்போலத் தோற்றமொடுக்க மில்லாதிருப்பதை விளக்கிநின்றது. “குரவன்சொல் லுபதேசத்தாற் கூறுநூலொளியைக் கொண்டு” என்று இவர் கூறினதுபோலவே, “தேசிகனூற் சொல்வழியிற் செல்லுவாய்” என வாசிட்டத்திற் கூறியிருப்பது காண்க. பிரமத்திற் கற்பிதமான சகம் பிரமமே, அந்நியமல்ல என்பது, ஸ்தாணுவிற் கற்பிதமாகிய புருடன் ஸ்தாணுவே அந்நியமன்று என்பதுபோல வாதசமானாதிகரணமாம் என்க.

“புரமன்று புவனமன்று” எ-கு, உ-ம். வாசிட்டம்,—

“வருங்கற் பகவின் விரைந்தேக வந்தேன் பலசொல்லியும்பய னென், சுருங்கச் சொல்லும் பயன்கேளாய் தோன்ற விங்குள் ளதுவுஞ்சித், தொருங்கப் புறத்துஞ் சித்தெல்லை யுள்ள துஞ்சித் தெல்லை யற, நெருங்குற் றதுஞ்சித் தியான்சித்து நீசித் துலக நிறைசித்தே”— எ-ம்,

“என்னு வெள்ளி யேகியபின் னெல்லா மறிவா முலகினைப்பார்த்
துன்னு வொக்கு மொக்கு மெனக் குசனு வுரைத்த துண்மையதே
முன்னு மவனி சித்துலகு மூன்றுஞ் சித்து நான்சித்து
நன்னு லர்ன திசைசித்து நாட்டுகின்ற தெளாஞ் சித்தே.”-எ-ம் வரும்

மற்றும் வருவனவற்றாற் காண்க. (46)

[முக்கிய சித்தாந்தமான அபவாதங்கூறி இதற்கு அசமர்த்தனான மந்தப் பிராஞ்ஞனுக்குப் பஞ்சீகரண மகாவாக்கியத்திற் கூறியபடி லயசிந்தனை நுபாபவாதங் கூறுகின்றார்.]

படமுநூ லும்போற் செய்த பணியும்பொன் னும்போற் பார்க்கில்
கடமுமண் ணும்போ லொன்றுங் காரிய காரணங்கள்
உடன்முதற் சுபாவ மீறா வொன்றிலொன் றுதித்த வாறே
அடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய மாமே. (47)

இ - ள். காரிய காரணங்கள்=காரியமாகிய சகத்தையும், அதற்கு உபாதானகாரணமாகிய பிரமத்தையும், பார்க்கில்=(*சுருதி † தர்க்க ‡ அநுபவங்களால்) விசாரிக்குமிடத்து, படமும் நூலும்போல்=(காரியமாகிய) படமும், (அதற்கு உபாதானகாரணமாகிய) நூலும்போலவும், செய்த பணியும் பொன்னும்போல்=செய்யப்பட்ட (காரியமாகிய) ஆபரணமும், (அதற்கு உபாதான காரணமாகிய) பொன்னும்போலவும், கடமும் மண்ணும்போல்=(காரியமாகிய) கடமும், (அதற்கு உபாதானகாரணமாகிய) மண்ணும்போலவும், ஒன்றும்=அநந்நியமாகுமேயன்றி அந்நியமாகா, உடல் முதல் சுபாவம் ஈறா=(இவ்வத்வைத சித்தாந்தத்தை) தூலதேகமுதல், அவித்தை யீறாக, ஒன்றில் ஒன்று உதித்த ஆறே=ஒன்றினின்றும் ஒன்றுண்டானபடியே, அடைவினில் ஒடுக்கிக்காண்பது=முறையே ஒடுக்கிப்பார்ப்பது, அபவாத உபாயம் ஆம்=அபவாதமென்னும் உபாயமாம். எ - று.

சுபாவம்=அஞ்ஞானமென்று கீதையிற் பகவானாற் சொல்லப்பட்டிருக்கிறது; அஞ்ஞானம், அவ்வியத்தம் ஒன்றிற்கே பரியாயம். அடைவினிலொடுக்கிக் காணுமாறு;—தூலப்பிரமாண்ட முழுவதும் பஞ்சீகிருதபூதகாரியமாம்; அவற்றில் யாது பிருதுவியின்காரியமோ! அது பிருதிவியின்சொரூபம், சலத்தின் காரியம் சலத்தின் சொரூபம் இப்படியே எது எப்பூதத்தின் காரியமோ! அது அப்பூதத்தின் சொரூபமே "என இவ்வாறு ஸ்தூலப்பிரமாண்ட முழுவதும் பஞ்சீகிருத பூதசொரூபமே எ - ம்,—பஞ்சீகிருதபூதமும் அபஞ்சீகிருத பூதகாரியமேயாகலின், அபஞ்சீகிருத பூதமே வேறில்லை எ - ம், அந்தக்கரணமுதலிய சூட்சுமசிருஷ்டிகளும் அபஞ்சீகிருத பூதகாரியமேயாகலின் அபஞ்சீகிருத பூதசொரூபமேயாம், அவற்றுள் அந்தக்கரணம் பூதங்களின் சத்துவகுணகாரியமாகலின் சத்துவகுணசொரூபம், பிராணன் பூதங்களின் ரஜோகுணக்கூற்றின் காரியமாகலின் ரஜோகுணசொரூபம், குதேந்திரியம் பிருதுவியின் ரஜோகுணக்கூற்றின் காரியமாகலின் ரஜோகுண சொரூபம், கிராணேந்திரியம் பிருதுவியின் சத்துவகுண காரியமாகலின் பிரு

* சுருதி="ஈதனைத்தும் பிரமமல்லவா" என்பது.

† தர்க்கம்="காரியம் காரணத்திற்குப்பின்னமோ! அபின்னமோ"! என்பது முதலியன; அவை பிரமகீதையின் ஐந்தாமத்தியாயத்திற் காண்க.

‡ அநுபவம்=பிரமவித்துக்களின் அநுபவம்.

துவியின் சத்துவகுணசொரூபம், அப்படியே ஜிக்வேந்திரியமும், உபஸ்தேந்திரியமும் சலத்தின் சத்துவகுண ரஜோகுணசொரூபம், நேத்திரேந்திரியமும், பாதேந்திரியமும் தேயுவின் சத்துவகுண ரஜோகுணசொரூபம், துவக்கேந்திரியமும், பாணீந்திரியமும் வாயுவின் சத்துவகுண ரஜோகுணசொரூபம், சுரோத்திரேந்திரியமும், வாக்கிந்திரியமும் ஆகாசத்தின் சத்துவகுண ரஜோகுணசொரூபமாம்" என்றிவ்வாறு சூட்சுமசிருஷ்டிகள் முழுவதும் அபஞ்சீகிருதபூதசொரூபமே என்றுஞ்சிந்தித்து, அபஞ்சீகிருதபூதங்களையும் பிருதுவி சலத்தின்காரியமாகலின் சலசொரூபம், சலம் தேயுவின் காரியமாகலின் தேயுவின் சொரூபம், தேயு வாயுவின் காரியமாகலின் வாயுவின் சொரூபம், வாயு ஆகாசகாரியமாகலின் ஆகாசசொரூபம், ஆகாசம் தமோகுணப்பிரதானப்பிரகிருதியின் காரியமாகலின் பிரகிருதியின் சொரூபம், தமோகுணப் பிரதானப் பிரகிருதியும் அவ்வியத்தத்தின் அவஸ்தாவிசேஷமாகலின், அவ்வியத்தசொரூபமாம், அவ்வியத்தம் பிரமசேதனத்தின் சத்தியாம், புருடனிடத்துச் சாமர்த்தியரூபசத்தி புருடனினும் பின்னமாகாமைபோலச் சேதனத்தினிடத்து அவ்வியத்தரூபசத்தி பிரமசேதனத்தினும் பின்னமல்ல என இவ்வாறு சர்வ அநான்ம பதார்த்தங்களையும் பிரமத்தின்கண் லயசிந்தனஞ்செய்து அவ்வத்வைதப் பிரமம் யானுகிறேன் என்று சிந்திப்பதாம் என்க. ()

[ஆவரணசத்தி எத்தன்மையதாமோவெனச் சீடன் சங்கிக்க அதற்கு உத்தரங்கூறத் தொடங்கல்.]

தூடணை தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
எடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறக் குருவே யென்னக் கிருபையோ டருள்செய் வாரே. (48)

இ - ள். தூடணை தமத்தில் வந்த = சிந்திக்கத்தக்க தமப்பிரதான மாயையினின்றுமுண்டான, தோற்றம் ஆம் சத்திசெய்யும் = விட்சேபமாகிய சத்தியுண்டாக்கும், எடணை விகாரம் சொன்னீர் = இச்சாரூபமான (ஆகாசாதிப் பிரபஞ்ச) விகாரத்தை அருளிச்செய்தீர், இரண்டு சத்திகள் என்றீரே = (முன்னே தாமதகுணம்) இரண்டுசத்தியாய்ப் பிரிந்து தோன்றுமென்றீராதலால், மூடல் ஆம் சத்தி செய்யும் மோகமும் = ஆவரண ரூபமான சத்தி செய்யாநிற்கும் மயக்கத்தையும், கேடு அற = (எனது) துன்பமற, ஐயா குருவே = எனது பிதாவாகிய ஆசாரியரே, சொல்லும் என்ன = உபதேசித்தருளுமென்று சீடன் வினவ, கிருபையோடு அருள்செய்வார். எ - று.

"தொலைவில் பொருளியா வையுமாகித் துன்னி யொன்றுமிச்சை"—

என வாசிட்டத்திற் கூறியிருப்பதால், "எடணைவிகாரம்" என்றார்.

"மூடலாஞ் சத்தி செய்யும் மோகம்" சீ - கு, உ - ம், வாசிட்டம்,—

"அதுதா னறியார்க் கிடர்நல்கி யதுவே யதுவல் லாததுபோற்
றிதமாய் நிற்கு மிம்மாயைச் சித்தி ரந்தா னற்புதமே
பொதுவா யங்க மத்தனையும் புணர்ந்து பிரிவற் றிருக்கவுந்தா
னிதமா யுயிரை யுயிர்காணா திருக்க மயக்கு மியாரையுமே"—

என வரும் மற்றும் வருவனவற்றுற்காண்க. (48)

(108) [**ஆவரணசத்தியின்றன்மையைத் தரிசிப்பிக்கின்றார்.**]

தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திந பாதி யென்னும்
ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்
வானிலந் திசைக ணண்மூடி மழைநிசி யிருள்போன் மூடும் (49)

இ - ள். தனக்குத்தான் நிகர் ஆம் ஈசன்தனையும்=(சர்வஞ்ஞத்வாதி கல்யாணகுணங்களினால்) தனக்குத்தானே நிகராகிய ஈசுரனையும், தங்களை தாம் கண்ட ஞானிகள் தமையும்=(பிரத்யகபின்ன பரமான்மாவான) தம்மைத் தாம் அறிந்துள்ள ஞானிகளையும், அன்றி=தவிர, நாஸ்தி=பிரமமென்பதில்லை, நபாதி=பாநமாகவில்லை, என்னும்=என்று வியவகரிக்கும், ஊனிடை உயிர்கள்=உடலின்கண்ணுள்ள மற்றைச் சீவர்களின், உள்ளத்து உணர்விழி=அந்தக்கரணத்தின் ஞானதிருஷ்டியானது, குருடு ஆம் வண்ணம்=குருடாகும்படிக்கு, வான் நிலம் திசைகள் மூடும்=ஆகாசம், பூமி, திக்குகளை (விழிக்குத் தோன்றாமல்) மறைக்கா நின்ற, மழை நிசி இருள் போல் மூடும்=கார்காலத்திரவினிருள்போல மறைக்கும்; (அதுவே ஆவரண சத்தியின் மோகமாம் என்றறிதி.) எ - று.

"உணர்" எ - து, முதனிலைத் தொழிற்பெயர்.

"நாஸ்தி நபாதியென்னும் உயிர்க ளுணர்விழி குருடாம் வண்ணம் மூடும்" எனக்கூட்டுக.

"நாஸ்தி நபாதி" என்னும் வியவகாரத்திற்கேது ஆவரணசத்தி; இதை, 59-ம் செய்யுளுரையில் விரிக்கப்படும்; ஆண்டுக்காண்க. "நாதத்தின் உபாதி ஒன்றே" என்னும் பாடமுமுளது. "நாதம்" எ - து, வேதாந்த சாஸ்திரத்தின் பரிபாஷையான சத்தமன்மையின் அது பிறழ்ந்த பாடமாம் என்க. (49)

["மூடும்" என்று முற்கூறியதைப் புலப்படக் காட்டுகின்றார்.]

மூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங் கட்கும்
ஆன்றகூ டஸ்த னுக்கு மகத்துள விகாரங் கட்கும்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றாமன் மறைத்து மூடும்
ஊன்றிய பவனி யாதி யுண்டாக்கு முபாதி யீதே (50)

இ-ள். பூன்றம் ஆம் பிரமத்துக்கும்=பூரணமாகிய பிரமத்திற்கும், புறத்து உள விகாரங்கட்கும்=புறம்பே இதுவென்னும் விருத்தி விடயமாக வுள்ள ஆகாசாதிப் பிரபஞ்சத்திற்கும், ஆன்ற கூடஸ்தனுக்கும்=அறிவுருவான கூடஸ்தனுக்கும், அகத்து உள விகாரங்கட்கும்=உள்ளே (யான் என்னும் விருத்தி விடயமாகவுள்ள) அகங்காராதிகட்கும், தோன்றிய பேதம்=(சுபாவசித்தமாக) விளங்குவனவாகிய பேதங்கள், சற்றும்=கிஞ்சித்தும், தோன்றாமல் மறைத்து=(உணர்வு விழிக்கு) விளங்காவண்ணம் அதைக்குருடாக்கி மூடும்=(அப்பேதங்களை ஆவரணசத்தி) மறைக்கும், ஊன்றிய பவ வியாதி=(கடத்தற்கரிதாம்) வலிமை பெற்றுள்ள ஜநநமாகிய நோயை, உண்டாக்கும் உபாதி=வளர்க்கும் உபாதி, ஈதே=இவ்வாவரண சத்தியே யாம் (வேறொன்றல்ல.) எ-று.

அதிஷ்டானமான கூடஸ்தப் பிரமங்கட்கும், ஆரோபமான அகங்காராதிப் பிரபஞ்சங்கட்கும் உள்ளபேதங்கள் முறையே சச்சிதாநந்தமும், அநிருத சட துக்கமும் ஆம். முற்செய்யுளிற் கூறியிருப்பதானும், இதில் "தோன்றாமுன் மறைத்து" என்பதானும் "வுணர்வு விழிக்கு" என்பது வருவித்தாம். அதிஷ்டான வாரோபங்களின் பேதங்கடோன்றாமன் மூடுவதால் ஆவரண சத்தியை, "மூடல்" எ-ம், அகங்காராதிப் பிரபஞ்சங்களாகத் தோன்றுவதால் விட்சேபசத்தியை, "தோற்றம்" என்றும் ஆங்காங்கே கூறுகின்றனர்.

[ஆவரணசத்தியின் மறைப்பைச் சீடன் நன்றாகத் தெரிந்துகொள்ளும்பொருட்டுப் பின்னுங் கடாவிடைகளா லுணர்த்துகின்றார்.]

ஆதார மறைந்து போனா லாரோப மெங்கே தோன்றும
ஆதார மறையா தாகி லாரோப மில்லையே யென்றால்
ஆதாரஞ் சமம்விசேட மாமென விரண்டு கூறாம்
ஆதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேட மாமே. (51)

இ-ள். ஆதாரம் மறைந்து போனால்=(காடாந்தகாரத்தில் இரச்சுப் போல) ஆதாரமான பிரமமானது தோன்றாமல் மறைந்துபோமாயின், ஆரோபம் எங்கே தோன்றும்=(பிராதிபாசிக சர்ப்பம்போல) ஆரோபமான ஜகத்து ஓரிடத்து முண்டாக மாட்டாதே?, ஆதாரம் மறையாது ஆகில்=(மத்தியான வெய்யிலில் இரச்சுப்போல) ஆதாரமான பிரமமானது மறைபடாமல் விளங்குமாயின், ஆரோபம் இல்லையே என்றால்=(பிராதிபாசிக சர்ப்பம் போல) ஆரோபமான ஜகத்து உண்டாக நியாயமில்லையே என்று சங்கிக்கில், ஆதாரம் சமம விசேடம் என இரண்டு கூறு ஆம்=ஆதாரமானது சாமான்யம் எனவும், விசேஷம் எனவும் இரண்டு கூறுடையதாம், [அவற்றினிலக்கணம் யாதெனின்?] எங்கும் ஆதாரம் சமம் ஆம்=அதிக தேசம், (அதிக காலத்தில்) உள்ள ஆதாரம் சாமான்ய ஆதாரமாம், ஆரோபம் விசேடம் ஆம்=*நியூன காலம், நியூனதேசத்திலுள்ளவை விசேஷமாம். எ-று.

* நியூனம்=அற்பம்.

நியூனகாலம், நியூனதேசத்திலுள்ளதென்பர், "ஆரோபம்" என்றார். "எங்கும்" என்றதால், காலம் வருவிக்கப்பட்டது. (51)

[இதுவுமது.]

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான் மறைந்தி டாது
மிகவிது கயிறு மென்னும் விசேடந்தான் மறைந்து போகும்.
அகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத்தி டாது
பகர்விசே டமதாஞ் சீவன் பரமெனு மதனை மூடும் (52)

இ-ள். சகமதில்=உலகில், இது என் சுட்டு ஆம்=(மந்தாந்தகாரத்தில் எதிரே கிடக்கும் இரச்சுவில் இது சர்ப்பமென்புழி,) இதுவென்று சுட்டப்படுவதான, சமானந்தான் மறைந்திடாது=சாமான்யரூபம் மறையாது, இது கயிறு ஆம் என்னும்=இஃதிரச்சுவாமென்று காணப்படும், விசேடந்தான்=(முஞ்சிரூபமான) விசேஷபாகந்தான், மிக=பெரும்பாலும், மறைந்துபோகும், (அதுபோல) பகர் விசேடமது ஆம் சீவன்=கற்பித விசேஷமாகச் சொல்லாநிற்குஞ்சீவன், அகம் எனும் சமானந்தன்னை=யான் உளன் என்னும் சாமான்ய ரூபமாகிய ஆதாரத்தை, அஞ்ஞானம் மறைத்திடாது=ஆவரணசத்தி மறையாது, பரம் எனும் அதனை மூடும்=(யான் சேதன, ஆநந்த, வியாபக, நித்தியசுத்த, நித்திய முத்தரூபப்)பிரமம் என்னும் விசேஷரூபத்தையே மறைக்கும். எ-று.

அஞ்ஞான காரியமாகிய ஆவரணசத்தியை, "அஞ்ஞானம்" எ-து காரண ஆகுபெயர்.

(109) சண்டிஃதிரகசியம்:—இரச்சுவுக்கு இரண்டு ரூபமுண்டு; ஒன்று சாமான்யரூபம்: ஒன்று விசேஷரூபம்; இதுவென்பது சாமான்யரூபம்: இரச்சுவென்பது விசேஷரூபம்; இது சர்ப்பமென்புழி, மித்தியாசர்ப்பத்தோடபின்னமாய்ப்பிராந்திகாலத்திலுந் தோன்றுநிற்கும் இதுவெனும் ரூபம் சாமான்யரூபம்; யாது பிராந்திகாலத்திற் றோன்றுதிருந்து தான்தோன்றுவதால் பிராந்தி நிவிர்த்தியாமோ! அது இரச்சுவின் விசேஷரூபமாம்; அப்படியே ஆன்மாவுக்கும் சாமான்யமும் விசேஷமுமாகிய இரண்டு ரூபமுண்டு; சத்துரூபம் சாமான்யமாம்; அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத்தன்மை முதலியன விசேஷரூபமாம். என்னை? தூலசூட்சும சங்காதங்களுள்ளனவென்புழி, தூலசூட்சும சங்காதப்பிராந்தி சமயத்தினும் மித்தியா சங்காதத்தோடபின்னமாய்ச் சத்துரூபந்தோன்றுநிற்பதால் ஆன்மாவின் சத்துரூபம் சாமான்யரூபமாம்; தூலசூட்சும சங்காதங்களின் பிராந்திசமயத்தில் ஆன்மாவின் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்திய முத்தத்தன்மை முதலிய சொரூபந்தோன்றாமல் அசங்கத்வமுதலிய ஆன்மாவின் சொரூபந்தோன்றுவதால் சங்காதப்பிராந்தி நிவிர்த்தியாகலின் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத்தன்மை, வியாபகத்தன்மைமுதலியன விசேஷரூபமாம். சர்வப்பிராந்திகளிலும் சாமான்யரூபம் ஆதாரமென்றும், விசேஷ

ரூபம் அதிஷ்டானமென்றுஞ் சொல்லப்படும். எப்படிச் சர்ப்பத்திற்கு ஆசிரயமாவுள்ள இரச்சுவின் சாமான்யமாகிய இதுவெனும் ரூபம் சர்ப்பத்திற்கு ஆதாரமும், விசேஷமான இரச்சுரூபம் அதிஷ்டானமுமாகிறதோ! அப்படியே மித்தியாப் பிரபஞ்சத்திற்கு ஆசிரயமாவுள்ள ஆன்மாவினது சாமான்யமாகிய சத்துரூபம் பிரபஞ்சத்திற்கு ஆதாரமும், அசங்கத்வமுதலிய விசேஷரூபம் அதிஷ்டானமுமாம்; இவ்வாறு, ஆதாரவதிஷ்டானங்கட்குச் சர்வஞ்ஞாத்மா என்னும் முனிவரால் கிஞ்சித்பேதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. மந்தாந்தகாரத்தில் சாமான்யரூபத்தால் ஞாதமாயும், விசேஷரூபத்தால் அஞ்ஞாதமாயும் உள்ள இரச்சுவில் சர்ப்பாத்தியாசம் உண்டாகின்றதேயல்லாமல் அத்தியந்தம் ஞாதமாயும், அத்தியந்தம் அஞ்ஞாதமாயுமுள்ள இரச்சுவில் அத்தியாசம் உண்டாகக் காணப்படவில்லை. நிர்விசேஷமான ஆன்மாவில் ஞாத, அஞ்ஞாதத்தன்மைகள் கூடாமையால் பிரபஞ்ச வத்தியாசமுங் கூடாதே எனின்? இவ்வார்த்தை பொருந்தாது. என்னை? ஆன்மா உண்டென்பது சகலர்க்கும் தோற்றரவாகின்றது; தன்னுடைய சொரூபத்திற்கு ஆன்மா என்று பெயர்: யான் இலனென்று ஒருவனுக்குந் தோற்றரவுண்டாகவில்லை; பின்னையோ? உளனென்றே தோற்றரவுண்டாகின்றதாகலான் சத்துரூபத்தால் ஆன்மா ஞாதமாயும், யான் சைதந்நியன், ஆநந்தன், வியாபகன், நித்திய சுத்தன், நித்தியமுத்தன் என ஒருவனுக்குந் தோற்றரவுண்டாகாமையின் சைதந்நிய, ஆனந்த, வியாபக, நித்தியசுத்த, முத்தரூபத்தால் ஆன்மா அஞ்ஞாதமாயும் இருக்கின்றது: இவ்வார்த்தை அநுபவசித்தம்; இவ்வநுபவசித்த வார்த்தை யுத்தியினால் நிவிர்த்தியாகாது. யாவர்க்குந் தோற்றரவாகின்ற ஆன்மாவின் சத்துரூபம் சாமான்யரூபம்: கேவலம் ஞானிக்கே பிரதீதியாகின்ற சேதன, ஆநந்தாதிகள் விசேஷரூபம். யாதொன்று அதிககாலத்தில், அதிக தேசத்திலிருக்கும் அது சாமான்யரூபம்: நியூனகாலத்தில், நியூனதேசத்திலிருப்பது விசேஷரூபம். சத்தைப்போலவே சேதன ஆநந்தாதிகள் ஆன்மாவின் சொரூபமாய் எங்கும் வியாபகமாக இருத்தலால் இவைகட்கு நியூனதேசமும், சத்துரூபத்திற்கு அதிகதேசமும் உளதெனலும், ஆன்மா நிர்விசேஷமாதலால் சத்துரூபம் சாமான்யக்கூறு, சேதன ஆநந்தாதிகள் விசேஷக்கூறு எனலுங் கூடாதே யெனின்? அற்றன்று; சத்தின் றோற்றரவு யாவர்க்கும் அவித்தியாகாலத்திலும் உண்டு. ஆன்மா சேதனம், ஆநந்தரூபம் என்னுந் தோற்றரவு யாவர்க்கும் அவித்தியாகாலத்தில் இல்லை: கேவலம் ஞானிக்கே உண்டாகின்றது. அவித்தியா காலத்திலுஞ் சேதன, ஆநந்த, முத்தத்துவம், சுத்தத்துவமாதியும் உளவேனுந் தோற்றரவாகாமையின் இல்லாதனபோலும் இருந்தன; இவ்வபிப்பிராயத்தால் அவை நியூனகாலத்துள்ளன எனவும், சத்துரூபம் அதிக காலத்துள்ளது எனவுங் கூறினர். சத்துரூபத்திற்கும், சேதன ஆநந்தாதிகட்கும் சாமான்ய விசேஷபாவம் இல்லையாயினும் அற்பகால அதிக காலத்திற் றோற்றரவாகின்றமையின் சாமான்ய விசேஷபாவம்போலும் இருந்தன; இக்காரணத்தால் ஆன்மாவின் சத்துரூபஞ் சாமான்யக்கூறு என்றும், சேதன ஆநந்தாதிகள் விசேஷக்கூறுகள் என்றுஞ் சொல்லப்படும். ஆன்மா நிர்விசேஷமென்னும் சித்தாந்தத்திற்கும் ஆனியில்லை. என்னை? ஆன்மாவி

ணிடத்துச் சாமான்ய விசேஷபாவம் அங்கீகரிக்கில் ஆன்மா நிர்விசேஷமென்னுஞ் சித்தாந்தத்திற்கு ஆனியாம்; அவை அங்கீகாரமில்லை: அவித்தையினாற் சாமான்ய விசேஷம்போலத் தோற்றுவதாற் சாமான்ய விசேஷபாவங் கூறினர்; இவ்வாற்றால் சத்துரூபத்தால் ஞாதமாயும், சேதன, ஆனந்த, நித்திய சுத்த, நித்தியமுத்த பிரமரூபத்தால் அஞ்ஞானமாயும் உள்ள ஆன்மாவில் பிரபஞ்சம் ஆரோபமாகக்கூடும் என்றறிக.

முன்னே இந்நூற்குரை செய்திருப்போர், "சகமதி லிதுவென் சுட்டாச் சமானக்கண்" என்னும் பாடத்தை ஒப்பினதும், சீவேசுரரை அஞ்ஞான மறைக்கும் என்று பதவுரையிற் கூறினதும், விசேஷவுரையில், "சீவன்பரனெனும் அவரைமூடும்" என்றது, அவர்கள் உணர்வை என்றதும், தாற்பரியத்தில் ஆரோபமான சீவேசுரரைத் தமக்கு ஆதாரமான கூடஸ்தபிரமத்தைப் பார்க்கவொட்டாமல் அவரது உணர்வை இவ்வாவரணம் மறைக்குமேயன்றி ஆதாரத்தை மறைக்கமாட்டாது என்று கூறியிருப்பதும் வேதாந்த சம்பிரதாயப் பொருள் அன்றாம்; ஆகலின், அவை சாஸ்திர விருத்தமாம். இலைமறைகாய்போற் செய்யுளிற் புதைந்துகிடக்குந் தத்துவார்த்தங்களை விரிக்காமல் செய்யுட்குப் புறம்பாயுள்ள வார்த்தைகளை விரித்திருக்கின்றனர். சீவேசுரரை ஆவரணம் மறைக்கும் என்று இச்செய்யுட்கு உரைசெய்தோர்,

"ஞானிகள் தனக்கும் ஈசன் றனையுந் தங்களைத் தாங் கண்ட
ஞானிக ளுடைமையு மன்றி"

என்னும் 49-ம் செய்யுளை மறந்தனர்போலும்.

(110) சீவேசுரர் சொரூபநிரூபணம் கிரந்தகாரர் வெகு விஸ்தாரமாகச் செய்திருக்கின்றனர். அங்கே சீவசொரூபத்தில் ஏகத்துவ, அநேகத்துவ விவாதங்களும் பலவுள. சர்வமதங்களிலும் ஈசுரன் ஒருவன், சர்வஞ்ஞன், நித்தியமுத்தன் என்றேயொப்பினர். ஈசுரனிடத்து ஆவரண அங்கீகாரம் எந்த அத்வைத வாதகிரந்தங்களிலும் இல்லை. யாரொருவர் ஈசுரனிடத்து ஆவரணம் உண்டென்பரோ! அவர் வேதாந்த சம்பிரதாயத்துக்குப் பகிர்ப்பூதராம்; ஆயினும், நாநா அஞ்ஞான வாதத்தில் அஞ்ஞானம் ஜீவாசிரிதம், பிரமவிஷயகமாம் என்பது வாசஸ்பதியினுடைய மதம். அவர் சீவனுடைய அஞ்ஞானத்தால் ஈசுரன் கற்பிதம் என்றும், பிரபஞ்சம் நாநா என்றும் ஒப்பினர்; அப்படி ஒப்பினும், சீவனுடைய அஞ்ஞான கற்பிதமான ஈசுரனும் சர்வஞ்ஞன் என்றே ஒப்பினர். ஈசுரனிடத்து ஆவரணம் உண்டென்றங்கீகாரமில்லை என்று "விருத்திப் பிரபாகரகிரந்தத்தில் சீவேசுரப்பிரசங்கத்திற்" கூறியிருக்கின்றது. ஈசுரன் உணர்வை ஆவரணசத்தி மறைக்கும் என்று அவ்வுரைகாரர் கூறியது யாது கருதியோ! அறிகிலேம். (52)

(111) [ஆவரணசத்தியின் சொரூபத்தை அறிவித்து அஃதே ஜநநத்திற்கு மூலகாரணமாம் என்று, 50-ம் செய்யுளிற் கூறியதைச் சீடன் வினாவை முன்னிட்டுச் சுருதி, யுக்தி, அநுபவங்களால் அறிவிக்கத் தொடங்கல்.]

கேவல நிலைதோன் றாமற் கெடுத்தது பஞ்ச கோசம்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவிட் சேப மன்றோ
ஆவர ணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ
மேவருங் குருவே யென்றா வினவிடின் மகனே கேளாய் (53)

இ - ள். கேவல நிலை தோன்றாமல் கெடுத்தது—பிரமான்ம வைக்கிய ஸ்திதியை (இரச்சுவின் விசேஷ ரூபத்தைச சர்ப்பம்போலும், விளங்கவொட்டாமல் மறைத்துக் கெடுத்தது, பஞ்சகோசம் சீவனும் சகத்தும் ஆகி—அந்நமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் பஞ்சகோசங்களும், (அவற்றின் அபிமானியான) சீவனும், ஆகாசாதி சகத்துமாய், சனித்த—உண்டான, விட்சேபம் அன்றோ—விட்சேபசத்தி அல்லவா, (இங்ஙனம் அதுவே கொடியதாயிருக்க) ஆவரணம் தானே—ஆவரண சத்தி தானே, பாழ் (என்றும்)—("உயிர்க ளுள்ளத் துணர்விழி துருடாம் வண்ணம்" மறைத்துப்) பாழாக்கிற்று என்று 49-ம் செய்யுளிலும், அனர்த்தம் என்றும்—"ஊன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யிதே" என்று 50-ம் செய்யுளிலும், உரைத்தது ஏது—அருளியது யாதுகாரணம், மேவரும் குருவே என்று—கிடைத்தற்கரிய வாசாரியரேயென்று, வினவிடின்—கேட்கில், மகனே கேளாய்—மைந்தா (அதற்கு உத்தரஞ் சொல்லுதும்) கேட்பாய். எ - று.

"நாமுடலென்னு மாயான் ஞானக்கண் குருடாய்ப் போகும்" —எ - ம்.

"காசரா ணுதி மட்டா ராணிவ னென்றா காணுந்
திரமது தானே மூன்று மகங்காரஞ் செகத்தோர்க் கெல்லா
முரியதா மிகவும் பொல்லா துற்பவ மென்னு நரக
மாமெழு மூலமாகும்" —எ - ம்,

வாசிட்டத்தில், விட்சேப சத்தியைத்தானே பொல்லாததாகச் சொல்லியிருக்கின்றதல்லாமல், ஆவரண சத்தியை அங்ஙனஞ் சொல்லவில்லையே என்பான்,

"கேவல நிலைதோன் றாமற் கெடுத்தது பஞ்ச கோசஞ்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவிட் சேப மன்றோ
ஆவர ணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ" —என்றான். (53)

[சுருதி யுத்திகளால் ஆவரணசத்தியின் பிரதிகூலத்தையும், விட்சேபசத்தியின் அநுகூலத்தையுங் கூறுகின்றார்.]

தோற்றமாஞ் சத்தி தானுந் துன்பமாம் பவமா னாலும்
ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல மாகுங் காணீ

ஊற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிசியா லுண்டோ
மாற்றமென் னுரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல் லாதே( )

இ-ள். தோற்றம் ஆம் சத்தி தானும்=விட்சேபரூபமான சத்தியும், துன்பம் ஆம் பவம் ஆனாலும்=(அவிவேகிகட்கு அபிமானரூபமாய்ப் புண்ணிய பாவவசத்தால்) துன்பமயமான ஜநநத்துக்குக் காரணமாயிருப்பினும், ஆற்றலான் முத்தி சேர்வார்க்கு=(சிரவணாதிமுயற்சி) வலியான் மோட்சமடையவிச்சிக்கின்ற விவேகிகட்கு, அனுகூலம் ஆகும் காண் நீ=(குரு சாஸ்திராதிரூபமாய்ச்) சகாயமாகும் என நீ அறிதி. (சுருதி உரைக்கப்பட்டது: இனியுத்தி), ஊற்றம் ஆம் பகல் காலம்போல்=(சாது, அசாது யாவர்க்கும் ஆலசியாதிகளைப் போக்கிச்) சர்வ முயற்சியையும் பயத்தற்குக் காரணமான பகற் காலத்தைப்போல, உபகாரம் நிசியால உண்டோ=(அச்சாது, அசாதுக்களுக்கு) உதவியானது இராக்காலத்தாலுண்டா? வெகுவிதமான கொடிய துன்பங்களைத் தருதலால் இன்று), மாற்றம் என் உரைப்பேன்=(உன் வினாவிற்கு) இவ்வியமானமேயன்றி வேறு யாது மறுமொழி சொல்லுவேன், மைந்தா=மைந்தனே, மறைப்பது=ஆவரண சத்திதான், மிகப் பொல்லாது=மிகவுங் கொடிது. எ-று.

"சத்தி தானும்" என்பதன்கண் உம்மை, இறந்தது தழீஇய எச்சப் பொருட்டு, "பவமானாலும்" என்பதன்கண்ணுள்ளது, ஆக்கவும்மை.

இராக்காலம் சிட்டர், துட்டர் யாவர்க்கும் நித்திரைக்குக் காரணமாயிருந்து வெகுவித துன்பந்தருதல்போல ஆவரண சத்தியும் விவேகி, அவிவேகி யாவர்க்கும ஜநநத்திற்கு மூலகாரணமாயிருந்து வெகுவிதமான பிரயாசங்களைத் தருதலால் மிகவுங் கொடியதென்பதாம.

"முத்தி சேர்வார்க் கனுகூல மாகும்" எ-கு, உ-ம், பாகவதம்,—

"மாநுட வாக்கை யென்னு மருவருந் தோணி பெற்று
மூனமில் குரவன் சொல்லா மோடமுய்ப் பவனே டென்றீ
ரான தோ ரநுகூ லக்கா லனுகவும் பிறவி வேலை
தானெறி தாவெண் ணுதான் றன்னையே கொல்கின் றானும்."

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (54)

[இனி அநுபவத்தால் அதன் கொடுமை கூறல்.]

சுழுத்தியிற் பிரள யத்திற் றோற்றமாஞ் சகங்கண் மாண்டும்
அழுத்திய பவம்போய் முத்தி யடைந்தவ ரொருவ ருண்டோ
முழுத்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்
கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே. (55)

இ-ள். சுழுத்தியில்=(நாள்தோறும் உண்டாகாநிற்கும்) சுழுத்தியிலும், பிரளயத்தில்=மகா கற்பத்திலும், தோற்றம் ஆம் சகங்கள் மாண்டும்=விட்சேபரூபமான சகங்களழிந்தும், அழுத்திய பவம்போய்=அப்போது

தம்மைத் துன்பத்தின் மூழ்கப் பண்ணிய ஜநநமானது மீண்டுண்டாகாமல் நீங்கி, முத்தி அடைந்தவர்=மோட்சமடைந்தோர், ஒருவர் உண்டோ =ஒருவரும் இலர் ; (ஆகவின்,) முழுத்த விட்சேபம் எல்லாம்=முழுதுமான விட்சேபங்களனைத்தும், முத்தியில் கூட்டுகிற்கும்=மோட்சத்தில் (நேரே அல்லது, பரம்பரையாகக்) கூட்டாநிற்கும், கொழுத்த ஆவரணம்=கனமான ஆவரணசத்திதான், முத்தி கூடாமல் கெடுத்த கேடு=(ஆண்டு வித்தில் அங்குரம்போலச் சீவரிடத்திருந்து அவர்கள்) மோட்சமடையாமற் கெடுத்த கெடுதியாம். எ - று.

"சகங்கண் மாண்டும்" எ - கு, உ - ம், வாசிட்டம்,—

"மண்டிய சுழுத்தி தன்னில் வருகனுப் போலவ தென்னக்
கண்டன வுலக மெல்லாங் கற்பனை முடிவிற் போக,"

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. "முந்தி யடைந்தவ ரொருவருண்டோ" எ - கு, உ - ம், வாசிட்டம்,—

" அகல்வா தனையின் வித்தான வந்தச் சுழுத்தி வீடலியாப்,
புகல்வித் தல்லா வாதனையே துரியம் பொன்று வீடளிக்கும்,"

என வரும். மறறும் வருவனவற்றுற் காண்க.

"முழுந்த விட்சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்"

எ - கு, உ - ம், பாகவதம்,—

"தரைபுனல் கனல்கால் வானந் தபனன்வெண் டிங்கள் வாரி
வரையுறை யரவு மான்கான் வருகரி பதங்க மீன
முரலளி கணைசெய் கின்மீறுன் மொய்குழற் குமரி தேனீ
யுரைதரு புறவு தாசி யூன்கவ ரன்றி ஞெகம்."—எ - ம்,

"உறைந்தநூற் சிலம்பி மைந்த னாதுவண் டெடுத்த கீடஞ்
சிறந்தன விவைநான் காறுஞ் சிந்தையிற் குருவென் றுக்கி
மறந்தரு மிஃது தீதா மற்றிது நன்று மென்றிங்
கறிந்தன னின்ப முற்றே னவ்வகை யரச கேண்மோ."—எ - ம்,

"வாக்கி னைக்கடந் தோங்கிமற் றெங்கணு
நீக்க மின்றி நிறைந்த வறிவினை
யூக்க முற்றுணர் தற்கிட ஞெகுலி
ஞத்கை யுங்குரு வாய தாசனே"—எ - ம்,

மற்றும் வருவனவற்றுற் காண்க. (55)

(112) [54-ம் செய்யுளில், "முத்தி சேர்வார்க் கனுகூல மாதும்" எ-ம், 55-ம் செய்யுளில், "முழுத்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்" என்றுங் கூறியதுபற்றி அவ்விட் சேபசத்தி மித்தையாகலின், அதனால் வரும் முத்தியும் மித் தையாம் என்னும் ஆசங்கைக்கு? அற்றன்று, முத்திசத்திய மாம் எனத் திருஷ்டாந்தமுகமாகச் சமாதானங் கூறுகின்றார்.]

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான
சத்தியும் பொய்யே யென்றாற் சத்திசா தனமா வந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவி லங்கால்
நித்திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே (56)

இ-ள். சுத்தியில் வெள்ளி போல=இப்பியின்கண் (ஆரோபமான பிராதிபாசிக) ரஜதம்போல, தோன்றிய தோற்றம ஆன சத்தியும்=(பிரஹ்மத்தின்கண்) ஆரோபமாயுண்டான விட்சேபரூபமான சத்தியும், பொய்யே என்றால்=மித்தையே என்று சொல்லில், சத்திசாதனமா வந்த முத்தியும்=அவ்விட்சேப சத்திரூபமான குரு சாஸ்திராதி சாதனமாக வுண்டான மோட்சமும், பொய் ஆம் என்னில=மித்தையாகும என்று (பூர்வபட்சிகளின் சங்கையைக்கொண்டு) நீ சங்கிக்கில், மோகம் நித்திரை விலங்கால்=பொய்யான நித்திரையிற் கண்ட புலி முதலிய விலங்கினால், நித்திரை தெளியுமா போல்=நித்திரை தெளிங்கவழி (நித்திரையின் அபாவரூபமான சாக்கிரம் மெய்யாவது) போல, நிருவாண நிலை மெய் ஆம்=(குரு சாஸ்திராதிகளால் உளதாகும்) நிருவாண ஸ்திதியுஞ் சத்தியமாம். எ-று.

(113) அவத்தையின் அபிமானமே பந்தம்; அதுவும் விருத்தி விசேஷமாகலின், விருத்தியினாற் செயயப்பட்ட பந்தமே சம்சாரமாம். குருவினாலும், வேதாந்த வாக்கியத்தினாலும் உளதாகும் அகம் பிரஹ்மம் என்னும் அந்தக்கரணத்தின் விருத்தியினால் பிரபஞ்சத்தோடுகூட வஞ்ஞானத்தினது நிவிர்த்தியே மோட்சம். கற்பிதத்தின் நிவிர்த்தி அதிஷ்டானரூபமாகலின், மோட்சஞ் சத்தியமாம். சர்ப்பத்தினது நிவிர்த்தி எப்படி அதிஷ்டான இரச்சுரூபமோ! அப்படிச சகல கற்பித வஸ்துக்களினது நிவிர்த்தி அதிஷ்டான ரூபந்தான்; அதற்கந்நியமன்று; இது பாஷ்யகாரரது சித்தாந்தம். இங்கே அனர்த்த நிவிர்த்தி பிரஹ்மரூபமாம். என்னை? சர்வ வனர்த்தங்கட்கும் அதிஷ்டானம் பிரஹ்மமாகலானும், அப்பிரஹ்மம் பாவ [ஞாவ] ரூபமாகலானும் மோட்சஞ் சத்தியமாம் எனக.' (56)

(114) [நிருவாணஸ்திதி இது எனக்காட்டுங் கருத்தினராய் மாயையை நிவிர்த்திக்கு முறைமை கூறுகின்றார்.]

இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும்
அம்பினை யம்பாற் பற்றுமழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்

வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே. (57)

இ-ள். இம்பரில்=இவ்வுலகில், நஞ்சை நஞ்சால்=விஷத்தை அதற்குப் பிரதிகூலமான விஷத்தினாலும், இரும்பினை இரும்பால்=இரும்பை இரும்பாலும், எய்யும் அம்பினை அம்பால்=எய்யாநின்ற அம்பை அதற்குப் பிரதிகூலமான அம்பினாலும், பற்றும் அழுக்கினை அழுக்கால்=(புடவையிற்) பற்றிய அழுக்கை (உவர் மண்ணாகிய) அழுக்கினாலும், மாய்ப்பர்=கெடுப்பர், (அதுபோல) வம்பு இயல் மாயை தன்னை=நிலையின்மையான குணத்தினையுடைய அவித்தையை, மாயையால் மாய்ப்பர்=அவித்தையினாற் கெடுப்பார்கள், பின்னை—தம்பம் ஆம் அதுவும்=நிலையாகிய அந்தப் பெரிய மாயையும், கூட=(நீச மாயையோடு) கூட, சவம் சுடு தடிபோல் போம்=பிணஞ்சுடுந் தடிபோற் கெடும். எ-று.

பெரிய மாயையான போதத்தையுஞ் சுமையெனவிட்டு அநுபவத்திருப்பர் என்பது கருத்து.

"மாயை தன்னை மாயையான் மாய்ப்பா" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"கருதி மலத்தான் மலமறுக்குங் காருவென்ன மாயைதனைப்
பெருமா யையினாற் செறல்வேண்டும்."

என வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.

"தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போம்" எ-கு, உ-ம், பாடுதுறை,—

"பிணஞ்சுடு தடியென்ன வெண்ணைக்கொண்டட பெரும்பற்றையெல்லா மறச்சாடி, யணைந்தவென்னையுமப் படியீறில்போதத்தில் விட்டநுபோகந் திருந்தனமே"

என வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (57)

(115) [இவ்வநுபவத்தைக் கரதலாமலகம்போலச் சீடனுக்கு உண்டாகத் துவித்தற் பொருட்டு அடியிடுகின்றார்.]

இந்தமா யையினாற் சீவர்க் கேழுவந் தைகளுண் டாகும
அந்தவே ழுவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய்
முந்தவஞ் ஞான மூடன் முளைத்தல்கா ணுதஞா னம்
சந்ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல். (58)

இ-ள். இந்த மாயையினால்=(சுத்தாசுத்தங்களான) இம்மாயைகளால், சீவர்க்கு—ஏழு அவத்தைகள் உண்டாகும்=சத்தாவஸ்தைகளுளவாகும், அந்த ஏழ் அவத்தை தம்மை=அச்சத்தாவஸ்தைகளையும, அடைவினில் மொழியக் கேளாய்=கிரமமாகச் சொல்லுகின்றேங் கேட்பாய், முந்த அஞ்ஞா

னம்=(1-வது) அஞ்ஞானம், மூடல்=(2-வது) ஆவரணம், முளைத்தல்=(3-வது) விட்சேபம், காணுக ஞானம்=(4-வது) பரோட்ச ஞானம், சந்ததம் கண்ட ஞானம்=(5-வது) அபரோட்ச ஞானம், தழல் கெடல்=(6-வது) சோக நிவிர்த்தி, குளிர்மை யாதல்=(7-வது) நிரங்குச திருப்தி யாம். எ-று.

"சந்ததம்" என்ற விசேஷணம் பிரதிபந்தம் இல்லாமலென்பதைக் காட்டிநின்றது. "தழல" எ-து, இங்கே துக்கத்தை. (58)

[இனி நாமமாத்திரங் கூறிய அவவவத்தைகளின் இயல்பு கூறுகின்றார்.]

பிரமமாந் தனைம றந்த பேதைமை யேயஞ் ஞானம்
பரனிலை காணே மென்று பகர்தலா வரண மூடல்
நரனொரு கருத்தாற் சீவ னெனை முளைத்த றோற்றம்
குரவன்வாக் கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம்.()

இ-ள். பிரமம் ஆம் தனை மறந்த பேதைமையே=(சிதாபாசன் சுருதி விசாரத்திற்கு முன்னர் சம்சாரச் ஆசக்தியில் மூழ்கி)பிரஹ்மரூபமாகிய பிரத்திய கான்மாவை (யானென்று) ஸ்மரியாதிருந்த அறியாமையே, அஞ்ஞானம்=அஞ்ஞானமாம், பரன் இலை காணேம் என்று பகர்தல்=(பிரஹ்மத்தை விஷயம் பண்ணுவதான பிரசங்கம் வந்துழி) பிரஹ்மம் இல்லை, பாநமாகவில்லை என்று சொல்லுதல், ஆவரண மூடல்=ஆவரண மறைப்பாம், (நான்) நரன் (என)=நான் மநுடன் என்றும், ஒரு கருத்தால்=(இப்போது கருமங்களைச் செய்வதால் இனிக் கரும பலங்களை அநுபவியா நிற்பேன் என்னும்) ஓர் எண்ணத்தால், நான் சீவன் என=நான் (கருத்திருத்வ, போக்திருத்வ முடைய) சீவன் என்றும், முளைத்தல்=உதித்தலே, தோற்றம்=விட்சேபமாம், குரவன் வாக்கியத்தால்=குருவால் உபதேசிக்கப்பட்ட (சத்திய ஞானாநந்தம் பிரஹ்மம் என்னும் அவாந்தர) வாக்கியத்தால், தன்னை குறிக்கொளல்=(பிரத்தியகபின்ன பரமான்மாவான) தன்னை (உண்டு என்று) அறிந்துகொள்ளலே, பரோட்ச ஞானம்=(அசத்தாவரண நிவர்த்தகமான) பரோட்ச ஞானமாம். எ-று.

நான் பிரஹ்மத்தை அறிகிறேனில்லை என்னும் வியவகாரத்திற்கு எது அஞ்ஞானம். பிரஹ்மமானது இல்லை, பாநமாகவில்லை என்னும் வியவகாரத்திற்கு எது ஆவரணம்; ஆவரணத்தால் இவ்வியவகாரம் உளதாம். என்னை? அஞ்ஞானத்திற்கு அசத்தாவரணம், அபாநாவரணம் என இருவகைச் சத்திகள் உண்டு; அவ்விரண்டனையும் ஆவரணம் என்பர். வஸ்து இல்லை என்று தோற்றுவிக்கின்ற சத்தி அசத்தாவரணம்: வஸ்து பாநமாகவில்லை என்று தோற்றுவிக்கின்ற சத்தி அபாநாவரணமாம்; இவைகளை முறையே அசத்வா

பாதகசத்தி, அபாநாபாதகசக்தி என்றுங் கூறுவர். ஜநந முதலிய சம்சாரம் நிஜரூபமான கூடஸ்தனிடத்திற் பிரதீதியாகின்றதே விட்சேபம்; இதனைப் பிராந்தி என்றும், சோகம் என்றுங் கூறுவர். பிரஹ்மம் இல்லை என்னும் ஆவரணக் கூற்றைப் பிரஹ்மம் உண்டு என்னும் பரோட்சஞானம் நாசம் பண்ணுகின்றது. எவ்வா? சத்திய, ஞாநாநந்த ரூபமாகப் பிரஹ்மம் உண்டு என்னும் ஞானத்திற்குப் பரோட்சஞானம் என்று பெயர்; அது பிரஹ்மம் இல்லை என்னும் ஞானத்திற்கு விரோதியாம்: மற்றவைக்கு அல்ல; ஆகலின் என்க. (59)

[இதுவுமது.]

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக மும்போய்
அத்துவி தந்தா னாத லபரோட்ச ஞான மாகும்
கர்த்தனாஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போகல்
முத்தனா யெல்லாஞ் செய்து முடிந்ததா நந்த மாமே. (60)

இ-ள். தத்துவ விசாரம் செய்து=(நீயே பிரஹ்மம் என்னும் மஹா வாக்கியத்தால்) பிரஹ்மவிசாரஞ் செய்து, சகல சந்தேகமும் போய்=(பிரமாணகதம், பிரமேயகதம் ஆகிய) சகல சந்தேகங்களும் நீங்கி, அத்துவிதம் தான் ஆதல்=அத்துவிதப் பிரஹ்மமே தானாதல், அபரோட்ச ஞானம் ஆகும்=(அபாநாவரண நிவர்த்தகமான) அபரோட்ச ஞானமாம், கர்த்தன் ஆம் சீவ பேதம் கழிவதே=(நான்) கர்த்திரு, (போத்திரு) என்னும் சீவத்வம் நீங்குவதே, துக்கம் போகல்=துக்க நிவிர்த்தியாம், முத்தனாய் எல்லாம் செய்து முடிந்தது=(சகல) துக்கங்களினின்றும் விடுபட்டவனாய் (ச் செய்யத் தக்கன) அனைத்துஞ் செய்து, (அடையத் தக்கன) அனைத்தும் அடைந்தனம் என்னுஞ் சந்தோஷமே, ஆநந்தம் ஆம்=நிரங்குச திருப்தியாம். எ - று.

நான் பிரஹ்மமாயிருக்கிறேன் என்னும் அபரோட்ச ஞானம் யாது! அது சகல அவித்தியா சாலங்கட்கும் விரோதியாகலின் நான் பிரஹ்மத்தை அறிகிறேனில்லை என்னும் அஞ்ஞானமும், பிரஹ்மம் இல்லை, பாநமாகவில்லை என்னும் ஆவரணமும், புண்ணிய பாவங்களைச் செய்கிற கர்த்தாவும், சுகதுக்கங்களைப் புசிக்கிற போக்தாவும் ஆகிய சீவனாகிறேன் என்னும் பிராந்தியும் ஆகிய அவித்தியா சாலங்களை அபரோட்ச ஞானம் நாசம் பண்ணுகிற்கும்; என்னிடத்துச் சநந மரணமும் இல்லை, சுக துக்கங்கள் அற்பமும் இல்லை, வேறே ஒரு சம்சார தர்மங்களும் இல்லை, நான் ஜநநரகிதனான கூடஸ்தனாகிறேன் என்னும் இவ்வநுபவம் சோகநிவிர்த்தியாம்; இதனைப் பிராந்திநாசம் என்றுங் கூறுவர். நான் அத்வைதப் பிரஹ்மமாயிருக்கிறேன் என்று சமுசயரகிதமாகத் தனது சொரூபஞானம் எப்போதுண்டாகிறதோ! அப்போது தன்னிடத்து உண்டாகாநின்ற சந்தோஷத்தை நிரங்குச திருப்தி என்பர்; இச்சத்தாவஸ்தைகளை விஸ்தாரமாக அறியவேண்டின், "பஞ்சதசியின் திருப்திதீபத்தில்" காண்க. (60)

[நித்தியபரோட்சமாகிய ஆன்மாவுக்குப் பரோட்ச வபரோட்சங்களின் விஷயத்தன்மையும், ஞானஞ்ஞானங்கட்கு ஆசிரய விஷயத்தன்மையுங் கூடாவென்று வருஞ் சங்கையைப்பற்றித் தசமனுக்குப்போலச் சகலமுங் கூடுமென்று கூறுகின்றார்.]

இதுநினக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி
உதகதீ ரத்தி லேறி யொருவனொன் பதுபே ரெண்ணி
அதனொடு தசமன் றானென் றறியாமன் மயங்கி நின்றான். (61)

இ - ள். இது நினக்கு அறியும் வண்ணம்=ஆன்மா ஒருவனுக்கே ஏழவத்தைகளும் உண்டாமென்பது உனக்கு விரோதமில்லாமற் றோன்றும்படிக்கு, இப்படி=இவ்வாறு, திட்டாந்தம்=திருஷ்டாந்தமாக, புதுமை ஆம் ஒரு கதை கேள்=ஆச்சரியமாகிய ஒரு கதையினைக் கேட்பாய், பத்துப் புருடர்=தசபுருடர், ஓர் ஆற்றை நீந்தி=ஓர் நதியைக் கடந்து, உதக தீரத்தில் ஏறி=நதியின் கரையிலேறி, ஒருவன் ஒன்பதுபேர் எண்ணி=ஒருவன் நவபுருடரை எண்ணி, அதனொடு=அந்நவ புருடரோடு, தான் தசமன் என்று=தானே தசமனென்று, அறியாமல் மயங்கி நின்றான்=அறியாமற் பிரமித்து நின்றனன். எ - று. (61)

[இதுவுமது.]

அறியாத மயலஞ் ஞான மவனில்லை காணே மென்றல்
பிறியாவா வரண மாகும் பீழைகொண் டழல்விட் சேபம்
நெறியாளன் றசம னுண்டு நிற்கின்றா னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நெஞ்சிற் கொள்வது பரோட்ச ஞானம். (62)

இ - ள். அறியாத மயல் அஞ்ஞானம்=(நவபுருடரை நன்றாகப் பார்ப்பவனாகத் தானிருந்தும் பிராந்தியினால் நவபுருடரை எண்ணிய தன்னைத் தசமனாக) அறியாத மயக்கமே அஞ்ஞானம், அவன் இல்லை காணேம் என்றல்=(தசமனாகிய தான்) தசமன் இல்லை, தோன்றவில்லை என்று கூறுதல், பிறியா ஆவரணம் ஆகும்=நீங்காத அசத்தாவரணம், அபாநாவரணமாம், பீழை கொண்டு அழல் விட்சேபம்=நதியிற்றசமன் இறந்தனன் என்னுந் துக்கமுடையவனாய் அழுதன் முதலியவை விட்சேபமாம், நெறியாளன்=பதிகனான ஆப்தன், தசமன் உண்டு நிற்கின்றான் என்ற சொல்லை=தசமன் இறந்திலன், உளன் என்று கூறிய வசனத்தை, நெஞ்சில் குறியாக எண்ணிக் கொள்வது=அந்தக்கரணத்தில் நிச்சயமாகக் கருதிக்கொள்வது, பரோட்ச ஞானம்=பரோட்ச ஞானமாம். எ - று. (62)

[இதுவுமது.]

புண்ணிய பதிகன் பின்னும் புருடரோன் பதின்மர் தம்மை
எண்ணுநீ தசம னுவை யென்னவே தன்னைக் காணல்

கண்ணினிற் கண்ட ஞானங் கரைதல்போ வதுநோய் போதல்
திண்ணிய மனதி லையந் தெளிதலா நந்த மாமே. (63)

இ - ள். புண்ணிய பதிகன்=தர்மவானாய் மார்க்கத்திற் செல்லும் ஆப்த னானவன், பின்னும்=பின்னரும், புருடர் ஒன்பதின்மர் தம்மை=நவபுருடரை, எண்ணும் நீ தசமன் ஆவை என்னவே=எண்ணாநிற்கும் நீயே தசமனாவாய் என்று உணர்த்தவே, தன்னைக் காணல்=யான் தசமனாகின்றேன் என்று தன்னை அபரோட்சமாக வறிதலே, கண்ணினில் கண்ட ஞானம்= அபரோட்ச ஞானமாம், கரைதல்போவது நோய்போதல்=தசமன் நதியில் இறந்தனன் என்றழுத அழுகை நீங்கினதே துக்கநிவிர்த்தி, திண்ணிய மனதில்=திடமாகிய தனது சித்தத்தில், ஐயம் தெளிதல் ஆனந்தம் ஆம்=சந்தேகம் நீங்கி முதிதை உண்டாதலே நிரங்குச திருப்தியாம். எ - று.

"எண்ணிய நீ பத்தாவாய்" என்றும் பாடமுளது.

திருஷ்டாந்தத்தில் தசமனுக்குப்போல ஆன்மாவினிடத்தும் அஞ்ஞான முதலிய சப்தாவஸ்தைகள் பொருந்தும் என்பது கருத்து. (63)

(116) [தசமனைப்போலச் சோகமோகங்களொழிந்து இன்பமடைய என்னை எனக்குக் காட்டவேண்டும் எனச் சீடன் வினவ ஆசிரியர் சுருதி வாக்கியப்படி அவனை அவனுக்குக் காட்டத் தொடங்கல்.]

தசபுமான் றனைக்கண் டாற்போற் சற்குரு மூர்த்தியே யென்
நிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான்
சுசிபெறு மிலட்சி யார்த்தந் துவம்பதந் தற்ப தங்கட்
கசிபத வைக்கியஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய். (64)

இ - ள். தசபுமான் தனைக் கண்டாற்போல்=தசம புருடன் தன்னைத் தசமனாகக் கண்டாற்போல, சற்குரு மூர்த்தியே—என் நிசவடிவினை யான் காண=எனது நிசரூபமான கூடஸ்தனை (ப் பிரம்மமாக) யான் அறியும்படி, நீர் காட்டல்வேண்டும் என்றான்=தேவரீர் தரிசிப்பித்தல் வேண்டும் என்று சீடன் வினவினான், துவம்பதம் தற்பதம்=(சாமவேத மஹாவாக்கியமானது) துவம்பத, தற்பதங்களின், சுசிபெறும் இலட்சியார்த்தங்கட்கு=(உபாதி சம்பந்தமின்மையிற்) சுத்தம் பொருந்திய இலட்சியார்த்தங்களான கூடஸ்த பிரஹ்மங்கட்கு, அசிபத ஐக்கியம் செய்யும்=(அது நீயாகின்றாய் என்னும) அசிபதப் பொருளான வைக்கியத்தைப் (பாகத்தியாகலட்சணையினாற்)போதிக்கும், அது செயும் உண்மை கேளாய்=அதைதங்ஙனம் போதிக்குந் தத்துவார்த்தத்தை (உபதேசிப்போம்) கேட்பாய். எ - று.

சாமவேத மஹாவாக்கியம் தோன்று எழுவாய். "துவம்" எ - கு, நீ என்று பொருள். "தத்" எ - கு, அது யென்று பொருள். "அஸி" எ - கு, அது நீ ஆகின்றாய் என்று பொருள்.

(117) பதத்திற்கு அர்த்தத்தோடு உளதாய சம்பந்தம் விருத்தி எனப்படும்; அவ்விருத்தி இருவகைத்து. ஒன்று சத்திவிருத்தி: மற்றொன்று இல

ட்சணாவிருத்தி. கடபதத்தில், கேட்பவனுக்குக் கலசரூபமாகிய அர்த்த ஞானத்தை உண்டு பண்ணத்தக்க சாமர்த்தியம் சக்திவிருத்தியாம். அப்படியே படபதத்திலும், கேட்பவனுக்கு வஸ்திர ரூபமாகிய அர்த்தஞானத்தை உண்டு பண்ணத்தக்க சாமர்த்தியம் சக்திவிருத்தியாம்; இவ்வாறே சர்வ பதார்த்தங்களிலுங் காண்க. சக்தி ஆற்றல் என்பன ஒருபொருட் சொற்கள். திருஷ்டாந்தம்:—அக்கினியிற்றன்னோடு கூடின மாத்திரத்திலே வஸ்துக்களை தகிக்கும்படியான சாமர்த்திய ரூபசக்தி எப்படியுண்டோ! அப்படியே பதத்தில் சுரோத்திரத்தோடு கூடவே அவ்வஸ்துவின் ஞானத்தை உண்டு பண்ணத்தக்க சாமர்த்தியம் உண்டு; அதுவே சக்தி எனப்படும் இலட்சணையின் ஞானத்தில் சக்கியத்தின் ஞானம் உபயோகியாம். யாதொரு பதத்தில் யாதோரர்த்த சக்தியுண்டோ! அப்பதத்தினுடைய அவ்வர்த்தம் சக்கியமாம்; சக்கியார்த்தத்தையே வாச்சியார்த்தம் என்றுஞ் சொல்லுவர் "வாசியார்த்த போதக பதம் வாசகம் எனப்படும். சக்கிய சம்பந்தம் இலட்சணையின் சொரூபமாம். யாதோரர்த்தத்தின் ஞானம் பதத்தின் சக்தியினால் உண்டாகாமல் இலட்சணையால் உண்டாமோ! அது பதத்தினுடைய இலட்சியார்த்தம் எனப்படும். விட்டலட்சணை, விடாதலட்சணை, விட்டுவிடாதலட்சணை என இலட்சணை மூவகைத்து; இவற்றை ஜஹல்லட்சணை, அஜஹல்லட்சணை, ஜஹதஜஹல்லட்சணை என வடநூல் வல்லோர் கூறுப; இவற்றை உதாரணத்தோடு 78-வது செய்யுட்டொடங்கி, 81-வது செய்யுள் வரையுங் கூறப்படும்; ஆண்டுக் காண்க. (64)

[இதுமுதல் 81-ம் செய்யுள் வரையும் மஹாவாக்கிய விசாரம்.]

விண்ணொன்றை மகாவிண் ணொன்று மேகவிண் ணொன்றும் பாரின்
மண்ணொன்று கடவிண் ணொன்று மருவிய சலவிண் ணொன்றும்
எண்ணுங்கற் பனைபோ லொன்றே யெங்குமாம் பிரம மீசன்
நண்ணுங்கூ டஸ்தன் சீவ னென்குறை தந்ப மாமே. (65)

இ-ள். வெளி.

கருத்துரை:—1-வது—பிரமாண்டத்தின் உட்புறமெங்கும் ஏகரசமாய், வியாபகமாயுள்ள ஆகாச சொரூபத்தை மஹாகாசம் என்பர். 2-வது—மேகத்திற்கு அவகாசங் கொடுத்திருக்கின்ற ஆகாசத்தையும், மேகசலத்தில் பிரதிபிம்பித்துள்ள ஆகாசத்தையும் மேகாகாசம் என்பர். 3-வது—சலத்தினால் நிறைந்திருக்கின்ற கடத்திற்கு எவ்வளவாகாசம் அவகாசங் கொடுத்திருக்கின்றதோ! அவ்வளவாகாசத்தைக் கடாகாசம் என்பர். 4-வது—சலத்தினால் நிறைந்திருக்கின்ற கடத்தில் மேக நட்சத்திரங்களோடு பிரதிபிம்பித்திருக்கின்ற ஆகாசப் பிரதிபிம்பத்தையும், கடாகாசத்தையுஞ் சேர்த்துச் சலாகாசம் என்பர்.

(118) தாஷ்டாந்தம்:—1-வது—பிரமாண்டத்தினுள்ளும் புறம்பும் மஹாகாசம் போலப் பரிபூரணமான யாதொரு சேதனம் உண்டோ! அது பிரஹ்மம் என்று சொல்லப்படும்; அப்பிரஹ்மம் சமீபமல்ல, தூரமுமல்ல. என்னை?

யாதொருவஸ்து தனக்குப் பின்னமாயிருக்குமோ! தேசரூபவுபாதியுடைய தாமோ அது தூரம், சமீபம் என்று சொல்வதற் குரித்தாம். பிரஹ்மமானது பின்னம் அன்று, சர்வத்துக்கும் ஆன்மாவாக உள்ளது, தேசமுதலிய வுபாதி ரகிதமானது; ஆகலின் சமீபம், தூரம் என்று சொல்லத்தக்கதன்று. ஆயினும் பிரஹ்ம சத்தத்தின் வாச்சியமும் சோபாதிகமாம். ஏனெனின்? வியாபக வஸ்துவிற்குப் பிரஹ்மம் என்று பெயர்; அவ்வியாபகத் தன்மை இருவகைத்து; ஒன்று ஆபேட்சிக வியாபகத்தன்மை, மற்றொன்று நிரபேட்சிக வியாபகத்தன்மை. யாதொரு வஸ்து ஒன்றை நோக்க வியாபகமாமோ! மற்றொன்றை நோக்க வியாபகமாகாதோ அதனிடத்துள்ள வியாபகத்தன்மை ஆபேட்சிக வியாபகத் தன்மை; அஃதெங்ஙனமெனின்? பிருதுவியாதியை நோக்க மாயை வியாபகமாம், சேதனத்தை நோக்க வியாபகம் அன்று; ஆகலின், மாயையின்கண் ஆபேட்சிக வியாபகத் தன்மை உண்டு. யாதொரு வஸ்து சர்வத்தையும் நோக்க வியாபகமாமோ! அதன்கண் நிரபேட்சிக வியாபகத்தன்மை உண்டு; அந்நிரபேட்சிக வியாபகத்தன்மை சேதனத்தின்கண் உண்டு. ஏனெனின்? சேதனத்திற்குச் சமானமாகவாவது, சேதனத்தினு மதிகமாகவாவது வேறொரு வியாபகம் இல்லை, சேதனமே சர்வத்தினும் வியாபகமாம்; ஆகலின், சேதனத்தின்கண் நிரபேட்சிக வியாபகத்தன்மை யுண்டென்க; இவ்விருவகை வியாபகத் தன்மையோடுங் கூடின வஸ்து யாது அது பிரஹ்ம சத்தத்திற்கு வாச்சியமாம்; அவ்விருவகை வியாபகத் தன்மையும் மாயாவிசிஷ்ட சேதனத்தின்கண் உண்டு. ஏனெனின்? விசிஷ்டனிடத்துள்ள மாயாபாகத்தில் ஆபேட்சிக வியாபகத் தன்மையும், சேதனபாகத்தில் நிரபேட்சிக வியாபகத் தன்மையும் இருத்தலின் என்க. ஆயினும், மாயாவிசிஷ்ட சேதனத்தினிடத்து நிரபேட்சிக வியாபகத்தன்மை கூடாது. ஏனெனின்? மாயை சேதனத்தின் ஏகதேசத்திலிருப்பதாகலானும், அம்மாயாவிசிஷ்ட சேதனத்தினும் சுத்த சேதனத்தின் வியாபகத்தன்மை அதிகமாகலானும் சுத்தசேதனத்திலேயே நிரபேட்சிக வியாபகத்தன்மை உண்டென்க. அங்ஙனமாயினும், மாயாவிசிட்ட சேதனம் பரமார்த்தமாகச் சுத்த சேதனத்திற்கு வேறாகாமல் சுத்தரூபமாகவேயிருக்கின்றது; இவ்வாற்றால், மாயாவிசிஷ்டமே பிரஹ்ம சத்தத்திற்கு வாச்சியம், சுத்தசேதனம் பிரஹ்ம சத்தத்திற்கு இலட்சியமாம். ஈசுர சத்தம், பிரஹ்ம சத்தம் இரண்டிற்கும் சமானார்த்தமே தோற்றினும் பிரஹ்ம சத்தத்திற்கு அநேக விடங்களில் இலட்சியார்த்தமும் ஒரோ விடங்களில் வாச்சியார்த்தமும் போதிக்கப்பட்டிருக்கின்றது. ஈசுரசத்தத்திற்கு அநேக விடங்களில் வாச்சியார்த்தம் போதிக்கப்பட்டிருக்கின்றது. பிரஹ்மசத்தத்திற்கும், ஈசுரசத்தத்திற்கும் இவ்வளவு பேதம் உண்டு; இங்கே இலட்சியார்த்தத்தைக் கொண்டு பிரஹ்ம சத்தார்த்தத்தைப் பின்னமாக நிரூபிக்கப்பட்டது என்க.

(119) 2-வது—மாயையின்கண் சேதனத்தினது ஆபாசம், மாயைக்கு அதிஷ்டானமாகிய சேதனம் இவ்விரண்டையும் ஈசுரன் என்பர்; அவ்வீசுரன் மேகாகாசத்திற்குச் சமானன்; அவ்வீசுரன் அந்தரியாமியும், சதா முத்தனுமாம். இங்ஙனம் கூறியதற் கேதுவென்னையோ வெனின்:—மாயையினிடத்துச் சுத்த சத்துவகுணம் உண்டு: இரஜோகுண, தமோகுணங்களாற்

ருழ்த்தப்பட்ட சத்துவகுணம் இல்லை. இரஜோகுண, தமோகுணங்களைத் தாழ்த்தித் தான் மேலிட்டிருப்பது யாது அது சுத்த சத்துவகுணம் எனப் படும் சுத்த சத்துவ குணத்தினால் ஞானோற்பத்தி யாவதால் பிரகாச சுபாவ முடையது சத்துவகுணமாம்; இப்படிப்பட்ட சத்துவ குணத்தை யுடைத் தான மாயையினிடத்து யாதொரு சேதனத்தின் ஆபாசமுண்டோ! அதற் குச் சொரூபத்தினிடத்தும், மற்றைப் பதார்த்தங்களினிடத்தும் ஆவரணம் இல்லாமையினால் அவ்வீசுரன் முத்தனும், சர்வஞ்ஞனுமாவன். அதிஷ்டான மாகிய சேதனம் ஜீவேசுரரிடத்துள்ள பந்த மோட்ச பேதரகிதமாய் ஆகாசம் போல ஏகரசமாயிருக்கின்றது. ஆபாசக் கூற்றிற் பந்த மோட்சம் உண்டு. அதிஷ்டானத்தில் ஆபாசனுக்குப் பிராந்தியினாற் பிரதீதியாகிறது. கேவலம் ஆபாசத்தில் பந்த மோட்சம் உண்டென்பதிலும் பேதம் உண்டு; அது யாதொரு ஆபாசத்தில் ஆவரணம் உண்டோ அதனிடத்துப் பந்தம் உண்டு. யாதொன்றினிடத்துச் சொரூபத்தின் ஆவரணம் இல்லையோ அது முத்த மாம். ஈசுரனிடத்து ஆவரணம் இல்லையாகலின், ஈசுரன் சதா முத்தனும். ஜீவனிடத்து ஆவரணம் இருத்தலின் அவன் பெத்தனும். என்னை? யாதொரு அவித்தைக் கூற்றில் சேதனத்தின் ஆபாசத்தைச் சீவன் என்று சொல்லப் படுகிறதோ அவ்வவித்தைக்கு ஆவரணம் பண்ணுவது சுபாவமாம். ஆயினும் அவித்தை, அஞ்ஞானம், மாயை என்பன ஒன்றற்கே பரியாயம்; அங்ஙன மாயினும், சுத்த சத்துவகுணப் பிரதானத்துவத்தால் மாயையென்றும், மலின சத்துவகுணப் பிரதானத்துவத்தால் அஞ்ஞானமென்றும், அவித்தையென் றுஞ் சொல்லப்படும். இரஜோகுண, தமோகுணங்களாற் ருழ்த்தப்பட்ட சத் துவகுணம் மலின சத்துவகுணமாம். தமோகுண, ரஜோகுணங்கள் அதி கரித்திருப்பதால் அவித்தையின்கண்ணுள்ள சீவனுடைய ஆபாசக்கூற்றிற் குத் தன் சொரூபந் தோற்ருமற் போகும்படிக்கு அவ்வவித்தை ஆவரணம் பண்ணுகின்றதால் சீவனிடத்துப் பந்தம் உண்டு, ஈசுரனிடத்து அஃதில்லை. அதிஷ்டான சேதனத்தோடுகூட மாயையில் ஆபாசரூபமான ஈசுரன் தற் பதத்திற்கு வாச்சியன். கேவலம் அதிஷ்டான சேதனம் தற்பதத்திற்கு இல ட்சியமாம்.

(120) 3-வது—புத்தி அல்லது, வியஷ்டி அஞ்ஞானத்திற்கு அதிஷ் டான சேதனங் கூடஸ்தன் என்று சொல்லப்படும்; எப்பட்சத்தில் புத்தி சகிதசேதனம் ஜீவனோ! அப்பட்சத்தில் புத்திக்கு அதிஷ்டானங் கூடஸ்தன் என்று சொல்லப்படும். எப்பட்சத்தில் வியஷ்டி அஞ்ஞான சகித சேதனஞ் சீவன் என்று சொல்லப்படுமோ! அப்பட்சத்தில் வியஷ்டி அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானங் கூடஸ்தன் என்று சொல்லப்படும். சித்தாந்தம்:—சீவத்தன் மைக்கு யாதொரு விசேஷணம் உண்டோ அதனதிஷ்டானத்திற்குக் கூடஸ் தன் என்று நாமம்: அக்கூடஸ்தன் உற்பத்திரகிதன்; இதற்கபிப்பிராயம்:— பிரஹ்மத்திற்கு வேருக எப்படிச் சிதாபாசன் உற்பன்னமாகின்றன்னே அப் படிக் கூடஸ்தன் உற்பன்னமாக இல்லை. பின்னை எப்படி யுளனெனின்? பிரஹ்மரூபமாகவே உளன்; இக்கூடஸ்தனே ஆன்மபதத்திற்கு இலட்சியார்த்

தம்; இவனையே பிரத்தியக்கென்றும், நிஜரூபமென்றுங் கூறுவர்; இவனே சிவசாட்சியாம்.

(121) 4-வது—நாநா காம கர்மங்களோடு கூடிய புத்தியின்கண் பிரதி விம்பிக்கும் சேதனப் பிரதிவிம்பத்தைச் சீவன் என்பர். கேவலம் பிரதி விம்ப மாத்திரத்தைச் சீவன் என்கிலர்; எப்படிக் கடாகாசத்தோடுகூட ஆகாசத்தின் பிரதிவிம்பத்தைச் சலாகாசம் என்பரோ! அப்படி விம்பமான கூடஸ்தனோடு கூடச் சிதாபாசனைச் சீவன் என்பர்; இதனால் புத்தியிற் சிதா பாசனும், புத்திக் கதிஷ்டானமான சேதனமும் ஆகிய இரண்டனது நாமம் சீவனும்; அச்சீவன் துவம்பதத்திற்கு வாச்சியன். அவனிடத்திற் சிதாபாச பாகம் ஒழிந்த கேவலம் கூடஸ்தன் துவம்பதத்திற்கு இலட்சியனும். அகம் சப்தத்திற்கு வாச்சியனுஞ் சீவனும்: கேவலங் கூடஸ்தன் இலட்சியமாம் என் றறிக. (65)

[முன் சொல்லிய நான்கு சைதந்நியங்களுள்ளோ இவை வாச்சியம், இவை இலட்சியம் எனக்கூறி வாச்சியத்தினு றுதான்மியம் ஒழிந்து இலட்சியமாவா யெனல்.]

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும்
வாச்சியம் லட்சி யந்தான் மலமிலாப் பிரம மான்மா
காச்சிய பாலி னெய்போற் கலந்தொன் றாங் கடைந் தெடுக்கும்
ஆச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிரிந்து கொள்ளே (66)

இ-ள். பூச்சிய ஈசன்=(யாவராலும்) பூஜிக்கத்தக்க ஈசுரனும், சீவன் =(பூஜகனான) சீவனும், புகல் பதம் இரண்டினுக்கும் வாச்சியம்=(மஹா வாக்கியத்திற்) சொல்லுந் தற்பதம், துவம்பதம் இரண்டிற்கும் (முறையே) வாச்சியார்த்தமாம், லட்சியந்தான்=அவற்றிற்கு லட்சியார்த்தமாவன, மலம் இலா பிரமம் ஆன்மா=அவித்தியா மலமற்ற பிரமமும், கூடஸ்தனுமாம், காச்சிய பாலில் நெய்போல்=காய்ச்சப்பட்ட பாலில் நெய்யானது (கலந்தொ ன்று யிருப்பது) போல, கலந்து ஒன்று ஆம்=(அவ்வாச்சிய லட்சியங்கள் அவிவேகத்தாற்) கலந்து ஏகமாயிருக்கின்றன, கடைந்து எடுக்கும் ஆச்சியம் என்ன=மத்தினாற் கடைந்தெடுக்கும் நெய்யைப்போல, உன்னை அறிந்து= (விவேகத்தால் இலட்சியார்த்தமான) உன்னை யறிந்து, நீ பிரிந்து கொள்= (வாச்சியார்த்தத்தினின்றும்) நீ வேறுபடுதி. எ-று.

"காச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றாம்" எ-கு, உ-ம், தேவாரம்,—

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியா
னுறவு கோனட் டுணர்வுக் கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

என வரும், மற்றும் வருவன வற்றுற் காண்க. (66)

(122) [அவிவேகத்தால் உண்டாகிய அநான்மாவில் ஆன்மபுத்தியை ஒழிக்குமாறு.]

பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு முடனா னென்னும்
அறிவினைக் கொல்லல் வேண்டும் ஐம்பூத விகார மன்றோ
வெறியதோர் துருத்தி மூக்கின் விடுவது போலுன் மூக்கால்
எறிபிரா ணனுநீ யல்லை யிராசத குணவி காரம். (67)

இ-ள். பிறிவது எப்படி என்றக்கால்—(வாச்சியத்தினின்றும் என்னை யறிந்து) வேறுபடுவது எவ்வாறென விவேகத்தாலாமென்று கேட்பாயாகில், பிணம் ஆகும் உடல் நான் என்னும் அறிவினைக் கொல்லல் வேண்டும்—(சில நாளிற்) பிணமாய்ச் சிதைந்து போகாநிற்கும் (அந்நமயகோசமான ஸ்தூல) தேகத்தை ஆன்மா என்று கருதும் பிராந்தியைக் கெடுத்தல் வேண்டும், ஐம் பூத விகாரம் அன்றோ—(அத்தேகம் பஞ்சீகிருத) பஞ்சமகா பூதங்களின் காரியமாமாகலின், வெறியது ஓர் துருத்தி—வெறுமையான ஓர் தோற்றுருத்தி, மூக்கின் விடுவதுபோல்—மூக்கினால் (காற்றை) விடுவதுபோல, உன் மூக்கால்—உனது நாசியால், எறி பிராணனும் நீ அல்லை—வீசுகின்ற (சடமான) பிராணமய கோசமும் நீ யல்லை, இராசதகுண விகாரம்—(அது அபஞ்சீகிருத பூதங்களின்) இராசதகுண காரியம் (ஆகலான்). எ-று. (67)

[இதுவுமது.]

கரணமா மனது புத்தி கருத்தா வாமவை யான்மா வோநீ
தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்
வரமறு துயிலா னந்த மயனையு நானென் றோதே
விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே. (68)

இ-ள். கரணம் ஆம் மனது—கரணமாகிய மனமும், கருத்தா ஆம் புத்தி—கருத்தாவாகிய புத்தியும், அவை ஆன்மாவோ—(ஆகிய) அவையும் நீயா! அல்லை, தரம் உள இரண்டு கோசம்—(சங்கற்பரூபம், நிச்சயரூபம் எனும்) தாரதம்மியமுள்ள அவ்விரண்டு கோசங்களும், சத்துவகுண விகாரம்—(அபஞ்சீகிருத பூதத்தின்) சத்துவகுண காரியம் (ஆகலின்), வரம் அறு—சிரேஷ்டமற்ற, துயில் ஆநந்த மயனையும்—சுழுத்தியிலுள்ள ஆநந்த மயனையும், நான் என்று ஓதே—ஆன்மாவென்று கருதற்க, விரவிய தம அஞ்ஞான விருத்தியின் விகாரம் ஆம்—பொருந்திய தமோரூபமான அஞ்ஞான விருத்தியின் காரியமாம் (ஆகலின்). எ-று.

அந்தக்கரணம் ஒன்றைத்தானே மனோமயம், விஞ்ஞானமயம் என்னும் இருவகைக் கோசங்களாகக் கூறுவா றெங்ஙனமெனவரும் ஆசங்கையைப்பற்றிக் கரணபாவத்தினாலும், கருத்தாபாவத்தினாலும் ஒரே அந்தக் கரணத்தின் கட் பேதமுண்மையின் அங்ஙனங் கூறலாம் என்பார், "கரணமா மனது கருத்தாவாம் புத்தி" என்றார். (68)

(123) [இப்பஞ்ச கோசங்கள் மண்ணால் விகாரமான குடம்போலப் பூதாதி விகாரமாகலின் மயமல்லவாயின, இவை கட்கு வேறாக யான் எத்தன்மையனாய் உளனோ வெனின்? அதனைக் கூறுகின்றார்.]

சத்தொடு சித்தா னந்தஞ் சமத்திரஞ் சாட்சி யேகம்
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ றிந்து
பொய்த்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய். (69)

இ-ள். சத்து சித்து ஆநந்தம் = சச்சிதாநந்தாத்மகமாய், சமம் திரம் சாட்சி ஏகம் = சமமாய், ஸ்திரமாய், சாட்சியாய், ஏகமாய், நித்தியம் வியாபி ஆன்மா நீ = நித்தியமாய், வியாபகமாய், (பஞ்ச கோசங்களின் * புச்சமான) பிரத்தியகாத்மாவே நீ, (ஆகலின்) அதுவா அறிந்து = (அத்தன்மையதான) பிரத்தியகாத்மாவாகவே (உன்னை) அறிந்து, பொய்த்து சடம் துக்காதி = அநிருத, சட, துக்காதியாத்மகமாய், பொருந்து பேதங்கள் ஆன = பொருந்துகின்ற (முன் சொன்ன ஆன்ம சுபாவத்திற்கு) விபரீத சுபாவங்களையுடைய அநான்ம வர்க்கங்களாகிய, குத்திர பஞ்சகோசக் குகைவிட்டு = வஞ்சகத்தையுடைய பஞ்ச கோசங்களாகிய குகைகளில் (ஆன்மத்துவப் பிராந்தியை) ஒழித்து, வெளியில் ஆவாய் = வெதிரித்தருவாய். எ-று.

ஒடு = எண்ணிடைச்சொல். "ஆதி" சத்தத்தால் விஷமம், அஸ்திரம், சாக்ஷியம், அநேகம், அநித்தியம், வியாப்பியம் என்பனவுங் கொள்க. சாக்கிராதி அவத்தைகளுள்ளே ஓரவத்தையிலாவது அபாவமாகாமற் சர்வாவத்தைகளிலுஞ் சாட்சியாயிருப்பதால் ஆன்மா சத்து, அந்நமயாதி கோசங்கள் ஓரவத்தையில் பாவமாய்க் காணப்பட்டு மற்றோரவத்தையில் காணப்படாமையின் அசத்து, கோசங்களின் பாவாபாவங்களை ஆன்மா சர்வாவத்தைகளிலுமிருந்து அறிதலிற் சித்து, அவைகள் அறியப்படுதலிற் சடம், கோசங்கள் வெறுப்பாய்க் கைவிடப்படுதலின் துக்கம். ஆன்மா பரமப் பிரேமாஸ்பதமாய்க் கைவிடப்படாமையின் ஆநந்தம், கோசங்கள் தாரதம்மியமா யிருத்தலின் விஷமம், ஆன்மா கோசங்களிற் சத்தாகாரமாய்த் தாரதம்மியமற இருத்தலிற் சமம், கோசங்கள் ஓரவத்தையிலிருந்தது மற்றோரவத்தையிலிராமல் நழுவிப்போதலின் அஸ்திரம், ஆன்மா சர்வாவத்தைகளிலும் நழுவாதிருத்தலின் ஸ்திரம், கோசங்கள் சண்டை செய்பவர்போலத் தத்தந் தொழில்களிற் பிரவிர்த்தித்தலிற் சாட்சியம், சண்டையைக் காணுதல் செய்பவர்போல் ஆன்மா உதாசீனமாய் அவைகளைத் தோற்றுவிப்பது மாத்திரமாயிருத்தலின் சாட்சி, கோசங்கள் சுவகதாதி பேதமுடைமையின் அநேகம், ஆன்மா சுவகதாதிபேத ரகிதமாதலின் ஏகம், கோசங்கள் அவத்தைகளிற்றோன்றி யழிவதால் அநித்தியம், ஆன்மா அங்ஙனமன்றிச் சதோதிதமாகலின் நித்தியம், கோசங்கள் தேச

---

* புச்சம் = ஆதாரம்.

காலாதி பரிச்சேதமுடைமையின் வியாப்பியம், ஆன்மா தேசகாலாதி பரிச சேத சூனியமாகலின் வியாபி என்றறிக. இங்கே சச்சிதாநந்தாதிப் பிரஹ்ம லட்சணங்களை ஆன்மாவுக்குக் கூறினமையின் ஆன்மாவே பிரஹ்மம் என்பது பெற்றாம்;அங்ஙனமின்றி,ஆன்மாவுக்குப் பிரஹ்மம் அநந்யமாம் எனின்:— கடாதிகள் போலப் பிரஹ்மம் அநான்மாவாம்; பிரஹ்மத்தைச் அநான்மா வென்கை சுருதி, ஸ்மிருதி, புராணங்கட்கு விரோதமாம்; ஆகலின், ஆன் மாவே பிரஹ்மம் என யூகிக்க. அநான்மாவான பஞ்சகோசங்களும் ஆன்மா வாகத் தோன்றுதலின், "குத்திர பஞ்சகோசம்" என்றார். "பஞ்சகோசக் குகைவிட்டு வெளியி லானாய்" எ - து, குகைக்குள்ளிருக்கும் ஆன்மாவை யறிந்தால் முத்தி உண்டென்னும் "தைத்திரீய சுருதியைக்" குறிப்பித்ததாம். "சத்தொடு சித்தாநந்தம்" எ - கும், "போத்தொடு சடந்துக்காதி" எ - கும், உ - ம், வாசிட்டம்,—

"மூகமாய்ச் சடமாய்ச் சுகாசுகங் களிலே மூழ்கியோர் பய னற வருந்துந், தேகமார் நீயா ரகோவகோ வீதோர் சித்திர மிருந் தவா காணு, யேகமாய் மெய்யா யிலங்கிய பிரம மெங்குமா யிருக்க வுந் தோன்றாச், சோகமாய்ப் பொய்யாய் விளங்குறு மாயை தோன் றுறு திருக்கவுந் தோன்றும்."—

என வரும். மற்றும் வருவன வற்றுற் காண்க.

"பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லானாய்" எ - கு, உ - ம், பிரமகீதை,—

"யாதொன் றெலும்பு நரம்புமுத லிந்த வுடம்ப தன்னமய
னோது பிராண மயனத்துக் குள்ளாய் வேறு யெயொளிரு.
மோது பிராண மயற்கயலா யுள்ளா யொளிரு மனோமயனந்
நீதி யுறவிஞ் ஞானமய னவனுக் குள்ளாய் நிகழுமால்."—எ - ம்,

"அன்னியமாய் விஞ்ஞான மயனுக் குள்ளா மாநந்த மயனன்ன மயன்ற னுள்ளாய், மன்னியவப் பிராணமய னூலே பூர்ணன் மனோ மயனுற் பூரணன் மனோ மயன்று; னன்னவகை விஞ்ஞான மயனுற் பூர்ண னனந்த மயனாலே யவன்றான் பூர்ணன், றன்னிகரற் றனைத்தி னுக்கு முன்னாய் வேறாந் தற்பரத்தாற் பூர்ணனது தானே பூர் ணம்."—எ - ம்,

"சச்சி தாநந்த மாகியொன் றும்பரப் பிரமம், புச்சமென்றுரை த்திடப்படு மிரதமப் பொருளே, யிச்ச தாநந்த மெய்திய யாவனெவ் விடத்துந், துச்ச வாக்கையின் றுயரறுத் தவன்சுகம் பெறுமால்."— எ - ம் வரும். (69)

மற்றும் வருவனவற்றுற்,காண்க.

[குருவருளின்படி பஞ்சகோசங்களை நேதித்து அவைகளின் அபாவத்தைக்கண்டு இதுவோ யான் எனச் சீடன் கலங்கி வினாதல்.]

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறொன்றுந் தெரியக் காணேன்
அஞ்சன விருளை யோநா னகமென வநுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார். (70)

இ - ள். பஞ்சகோசமும் விட்டு—அந்நமய முதலிய வைந்துகோசங்களையும் (சுவாமிகள் உபதேசித்த யுகத்தால்) நேதித்து, அப்பால்—மேல், பார்க்கின்றபொழுது, பாழே விஞ்சியது—சூனியமே சேஷித்தது, அது அல்லாமல்—அச்சூனியத்தையன்றி, வேறு ஒன்றும்—வேறே யொருபொருளும், தெரியக் காணேன்—தோன்றக் கண்டிலேன், (ஆகலின்) அஞ்சன இருளையோ—கரிய வந்தகாரம்போலுஞ் சூனியத்தையோ, நான்—யான், அகம் என—அகம்பிரஹ்மமென்று, அநுபவிப்பேன்—அநுபவியா நிற்பேன், வஞ்சம் இல் குருவே என்ற—கபடவர்ஜிதரான குருவே என்று வினவிய, மகன் மதி தெளியச் சொல்வார்—சீடன் புத்தி தெளியும்படிக்கு உபதேசிப்பார். எ - று.

பஞ்ச கோசங்களை நேதித்தவிடத்து அவைகளின் அபாவத்தைக்கண்டு இதனை யானெனப் பாவிக்கில் யான் சூனியமாய் விடுவேனல்லவா! இதுவா புருஷார்த்தம் என்பான், "அஞ்சன விருளை யோநா னகமென வநுபவிப் பேன்" எ-ம், தமது பசியைத் தணித்தற்கு வேறோர் கதியின்மையின் அறுகொட்டுபவர்போல் உலகிலுள்ளோர் பொருளை உபாயத்தாற் கவர்ந்து உபாயமல்லாத யாதேனு மொன்றைக் காதிலுள்ளே ஊதிவிடாநிற்கும் வஞ்சகர் போலாது பொருளிச்சை யின்மையானும், கருணையே திருவுருவானமையானும் தம்மை யடைந்தோர் கடைத்தேறும்படிக்குச் சுருதி சம்மதமான வுபாயத்தை அருளாநிற்கும் ஆசாரியரே என்பான், "வஞ்சமில் குருவே" என்றுங் கூறினான்.

"பாழே விஞ்சியது" எ-கு, உ-ம், விவேகசூடாமணி,—

" என்னவா சானை நோக்கி யேதமில் சீடன் சொல்வான்
சொன்னவிப் பஞ்ச கோசஞ் சத்தமா மித்தை யென்றே
யுன்னிநா னாகத் தாலே யொதுக்கிய பின்னை யையா
மன்னுசூ னியமே யன்றி மற்றேது மிங்கு காணேன் "

என வரும். மற்றும் வருவன வற்றுற் காண்க. (70)

[சூன்யத்தை யநுபவியாநின்ற அநுபவஸ்பனை நீ சூன்யத்தின் வேறெனத் தச்சமதிருஷ்டாந்த யுக்தத்தாற் கூறுகின்றார்.]

முன்புக றாமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
ஒன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைக்கா ணாத

பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனே பாராய்
அன்புள மகனே காண்பா னடங்கலுங் காண்பா னீயே (71)

இ-ள். முன் புகல் தசமன்=முன் சொன்ன தசமனுனவன், புத்தி மோகத்தால்=புத்தியின்கணுள்ள வஞ்ஞானத்தினால், எண்ணி எண்ணி=அடிக்கடி யெண்ணி, ஒன்பது பேரைக்கண்ட=நவபுருடரைக்கண்ட, ஒருவன் ஆம் தனை=தசமபுருடனுன தன்னை, காணு பின்பு—(தசமனைக்) காணுதவிடத்து, அவன் இடையில் கண்ட=அவனிடத்தவனுற் காணப்பட்ட பெரியபாழ்=பெருஞ்சூனியம், அவனே—அவனுனவனே!, பாராய்=(இதனை யூகித்துப்) பார், அன்பு உள மகனே—(குருவினிடத்தும், சாஸ்திரத்தினிடத்துஞ்) சிரத்தையுள்ள மைந்தா, காண்பது அடங்கலும்=(உன்னுற்) காணப்படுகிற சூனியம் (மயல்லவே: சூனிய முதலிய) கிரியைகளின் முழுவதும், காண்பான் நீயே=காண்பவனுன சிதாகாசமயனே நீ. எ-று.

"அன்புள" என்னும் விசேஷணம், அநுபவத்தில் விசுவாசந் தவிர்தல் உசிதமல்ல என்னுங் குறிப்பு. "மகனே" என்னும் விளி, புத்திரனைப் பிதா வஞ்சிப்பது உலகிற் காணப்படாமையின் உன்னை வஞ்சிக்கும்பொருட்டு இப்படி உபதேசித்ததல்ல, சுருதி சம்மதமும், மகான்களநுபவமுமாம் இவ்வுபதேசம் என்னுஞ் சூசனை. "காண்பா னடங்கலுங் காண்பா னீயே" எ-கு, உ-ம், விவேகசூடாமணி,—

"விரிவகங் கார மாதி விகாரமற் றதனைப் பார்வை
யிருமையா மிவற்றை யெல்லா மிங்கியா தொன்று மியாதை
யொருபொரு ளுணரா தந்த வுணர்வுரு வாமச் சாட்சிப்
பொருளினை மிகவு நன்மையாப் புந்தியா லுணர்தி மைந்தா."—

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (71)

[முன்னே, "காண்பா னடங்கலுங் காண்பா னீயே" என்று
சாமான்யமாக வுபதேசித்ததை விசேஷித்துச் சாட்சி
புருஷனாக நிறுத்துகிறார்.]

தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போனவெத் தனையென் றேனும்
ஆலமர் கடவு ளாணை யனைத்திற்குஞ் சாட்சி நீயே. (72)

இ-ள். தூல சூட்சும அஞ்ஞானம்=ஸ்தூல தேகம், சூட்சும தேகம், காரணதேகம் (ஆகிய மூவகைத் தேகங்களும்), தோன்றும் மூன்று அவத்தை

தாமும்=(அம்மூவகைத் தேகங்களைப்பற்றித்) தோன்று நிற்குஞ் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூவகை அவஸ்தைகளும், காலம் ஓர் மூன்றும்=(பூத, பவிஷ்ய, வர்த்தமானம் என்னும்) முக்காலங்களும், சன்மக் கடல்=ஜநநமாகிய கடலின் கண்ணே, எழும் கல்லோலங்கள் போலவே=எழு (ந்தழியு) மலைகள்போலவே, வந்து வந்துபோன=உதித்துதித்து அழிந்தனவற்றை, நான் எத்தனை என்பேன்=யான் எவ்வளவென்று (வரையறுத்துக்) கூறுவேன், ஆல் அமர்கடவுள் ஆணை=கல்லாலின் நிழலின்கண்ணே யெழுந்தருளிச் சனகாதியர்க்கு ஞானோபதேசஞ் செய்தருளிய ஆதிகுருவாகிய தக்ஷிணாமூர்த்தியின்மேற் சத்தியம், அவைக்கு எலாம் நீயே சாட்சி=அவையனைத்திற்கும் நீயே சாட்சியாம். எ - று.

ஜன்மப் பிரதீதியநந்தரம் யாவும் பிரதீதியாதலின், "சன்மக் கடலில் வந்து வந்து" எ - ம், ஜநநத்திற்களவின்மையின், 'கடல்" எ - ம், அவைகள் அநிர்வசனீயமா யுதித்தொடுங்குதலின், "கல்லோலங்கள்போல" எ - ம், இங்ஙனம் உதித்தொடுங்கா நிற்பவற்றிற்கு அளவின்மையின்,' எத்தனையென்பேன்" எ-ம், அவைகளைத் தினந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், யுகந்தோறும், கற்பந்தோறும் அறிந்துகொண்டிருத்தலால், "அவைக்கெல்லாஞ் சாட்சி நீயே" எ - ம், சுருதி, யுத்தி, அநுபவ சித்தமான இதனைச் சந்தேகமின்றித் துணிதி என்பார், "ஆலமா கடவுளாணை" எம், கூறினர். "அவைக்கெலாஞ் சாட்சி நீயே" எ - கு, உ - ம், பஞ்சதசி,

"ஒலியொடு ருதியு மோதும் வேத்திய
மலிதரு நனவிடை வழியின் வேறதா
நலிவுசெய் யவற்றின்வே றுரு ஞானந்தான்
பொலிதலி னேகமாய் வேறு நூறுமோ"—எ - ம்,

"இன்னதாங் கனவினு மீண்டு வேத்திய
மன்னுறு நனவிடை மன்னி நின்றிடி
மன்னதாற் பேதமா மவற்றின் வேதனம்
பின்னமன் றேகமாய்ப் பிறங்கும பெற்றியால்"—எ - ம்,

"துயின்றெழுந் தோனுக்குச் சுழுத்தி காலயி
லியைந்திடுந் தமவறி வெண்ணு மாமதாலடம்
பயன்றரு மனுபவம் பற்றி வருதகா
லயர்தரு தமமப்போ தறியப் பட்டதே."—எ - ம்,

"அறிவது விடயத்தி னயல்மற் றன்றாகாண்
பிறவறி வினிற்கனுப் பிறங்கு போதமப்போல்
முறையிதி னறிவுமுப் புரத்து மேகமிந்
நெறிபிற மாதயற் றினத்து நிற்குமால்."—எ - ம்,

"பேதமாய்ச் சென்றதும் பின்னர்ச் சார்வதா
மாதமாண் டுகமொடு மருவு கற்பத்துஞ்
சாதலும் பிறத்தலுந் தணந்த ஞானமொன்
முதலி னிதுசுய மாகுஞ் சோதியே."—எ-ம், வரும்.
மற்றும் வருவனவற்றுற் காண்க. (72)

[சூன்யமுதலிய சர்வத்தையுமறியும் பிரகாசரூபமான என்னை வேறே யாதோரு பிரகாச சாதனங்கொண் டறியலா மென்னுஞ் சீடனு சங்கையைப்பற்றி, ஆன்மா சொப்பிரகாசன் என்னுஞ் சுருதி, யுத்தி, அநுபவங்களான் அங்ஙனங் கூடா தென்று கூறுகின்றர்.]

எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று
சொல்லாதே சுயமாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே றுண்டோ
பல்லார்முன் றசமன் றன்னைப் பார்ப்பதுந் தனைக்கொண் டேதான்
அல்லாமற் பதினென் ருனு மவனிடத் துண்டோ பாராய். (73)

இ-ள். எல்லாம் கண்டு அறியும் என்னை=(சூன்ய முதலிய) சர்வத்தையுஞ் சாட்சியாயறியும் என்னை, எதுகொண்டு அறிவேன் என்று=யாதொரு பிரகாசாந்தரங்கொண்டு அறிவேனென்று, சொல்லாதே=சொல்லற்க, சுயம் சோதி ஆம் சுடருக்கு=சுயம் பிரகாசமாகிய அறிவுக்கு, சுடர் வேறு உண்டோ=பிரகாசாந்தரமேது?, பல்லார் முன்=நவபுருடரின் முன்னே, தசமன்=பதின்மன், தன்னைப் பார்ப்பதும்=தன்னைத் தசமனென்றறிவதும், தனைக்கொண்டே தான் அல்லாமல்=தன்னாலேயேயன்றி, பதின் ஒன்றுனும்=(தனக்கு வேறே) பதினொன்றுமவனும், அவன் இடத்து உண்டோ பாராய்=அத்தசமனிடத்துண்டா (நீ யூகித்துப்) பார். எ-று. (73)

[நியாயவைசேஷிகர் கொள்கைப்படிக்கு அநுவியவசாய ஞானத்தால் ஞானம் பிரகாசிக்கிறதென் றேப்பிற் படு மிழுக்கென்னையோ வெனின்:—அதற்கு விடை கூறுகின்றர்.]

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென் றெண்ணும்
அறிவற்ற குதர்க்க மூடர்க் கனவஸ்தை பலமாய்த் தீரும்
அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
அறிபொரு ளாகு முன்னை யனுபவித் தறிவாய் நீயே. (74)

இ-ள். அறிவுக்கும் அறிவு செய்யும்=(கடாதி) ஞானத்திற்கும் (பிரகாச ரூபமான) அறிவைத்தரும், அறிவு வேறு=பிரகாசாந்தரம், உண்டு என்று எண்ணும்=உண்டென்று, கருதாநிற்கும், அறிவு அற்ற=(ஆன்மா சொப்பிரகாசம் என்னும்) ஞானமில்லாத, குதர்க்க மூடர்க்கு=அவிவேக மூலமான பிரலாபத்தையுடைய நியாயவைசேஷிகர்க்கு, அநவஸ்தை பலமா

யத்தீரும்=அநவஸ்தா தோஷம் பிரயோஜனமாய் முடியும், [அற்றேல், ஆன்மா அஞ்ஞாதவஸ்து வென்றமோவெனின்?] * அறியும்பொருள் நீ அல்லை=ஞாதவஸ்துவாக நீ எப்படியல்லையோ அப்படி. † அறிபடாப் பொருள் நீ அல்லை=அஞ்ஞாதவஸ்துவும் நீயல்லை, [பின்னை யான் எந்தன்மையனெனின்?] அறிபொருள் ஆகும்=(ஞாதவஞ்ஞாதமாகிய சகல பிரபஞ்சத்தையும் பிரகாசிக்குமிட வபேட்சையின்றி அறியாநின்ற அநுபவரூபமான) சொப்பிரகாச வஸ்துவே நீயாம். ஆந்தன்மையனான வென்னையான் எப்படியறிவதெனின்?] என்னை அநுபவித்து நீயே அறிவாய்=(அப்படிச் சொப்பிரகாச சொரூபனான) என்னை (ப்பிரமாண தர்க்கங்களைவிட்டுக் கர்த்திரு, கர்மபாவங் கழன்ற) அநுபவத்திருந்து நீயே சாட்சாத்கரிப்பாய். எ-று.

(124) கடாதிகளின் ஞானத்தாற் கடாதிகள் பிரகாசியா நிற்கும்; கடாதிகள் பிரகாசமாயினும் கடாதிகளின் ஞானமும். ஞானத்தின் ஆசிரயமான ஆன்மாவும் பிரகாசமாகா, எப்போது அநுவியவசாய ஞானமுண்டாமோ! அப்போது கடாதி விஷயங்களோடும், ஆன்மாவோடும் கடாதி ஞானங்கள் பிரகாசியா நிற்கும். ஆயினும் அநுவியவசாய ஞானத்தால் வியவசாயத்தின் திரிபுடி பிரகாசியா நிற்கும், அநுவியவசாயம் பிரகாசிக்கமாட்டாது. எப்போது அநுவியவசாயகோசர அநுவியவசாயமுண்டாமோ! அப்போது பிரதம அநுவியவசாயம் பிரகாசியா நிற்கும்; துதீய அநுவியவசாயம் அப்பிரகாசிதமாகவே யிருக்கும். பிரதம அநுவியவசாயமோ, வியவசாய கோசரமாம்: அநுவியவசாயகோசரம் துதீய அநுவியவசாயமாம். கடஞானத்தையான கண்டேன் என்பது துதீய அநுவியவசாயத்தின் சொரூபமாம்; துதீய அநுவியவசாயத்தின் வியவகாரம் இஷ்டமாயின், கடஞானத்தின ஞானத்தையான கண்டேன் என்று திருதிய அநுவியவசாயமுண்டாகா நிற்கும். ஆயினும், நியாயமதத்தில் கடஞானத்தாற் கடத்தின் பிரகாசமுண்டாகிக் கடத்தின் வியவகாரஞ் சித்திக்கும்; கடவியவகாரத்தில் கடஞானப்பிரகாசம் வேண்டுவதில்லை. கடஞான வியவகாரம் இஷ்டமாயின், அப்போது அநுவியவசாயத்தால் கடஞானம் பிரகாசமாயக் கடஞான வியவகாரமுண்டாம்; அதற்கு அநுவியவசாயப் பிரகாசம் வேண்டுவதில்லை. ஆதலால், எதனுடைய வியவகாரம் இஷ்டமாமோ! அதனுடைய ஞானத்தினபேட்சை உண்டு. விஷயத்தின் பிரகாசகமான யாதொரு ஞானமுண்டோ! அது பிரகாசிதமாகுக, அல்லது அப்பிரகாசிதமாகுக; அதனது பிரகாசத்தால் உபயோகமில்லை. பிரகாசிதமான ஞானத்தினாலேயே விஷயம் பிரகாசமாமென்னின்:— நியாயமதத்தில் அநவஸ்தாதோஷமாம். எனை? எந்த ஞானத்தால் விஷயம் பிரகாசமாமோ! அந்த ஞானம் சொப்பிரகாசமாக நியாயமதத்தில் ஒப்பவில்லை; அதனது பிரகாசகமான ஞானாந்தரமுண்டாமேல், அப்போது

* அறியும்பொருள்=வியாகிருதரூபமான வஸ்து.

† அறிபடாப்பொருள் = வியாகிருதரூபமான ஜகத்திற்குப் பீஜரூபமாகிய அவ்வியாகிருத வஸ்து.

ஞானத்தால் விஷயம் பிரகாசமாம்; அப்பிரதமஞானத்தின் பிரகாசகமான ஞானாந்தரத்திற்கு அந்நியஞானம் வேண்டும். திருதீயத்தின் பிரகாசகமாகச் சதுர்த்த ஞானம்வேண்டும்; இவ்வாற்றால் அநவஸ்தாதோஷமாம். பரஸ்பர ஸாபேட்சப்பிரகாசமொப்பினால் அந்நியோந்நியாசிரய தோஷமும், சக்கிரிகா தோஷமுமாம்: இதனால், விஷயத்தின் பிரகாசத்தில் ஞானம் தனது பிரகாசத்தை யபேட்சிக்கவில்லை. பின்னையோவெனின்:—தனது வியவகாரத்திற் பிரகாசத்தை யபேட்சிக்கின்றது. எங்கே கடமுதலிய விஷய வியவகாரம் இஷ்டமாமோ! அங்கே கடத்தின் பிரகாசநிமித்தம் கடஞானவபேட்சை உண்டு. அப்பிரகாச ஞானத்தினாலேயே கடவியவகார முளதாம் அஃதெதுபோலவெனின்:—கடஞான முண்டாகாதபோதும், சலதாரணாதிப் பிரயோஜன சித்தியைக் கடம்செய்யா நிற்பதால் தனது காரியத்தில் பிரகாசத்தினபேட்சை எப்படிச் செய்யவில்லையோ? அப்படி ஞானத்தின் காரியம் விஷயப்பிரகாசமாதலால் அவ்விஷயப் பிரகாசரூபமாகிய காரியத்தில் ஞானம் தனது பிரகாசத்தினபேட்சை செய்யவில்லை. கடம்போலத் தனது வியவகாரத்திற் பிரகாசத்தின்பொருட்டு ஞானம் ஞானத்தினபேட்சை செய்கிறது. எந்த ஞானத்தின் வியவகாரம் இஷ்டமாமோ, அந்த ஞானத்தின் ஞானம் உண்டாகாநிற்கும்: ஞான ஞானத்தின் பிரகாசாபேட்சை இல்லை. இச்சையின் விஷயத்தை இஷ்டம் என்பர்; இதனால் நியாயமதத்தில் அநவஸ்தா தோஷங்கூறினர்.

(125) நியாயமதத்தில் யாதொரு ஞானமும் சொப்பிரகாசமாக ஒப்பவில்லை. அநுவியவசாய ஞானத்தால் ஞானம் பிரகாசியா நிற்குமென்னும் அவர் வார்த்தை அசங்கதமாம். என்னை? ஞானம் அப்பிரகாச சுபாவமாயின், அதன் சம்பந்தத்தாற் கடாதிகள் பிரகாசமாகா. கடாதிகளைப் பிரகாசிப்பிப்பதில் ஞானம் தனது பிரகாசத்தினபேட்சை செய்யவில்லை. எப்படிக் கடாதிகள் அஞ்ஞாதமாயினும் தமது காரியஞ் செய்கின்றனவோ அப்படி ஞானமும் அஞ்ஞாதமாயினும் விஷயத்தின் பிரகாசரூபமான தனது காரியஞ் செய்யாநிற்கும் என்று கூறுவர்; அது கூடாது. என்னை? பௌதிகஜோதிகள் முழுவதும் தாம் பிரகாசரூபமாயிருந்தே அந்நியங்களைப் பிரகாசிப்பிக்கின்றன; பிரகாசஹீனமான ஜோதிகளால் ஒன்றாவது பிரகாசிப்பது காணப்படவில்லை. பிரகாசஹீனங்களும் தமது வலியினால் தமது சம்பந்திகளைப் பிரகாசஞ் செய்யுமாயின், சுவர்ணத்திலுள்ள ஜோதிர்ப்பாகத்தினாலும் சுவர்ண சம்பந்திகளான கடாதிகள் பிரகாசித்தல்வேண்டும்; அஃதின்மையின் சொரூபப்பிரகாசத்தாற் பிரகாசமுடைய ஞானத்தின் சம்பந்தத்தாற் கடாதிகள் பிரகாசிக்கிறதென் றொப்பவேண்டும்; ஆகலின் ஞானம் பிரகாச சுபாவமாம். கேவலம் திருஷ்டாந்த பலத்தால் ஞானத்திற்குச் சொப்பிரகாசத்தன்மை யொப்பினதன்று · அநுபவத்தானும் சொப்பிரகாசத்தன்மை சித்தமாம். எங்கே அறிதற்கரியதாயிருந்த அஞ்ஞாத பதார்த்தத்தின் ஞானம் ஒருவனுக்குண்டாய் அறியத்தக்கதறிந்தாயிற்று, இனி அறியச் சேஷமில்லை என்று சந்தோஷத்தால் இங்ஙனஞ் சொல்வனோ! அங்கே அவனுக்கு அந்நிய

புருஷன் இந்த ஞானம் அறியச் சேஷமிருக்கின்றதென்று சொல்லில், அதைக் கேட்டு அவன் நகையாநிற்பன்; ஆதலால் ஞானத்தின் பிரகாசத் தன்மையின் அநுபவஞ் சித்தமாயிருக்கிறது. அன்றியும், கடஞானம் அறியப்பட்டதா? இல்லையா என்னும் இப்படிப்பட்ட வாக்கியம் வசனிப்பவனைப் புத்தியின்மையன் என்பர்; இதனால் ஒருகாலும் ஞானத்தின் கண் அஞ்ஞாததை இல்லை; அஞ்ஞாததையின்மையின் ஞானகோசர அநுவியவசாயம் உளதாகுமென்னல் அசங்கதமாம். யாவனொரு புருஷனுக்காவது எனக்குக் கடஞானமுண்டாயிற்றா? அல்லது, இல்லையா என்றிப்படிப்பட்ட சந்தேகம் உண்டாகவில்லை; கடஞானம் அஞ்ஞாதமாமேல், ஒருகால் சந்தேகம் உண்டாதல்வேண்டும்; ஆதலால் ஞானம் அஞ்ஞாதமாகாது. ஞானத்தின் பிரகாசமான அநுவியவசாயம் உண்டாமென்கை அசங்கதமாம். ஞானகோசரஞானம் உண்டாகாவிடில் இது கடமென்றும், கடத்தை நானறிந்தேனென்றும் இவ்வாறு ஞானத்தில் விலட்சணத்தன்மை தோன்றவேண்டுவதில்லை. என்னை? நியாயமதத்தில் பிரதம ஞானத்திற்கு விஷயம் கடம்; துதீய ஞானத்திற்கு விஷயம் கடஞானமாம்; ஆகலின் விஷயபேதத்தால் ஞானங்களின் விலட்சணத்தன்மை சம்பவிக்கலாம். சொப்பிரகாச ஞானவாதியின் மதத்தில் ஞான விஷயமாக ஞானம் உளதாவதில்லை, இரண்டு ஞானங்களின் விஷயம் ஓர் கடமாகலின் விஷயபேதத்தினபாவத்தால் விலட்சணஞானம் உண்டாகவேண்டுவதில்லை என்று சங்கிக்கில், அது பொருந்தாது. ஓரேகடத்தில் ஒருகால் இதுகடம் என்னும் ஞானம் உண்டாகின்றது; ஒருகால் அநித்தியங் கடம் என்னும் ஞானம் உண்டாகின்றது; அங்கே விஷயபேதமின்றி விலட்சண ஞானம் உண்டாகின்றது. ஆயினும் பிரதம ஞானத்திற் கடத்தின் அநித்தியத்தன்மை தோன்றாமல், துதீய ஞானத்தில் அதன் அநித்தியத்தன்மை எப்படித் தோற்றிற்றோ! அப்படி இது கடம் என்னும் ஞானத்தில் கடத்தின் ஞாததை தோற்றாமல் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானத்தில் கடத்தின் ஞாததை தோற்றுகின்றது. ஞானஜந்நிய பிரகடத்தன்மையை ஞாததை என்பர். துதீய ஞானத்தின் விஷயம் கடத்திலுள்ள ஞாததையாம்: கடஞானமல்ல; இதனால் கடஞானத்தின் பின்னர் ஒருகால் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானம் உண்டாகின்றது: ஒருகால் அறியப்பட்டது கடம் என்னும் பிரத்தியட்சம் உண்டாகின்றது. அறியப்பட்டது கடம் என்னும் பிரத்தியட்சத்தின் விஷயம் கடத்தின் ஞாததையாம்; இது பட்டாக்கும் சம்மதமாம்; அன்றியும் அநுபவாநுசாரியுமாம். என்னை? எப்படி அநித்தியம் கடம் என்று சொல்லுவதால் அநித்திய பதார்த்தத்தில் விசேஷணமான அநித்தியத்வத்தின் பிரதீதியானது கடத்தில் சர்வர்க்குஞ் சம்மதமோ அப்படி அறியப்பட்டது கடம் என்று சொல்லுவதால் ஞாதபதார்த்தத்தில் விசேஷணமான ஞாதத்வத்தின் பிரதீதி கடத்தின்கண்ணே சர்வாநுபவ சித்தமாம். அறியப்பட்டது கடம் என்னும் ஞானத்தின்வசரத்திற் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானமுண்டாகின்றது. ஆதலால் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானமும் கடத்தின் ஞாததையை விஷயம்பண்ணுகின்றது; இவ்

வாற்றால் ஞானகோசர ஞானம் ஒப்பாவிடினும் இது கடம், கடத்தை நான் கண்டேன் என்னும் தன்மையினால் விலட்சணமாகிய ஞானங்கூடும்; ஆதலான் அநுவியவசாய ஞானத்தின் விஷயம் ஞானமாம் என்னும் நையாயிக மதம் அசங்கதமாம் என்க.

(126) அப்படியே முராரி மிசிரருடைய மதமும், இந்தப் பிரசங்கத்தில் நையாயிகமத துல்லியமாமாகலின் அதுவும் அசங்கதமாம். முராரி மிசிரருடைய மதத்தில் ஞானப்பிரகாசகமான அநுவியவசாயத்தினாலேயே பிரமாத்வம் பிரகாசியா நிற்குமென்னும் இவ்வளவு நியாயமதத்தினும் விசேஷமாயினும், இந்த விசேஷம் * அகிஞ்சித்கரமாம். என்னை? அப்பிரகாச சுபாவமான ஞானத்தின் பிரகாசமானது அநுவியவசாயத்தால் உண்டாமென்னும் இக்கூற்றில் நியாயமதத்திற்கொப்பாம்; ஆகலின், அசங்கதமாம்.

(127) அப்படியே பட்டருடைய மதத்தில், அநுமிதியினால் ஞானம் பரோட்சமாகப் பிரகாசியா நிற்குமென்னல் நியாயத்தினும் அசங்கதமாம். என்னை? அவருடைய மதத்திலும் ஞானத்தின் பிரகாசகமான அநுமிதியினால் பிரமாத்வம் பிரகாசியா நிற்குமென்னும் இத்துணைக் கூறும் நியாயத்தினும் விலட்சணமாம் சித்தாந்தத்திற்கநுகூலமுமாம். அப்படியாயினும் கடாதி விஷயங்களை அபரோட்சத்தன்மையவாகப் பண்ணுவதான பிரத்யட்ச ஞானத்தை அநுமிதிரூபப் பரோட்சப்பிரகாசமாமென்னல் நகைக்கிடமாம்.

(128) அப்படியே பிரபாகரருடைய மதத்திலும், கடஞான முதலியவை தமது பிரகாசத்தில் அநுவியவசாயத்தை யபேட்சிக்கவில்லை என்னும் இத்துணைக்கூறு சித்தாந்தத்திற் கநுகூலமாம். பிரமாத்வத்தைக் கவாவதில் ஞானத்தைக் கவருஞ் சாமக்கிரியினும் அந்நியத்தை யபேட்சிக்கவில்லை என்னுங் கூற்றிலும் சித்தாந்தத்திற் கநுகூலமாம். அங்ஙனமாயினும் பிரபாகர மதமும், சிரத்தாயோக்கியமல்ல. என்னை? சகல ஞானங்களும் சொப்பிரகாசம் திரிபுடி விஷயகம். கேவலம் விஷயகோசரமாக ஓர் ஞானமும் உண்டாகின்றதில்லை சகலஞானங்களும் கடத்தை நான் கண்டேன் என்னும் ரீதியினால் திரிபுடி கோசரமாக உண்டாகின்றன. இது கடம் என்றிவ்வாறு கேவலம் விஷயகோசர ஞானம் அப்பிரசித்தமாம். கடத்தோடு இந்திரியத்துக்குச் சம்பந்தம் உண்டாகில் கடஞானம் உண்டாய; அது கடத்தையும், தனது சொரூபத்தையும், அப்படியே தனது ஆசிரயமான ஆன்மாவையும் விஷயம் பண்ணுகின்றது. அப்படிக் கடஞானமே தனது தர்மமான பிரமாத்வத்தையும் விஷயம் பண்ணுகின்றது; இத்தன்மையினாற் கடஞானம் தனது பிரகாசத்தில் அந்நியத்தை யபேட்சிக்கவில்லை என்னும் இத்துணைக்கூறும் நன்றாம்; ஆயினும் தனது பிரகாசம் தான் செய்கின்றதென்னும் இது விருத்தமாம். ஓர் கிரியைக்கு யாது கர்த்தாவாமோ, அது கர்மமாகாது; இதனால் பிரகாசத்தின் கர்த்தாவுந்தானே, பிரகாசத்தின் கர்மமுந் தானே என்று சொல்லுதலும் விருத்தமாம். சித்தாந்தத்தில், ஞானம் பிரகாசரூபமாதலால் சொல்லிய விரோதம் இல்லை; இவ்வாற்றால் பிரகாசரூபமாக ஞானத்தை ஒப்பாத

* அகிஞ்சித்கரம்=நிஷ்பிரயோஜனம்.

சகல மதங்களும் அசுத்தமாம்; இதனால் அநுவியவசாயத்தினால் ஞானம் பிரகாசியா நிற்குமென்னும் நையாயிக வசனம் அசங்கதமாம். சித்தாந்தத்தில், சாட்சியினால் விருத்தி ரூப ஞானம் பிரகாசியா நிற்கும் என்க.

"அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை, அறிபொருளாதும்" எ-கு, உ-ம், பிரமகீதை,—

" வாக்குமன முங்கண்ணு மற்றானவிந் திரியங்களுநேர்
நோக்கரிய பரஞ்சுடரை நோக்கியிவை செலமாட்டா
தாக்கில்பரம் பரனறியிற் றான்வேறு மறியாதே
போக்குபொழு தினும்வேறாம் பானரிய பொருளன்றே"—எ-ம்.

" வாக்குமனங் கண்செவியான் மன்னிநின்ற பிராணனினு
னீக்கியுள கரணத்தா னின்மலன் கோசரிகவுருன்
பார்கரனுக் குருவம்போற் பகாபொருளெலாந்திகழ்வை
தாக்கதனை சனுதனமாம பரம்பிரம மெனவறிமின்"

எனவும் வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.

" அனுபவித் தறிவாய் நீயே" எ-கு, உ-ம், பிரமகீதை,—

" தர்க்க மாணபு தானெறிபத் தானு யுள்ள பேரொளியை
மிக்க கர்த்தா வாகுதலும விடயமாகு தலுமொழியப்
பொக்க மறவே றறக்கண்ட பொழுது புரைநீர் பொருளான
தக்க பிரம தத்துவத்தைக் கண்டானுகுந தானாக"

என வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (74)

(129) .. [அநுபவரூபமான ஆன்மா அநுபவவிஷயமாகாதென்பதைத் திருஷ்டாந்தமுகத்தால் உணர்த்துகின்றா.]

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லாம்
மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றே
அதுவிது வெனுஞ்சடங்க ளறிவாக வறிவைத் தந்தே
அதுவிது விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே (75)

இ-ள். மதுரம் ஆம் கட்டி சுட்ட=மதுரசுபாவமாகிய வெல்லக்கட்டி (சேர்த்துச்) சுட்ட, மாப் பணியாரம் எல்லாம்=மாவின் பணியாரங்களான தன் சம்பந்திகளை யெல்லாம், மதுரம் ஆக்கிய அதற்கு=தன் குணமான மதுரத்தை யுடையனவாகப் பண்ணின வெல்லத்திற்கு, மதுரம் தான் சுபாவம் அன்றோ=மதுரமானது * சுபாவமல்லவா, (அப்படி) அது இது எனும் சடங்கள்=அஞ்ஞாதம், ஞாதம் என்னுஞ் சடங்கள், அறிவாக=விளங்குவதாக, அறிவைத் தந்து=ஸ்பூர்த்தியைக் கொடுத்து, அது இது இரண்டும் ஆகா=

---

* சுபாவம் எ-து, கூடவே யுண்டாகுந் தர்ம விசேஷம்.

அஞ்ஞாதம், ஞாதம் என்னும் இரண்டுந்தானாகாமல் போதரூபமாய், அவற்றிற்கு விலட்சணமான, அகம் பொருள்=அகம்பதத்தின் லட்சியார்த்தம், நீயே =நீயேயாம், அறிவாய்=(இப்படிப்பட்ட உன்னை அநுபவித்து) அறிவாய். எ - று.

வெல்லத்திற்கு மதுரத்தைக் கொடுப்பது வேறொன்றில்லையாய்த் தானே மதுரசுபாவமானது எப்படியோ ! அப்படியே ஆன்மாவிற்கும் அநுபவ விஷயத்தன்மை வேண்டாவாய்த் தானே அநுபவரூபமாம் என்பார், "அதுவிதுவேறுஞ்ச டங்க ளறிவாக வறிவைத் தந்தே, அதுவிது விரண்டு மாகா வகம்பொருள் நீயே" என்றார். ஞாத, அஞ்ஞாதங்களை, விதிதாவிதிதம் என்றுங் கூறுவர். அறியப்பட்டது, அறியப்படாதது என்று பொருள். (75)

[ஆன்மாவைப் பஞ்சகோசங்களினின்றும் வேறுபடுத்திச் சொப்பிரகாசமாக அறிவித்துப் புருஷார்த்த சாதனமான ஆன்ம பிரஹ்மவைக்கிய ஞானத்தைச் சுருதி, யுக்தி, அநுபவங்களால் உணர்த்துகின்றார்.]

இந்தநீ துவம்ப தத்தி னிலட்சியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம மேதற் பதந்தனி லிலட்சி யார்த்தம்
அந்தமாஞ் சீவ னீச னவர்களே வாச்சி யார்த்தம்
சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூ டாதே. (76)

இ - ள். இந்த நீ=சரீரத்திரய விலட்சணமாயும், பஞ்சகோச வெதிரித்தமாயும், அவஸ்தாத்திரய சாட்சியாயும், அகம்பதத்தின் லட்சியார்த்தமாயும் உள்ள நீ, துவம்பதத்தின் இலட்சியப்பொருள் ஆம்=துவம்பதத்திற்கு இலட்சியார்த்தமாம், என்றும் பந்தம் இல்=எக்காலத்தும் பந்தமற்ற, பிரமமே, தற்பதந்தனில் இலட்சியார்த்தம்=தற்பதத்திற்கு இலட்சியார்த்தமாம், அந்தம் ஆம் சீவன் ஈசன் அவர்களே=(வித்தையினால்) நாசமாகும் சீவேசுரரே, வாச்சியார்த்தம்=(முறையே, அப்பதங்கள் இரண்டிற்கும்) வாச்சி யார்த்தங்களாம், சந்ததம்=சார்வகாலமும், பேதம் ஆவார் தமக்கு=(பரஸ்பரம்) பேதமுடையராகும் சீவேசுரர்க்கு, அயிக்கியம் கூடாது=அபேதஞ் சித்தியாது. எ - று. (76)

(130) [சீவேசுரபேதம் யாவையோ வெனின்? அவற்றைக் கூறுகின்றார்.]

பேதமா னதுவுங் கேளாய் பெயராலு மிடங்க ளாலும்
ஓதரு முபாதி யாலு முடலாலு முணர்வி னாலும்
பாதலம் விசும்பு போலப் பலதார தமமன் றி நிற்பர்
ஆதலா லிவர்க்கொன் றாகு மைக்கியமென் பதுகூடாதே. (77)

இ - ள். பேதம் ஆனதுவும் கேளாய=(சீவேசுரர்க்குப்) பேதமுண்டாயிருப்பதையுங் கேள், பெயராலும்=(சீவேசுரரென்னும்) நாமங்களாலும்,

இடங்களாலும்=(பிண்டாண்டமென்னும்) ஸ்தானங்களாலும், ஓது அரும் உபாதியாலும்=(சத்து, அசத்தென்று நிச்சயித்துச்) சொல்லுதற்கரிய (காரியகாரண) வுபாதிகளாலும், உடலாலும்=(வியஷ்டி, சமஷ்டி) சரீராபிமானங்களாலும், உணர்வினாலும்=கிஞ்சிஞ்ஞ, சர்வஞ்ஞங்களாலும், பாதலம் விசும்பு போல்=பாதாளமும், விண்ணுலகமும் போல, பலதூரம் அகன்று நிற்பர்=வெகுதூரம் வேறுபட்டு நிற்பர், ஆதலால், இவர்க்கு=இச்சீவேசுரர்க்கு, எந்நாளும்=சார்வகாலமும், ஐக்கியம் என்பது=அபேதமென்பது, சாடாது=சித்தியாது. எ - று.

சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிடதத்தில் உத்தாலக முனிவர், தனது புத்திரனை சுவேதகேதுவுக்குச சகத்தி னுற்பத்தி பண்ணுகின்ற ஈசுரனைக்காட்டி "தத்துவமஸி" என்றருளிச் செய்தனர். "தத்" எ - து, அது : சகத்தினுற்பத்தி பண்ணுகின்ற சர்வசக்தி, சர்வஞ்ஞத்வாதி தர்ம சகித ஈசுரன். "துவம்" எ - து, நீ: அற்ப சக்தி, அற்பஞ்ஞத்வாதி தர்மங்களையுடைய சீவன். "அஸி" எ - து, இங்கே அது நீ ஆகின்றாய் என்று அதனது வாச்சியார்த்தமாம். இப்படிச் சொன்னதனால் ஈசுரனுக்கும், சீவனுக்கும் ஏகத்வம் வாச்சியார்த்தத்தாற் பானமாகாநின்றது : அது கூடாது. என்னை? ஈசுரன் சர்வ சத்திமான், சீவன் அற்பசக்தி யுடையவன். ஈசுரன் சர்வஞ்ஞன். சீவன் அற்பஞ்ஞன். ஈசுரன் விபு, சீவன் பரிச்சின்னன். ஈசுரன் சுதந்தரன், சீவன் கர்மாதீனன். ஈசுரன் பரோட்சன், சீவன் பிரத்தியட்சன். ஈசுரன் மாயையைத் தன் வசம்பண்ணினவன், சீவன் அவித்தியா மோகிதன் ; இவர்கள் ஏகமென்று சொல்லுதல் அக்கினி சீதளமாம் என்னுங் கூற்றிற்குச் சமானமாம் ; இதனால் வாசசியார்த்தத்தில் விரோதமுண்டாகலின் என்க. (77)

(131) [அவாதிதசுருதியாற் போதியாநிற்கும் ஜீவேசுர வைக்கியந் தீர்க்கு நிஷேதங் கூடாதாகலின், அஃதெங்ஙனே பொருந்துமாறெனின்? அதற்குத்தரங் கூறுகின்றது.]

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராமல்
இடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வார்
திடமான வதுவு மூன்றாச் செப்புவார் விட்ட தென்றும்
விடலிலா தென்றும் விட்டு விடாததென் றும்பே ராமே (78)

இ - ள். வடநூல் வல்லவர்கள்=வடகலைகளில் நிபுணர்களான பண்டிதர்கள், சொல்லும்=(சுருதி, ஸ்மிருதிகளிற்) சொல்லும், வாசகப்பொருள்=வாக்கியார்த்தங்கள், சேராமல்=பொருந்தாமல், இடர் ஆகில்=விரோதமாமேல், பொருள் ஆம் வண்ணம்=(விரோத பரிகாரமாய்) அர்த்தமாகும்படிக்கு, இலக்கணை உரையால்=இலட்சணை வாக்கியத்தால், கொள்வார்=கொள்ளாநிற்பர், திடம் ஆன அதுவும்=திடமாகிய அவ்விலட்சணையும், மூன்றாச் செப்புவார்=மூவகையாகச் சொல்லாநிற்பர், (அவை) விட்டது, என்றும்=ஜஹல் லட்சணையென்றும், விடல் இலாது என்றும்=அஜஹல் லட்சணை

யென்றும், விட்டு விடாதது என்றும்=ஜஹத ஜஹல்லட்சணையென்றுஞ் (சொல்லப்படுகிற), பெயர் ஆம்=நாமங்களை யுடையனவாம். எ - று.

"வடநூல் வல்லவர்கள் கொள்வார்" என்றெட்டுக. வாக்கியங்களி லுள்ள விரோதங்களைப் பரிகரித்தலால், "திடமான வதுவும்" என்றார்.(78)

[இதுவுமது.]

கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றுந்
தங்கிய ஸோயந் தேவ தத்தனென் றுஞ்சொல் வார்கள்
இங்குதா ரணங்க ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே
துங்கநூல் விரோத மான சொல்லெலாம் பொருளாந் தானே. (79)

இ - ள். கங்கையில் கோஷம் என்றும்=பகீரதியில் கிராமம் இருக்கின்றதென்றும், கறுப்பு தங்கிய சேப்பு ஓடுது என்றும்=கறுப்பு நிற்கச் சிவப்போடுகின்றதென்றும், ஸோயம் தேவதத்தன் என்றும்=அந்த இத் தேவதத்தனென்றும், இங்கு உதாரணங்கள் ஆக்கி = (வாக்கியார்த்தங்கள் விரோதமான) இடத்து (இம்மூன்றையும்) உதாரணங்களாகக் கற்பித்து, சொல்வார்கள்=(அவ்வடநூல் வல்லோர்) சொல்லாநிற்பர். இந்த மூன்று உரைகளாலே=இம்மூவகை (இலட்சணை) வாக்கியங்களாலே, துங்க நூல்= பெருமைபொருந்திய சாஸ்திரங்களில், விரோதம் ஆன சொல் எலாம்= விரோதமுடைய வாக்கியங்களெல்லாம், தானே பொருள் ஆம்=(விரோத பரிகாரமாய்த்) தானே அர்த்தமாம். எ - று.

"தங்கிய"=செய்யிய என்னும் வினையெச்சம். "கறுப்புத் தங்கிய சேப்போடுது" என்று பொருள்கொள்ளப்படுவதால் எதிர்நிரனிறைப் பொருள்கோள். ஓடுகின்றது எனற்பாலது, "ஓடுது" என மரீஇயிற்று; "ஏகவுநவாக்கிடக்குது" என்றாற்போல.

வாச்சியார்த்த முழுதும்விட்டு வாச்சியார்த்த சம்பந்தியை யுணர்த்துவது விட்டலட்சணை எனப்படும். எப்படியெனில்? ஒருவன் கங்கையில் கிராமம் இருக்கின்றது என்னின், அங்கே கங்கா பதத்தின் விட்டலட்சணை தீரத்திலிருக்கின்றது. என்னை? கங்கை என்னும் பதத்தின் வாச்சியார்த்தம் தேவ நதியின் பிரவாகமாம்; அதன்கண்ணே கிராமத்தின் ஸ்திதி கூடாது. ஆகலின். அப்பதம் தன் வாச்சியார்த்தம் முழுதும்விட்டு அதன் தீரத்தை யுணர்த்தல் காண்க. வாச்சியத்தின் சம்பந்தத்திற்கு லட்சணை என்று பெயராம்; இங்கே கங்கை எனும் பதத்தின் வாச்சியமான பிரவாகத்திற்குத் தீரத்தோடு சம்யோக சம்பந்தம் உண்டு; ஆதலால் கங்கை என்னும் பதத்தின் வாச்சியத்திற்குத் தீரத்தோடு உளதாயிருக்கிற சம்பந்தம் லட்சணை. வாச்சிய முழுதுந் தியாகம் பண்ணுவதால் இது விட்டலட்சணை. வாச்சியார்த்தத் தோடுகூட வாச்சியத்தினுடைய சம்பந்தியின் ஞானம் எப்பதத்தினால் உண்டாமோ! அப்பதத்தில் விடாதலட்சணை உண்டென்றறிக. எங்ஙனெனின்?

கறுப்பு நின்றது சிவப்போடிற்று என்று ஒருவன் சொல்லில், அங்கே கறுப்பு சிவப்பென்னும் பதங்களின் விடாதலட்சணை கருநிறம், செந்நிறங்களையுடைய பசுவிலும், அசுவத்திலு மிருக்கின்றன. என்னை? கறுப்பு, சிவப்பென்னும் நாமங்கள் கருநிறம், செந்நிறங்களை உணர்த்தும். ஆகலின் கறுப்பு, சிவப்பென்னும் பதங்களின் வாச்சியம் கருநிறம், செந்நிறங்களாம். அவைகள் தனியே நிற்றலும், ஓடலுங்கூடா. இக்காரணத்தால் கறுப்பு, சிவப்பென்னும்பதங்களின் வாச்சியமான கருநிறம்,செந்நிறங்களோடுகூடப் பசுவிலும், அசுவத்திலும் கறுப்புச சிவப்பென்னும் பதங்களின் விடாதலட்சணை உண்டு. குண குணிகட்குத் தாதாத்மிய சம்பந்தமுண்டென்பர்: கருமை, செம்மைகள் உருவத்தின் பேதமாவதாற் குணமாம். ஆதலால் கறுப்பு, சிவப்பென்னும் பதங்களின் வாசசியமான கருமை, செம்மைக் குணங்கட்கு அவைகளின் குணிகளாகியபசு, அசுவங்களோடு யாதொரு தாதாத்மிய சம்பந்தமுண்டோ! அது லட்சணை. வாச்சியத்தை விடாமல் அதிகத்தைக் கிரகணஞ்செய்வதால் இது விடாதலட்சணையாம்.

எங்கே பதத்தின் வாச்சியார்த்த மத்தியில் ஓர் பாகந் தியாகமும், ஓர் பாகங் கிரகணமுமாமோ! அங்கே பாகத்தியாகலட்சணை யுண்டு; அந்தப் பாகத்தியாகத்தையே விட்டுவிடாத லட்சணையென்றுங் கூறுவர். எங்ஙனெனின்? முன்னே கண்ட தேவதத்தனென்னும் ஓர் புருஷனை அந்நியதேசத்திற் கண்டு "அவ னிவனும்" என்று ஒருவன் சொல்லில் அங்கே பாகத்தியாகலட்சணை யுண்டு. எதனாலெனின:—அதீதகாலத்தில் அந்நியதேசத்திலுள்ளவனை அவனென்பர்; ஆகலின் அதீதகாலம், அந்நியதேசங்களோடு கூடினவன் அவனென்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம். வர்த்தமான காலத்தில், சமீப தேசத்திலுள்ளவனை இவனென்பர்; ஆகலின் வர்த்தமான காலம், சமீபதேசங்களோடு கூடினவன் இவனென்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம். அதீதகாலத்தோடும், அந்நியதேசத்தோடுங் கூடினவனே வர்த்தமானகாலம், சமீப தேசங்களோடு கூடினவனுமென்னும் இது வாச்சியார்த்தமாம்; ஆகவே அதீதகாலமும், வர்த்தமானகாலமும் ஒன்றுக்கொன்று விரோதமாயும், அப்படியே அந்நியதேசத்திற்கும், சமீபதேசத்திற்கும் விரோதமாயும் உள்ளனவாகலின் இரண்டுபதங்களிலுந் தேசகாலங்களாகிய வாச்சிய பாகத்தைவிட்டு தேவதத்தனுடைய தேகமாத்திரத்தில் இரண்டு பதங்களின் பாகத்தியாகலட்சணை உண்டென்பர். (79)

[இலட்சணை மூன்றனுள் விட்டலட்சணை, விடாதலட்சணை என்னும் இரண்டும் "மனோபிரஹ்மம்" 'சத்திய ஞானாநந்தம் பிரஹ்மம்' என்பன முதலிய வாக்கியங்களில் உபயோகமல்லாமல் "தத்துவமஸி" யாதி மஹாவாக்கியங்களில் உபயோகமின்மையின் அவைகளை விரிக்காமலொழித்து, தத்துவமஸி மஹாவாக்கியத்தில் உபயோகமான பாகத்தியாகலட்சணையின் உதாரணத்தை விரித்துரைக்கின்றார்.]

பன்னிய ஸோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்தம்
அன்னிய தேசங் கால மவனிவ னென்ப. வெல்லாம்

சொன்னவிவ் விரோதம விட்டுத் தொடரிலக் கியம்வி டாமல்
உன்னிடிற் றேவ தத்த னொருவனை வெளியாக் காட்டும். (80)

இ - ள். பன்னிய=(முன்) சொல்லிய, ஸோ அயம் என்னும் பதங்களின்=அவன், இவனென்னும் பதங்களினுடைய, வாச்சியார்த்தம்=வாச்சியார்த்தமாவன, அந்நியதேசம் காலம்=தூரதேசம், சமீபதேசம், அதீத காலம், வர்த்தமானகாலம், அவன் இவன்=அந்தத் தேவதத்தன், இந்தத் தேவதத்தன், என்ப எல்லாம்=என்பன வனைத்துமாம், சொன்ன இவ் விரோதம் விட்டு=(இவை ஒன்றற்கொன்று விரோதமுண்மையின்) சொல்லிய இவ்விரோத தர்மங்களான (வாச்சியார்த்தங்களை) விட்டு, தொடர் இலக்கியம் விடாமல்=(அவைகளை) அநுசரித்திருக்கின்ற இலட்சியார்த்தமென்னும் (சரீரமாத்திரத்தை) விடாமல், உன்னிடில்=ஆலோசித்துப் பார்க்கில், தேவதத்தன் ஒருவனை=தேவதத்தனென்னும் ஓர் புருஷனை, வெளியாக் காட்டும்=(விரோதமில்லாமற்) பிரத்யட்சமாகக் காட்டாநிற்கும் (ஸோயம் தேவதத்தனென்னும் வாக்கியம்). எ - று.

“தொகை இலக்கியம் விடாமல்” எ - ம், “தொடா விசேஷியம் விடாமல்” எ - ம் பாடமுளது. இவ்வுதாரணத்தை முற்செய்யுளின் விசேஷவுரையிலேயே விரித்துரைத்தாம், (80

(132) [பாகத்தியாக லக்ஷணையைத் தார்ஷ்டாந்தத்திற் றரிசிப்பிக்கிறார்.]

தத்துவ மெனும்ப தங்கள் பிரமமாய்ச் சாட்சி யான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு
நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னும்
அர்த்தமு மகண்ட மென்றே யசிபத வைக்கியங் காட்டும். (81)

இ - ள். தத்துவம் எனும் பதங்கள்=(சாமவேத மஹாவாக்கியமானது) அதுநீ என்னும் பதங்களின், பிரமம் ஆய் சாட்சி ஆன=பிரஹ்மமாயும், சாட்சியாயுமுள்ள, வத்துவை விடாமல்=சேதனபாகமான லட்சியார்த்தத்தை விடாமல், பேதவாச்சிய அர்த்தத்தைவிட்டு=பேத தர்மங்களையுடைய வாச்சியபாகங்களை விடுத்து, நித்தமும்=சர்வகாலமும், அது நீ ஆகும்=பிரஹ்மமே நீயாம், நீ அது ஆகும்=நீயே பிரஹ்மமாம், என்னும் அசிபத அர்த்தமும்=என்று சொல்லும் அசிபதத்தின் பொருளும், அகண்டம் என்றே=ஏகமேயென்று, ஐக்கியம் காட்டும்=ஐக்கியத்தை யுணர்த்தாநிற்கும். எ - று.

சாமவேத மஹாவாக்கியம் தோன்றா எழுவாய். “வாக்கியம் விடாமல் விட்டு, அகண்டமென்று, காட்டும்” என முடிக்க.

மாயை, மாயையின்கண் ஆபாசம் மாயைக்கதிஷ்டான சேதனம் மூன்றுங்கூடி சர்வசக்தி, சர்வஞ்ஞத்வாதி தர்மசகிதனான ஈசுரனும்; அவனேதற் பதத்திற்கு வாச்சியம். வியஷ்டி அவித்தை, அதில் ஆபாசம், அதினதிஷ்

டான சேதனம் மூன்றுங்கூடி அற்பசக்தி, அற்பஞ்ஞத்வாதி தர்மங்களை யுடையனான ஜீவனும்; இவன் துவம்பதத்திற்கு வாச்சியம்; இவரிருவர்க்கும் தத்துவமஸி வாக்கியம் ஏகத்தன்மை போதிக்கின்றது; இது பொருந்தவில்லை. ஆகலின் ஆபாசசகிதமான மாயை, மாயாகிருதமான சர்வசக்தி, சர்வஞ்ஞத்வாதி தர்மம், இவ்வளவு வாச்சிய பாகத்தையும்விட்டு சேதனபாகத்தில் தற்பதத்தின் பாகத்தியாகலட்சணை; அப்படியே ஆபாசசகித அவித்தைக் கூறும், அவித்தையாற் பண்ணப்பட்ட அற்பசக்தி, அற்பஞ்ஞத்வாதி தர்மமுமான துவம்பதத்தின் வாச்சிய பாகத்தை விடுத்து சேதனபாகத்தில் துவம்பதத்தின் பாகத்தியாகலட்சணை. இவ்வாறு பாகத்தியாக லட்சணையினால் ஈசுரனும், சீவனும் ஆகிய இருவருடைய சொரூபத்தில் லட்சியமான சேதன பாகங்களின் ஏகத்வத்தைத் "தத்துவமஸி" மஹாவாக்கியம் போதியா நின்றது.

(133) அப்படியே "அயமாத்மா ப்ரஹ்மம்" என்னும் மஹாவாக்கியத்தில் ஆன்மபதத்திற்குச் சீவனும், பிரஹ்மபதத்திற்கு ஈசுரனும் வாச்சியம்: பூர்வம்போல இரண்டுபதங்களினும் லட்சணை. இலட்சியார்த்தம் பரோட்சமல்லவென்னும் அர்த்தத்தை அயமெனும்பதம் காட்டிநின்றது. எல்லாருக்கும் அபரோட்சமான ஆன்மாவே பிரஹ்மமாமென்பது வாக்கியார்த்தமாம். "அகம் பிரஹ்மாஸ்மி" என்னும் மஹாவாக்கியத்தில் அகம்பதத்திற்குச் சீவனும், பிரஹ்மபதத்திற்கு ஈசுரனும் வாச்சியம்: இரண்டு பதங்களின்சேதன பாகத்தில் லட்சணை. நான் பிரஹ்மமாயிருக்கிறேனென்பது வாக்கியார்த்தமாம். "பிரஞ்ஞானமாநந்தம் ப்ரஹ்மம்" என்னும் மஹாவாக்கியத்தில் பிரஞ்ஞானபதத்திற்குச் சீவனும், பிரஹ்மபதத்திற்கு ஈசுரனும் வாச்சியம்; பூர்வம் போல லட்சணை. லட்சியமான பிரஹ்மான்மா ஆனந்த குணமுடையதன்று; பின்னை எப்படிப்பட்டதெனின்? ஆனந்தரூபமாமென்னும் அர்த்தத்தைக் காட்டிநின்றது ஆநந்த பதம் என்க. ஆன்மாவுக் கபின்னமான பிரஹ்மம் ஆநந்த ரூபமாமென்பது வாக்கியார்த்தம்.

(134) மஹாவாக்கியத்திற்போல அந்நிய வாக்கியங்களிலுள்ள சத்தியஞானாநந்தப்பதங்களும் சுத்தப் பிரஹ்மத்தைப் பாகத்தியாக லட்சணையினாலேயே உணர்த்துகின்றன: சக்தியினால் உணர்த்தவில்லை. என்னை? சுத்தப்பிரஹ்மம் யாதாமொரு பதத்திற்கும் வாச்சியமாவதல்ல: இது சித்தாந்தம். இதனால் சகலபதங்களும் விசிஷ்டத்தின் வாசகம்; சுத்தத்தின் இலட்சகமாம். மாயையின் ஆபேட்சிக சத்தியத்தன்மையும், சேதனத்தின் நிரபேட்சிக சத்தியத் தன்மையுங் கூடிநிற்கில், சத்திய பதத்திற்கு வாச்சியம்; நிரபேட்சிக சத்தியம் லட்சியம். புத்திவிருத்தி ரூபஞானமும், சுயம்பிரகாச ஞானமுங் கூடிநிற்கில், ஞானபதத்திற்கு வாச்சியம்: சுயம்பிரகாசபாகம் லட்சியம். விஷய சம்பந்த ஜந்நிய சுகாகார சாத்வீக வந்தக்கரணவிருத்தியும், பரமப்பிரேமாஸ்பத சொரூப சுகமுங் கூடிநிற்கில், ஆநந்த பதத்திற்கு வாச்சியம்: விருத்தி பாகத்தைவிட்ட சொரூபபாகம் லட்சியம்; இவ்வாறு சர்வபதங்களின் லட்சணையும் சுத்தத்தில் சஞ்சேபசாரீரகத்தில் பிரதிபாதனஞ் செய்த

னர். முன்னும், பின்னும், பிராந்தி சமயத்தும் லட்சியார்த்தங்கட்கு அபேத முண்மையின், "நித்தமும்" என்றார். அது நீயாகும், நீ அதுவாகும் என்று ஓதப்புரோத பாவமாக வபேதஞ் சொன்னது முறையே பரோட்சப்பிராந்தியும், பரிசின்னத்வப் பிராந்தியும் நிவிர்த்தியாகும் பொருட்டென்க. அது நான், நான் அது எனமாறிச் சிந்திப்பதை ஓதப்புரோதபாவமென்பர்; இதனைத் தென்மொழியில் குறுக்கு, நெடுக்கென்று பிரயோகிப்பர். (81)

[சீவப்பிரஹ்மங்களி னபேதத்தைத் திருஷ்டாந்தத்தானும் உணர்த்தி இதனை யனுபவிக்க விருந்தறிதி யெனல்.]

கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே
குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போதும்
இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகம்
திடமாகச் சுவாநு பூதி சிவோகமென் றிருந்தி டாயே. (82)

இ - ள். கடநீரில்=கடசலத்திலும், மேக நீரில்=மேக சலத்திலும், கண்ட வான் இரண்டும்=பிரதிவிம்பித்திருக்கின்ற சலாகாசம், மேகாகாசங்களிரண்டும், பொய்யே=(உபாதிகளாற் கற்பிதங்களாதலால்) மித்தையே, குடவானும் பெரியவானும்=கடாகாசம், மகாகாசம் (இவையிரண்டும்), எப்போதும்=சார்வகாலமும், கூடி ஒன்றும்=பேதமில்லாமல் (எப்படி) ஏகமோ (அப்படி), இடம் ஆன பிரஹ்மம் சாட்சி=வியாபகமான பிரஹ்மமும், சாட்சியும், இரண்டும்=(ஆகிய) இரண்டும், எப்போதும்=சார்வகாலமும், ஏகம்=ஐக்கியமாம், திடம் ஆக=(இவ்வைக்கியவநுபவம் சமுசயாதிப் பிரதிபந்தமின்றித்) திடமாதற்பொருட்டு, சிவோகம் என்று=சிவம் நான், (நானே சிவம்) என்று (நிதித்தியாசித்து), சுவாநுபூதி=(நிதித்தியாசன பரிபாக வசத்தாலுளதாகும் அத்வைதாவஸ்தான ரூபமான,பிரஹ்மாநுபூதியில்,இருந்திடாய்=இருப்பாய். எ - று. (82)

"எப்போதுமேகம்" எ - து, சொரூபதிருஷ்டியினு லென்க.

(135) [குருவருளிய நெறிப்படியே தானனுபவித்தல்.]

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்
பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளில்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்தன் பிரம மென்னும்
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான். (83)

இ - ள். தஞ்சம் ஆம் * குருவும் சொன்ன=தனக்குப் பெருந்துணையாகிய ஆசாரியருமருளிய, தத்துவ வழி தப்பாமல்=உண்மை நெறிதவறாமல், பஞ்சகோசமும் கடந்து=அந்நமயமுதல், ஆநந்தமயகோச பரியந்தம் (தானல்லவென்று) சேதித்து, (அவைகட்கு விலட்சணமாய்), பாழையும் தள்ளி=(அதற்குமேலே கண்ட பஞ்சகோசங்களின் அபாவரூபமான) சூனியத்தை

* "குருவும்" என்றதன்கண் உம்மை, இறந்தது தழீஇய எச்சம்.

யும் (அதைக் காணுகிற்கும் அநுபவரூபந் தானாகலின் தானன்றென்று) ஒழித்து, உள்ளில்=அகத்தில், கொஞ்சம் ஆம் இருப்பும் விட்டு=(பஞ்சகோச சூனியங்களைக் கரணுகிற்கும் அநுபவரூபமான சாட்சி தானென்றிருந்த) ஆற்பமாகிய ஸ்திதியையும் விடுத்து, கூடஸ்தன் பிரமம் எனனும்=அகம் பிரஹ்மமென்னும்; நெஞ்சமும்=அகண்டாகார விருத்தியும், நழுவி=(நிதித்தியாசன பரிபாகவசத்தினால் உறங்கினவன் கையிற் பதார்த்தம்போல) நழுவி, ஒன்றாய் நின்ற=அகண்டைக ரசமாயுள்ள, பூரணத்தைக் கண்டான்=பரிபூரணமான பிரஹ்மத்தை அநுபவித்தான். எ-று.

பஞ்சகோச சூனியங்களாகிய துவிதங்களைத் தானெனல் பந்தமாகலின் அந்தத் துவித விருத்தியை விட்டென்பார், "பஞ்சகோசமுங் கடந்து பாழையுந்தள்ளி" எ-ம், சாட்சிதானெனல் பந்தமன்றாயினும் புருஷார்த்த சாதன ஞானமன்றாகலின் சாட்சி விருத்தியையும் விட்டென்பார், "உள்ளில் கொஞ்சமா மிருப்பும்விட்டு" எ-ம், புருஷார்த்த சாதன ஞானமாயினும் அத்வைதாவஸ்தாந ரூபமென்னும் சாத்தியமான நிருவிகற்பவனுபவத்திற்கு அஞ்ஞாதமான அகண்ட பிரஹ்மாகார விருத்தியும் ஒழிதல்வேண்டும், ஆதலான் அகண்டாகார விருத்தியும் விட்டென்பார், "கூடஸ்தன் பிரஹ்மமென்னும் நெஞ்சமுநழுவி" எ-ம், வெகுவித பிரயாசங்கட்குக் காரணமான சித்த விகற்பங்களனைத்துந் தொலைத்து அகண்டைக ரசசொரூபம் ஆயினனென்பார், "ஒன்றாய்நின்ற பூரணத்தைக் கண்டான்" என்றுங் கூறினர். சமாதிலட்சணம் இரண்டாம் படலத்தில், 53-ம் செய்யுளுரையில் விரித்தெழுதப்படும்; ஆண்டுக்காண்க.

இதற்கு, உ-ம், ரிபுகீதை,

"தேகமுத ஞானென்ன றுவித விர்த்தி திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விர்த்தி, யேகபர நானெனன லகண்ட விர்த்தி யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளி, யாகுமகண் டாகார விருத்தி தன்னை யநவரத மாதரவா யப்பியா சித்துச, சோகமுறுஞ் சித்தவிகற் பங்க ளர்த்துச சொன்னவகண் டேகாச சொருபமாவாய்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (83)

(136) [அநுபவத்திற் சீடனடைந்துள்ள ஸ்திதியைக் கூறுகின்றார்.]

அநுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான். (84)

இ-ள். அநுபவ ஆநந்த வெள்ளத்து=அநுபூதிரூபமான பிரஹ்மாநந்த சமுத்திரத்தின் கண்ணே, அழுந்தி=படிந்து, அகண்டம் ஆகி=பேதரகித

மாய், தனுகரணங்கள் ஆதி=தேகேந்திரிய முதலிய, சகலமும் இறந்து சித்து ஆய்=அனைத்து நாமரூபங்களும் ஒழிந்து (சலத்திலிட்ட லவணம்போல) சித்துருபமாய், மனது பூரணம் ஆய்=மனம் பரிபூரணமாய், தேகம் ஆன=(அருளே) திருவுருவான, சற்குருவும் காண=சற்குருவுந் திருக்கண்ணாற் பார்த்தருள, நனவினில் சுழுத்தி ஆகி=நனவிற் சுழுத்தி யுடையவனாய், நன் மகன்=நல்ல சீடனானவன், சுபாவம் ஆனான்=தனது சுபாவரூபமாயினான். எ-று.

சமாதியில் இந்திரியங்கள் தமது காரணமான அஞ்ஞானத்தில் சுழுத்தியிற்போல லீனமாகாமல் தத்தம கோளகைகளி லிருத்தலானும், அங்ஙனமிருப்பினும் விஷயாநுபவரூபமான பகிர்முக விருத்தி அவைகட் கின்மையானும் சமாதி நனவிற் சுழுத்தியாம். "நனவினிற் சுழுத்தியாகி" எ-கு, உ-ம். வாசிட்டம்,

"நனவிற் சுழுத்தி நிலைமேவி நன்றா யெல்லா முள்ளகற்றித், தனதிச் சையில்வந் ததுபுறத்தே சமைப்பாய் சித்த முண்டாகை, கனதுக் கமதாஞ் சித்தமறிற் கனந்த சுகமாஞ் சித்தத்தை, யுனதுட் படுத்தி யுணர்வின்மை யாலே யொழிப்பா யுணர் வுருவாய்."—

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (84)

[சீடன் அநுபூதியினின்றெழுந் தாநந்தபரவசனாய் ஆசாரியரைப் பணிந்து அவரதருளை வியந்து துதித்துக் கைம்மாறு காணேனெனல்.]

அளிமக னெடும்போ திவ்வா றானபின் மனது மெள்ள
வெளியில்வந் திடவு ணர்ந்தான் விமலதே சிகனைக் கண்டான்
துளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்தான்
குளிமுகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான். (85)

இ-ள். அளிமகன் நெடும்போது=அன்புள்ள சீடனானவன் வெகுநேரம், இவ்வாறு ஆனபின்=முன்சொல்லியவண்ணம் இருந்ததின்பின்னே, மனது=அந்தக்கரணமானது, மெள்ள வெளியில் வந்திட=கிரமமாக வெளியில் வர, உணர்ந்தான்=அறிந்து, விமலதேசிகனைக் கண்டான்=அவித்தியாமலமற்ற குருவைத் தரிசித்து, துளிவிழி சொரிய=ஆனந்தபாஷ்பம் விழியுதிர்ப்ப, பாதம் வீழ்ந்து தொழுது=குருவின் சீர்பாதத்தில் (தண்டம்போல) வீழ்ந்து நமஸ்கரித்து, எழுந்து சூழ்ந்தான்=எழுந்து பிரதட்சணஞ்செய்து, கும்பிட்டு நின்று=கைகூப்பி நின்று, குளிர்முகச் சுவாமி கேட்கச் சொல்வான்=(உவாமதிபோற்) குளிர்ச்சிபொருந்திய திருமுகமுடைய ஸ்ரீ குருசுவாமி கேட்டருள விண்ணப்பஞ்செய்வான். எ-று.

"மெள்ள வெளியில்வந்திட" என்பதை, வாசிட்டத்திற் பிரகலாதர் சமாதியினின்றும் உத்திதமானவிடத்திற் காண்க. (85)

[குருவின் கருணைக்குக் கைம்மாறு காணேனெனல்.]

ஐயனே யெனதுள் ளேநின் றநந்தசன் மங்க ளாண்ட
மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றொன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி (86)

இ-ள். ஐயனே=(எனது) பிதாவே, எனது உள்ளேநின்று=எனது அந்தக் கரணத்தின்கண் (அந்தரியாமியாய்) நின்று, அநந்தசன்மங்கள் ஆண்ட=அநந்தகோடி ஜநநங்களில் கர்மோபாசனைகளிற் செலுத்தி எனது அந்தக் கரணத்தின் கண்ணுள்ள மலதோஷ, விட்சேப தோஷங்களைப் போக்கி என்னை யாண்டருளிய, மெய்யனே=கடவுளே, உபதேசிக்க=(ஆவரண தோஷ நீங்கி எனது நிஜரூபத்தை யான் றரிசித் தாநந்தமடைய) உபதேசித் தருளும் பொருட்டு, வெளிவந்த=வெளியே (அருளே திருவுருவாய்) எழுந் தருளிய, குருவே போற்றி=குருவே (உமக்கு) நமஸ்காரம், உய்யவே முத்தி நல்கும் ஓர் உதவிக்கு=(யான்) ஈடேற (அநர்த்த நிவிர்த்தி ஆநந்தப் பிராப்தி ரூபமான) மோட்சத்தை (ஞானவாயிலாகத்) தந்தருளிய இணையற்ற வுதவிக்கு, உதவி=கைம்மாறு, நாயேன் செய்யும் ஆறு=நாயடியேன் செய்யும்படிக்கு, ஒன்றும் காணேன்=யாதொன்றுங் கண்டிலேன், திருவடி போற்றி போற்றி=திருவடிக்கு வந்தனம் வந்தனம். எ-று.

மெய்ப்பொருள், பொய்ப்பொரு ளென்னும் இரண்டனுள் மெய்ப் பொருள் உம்மாற் பெற்றமையானும், பொய்ப்பொருளான உடலமாதி இணை யாகாமையானும், திருவடியை யடைந்தவன்றே அவை உம்முடையவாகவே ஆயினமையானும் கைம்மாறொன்றுங் காணேனென்பான், "முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன் செய்யுமா றொன்றுங் காணேன்" எ-ம், உமது திருவடியே தாயுந் தந்தையுஞ் சுற்றமுந் தனமுமாமென்று எனதுடல முள்ள ளவும் புகழ்ந்தேத்துவதே கைம்மாறாகக் கொள்ளல்வேண்டு மென்பான், "திருவடி போற்றி போற்றி" என்றும் கூறினன். (86)

[தனதுபதேசஞ் சீடனிடத்துச் சபலமானமையான், அவனை யாதரவுசெய்து நீ எனக்குச் செய்யுங் கைம்மாறிது வென்றாசிரியர் கூறுகின்றது.]

சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவி ருத்திக் கிருபையை யருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான
நிட்டனா யிருக்கி னீதே நீசெயு முதவி யாமே (87)

இ-ள். சிட்டன் இவ்வாறு கூற=நல்ல சீடனானவன் ஆசிரியர் செய்த வுபகாரத்தைப் பாராட்டி அதற்குப் பிரதியுபகாரங் காணேன் என்று சொல்ல, தேசிகர் மகிழ்ந்து நோக்கி=ஆசிரியர் சந்தோஷித்து (த் தமது கிருபாநோக் கத்தால் அவனைப்) பார்த்தருளி, கிட்டவா என இருத்தி=இங்கேவாவென்று

(விளித்து ஆதரவாகத் தமது) சமீபத்தில் வைத்து, கிருபையோடு அருளிச் செய்வார்=கருணையோடு மநுக்கிரகிப்பார், துட்டம் ஆம் தடைகள் மூன்றும்=தீமையவாகிய பிரதிபந்தங்கள் மூன்றும், தொடராமல்=(உன்னை) அடையாமல், சொரூபஞான நிட்டன் ஆய்=சொரூப ஞானத்தில் ஆரூடனாய், இருக்கின்=இருந்தனையாயின், ஈதே=இதுவே, நீ செய்யும் உதவி ஆம்=நீ (எனக்குச) செய்யாநிற்கும் பிரதியுபகாரமாகும். எ - று.

அபரோட்ச ஞானத்தையும் பேகித்தலால், "துட்டம்" என்றார். "சொரூப ஞான நிட்டனா யிருக்கி னீதே நீசெய்யு முதவியாம்" என்றதனால்,

"மாரிபோன் மாறாவென் டாதே, மிட்சியில் பதத்தைக் கருணையா லளிக்கும் வித்தகக் குரவனே யெவருந், தாட்சிசெய் தேத்தற் குரியதத் துவமாஞ் சங்கர னென்றிடத் தகுவான்."—

என்னும் பிரமகீதையின் செய்யுட்கு இவ்வாசிரியர் இலக்கியமாயினர் என்றறிக. (87)

[அபரோட்சஞானம் நீங்குமாவென்னுஞ் சீடன் கடாவிற்கு ஆசிரியர் விடைகூறல்.]

நீநானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கும்
நானாகத் தெளிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்
தானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்றும்
ஆனாலுந் தடைக ளுண்டே லநுபவ முறைத்தி டாதே (88)

இ - ள். நீ நான் என்று=(தற்பத லட்சியார்த்தமான) நீர் பிரஹ்மமென்றும், (துவம்பத லட்சியார்த்தமான) நான் கூடஸ்தனென்றும், இரண்டு இலாமல்=(கருதாநிற்கும்) இத்துவித கற்பனையுமில்லாமல், நிறைந்த பூரணம் ஆய்=நிறைந்த பரிபூரணமாய், எங்கும்=எவ்விடத்தும், நான் ஆக=(சின்மயனான) யானொருவனே யுளனாக, தெளிந்த ஞானம்=(அநுபவமாக) அறிந்த ஞானமானது, நழுவுமோ குருவே=நீங்குமோ ஆசாரியரே, என்றான்=என்று (சீடன்) வினவினான், தான் ஆகும் பிரமரூபம்=தன்மயமாகும் பிரஹ்மரூபமானது, சற்குரு நூலால்தோன்றும்=சற்குரு வுபதேசத்தாலும், சற்சாஸ்திர விசாரத்தாலும் அநுபவமாம், ஆனாலும்=இவ்வாற்றால் பிரஹ்மாநுபவமுளதாயினும், தடைகள் உண்டேல்=பிரதிபந்தங்களுண்டாமாயின், அநுபவம் உறைத்திடாது=அவ்வநுபவந் திடப்படமாட்டாது. எ - று.

இராஜாவானவன் ப(ஹ)ர்ச்சுவை நேத்திரத்தினலறிந்தும் விபரீத பாவனை எப்படி நிவிர்த்தியாகவில்லையோ! அப்படிக் குருவருளாலும், மஹாவாக்கிய விசாரத்தாலும் பிரஹ்மாபரோட்ச ஞானமுண்டாயினும் யாவருடைய புத்தியில் அசம்பாவனை, விபரீத பாவனையாகிய தோஷமுண்டாமோ! அவருடைய தோஷரூபமான களங்கத்தோடு கூடியஞானம் பலத்திற் கேதுவாகா தென்பார்,

"தானாகும் பிரம ரூபனா சற்குரு நூலாற் றோன்று
மானாலுந் தடைகளுண்டே லநுபவ முறைத்தி டாதே."—மான்பரா.

(137) தடையெவை யெனி லஞ்ஞான சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
டனுடன் வரும் வந்தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே ()

இ - ள். தடை எவை எனில்—பிரதிபந்தங்கள் யாவையென்று கேட்பாயாயின், அஞ்ஞான சந்தேக விபரீதங்கள்—அஞ்ஞானம், சந்தேகம், விபரீதங்களாம், [அபரோட்ச ஞானம் வந்தும் இவையுண்டாதற்குக் காரணம் என்னையோவெனின்?] படர்செயும் இந்த மூன்றும்—துன்பத்தைப் பயவாநின்ற இம்மூவகைப் பிரதிபந்தங்களும், பலசன்மப் பழக்கத்தாலே—(பூர்வம்) நாநாவித ஜநநங்களிற் (பழகிவந்த) பரிசயத்தினாலே, உடனுடன் வரும்—அடிக்கடியுண்டாகும், [அவையுண்டாயிற் படுமிழுக்கென்னையெனின்?] வந்தக்கால்—அவையுண்டாயின், உயர் ஞானம் கெடும்—மேலான (பிரஹ்மான்ம வைக்கிய) ஞானம் (பலத்திற் கேதுவாகாமற்) போம். (ஆகலின்) இவற்றை—இவ்வஞ்ஞான சந்தேக விபரீதங்களை, கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே—சிரவண, மனன, நிதித்தியாசனங்களினாலே, திடமுடன் கெடுப்பாய்—தைரியத்தோடு கூடிநின்று நாசம் பண்ணுவாய். எ - று.

திடமாவது, சிட்டுக்குருவி தர்ப்பை நுனியாற் சமுத்திரத்தை இறைத்துப் பாழாக்கத் தான்கொண்ட முயற்சிபோலும் பிரதிபந்தங்கள் அடிக்கடியுதிப்பதான் மலையாமல் அவை கெடுதற்குரிய வாயிலில் நெடுங்காலம், நிரந்தரம் ஆதரவோடு கூடிநிற்கு முயற்சி. (89)

[பிரதிபந்த சகிதஞானம் பலத்திற் கேதுவாகாதென்பதைத் திருஷ்டாந்தமுகத்தினாலறிவித்து முற்கூறியதை வற்புறுத்துகின்றார்.]

அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தாலே வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த றெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே (90)

இ - ள். அக்கினி கட்டுப்பட்டால்—அக்கினியானது (மணி மந்திர ஔஷதங்களினாலே) அடக்கப்படுமாயின், அற்பமும் சுடமாட்டாது—கொஞ்சமும் (காஷ்ட முதலியவற்றைத்) தகிக்க யோக்கியமாகாது, (அதுபோல) மக்கின ஞானத்தாலே—(அஞ்ஞான, சந்தேக, விபரீதங்களாலே) அமிழ்த்துண்ட தத்துவ ஞானமாகிய அக்கினியினால், வந்த பந்தமும் வேவாது—(அநாதிகாலந் தொடுத்து) வந்துள்ள (கர்த்திருத்வாதி) பந்தமும் வேகாது, (ஆகலின்) சிக்கெனப்பழகி கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே—நெடுங்கால நிரந்தரம் நேசத்தோடும் அப்பியசித்து சிரவண, மனன, நிதித்தியாசனங

களாலே, விக்கினமடம் சந்தேகம் விபரீதம்=(ஞானபலமான மோட்சப்) பிரதிபந்தங்களான அஞ்ஞான, சந்தேக, விபரீதமென்பவற்றை, போக்குவாய்=ஒழிப்பாய். எ - று. (90)

[நிவிர்த்திக்கத்தக்கவைகளான பிரதிபந்தங்களின் சொரூபங்களைக் கூறுகின்றது.]

பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம்
குரவன்வாக் கியநம் பாமற் குழம்புவ தாஞ்சந் தேகம்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர். (91)

இ - ள். பிரமபாவனையை மூடி=சிவோகமென்னும் பாவனையை மறைத்து, பேதங்காட்டுவது=நான் பிரஹ்மம் அல்லனென்னும் நினைப்பூட்டுவது, அஞ்ஞானம்=அஞ்ஞானமாம், குரவன் வாக்கியம் நம்பாமல்=(நீ பிரஹ்மமென்றருளிய) ஆசிரியர் வாக்கியத்தை விசேஷித்து நம்பாமல், குழம்புவது சந்தேகம் ஆம்=(நான் பிரஹ்மமோ! அலனோ என்று) கலங்குவது சமுசயமாம், திரம் அறு சகம் மெய் என்றும்=திருஷ்டநஷ்டமான ஜகத்துச் சத்தியமென்றும், தேகம் நான் என்றும்=(அநான்மாவாகிய) தேகம் நானென்றும், உள்ளே=அகத்தே, விரவிய மோகந் தானே=பொருந்துவதான மோகமே, விபரீதம் என்பர் மேலோர்=விபரீதமாமென்பர் பெரியோர். எ - று. (91)

[முன் சொல்லிய அஞ்ஞானாதிகளின் விரோதிகளான சிரவணாதிகளின் இயல்பு கூறுகின்றது.]

தத்துவ வநு போ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பார்
ஒத்துள பொருளூ கத்தா லுசாவல்சிந் தித்த லென்பார்
சித்தமே காந்த மான தெரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே. (92)

இ - ள். தத்துவ அநுபோகம்=பிரஹ்மாகார விருத்தியை, தான்சாதித்தல்=(வேதாந்தார்த்த சிந்தனத்தினாலே) தான் அடிக்கடி ஆவிர்த்திசெய்யாநிற்பதையே, கேட்டல் என்பார்=சிரவணமென்பர் (பெரியோர்), ஒத்து உள பொருள்=(சிரவணத்தால்) சம்மதித்துள்ள பொருளை, ஊகத்தால்=(அபேதத்தைச் சாதிப்பதும், பேதத்தை வாதிப்பதுமான) யுத்தியினால், உசாவல்=ஆராய்தலை, சிந்தித்தல் என்பார்=மனனமென்று சொல்லுவர், சித்தம் ஏகாந்தம் ஆன தெரிசனம்=சித்தம் பிரஹ்மாகாரமாத்திரமாக நிற்கும் அநுபவத்தை, தெளிதல் என்பார்=நிதித்தியாசனமென்பர், நித்தம்=நாடோறும், இப்படி செய்தக்கால்=இவ்வாறு (சிரவணாதிகளை) அநுஷ்டித்து வந்தாயாயின், நீ நிர்வாணம் பெறுவாய்=(அவ் அஞ்ஞானாதிப் பிரதிபந்தங்களைநீங்கி) நீ மோட்சமடைவாய். எ - று.

ஈண்டிது விவேகம்:—மோட்சமானது ஞானத்தால் நியமமாக உண்டாகும்; இதுவே சித்தாந்தமாம்; அந்த ஞானம் சிரவணத்தால் உளதாம். சிரவணம் இருவகைத்து; ஒன்று வேதாந்த வாக்கியத்திற்கும், சுரோத்திரத்திற்கும் உளதாய சம்யோகரூபம்: மற்றொன்று வேதாந்த வாக்கியத்தின் விசாரரூபம். ஞானத்திற்கேது பிரதமசிரவணம், இரண்டாவதல்ல. ஏனெனின்? சத்த ஜந்நியஞானத்தில் இந்திரியத்தோடு சத்தத்தின் சம்யோகமே சர்வத்திர ஏதுவாம். ஆகலின், வேதாந்தவாக்கியத்திற்கும், சுரோத்திரத்திற்கும் உளதாய சம்யோகரூபமான சிரவணம் பிரஹ்மஞானத்திற்கேதுவாம். அவாந்தரவாக்கியத்தின் சிரவணம் பரோட்ச ஞானத்திற்கேதுவாம். மஹாவாக்கியத்தின் சிரவணம் அபரோட்சஞானத்திற் கேதுவாம். ஒருவனுக்கு ஞானம் உதயமாயினும் அசம்பாவனை, விபரீத பாவனைகளுண்டாமாயின் அவற்றால் இரண்டாவதான சிரவணமும், மனன நிதித்தியாசனங்களுஞ் செய்யற்பாலனவாம். வேதாந்தவாக்கியத்தின் விசாரரூபமான சிரவணத்தால் வேதாந்த வாக்கியத்தினசம்பாவனை நிவிர்த்தியாம். சமுசயத்தை அசம்பாவனை என்பர்; வேதாந்தவாக்கியம் பிரஹ்மத்தைப் பிரதிபாதிக்கிறதோ! அல்லது, அந்நியங்களைப் பிரதிபாதிக்கிறதோ என்றுளதாகுஞ் சமுசயம் வேதாந்தவாக்கியத்தினசம்பாவனையாம்; அது அதன் விசாரத்தினால் நிவிர்த்தியாம். மனனத்தினால் பிரமேயத்தினசம்பாவனை நிவிர்த்தியாம்; சீவபிரஹ்மங்களின் ஏகத்வம வேதாந்தத்தின் பிரமேயம் என்பர்; அவ்வேகத்வம் சத்தியமோ! அல்லது, சீவபிரஹ்மங்களின் பேதம் சத்தியமோ என்றிவ்வாறுளதாகுஞ் சமுசயம் பிரமேய வசம்பாவனை யெனப்படும்; அது மனனத்தினால் நிவிர்த்தியாம். விபரீதபாவனை நிதித்தியாசனத்தினால் நிவிர்த்தியாம். இவ்வாற்றால், பிரதம சிரவணமோ ஞானவாயிலாக மோட்சத்திற் கேதுவாம். விசாரரூப சிரவணமும், மனன நிதித்தியாசனங்களும் அசம்பாவனை, விபரீதபாவனைகளை நிவிர்த்திக்கும் வாயிலாக மோட்சத்திற்கேதுவாம். இவ்வாறு பிரமாணகத, பிரமேயகத வசம்பாவனைகள் ஞானத்திற்குப் பிரதிபந்தகமென்று வசாரசாகரத்திற் கூறியிருப்பதுபோல இவ்வாசிரியர் கூறாமல்,

"பிரஹ்மமல நானென்கை யஞ்ஞானம

நானப் பிரஹ்மமோ வலனேனுவென் றி பேயம"—

என்று வேதாந்தசூடாமணியிற் கூறியிருப்பதுபோல, "பிரமபாவனையை மூடிப் பேதங்காட்டுவ தஞ் ஞானம், தத்வமஸிவாக் கியநம பாமற்றுழம்புவ தாஞ்சந் தேகம்" என்று முற்செய்யுளிற் கூறியிருப்பதால், "தத்துவ வநுபோகந்தான் சாத்திரங் கேட்டல்" என்பதற்கு பிரஹ்மாகார விருத்தியை வேதாந்தத்தின் அர்த்த சிந்தனத்தினாலே அடிக்கடி ஆவிர்த்தி செய்யாநிற்பது சிரவணமாமென்று வேதாந்தவாக்கியத்தின் விசாரரூபமான இரண்டாவதான சிரவணத்தை உரைசெய்யப்பட்டது. வேதாந்தத்தின் அர்த்த சிந்தனத்தினாலே அடிக்கடி பிரஹ்மாகார விருத்தியுண்டாகா நிற்கும்; ஆகலான், அடிக்கடி வேதாந்தத்தின் அர்த்த சிந்தனரூபமான இரண்டாவதான சிரவணத்தினாலேயே அஞ்ஞானப் பிரதிபந்தம் நிவிர்த்தியாம், நிதித்தியாசனத்தின்

பரிபாகாவஸ்தையைத்தானே சமாதி யென்பாராகலின், சமாதியும் நிதித்தியாசனத்தில் அந்தர்ப்பாவம்: வேறு சாதனமன்று. கடாகாரமான அந்தக்கரணத்தின் அபரோட்ச விருத்தியைக் கடாநுபவ மென்பது போலப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தி னபரோட்ச விருத்தியை இங்கே, "தத்துவ வநுபோகம்" என்றார்.

"தொக்க பிறவிக ளெல்லா மொருங்கு தொடர்ந்து வந்த வாதனை தான், மிக்க கால யோகத்தின் பழக்கத் தல்லால் விடாது"—வென்று வாசிட்டத்திற் கூறியிருப்பதுபற்றி, "நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே"—என்றார். (92)

[ஞானத்திற்குப் பிரதிபந்தங்களான அஞ்ஞானாதிகளின் சொரூபமும் அவைகளின் விரோதிகளான சிரவணாதிகளின் சொரூபமுங்கூறி "நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே" என்று முற்செய்யுளில் அருளிச்செய்தமையால் பிரதிபந்த நிவிர்த்தியின் பொருட்டுச் சிரவணாதிகள் சடபாதாதியாபோல மரண பரியந்தம் வேண்டுங்கொல்? என வருமாசங்கையைத் தொலைத்தற்கு அவை அநுஷ்டிக்கும் காலவளவை கூறுகின்றார்.]

எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்று ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்பா ரென்றும். (93)

இ-ள். எத்தனை நாள்—எவ்வளவு காலம், ஞாதாவும்—(ஞானத்தின் கர்த்தாவாகிய) அந்தக்கரணமும், ஞானமும்—(பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் விருத்திரூப) ஞானமும், உன்பால் இருக்கும்—உன்னிடத்திருக்குமோ, அத்தனை நாளும்—அவ்வளவு காலமும், வேண்டும்—(அஞ்ஞானாதிப் பிரதிபந்த விரோதிகளான சிரவணாதிகள்) வேண்டும், அப்பால்—(ஞாதா, ஞானமென்னும் விகற்பமிறந்து மஹாவாக்கியப் பிரமாண ஜந்ய ஞான விஷயமான ஞேயமாத்திரமாக நீ அவசேஷித்த) பின்னர், ஓர் செயலும் வேண்டா—(சிரவணாதி யநுஷ்டானங்களுள்) ஓரநுஷ்டானமும் (உனக்கு) வேண்டுவதில்லை, நித்தமும்—நாடோறும், வெளிபோல்—ஆகாசம் போல, பற்றுஞேயமாத்திரம் ஆய்—அசங்கசிதான்மா மாத்திரமாய், சீவன் முத்தர் ஆனவர்—சீவன்முத்தராயினோர், விதேக முத்தி பெற்று—(பிராரத்த நாசத்தில்) விதேகமுத்தி யடைந்து, என்றும் இருப்பார்—சார்வகாலமும் அதுவாயிருப்பார். எ-று.

இங்கே இது சித்தாந்தம்:—மந்தமென்றும், திடமென்றும் ஞானம் இருவகைத்தாம்; சமுசயாதி சகிதஞானம் மந்தஞானமென்றும், சமுசயாதி ரகிதஞானம் திடஞானமென்றுஞ் சொல்லப்படும். யாவர்க்குத் திடஞான

முண்டாமோ! அவர்க்குக் கிஞ்சின்மாத்திரமுங் கர்த்தவ்வியமில்லை. ஓர்போதுற்பந்நமாகும் சமுசயாதிரகித வந்தக்கரணத்தின் விருத்திரூபஞானமே அவித்தையை நாசம்பண்ணித் தானும் நிவிர்த்தியாய்விடும், நன்றாகக்கண்ட ஆன்மாவின்கண் மீண்டும் பிராந்தி யுண்டாகாது. என்னை? பிராந்திக்குக் காரணமாகிய அவித்தை ஓர்போது உற்பந்நமாகும் ஞானத்தால் நஷ்டமாய் விடுதலின். பிராந்தியும், அவித்தையும் இன்மையின் விருத்தி ஞானத்தினிவிர்த்திக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை, ஆதலால், "அப்பாலோர் செயலும்வேண்டாம்"—எ-ம்,

"ஞானமுதித் ததன்பின்னைங் கோசங்கட்கு நமைவேறாய் மிகவுமறிந் ததுவேபோல, ஞானம்வரு முனுங்கோச மவைக்கு வேறாய் நாமிருந்தோ மென்பதுசித் தித்தலாலும்"— என்று,

இலட்சண விருத்தியிற் கூறியிருப்பதுகொண்டும், தமதநுபூதி பலங்கொண்டும் "நித்தமும் வெளிபோற் பற்ற றேயமாத் திரமாய்" என்றுங் கூறினர்; இதனை யூகித்துணர்க. சீவித்திருக்கிற புருஷனுக்குக் கர்த்திருத்வாதி கிலேச ஏதுவாதலால் பந்தமாம்; அவை நிவிர்த்தியாதலே சீவன் முத்தியாம். எக்காலத்தும், எவ்விடத்தும் ஓர் தேகத்தையும் தானடையாமல் அகண்டைகரசப் பிரஹ்மமாத்திரமாயிருப்பதே விதேகமுத்தியாம் என்க. "சீவன் முத்தரானவர்வி தேக முத்திபெற் றிருப்பா ரென்றும்" எ-கு, உ-ம், பகவற் கீதை,

"மங்குந் தானும் யாவையுமாய் நின்ற வொன்று பழிவின்றி
யங்க மொன்றின் றறிவேயாய் நண்ணி தாய வருள்வடிவைத்
தங்கு ஞான யோகத்தான் முன்பா சரித்துப் பினைவந்தெ
னங்கமான பேரொளிபோ டொன்றி யாறு யடங்கிடுவார்."—எ-ம்,

"அத்தனு மொன்று டென்னைக் கூடுந் தொன்மை போர்த
னொத்தனை நூறு கோடி கற்பகங்க டாஞ்சென் றாலு
மெய்த்தக மீளா ரென்றன் விளங்குமெய் யுருவா லென்றே
யித்தகைத் தெனவே வேத மியம்பிடு மென்று மீசன்"—

என வரும். மற்றும் வருவன வற்றுட் காண்க. (93)

(138) [இனிச் சீவன் முத்தர்களின் பேதங் கூறுகின்றார்.]

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரம வித்து வரன்வரி யான்வ ரிட்டன்
ஆனவர் நாம மாகு மவர்களிற் பிரம வித்தின்
ஞானமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன். (94)

இ-ள். ஞானம் ஆர் சீவன் முத்தர்—ஞானநிறைந்த சீவன் முத்தர்கள், நால்வகை ஆவர்—நான்கு பேதமாயிருப்பர், கேளாய்—(அப்பேதங்களைச்)

சொல்லக்கேள், ஞானிகர் பிரம வித்து—ஆகாசத்தை யொப்பான பிரஹ்மவித்தெனவும், வரன்—வரனெனவும், வரியான்—வரியானெனவும், வரிட்டன்—வரிட்டனெனவும், ஆனவர் நாமம் ஆகும்—அச்சீவன் முத்தர்களின் பெயராம், அவர்களில்—அந்நால்வர்களுள்ளே, பிரமவித்தின் தானமும்—பிரஹ்மவித்தினுடைய (அநுபவ) வலிமையும், மற்றை மூவர்—ஏனை மூவருடைய, தாரதம்மியமும்—தாரதம்மியத்தையும், சொல்வேன்—இனிக் கூறுவேன். எ - று.

அந்நிய பகிர்முகப் புருஷரைக் கர்மோபாசனைகளை யனுஷ்டிக்கப் பண்ணும்பொருட்டு ஆன்மாவை அசங்கமாகவும், கிரியைகளனைத்தையும் மனவாக்குக் காயங்களி னுசிரிதமாகவும், அறிந்து கர்மோபாசனைகளைப் பிரஹ்மவித்துச் செய்யாநிற்பதால், "ஞானிகா பிரமவித்து" என்றார். "ஞானமார் சீவன் மூத்தர் நால்வகை" என்றதானும், "மற்றை மூவா தாரகம் மியமுஞ் சொல்வேன்" என்றதானும் இந்நால்வரும் ஞானத்திற் றாரதம்மியம் இன்மையரென்றும், விசிராந்தி சுகத்திற் றாரதம்மிய முடையரென்றும் அறிக. (94)

[பிரமவித்தினியல்பு கூறுகின்றார்.]

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னாலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வர் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தர் (95)

இ - ள். தீரர் ஆய்—மனத்தைரியமுடையராய், பிரமவித்து ஆய்—பிரஹ்மஞானிகளாகி, தெளிந்தவர்—(யாமார் என்பது முதலிய கலக்கங்கள்) தெளிந்தோர், தெளியும் முன்னம்—அப்படித் தெளிதற்கு முன்னே, வாரம் ஆய் இருந்த—உரிமையாக விருந்த, தங்கள்—தங்களுடைய * வருணம், ஆச்சிரமம் சொன்ன—வருணாச்சிரமங்களைப் பற்றிய சாஸ்திரங்களிற் சொல்லிய கிரியைகள், பாரகாரியம் ஆனாலும்—கன்மான கிரியைகளாயினும், †பலர்க்கும் உபகாரம் ஆக—(பகிர்முகரான) பலருக்குஞ் சகாயமாகவேண்டி, நேரதாச்செய்வர்—(மந்திரலோபம், கிரியாலோபம், திரவியலோபமின்றிச்) சாஸ்திரோக்தமாகச் செய்யாநிற்பர், (அப்படிச் செய்யாநின்றும்) தீர்ந்த நிலைவிடார்—(சுருதிகளாற் சொல்லிய) முடிவான அத்வைத நிச்சயத்தை விடார்கள், சீவன் முத்தர்—சீவித்திருக்கும்போதே முத்தராயுள்ளோர். எ - று.

இங்கே நிச்சயம் எ - து, அநுபவத்தை. ஈசரனுற் பராக்குகளாகச் சிருஷ்டித்த இந்திரியங்களை, வேகமுள்ள நதிச்சலத்தைத் திருப்பினுற்போல அகமுகமாக்கிச் சர்வேந்திரியங்கட்கும் ஆந்தரமான பரமான்மாவைச் சாட்

* "வருணமாச்சிரமம்" என்பன அவைகளைப்பற்றிய சாஸ்திரங்கட்கு ஆகுபெயர்.

† "பலர்க்கும்" என்னும் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

சாத்கரித்திருப்பதால், "தீரர்" எ-ம், யாமார்? ஜகம் எத்தன்மைத்து என்பன முதலிய கலக்கங்கள் கலங்கனீர் * கதகரேணுவாற்போல பிரஹ்மவித்தையாற் றெளிந்திருத்தலால், "பிரமவித்தாய்த் தெளிந்தவர்" எ-ம், ஆப்தகாமராதலாற் றமக்கெனச் செய்யாது லோகசங்கிரகார்த்தம் வருணாச்சிரம விதிகளை விதிப்படி செய்வதால், "பலர்க்குப காரமாக, நேரதாச்செய்வர்" எ-ம், சோரநாயகி மனைத்தொழில் செய்யினும் சோரநாயகன் சுகத்தினை விடாததுபோல அந்நியரைச் சன்மார்க்கத்திற் பிரவிர்த்திப் பித்தற்பொருட்டுக் கர்மோபாசனைகளைச் செய்யினும் பிரஹ்ம நாமென்னும் அநுபவம் க்ஷணமும் விடாமையின், "தீர்ந்த நிலைவிடார்" என்றுங் கூறினர். (95)

[இதுவுமது.]

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர். (96)

இ-ள். காமம் ஆதிகள் † வந்தாலும்=(பிராரத்தவலியால்) காம முதலியவை (பிரஹ்மவித்துக்களிடத்து) எழுமாயினும், (அவை) கணத்தில் போம்=(உடனே திடமான வைராக்கிய முதலிய சுத்தவாசனை பிரயத்தனமின்றி யெழுவதால்) க்ஷணத்தில் நாசமாம், மனத்தில்பற்றார்=(அஞ்ஞானிகளைப்போல அவைகளை) அந்தக்கரணத்தின்கண் (வாசனையாகப்) பற்றார்கள், தாமரை இலைத்தண்ணீர்போல்=தாமரையிலையிற் சலம் (கூடிநின்றும் பற்றாதது) போல, சகத்தொடும் கூடிவாழ்வார்=(அசங்கசிதான்மா நாமென்னும் அநுபூதி வலியால் அகத்திற்பற்றாமலே) பிரபஞ்சத்தோடுங் கூடிவாழாநிற்பர், பாமரர் எனக் காண்பிப்பார்=(கர்மகாண்டத்தையும், உபாசனாகாண்டத்தையும் நிச்சேஷமாகவிடுத்து ஞானத்தினாலே முத்தி சம்பாதித்துக்கொண்ட தைரியசத்தியிருப்பினும் உலகத்தில் ஞானவாசனை யில்லாமற் கர்மோபாசனைகளை யநுஷ்டிக்கும்) மூடசிரோமணிகளைப்போல(த் தம்மைக்) காட்டுவார், பண்டிதத்திறமை காட்டார்=(அநேகமதங்களைக் கண்டித்து, அநேக மதங்களை ஸ்தாபிக்கத்தக்க சக்தியுள்ள சர்வஞ்ஞராயிருந்தும் அடக்கமுடைமையின்) வித்துவத் சாமர்த்தியத்தைக் காட்டார்கள், ஊமரும் ஆவார்=(சின்மயமாகிய சிவமே இவை யாவையுமென்னுஞ் சுழுத்தி மௌனாநுபூதியால் விகற்பமெழாமையின்) மௌனருமாயிருப்பார், உள்ளத்து உவகை ஆம் சீவன்முத்தர்=அந்தக்கரணத்தின்கண் ணிரங்குச திருப்தியுடையரான சீவன்முத்தர்கள். எ-று.

"பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார் ஊமருமாவார்" எ-கு, பாகவதத்திற் கூறுநிற்கும் சடபரதனை இலக்கியமாகக்

---

* கதகரேணு=தேற்றாம்பொடி.

† "வந்தாலும்" என்றதன்கணும்மை—எதிர்மறை.

காண்க. "ஊமருமாவார்" என்று இவ்வாசிரியர் கூறியிருப்பது போலவே வாசிட்டத்தில் "விவாதமறு மோனத்தோன்" எ-ம்,

"இருப்புழி மௌனஞ் சாந்தி சமமெய்தி யிராகமின்றி"—எ-ம், அருளிச்செய் திருப்பது காண்க. இந்திரசாலத்திற் கந்தர்வ நகரத்தைப் பார்ப்பவனுக்கு ஓர் போகத்திலும் இச்சையெழாததுபோல பிரஹ்மஞானிக்கும் மித்தியாப்பிரபஞ்சத்திற் பிராரத்த வலியாலல்லது காம முதலியவை யெழாதாதலால், "காமமா திகள்வந் தாலும்" என்றார். "காமமாதி" என்றதனால் காமம், சங்கற்பம், சந்தேகம், இராகம், துவேஷம், சிரத்தை, பயம், இலச்சை, இச்சை முதலியவுங்கொள்க.

"காமமா திகள் வந்தாலும்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"மிகவருகா மாதிகளாம் விகாரமடைந் தும்விண்போன் மிக நொய் தானோ, ரகமெனலின் றிச்செயல்கள் செய்தாலுந் தவிர்ந்தாலு மழுத்த மற்றோர், சகநெறிகள் செய்திடினு மன்னியர்போற் கண்டு குளிர் தன்மை சான்றோர், திகழ்மனது நினைவுமிருந் தஞ்சிறிது மில் லாதோர் சீவன்முத்தர்."—

என வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

"கணத்திற்போம்" எ-கு, உ-ம், திருவள்ளுவர்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."—

என வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

"மனத்திற் பற்றா" எ-கு, உ-ம், சுவாநுபவத்திருவாக்கு,

"காண்பானுங் காண்பவையைக் காணுமிடத் தேகமதாய்ப்
பூண்பனவால் வாதனையும் பூண்டிடுமே - வீண்பயிலும்
வாசனையைச் சித்தத்தில் வையா ததுமுத்தி
யாசிலிதற் கர்த்தமிதே யாம்"—

என வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (96)

[ஞானிகளின் சரீரவியவகாரத்தில் நியமமில்லை. என்னை? ஞானிகளின் வியவகாரத்திற்கு அஞ்ஞானமும், அதன் காரியமானபேதப் பிராந்தியும், அதனாலுளவாகும் இராகத்துவேஷங்களுமில்லை; மற்றியாதுளதேனின்:—பிராரத்த கர்மசேஷமேயுளது; அதுவே அவர்களின் வியவகாரத்தில் நிமித்தமாம்; அந்தப்பிராரத்த கர்மம் புருஷபேதத்தால் நாநாப்பிரகாரமாம்; ஆகலின், ஞானிகளின் பிராரத்தகர்ம ஜந்நிய வியவகாரத்திற்கு நியமமின்றென்னுஞ் சித்தாந்த பட்சத்தை இங்கே கூறுகின்றார்.]

பேதகர் மத்தால் வந்த பிரார த்த நாநா வாகும்
ஆதலால் விவகா ரங்க ளவரவர்க் காவ வாகும்

மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ் செய்வார்
பூதலம் புரப்பா ரையம் புகுந்துண்பார் சீவன் முத்தர். (97)

இ - ள். பேதகர்மத்தால் வந்த=(கிரைவிற்ற தானியம்போலப்) பேதமான (சஞ்சித) கர்மத்தினாலுண்டான, பிராரத்தம்=பிராரத்த கர்மமும், நாநா ஆகும்=நாநாப்பிரகாரமாம், ஆதலால், விவகாரங்கள் அவர் அவர்க்கு ஆவ ஆகும்=வியவகாரங்களும் அவரவர்கட்குப் (பிராரத்தத்திற்குத்) தக்கனவாகப் பொருந்துவன பொருந்தும், மாதவம் செயினும் செய்வார்=பெருமை பொருந்தின தவத்தைச் செய்யினுஞ் செய்வார்கள், வாணிபம் செயினும் செய்வார்=வியாபாரஞ் செய்யினுஞ் செய்வார்கள், பூதலம் புரப்பார்=பூமியைப் (புரப்பினும்) புரப்பார், ஐயம் புகுந்து உண்பார்=பிச்சைபுகுந்து (உண்ணினும்) உண்பார், சீவன் முத்தர்=சீவன் முத்தர்கள். எ - று.

"மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ் செய்வார் என்பதனால், தவசு முதலியவற்றில் ஞானி பிரவிர்த்தியாகிற்பது வேத ஆஞ்ஞையினாலல்ல, தனது இச்சையினாற் பிரவிர்த்தியா நிற்பன் என்றறிக. யாவர்க்குப் பிட்சைமாத்திரத்திற் கேதுவாகப் பிராரத்த மிருக்குமோ! அவர்க்கே ஞானமுண்டாம்: அதிக வியவகாரத்திற் கேதுவாக யாவர்க்குப் பிராரத்த மிருக்குமோ! அவர்க்கு ஞானமுண்டாகாது; ஆகலான், பிட்சையுண்டன் முதலிய வியவகாரத்தினும் அதிக வியவகாரம் ஞானிக்குண்டாகாது; யாவர்க்கு அதிகப் பிரவிர்த்தியுண்டாமோ! அவர் ஞானியல்லரென்று சிலர் சங்கை பண்ணுகிற்பர்; அச்சங்கை கூடாது. என்னை? யாக்ஞவல்கியர், ஜனகாதியர் ஞானியென்று சொல்லப்பட்டிருக்கின்றனர்; இவர்களில், சபாவிஜயத்தினாற் றனசங்கிரக வியவகாரம் யாக்ஞவல்கியருக்கும், இராச்சியபாலன வியவகாரம் ஜனகருக்குஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. வாசிட்ட கிரந்தத்தில், அநேக ஞானிகட்கு வியவகாரம் நாநாப்பிரகாரமாகச் சொல்லியிருக்கின்றது. ஆதலால், ஞானியினுடைய பிரவிர்த்திக்கு அல்லது, நிவிர்த்திக்கு நியமமில்லை. எப்படியும் யாக்ஞவல்கியர் சபாவிஜயத்திற்குப் பின்னர் வித்துவத் சந்நியாசரூபமான நிவிர்த்தியைத் தானே அடைந்தனர்: பிரவிர்த்தியில் வைராக்கியத்திற் கேதுவான நாநாவித தோஷங்களைக் கூறினர்; அப்படியாயினும் யாக்ஞவல்கியர்க்கு வித்துவத் சந்நியாசத்திற்கு முன்னம் ஞானம் இல்லை யென்று சொல்வது கூடாது: ஞானமோ முன்னும் இருந்தது. ஆயினும், வித்துவத் சந்நியாசத்திற்கு முன்னே சீவன் முத்தியின் ஆநந்தயடையப் படவில்லை. ஆதலால், சீவன் முத்தியின் ஆநந்தத்தின் பொருட்டுச் சர்வ சங்கிரகங்களையுந் தியாகஞ்செய்தனர். யாக்ஞவல் கியர்க்குப் பிராரத்தஞ் சில காலம் அதிக போகத்திற கேதுவாகவும், பிற்காலம் நியூனபோகததிற் கேதுவாகவும் இருந்தது. ஆகலின், முன்னே யாக்ஞவல்கியர்க்கு வைராககியமின்றி அதிக போகமும், பின்னே வைராக்கியத்தினாற் சர்வபோகங்களின் தியாகமு முண்டாயிருந்தது. ஜனகர்க்கும் பிராரத்தம் மரணபரியந்தம் இராச்சியபார முதலிய அதிக போகத்திற்கே ஏதுவாக இருந்தது; ஆகலால், சதாத்தியாக மில்லாமலே இருந்தது: போகங்களில் வைராக்கியமு முண்டா

கவில்லை. வாமதேவாதிகளின் பிராரத்தம் நியூனபோகத்திற் கேதுவாகவிருந்தது; அவர்கட்குச் சதாபோகத்தில் வைராக்கியத்தினால் பிரவிர்த்தி இல்லை யென்றே சொல்லி யிருக்கின்றது. வாசிட்டத்தில், சிகித்துவசனுக்கு ஞானத்திற்குப் பின்னே அதிகப்பிரவிர்த்தி யுண்டாயிருந்த தென்னும் பிரசங்கமுமுண்டு; இவ்வாற்றால், நாநாப்பிரகாரமான விலட்சண வியவகாரம் ஞானிகட்குச் சொல்லி யிருக்கின்றது; அவர்களனைவருக்கும் ஞானம் சமானமே; அதனது பலமான மோட்சமும் அப்படியே; பிராரத்தபேதத்தால் வியவகார மாத்திரம் பேதம் என்றறிக. (97)

[இவவாறு ஜீவன்முத்தர்க்கு நாநாவியவகாரம் உண்டேன்றல், அஞ்ஞானிகளிலும் அவர்களிடத்து விசேஷம் என்னையோ என வரும் ஆசங்கையைப்பற்றி அவர்களிடத்துள்ள விசேஷங்களைக் கூறுகின்றர்.]

சென்றது கருதார நாளைச சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னுர் சாட்சி நடுவான சீவன் முத்தர். (98)

இ-ள். சென்றது கருதார்=(பிரபஞ்சத்தில் மித்தியா புத்தியால் செல்காலத்திற்) போனதைப்பற்றி நினையார்கள், நாளை சேர்வது நினையார்=வருகாலத்தில் இனி வாராநிற்பதைப்பற்றியும் நினையார்கள், கண்முன் நின்றது புசிப்பார்=(நிகழ்காலத்தில்) கண்முன்னே (பிராரத்தவலியால் வந்து) நிற்கிற போகஙகளைப் புசியா நிற்பர்கள், வெய்யில் நிலவாய்=சூரிய கிரணமான வெய்யிலானது சந்திரகிரணமான நிலவைப்போலச் சீதளமாகி, விண் விழுது வீழ்ந்து=(ஆலவிருட்சத்திற்போல) ஆகாசத்தினின்றும் விழுதுகளிறங்கி, பொன்றின சவம் வாழ்ந்தாலும்=மரித்துப்போன பிரேதம் பின்சீவித்த தானலும்,புதுமையா ஒன்றும் பாரார்=ஆச்சரியமாக வொன்றையும் நாடார்கள், நன்று தீது என்னுர்=(ஒன்றை இது) நன்றென்றும், (மற்றொன்றை) இது தீதென்றுஞ் சொல்லார்கள், சாட்சி நடுவான=சாட்சியாய் (த் திரிபுடியின்) நடுவான, சீவன் முத்தர்=சீவன் முத்தர்கள். எ-று.

"புதுமையா வொன்றும் பாரார" எ-து,

"இதுவென தடதோன்றிய வெல்லாஞ்சிற் சொரூபமிவ்வண்ணம் பலசத்தியிலகும்"—

என்னும் அநுபூதிவலியால். "நன்றுதீ தென்னுர" எ-து,

"செப்புநாமத்தா னுண்மையா லெல்லாத் திகழ்வுமா தேவனேயாகி, யிப்படி யறிந்த ஞானிகைக் கொள்வா னெத்தையன் றெனவெத்தை விடுவான்"—

என்னுஞ் சுருதியால் எனக்காண்க. "நடுவான சீவன்முத்தர்" எ-து, முன்னைய மூன்று பூமிக்கும், பின்னைய மூன்று பூமிக்கும் மத்தியமான சத்வா

பத்தியென்னும் நான்காம் பூமியினையுடைய சீவன் முத்தர் என்று பொருளுரைப்பினும் அமையும்; அமையுமாறு,

"முன்னிலங்களேறியமூ வருமப்பியாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன் முத்தர் பேதமாகுஞ், சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாம்"—

என்னும் இரண்டாம் படலத்து 154-ம் செய்யுளாலறிக.

"சென்றது கருதார நாளைச் சேர்வது நினையார கண்முனின்றது புசிப்பார்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"வானேகு கதிரிரவி நாளியற்றும் வாறென்ன வந்து வந்து, தானேதோன் றியதொழிலைப் பற்றின்றிச் செய்துமெனச் சனகனெண்ணித், தீனேய வருகாலஞ் செல்கால மிமையளவுஞ் சிந்தை செய்யா னானேறு நிகழ்காலந் தோரிமைப்பினகைதலோ டுலாவலுற்றான்."—

என வரும். மற்றும் விருவனவற்றாற் காண்க. (98)

["தீராய்" என்னும் 95-ம் செய்யுட்டொடங்கி, "சென்றது" என்னும் 98-ம் செய்யுள்வரையும், பிரமவித்துக்களினியல்பு கூறி இனி ஏனைய மூவரின் தாரதம்மியமானவியல்பு கூறுகின்றார்.]

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந தானுய்
உன்னுவோன் வரன்வேற் றோரா லுணர்பவன் வரியா னாகும்
அன்னியர் தம்மாற் றன்னா லறியாதோன் வரிட்ட னாமே. (99)

இ-ள். பின்னை மூவரில்=(வரன், வரியான், வரிட்டன் என்னும்) ஏனைய மூவர்களில், இரண்டு பேர்களும்=(வரன், வரியான் என்னும்) இருவரும், சமாதியோகந் தன்னை=சமாதி யோகத்தை, உற்று இருப்பார்=பொருந்தி யிருப்பார்கள், தேகசஞ்சார நிமித்தம்=தேகஸ்திதி (க் கின்றியமையாத பிட்சை முதலியவற்றின்) பொருட்டு, தான் ஆய் உன்னுவோன்=(பிராரத்த வசத்தால் சமாதியினின்றும்) கேவலம் உத்திதனாய் நினையா நிற்பவன், வரன்=வரனாகும், வேற்றோரால்=(சமீபத்திலுள்ள) அந்நியரான சீடர் முதலியோரால், உணர்பவன்=அறியா நிற்பவன், வரியான் ஆகும்=வரியானும், அன்னியர் தம்மால் தன்னால்=அந்நியராலும் தன்னாலும், அறியாதோன் வரிட்டன் ஆம்=அறியாதவன் வரிட்டனாகும். எ-று.

"இரண்டு பேர்களுஞ் சமாதி யோகந், தன்னையுற் றிருப்பார்" என்பதனால், வரிட்டன் சமாதியிலதீதனா யிருப்பனென்பது அருத்தாபத்தியினாற்

பெறப்படுகின்றது. "வேற் றோரா லுணர்பவன் வரியானுதும்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"அறைந்தபடி கைமந்நா லுந் தானும் போதத் தமூர்ந்தியவின் பத்தமைவாற் புறனு முன்றூ, முறைந்தபதார்த் தங்கண்மறந் தயலோர் வன்பா லுணர்வெருவோ பதார்க்கதினை வொழிந் தாகு, நிறைந்தவினை யாருலும் பேதம் போக்கி நிலைபெறாதற் சுபாவத்தே நிற்ற ருணே, மறைந்தபொருள் வெளியாக்குந் துரிய மாகு மாசுறுசீ வனின்முத்தர் வழியீ தாகும்."—

என வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

"அந்நியா நம்மாற் றன்னு லறியாநோன்" எ-கு, உ-ம், பாகவதம்,

"சாற்றிய குணமுற யாக்கையு மனமுந் தானல வென்பதை யுணர்ந்தாற், போற்றிய வாக்கை யுடனிருப் பதுவும் போவது மறிந்திடா ராகி, யேற்றதும் புயமேற் றுகில்கழி வதுவு மிருப்பதும் வெண்ணறை பருகி, மாற்றரு மதத்தி னறிந்திடா தொழுகு மாக்களைப் போலுவர் மாதோ."—

என வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (99)

[இவ்வாறு ஜீவன் முத்தா நாநாவாயின் அவர்கட்கு விதேக முத்தியும் நாநாவாதுமோ வெனின்:—அற்றன்று, அது சமமாம், ஜீவன் முத்திச் சுகமே தாரதம்மிய மாம் என்று கூறுகின்றா.]

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னுலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுப விப்பன்
வரியா னும் வரனு மற்றை வரிட்ட னுஞ் சுகமாய் வாழ்வார். (100)

இ-ள். அரிது ஆகும் இவர்கள்—(திரிலோகத்திலும்) கிடைத்தற்குத் துர்லபமான இச்சீவன் முத்தர்கள், இவ்வாறு அநேகர் ஆனுலும்—இந்தப்பிரகாரம் (பிராரத்தவசத்தால்) நாநாபேதமான வியவகாரங்களை யுடையவரா யிருந்தாராயினும், முத்தி சரி ஆகும்—(ஞானத்திற் றாரதம்மியமின்மையின், ஞானபலமான) மோட்சசுகம் அவர்கட்குத் தாரதம்மியமின்றிச்) சமமாம், பாடுபட்ட—(வரன் முதலியோர்) வருத்தப்பட் டடைந்திருப்பதான, சமாதிக்கு—(நிர்விகற்ப) சமாதிக்கு, பலன் எது என்றால்—பிரயோஜனம் யாதென்று நீ ஆட்சேபிப்பாயாயின், பெரிது ஆன திருஷ்ட துக்கம்—(பிராரத்தவசத்தா லுண்டாகாநிற்கும்) பெரிதாகிய பிரத்தியட்ச துக்கத்தை, பிரமவித்து அநுபவிப்பன்—பிர்ஹ்மவித் தநுபவியாநிற்பன். வரியானும் வரனும் மற்றை வரிட்டனும், சுகம் ஆய் வாழ்வார்—(சீவன்முத்திச்) சுகத்தினையே யுடையராய் வாழ்வார்கள். எ-று.

யாவர் சீவன்முத்திச் சுகத்தை விடுத்துத் துச்சமான போகங்களிற் பிரவிர்த்தியாகிற்பரோ! அவர் விதேக மோட்சத்தை விடுத்து வைகுண்டாதியுலகங்களி னிச்சையுடையராய் அங்கே செல்லாநிற்பர் என்று சிலர் சங்கை செய்யா நிற்பர்; அச்சங்கை கூடாது. என்னை? சீவன் முத்திச சுகத்தைத் தியாகம்பண்ணுவதும், போகத்திற் பிரவிர்த்திப்பதும் ஞானிக்குப் பிராரத்த வலியாற் கூடும், பிராணன் வெளியிற் செல்லாதாகலான் பரலோக கமனமும், விதேகமோட்சத்தின் றியாகமுங் கூடா. ஞானத்தினால் அஞ்ஞானம் நிவிர்த்தியாய்ப் பிராரத்த போகத்தி னநந்தரம் ஆதலால், சூட்சும சரீராகாரமான அஞ்ஞானம் சேதனத்தின்கண் லயமாவதே விதேக மோட்சமெனப்படும்; அஃது வசிய முண்டாகாநிற்கும். மூலாஞ்ஞானம் சேஷமா யிருக்குமாயின், அல்லது நஷ்டமான அஞ்ஞானம் மீண்டுற்பத்தியாமாயின் விதேகமோட்சம் இன்றாம்; அம்மூலாஞ்ஞானத்தின் விரோதியான ஞானமுண்டானபின், அஞ்ஞானம் சேஷமாக இருப்பதில்லை. பிரமாணத்தால் நாசமான வஞ்ஞானம் மீண்டுற் பத்தியாவது மில்லை; ஆதலால், விதேகமோட்ச மில்லாமற் போகாது. ஞானிக்கிச்சையானது கேவலம் பிராரத்தத்தாலுளதாம். எவ்வளவு சாமக்கிரிகளின் றிப்பிராரத்தபோக நகூடாதோ! அவ்வளவு சாமக்கிரிகளேயும் பிராரத்த முண்டு பண்ணுநிற்கும். இச்சையின்றிப் போகங்கூடாதாதலால் ஞானிக்கு இச்சையும் பிராரத்தத்தின்பயனும். அந்நியலோகத்தில் அல்லது, இந்தலோகத்தில் அந்நிய சரீரசம்பந்தம் ஞானிக்குப் பிராரத்தத்தினுலுளதாகாது; ஆகலின், முன் சங்கித்த சங்கை கூடாதென்க. சீவன்முத்திச் சுகத்திற்கு விரோதியான வர்த்தமான சரீரத்தில் அதிக போகங்களி லிச்சையோ! பிட்சை முதலியவைபோலச் சனகன் முதலியோர்க்குக் கூடும். ஈண்டிது இரகசியம்:—ஞானியிடத் துண்டாகும் வாகியப்பிரவிர்த்தி அவனது சீவன் முத்திக்கு விரோதியல்ல: சீவன்முத்தியின் விலட்சண சுகத்திற்கு விரோதியாம். என்னை? ஆன்மா நித்தியமுத்தமாம். அவித்தையினுற் பந்தம் பிரதீதியாகின்றது; எப்போது ஞானமுண்டாமோ! அப்போது அவித்தையினுற் பண்ணப்பட்ட பந்தப்பிராந்தி நஷ்டமாய்விடும். ஞானமுண்டானதன் பின்னே பந்தப்பிராந்தி யுண்டாகாது. சரீரசகிதனுக்குப் பந்தப்பிராந்தியினபாவமே சீவன்முத்தியெனப்படும். தேகாதிகளின் பிரவிர்த்தியிலாவது, நிவிர்த்தியிலாவது ஞானிக்குப் பந்தப்பிராந்தி ஆன்மாவின்கணுண்டாவதில்லை யாகலின் வாகியப்பிரவிர்த்தியினுற் சீவன் முத்தி அரமாகாது; ஆயினும், வாகியப் பிரவிர்த்தியில் சீவன் முத்தனுக்கு விலட்சண சுகமுண்டாகாது; ஏகாக்ரரூபமான அந்தக்கரண பரிணாமத்திலேயே சுகமுண்டாகா நிற்கும், அவ்வேகாக்கிர பரிணாமம் வாகியப் பிரவிர்த்தியி லுண்டாக மாட்டாதாகலின், "பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுபவிப்பன்" எ-ம் "வரியானும் வரனும்மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார்" என்றுங் கூறினர்.

சீவன்முத்தர் நால்வர்க்கும் ஞானம சமமாவதால் ஞானபலமான விதேக முத்தி சமமாமென்றும், சித்தவிசிராந்தி தாரதம்மியத்தால் சுகந் தாரதம்மியமா மென்றுங் கூறியதாம். (100)

[பிரஹ்மவித்துக்கள் வியவகாரத்தில் அஞ்ஞானிகட் கொப்பாயிருத்தலின், அவர்கட்குப் பிறவா நெறி யுறுமா றெதோ? வெனுங் கடாவுக்கு விடையாக அவ்விருவர்க்குமுள்ள கர்த்திருத்வ தாரதம்மியங் கூறுகின்றார்

பிரமஞா னிகளுஞ் கர்மப் பேதையர் போலவே வாழ்ந்தால்
திரமுறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்றால்
பரவுமா காச மொன்றிற் பற்றாது மற்றை நாலும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோரு மாவார். (101)

இ-ள். பிரமஞானிகளும்=பிரஹ்ம வித்துக்களும், கர்மப் பேதையர் போலவே வாழ்ந்தால்=(ஜநநவேதுவான அவித்தை, காம) கர்மங்களையுடைய அறிவீனரைப்போலவே (பிராரத்தத்திற்குத்தக்க பிரபஞ்ச வியவகாரங்களை யுடையர்களாய்ச்) சீவித்தால், திரம் உறும் அஞ்ஞானம் போய்=(கடத்தற்கரிய) வலிபொருந்திய அவித்தை, (காம, கர்மங்கள்) ஒழிந்து, செனியாத வழி=மீண்டு பிறவாதிருத்தற்குக் காரணம், ஏது என்றால்=யாதென்று கேட்பாயாகில், பரவும் ஆகாசம்=(வாயுவாதி பூதபௌதிகங்க ளனைத்திலும்) விரிந்திருக்கும் ஆகாசமானது, ஒன்றில் பற்றாது=ஒன்றிலுஞ் சம்பந்தியாமல், மற்றை நாலும்=ஏனைய (வாயுவாதி) நான்கு பூதங்களும், விரவின தோடும் கூடும் விதம்=தம்மோடு கலவாநிற்கும் பதார்த்தங்களோடுஞ் சம்பந்தியாநிற்குஞ் செயல்போல, இருவோரும் ஆவார்=ஞானி, அஞ்ஞானிகள் இருவரும் ஆவர்கள். எ-று.

ஞானிக்கு ஆன்மாவின்கண் வியவகாரம் பிரதீதியாகின்றதில்லை. சம்பூர்ணமான வியவகாரங்களும் தேகாதிகளின் ஆசிரிதமாகப் பிரதீதியாகின்றன. ஆன்மாவின்கண் வியவகார சகிதமான தேகாதிகளின் சம்பந்தம் இல்லையென்னும் புத்தியோடுகூடிச் சகல வியவகாரங்களையும் ஞானி செய்கின்றனன்; இக்காரணத்தால் ஞானியினுடைய பிரவிர்த்தியும் நிவிர்த்தியென்றே சொல்லப்பட்டிருக்கின்றது; இதனால் பிரஹ்மவித்து பிரபஞ்ச வியவகாரங்களுடையனாக அந்நியருக்குத் தோற்றினும், அவன் ஆன்மாவை ஆகாசம்போல அசங்கமாக அறிந்து பிராரத்தவலியாற் பிரபஞ்ச வியவகாரங்களைச் செய்தலால் ஜநநவேதுவான அவித்தை காம கர்மங்களொழிந்து முத்தியடையாநிற்பனென்றறிக. (101)

(139) [ஈசுரசேவையால் அதிர்ஷ்டபலமாத்திரமுளதாம்: குருசேவையால் * அதிர்ஷ்டபலம் † திர்ஷ்டபலம் இரண்டு முளவாம்; ஆகலின், முமுட்சுக்கள் ஈசுரனைப் பார்க்கிலுங் குருவினிடத்து அதிகமாகப் பக்திசெய்து ஜநநநிவிர்த்தி யுபாயம் பெறவேண்டு மாகலான், சீவன் முத்தர்களின் மகிமையை இங்கே கூறுகின்றார்.]

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம

* அதிர்ஷ்டபலம்=புண்ணியம். † திர்ஷ்டபலம்=உபதேசம்.

பாவன மாஞு ரென்று பழமறை முழங்கு மிப்பால்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய். (102)

இ-ள். சீவன் முத்தரை சேவித்தோர்=ஜீவன் முத்தர்களைச் சேவித்தவர்கள், சிவன் அயன் நெடுமால் ஆன மூவரும்=அரன், அயன், அரி என்னும் மூவரும், மகிழ=சந்தோஷிக்க, நோன்பு முழுவதும் செய்து=(கிருச்சிர சாந்தராயண முதலிய) தவங்களனைத்தையுங் குறைவறச்செய்து, சன்மபாவனம் ஆனூர் என்று=ஜநந பரிசுத்தமானவர்களாமென்று, பழமறை முழங்கும்=அநாதியான வேதங்கள் பிரதிபாதியாநிற்கும், இப்பால்=இனி, மேவரும் சீவன்முத்தர்=பொருந்துதற்கரிய சீவன்முத்தர் (அடையாநிற்கும்), விதேகமுத்தியும்=விதேக கைவல்யத்தையும், நீ கேளாய்=நீ கேட்பாயாக. எ-று.

ஜநநம் மலமாகலின், அதனது நிவிர்த்தியைப் "பாவநம்" என்ருர். "துவந்துவங்க டுய்மைசெய்து" என்ருற் போல. "ஜீவன்முத்தரைச்சேவித்தோர்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"போற்ற வணங்கப் பூசிக்கப் புகழ வருந்திப் போய்க்காண, வாற்ற வுரியோ னெவனவன் வன்பிறவி யறும்பேர்க் கனவாதஞ், சாற்று மகத்தாற் றீர்த்தத்தாற் றவத்தாற் ருனத் தாற்கிட்டா, வூற்ற வறிவாற் பிறவியறுத் துயர்ந்தோன் பத்தி தரும்பயனே."—

என வரும். மற்றும் வருவனவற்ருற் காண்க.

"மூவரு மகிழ" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"அதுலமா தவனே ரங்கைநீ ருணவா யரிமகி ழுரும்தவம் புரிந்தான்"—

என வரும். மற்றும் வருவனவற்ருற் காண்க.

"பழமறை முழங்கும்" எ-து, சசிவாணபோதம், முத்திகண்ட முதலிய சுருதியை. (102)

(140) [கன்மநிந்திரயவொழிபு கூறல்.]

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ ருக்கும்
கிஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராரத் தத்தின் வினையநு பவித்துத் தீரும். (103)

இ-ள். பஞ்சினை=பருத்திப்பஞ்சு முதலியவற்றை, ஊழித் தீப்போல்=வடவாமுகாக்கினி சார்ந்தால் எப்படி யெரித்து நீறெழப் பண்ணுமோ அதுபோல, பலசன்ம விவிதவித்து ஆம்=அநேகவித ஜநநங்கட்கு நாநாவித

பீஜங்களாகிய, சஞ்சிதம் எல்லாம்=சஞ்சிதகர்மங்களனைத்தையும், ஞானத் தழல்=ஞானக்கினியானது, சுட்டு வெண்ணீறு ஆக்கும்=எரித்துப் பஸ்மமாகப் பண்ணும், ஆகாமியம் தான்=ஆகாமிய கர்மமானது, கிஞ்சித்=அற்பமும், கிட்டாமல்=சம்பந்தியாமல், விட்டுப்போகும்=விட்டுப்போம், விஞ்சின=சேஷமான, பிராரத்தத்தின் வினை=பிராரத்த கர்மமானது, அநுபவித்துத் தீரும்=அநுபவித்துத் தொலையும். எ-று."

சஞ்சிதம், ஆகாமியம், பிராரத்தம் என்று கர்மங்கள் மூவகையாம்; அவற்றுள், சென்ற ஜநநங்களிற் செய்து பலத்தை ஆரம்பம் பண்ணாமலிருக்கிற கர்மம் சஞ்சிதமென்றும், இனி வரப்போகிற கர்மம் ஆகாமியமென்றும், சென்ற ஜநநங்களிற் செய்து வர்த்தமான ஜநநத்திற் கேதுவாயுள்ள கர்மம் பிராரத்த கர்மமென்றுஞ் சொல்லப்படும்; அவைகளில் சஞ்சிதகர்மம் ஞானத்தீயினால் நாசமாம். ஞானிக்கு ஆன்மாவின் கண்ணே கர்த்திருத்வாதி பிராந்தியில்லையாதலால், அவனுக்கு ஆகாமிய கர்மத்தின் சம்பந்தமில்லை. எப்பிராரத்த கர்மம் ஞானியின் சரீரத்தை ஆரம்பித்ததோ! அப்பிராரத்த கர்மமே சரீர ஸ்திதிக்கேதுவான பிட்சை முதலியவற்றிற் பிரவிர்த்திப்பியா நிற்கும்: பிராரத்த கர்மம் அநுபவியாமல் நாசமாகாது.

(141) சஞ்சிதாகாமிய கர்மங்களைப்போல ஞானிக்குப் பிராரத்தகர்மமுமிராதாதலால் போஜநாதிப் பிரவிர்த்தியும் ஞானிக்குப் பொருந்தாதென்று ஒரோவிடத்திற் கூறப்படும்; அதற்கபிப்பிராயம்; ஞானியின் திருஷ்டியால் ஆன்மாவில் கர்மம், அதனது பயன் இவைகளின் சம்பந்தமில்லை; இதனால், ஆன்மாவில் சகல கர்மங்களின் நிஷேதவபிப்பிராயத்தால் பிராரத்தத்தையும் நிஷேதித் திருக்கின்றது. ஞானத்திற்குப் பூருவஞ் செய்யப்பட்ட பிராரத்த போகம் ஞானியின் சரீரத்திற் குண்டாகாதென்னு மபிப்பிராயத்தால் பிராரத்தத்தை நிஷேதித்ததல்ல; ஆதலால், "விஞ்சின பிராரத்தத்தின் வினையநுபவித்துத் தீரும்" என்றார்.

(142) இதனால் ஓர் சங்கை யுண்டாகாநின்றது; அது எங்கே ஓர் கர்மமானது நாநா சரீரங்களை யாரம்பிக்கிறதா யிருக்குமோ! அங்கே அப்படிப்பட்ட கர்மத்தினாலுண்டான பிரதம சரீரத்தில் ஒருவனுக்கு ஞானமுண்டாமேல், அந்த ஞானிக்கு அந்நியசரீரப் பிராப்தியு முண்டாதல் வேண்டும். என்னை? பலத்தை யாதொன்றாரம்பித்ததோ! அது பிராரத்த மெனப்படும்; அஃதநுபவியாமல் நாசமாகாது. அநேக சரீரத்திற் கேதுவான ஓர் கர்மமானது யாதொரு பிரதம சரீரத்தை யுண்டாக்கிற்றோ அதில் ஞானமுண்டாயிற்று; ஞானத்தின் பின்னர் அக்கர்மத்தின் பயனாக அந்நிய சரீரம் சேஷமாக விருக்கின்றதாகலான் ஞானிக்கும் அந்நிய சரீரப்பிராப்தி யுண்டாதல் வேண்டும். பிராரத்தகர்மத்தின் பயனாக எவ்வளவு சரீரமுண்டாகுமோ அவ்வளவு சரீரம் ஞானிக்குண்டாகும்: பிராரத்த போகத்தினும் அதிகமாக வுண்டாகாது. ஆதலால், ஞானமும் சபலமாமென்னின்? அது கூடாது. என்னை? ஞானியினுடைய பிராணன் அந்நியலோகத்தில் அல்லது, இந்த லோகத்தில், அந்நிய சரீரத்திற் செல்லாது, பின்னையோ வெனின்? அந்த ஸ்தானத்தி

லேயே அந்தக்கரணம், இந்திரியம் இவைகளோடுகூட லீனமாமென்று வேத முரசறையாநின்றது. பிராணன் செல்லாமல் அந்நிய சரீரத்தின் பிராப்தி கூடாதாதலால், ஞானிக்குப் பிராரத்த சேஷத்தால் வேறே சரீரமுண்டாகா நிற்குமென்று சொல்லுதல் கூடாது. மற்றென்னேனின்? எங்கே அநேக சரீரத்தி னாரம்பகமாக ஓர் கருமமிருக்குமோ அங்கே அந்தமான சரீரத்தி லேயே ஞானமுண்டாகும்: பூருவ சரீரங்களில் ஞானமுண்டாகமாட்டாது. என்னை? அநேக சரீரங்களி னாரம்பகமான பிராரத்தமே ஞானத்திற்குப் பிரதி பந்தகமாம். விஷயாசக்தி, பிரஞ்ஞாமந்தம், பேதவாதி வசனத்தில் விசுவா சம் ஆகிய இவை ஞானத்திற்கு எப்படிப் பிரதிபந்தகமோ அப்படி விலட் சணமான பிராரத்தமும் ஞானத்திற்குப் பிரதிபந்தகமாம்; எங்கே ஞானத் தின் பிரதிபந்தக மிருந்து ஞானசாதனமான சிரவணாதிக ளிருக்குமோ அங்கே பிரதிபந்தகம் நிவிர்த்தியாமாயின் பிரதம ஜநநத்திற்செய்த சிரவணாதி களாலே அந்நிய சரீரத்தில் ஞானமுண்டாகும். எப்படி யெனின்? வாம தேவர் பூர்வ ஜன்மத்திற் சிரவணாதிகள் செய்துவந்தனர். அப்போது பிராரத் தத்தின் பயனான ஓர் சரீரம் சேஷமிருந்ததால் ஞானமுண்டாகவில்லை, பின்னையெப்போ துண்டாயிற்றெனின்? சிரவணாதிகள் செய்துவரு வர்த்த மான சரீரம் விழுந்து அந்நிய சரீரத்தை யடைந்ததால் பூர்வ ஜன்மத்திற் செய்துவந்த சிரவணாதிகளால் கர்ப்பத்தின் கண்ணேயே ஞான முண்டா யிற்று; ஆதலால், ஞானத்திற்குப் பின்னர் அந்நிய சரீர சம்பந்த முண்டாகா தென்றறிக. (103)

(143) [ஞானியை இகழாமற் பூஜிக்கவேண்டு மென்பதற்குக் காரணங் கூறுகின்றார்.]

பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்குநாட் செய்யுங் கர்மம்
மறுமையிற் றொடர்ந்தி டாமல் மாண்டுபோம் வழியே தென்றால்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள் வாரே. (104)

இ-ள். பொறுமையால் = * திதிட்சையால், பிராரத்தத்தை=பிரா ரத்த பயனான சுகதுக்காதிகளை, மறுமையில்=சீவன் முத்தித்தசையில், புசிக் கும் நாள்=அநுபவிக்குங் காலையில், செய்யும் கர்மம்=சீவன் முத்தர் (சரீரா திகளாற்) செய்யாநிற்கும் (புண்ணிய பாவரூபமான) கர்மங்கள், தொடர்ந் திடாமல்=அவரைத் தொடராமல், மாண்டுபோம் வழி=இறந்துபோகு பாதகம், ஏது என்றால்=யாதென்று சங்கிக்கில், சிறியவர் இகழ்ந்து=அறி வின்மையோர் (தோஷ திருஷ்டியால்) நிந்தித்து, ஞானிசெய்த பாவத்தை= அசீவன் முத்தர் தேகத்தினாற் செய்த பாவங்களை, கொள்வார்=ஏற்றுக் கொள்ளுவர், அறிவுளோர்=அறிவுடையோர், அறிந்து பூசித்து=("பிரஹ்ம வித்து பிரஹ்மமே" என்னும் சுருதி வாக்கின்படி ஞானியைப் பிரஹ்ம

* திதிட்சை=சுகதுக்கங்களை ஒப்பக்காண்டல்,

சொரூபமென்று) அறிந்து (மனவாக்குக் காயங்களால்) ஆராதித்து, அறம் எலாம்=புண்ணியகக ளனைத்தையும், கைக்கொள்வார்=ஏற்றுக் கொள்ளு வார். எ - று.

சீவன் முத்தர்க்கு மறுபிறப் பின்றென்று வேதம் முரசறைதலின், "மறுமை" என்றதைச் சீவன்முத்தித் தசை என்றும். (104)

(144) [இனி விதேகமுத்தியி னியல்பு கூறல்.]

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ றாகும்
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் குமச ரீர முலையிரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே. (105)

இ - ள். அரிய=துர்லபமான, மெய்ஞ்ஞானத் தீயால்=தத்துவ ஞான மாகிய அக்கினியால், அவித்தை ஆம் உடல்=அவித்தையாகிய காரண தேகம், நீறு ஆகும்=வெந்து நீறாய்விடும், பெரிய தூலமும்=கனமான தூல தேகமும், † காலத்தால்=அதற்கு நியமித்தகாலத்தில், பிணம் ஆகிவிழும்= சவமாய் வீழாநிற்கும், அந்நேரம்=அப்பொழுது, உரிய சூக்கும சரீரம்=உரி மையாகிய சூட்சுமதேகமானது, உலை இரும்பு உண்ட நீர்போல்=கொல்லு லையில் (காய்ந்த) இரும்புண்ட நீர்போல், துரியம் ஆய்=துரியமாயும், விபு ஆய்=பூரணமாயும, நின்ற=(என்றும்) நிற்கின்ற, சொரூபத்தில்=சொரூப த்தின்கண்ணே, இறந்து போம்=லீனமாம். எ - று.

"காலத்தால்" எ - து, உருபு மயக்கம். "உரிய" எ - து, தூலதேகங் களைப்போல லிங்கதேகமும் அநேகமாய் வந்து வந்து நாசமாவன வன் மையை. "உலையிரும் புண்ட நீர்போல்" எ - து, மீண்டு ஜநியாமைக்கு உவமானம். தூல, சூட்சும, காரண தேகங்களின் அபிமானிகளான விசுவ, தைஜஸ, பிராஞ்ஞர்கட்குச் சாட்சியாய் நான்காம் பொருளாதலால் சொரூ பம் "துரியம்." தேசகால வஸ்துக்களைக் கடந்த பொருளாதலால், "விபு" ஞானியினுடைய பிராணன் வெளியிற் கமனமாகாதென்னும் சுருதியால், "சொரூபத்தி லிறந்துபோம்" என்றார். (105)

[இதுவுமது.]

கடமெனு முபாதி போனாற் ககனமொன் றானாற் போல
உடலெனு முபாதி போன வுத்தமர் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றாம். (106)

இ - ள். கடம் எனும் உபாதிபோனால்=கடமாகிய உபாதியானது அபாவமாயின், ககனம் ஒன்று ஆனால் போல=கடாகாசமானது (மகா

† காலம்=பிராரத்தபோகாநந்தரம்.

காசத்தோடு)' ஏகமாவதுபோல, உடல் எனும் உபாதி=சரீர (த்திரய) மாகிய வுபாதிகள், போன உத்தரம்=நீங்கின உத்தரட்சணம், சீவன் முத்தர்=சீவன்முத்தர்கள், அடி முடி நடுவும் இன்றி=ஆதியும், அந்தமும், மத்தியுமில்லாமல், அகம் புறம் இன்றி=உள்ளும் புறம்புமில்லாமல், நின்ற படி திகழ்=(தான்) இருந்தபடியே விளங்காநின்ற விதேகமுத்தி பதம் அடைந்து=விதேக கைவல்லியமாகிய பதத்தைப்பெற்று, என்றும் இருப்பர்=(சதா அவ்வண்ணமே) இருப்பர். எ - று.

பூரணமாதலினானும், அமூர்த்தமாதலினானும், "அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி" என்றார். "நின்றபடி திகழ் விதேக முத்திப் பதம்' என்றதை.

"சகமாய் நின்றும் புராதனமா மொருமையினிற் பிரியாதாகும் பூரணசின் மாத்திரமாம் பொருளே சொன்னாய்."—

என்ற வாசிட்டப் பிரமாணங்கொண்டு யூகித்துணர்க.

(145) ஞானியின் சரீரத்தியாகத்தில் காலதேச ஆசனாதி விசேஷங்களின் அபேட்சையில்லை. அவன் தேகம் உத்தராயணத்தில் விழுமாயினும் வீழ்க, அல்லது தெட்சணாயனத்தில் விழுமாயினும் வீழ்க, காசி முதலிய புநித தேசத்தில் விழுமாயினும் வீழ்க, அத்தியந்த மலின தேசத்தில் விழுமாயினும் வீழ்க, சவவாசனத்தினின்றும் விழுமாயினும் வீழ்க, சித்தாசனத்தினின்றும் விழுமாயினும் வீழ்க, சாவதானமாகப் பிரஹ்மசிந்தனை செய்துகொண்டு வீழினும் வீழ்க,ரோகவியாகூலத்தால் ஆஹாவென்று புலம்பிக்கொண்டு வீழினும் வீழ்க, சர்வதா அவன் முத்தனாம். என்னை? எக்காலத்தில் ஞானத்தினால் அஞ்ஞானம் நிவிர்த்தியாயிற்றோ! அக்காலத்திலேயே ஞானி முத்தனாம்; அதனால், ஞானிக்கு விதேக மோட்சத்தில் தேசகால ஆசனாதிகளி னபேட்சையில்லை. எப்படி ஞானிக்குத் தேகபாதத்தில் தேசகாலாதிகளி னபேட்சையில்லையோ! அப்படியே ஞானநிமித்தமான சிரவணத்திலும் தேசகாலாதிகளி னபேட்சை யில்லை.

(146) உபாசகர்க்குத் தேசகாலாதிகளி னபேட்சையுண்டு. எப்படியும் பீஷ்மாதியர் ஞானியென்று சொல்லப்பட்டிருக்கின்றனர். பீஷ்மர் உத்தராயணமன்றிப் பிராணத்தியாகஞ் செய்யவில்லை; அப்படியாயினும் பீஷ்மாதியர் அதிகாரி புருஷராதலால், உபாசகர்களின் உபதேச நிமித்தம் அவர் காலவிசேஷத்தை யபேட்சித்தனர். வசிட்ட பீஷ்மாதியர் அதிகாரிக ளாதலாலே அவர்கட்கு அநேக ஜன்ம முளவாம்; என்னை? அதிகாரி புருஷருக்கு ஓர் கற்பபரியந்தம் பிராரத்த மிருக்கும்: கற்பத்தினந்தத்தன்றி விதேக மோட்சம் உண்டாகாது. கற்பத்தினிடையில் அவர்கட்கு இச்சையின் வலியால் நாநா சரீரமுண்டாகும்; அப்படியாயினும் ஆன்மசொரூபத்தின்கண் அவர்க்கு ஜன்ம மரணப் பிராந்தி யுண்டாவதில்லை. ஆகலின், சீவன் முத்தராம்; அவ்வதிகாரி புருஷரின் வியவகார முழுவதும் அந்நியரினுபதேச நிமித்தமாம். ஞானியின் வியவகாரத்தில் அந்நியமாக ஓர் நியமமுமில்லை; இவ்

வபிப்பிராயத்தால், ஞானியின் தேகபாதத்திற்குத் தேசகால ஆசனுதிக ளொன்றுஞ்சொல்லாமல், "பேரியதூ லழங்கா லத்தாற் பிணமாகிவிழும்" என்றார்.

(147) " சூக்குமந் தனது காரண மடையத் தூலமிங் ககன் றதே யென்றாற், சூக்குமந் தனது காரணம்'விடுத்துத் தூலமொன் றெடுத்ததென் றுணர்வாய்."—

என்று சுத்தசாதகத்தில் ஸ்ரீ-குமாரதேவ சுவாமிகள் அருளிச்செய் திருப்பதால், "பேரியதூ லழங்கா லத்தாற் பிணமாக் விழும்" என்று இவ் வாசிரியரருளிய விதேக கைவல்லியத்தி னிலக்கணம் அசங்கதமாகாதோ வெனின்:—

" காலமே காரணமாய்க் குடும்ப வாழ்விற் காதலொழித்தறச் செறிந்த காயந் தன்னைச், சாலமிகு தொழிற்பறவைக் கிடமாங் கூட் டைச் சானவியின் கரைவரையிற் றானே தீர்ந்தான், கோலியொரு சுமைசுமப்பான் குறித்த வெல்லைக் கொண்டுபோய்ப் போடுவபோற் குரம்பை போட்டு,மாலுறு பற்றென்றின்றிப் பூவி னுற்றம் வானுறல் போற் பரமபத வாழ்வுபெற்றான்."—எ-ம்,

விகற்ப மிறந்தவராய், நிர்விகாரராய், அபிராமரராய், சகலமல விலாசங் களினுலே யுண்டாயிருக்கிற உபாதி விநிர்முத்தராகிய உத்தாலகரானவர், யாதொரு சுகத்திலே இந்திரனது சுகமும் சமுத்திரத்திற் றிரணம்போல அற்பமாய்விடுமோ! அப்படிப்பட்ட இரணியகர்ப்பாந்த சுகங்களுந் தாழ்ந்தன வாகத் தான் அவற்றிற்கு ஆதியாயும், அண்டபேதங்களால் அநந்தமாயுள்ள வாகாசங்களை உதரத்தில் வைத்திருக்குந் திக்குகளை வியாபித்ததாயும், பூரண மாயும், சகலபுவனங்களையுந் தரித்திருக்கிற சுபாவத்தை யுடையதாயும், பாக் கியவான்களா லடையத்தக்கதாயும்,சத்தியமாயும், ஆநந்தமாயும், அநந்தமாயு முள்ள வாசாமகோசர பரமசுகத்தை யடைந்து அசசுகவடிவாயினார்; அவரு டைய மனம் ஸ்வச்சரூபமான பதத்தை யடைந்தவுடன் அவர் சரீரம் அவ்வ ரைமீது ஆறுமாதஞ் சூரியகிரணத்தா லுலர்த்தப்பட்டதாய்க் காற்றினாலுண் டாகாநிற்குந் தொனியால் பருவதமாகிய புருஷனுக்குச் சிறு செடிகளாகிற கைகளால் வாசிக்கத்தக்க நரம்புகளாகிய தந்திகளோடுகூடிய வீணையாயிற்று. மேற்சொல்லிய ஆறுமாதத்திற்குப்பின், அப்பருவதத்தில் ஆகாசத்தினின் றும் இறங்கியுற்ற பிராமி முதலிய சப்தமாதர்களுள் சகல தேவர்களாலும் பூஜிக்கத்தக்க தேவிதேவியாகிய சாமுண்டி யென்பவள் சூரியகிரணத்தா லுலர்ந்துள்ள அவ்வுத்தாலகரது கங்காளத்தைச் சீக்கிரத்திலெடுத்துத் தனது மகுடத்தின்மீது பூஷணமாகச் சூடிக்கொண்டனள் என்றும் சர்வஞ்ஞரிஷி யாகிய ஸ்ரீ-வான்மீக பகவான் ஞானவாசிட்டத்தில் அருளிச்செய்திருப்ப தால் இவ்வாசிரியர் கூறிய விதேககைவல்லிய விலக்கணம் அசங்கதமாகாது; அன்றியும் பிரபுலிங்கலீலையில்,

"அழிவி லானை யழிந்தன னென்றுநீ
விழியி னுன்மிக வெள்ளம்பெ ருக்கினை
கழிவி லாதவா காயங் கழிந்ததென்
றொழிவி லாம லுளமெலி வார்கள்போல்."—எ-ம்,

"சச்சி தாநந்த சங்கா ருகவே
யச்ச நீங்குபு தன்னை யறிந்தவன்
றச்ச மாந்துயர்த் தோன்மலி யாக்கையை
யிச்சி யானதை யானென வெண்ணியே".—எ-ம்,

"ஒண்ட ரைக்கண் ணொடிவி லருளருக்
கொண்ட டுத்த குருவரு ளாற்றன்னைக்
கண்ட மெய்த்தவன் காயந்த னையந
முண்ட நெட்டிலை யொப்ப விடுப்பனால்."—எ-ம்,

பிரபுதேவர் அருளிச்செய்திருப்பதாலும் இவர் அருளியது அசங்கத மாகாது. ஸ்ரீ-குமாரதேவசுவாமிகள் சுத்தசாதகத்தில் அருளியதோ! "உவக்கும்வீடே யெவ்வளவிற்றுலக நடையே யுயர்ந்தது" என்னும் ஸ்தூலதிருஷ்டி யுடையோர்க்கு முத்தியின்கண் விருப்பமுண்டாக்குவித்தற் பொருட்டேயாம்; அங்ஙனமன்றிச் சித்தாந்தமாமேல், பிரபல சுருதியான வாசிட்டத்திற்கு அது விருத்தமாம்; அன்றியும் வாசிட்டத்தில்,

"பற்று முனிவு பயஞ்சுகங்கள் பயிலா னெனினும் பயின்றிடினுஞ், சொற்ற வெவர்க்கும் பிரமேயந் தொடரா னெனினு நன்பாலர், பெற்ற பிரமே யத்துறினும் பெரிய மனத்தோன் காசியிற்சா, வுற்ற பொழுது நாய்க்கெரிப்போ ருமைசா வுறினு முறும்பதங் கேள்."—எ-ம்,

"ஞான மடைந்த பொழுதிலிவ னல்வீ டுற்றோன் மனமிறந்தோ
னீன மான வகம்பாவப் பிராந்தி யன்றோ விடர்பந்த
மான வீடா வதுமடமை யந்த கார கெடலன்றோ
மான மிகுந்த விவனெய்தின் மனிதர் பூசை செயவேண்டும்."—எ-ம்

கூறியிருப்பதால் தூலதேகம் வீழ்வதும், வீழாமற் போவதும் பந்த மோட்சமல்ல; ஆதலால்,

"சூக்குமந்தனது காரணமடையத் தூலமிங் ககன்றதே யென்றால்"—

என்னும் சுத்தசாதகம் ஸ்துதியர்த்தவாதமாம். ஞானவாசிட்டக் கருத்தின்படியே பூஜ்யபாதரான ஸ்ரீ-சங்கரபகவத் பாதாசாரியரும் விவேக சூடாமணியி லருளிச்செய்திருப்பது காண்க. திருமந்திரத்தில்,

ஞைகந ந்தீயினில்
வெந்திடி னுடெலாம் வெப்புத் தீயினி
னெந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே.''—எ-ம்,

"எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடி
லண்ணறங் கோயி லழலிட்ட தாங்கொக்கு
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமா
மெண்ணரு மன்ன ரிழப்பா ரரசே.''—எ-ம்,

"புண்ணிய மாமவா தமமைப புதைபபது
நண்ணி யனல்போக்கி னட்டி லழிவாகு
மண்ணி லறியி லலங்கார பங்கமா
மண்ணுல கெல்லா மயங்குமனன் மண்டிபே.''—எ-ம்,

"அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கா
லந்த வுடருன் குகைசெய் திருத்திடிற்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரு
மநதமி லின்ப வருள் பெறுவாரே.''—எ-ம்,

அருளிச் செய்திருப்பதானும், "பெரியதூ லமுங்கா லத்தாற்பிணமாகி விழும் என்று இவ்வாசிரியரருளிய விதேக கைவல்லிய விலக்கணம் அசங்க தமாகாது. "உரியசூக் குமசரீர முலையிநும் புண்டநீர்போற் றுரியமாய் விபு வாய் நின்ற சொருபத்தி லிறந்து போம்'' என்று உலைபிரும்புண்ட நீரை உப மானமாகக் காட்டினது இவ்வாறெழும் ஆசங்கையைத் தொலைவித்தற் பொருட்டேயாமென்க. (106)

(148) [பிரஷ்மப் பிராப்தியானது கிராமாந்தரப் பிராப்தி போலல்ல, கண்டசாமீகர நியாயம்போலப் பிராப்தப் பிராப் தியாமென்று சொல்லுகின்றர்.]

சொல்லியமகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கெல்லிய பின்பு தோன்றுங் கிணற்றினு காசம் போலே
ஒல்லையாம் பிரமநூலா லுற்றது போலே தோன்றும்
எல்லையி னுமெப் போது மேகமென் றிருந்து வாழ்வாய். (107)

இ-ள். சொல்லிய மகனே=("நீ நானென் றிரண்டிலாமல் நிறைந்த பூரணமா யெங்கும், நீானுகத் தெளிந்த ஞானம்'' என்று முன்னே பிரஹ்மா நுபவங்) கூறியமைந்தா, எங்கும் சூழ் வெளி இருக்க=எவ்விடத்தும் நிறைந் துள்ள ஆகாசம் தானிருந்தபடியே யிருக்க, மண்ணைக் கெல்லிய பின்பு= பூமியை அகழ்ந்த பின்னர், தோன்றும்=(ஆகாசம் பூரணமென்னும் ஞான

மின்மையனுக்கு நூதனமாக அப்போதுண்டானதுபோலத்) தோன்றுகின்ற, கிணற்றின் ஆகாசம்போல—கூபாகாசம்போலும், ஒல்லை ஆம் பிரஹ்மம்—ஏற்கெனவே சித்தமாயுள்ள பிரஹ்மம், நூலால்—(குருவுபதேசத்தாலும்,) சாஸ்திர விசாரத்தாலும், உற்றதுபோலே தோன்றும்—(அப்போது நூதனமாக) அடையப்பட்டதுபோலவே தோன்றாநிற்கும், (அங்ஙனந் தோற்றினும் அது வாஸ்தவமன்மையின்), எல்லையில் நாம்—அளவிறந்த (வியாபகமான பிரத்தியகபின்ன பிரஹ்மமாகிய) நாம், எப்போதும்—இதற்கு முன்னும், ஏகம் என்று—அகண்டைகரசப் பிரஹ்மமேயென்று, இருந்து வாழ்வாய்—இவ்வண்ண மிருந்து வாழ்வாயாக. எ - று.

“நூலால்” என்னினும்,

“பெரியமாயை காரணமாம், பொருளன்றாயுங் குருவாக்கார் புகலும் பொருளாய்க் காரணமாய், மருவுமுணர்வாம் நன்னுருவை வழுவா தளிக்கு முணர்வோர்க்கே.”—

என்னும் சுருதியால் குருவுபதேசம் வருவித்தாம். கூவந்தொடற்கு முன்னுங் கூவாகாசம் இருப்பதுபோல விசாரத்திற்கு முன்னும் பிரஹ்மத்வம் சித்தமாகலின், “எல்லையினு மெப்போது மேகமென்றிருந்து வாழ்வாய்” என்றார். இவ்வாசிரியர் கூறினவாறே வாசிட்டத்தில்,

“குருவின்வல்லப விளக்கத்தாற் கண்டன மௌனவீண் நானு நீதானுங்கண்டன பரம்பொருட் பொலிவே.”—

என்றருளிச் செய்திருப்பது காண்க. (107)

[கூறிப்போந்த படலத்தின் சாரார்த்தத்தைத் தொகுத்து விசேஷித்து நம்புதற்பொருட்டுச் சபதத்தோடுங் கூறுகின்றார்.]

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்கனவூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந் தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே யுன்னை நம்மாணை மறந்தி டாதே. (108)

இ - ள். கானல் நீரில்—கானலிற் சலம்போலும், கிளிஞ்சில் வெள்ளியில்—சுத்தியில் இரஜதம்போலும், கந்தர்ப்ப நகரில்—கந்தர்வ நகரம்போலும், கனவூரில்—சொப்பன நகரம்போலும், வானம் மையில்—ஆகாசத்தில் நீலநிறம்போலும், கயிற்றில் பாம்பில்—இரச்சுவிற் சர்ப்பம்போலும், மலடிசேயில்—வந்தியாசுதன்போலும், முயலின் கோட்டில்—சச விஷாணம்போலும், பீனம் ஆம்—பருமையான, தறிபுமானில்—தாணுவிற் புருஷன்போலும், பிரபஞ்சம் எல்லாம்—(அகங்காராதிப்) பிரபஞ்சமனைத்தும், பொய்—மித்தை, ஞானமே—பிரஞ்ஞானகனப்பிரஹ்மமே, மெய்—சத்தியம், மகனே—மைந்தா, உன்னை—இத்தன்மையான உனது ஆன்மாவை, நம் ஆணை—நம் மேலாணை, மறந்திடாதே—நீ மறவாதே. எ - று.

எகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. இல் என்னும் ஐந்தனுருபு எண்ணுப்பொருடொறுங் கூட்டப்பட்டது. சிவோகமென்னும் அநுபூதியினாற் றன்னோடொத்தமையின், "நம்மாணை" என்றார். "பிரபஞ்சமெல்லாம் பொய்யே, ஞானமெய்" எ-கு, உ-ம், பட்டினத்துப்பிள்ளையார் திருக்கழுமல மும்மணிக்கோவை,

"எந்தைநின்
றிருவளர் நாட்டங் கருணையிற் பெறலும்
யானையு மெனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற வெழுதிய
சிற்ப விகற்ப மெல்லா மொன்றிற்
றவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே."

என வரும். மற்றும் வருவனவற்றுட் காண்க. (108)

மூலமாவது,
தத்துவவிளக்கப்படலம்
முற்றிற்று.

படலம், 1-க்கு செய்யுள் - 108.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது,

சந்தேகந்தெளிதற்படலம்.

[“ஐயம்போ லாநந்தை யுண்டோ” என்று வாசிட்டத்தும், “ஐயந்தவிர்த்து நிலைத்தவாசகலு மூர்த்தியருள்பவன் விகிர்தருவாம்” என்று வேதாந்த சூடாமணியினுங் கூறியிருத்தலால் ஐயமறுப்பது ஆசிரியர்க் கவசிய கடமையாகலின் ஈண்டுச் * சந்தேகந் தெளிதற்படலங் கூறத் தொடங்கினர்.]

சமுசயம் ஓர் விசேஷியத்தில் விருத்தமான இரண்டு விசேஷண ஞானமாம்; தனதபாவாதி கரணத்திலவ பாசமாவதால் இதனைப் பிரம [ஞாதி]ம் என்பர்.

(149) சமுசயரூபப் பிரம [ஞாதி]மும் பிரமாண சமுசயம், பிரமேய சமுசயம் என இருவகைத்து. பிரமாண கோசர சந்தேகம் பிரமாண சமுசயமெனப்படும்; அதனையே பிரமாணகத அசம்பாவனை யென்பர். வேதாந்தவாக்கியம் அத்துவிதீயப் பிரஹ்மத்தின் கண்ணே பிரமாணமாகவுண்டோ! இல்லையோ என்பது பிரமாண சமுசயம்; அதனது நிவிர்த்தி சாரீரகத்தின் பிரதமாத்தியாயத்தின் படனத்தால் அல்லது, சிரவணத்தாலுளதாம். பிரமேய சமுசயமும் ஆன்மசமுசய, அநான்ம சமுசயபேதத்தால் இருவகைத்து. அநான்ம சமுசயம் அநந்தவிதம்; அவற்றை விரிப்பதாற் பயனின்று. ஆன்ம சமுசயமும் அநேக பிரகாரமாம்; அவை ஆன்மா பிரஹ்மத்தோடு அபின்னமோ! அல்லது பின்னமோ, அபின்னமாயினும் சர்வதா அபின்னமோ! அல்லது, மோட்சகாலத்திலே தான் அபின்னமோ, சர்வதா அபின்னமாயினும் ஆநந்தாதி ஐசுவரியவானோ! ஆநந்தாதி ரகிதனோ, ஆநந்தாதி ஐசுவரியவானாயினும் ஆநந்தாதிகள் குணமோ! பிரஹ்மான்மாவின் சொரூபமோ என இவை முதலாகத் தற்பதார்த்தத்திற்கு அபின்னமான துவம்பதார்த்தத்தில் அநேக பிரகாரமான சமுசயங்களுளவாம். அப்படியே கேவலம் துவம்பதார்த்த கோசர சமுசயமும் ஆன்மகோசர சமுசயமேயாம்; அது ஆன்மா தேகாதிகளின் பின்னமோ! பின்னமல்லவோ, பின்னமெனினும் அணுரூபமோ! மத்திம பரிமாணமோ!, விபுப்பரிமாணமோ, விபுப்பரிமாணமெனினும் கர்த்

* “சந்தேகம்”=ஐயம், சமுசயம் என்பன ஒருபொருட் கிளவிகள். “தெளிதல்”=நிவிர்த்தி.

தாவோ! அகர்த்தாவோ, அகர்த்தாவெனினும் பரஸ்பரம் பின்னமாக அநேகமோ! அல்லது, ஏகமோ என இவ்வாறு அநேக சமுசயங்கள் கேவலம் துவம்பதார்த்த கோசரமாக வுளவாம். அப்படியே கேவலம் தற்பதார்த்த கோசரமாகவும் அநேக பிரகாரமான சமுசயங்களுள; அவை ஈசுரன் வைகுண்டாதி லோக விசேஷத்தில் வசிக்கும் பரிச்சின்ன அஸ்தபாதாதி அவயவத்தோடு கூடிய சரீரியோ! அல்லது, சரீரம் இன்மையனன விபுவோ, சரீரமின்மையனன விபுவாயினும் சகத்துக்குப் பரமாணுவாதிகளை அபேட்சித்த கர்த்தாவோ! அவைகளை அபேட்சியாத கர்த்தாவோ, பரமாணுவாதிகளை அபேட்சியாத கர்த்தாவெனினும் கேவலம் கர்த்தாவோ! அபின்ன நிமித்தோபாதானரூப கர்த்தாவோ, அபின்ன நிமித்தோபாதானரூப கர்த்தாவெனினும் பிராணிகளின் கருமங்களை அபேட்சியாத கர்த்தாவாய் விஷமகாரிதை முதலிய தோஷமுடையனோ! பிராணிகளின் கருமங்களை அபேட்சித்த கர்த்தாவாய் விஷமகாரிதை முதலிய தோஷரகிதனோ என இவை முதலிய அநேக பிரகாரமாகத் தற்பதார்த்த கோசர சமுசயமுளவாம்; அச்சமுசயங்கள் யாவும் பிரமேய சமுசயமெனப்படும்; அவைகளின் நிவிர்த்தி மனனத்தினாலுளவாம்; சாரீரகத்தின் இரண்டாம் அத்தியாயத்தின் அத்தியயனத்தினால், அல்லது சிரவணத்தினால் மனனம் சித்தியாநிற்கும்; அதனால் பிரமேய சமுசயம் நிவிர்த்தியாம்.

ஞானசாதன சமுசயமும், மோட்சசாதன சமுசயமும் பிரமேய சமுசயமாம். என்னை? பிரமாவின் விஷயத்தைப் பிரமேயமென்பர். ஞானசாதன, மோட்ச சாதனங்களும் பிரமாவுக்கு விஷயமாகலின் பிரமேயமாம்; ஆதலால், ஞானசாதன சமுசயமும், மோட்சசாதன சமுசயமும் பிரமேய சமுசயமெனப்படும்; அவைகள் சாரீரகத்தின் மூன்றாம் அத்தியாயத்தால் நிவிர்த்தியாம். அப்படியே மோட்ச சொரூபத்தின் சமுசயம் பிரமேய சமுசயமேயாம்; அது சாரீரகத்தின் நான்காம் அத்தியாயத்தால் நிவிர்த்தியாம். சாரீரகத்தின் நான்காம் அத்தியாயத்திலே முன்னர் சாதன விசாரமும், பின்னர் பல விசாரமும் உள்ளனவாயினும் நான்காம் அத்தியாயத்தில் சாதன விசாரம் எவ்வளவினுண்டோ! அவ்வளவு நான்காம் அத்தியாயத்தோடுகூட மூன்றாம் அத்தியாயத்தாற் சாதன சமுசயம் நிவிர்த்தியாம்: சேஷமான நான்காம் அத்தியாயத்தால் பல சமுசய நிவிர்த்தியாம். [மோட்சத்தைப் பலம் எனபர்; பலமெனினும் பயனெனினும் ஒக்கும்.] இந்தப்படி விருத்திப் பிரபாகர காரத்திற் கூறியிருக்கின்றது; இச்சமுசயங்களை இப்படலத்தில் வாராநிற்கும் அவ்வவ்விடங்களிற் காட்டுதும்; ஆங்காங்குணர்க.

[இனி நூலிற் புகுதல்.]

நரர்குழி பதித்து வெள்ள நாட்டிய நெடிய கம்பம்
உரமுறக் குத்திக் குத்தி யுறைப்பிக்கு முபாயம் போலே
பரமசிற் சொரூபந் தன்னிற் பற்றிய மனோவி ருத்தி
திரமிலை பெறச்சந் தேகந் தெளிதலை மொழிகின் றேனே. (1)

இ - ள். நரர்=(உலகில்) மநுடர், குழிபறித்து=குழி தோண்டி, மெள்ள நாட்டிய=மெள்ள அதில் நிறுத்திய, நெடிய கம்பம்=நீண்ட ஸ்தம்பமானது, உரம் உற=(அசையாமல்) வலிபடையும் பொருட்டு, குத்திக் குத்தி=கெட்டித்துக் கெட்டித்து, உறைப்பிக்கும்=பலப்படுத்தாநிற்கும், உபாயம்போலே=தந்திரம்போலவே (*"ஸ்தாணுகநந ந்யாயம்" போலேயென்றபடி), பரம சிற்சொரூபந் தன்னில்=சர்வோத்கிருஷ்டமான சிதானந்த சொரூபத்தில், பற்றிய மனோவிருத்தி=(அபேதமாகப்) பொருந்திய(அகண்டாகாரமான)அந்தக்கரணத்தின் விருத்தி, திரநிலைபெற=(அநன்யகமனமாய்) நிச்சலமாக நிற்றற்பொருட்டு, சந்தேகம் தெளிதலை=சந்தேகந்தெளிதற் படலத்தை, மொழி கின்றேன்=இப்போது கூறுகின்றேன். எ - று. (1)

[சீடன் குருவை யநுசரித்திருந்த திறங் கூறுகின்றது.]

நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி நின்றோன்
மர்க்கட நியாயம் போலே மகாபூத விகாரந் தொட்டு
நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவி டாமற் சந்தத மநுச ரித்தான் (2)

இ - ள். நற்கருத்து உடையோன் ஆகி=சத்துவமான அந்தக் கரணத்தை யுடையவனாய், (அதனால்) ஞானவான் ஆகி=(பிரஹ்மான்மைக்கிய) ஞானமுடையவனாய், நின்றோன்=நின்ற சீடன், மர்க்கட நியாயம்போலே =(†"மார்ச்சால நியாயம்" போலாது,) ‡"மர்க்கட நியாயம்" போலவே, மகாபூத விகாரந்தொட்டு=பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களின் காரியமான தூலதேகந்தொடுத்து, நிர்க்குண விதேக முத்தி நிலை பரியந்தம்=சத்துவ குணமுமிறந்த விதேக கைவல்யம்வரையும், சொன்ன=உபதேசித்தருளிய, சற்குருவினை விடாமல்=சற்குருவைவிட்டு நீங்காமல், சந்ததம்=எப்பொழுதும். § அநுசரித்தான்=அநுசரித்திருந்தான். எ - று.

"தேசார் குருநூன் மாணாக்கன் சிறக்க விம்மூ வருங்கூடிற்
பாசா நீதப் பாமெய்தும் பன்னூல் பங்கா விக்கூட்ட
மேசா வுணர்வைத் தரும்." ---

என்னும் வாசிட்டக் கருத்தின்படியே மாணாக்கன் இவ்வண்ணம் நின்றன னென்க. "மர்க்கடநியாயம்போல" எ-கு. உ-ம், பட்டினத்துப்பிள்ளையார்,

---

* "தாணு"=கம்பம். "கநநம்"=புதைத்தல். "ந்யாயம்"=திருஷ்டாந்தம்.

† "மார்ச்சால நியாயம்"=தாய்ப்பூனை தன் குட்டிகள் கிடக்குமிடத்தைத் தேடித் தானே கௌவியெடுத்துப்போய்க் காப்பாற்றுதல்.

‡ "மர்க்கட நியாயம்"=குரங்கின்குட்டி தன் றாய்க்குரங்கு எங்கே தாவினும் தான் அதனைவிடாது பற்றியிருத்தல்.

§ அநுசரித்தல்=வழிபடல்.

"மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையை யானென்செய் வேனெனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத்த னேகயி லாயத்தனே"—

எனவரும். மற்றும் வருவனவற்றுட் காண்க. (2)

[குருவானவர் மாணாக்கனை அநுபவம் வினாதல்.]

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாம லன்பாம்
மைந்தனை நோக்கிச் சாட்சி மாத்திர மாய்நின் றாயோ
சிந்தையி லைய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே
அந்தரங் கலந்த துண்டோ வநுபவ முரைசெய் வாயே.

இ-ள். புருடன் தன்னைச் சந்ததம்=புருஷனை எப்பொழுதும் (விட்டு நீங்காத), சாயைபோல்=நிழல்போல, விடாடல் அன்பு ஆம் மைந்தனை நோக்கி=கணமும் நீங்காமற் றன்னிடத் தன்புடையனா யிருக்கும் சிஷனைப் பார்த்து, சாட்சி மாத்திரம் ஆய் நின்றாயோ=(ஞாதா, ஞானங்களொழிந்து ஞேயரூபமான) சாட்சி மாத்திரமாக நிற்கின்றனையோ?, சிந்தையில் ஐயம் எல்லாம்=அந்தக்கரணத்தின் கண்ணுள்ள (பிரமாணகத, பிரமேயகதங்களான) சமுசயங்களனைத்தும், தீர்ந்தவோ=ஒழிந்தனவோ?, தெளிவின் உள்ளே=(உனது) புத்தியினிடத்தே, அந்தரம் கலந்தது உண்டோ=பேதப்பிரதீதி வந்து பொருந்தின துண்டோ, அநுபவம் உரை செய்வாய்=உனதநுபவம் (எங்ஙனமுளது,) அதனைச்சொல்லுதி. எ-று.

"பராபரமா மப்பொருளை வயங்கக் கண்டாற் பெருமனக்கட் டறுமைய மறுங்கரும மறும்."—

என வாசிட்டத்திற் கூறியபடி ஆரூடஞான மடைந்தனையோ என ஆசான் வினாவினதாம். அல்லது அசம்பாவனை, சமுசயபாவனை, விபரீதபாவனைகளிறந்த வநுபூதியடைந்தனையோ என வினாவினதாம் எனினும் ஒக்கும்.()

[தேவரீருடைய கிருபாபலங்கொண்டு பிரதிபந்த மிகந்த
வநுபூதியடைந்தேனெனல்.]

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய்
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்கள்
உனதரு ளுதய வெற்பி னுபதேச வருக்கன் றோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்தா லுண்டோ. (4)

இ-ள். என உரைத்து அருளும் ஆசான்=என்று கேட்டருளிய குருவினுடைய, இருபதம் வணங்கி=உபயபாதங்களையும் பணிந்து, எந்தாய்=எனது பிதாவே, சனன வன் காட்டில்=சம்சாரமாகிய வலிய வாரண்யத்தில், மோகத் தமத்து=அஞ்ஞானமாகிய இருளில், எழு பேதப் பேய்கள்=எழாநி

ற்கும் (பேதப்பிரதீதிகளாகிய) பசாசங்கள், உனது அருள் உதய வெற்பில்=தேவரீருடைய கிருபையாகிய உதயகிரியினின்றும், உபதேச அருக்கன் தோன்றி=பிரஹ்மோபதேசமாகிய சூரியன் உதயமாகி, மனவிழி தெரிய=உளக்கண் விளங்க, ஞானவான் கதிர் பரந்தால்=ஞானமாகிய பெருமையை யுடைய கிரணங்களைப் பரம்பச்செய்தால், உண்டோ=அதன் முன் உளவாகா நிற்குமோ ! (இல்லாதொழிந்தன). எ - று.

ஜநநம் எண்பத்துநான்கு லட்சம்யோனி பேதங்களாய்க் கடத்தற்கரிதாகலின் அதனை, 'வன்காடு'' எ - ம், பொருள்களையும், விழிகளையும் மறைக்கும் இருள்போல அதிஷ்டான வாரோபங்களின் பேதங்களையும், அறிவையும் மறைத்தலால் அஞ்ஞானத்தைத் "தமம்" எ - ம், உண்மையாக இல்லாதிருந்தும் இருளினுலெழுந்து அச்சந் தந்து இருளொழிவில் தாமும் ஒழிந்துபோம் பேய்களின் றோற்றம்போல உண்மையில் இல்லாதிருந்தும் அஞ்ஞானத்தாலெழுந்து அளவிறந்த வனர்த்தங்களைத் தந்து அஞ்ஞான நாசத்தில் தாமும் ஒழிந்துபோதலின் பேதப்பிரதீதிகளைப் "பேய்கள்" எ-ம் அளத்தற்கருமையானும், பிரஹ்மோபதேசமுண்டாதற்கேதுவாதலானும் குருவருளை, "உதயவெற்பு" எ-ம், பிரஹ்மோபதேசம் முக்கியவதிகாரிக்குத் தசபனுக்கு ஆப்தோபதேசம்போல உடனே அஞ்ஞானத்தையொழிவித்தலால் உபதேசத்தை, 'அருக்கன்'' எ - ம், சூரியோதயமகி விழிகள் தோன்றக் கிரணம் எங்கும் வியாபிக்கில் பேய்த்தோற்றத்திற் கவகாசமின்மைபோலப் பரிபூரணப் பிரஹ்மந் தானென்னும் ஞானம் விரிந்துண்டாகி ஆவரணமின்றிப் பரிபூரணப் பிரஹ்மாகாரமாக மனது விளங்கவே பேதப்பிரதீதிகட்கு அவகாசம் இன்மையின் ஞானத்தை, "வான்கதிர்" எ - ம், உருவகப்படுத்திக் கூறினன். "உபதேசவருக்கன்றேன்றி, மனவிழ்தெரிய" என்றதால் அஞ்ஞான, சமுசயங்கள் ஒழிந்தன வென்பதைக் குறிப்பா லுணர்த்தினனென்க.

(150) பேதம் ஐந்துவகை ; அவை 1 - வது சீவேசுரபேதமும், 2 - வது சீவர்களின் பரஸ்பரபேதமும், 3 - வது சீவசடங்களின் பேதமும், 4 - வது ஈசுரசடங்களின் பேதமும், 5 - வது சடங்களினெ ன்றற்கொன்று பேதமும் என்னும் இவைகளாம்.

'சனனவன்காடு'' எ - கு, உ - ம், அமிர்தசாரம்,—

"ஊர்வ பதினொன்று மொன்பானு மாநடவர்
நீர்பறவை நாற்காலி நேர்பத்தாஞ்—சீர்திகழு
மூவாறுந் தாபரங்கண் முப்பத்து மும்மையோ
ராவா ரொருப தாறும்"— (4)

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

[அஞ்ஞானம், ஐயமுதலியவை ஒழிந்தனவாயினும் புத்திதிடத்தின் பொருட்டு இன்னும் யான் ஆட்சேபித்து அறியத்தக்கவை யுள எனத் திருஷ்டாந்த முகமாகக் கூறுகின்றார்.]

மந்திர மூர்த்தி தன்னுன் மாற்றிய பேய்போ லுனும்
எந்திர மெழுதிக் கட்டி யினிவாராவகைசெய் வார்போல்

மூந்தியுன் னுபதேச சத்தான் மோகம்போ னாலு மையா
புந்திநின் றுறைக்க வின்னம் புகலும்விண் ணப்ப முண்டே. (5)

இ-ள். மந்திர மூர்த்தி தன்னால்=(உலகில்) மந்திர மூர்த்தியினால், மாற்றியபேய் போனாலும்=நீங்கிய பேயானது (உடலைவிட்டு) நீங்கிப்போயினும், எந்திரம் எழுதிக்கட்டி=மந்திர சக்கரம் எழுதிப் (பேய் நீங்கிய அவ்வுடலிற்)பந்தித்து, இனி வாராவகை=மீண்டு மப்பேய் அவ்வுடலில் வந்து சம்பந்தியா திருக்கும்படி, செய்வார்போல்=செய்பவர்போல, மூந்தி=முன்னரே, உன் உபதேசத்தால்=தேவரீர் அருளிய பிரஹ்மோபதேசத்தால், மோகம் போனாலும்=அஞ்ஞானம் நிவிர்த்தித்ததேனும், ஐயா=குருவே, புந்திநின்று உறைக்க=எனது புத்தியானது (அநுபூதியிற் சலியாமல்) நின்றுறைந்த, இன்னம்=மேலும், புகலும் விண்ணப்பம் உண்டே=(யான்) வினவாநிற்கும் விண்ணப்பங்களுள. எ-று.

"மோகம்" எ-து, உபலட்சணமாக நிற்றலாற் சமுசய, விபரீதங்களுங் கொள்க.

[பூருவபடலத்தில் உபதேசித்த வாக்கியங்களைப்பற்றித் தனதந்தக்கரணத்தில் பிறந்துள்ள சந்தேகந் தெளிதற்பொருட்டு வினாதல்.]

ஆகமப் பிரமா ணத்தா லறியென் றும் வாக்குக் கெட்டா
தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றும்
சோகமா மனத்திற் கெட்டா சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர்
மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்தி டீரே. (6)

இ-ள். ஆகமப் பிரமாணத்தால் அறி என்றும்=(நீயே பிரஹ்மமென்னும்) சுருதிப் பிரமாணத்தால் (உனது நிஜரூபமான பிரஹ்மத்தை நீ) அறிதியென்றும், ஏகம் ஆம் பிரமம்=அகண்டைகரசமான பிரஹ்மமானது, வாக்குக்கு எட்டாது என்றும்=சுருதி வாக்கியத்திற்குக் கோசரமாகாதென்றும், இதயத்தால் உணர்வாய் என்றும்=(உனது) மனதினால் (உன்னை நீயே) உணர்தியென்றும், சோகம் ஆம் மனதிற்கு=துக்கமயமாகிய மனத்திற்கு, எட்டா=விஷயமாகாத, சுயஞ்சோதி என்றும்=சுயம் பிரகாசரூபமென்றும், சொன்னீர்=உபதேசித்தருளினீர் (இங்ஙனம் உபதேசித்ததால்), மோகம் ஆம் இரண்டு சங்கை=மயக்கமாகிய இருவித சந்தேகங்கள், முளைத்தன=(எனதந்தக்கரணத்தின் கண்ணே) உண்டாயின, பறித்திடீர்=(அவைகளை) நிவிர்த்தி செய்தருளுவீராக. எ-று.

"**சுசிபெறு மிலட்சியார்த்தத் துவம்பதந் தற்பதங்கட், கசிபத வைக்கியஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய்.**" என்னும் 64-ம் செய்யுண் முதல், "**கடநீரின் மேகநீரிற் கண்டவா னிரண்டும் போயே, குடவானும் பெரியவானுங் கூடியொன் றாமப் போது, மிடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமப் போது மேகம்.**" என்னும் 82-ம் செய்யுள் வரையும் பூர்வ படலத்தில் உபதேசித்தருளிய சுருதி வாக்கியங்களால் என்பான், "ஆகமப்

பிரமாணத்தா லறியேன்றும் வாக்குக் கெட்டா, தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றுஞ், சோகமா மனத்திற் கெட்டா சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர்" எ-ம், தன்னால் விசேஷித்துத் தெளியக்கூடாமையின், "மோகமாம்" எ-ம், பசிருக்குக் கோரையாதிய களைகளைப் பறித்தெறியாவிடில் அது, பலத்தைப் பயவாததுபோலச் சந்தேக நிவிர்த்தி செய்யாதளவில் ஞானமும் *சம்சார நிவிர்த்திரூபமான பலத்தைப் பயவாதென்பான், "இரண்டு சங்கை முளைத்தன பறித்திடீர்." என்றுங் கூறினன்.

இவை பிரமாணகத சந்தேகங்கள். (6)

(151) [முதற்சங்கைக்கு உத்தரம்.]

மற்றைமுப் பிரமா ணத்தால் வத்துநிண் ணயங்கூ டாதே
உற்றதோர் விடயம் பூத முபயமன் றாத லாலே
குற்றமாங் குணவி சேடங் கூடாம லிருக்கை யாலே
இற்றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே. (7)

இ-ள். (பிரத்தியகபின்ன பரப்பிரஹ்மம்) உற்றது ஓர் விடயம் (அன்று)=நேத்திராதி இந்திரியங்களோடு, சம்பந்திப்பதான (உருவமுதலிய விஷயங்களுள்ளே) ஓர் விஷயமுமன்று, பூதம் (அன்று)=பூதமும் அன்று, உபயம் அன்று=உபயமும் அன்று, ஆதலாலே=ஆதலினாலே, மற்றை முப்பிரமாணத்தால்=(பிரத்தியட்சம், அநுமானம், உபமானம் என்னும்) ஏனைய மூன்று பிரமாணங்களால், வத்து நிண்ணயம் கூடாது=பிரஹ்ம நிச்சயம் (எப்படிக்) கூடாதோ (அப்படி), குற்றம் ஆம் குணவிசேடம்=குற்றமாகிய குணவிசேஷங்களை, கூடாமல் இருக்கையாலே=(பரமார்த்தமாகச்) சம்பந்தியாம லிருத்தலினாலே, இற்றது=இத்தன்மைத்தான அப்பிரஹ்மமானது, வாக்குக்கு எட்டாது என்பதும்=(ஆகமப் பிரமாணரூபமான) வாக்குக்கு விஷய மாகாதென்பதையும், நீயே அறிவாய். எ-று.

"பூதம்" எ-து, அக்கினி. "உபயம்" எ-து, இரண்டு. பிரத்தியட்சம், அநுமானம், சப்தம், உபமானம், அர்த்தாபத்தி, அநுபலப்தி எனப் பிரமாணம் அறுவகைத்து.

(152) 1-வது—அவற்றுள், சார்வாகர் பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றே அங்கீகரித்தனர்.

2-வது-கணாதசுகதமதாநுசாரியர் பிரத்தியட்சப் பிரமாணமொன்றே யங்கீகரிக்கில் திருப்தி வேண்டினோனுக்குப் போஜனத்தின்கட் பிரவிர்த்தி யுண்டாகாதாகலின், இரண்டாவதான அநுமானப் பிரமாணமும் அங்கீகரித்தனர். என்னை? அபுக்தபோஜனத்தில் திருப்திக்கு ஏதுத்தன்மையின் ஞானம், பிரத்தியட்சப்பிரமாண ஜந்யமான பிரத்தியட்சஞானமாக வின்றாகலின் *புக்தபோஜனத்தில் அநுபவித்த திருப்திக்கு ஏதுத்தன்மையை அபுக்த

* புக்தபோஜனம்=முன்னே தான் உண்ட அந்நம்.

போஜனத்தின் கண்ணும் அநுமானத்தாலறிந்து திருப்திவேண்டினோன் போஜனத்தின்கட் பிரவிர்த்தித்தலால் என்க.

3-வது—சாங்கிய சாஸ்திர கர்த்தாவாகிய கபிலமதாநுசாரியர் பிரத்தியட்சம், அநுமானம் என்னும் இரண்டேபிரமாணம் அங்கீகரிக்கில் தேசாந்தரத்திற் சென்றிருந்த வொருவன் பிதா மரணமாயினனாக, யதார்த்தஞ் சொல்பவனான ஒருவன் வந்து உன் பிதா மரணமாயினன் என அது கேட்ட புத்திரனுக்குப் பிதாவின் மரண நிச்சயம் பிரத்தியட்சம், அநுமானங்களாலுண்டாகாமல் சப்தத்தாலுண்டாகலின், சப்தத்தோடு மூன்று பிரமாணம் அங்கீகரித்தனர்.

4-வது—நியாயசாஸ்திர கர்த்தாவாகிய கௌதம மதாநுசாரியர் பிரத்தியட்ச முதலிய மூன்றே பிரமாணம் அங்கீகரிக்கில் மரையறியா ஒருவன் வனவாசி புருஷனால் பசுவுக்குச் சமானம் மரை என்பதைக் கேட்டிருந்து வனத்திற் சென்று மரையைக் கண்டபோது அவனுக்குப் பசுவுக்குச் சமானமாம் மரை என்று வனவாசி புருஷன் சொன்ன வாக்கியார்த்தத்தின் ஸ்மரண முண்டாகி அநந்தரம் இது மரை என்னும் ஞானமுண்டாகின்றதாகலான், இப்படிப்பட்ட விலட்சண ஞானத்திற்கு ஏதுவான உபமானப் பிரமாணமும் அங்கிகரித்தனர்.

5-வது—பூர்வ மீமாம்ஸையின் ஏகதேசியும், பட்டருடைய சிஷ்யருமாகிய பிரபாகரர் அர்த்தாபத்தி அர்த்தாபத்திப் பிரமாணமும் அங்கிகரித்தனர். பகலில் போஜனத்தியாகியான புருஷனுடைய ஸ்தூலத்தைக் கண்டு இவன் இராத்திரியில் போஜனஞ் செய்வன் என்னும் ஞானம் உண்டாகின்றது. அங்கே இராத்திரி போஜனமின்றிப் பகற்போஜனத் தியாகியின்கட் ஸ்தூலத்துவங் கூடாதாகலின், இராத்திரி போஜனத்தின் சம்பாத்தியம் ஸ்தூலத்துவமாம். இராத்திரி போஜனம் சம்பாதகம்; சம்பாதகமாகிய யாதொரு இராத்திரி போஜனமுண்டோ! அதனது ஞானத்திற்கேதுவான ஸ்தூலத்துவத்தின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமென்று சொல்லப்படும். இது விசாரசாகரீதி.

6-வது—பூர்வ மீமாம்சகரான பட்டர் ஆறாவதான அநுபலப்திப் பிரமாணமும் அங்கீகரித்தனர். வேதாந்த சாஸ்திரத்திலும் ஆறுபிரமாணமங்கீகரித்துளர். கிரக முதலியவற்றில் கட முதலியவற்றின் அபாவஞானம் உளதாதல் அநுபலப்திப் பிரமாணத்தின் பிரயோஜனமாம்; அங்கே யாதொரு பதார்த்தம் பிரதீதியாகவில்லையோ! அதனபாவஞான முளதாம். அப்பிரதீதியை அநுபலப்தியென்பர். கடத்தின் அநுபலப்தியென்னும் அப்பிரதீதியாற் கடத்தினபாவ நிச்சய முண்டாகின்றது. இப்படிப் பதார்த்தங்களின் அபாவ நிச்சயத்திற்கு ஏதுவான பதார்த்தங்களின் அப்பிரதீதியை அநுபலப்திப்பிரமாணம் என்பர்.

(153) பிரமா ஞானத்திற்குக் காரணம் யாது அது பிரமாணம் எனப்படும். ஸ்மிருதியின் வேறாய், அபாதிதப் பொருளை விஷயமாகவுடைய

ஞானம் யாது அது பிரமா எனப்படும். ஸ்மிருதி ஞானம் பிரமா அல்ல, என்னை? பிரமாஞானம் பிரமாதாவிருசிரிதமாம். ஸ்மிருதி பிரமாதாவிருசிரித மல்ல, சாட்சியிருசிரிதம் என்று அங்கீகரித்து இப்படியே பிராந்தி ஞானமும், சமுசயமும் சாட்சியிருசிரிதம் என்றே அங்கீகரித்தனர். இக்காரணத்தால் ஸ்மிருதி ஞானம், சமுசய ஞானம், பிராந்திஞானம் இம்மூன்றும் ஆபாசசகித மான அவித்தியா விருத்தி ரூபமாம். அந்தக்கரண விருத்திரூபமல்ல; ஆக லின் பிரமாதாவின் ஆசிரிதமல்ல சாட்சியின் ஆசிரிதமாம; யாதொன்று அந் தக்கரண விருத்திரூப ஞானமோ அது பிரமாதாவின் ஆசிரிதமாம; அதுவே பிரமா எனப்படும். ஸ்மிருதி ஞானம் அந்தக்கரணத்தின் விருத்தியல்லாமை யின் பிரமாதாவின் ஆசிரிதமுமல்ல, பிரமாவுமல்ல; ஆதலால், பிரமாவினில க்கணத்தில் ஸ்மிருதியின் வேறென்று சொல்லல்வேண்டும். ஸ்மிருதி ஞானம் அபாதிதப்பொருளை விஷயமாகவுடைய ஞானந்தான; ஆயினும் அது ஸ்மிரு தியின் வேறல்ல; ஆதலான் அபாதிதப்பொருளை விஷயமாகவுடைய ஸ்மிரு தியின் வேறான ஞானம் பிரமா எனப்படும். இவ்விலக்கணத்திற்கு யாதொரு தோஷமும் இன்றாம்.

1-வது—பிரத்தியட்சப்பிரமா, 2-வது—அநுமிதிப்பிரமா, 3-வது—உபமிதிப்பிரமா, 4-வது—சாப்தப்பிரமா, 5-வது—அர்த்தாபத்திப் பிரமா, 6-வது—அபாவப்பிரமா; பூருவஞ்சொன்ன பிரத்தியட்ச முதலிய ஆறு பிரமாணங்களும் கிரமமாக அநுபப்பிரமாக்கட்குக் கரணங்களாம். [பிரமாவென்பதும், பிரமையென்பதும் ஒன்றாம்.] பிரத்தியட்சப் பிரமாவுக் குக் கரணம் யாது அது பிரத்தியட்சப் பிரமாணம்; அசாதாரண காரணம் யாது அது கரணம். சர்வகாரியங்கட்கும் காரணமாயுள்ளவை சாதாரண காரணமெனப்படும். தர்மாதர்ம முதலியவை சர்வ காரியங்கட்குங் காரண மாதலால் சாதாரண காரணங்களாம். சர்வ காரியங்கட்குங் காரணமாகாமல் யாதானும் ஓர் காரியத்துக்கு யாது காரணமாமோ அது அசாதாரண காரண மெனப்படும். கட முதலிய காரிய விசேஷங்கட்குத் தண்டம் எப்படி அசாதா ரண காரணமாமோ! அப்படிப் பிரத்தியட்சப் பிரமாவுக்கு ஈசுரனும், அவரது இச்சை முதலியனவும் சாதாரண காரணங்களாம் ஏனெனின்? அவையன்றி எவ் வகைக் காரியங்களுமுளவாகாமையின் என்க; இதனால் ஈசுரன் முதலியவை சாதாரண காரணங்களாம் நேத்திர முதலிய இந்திரியங்கள் பிரத்தியட்சப் பிரமாவுக்கு அசாதாரண காரணங்களாம். ஆதலால், அவை பிரத்தியட்சப் பிரமாவுக்குக் கரணங்களாம்.

(154) நேத்திரேந்திரியத்தால் உருவமுடையனவும், நீலம் முத லிய நிறம் இவைகளினது ஞானமுண்டாம். பிரமம் இப்படிப்பட்டதல்ல. ஆத லால் நேத்திரேந்திரிய ஜந்நிய ஞானத்திற்கு அது விஷயமல்ல. துவாசசேந் திரியம் பரிசத்தையும், பரிசத்தின் ஆசிரயத்தையும் விஷயமபண்ணும். பிரஹ் மம் பரிசத்தின் ஆசிரயமுமல்ல, பரிசமுமல்ல; ஆதலால் * துவாசசேந்திரியத்

* துவாசசேந்திரியம்=துவக்கிந்திரியம்.

துக்குப் பிரஹ்மம் விஷயமல்ல. * ரசனேந்திரியத்தால் ரசஞானமும், கிராணேந்திரியத்தால் கந்தஞானமும், சுரோத்திரேந்திரியத்தால் சத்தஞானமுமுளவாம்; ரச, கந்த, சத்தங்கட்குப் பிரஹ்மம் விலட்சணமாதலான் ரசன, கிராண, சுரோத்திரங்களால் பிரஹ்மஞானம் பொருந்தாது. ஆதலால் பிரஹ்மம் பிரத்தியட்சப் பிரமாண விஷயமன்றென்பார், "உற்றதோர் விடயமன்று ஆதலால்" என்றார்.

(155) அநுமிதிப் பிரமாவுக்குக் கரணம்யாது அஃதநுமானப் பிரமாணமெனப்படும். லிங்க ஞானத்தாற் றோன்றும் ஞானம் அநுமிதி; அஃதெங்ஙனம் எனின்? பருவதத்தில் தூமத்தின் பிரத்தியட்சஞானமுண்டாய் வன்னியின் ஞானமுண்டாகாநின்றது; அங்கே தூமத்தின் பிரத்தியட்ச ஞானம் லிங்கஞானமாம்; அதனால் வன்னியின் ஞானந் தோன்றுதலால் பருவதத்தில் வன்னியின் ஞானம் அநுமிதி என்க. யாதொன்றினுடைய ஞானத்தினால் சாத்தியத்தின் ஞானமுண்டாமோ! அது † லிங்கமெனப்படும்: அநுமிதி ஞானத்திற்கு விஷயம் சாத்தியமெனப்படும்; அநுமிதி விஷயம் வன்னியாதலால் வன்னிசாத்தியமாம். தூமஞானத்தால் வன்னி ரூபசாத்தியத்தின் ஞானமுண்டாகின்றதாகலால் ‡ தூமம் லிங்கமாம். வியாப்பிய ஞானத்தால் வியாபகத்தின் ஞானமுண்டாவதால் வியாப்பியத்தை லிங்க மென்பர்: வியாபகத்தைச் சாத்தியமென்பர்; வியாப்தியுடையதை வியாப்பிய மென்பர்; வியாப்தி நிரூபகத்தை வியாபகமென்பர்; வியாப்தியின் நிச்சயம் அநுமிதிக் கேதுவாம்.

(156) வேதாந்த வாக்கியங்களால் ஜீவனிடத்துப் பிரஹ்மத்தினபேதம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது; அஃதநுமானத்தானும் பெறப்படுகின்றது. அநுமானமாமாறு:—சீவன் பிரஹ்மா பின்னன்: சேதனத்துவத்தால்; எங்கே எங்கே சேதனத்துவமுண்டோ அங்கே அங்கே பிரஹ்மாபேதமுண்டு: பிரஹ்மத்திற்போல; இது மூன்றவயவங்களின் சமுதாயரூபமான மஹாவாக்கியமாகலின், பரார்த்தாநுமான மெனப்படும். இங்கே சீவன்பட்சம் பிரஹ்மாபேதம் சாத்தியம், சேதனத்துவம் ஏது, பிரஹ்மம் திருஷ்டாந்தம்; இங்கே சீவனிடத்துச் சேதனத்துவ ஏதுவோ உண்டு, பிரஹ்மா பேதரூப சாத்தியமில்லை என பட்சத்தில், சேதனத்துவ ஏதுவுக்குப் பிரஹ்மாபேதரூப சாத்தியத்தோடு வியபிசாரசங்கை பிரதிவாதி செய்யில் தர்க்கத்தால் அச்சங்கை நிவிர்த்திக்கத்தக்கது; ஜீவனிடத்துச் சேதனத்துவ ஏதுவையொப்பி, பிரஹ்மாபேதரூப சாத்தியத்தை யொப்பாவிடிற் சேதனத்திற்கு அத்துவிதீயத்துவப் பிரதி பாதக சுருதி விரோதமாமென்பது இங்கே தர்க்கத்தின் சொரூபமாம்: சுருதி விரோதம் சர்வ ஆஸ்திகர்கட்கும் அநிஷ்டமாதலால் அச்சங்கை நிவிர்த்தியாம். பிரபஞ்சமித்தை என்பது அநுமானத்தானுஞ் சித்திக்கிறது; அவ்வநுமானமாமாறு:—வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை: ஞான நிவிர்த்தியத்

* ரசனேந்திரியம்=ஜிகுவேந்திரியம்.

† லிங்கம்=குறி. ‡ தூமம்=புகை.

தன்மையால்); எங்கே எங்கே ஞானநிவிர்த்தியத்தன்மை அங்கே அங்கே மித்தியாத்வம்: சுத்திரஜதாதிகள்போல; இங்கே வியாவகாரிகப் பிரபஞ்சம் பட்சம் மித்தியாத்தன்மை சாத்தியம், ஞான நிவிர்த்தியத்தன்மை ஏது: வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை என்பது பிரதிஞ்ஞை; ஞான நிவிர்த்தியத்தன்மையால் என்பது ஏது, எங்கே எங்கே ஞான நிவிர்த்தியத்தன்மை அங்கே அங்கே மித்தியாத்வம்,சுத்திரஜதாதிகள் போல என்பது உதாரணம்; இங்கேயும் பிரபஞ்சத்திற்கு ஞான நிவிர்த்தியத்தன்மை ஒப்பி, மித்தியாத்தன்மை ஒப்பாவிடில் சத்திற்கு ஞானத்தால் நிவிர்த்தி கூடாதாகலின் ஞானத்தாற் சகல பிரபஞ்ச நிவிர்த்திப் பிரதிபாதக சுருதி, ஸ்மிருதிகளின் விரோதமுண்டாமென்னும் தர்க்கததால் வியபிசாரசங்கை நிவிர்த்தியாம்; இவ்வாறு வேதாந்தார்த்தத்தின் அநுசாரிகளான அநேக அநுமானங்களுள.

(157) ஆயினும், வேதாந்த வாக்கியங்களால் அத்துவிதீயப் பிரஹ்மநிச்சயம் சித்திப்பதால் சம்பாவனை மாத்திரத்திற்கு அநுமானப் பிரமாணமல்லாமற் சுதந்தரமாகப் பிரஹ்ம நிச்சயத்திற் கேதுவல்ல. என்னை? பிரஹ்மத்தின் கண்ணே வேதாந்த வாக்கியமன்றி அந்நியப் பிரமாணங்களின் பிரவிர்த்தி இல்லை; இது சித்தாந்தம்; ஆகலின் இதனானும், அக்கினி தூமங்கள் போலக் காரிய காரணபாவம் பரமார்த்தமாகப் பிரஹ்மத்தின்கண் இன்மையானும் பிரஹ்மம் அநுமானப் பிரமாண விஷயமன்றென்பார், "பூநமன்றதலாலே" என்றார்.

(158) உபமிதிப் பிரமாவுக்குக் கரணம் உபமானப் பிரமாண மெனப்படும். சாதிருச ஞானத்தால் உபமிதியுண்டாகும்: ஆகாச முதலிய சகல பிரபஞ்சமுங் கந்தர்வ நகரம்போல திருஷ்ட நஷ்டசுபாவம்: இவற்றிற்கு விலட்சணசுபாவம் ஆன்மா: ஆகாசாதிகளில் ஆன்மாவின் சாதிருசம் கிஞ்சித்துமில்லை, ஆன்மாவுக்கு ஆன்மாந்தரமுண்டானுற் சாதிருசமாம், ஆன்மாந்தரம் ஔபாதிகமல்லாமல் சொரூபமாகச் சுருதி, யுக்தி, அநுபவங்களாலில்லை;ஆகலின் பிரஹ்மம் உபமானப் பிரமாண விஷயமன்றென்பார், "உபயமன்றதலாலே" என்றார்.

(159) சாப்திப்பிரமாவின் கரணத்தை சப்தப்பிரமாண மென்பர். சப்தமும், லௌகிக வைதிக பேதத்தால் இருவகைத்து; வைதிக சப்தரூபமான வாக்கியமும் வியாவகாரிக அர்த்தபோதகம், பரமார்த்த தத்துவபோதகம் என இருவகைத்து; பிரஹ்மத்திற்குப் பின்னமான அனைததும் வியாவகாரிக அர்த்தமென்றும், பரமார்தத தத்துவம் பிரஹ்மமென்றுஞ் சொல்லப்படும். பிரஹ்மபோதக வாக்கியமும் அவாந்தர வாக்கியம். மஹாவாக்கியம் என இருவகைத்து; தற்பதார்த்த, துவம் பதார்த்தங்களின் சொரூபபோதக வாக்கியம் அவாந்தர வாக்கியம்; அவை சத்திய ஞானாநந்தம் பிரஹ்மம் என்பது முதலியன. தற்பதார்த்த, துவம்பதார்த்தங்களின் அபேத போதகமான தத்துவமஸியாதியவை மஹாவாக்கியம். யாதொரு அர்த்தத்தில் யாதொரு பதத்தினுடைய விருத்தியுண்டோ அவ்வர்த்தத்தின் பிரதீதி அப்பதத்தினுலுள

தாம். பதத்திற்கும் அர்த்தத்திற்கு முளதாய சம்பந்தம் விருத்தியெனப்படும். சக்தி, லட்சணை என்னும் பேதத்தால் அவ்விருத்தி இருவகைத்து; பதார்த்த போத ஏதுவான சாமர்த்தியத்தைச் சக்தியென்பர். யாதோர்ர்த்தத்தில் பதத்தின் சக்தியுண்டோ அவ்வர்த்தம் பதத்திற்குச் சக்கியமெனப்படும். சக்கிய சம்பந்தம் இலட்சணை; இப்படிப் பரம்பரா சம்பந்தமான லட்சணை விருத்திக்கு விஷயமேயல்லாமல் சக்திவிருத்திக்கு விஷயமல்லவென்பார், "துணைவிசேடங்கூடாம லிருக்கை யாலே, இற்றது வாக்குக் கேட்டாது" என்றார்.

(160) இங்கே இவர் பிரமாணம் நான்கென் றெடுத்துக்கொண்டது நியாய சாஸ்திரப்படி அர்த்தாபத்தியை அநுமானப் பிரமாணத்திலும், அநுபலப்தியைப் பிரத்தியட்சப் பிரமாணத்திலும் அடக்கிக் கொண்டமையின் என்க.

(161) ஆயினும் விருத்திப் பிரபாகர முதலிய வேதாந்த கிரந்தங்களில் ஆறுபிரமாணம் அங்கீகரித்துள்ளன. அர்த்தாபத்திப் பிரமாவின் கரணத்தை அர்த்தாபத்திப் பிரமாணமென்பர். உபபாதக கற்பனைக்கு ஏதுவான உபபாத்திய ஞானத்தை அர்த்தாபத்திப் பிரமாணமென்பர்: உபபாதக ஞானத்தை அர்த்தாபத்திப் பிரமாவென்பர். உபபாதகம், சம்பாதகம் என்பன ஒருபொருட்சொற்கள். உபபாத்தியம், சம்பாதிதம் என்பனவும் அப்படியே. யாதின்றி யாது சம்பவியாதோ அதற்கு அது உபபாத்தியமெனப்படும். எப்படியெனின்:—இராத்திரி போஜனமின்றிப் பகற்பொழுது துணவொழிந்த புருஷனிடத்து ஸ்தூலத்தன்மை சம்பவியாமையின், ஸ்தூலத்தன்மை இராத்திரிபோஜனத்தின் உபபாத்தியமாம்: யாதொன்றன் அபாவத்தால் யாதொன்றன் அபாவமுளதாமோ அது அதற்கு உபபாதகமெனப்படும். என்னை? இராத்திரி போஜனத்தின் அபாவத்தால் பகற்பொழுதுண்ணானுக்கு ஸ்தூலத்தன்மையின் அபாவ முளதாகலின், இராத்திரி போஜனம் ஸ்தூலத்தன்மையின் உபபாதகமா மென்க; இதனால், உபபாத்திய அநுபபத்தி ஞானத்தால் உபபாதக கற்பனை அர்த்தாபத்திப் பிரமாவென்று சொல்லப்படும்: உபபாதக கற்பனைக்கு ஏதுவான உபபாத்தியத்தின் அநுபபத்தியின் ஞானம் * அர்த்தாபத்திப் பிரமாணமெனப்படும்.

(162) அர்த்தாபத்தியும் திருஷ்டார்த்தாபத்தி, சுருதார்த்தாபத்தி என இருவகைத்து. ஜிஞ்ஞாசுக்குச சுருதார்த்தாபத்தியின் அநுகூல உதாரணங் கூறுதும்; அது "ஆத்மவித்து சோகத்தைக் கடக்கின்றான்" என்பது. இங்கே ஞானத்தால் சோகநிவிர்த்தி † சுருதமாம்; அவனது சோகம் மித்தியாத்வமாயிருக்கினல்லது ஞானத்தால் நிவிர்த்தியாகாதாகலின், பந்தம் மித்தியாத்வமென்னும் கற்பனையுளதாம்; பந்தமித்தியாத்வம் உபபாதகம்: ஞானத்தாற் சோகநிவிர்த்தி உபபாத்தியம்; அது திருஷ்டமன்று, சுருதமாம்; ஆகலான், சுருதார்த்தாபத்தியாம். அப்படியே மஹாவாக்கியத்தால் ஜீவபிரஹ்மங்

* அர்த்தம்=உபபாதகவஸ்து. ஆபத்தி=கற்பனை.

† சுருதம்=கேட்கப்படுகிறது.

களின் அபேதங் கேட்கப்படுகின்றது; அது ஔபாதிகமாகப் பேதமுளதேற் கூடும், சொரூபமாகச் சீவபிரஹ்மங்கட்குப் பேதமுளதேற்கூடாது ஆகலின், பேதம் ஔபாதிகத்வமென்னும் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண ஜந்திய மாம்; இங்கே சீவபிரஹ்மங்களின் அபேதம் உபபாத்தியம்; பேதத்தில் ஔபா திகத்தன்மை உபபாதகம், சகல உபபாத்தியஞானமும் பிரமாணமாம்: உப பாதக ஞானம் பிரமாவாம். சீவபிரஹ்மங்களின் அபேதம் வித்துவானுக்குத் திருஷ்டம், அந்நியனுக்குச சுருதம் ஆதலால் திருஷ்டார்த்தாபத்தி, சுரு தார்த்தாபத்தி என்னும் இரண்டுக்கும் இது உதாரணமாம. மனது விலய மானபின் நிர்விகற்ப சமாதிகாலத்தில் அத்துவிதீயப் பிரஹ்மமாத்திரம் சேஷ மாய் நிற்கின்றது. சகல அநான்மவஸ்துக்கள் மானசமாயினல்லது அதன் விலயத்தால் அவை அபாவமாகா ; ஆகலின், சகல தொய்தமும் மனோமாத் திரம் என்னுங் கற்பனையுண்டாகின்றது. இங்கே மனதின் விலயத்தால் சகல தொய்தத்தின் விலயமும் உபபாத்தியமாம்; அதன் ஞானம் அர்த்தாபத் திப் பிரமாணமாம். சகலதொய்தத்திற்கும், மானசத்தன்மை உபபாதகமாம்; அதன் ஞானம், அர்த்தாபத்திப் பிரமாவாம்; இங்கே உபபாதகப் பிரமாவின் அசாதாரணகாரணம் அர்த்தாபத்திப் பிரமாணம் என்க.

(163) அபாவப் பிரமாவின் அசாதாரண காரணத்தை அநுபலப்திப் பிர மாணம் என்பர் அபாவப் பிரமாவின் அசாதாரண காரணரூபமான யாதொரு பிரதியோகியின் அநுபலம்பமுண்டோ அது கரணமாவதால் பிரமாணமாம். [உபலம்பம்=ஞானம்;] அதையே பிரதீதி, உபலப்தி என்பர்; அதன் அபா வத்தை அநுபலம்பம், அநுபலப்தி யென்பர்.

(164) ஜிஞ்ஞாசுக்கு அநுபலப்தி நிரூபணத்தின் உபயோகம் இனிக் கூறுதும்:—"ஈண்டு நாநாவானவை சிறிதுமில்லை" என்பதாதியசுருதி, பிரபஞ்சத்தின் திரைகாலிக அபாவங் கூறுகின்றது. அநுபவ சித்தமான பிர பஞ்சத்திற்குத் திரைகாலிக அபாவங்கூடாதாதலான் பிரபஞ்சத்தைச் சொ ரூபமாக நிஷேதஞ் செய்யவில்லை; மற்றெவ்வாறு நிஷேதஞ் செய்கதோ வெனின்? பிரபஞ்சம் பாரமார்த்திகமல்ல ஆதலான், பாரமார்த்திகத்வ விசிஷ் டப் பிரபஞ்சத்திற்குத் திரைகாலிக அபாவஞ் சுருதி கூறிற்று; இதனால் பார மார்த்திகத்வ விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவம் சுருதி சித்தமாம்: மற்றும் அநுபலப்திப் பிரமாணத்தாலுஞ் சித்தமாம். பிரபஞ்சம் பாரமார்த்திகத்வ விசி ஷ்டமாமேல், எப்படிப் பிரபஞ்சம் சொரூபமாக உபலப்தியாகா நின்றதோ அப்படிப் பிரபஞ்சத்தினது பாரமார்த்திகமும் உபலப்தியாம்; அஃதாகாமை யின், பாரமார்த்திகத்வ விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவமுளது; இவ்வாற் றால், பிரபஞ்சத்தினது அபாவஞானம் அநுபலப்தியின் லுண்டாகின்றது. அந்நிய மதங்களில் எவ்வளவு அபாவஞானம் இந்திரிய ஜந்நியமோ அவ்வளவு ஞானமும் வேதாந்தமதத்தில் கேவலம் அநுபலப்தி ஜந்நியமாம் நையாயிக மதத்தில் இந்திரியங் கரணமாம், அநுபலப்தி சககாரிகாரணமாம் ஆதலால், இந்திரியத்தில் பிரமாணத்தன்மை உண்டு: அநுபலப்தியில் பிரமாணத் தன்மை இல்லை; இதனால் நையாயிகமதத்தில் அநுபலப்தியை வேறு பிர

மாணமாகக் கூறவில்லை. இனம்பற்றி ஏனைய பிரமாணங்களையும் உடன் கூறினர் என்றறிக. (7)

(165) [இதுவுமது.]

வாக்கியந் தனக்கெட் டாது வத்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வத்துவைக் காட்டிற் றன்றோ
வாக்கியங் களிலே மான மாவதே தென்று யாகில்
வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள்பொய் யாது கேளாய். (8)

இ-ள். வத்து=பிரஹ்மமானது, வாக்கியம் தனக்கு=(யாதொரு) வாக்கியத்திற்கும், எட்டாது என்று=கோசரமாகாதென்று, உரைத்தவேதம்=பிரதிபாதித்த சுருதியானது, வாக்கிய விருத்தியால்=(தத்துவமஸி) மஹாவாக்கியத்தின் (தற்பத, துவம்பதங்களின்) லட்சணா விருத்தியால், அவ்வத்துவை=அப்பிரஹ்மத்தை, காட்டிற்று அன்றோ=தரிசிப்பித்ததல்லவா (ஆகலின், பிரஹ்மமானது சுருதிவாக்கியங்கட்குக் கோசரமாம்.), வாக்கியங்களில்=(ஆனால் அவ்விருவகை) வாக்கியங்களுள்ளே, மானம் ஆவது=பிரமாணமாகக் கொள்ளற்பாலது, ஏது என்றாய் ஆகில்=யாதென்று சங்கிப்பாயாகில், வாக்கியம் இரண்டும் மெய்யே=அவ்வாக்கியங்கள் இரண்டும் உண்மையே, மறைகள் பொய்யாது=சுருதிகள் அசத்தியம் கூறாவாகலின், கேளாய்=(இதற்கு இன்னும் சமாதானங்கூறுதும்) கேட்பாய். எ-று.

"காட்டிற்று" என்றதால், இலட்சணை வருவித்தாம். விசேஷண சம்பந்தமுடையதாய் சக்தி விருத்திக்கு விஷயமாகாமையின், பிரஹ்மம் வாக்குக்கு எட்டாதென்பதும், இலட்சணா விருத்தியால் ஞானி கரதலாமலகம்போல அநுபவித்தலால் வாக்குக்கு எட்டுமென்பதும் மெய்யேயென்பார், "வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள் பொய்யாது" என்றார். இங்கே லட்சணை எ-து, பாகத்தியாக லட்சணையை, சக்தி விருத்தி, லட்சணாவிருத்திகளின் சொரூபம் முற்படலத்தில், 64-ம் செய்யுளின் விசேஷவுரையிற் காண்க.

(166) [இதுவுமது.]

தன்பதி யல்லாப் பேர்க ளனைவரு மல்ல னல்ல னென்றாள்
அன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌன மானாள்
என்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம். (9)

இ-ள். (சில புருஷரோடு கூடிநின்ற நாயகனையுடைய ஓர் நாயகியை மற்றொருத்தி நோக்கி உன் புருஷன் இவனோ? இவனோ என்று அக்குழுவிலுள்ளோரை ஒவ்வொருவராகச் சுட்டிக் கேட்கவே அதற்கு அந்நாயகியானவள்) தன்பதி அல்லாப்பேர்களை தமை=தனது நாயகனல்லாதவர்களை, அல்லன் அல்லன் என்றாள்=(இவன்) அல்லன், (இவன்) அல்லன் எனக் கூறிவந்தனள், அன்பனைக் கேட்டநேரம்=(தனது) நாயகனைச் சுட்டிக் கேட்டகாலையில்,

அவள் வெட்கி—அந்நாயகி நாணமுற்று, மௌனம் ஆனாள்—சும்மா விருந்தனள், என்பதுபோல—என்னும் நியாயம்போல, இதன்று இதன்று எனநீக்கி—(பிரஹ்மமல்லாதவைகள் சடமாதலால்,) அவைகளை இது பிரஹ்மம் அன்று, இது பிரஹ்மம் அன்று எனவொவ்வொன்றாக நிஷேதித்து, பின்—பின்னர், சேடித்த பரப்பிரமம் தன்னை—சேஷித்த (சேதனரூபமாகிய) பரப்பிரஹ்மத்தை, பேசாமல்—மௌனமாக, வேதம் காட்டும்—வேதம் தரிசிப்பிக்கும். எ-று.

இது "அருந்தியாவிருத்தி" லட்சணமாகிய சுருதி என்க.

தனது நாயகனல்லாதவர்களை அல்லன், அல்லன் என்றநாயகி மௌனமாயிருந்து நாயகனை அறிவித்தாற்போல, அநாத்துக்களை மாத்திரம் இது பிரஹ்மமல்ல இது பிரஹ்மமல்ல என்று நிஷேதித்து வந்து முடிவில் மௌனமாயிருந்தசுருதியும் பிரஹ்மத்தைக் காட்டிற்றாதலால், இதனாலும் அச்சங்கை ஒழிதி என்பது கருத்து.

இதற்கு, உ-ம், பாகவதம்,

"புனிதமற் றன்னை யல்லாப் பொருள்பரப் பிரம மல்ல
வெனவெடுத் துரைப்ப தல்லா லீறுடு தோற்ற மின்றித்
தனிமுத லாகி நின்ற சச்சிதா நந்த மூர்த்தி
நினைவருஞ் சுடரே நின்னை நிகழ்த்துமா றறிகி லேமால்."—

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (9)

(167) [இரண்டாஞ் சங்கைக்கு உத்தரம்.]

முந்திய சங்கை தீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரநீ கேளாய்
இந்தியங் களுக்கி ராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும். (10)

இ-ள். முந்திய சங்கை தீர—பிரஹ்மம் ஆகமப் பிரமாணத்திற்குக் கோசரா கோசரமாவது எவ்வாறும் என நீ சங்கித்த முதற்சங்கை (உனதந்தக்கரணத்தி னின்றும்) நிவிர்த்தியாகும்படி, மொழிந்ததை அறிந்து கொள்வாய்—நாம் கூறிய உத்தரத்தை அறிந்து அகத்தே கொள்வாய், பிந்திய சங்கை தீரப்பேசும் உத்தரம் நீ கேளாய்—சுயஞ்சோதியாகிய பிரஹ்மம் மனத்திற்குக் கோசரா கோசரமாக எவ்வாறும் என்னும் இரண்டாஞ்சங்கை ஒழியும்படி நாம் அருளாநிற்கும் உத்தரத்தையும் இப்போது நீ கேட்பாய், இந்தியங்களுக்கு—(சேத்திராதி) சர்வேந்திரியங்களுக்கும், இதயம் இராஜன் ஆம்—அந்தக்கரணம் இராஜாவாம், அதின் எண்ணங்கள்—அவ்வந்தக்கரணத்தினது விருத்திகள், புந்தியும் மனமும் என்றே—புத்தியும், மனமுமென, புறத்து அகத்து—(தேகத்திற்கு) வெளியிலும் உள்ளிலும், உலாவி ஆடும்—சஞ்சரித்துக் கூத்தாடாநிற்கும். எ-று.

அந்தக்கரணத்தின் பரிணாமத்தை விருத்தி என்பர். புத்திரூப பரிணாமமான அந்தக்கரணத்தை ஞானத்திற்கு ஆசிரயகர்த்தா எ-ம், அந்தக்கரணத்தின் பரிணாமரூபமான மனதை ஞானத்திற்குக் கரணம் எ-ம் கூறுப.

"இந்திரியங்களுக்கிராச விதயமாய்" எ-து,

"மானத நினைத்த தைம்பொறி யியற்று மன்னவர்க் கமைச்சர் போல்"

என்னும் வாசிட்டக் கருத்து. (10)

[இதுவுமது.]

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்
நின்மனோ விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும்
தன்மநன் மகனே யித்தைத் தானன்றோ ஞான மென்பார். (11)

இ-ள். உன் முகம் போல்=உனது (கிரிவாஸ்த) முகம்போல், கண்ணாடிக் குள்=தர்ப்பணத்தினுள்ளே, ஒரு முகம் கண்டால்போல்=மற்றொரு முகம் பிரதிபலித்தாற்போல, சின்மய வடிவின்சாயை=சித்ரூபமான கூடஸ்தனுடைய சாயையானது, சித்துப் போல்=(மற்றொரு) சேதனம் போல, புத்தி தோன்றும்=புத்திரூபமான அந்தக்கரணத்தின் கண்ணே பிரதிவிம்பிக்கும், நின் மனோ விருத்தி=உன்னுடைய மனோவிருத்தியானது, அந்த நிழல் வழியாய்=அச்சாயையின் வழியநுசரித்ததாய், உலாவும்=(விஷயதேசத்திற்) சஞ்சரியாநிற்கும், தன்ம நன்மகனே=தர்மரூபியான நல்லமைந்தா, இத்தைத் தான் அன்றோ=இவ்விருத்தியையல்லவா, ஞானம் என்பார்=ஞானமென்று கூறுவர் (பெரியோர்.) எ-று. (11)

(168) [பிரஹ்மத்தின்கட் பல * வியாப்தியி னபாவங்காட்டும் பொருட்டு அநாத்ம பதார்த்தங்களில் விருத்தி வியாப்தி, பல வியாப்தி இரண்டும் உண்டென்று காட்டுகின்றார்.]

உருக்கிய தாரநீர் நாநா வுருவங்க ளானாற் போல
விருத்திகள் கடபா டாதி விடயமாய்ப் பரிண மிக்கும்
அருப்பல விடய மெல்லா மாபாசன் றோற்று விக்கும்
இருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள்கா ணாதே. (12)

இ-ள். உருக்கிய தாரநீர்=(குகையிலிட்டு நெருப்பில் வைத்து) உருகச்செய்த தாரச்சலமானது, நாநா உருவங்கள் ஆனால்போல=(அச்சுக்கருவில் விடப்பட்ட மாத்திரத்தில் தான் சென்றுவீழ்ந்த) நாநா அச்சுருவங்கட்குச் சமான உருவமானாற்போல, விருத்திகள்=(தேகத்தினின்றும்) நேத்திராதி இந்திரியவாயிலால் வெளிப்படாநின்ற அந்தக்கரண விருத்திகள், கட

* வியாப்தி=விஷயம்.

படாதி விடயம்ஆய்=கடபட முதலிய விஷய சமாஞாகாரமாய், பரிணமிக்கும் =பரிணமி(த்து விஷயங்களின் ஆவரணத்தைப் பங்கமா)க்கும், விடயம் எல்லாம்=(கடபடாதி) விஷயங்களையெல்லாம், அருப்பல ஆபாசன் தோற்றுவிக்கும்=அருவமான ஸ்புரணமென்னும் ஆபாசனானவன் தோற்றுவிப்பன். [சொல்லிய நியாயத்தை வ்யதிரேக திருஷ்டாந்த முகத்தால் விளக்குகின்றார்.] இருட்டினில்=அந்தகாரத்தில், விளக்கும் கண்ணும் இல்லாமல்=தீபமும் நேத்திரமும் இல்லாமல், பொருள் காணாதே=கடபடாதி பதார்த்தங்கள் (எப்படிக்) காணப்படாவோ (அப்படி) ஆவரண நிவிர்த்தியின் பொருட்டு விருத்தியும், ஸ்புரணரூபப் பிரயோஜன நிமித்தம் சிதாபாசனும் இல்லாமல் அநாத்ம பதார்த்தங்கள் பிரகாசியாவாம். எ - று.

இந்திரியத்துக்கும், கடத்துக்கும் சையோக முண்டாகும்போது இந்திரியத் துவாரத்தாற் புறம்போந்து உருக்கி அச்சில் விடப்பட்ட தாரச்சலம் போலக் கடாகாரத்துக்குச் சமானாகாரத்தையடையும் அந்தக்கரணத்தின் பரிணாமத்தை விருத்தியென்பர். அந்தக்கரணம் சத்துவகுணகாரியமாய்ச் சொச்சமாகலின் அதில் சேதனத்தின் ஆபாச மிருப்பதுபோலச் சொச்சமான அந்தக்கரணத்தின் காரியமாகிய விருத்தியிலும் சேதனத்தின் ஆபாசம் உண்டு. விஷயமாகிய கடம் தமோகுண காரியமாதலால், சொரூபமாகவே சடமாம்; ஆகலின், அதன்கண் அஞ்ஞானமும், அதனது ஆவரணமும் உண்டென்னல் கூடாது. விசாரதிருஷ்டியினால் நோக்கில் அஞ்ஞானமும், அதன் ஆவரணமும் சேதனத்தின்கண் ணுண்டேயல்லாமல் கடத்தின்கண் இல்லை. அஞ்ஞானம் சேதனத்தின் ஆசிரிதமாய்ச் சேதனத்தையே விஷயம் பண்ணுகின்றதென்பது வேதாந்தசித்தாந்தம்; ஆயினும், கடாதிகளின் அதிஷ்டான சேதனாசிரிதமான அஞ்ஞானமும் சேதனத்தை ஆச்சாதித்துச் சுபாவமாக ஆவிருதமான கடாதிகளையும் மறைத்திருக்கிறது உலகிற்பிரசித்தம்; அவ்வஞ்ஞானத்தால் ஆவிருதமான கடத்தை விஷயமாகவுடைய அந்தக்கரணத்தின் ஆபாசசகிதமான கடாகார விருத்தியின்கண் விருத்திபாகமோ கடத்தின் ஆவரணத்தை நிவிர்த்திப்பிக்கின்றது. விருத்தியின் கண்ணுள்ள ஆபாசபாகம் கடத்தைப் பிரகாசஞ் செய்கின்றது; இவ்வாற்றான் வாகிய பதார்த்தத்தில் விருத்தி, ஆபாசம் இரண்டிற்கும் உபயோகம் உண்டு. திருஷ்டாந்தம்:— அந்தகாரத்தில் குடத்தில் யாதானும் ஓர் பாத்திரம் மூடிவைத்திருந்ததாக அங்கே தடியாலடித்துக் குடத்தை உடைத்தும் பின்னர்த் தீபமின்றி அந்நிராவரண பாத்திரமும் பிரகாசமாகாமற் றீபத்தினாற் பிரகாசமாவதுபோல அஞ்ஞானத்தால் ஆவிருதமான கடத்தின் ஆவரணத்தை விருத்தியானது பங்கஞ்செய்தும் அக்கடம் பிரகாசமாகாது. என்னை? கடமோ சொரூபமாகச் சடம்: விருத்தியுஞ் சடம். விருத்திக்கு ஆவரணபங்கமாத்திரம் பிரயோஜனம்; அதனாற் கடமானது பிரகாசியாது; ஆதலால் கடத்தைப் பிரகாசிப்பிக்கிறது ஆபாசமாம்; இங்ஙனங்கூறியது நேத்திரப் பிரத்தியட்சஞானத்தின் றன்மையாம், ஏனைய சுரோத்திரமுதலிய இந்திரியப் பிரத்தியட்சத்திலும் இவ்வாறே அறிக.

(169) [அநான்மாவினும் பிரஹ்மத்தின் கண்ணுள்ள விலட்சணத்தன்மை யைத் திருஷ்டாந்தத்தோடுங் காட்டுகின்றார்.]

எரிகின்ற விளக்காற் கண்ணு லிருட்பொருள் காணல் வேண்டும்
தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும் [கே.
புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்

பலம்=சிதாபாசன். புரிகின்ற விருத்தி=முமுட்சுக்களால் விரும்பாநிற்கும் அகண்டபிரஹ்மாகார விருத்தி, ஏனைய பதப்பொருள் வெளி. (13)

(170) [பிரஹ்மத்திற்கு அநான்மாவினும் விலட்சணத் தன்மைகூறிச் சங்கையின் உத்தரம் இவ்வாறமென்று முடிக்கின்றார்.]

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழு விருத்தி வேண்டுங் கணக்கினான் மனத்திற் கெட்டும்
வருத்திய பலமா மிந்த மனத்திற்கெட் டாது கண்டாய்
அருத்தமிப் படியென் றைய மகன்றுநீ தெளிந்தி டாயே. (14)

இ-ள். விருத்தியும்=(அந்தக்கரணத்தின்) விருத்தியும், பலமும்=(சிதாபாசமென்னும்) பலமும், கூடும் விகாரமே=கூடாநிற்கும் பரிணாமமே, மனம் என்பார்கள்=மனமென்று சொல்லுவர் பெரியோர், கருத்து எழு விருத்தி வேண்டும் கணக்கினால்=அந்தக்கரணத்தினின்றும் எழாநிற்கும் பிரஹ்மாகார விருத்தி மாத்திரத்தை யபேட்சிக்கு நியாயத்தால், மனத்திற்கு எட்டும்=(பிரஹ்மமானது) மனதுக்கு விஷயமாம், வருத்திய=(சிருட்டி தொடங்கி இதுகாறுந்) துன்பப்படுத்திய, பலம் ஆம் இந்த மனத்திற்கு=(சிதாபாசமென்னும்) பலத்தோடுகூடின இம்மனதுக்கு, எட்டாது கண்டாய்=(பிரஹ்மமானது) விஷயமாகாது, அருத்தம் இப்படி என்று=(பிரஹ்மமானது மனதிற்கு எட்டும், எட்டாதென்று சுருதி கூறினதற்குப்) பொருள் இவ்வாறாகுமென்றறிந்து, ஐயம் அகன்று=(இது விஷயமாக உன்னிடத்தெழுந்த) சந்தேகம் ஒழிந்து, நீ தெளிந்திடாய்=நீ தெளிவாயாக. எ-று.

கண்டாய் எ-து, முன்னிலையசை.

(171) மானச ஞானத்திற்குப் பிரஹ்மம் விஷயமல்ல வென்பதற்கு அபிப்பிராயம்:—சமதமாதி சம்ஸ்காரரகித விட்சிப்த மனதினின்றும் உண்டாகாநிற்கும் ஞானத்திற்குப் பிரஹ்மம் விஷயமல்ல. மானச ஞானமாகிய பல வியாப்பியத்தன்மை பிரஹ்மத்தின் கண்ணில்லை. விருத்தியில் சிதாபாசம் பலமென்று சொல்லப்படும்; அதற்குப் பிரஹ்மம் விஷயமன்று. கட முதலிய அநான்ம பதார்த்தங்களை விருத்தியடையுமாகில் அங்கே விருத்தி சிதாபாசம் இரண்டிற்கும் கட முதலிய பதார்த்தங்கள் விஷயமாம். பிரஹ்மாகார விருத்தியில் உள்ள சிதாபாசனுக்குப் பிரஹ்மம் விஷயமன்று: விருத்தி மாத்திரத்திற்கே பிரஹ்மம் விஷயமாம்.

(172) மனத்தின் விஷயத்தன்மை பிரஹ்மத்தின்கண் நிஷேதிக்கப்பட்டதுபோலவே சத்தத்தின் விஷயத்தன்மையும் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது;

அங்கே சத்தஜந்நிய ஞானத்திற்குப் பிரஹ்மம் விஷயமன்றென்று பொருள் கொள்ளின், மஹாவாக்கியமும் சத்தரூபமேயாதலான் அதனால் உண்டாகாநிற்கும் ஞானத்திற்கும் பிரஹ்மம் விஷயமன்றென்று பொருள்படும்; படவே சித்தாந்தத்திற்கே பங்கம் வரும்; ஆதலால் நிஷேத வசனத்திற்குப் பொருள், சத்தத்தின் லட்சணவிருத்தி ஜந்நிய ஞானத்திற்கு பிரஹ்மம் விஷயமேயல்லாமல், சத்தத்தின் சக்தி விருத்தி ஜந்நிய ஞானத்திற்கு விஷயமன்றென்பதும், அப்படியே லட்சணவிருத்தி ஜந்நிய ஞானத்திலும் ஆவரணபங்கரூப விருத்திமாத்திர விஷயத்தன்மை பிரஹ்மத்தின்கண் உண்டென்பதல்லாமல் சிதாபாசரூப பலத்திற்குப் பிரஹ்மம் விஷயமன்றென்பதும் ஆம். (14)

(173) [சஞ்சல சுபாவமாய் விஷயபரிணாமமடைய சித்தம் சமாதியடையுமாறு எங்ஙனமென வினாதல்.]

[வேறு.]

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன
வழிகளறிந் தேனினியோர் வசனங் கேளீர்
சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந்
ததாகார மாவதன்றோ சமாதி யோகம்
உஞ்சலையொத் தலைவதுதன் சுபாவ மாகி
யொருகணத்திற் பலவுலகா யுதிக்கு மிந்த
நெஞ்சகம்வத் துவிலசையா நிவாத தீப
நிலையடைவ தெப்படியோ நீர்சொல் வீரே (15)

இ-ள். வஞ்சகம் இல் பரமார்த்த குருவே=(உபாயம் அல்லாதவைகளை உபாயமென்று உபதேசிக்கும்) வஞ்சகக்குணம் இல்லாத மெய்ம்மையான ஆசிரியரே, சொன்ன வழிகள் அறிந்தேன்=(வாக்குக்கும், மனத்துக்கும் பிரஹ்மம் எட்டும், எட்டாதென்பதற்குத் தேவரீர்) அருளிய காரணங்களை நன்குணர்ந்தேன், இனி=இப்பொழுது, ஓர் வசனங்கேளீர்=(யான் வினவாநிற்கும்) ஓர் விண்ணப்பங் கேட்டருளுவீர், சித்தம்=சித்தமானது, சஞ்சலம் அற்று=அசஞ்சலமாய், அகண்ட பூரணம் ஆய்=அகண்ட பரிபூரணமாய், தத் ஆகாரம் ஆவது அன்றோ=பிரஹ்மாகாரமாவதல்லவா, சமாதி யோகம்=சமாதியென்று சொல்லப்படுஞ் சித்தநிரோதம், உஞ்சலை ஒத்து அலைவது=ஊசலைப்போலுமலையாநிற்பதே, தன் சுபாவம் ஆகி=தனது இயற்கையாய், ஒரு கணத்தில்=ஒரு க்ஷண நேரத்தில், பல உலகு ஆய் உதிக்கும்=நானா உலகங்களாய்த் தோன்றியாநிற்கும், இந்த நெஞ்சகம்=இச்சித்தமானது, வத்துவில்=(அசஞ்சல, அதிசூட்சுமமான) பிரஹ்மத்தில், அசையா=அசையாத, நிவாத தீப நிலை=நிவாததீபத்தின் ஸ்திதியை, அடைவது எப்படியோ=அடையாநிற்பதெவ்வாறோ (யானறியேன்), நீர் சொல்வீர்=தேவரீரருள்வீராக. எ-று.

இது பிரமேய சந்தேகம். (15)

(174) [சங்கைக் குத்தரங்கூறப்புகுந்து, அதற்கு ஏதுவான விசேஷங்களைக் கூறுகின்றார்.]

கருதுமனோ குணமூன்று மூன்றி லொன்று
கதித்தெழுந் தான் மற்றிரண்டுங் கரந்து நிற்கும்
தருமமிகுஞ் சத்துவமே லான போது
சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம்
மருவுரசோ குணமாகி லுலக தேக
வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகும்
அருமகனே தமோகுணமே லான போதி
லசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே. (16)

இ - ள். கருது மனோகுணம் மூன்று ஆம்=(விஷயங்களைக்) கருதாநிற்கும் மனத்தின் குணங்கள் மூவகைத்தாம், மூன்றில் ஒன்று கதித்து எழுந்தால்=அம்மூவகைக் குணங்களுள்ளே ஓர் குணமானது அதிகரித்தெழுந்ததாயின், மற்று இரண்டும் கரந்து நிற்கும்=ஏனைய இரண்டு குணங்களும் அடங்கிநிற்கும், தருமம் மிகும்=தருமம் மிகுந்துண்டாதற்குக் காரணமான, சத்துவம் மேல் ஆனபோது=சத்துவகுணம் மேலிட்டபோது, சன்மார்க்கம் ஆனதெய்வ சம்பத்து உண்டாம்=சன்மார்க்கமாகிய தெய்வசம்பத்துண்டாகும், மருவு ரசோகுணம் ஆகில்=சலவாநின்ற இராஜோகுணம் மேலிடுமாயின், உலக தேகவாதனை ஆம் சாத்திரவாதனையும் ஆகும்=உலகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனை என்னும் மூவித வாசனையு முண்டாம், அருமகனே=அருமையான மைந்தா, தமோகுணம் மேல் ஆனபோதில்=தமோகுணம் மேலிட்டபொழுது, அசுரசம்பத்து உண்டாகும்=(துன்மார்க்கமான) அசுரசம்பத்துண்டாகும், அறிந்துகொள்=(நீ இங்ஙனம்), தெரிந்துகொள்ளுதி. எ - று.

"தூயசத் துவஞ்சொள் சங்கற்பம் மிக்கநற் றரும ஞானம் வீடுளதாய் வேந்தர்வேந் தெனமிக விளங்கும்"—

என்னுஞ் சுருதியால், "தருமமிகுஞ் சத்துவம்" எ-ம், "சத்துவஞான மார் தமமஞ் ஞானமா மத்திமங்கு கலப்பதாம்" என்னுஞ் சுருதியால், "மருவுராஜோகுணம்" என்றுங் கூறினார். சன்மார்க்கமெனவே துன்மார்க்கம் வருவித்தாம்.

(175) சாயையமாய், அநிர்த்தியமாய் அரக்குச் சுவர்ணம் மெழுகு முதலியவை போல வெருவித் பரிணாமியோக்கியமாத திரவியம் யாது அது மனது. நேத்திர முதலிய இந்திரியங்களால் கடபடாதி விளங்குவபோலச் சாட்சியாகிய பிரத்தியகான்மாவாலே பிரகாசமாக விளங்குவனவான காமக்குரோதாதிவிருத்திகட்கு உபாதான காரணமாயிருப்பது மனது. கண்ணுக்கு எதிரே வெளிச்சத்திலிருக்கும் கடபடாதியும், காதுக்குச் சமீபத்திற் றிடமாயுச்சரிக்கும் சத்தமும் யாதென்று ஞாவதானமாயில்லாவிடில் அறியப்படாமல்,

யாதொன்று சாவதானமாயிருந்தால் அறியப்படுகின்றனவோ! அதுவே அந்நுவய வியதிரேகங்களால் சகலவிஷயஞானத்திற்குச் சாதாரணகாரணமான மனதென்று பிருகதாரணிய உபநிடதத்திற் கூறியிருக்கிறது; அது மனனம் பண்ணுகின்றமையால் மனதென்றும், சிந்தனைசெய்கின்றமையால் சித்தமென்றுஞ் சொல்லப்படும்; அச்சித்தமானது முக்குண காரியங்களான ஞானம், பிரவிர்த்தி, மோகம் என்னும் மூன்றனையும் அநுபவித்தலால் திரிகுணாத்மகமாக இருக்கும்; அந்தத்திரிகுணங்களும் சமுத்திரத்தினலைபோல நிரந்தரம் பரிணாமமடையும்; அப்பொழுது இரண்டு குணம் அடங்கி ஒருகுணம் அதிகரித்திருக்கும். சத்துவகுண மதிகரிக்கும்போது தெய்வசம்பத்தும், ரஜோகுண மதிகரிக்கும்போது உலகவாசனை, தேகவாசனை, சாஸ்திர வாசனையும், தமோகுண மதிகரிக்கும்போது அசுரசம்பத்தும் உண்டாகும்.

(176) வாசனையாவது, திடபாவனையால் முன்பின்னென்றையுமாலோசியாமலுண்டாகுங் குரோதாதி விருத்திக்கேதுவான சித்தத்தின் சூட்சுமாவஸ்தையாகிய சம்ஸ்காரம்; சுத்தாசுத்த பேதத்தால் அஃதிருவகைத்தாம். [அசுத்த மெனினும், மலினமெனினும் ஒக்கும்.]

(177) அவற்றுள் டம்பம், கர்வம், அடங்காதவகங்காரம், காமம், குரோதம், உலோபம், அவிவேகம், நித்திரை, ஆலசியம், பயம், மைதுனம் இவை முதலிய துர்க்குணங்களாகிய அசுரசம்பத்து ஒன்று, உலகவாசனை, சாஸ்திர வாசனை, தேகவாசனை மூன்று ஆகநான்கும் மலினவாசனை; இவற்றுள் டம்பம், தர்ப்ப முதலிய அசுரசம்பத்து நரகத்திற் கேதுவாதலால் மலினமென்பது பிரசித்தம்.

(178) சர்வசனங்களும் நாம் எவ்வாறிருக்கின் நம்மை நிந்தியாமல் ஸ்துதிசெய்வரோ அவ்வாறு நடக்கவேண்டுமென்னுந் துரபிமானம் உலகவாசனை; இது சம்பாதிப்ப தருமையாகலின், மலினவாசனை யெனப்படும்.

(179) இதற்குதாரணம் என்னையோவெனின்:—சர்வகுண சம்பன்னரான ஸ்ரீ - ராமச்சந்திரர்க்கும், பதிவிரதா சிரோமணியாகிய சீதைக்கும் காதினாற் கேட்கக்கூடாத * அபவாதம் சனங்களாலுண்டாயிருப்பது. தேசபேதத்தால் ஒருவரை யொருவர் நிந்திப்பது காணப்படுகிறது; என்னை? தட்சணதேசத்துப் பிராமணரால் உத்தர தேசத்து நிவாசிகளாய் வேதமறிந்து மாம்சபட்சணம் பண்ணுஞ் சனங்கள் நிந்திக்கப்படுகின்றனர்; உத்தரதேசத்துப் பிராமணரால் மாதுலன் கன்னியை மணம்புரியும் தட்சணதேசத்து நிவாசிகளான பிராமணர்கள் நிந்திக்கப்படுகின்றனர்; இப்படியே தந்தங் குலம், கோத்திரம், பந்துவர்க்கம், இஷ்டதேவதை முதலியவைகளைத் துதிப்பதும், அந்நிய குல கோத்திராதிகளை நிந்திப்பதும் வித்துவான் முதல் கோபாலர் பரியந்தம் பிரசித்தம்.

(180) இவ்வுலகவாசனை நசிக்கும்படியான வுபாயம் என்னையோவெனின்:—சர்வ சனங்கட்குஞ் சந்தோஷம்வரும்படி நடக்கத் தக்கவுபாயம்

* அபவாதம்—நிந்தை.

யாதொன்றுமில்லை ; தத்தம் மனதுக்குத்தோற்றினவாறே சொல்லாநிற்குஞ் சனங்களுடைய சொல்லால் நமக்கு என்னை? எவ்வழியானும் நமக்கு உறுதி பயப்பதையே நாம் அநுஷ்டிக்கவேண்டும் என்னும் விவேகமே உலகவாசனை நசித்தற்கு உபாயமாம் ; இவ்வபிப்பிராய முட்கொண்டே மோட்ச சாஸ்திரங் களில் அங்கங்கே ஞானியாகிய புருஷனுக்கு நிந்தையிலும், ஸ்துதியிலும் சமபுத்தி வேண்டுமென்று கூறியிருக்கின்றது.

(181) கர்மசாஸ்திர பாடாபிமானம், அர்த்தாபிமானம், அநுஷ்டானுபிமானம் எனச் சாஸ்திரவாசனை மூவகைத்தாம்.

(182) அவற்றுள், சாஸ்திர பாடாபிமானத்திற் குதாரணம் என்னையோ வெனின் :—பரத்துவாசர் மூன்று புருஷாயுள்வரையும் வெகு வேதங்களை அத்தியயனம்பண்ணி நாலாம் புருஷாயுளிலே இந்திரனாலே மீண்டும் வேதபாடத்திற் பிரவிர்த்திக்கப்பட்டபொழுது மிஞ்சியிருந்த வேதாத்தியயனத்தின்பொருட்டு முயற்சி பண்ணினார் ; அப்படிப்பட்ட பரத்து வாசருக்கே வேதபாடமுழுதுங் கிடைக்காமற் போனதால் அப்பாடாபிமானம் மலினவாசனை யெனப்படும்.

(183) அப்படியே வெகு சாஸ்திரார்த்தங்களை யறியவேண்டுமென்னு மபிமானமும் பரம புருஷார்த்தத்துக்குச் சாதனமாகாமையின் மலினவாசனையே; இதற்குதாரணம்:—ஓரிருடியானவர் வெகுவித சாஸ்திர புத்தக பாரத்தோடுகூட மஹாதேவரைத் தரிசித்தற்பொருட்டுச சந்நிதானத்தில் வர அங்கிருந்த மற்றோரிருடி அவரைப் பார்த்துப் பாரஞ்சுமக்குங் கழுதை போல நீவிர் புத்தகபாரங்களை நன்றாய்ச் சுமக்கின்றீரென்று கிருபையினாலே பரிகாசம்பண்ண அதுகேட்டு அவ்விருடியானவர் புத்தகங்களை யெல்லாம் லவண சமுத்திரத்தி லெறிந்துவிட்டனர் ; அப்போது கிருபாமூர்த்தியாகிய மஹாதேவர் அவ்விருடியை ஆத்மவித்தையிலே பிரவிர்த்திப்பித்தாரென்று சொல்லப்படுகின்றது.

(184) சாஸ்திரார்த்தத்தின் அநுஷ்டானுபிமானம் மலினவாசனை யென்பதற்கு உதாரணம். நிதாகரென்பவர் ரிபுவினாலே அடிக்கடி ஆத்ம தத்துவமுபதேசிக்கப்பட்டும் கர்மாநுஷ்டானத்தில் சிரத்தை விடவில்லை யென்பதும், தூதூரர் கர்மாநுஷ்டானத்தின் பொருட்டுப் பூமியிலோரிடத்துப் பரிசுத்தவிடத்தை யடைந்திலரென்பதும் ஆம். சாஸ்திரவாசனை பிரஹ்மாப்பியாசத்திற்கு விரோதியாவதானும், மேன்மேற் சென்மத்திற் கேதுவாதலானும், சுவேதகேதுவுக்குப்போலக் கர்வத்திற் கேதுவாதலானும் மலினவாசனை என்ப.

(185) தேகாத்மப் பிராந்தியானும், அதற்குக் குணஞ் சம்பாதிக்க வேண்டுமென்னும் பிராந்தியானும், தோஷத்தைப் போக்கவேண்டுமென்னும் பிராந்தியானும் தேகவாசனை மூவகைத்தாம்: அவற்றுள், தேகாத்மப் பிராந்திரூபமான தேகவாசனை சார்வாகர் முதலியோரிடத்துப் பிரசித்தம்.

(186) லௌகிக, சாஸ்திரீய பேதத்தால் தேகத்திற்குக் குணசம்பாதனை யிருவகைத்தாம்; அவற்றுள், நல்ல இராகத்தோடு கூடக் கானம் பண்ணுவதற்காக விளக்கெண்ணெய், மிளகு, நெய் முதலியவற்றைப் புசிப்பதும், தேகத்தைத் தொடும்போது மெத்தென விருத்தற்காகப் புஷ்டியைப் பண்ணத்தக்க ஔஷதங்களைப் புசிப்பதும், சரீரமழகா யிருத்தற்பொருட்டு அப்பியங்கஸ்நாந முதலியவை பண்ணி நல்ல வஸ்திராபரணங்களைத் தரிப்பதும், சரீரம் சுகந்தமாயிருத்தற்பொருட்டுப் புஷ்பமாலை யணிந்துகொண்டு சந்தன முதலியவைகளைப் பூசிக்கொள்வதும் லௌகிககுண சம்பாதனம். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணுவதும், சாளக்கிராமாதி தீர்த்தத்தைப் புரோட்சித்துக் கொள்வதும் சாஸ்திரீய குணசம்பாதனம்.

(187) தேகத்தின் தோஷத்தைப் போக்குவதும் லௌகிக, சாஸ்திரீய பேதத்தால் இருவகைத்தாம்; அவற்றில், வைத்திய சாஸ்திரத்திற் சொல்லிய ஔஷதங்களான் முகப்பிரச்சாளனாதி லௌகிகம். சௌச, ஆசமனாதி சாஸ்திரீயம்.

(188) இம்மூவகைத் தேகவாசனைகளும் மலினவாசனைகள். என்னை? தேகமே ஆத்மாவென்பது அப்பிரமாணமாகலானும், சகலதுக்க ஹேதுவாகலானும் மலினவாசனையாம்; இதைப் பெரும்பாலும் பூர்வாசிரியர் கூறியிருத்தலின், யாம் விசேஷமாக வுரைத்திலேம். குணசம்பாதனமும் வெகு முயற்சி பண்ணியக்காலும், அநேகம் பேருக்கு முழுவதுஞ் சித்திக்கக்காணேம். என்னை? இராகத்தோடுகானம் பண்ணுவதில் பிரசித்தராயிருக்கிற பாடகரும், வேதாத்தியயனம் பண்ணுவிக்கிறவரும் கீழ்ச்சொன்ன முயற்சிகளைச் செய்தும் நல்ல கண்டத்தொனியை யடைகிலர்: நியமமாகச் சரீரபுஷ்டியுங் காணப்படவில்லை. அழகும், சுகந்தமும் வஸ்திராபரணங்கட்கும், மாலை முதலியவைகட்குமேயல்லது தேகத்திற் குளவாதலில்லை: இச்சாஸ்திரீயகுண சம்பாதனமும் பிரபலமாகிய ஏனைய சாஸ்திரங்களால் வாதிக்கப்படுகிறது; அவை யாவையோவெனின்:—யாவனொருவன் வாதம், பித்தம், சிலேட்டுமமென்னும் மூவகைத் தாதுக்களோடு கூடிய பிரேதரூபமான தேகத்தில் யானெனும் புத்தியும், புத்திர, மித்திர, களத்திராதிகளில் எனதெனும் மமதையும், பாஷாணம், மிருத்து, தாரு, தாம்பிர முதலியவற்றின் விகாரமான மூர்த்திகளில் மாத்திரம் தெய்வபுத்தியும், கங்கையாதிய ஜலமாத்திரத்தில் தீர்த்தபுத்தியும் உடையனோ அவன் தத்துவவித்துக்களாகிய பெரியோர் சபையில் கர்த்தபமென்று சொல்லப்படுவனென்னும் பாகவதமும், தேகம் அத்தியந்தம் மலினம், ஆன்மா அத்தியந்தம் நிர்மலம் ஆதலான் தேகத்திற்கு எவ்வளவு சௌசம் பண்ணினும் அது சுத்தியுறாது, ஆன்மா நித்திய சுத்தனாதலால் சௌசப்பிரசித்தியே அவர்க்கில்லை என்னும் சூதசம்மிதையும் பிரபலசாஸ்திரங்களாம். ஔஷதம் புசித்தல் முதலியவற்றால் சாந்தமான உரோகம் மீண்டு மடிக்கடி யுளதாதலின், லௌகிக சரீரதோஷ நீக்கங்கூடாது. கீழ்ச்சொன்ன பாகவதவசனம், சூதசம்மிதை வசனங்களால் சாஸ்திரீயமான சரீர தோஷ நீக்கமுங்கூடாது; ஆதலால், தேகவாசனை மலினவாசனையே.

(189) சுத்தவாசனைதான் யாதோவெனின்:—பிரத்தியக்பின்ன பிரமத்தைத் திடாபரோட்சமாக அறிந்தவனிடத் திருப்பதாயும், வறுத்தவிதை போலத் தேகஞ் சீவித்தற்பொருட்டு உபயோகிக்கிறதாயும், டம்பம், கர்வ முதலிய அசுரசம்பத்தை யுண்டுபண்ணாததாயும், ஜன்மாந்திரத்திற் கேதுவாகாததாயும் உள்ள வாசனை சுத்தவாசனை என்றறிக. (16)

["மனமணி பேதைச் சேற்றின் மறைந்தொருவருக்குந் தோன்றா, கனமுறு விவேக நீராற் கழுவினுற்சித்தி காட்டும்" என்று இதற்கு முன்னூலாக்ய வாசிஷ்டத்திற் கூறியபடியே சத்துவ சொரூபமான மனதில் ஆகந்துகமாக இராஜஸ தாமசங்கள் அடைந்திருத்தலின், சன்மார்க்கத்தினை நிரந்தராநு சந்தானத்தால் அவை நீங்கி, அது சமாதியை யடையுமென்று, 15-ம் செய்யுளில் செய்த சங்கைக்கு உத்தரங்கூறல்.]

மனதுசத் துவசொரூப மற்றி ரண்டும்
வந்துகலந் தனவவற்றை மாற்றி னாற்போம்
தனது சன்மார்க் கத்தைவிடா திருந்தபோது
தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக்
கனபரிணா மஞ்சலனம் போம்போ னக்காற்
களங்கமற்று நின்றவா காசம் போலும்
மனதுமப் படியாமப் பிரமத் தொன்றாய்
நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே. (17)

இ-ள். மனது சத்துவசொரூபம்=மனதிற்குச் சத்துவமே (உபாதான மாகலின் அதற்கு அதுவே) சொரூபமாம், மற்று இரண்டும் வந்து கலந்தன=ஏனையவிரண்டுஞ் (சகாயமாக இடையே) வந்து பொருந்தின, அவற்றை மாற்றினால் போம்=அவைகளை நீக்கினால் நீங்கும். [நீக்குமுபாயங்கூறல்.] தனது சன்மார்க்கத்தை=மனத்தினியற்கை யுருவமான சன்மார்க்க (மாகிய தெய்வ சம்ப) த்தை, விடாது இருந்தபோது=விடாது (அநுஷ்டித்து) நிற்கும்போது, தமோகுணமும் ரசோகுணமும் சமிக்கும்=(விஷய பரிணாம வேதுவான) தமோகுணமும், (சலனவேதுவான) ரசோகுணமும் நசிக்கும், பின்னை, கனபரிணாமம் சலனம் போம்=கனமாகிய (விடய) பரிணாமமும், (ஒன்றினின் றொன்றிற் றாவுதற்குஞ்) சலனமும் (அதன்கணீங்கிப்) போம், போனக்கால்=(அவை)போகவே, மனது உளம்—உன் மனமானது, களங்கம் அற்று நின்ற=(மேகபடல முதலிய) களங்கமொழிந்து நின்ற, ஆகாசம் போலும்=(சரற்கால) வானம்போலச் சொச்சமாய், அசஞ்சல அதிசூட்சும மாம்; (ஆகவே), அப்படி ஆம் அப்பிரமத்து=அப்படி அசஞ்சல அதிசூட்சும மாகிய அந்தப்பிரஹ்மத்தில, ஒன்று ஆய்=ஏகரசமாய், நிருவிகற்ப சமாதியில், தானே நிற்கும். எ-று.

இதனகருத்து:—மனதுக்குச் சத்துவகுணமே முக்கிய உபாதான காரணம்: ரஜோகுண, தமோகுணங்கள் சகாயமாம்; ஆகலின், சன்மார்க்கமான

தெய்வ சம்பத்தால் ரஜசு, தமசெனும் இரண்டு குணங்களையும் போக்கும்போது சத்துவகுணமே அந்தக்கரணத்தின் சொரூபமாகச் சேஷிக்கும்; அச்சத்துவகுணமுஞ் சஞ்சலத்திற் கேதுவான ரஜோகுணமின்மையின் ஏகாக்கிரமாயும், பிராந்தியினாற் கற்பிக்கப்பட்ட அநான்மரூபமான ஸ்தூலபதார்த்தாகாரத்திற் கேதுவான தமோகுண மின்மையின் சூட்சுமமாயும் ஆன்மதரிசனத்திற்கு யோக்கியமாகுமென்பது. (17)

[மனது நிருவிகற்ப சமாதியில் பிரஹ்மத்தோடு ஏகமாய் நிற்றற்குத் உபமானங்கூறிச் சந்தேகம் ஒழிதியென உத்தரத்தை முடித்தல்.]

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது
விளங்கிய தன் மயமாகி யபேதமாகி
விகற்பமின்றி நிருவிகற்ப மானாற் போல
அளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தாய்ச் சித்தா
யானந்த மாம்பிரமத் தைக்கிய மான
உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே
யுலைவெங்கே யென்றுசங்கை யொழித்திடாயே (18)

இ - ள். களங்கம் அற்ற கண்ணாடி தன்முன்=நிர்மலமான (ஓர்) தர்ப்பணத்தினெதிரே, வேறு ஓர் களங்கம் அற்ற கண்ணாடி காட்டும்போது=நிர்மலமான மற்றோர் தர்ப்பணத்தைக் காண்பிக்கும்போது, விளங்கிய தன் மயம் ஆகி=நிர்மலமாகிய அக்கண்ணாடிமயமாய், அபேதம் ஆகி=அபேதமாய், விகற்பம் இன்றி=விகற்பமில்லாமல், நிருவிகற்பம் ஆனால் போல=நிர்விகற்பமாயினாற் போல, அளந்து அறியப்படா விபு ஆய்=இத்துணையளவினதென் றளவிட்டறியப்படாத வியாபகமாய், சத்து ஆய் சித்து ஆய் ஆநந்தம் ஆம் பிரமத்து=சத்தாயும், சித்தாயும், ஆநந்தமாயுமுள்ள பிரஹ்மத்தின்கண், ஐக்கியம் ஆன உளம்=ஏகரசமான அந்தக்கரணம், தெளிந்தபடி இருந்தால்=(தான்) தெளிந்தவண்ணமே நின்றால், உலகம் எங்கே=(அதற்கு) உலகரூப பரிணாமமேது, உலைவு எங்கே=சலன முளதாவதேது, என்று சங்கை ஒழித்திடாய்—என இவ்வாறு நிச்சயித்தது (இதுவிஷயமாக வெழுந்துள்ள) சந்தேகத்தை யொழித்திடுதி. எ - று.

"உளந்தெளிந்த படியிருந்தால்" எ - து, ஆரூடத்தன்மையை; ஆரூடர்க்குப் பிரபஞ்சத்தின் பாரமார்த்திகத்தன்மை அபாவமாய விடத்திலின் அதன் பரிணாமமும், அதைப்பற்றி யுளதாகுஞ் சலனமும் அவர்கண் மனத்திற்கிலவாம்; ஆகலின், "உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே யுலைவெங்கே யென்றுசங்கை யொழித்திடாய்" என்றார். இப்படியே.

"தத்துவஞானிகாணி யூமுந் ஏகத்தைக்கண்டிலன், தத்வமேகண்டான்"—

என்று பிரமகீதையிலும்,

"காதலின் ஞானியத்தைக் கண்ணினுற்றெரியக்காணுன்"

என்று பகவற்கீதையிலுங் கூறியிருப்பது காண்க. (18)

(190) [மனம் போகசாதனமாகலானும், மனமிறந்தோர் முத்தராக லானும் அவர்க்கு அஃதின்றிப் போகங்கூடுமா றெங்ஙனேயென வினுதல்.]

ஏகமாய் மனமிறந்தாற் சீவன் முத்த
ரிருக்குமட்டும் பிராரத்த மெதினு லுண்பார்
போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றோ
புசிப்பதென்றுன் மனந்தானும் போன தன்றே
சோகமா மனமிறந்தாற் போகமில்லை
தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூ டாதே
மோகமா மிதுதெளியக் குருவே நன்று
மொழிந்தருள்வாய் தெளிந்ததன்றோ முத்தி தானே. (19)

இ-ள். ஏகம் ஆய் மனம் இறந்தால்=(நன்னீரிலுப்புப்போலப் பிரஹ்ம த்தின்கண்) ஒன்றாய் மனமானது நாசமாயின், சீவன்முத்தர்=ஜீவன் முத்தர் கள், இருக்கும் மட்டும்=(தேகம்) உள்ளளவும், பிராரத்தம் எதினுல் உண்பார் =பிராரத்தபோகம் எச்சாதனங் கொண்டநுபவிப்பர், போகம் ஆனது புசி த்துத் தொலைப்பது அன்றோ=பிராரத்தபோகம் அநுபவித்துத் தொலைக்க வேண்டுவதோ? அல்லவோ, புசிப்பது என்றால்=அநுபவித்துத் தொலைக்க வேண்டுவது தானென்னின், மனந்தானும் போனது அன்றே=(போகசாத னமான) மனமும் இறந்ததல்லவே, சோகம் ஆம் மனம் இறந்தால்=துன்ப மயமான மனமானது நாசமானால், போகம் இல்லை=(சுழுத்தியிற்போலப்) பிராரத்த போகாநுபவமில்லை, தோன்றும் எனின்=(அஞ்ஞானிகட்குப் போல மனமிறவாமல்) தோன்றுமாயின், முத்தர் என்று சொலக்கூடாதே ஜீவன் முத்தரென்று சொல்லலாமா?, (ஆகலின்,) மோகம் ஆம் இது தெளிய =மயக்கமாகிய இச்சந்தேகம் ஒழிய, குருவே, நன்று மொழிந்தருள்வாய்= விசேஷமாக உத்தர முபதேசித்தருள்வீராக, தெளிந்தது அன்றோ முத்தி= ஐயந்தெளிந்த நிலையல்லவா ஜீவன் முத்தி. எ-று.

தான், ஏ- இரண்டும் அசைநிலைகள்.

இப்படியே வாசிட்டத்தில்,

"தனையுணர்ந்தோர், கொண்டுற்ற தொழிலெல்லா மனத்த தன்றோ, கொள்மனமன் றியினடக்குங் கொள்கை யென்னே,"—

என்று சிகித்வசனுல் வினவப்பட்டிருக்கிறது. (19)

(191) [சங்கைக்கு உத்தரம்.]

மனநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும்
வகுத்துரைப்பா ரிருவகையா வருமி வற்றில்

வினவாத சீவன்முத்த ரிடத்தி லொன்றாம்
　விதேகமுத்த ரிடத்திலொன்றா மேவுங் கண்டாய்
தனதான சத்துவமாய் மனஞ்சேஷித்துத்
　தமசுரச சுகணசித்தல் சொரூப நாசம்
அனகாசத் துவந்தானு மிலிங்க தேக
　மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம். (20)

இ-ள். வெளி.

"ஒன்றா மருவ முருவுமென வுரைத்திறை மோரிரண்டே"—
எ-ம்,

"சீவன் முத்தி தனிலுருவ நாசஞ் சித்தந் தனக்குளதாந், தாவி லுடறீர் முத்திதனிற் சாற்று மருவ நாசமுறாம்"—எ-ம்,

இதற்கு முன்னூலாகிய வாசிட்டத்திற் கூறியிருப்பதுபோல இங்குங் கூறினர். (20)

(192) [சங்கைக்குத்தரங்கூறி முடித்தல்.]

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகும்
　துகளிருள்போ றன்மனமென் சொல்லும் போம்போம்
வர்த்தமா னத்தில்வந்த வுணவை யுண்பார்
　வருவதும்போ வதுநினைந்து மகிழார் வாடார்
கர்த்தரா மகந்தையைவிட் டகர்த்த ராகிக்
　கரணவிருத் திகளவத்தை காண்பா ராகி
முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடி
　முட்டிலையென் றறிந்துசங்கை யோசிப் பாயே. (21)

இ-ள். சுத்தம் ஆம் சத்துவமே=சுத்தமான சத்துவகுணமே, உண்மை ஆகும்=(மனத்திற்கு) உபாதானகாரணமாம், துகள்=துகளென்னும் (இரசோகுணமும்), இருள்=இருளென்னும் (தமோகுணமும்), போறல்=(சன்மார்க்கமான ஞானாப்பியாசத்தினால் ஒழிந்து) போமாயின், மனம் என் சொல்லும்=மனமென்னும் வியவகாரமும், போம் போம்=ஒழிந்துவிடும், வர்த்தமானத்தில்=நிகழ்காலத்தில், வந்த உணவை=(பிராரத்தகர்மத்தால்) வந்து பொருந்துகின்ற உணவுகளை, உண்பார்=உண்ணுநிற்பர், வருவதும் போவதும் நினைந்து=(இனி) வருவதும், (முன்) போனதுமான (பதார்த்தங்களை அஞ்ஞானிகளைப்போல) நினைந்து நினைந்து, மகிழார் வாடார்=சந்தோஷியார், கிலேசியார், கர்த்தர் ஆம் அகந்தையைவிட்டு=(நாம் இதற்குக்) கர்த்தாவாமென்னும் அகம்பாவத்தை விடுத்து, அகர்த்தர் ஆகி=அகர்த்தாவாய், கரண விருத்திகள்=அந்தக்கரணாதி விருத்திகளையும், அவத்தை=விருத்திகட்கு ஆதாரகாலமாகிய (சாக்கிர முதலிய) அவஸ்தைகளையும்,

காண்பார் ஆகி—காணுஞ் சாட்சி ரூபராய், முத்தர் ஆய் இருக்கலும் ஆம்—முத்தராயிருக்கவுங் கூடும், புசிப்பும் கூடும்—பிராரத்த போகமுங் கூடும், முட்டு இலை என்று அறிந்து—(இவ்வாறிருத்தற்கு) யாதொரு தடையுமின்றென்று நிச்சயித்து, சங்கை மோசிப்பாய்—சங்கையை யொழிப்பாய். எ-று.

"சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகும்" என்றதால், சத்துவ நாசமாகும் விதேக கைவல்லியத்தில் உபாதானகாரணம் நசித்துக் காரியம் இராதாதலால் மனதத்தியந்த நாசமாமென்பது பெறப்படுகின்றது.

"சுத்தமோ படைக்கிருட்டாச் சொல்லு முக்குணமும்" என்று, முதற் படலத்திற் கூறியபடியே இராஜசதாமதங்களை இங்கும், "துகளிருள்" என்றார்.

"இல்லை யில்லை யென் றீசனியம்பிற்றை"—

என்பதுபோல, "போம் போம்" என்னும் அடுக்கு நிச்சயப் பொருளில் வந்தது. "வர்த்தமானத்தில்வந்த வுணவை யுண்பார் வருவதும் போவது நினைந்து மகிழார் வாடார்" எ-கு, அருவமனம் உண்மையானும், உருவமனம் இன்மையானும் என்பது கருத்து; இக்காரணத்தால் முத்தராயிருத்தற்கும், போகம் புசித்தற்கும் சந்தேகமின்றென்றறிதி என்பார், "முத்தராயிருக்கலுமாம் புசிப்புங்கூடு முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப் பாய்" என்றார். "கர்த்தா மகத்தையைவிட்டகர்த்த ராகிக் காணவிருத் திகளவத்தை காண்பாராகி" எ-து, முத்தர்க்கு விசேஷணம்; இவ்விசேஷணத்தில், "கர்த்தா மகத்தையைவிட்டு" என்ற விசேஷணம், இதற்கு முன்னூலாகிய வாசிட்டத்தில்,

"சித்தமாவது நானெனச் செப்புவர்"—எ-ம்,

"அகங்காரத் தருவா யந்தமன நிச்சயமாகத் திகழாய் நழுவி நெடு நாளாம்"—

என்றுங் கூறியிருப்பதால் இம்முக்கிய மனநாச முண்மையின், முத்தராதல் கூடுமென்று, "தோன்றுமெனின் முந்நடுவென்று சொலக்கூடாதே" என்னும் ஐயம் ஒழித்தற் பொருட்டாமென்க. "காணவிருத் திகளவத்தை" எ-கு, அந்தக்கரணத்தின் கோர, சாந்த, மூடவிருத்தி ரூபங்களாகிய சாக்கிர முதலிய அவஸ்தைகளை யெனினும் அமையும்.

"துகளிருள்போ னாமனமென் சொல்லும் போம் போம்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"நானையெனமன் னசன்கேட்பக் குறும்பன் சொல்லா
னுளமென்று சொன்னதுவே றொன்று மன்று
கனையுறுபல் பவந்தருவா தனமே யுள்ளங்
கண்ட தனை யறிந்தாலக் கவலை யில்லை

வையமீக்கண் டவர்கருமங் களிற் சரிக்கும்
வாதனைதான் மறுபிறப்பை வருவிக்கா தந்த
புமைமனஞ்சகந் துவமென்பர் சித்த மொன்றா
போதமில்லா சித்தத்தை யகல்வ தன்றே"—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (21)

[விகற்பரூபமான வியவகாரமுனை யோக்கு ஏகாக்ர சித்தத் தின்கணுள்ளதாகும் பிரஹ்மாநுபவம் அநேகாக்ர சித்த வொழிவா லொழிந்து போமல்லவாவென்று சீடன் கொள்ளு மாசங்கையைப் பற்றிக், கௌண மனநாசமில்லையாயி னும் அகங்காரரூபமான முக்கிய மனநாசமுண்மையான, ஆரூடர்க்கு வியவகாரத்தில் பிரஹ்மாநுபவம் நீங்காதென பதைத் திருஷ்டாந்தமுகத்தாற் கூறுகின்றார்.]

வியவகார வேளையெலாஞ் சமாதியென்றே
விகற்பமென்றே மனமலைந்து விடாதே விட்டால்
அவதான நழுவுமென்றே யென்று யாகி
லதற்கொருதிட் டாந்தங்கே ளாசைகொண்டு
நவமாகப் பரபுருடன் றன்னைக் கூடி
நயந்துசுக மநுபவித்த நாரி நெஞ்சந்
தவமாக மனைத்தொழில்கள் செய்யும்போதுந்
தழுவியசுக பவித்தகதந் தனைவிடாதே (22)

அவதானம்—பிரஹ்மான்ம வைக்கியரூபமான நிச்சயம். ஏனைய பதப் பொருள் வெளி.

(193) அபிப்பிராயம்.—திடஞானம், அதிடஞானம் என ஞானம் இரு வகைத்தாம்; அவற்றுள் வைராக்கிய, தியாகருப்பியாச வலியாற் சுவாதீன சித்தமுடையோனுக்குத் தத்துவஞான முண்டாகில் அவன் புத்தி சோரநாய கனிடத் தன்புள்ள நாரியின் புத்தி தனது வீட்டுக்காரியஞ் செய்யும்போதும் அச்சோரநாயகனையே தியானியா நிற்பதுபோல நிரந்தரந் தத்துவத்தையே தியானித்துக்கொண்டிருக்கும்; அத்தன்மையான ஞானந் திடஞானமெனப் படும். வைராக்கியம், தியாகருப்பியாச மின்மையோனுக்கு ஏதனுமொரு புண்ணிய விசேஷத்தால் தத்துவஞான முண்டாயினும் அவன் புத்தி சோர நாரியின் புத்தி வீட்டுக்காரியத்தை மறந்து விடுவதுபோல உடனே தத்து வத்தை மறந்துவிடும்; அத்தன்மையான ஞானம் அதிடஞானமெனப்படும். திடஞான முடையோர் திடப்பிரஞ்ஞர்; இத்திடப்பிரஞ்ஞர் காலபேதத்தால் சமாகிதர், உத்திதர் என இருவகையாயிருப்பர்; அவர்களுடைய லட்சணம் கீதையில் பகவானுற் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே திடப்பிரஞ்ஞரைச் சொன்னதால் அவருக்கு வியவகாரம் விரோதமாகாதென்பது.

இதற்கு, உ - ம், வாசிட்டம்,

"காயத்தில் வேறாகத் தன்னைக் கண்டோன
காயமிறினுமறியான் கன்னற் கட்டி
தீயிற்கா யினுமரிந்த போது மின்பந்
தீராத வாறுபோற் றெளிந்த ஞானி
மாயத்தின் மோகத்தாற் பேத மாகான்
மணந்தபர புருடன்மேன் மனஞ்சேர் மங்கை
நேயத்தான் மனைத்தொழில்கள் செய்யு மாபோ
னிகழ்தொழிற்செய் யினும்பரத்தி னிலைமை நீங்கான்." எ-ம்,

"வெறிதிருக்கினுந் தொழிலினை மேவினும் விடாம
லறிஞ னென்றுதான் சமாதிவிட் டகன்றவ னுகுஞ்
செறியுஞா னஞ்சேர் மனத்தினர் சகத்தொழில் செயினும்
பிறிவி றத்துவ நிட்டராய்ச் சமாதியிற் பெயரார்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (22)

[இனித் திடஞானத்தின்பலத்தை அறிவிக்குங் கருத்தினராய்ச்
சீடன்வினவும் வினுவைத் தாமே யெடுத்துக் காட்டி
அதற்கு விடைகூறத் தொடங்குகின்றார்.]

தேகத்த னலனாகி யகர்த்த னாகிச்
சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன்
போகத்தை யுண்பனென்றாற் கருத்தா வாமே
பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்டோ
சோகத்தை யறுத்தருளுங் குருவே யிந்தத்
துகளறுக்க வேண்டுமென்று சொன்னா யாகில்
மாகர்த்தன் மாபோகி மாத்தி யாகி
வகைமூன்று யவிருக்கு மகிமை கேளாய். (23)

இ - ள். தேகத்தன் அலன் ஆகி=ஸ்தூல சூட்சும சங்காதங்களி லிருக்கும் மநுஷத்வ, பிராமணத்வாதிகளிற் றுதான்மிய மற்றவனாய், அகர்த்தன் ஆகி=அகர்த்தனாய், சீவன் இன்றி=(அச்சங்காதங்களை விசேஷணமாக வுடைய) ஜீவத்வமிறந்து, பிரமம் ஆய்=பரிபூரணப் பிரஹ்மமாய், தெளிந்த முத்தன்=தன்னையறிந்திருக்கும் சீவன் முத்தன், போகத்தை உண்பன் என்றால=போகத்தைப் புசிப்பனென்று சொல்லில், கருத்தா ஆமே=கரும கருத்தாவாகிய ஸ்தூல சூட்சும சங்காதங்களும், சங்காத விசிஷ்டனும் தானுவனே, பூரணம் ஆம் அகர்த்தனுக்கு=பரிபூரணப் பிரஹ்மமே தானுயிருக்கும் அகர்த்தனாகிய சீவன் முத்தனுக்கு, போகம் உண்டோ=பிராரத்தபோகமேது?, சோகத்தை அறுத்தருளும் குருவே=துன்பத்தை யொழித்தருளிர

நிற்கும் ஆசிரியரே, இந்தத்துகள் அறுக்கவேண்டும் என்று சொன்னாய் ஆகில் ==இச்சந்தேகம் நிவிர்த்திப்பித் தருளவேண்டுமென்று நீ சொல்லில், யாகர்த்தன் மாயோகி மாத்திரயாகி (என), மூன்றுவகை ஆய்==மூவகையாய், அவர் இருக்கும்==அச்சீவன்முக்தரிருக்கும், மகிமை கேளாய்==பெருமையைக் கேட்பாய். எ-று.

கிரகத்தன் என்பதுபோல "தேகத்தன" என்றார். "தேகத்தனலறுகி" என்பதற்கியற்றிய வுரையின் கருத்தை, 63-ம் பிரசங்கத்தில் தருமாதகியா சத்திற் குதாரணங் கூறியிருப்புழி காண்க.

வினாவின் கருத்து:—யாவனிடத்துத் துக்கமுண்டோ அவன் துக்க நிவிர்த்தி, சுகப்பிராப்திகளி னிமித்தங் கிரியை செய்யாநிற்பன்; அவனே கர்த்தாவாம்; எவன் கர்த்தாவோ அவன் போகத்தை யுண்ணும் போக்தாவுமாம். புண்ணிய பாவங்களின் ஜநகமான கர்மத்திற்குக் கர்த்தாவும், கர்மபலமான சுகதுக்கங்களைப் புசிக்கும் போக்தாவும் ஸ்தூல சூட்சும சங்காதங்களாகலின், அவற்றிற்குச் சாட்சியான பரிபூரணப் பிரம்மசொரூபந் தானான சீவன் முத்தனுக்கு எவ்வாறு கர்த்திருத்துவ, போக்திருத்துவங் கூடும் என்பதாம். (23)

(194) [மஹாகாத்தர இலக்கணங் கூறுகின்றார.]

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தர்
 சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு மாபோல்
செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன்
 செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும்
மெய்கலந்த விந்திரிய விகார ரூப
 வியவகார விருத்திக்கும் விருத்தி தானே
மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யேநான்
 வெயில்போலென் றமைந்தவனே விபுமா கர்த்தன் (24)

இ-ள். செய்கையும்==(ஒன்றைச்) செய்யுந்தன்மையும், செய்விக்கையும்==செய்விக்குந் தன்மையும், அற்று==(தான்) உடைத்தாகாமல், இருக்கும்==(ஏகமாய்ப் பெரிதாய் அசஞ்சலமாய்) இருக்கின்ற, காந்தச்சிலை மலைமுன்==காந்தக்கல்லாகிய மலையின் முன்னே, இரும்புகள்==(அநேகமாய்ப பரிச்சின்னங்களாய்த் தமக்கெனச் சேட்டையற்றுள்ள ஊசிமுதலிய) இரும்புகள், சேட்டிக்குமாபோல்==சலியாநிற்குந் தன்மைபோல, செய்கையும்==(ஒன்றைச) செய்யுந் தன்மையும், செய்விக்கையும்==செய்விக்குந் தன்மையும், அற்று இருக்கும்==இன்றி (ஏகமாய்ப் பூரணமாய்ச சித்தாய்) இருக்கும், என்முன்==எனது சந்நிதியில், செடம் ஆன உலகம் எலாம்==(அநேகமாய்ப் பரிச்சின்னங்களாய்ச்) சடமாயுள்ள பிரபஞ்சங்களெல்லாம், சேட்டை செய்யும்==(தத்தம்) வியவகாரங்களைச் செய்யாநிற்கும், வெயில்போல்==(உலக வியவகாரத்திற்கும், வியவகாரத்தின் அபாவத்திற்கும் சாட்சிமாத்திரமா யிருக்கும்)

சூரியன்போல, மெய்கலந்த=சரீரத்தின்கட் பொருந்திய, இந்திரியவிகார ரூப=(நேத்திராதி) இந்திரியங்களால் *விகாரரூபமான, விவகார விருத்திக்கும்=(காண்டன்முதலிய) வியவகாரங்களையுடைய (மனோ) விருத்திக்கும், விருத்தி=மனோவிருத்தி, தானு=தன்மயமாக, மெய் கலந்த=பிரஹ்மத்தின்கட் பொருந்திய. சமாதிக்கும், நான் சாட்சியே என்று=யான் சாட்சி மாத்திரமாகவுளனென்று, உறைத்தவனே=அழுந்திய அநுபவமுடையவனே, விஷமாகர்த்தன்=வியாபகமான மஹாகர்த்தனும். எ - று.

"வெயில்" எ - து, சினையாகுபெயர்.

"நாட்டு பொறியினா னெறியிலெல்லாங் கொள்ளுந மனஞ்செய் துவநதன் றே"—எ - ம்,

"அணையுணாநதோ கொள்ளுற நெறியிலெல்லா மனத்த தன்றே"—எ - ம்

வாசிட்டத்திற கூறியபடியே இங்கும், "மெய்கலநத விநதிரிய விகார நுப விவகார விருத்திக்கும" என்றார். "செய்கை"=சுயங்கருத்திருத்வம். "செய்விக்கை"=அந்நியப்பிரேரணவேது கருததிருத்வம்; இவ்விரண்டுமில்லையென்பது அகர்த்தாத்ம திடநிசசயத்தாலெனக. (24)

[மஹாபோகி, மஹாத்தியாகிகளின் இலக்கணங் கூறுகின்றார்.]

அறுசுவையின் குணங்குறற மசுத்தஞ சுத்த
பபத்தியபத்தியமெனவு ளாய்ந்தி டாமல்
பொறுமையுடன் கிட்டினதைக காட்டுந் தீபம்போற்
போகஙகள் புசிபபவன்மா போகி யாகும்
சிறுதுபெரி துகடனதந் நியஙக ளெனனா
தீமைகள்சே ரினுமபாழ் கச செயல்போற் சிந்தம
வெறிதிருக்கு மவனேமா தியாகி யாவன
விரதமிமமூன றுமுடையவரே வீடு பெறாரே. (25)

இ-ள். அறுசுவையின் ஊண=சடுரசங்களையுடைய உணவுகளுள், குணம் குற்றம் (என)=(இது) குணமென்றும், (இது) குற்றமென்றும், அசுத்தம் சுத்தம (என)=(இது) அசுத்தமென்றும், (இது) சுத்தமென்றும், அபத்தியம் பத்தியம் என=(இது)அபத்தியமென்றும், (இது) பத்தியமென்றும், ஆய்ந்திடாமல்=பகுத்துப்பாராமல், பொறுமை உடன்=சகிப்போடுகூட, கிட்டினதைக் காட்டுத்தீப்போல்=(தன்னை) நெருங்கிய சகலத்தையுங் காட்டக்கினி புசிப்பதுபோல், போகங்கள் புசிப்பவன்=(உணவாதி) போகங்களைப் புசியாநிற்பவன், மாபோகி ஆகும்=மஹாபோகியாம், சிறிது பெரிதுகள்=சிறிதும்,

---

* விகாரம்=வேறுபாடு.

பெரிதுமான பொருள்கள், தனது அந்நியங்கள்= தன்னுடையதும், பிறருடையதுமான பொருள்கள், நன்மை தீமைகள்=புண்ணியபாவங்கள், சேரினும்=தன்னைவந்தடையினும், படிகச் செயல் போல்=(அடுத்த வர்ணங்களைப்பற்றாத) படிகத்தின் றன்மைபோல, சித்தம் வெறிது இருக்கும் அவனே =பற்றற்றிருக்கு மவனே, மாத்தியாகி ஆவன்=மஹாத்தியாகி யெனப்படுவன், இம்மூன்று விரதம் உடையவரே=(மஹாகர்த்தன், மஹாபோகி, மஹாத்தியாகி என்னும்) இம்மூவகை விரதமு முடையோரே, வீடு உளோர்= மோக்ஷத்தை யுடையராவர். எ - று.

"குணம்"=ரசமுடைய உக்கிருஷ்டாந்நாதிகள். "குற்றம்"=ரசமில்லாத நிகிருஷ்டாந்நாதிகள்; அல்லது, சாத்துவீகாகாரம், தாமதாகாரமெனினு மொக்கும். "அசுத்தம்"=பழைய பழஞ்சோறு, உச்சிஷ்டம், தேவாராதனத்துக்கு அருகமல்லாததுமுதலியன, "சுத்தம்" சீராக அப்போது சமைக்கப்பட்டுக் கண்ணுக்கு ரம்மியமாயும், நாவுக்கு ருசியாயுமுள்ள அந்நாதிகள். "அபத்தியம்"=வைத்தியசாஸ்திரத்தில் நிஷேதிததவை: "பத்தியம்"=அதில் விதித்தவை என்க. இங்கே "பொறுமை" எ - து, விகாரம் அடையாமையை: காட்டுத் தீயானது இது சந்தனமரம், இஃதெட்டிமரம், இது பச்சைமரம், இது பட்டமரம் எனப் பகுக்காமலும், கிட்டினதைவிட்டு அப்புறந்தாவாமலும், தான் அவைகளின் மயமாகாமலும் தன்மயமாக அவைகளைத் தகிப்பதுபோலத் தத்துவஞானியும் உசிதமான உணவுகளை நிரதிசயாநந்த பூரண அத்வைதாத்மபுத்தியால், அல்லது மித்தியா புத்தியால் பகுத்துப்பாராமலும், கிடைத்ததைவிட்டுக் கிடையாததை இச்சியாமலும், தான் அவைகளின் மயமாகாமலும் தன்மயமாகவே புசிப்பன்; இங்ஙனம் புசிப்பினும் நித்தியதிருப்தாத்ம தரிசனத்தாற் புசித்திலன். "ஊணாய்ந்திடாமல்" என்றதால், நன்றெனப்புசியாநிற்ப னென்பது கொள்ளக்கிடந்தது. இதற்கு முன்னூலான வாசிட்டத்தில்,

"அகலரச மிடி சுவை நன்றெனப் புசிப்போன்"—

என்று கூறியிருப்பதால் "உணவார்தி" என்றும். சுவர்ணத்திறற் செய்யப்பட்ட வியாக்கிரம் இரம்மியமான சுவர்ணதிருஷ்டியால் இரம்மியமாவதுபோலப் பிரஹ்மதிருஷ்டியால் சகல போகங்களும்சீவன் முத்தனுக்கு இரம்மியமாகத் தோற்றுவதால், "ஆய்ந்திடாமல்" என்றார். "வெறிதிருக்கும்" எ - து, மித்தியாபுத்தியாலென்க. "விரதமிம்மூன் றுடையவரே" என்னுந் தேற்றேகாரத்தால் தவம், மகம், தீர்த்தம், சேவை, அருச்சனை, தானமாதிய புறக்கருமங்களையுடைய மற்றையர் நிரதிசயாநந்த மோக்ஷம் அடையாரென்பது பெறப்படுகின்றது. இம்மூன்றையும் விஸ்தாரமாக அறியவேண்டில் வாசிட்டத்தில் விரதசூயைகதையில் பரமசிவனால் பிருங்கீசற் கருளிச்செய்யப்பட்டிருப்பதால் அதிற்காண்க. இம்மூவகை விரதங் கூறினவழியால், "போகத்தை யுண்பனேன் றுற்கருத்தா வாமே பூரணமா மகர்த்தனுக்குப் போகமுண்டோ" என்னும் சங்கைக்குப் பிராரத்த வசத்தால் போகத்தை

உண்பவனும், உசிதமான கருமத்தைச் செய்பவனும் ஞானிதோற்றினும் அகர்த்தாத்ம திருஷ்டியால் அவை அவனுக்கு இன்றென் றுத்தரங் கூறின தாம். (25)

(195) [ஞானபலமான கிருத கிருத்தியத் தன்மையைப் பற்றி உளதாதும் பிரமேயசந்தேகத்தை நிவிர்த்திசெய்து கோடற்பொருட்டுச் சீடன் வினுதல்.]

[வேறு.]

மெய்யுங் கொண்டுபி ராரத் தந்தரு விதிவழி நின்றிடவும்
உய்யுங் கர்மிக ளுக்கநு குணமா வுறுதொழில் செய்திடவும்
செய்யுஞ் செய்கைமு டிந்தவ னென்றுரை செப்புவ தெப்படியோ
மையுந் துன்பம கற்றிய குருவே நலமா வருள்வீரே. (26)

இ-ள். மெய்யும் கொண்டு—("சாலமிகு தொழிற் பறவைக்கிடமாங் கூடு" என்னும்) சரீரமுந் தரித்துக்கொண்டு, பிராரத்தந்தரு—பிராரத்தத்தால் வரப்பட்ட, விதி வழி—நியதியின் நெறியில், நின்றிடவும்—நிற்கவும், உய்யும் கர்மிகளுக்கு—(உறுதியறிந்து தாம்) பிழைக்கவேண்டுமென்னும் கருமகாண்டிகட்கு, அநுகுணமா—அநுகூலமாக, உறுதொழில்—பொருந்துகின்ற கருமோபாசனைகளை, செய்திடவும்—செய்யாநிற்கவும், செய்யும் செய்கை முடிந்தவன் என்று—(ஞானி) கிருதகிருத்தியனுமென்று, உரை செப்புவது—கூறுகிறபது, எப்படியோ—எவ்வாறோ (யான் அறியேன்), மையும் துன்பம்—(வெகுகாலமாக) வருந்துதற்குக் காரணமாயிருந்த துக்கங்களை, அகற்றிய குருவே—ஒழிவித்தருளிய குருவே, நலமா அருள்வீர்—(இச்சங்கைக்கு) நன்றாக உத்தரம் அருள்செய்வீராக. எ-று.

ஞானத்தால் அஞ்ஞானநிவிர்த்திசெய்து துன்பம் ஒழிவித்தமையின், "மையுந் துன்பம கற்றிய குருவே" என்றான். (26)

[மேலே வினவிந்த விடைகூறல்.]

ஆடவர் செய்தொழின் மூவகை யாகுமவித் தைவசத் துறுநாள்
எடணை மமதைய கந்தையு மார்க்கே யிகபர விவகாரம்
வீடணு குவதொ டிச்சையு மார்க்கோ வித்தைய டிப்படி தெலாம்
பாடன்மி குந்தொழி லாற்பல னுண்டோ பரிபூ ரணமானால். (27)

இ-ள், அவித்தை வசத்து உறும்நாள்—(தத்துவஞானத்திற்கு முன்னே) அவித்தியாவசத்திற் பொருந்தி யிருக்குங்காலையில், ஆடவர் செய்தொழில்—(இஷ்டப்பிராப்தி, அநிஷ்டநிவிர்த்திகாகப்) புருஷராயினோர் செய்யத்தக்கனவான கிருத்தியங்கள், மூவகை, ஆகும்—(உழவாதி, எக்ஞாதி, சிரவணாதி என) மூவிதமாம், (அவற்றுள்) எடணை—(போகத்தில்) இச்சையும், மமதை—(குடும்பத்தில் எமதென்னும்) அபிமானமும், அகந்தை—(தேகத்தில்

ஆத்மத்துவ, பிராமணத்துவாதி) அபிமானமும், உளார்க்கே=உடையோர்க்கே, இகபர விவகாரம்=(உழவாதிகளான) இகலோக (வியவகாரங்களும், எக்ஞாதிகளான) பரலோக வியவகாரங்களும் (செய்யத்தக்கனவாம்), வீடு அணுகுவம் எனும்=(அநேக ஜநநந்தொடுத்துத் தாம் அநுஷ்டித்து வந்த நிஷ்காமபுண்ணிய புஞ்சபரிபாகவசத்தால் சித்தசுத்தி யடைந்து சகத்து அநித்தியமென்னும் விவேகமுதயமாகலின், ஏடணை மமதை அகந்தைகள் குறைந்து) மோட்சமடையக் கடவேமென்னும், இச்சை உளார்க்கே=இச்சையுடையோர்க்கே, வித்தைபடிப்பது எலாம்=ஞானசாஸ்திர சிரவண, மனன, நிதித்தியாசனங்களனைத்தும் (செய்யத்தக்கனவாம்), பரிபூரணம் ஆனால்=(தேசகாலவஸ்து பரிச்சேத சூனியமான) பிரஹ்மமேதாமானால், பாடல்=சிரவண மனனாதிகளான (மோட்சகிருத்தியங்களாலும்), மிகும் தொழிலால்=மிகுந்த (உழவாதிகளான) இகலோக கிருத்தியங்களாலும், (எக்ஞாதிகளான) பரலோக கிருத்தியங்களாலும், பலன் உண்டோ—(அவர் அடையத்தக்க) பயன் யாதேனும் உண்டோ? (இல்லை). எ - று.

“பாடல்” எ - து, உபலட்சணம்.

“யாதொன் றினைப்பெற் றவிதனின் மிக்கதொன் றுண்டென்ணார்.”—

என்று சீதையில் பகவானாலும், யாதொருலாபத்துக்கு மேலானலாபம் வேறொன்றுமில்லையோ அது பிரஹ்மமென்று ஆத்மபோதத்தில் பூஜ்யபாதரான சங்கராசாரியராலும் அருளிச்செய்யப்பட்டிருப்பதானும், தமது அநுபவ பலத்தானும் பிரஹ்மலாபத்துக்கு மேலானதாக ஞானிகளால் அடையத்தக்கதான இலாபம் வேறொன்று மில்லையென்பார், “பலனுண்டோ பரிபூரணமானால்” என்றார்.

குடும்பபுத்தியும், போகேச்சையும் இன்மையின், உழவாதிகளும், கிஞ்சிஞ்ஞனுக்கு விஷயமான எக்ஞாதிகள் தனக்கு விஷயமாகாமையின் அவ்வெக்ஞாதிகளும், பிரஹ்மமானது கண்டசாமீகர நியாயம்போல ஞானியால் அடையப்பட்டிருத்தலின் சிரவணாதிகளும் ஞானிக்குச் செய்யவேண்டுவனவாகவில்லை; இதுவே கிருதகிருத்தியத்தன்மை யென்றறிதி என்பதாம் (27)

(196) [இன்னும் இதனை நன்றாக அறியவேண்டித் தாணுகநந நியாயப்படி சங்கிக்கின்றான்.]

குரவர்சி காமணி யேகே ளீர்நீர் கூறின வழியொக்கும்
பரமுட னிகமுமி ழுந்தவ ரன்றோ பழகுவர் மெய்ஞ்ஞானம்
விரவுமு யற்சியின் மீண்டவ ரதையினி வேண்டுவரோவேண்டார்
சிரவண மனனா திகள்வேண் டாவோ சித்தமு றைத்திடவே. (28)

இ - ள். குரவர் சிகாமணியே கேளீர்=தேசிகசிரோரத்னமே (எனது விண்ணப்பம்) கேட்பீராக, நீர் கூறின வழி ஒக்கும்=(“பாடன்மிகுந் தொழி

லாற் பலனுண்டோ பரிபூரணமானல்") என்று தேவரீரருளிச்செய்த வழி ஒவ்வும், பரமுடன் இகமும் இழந்தவர் அன்றே=பரலோகத்திச்சை யும், இகலோகத்திச்சையும் விட்டவரல்லவா, மெய்ஞ்ஞானம் பழகுவார்=தத் துவஞானம் பயிலாநிற்பர், விரவும் முயற்சியின் மீண்டவர்=(போகேச்சை யுடையரால்) பொருந்தாநிற்கும் (இகலோக பரலோக) முயற்சியினின்றும் (ஞானநெறிக்கண்) மீண்டவர், அதை இனி வேண்டுவரோ வேண்டார்=அவ் விகலோக பரலோக கிருத்தியங்களாகிய உழவாதி, எக்ஞாதிகளை இனி(ச் செய்ய) விரும்புவாரா? விரும்பார், சித்தம் உறைத்திட=சித்தம் அநுபூதிக் கண்ணழுந்த, சிரவண மனன ஆதிகள் வேண்டாவோ=சிரவண மனன நிதித் தியாசனங்கள் (அவர்க்கு) வேண்டாவோ. எ - று. (28)

[மேலை வினுவிற்கு விடை கூறல்.]

கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல்செ யக்கடனே
தளர்வற சிந்தித் தலின்முயல் வார்சிலர் சந்தே கங்களுளார்
தெளிதலி னிற்பார் விபரீ தப்பேய் தீரா வாதனையோர்
வெளியுரு வாயறி வாய்நிறை வாயினர் வேண்டுவ தொன்றுண்டோ

இ - ள். கிளர் மகனே கேள்=(ஞானமயமாய்) விளங்காநின்ற மைந்தா (உனது வினுவிற்கு யாங்கூறும் விடையினை) நீ கேட்பாய், தத்துவம் அறி யார்=(அத்துவிதமான) பிரஹ்மத்தை (ஆன்மாவாக) அறியாதவர், கேட்டல் செயக்கடனே=சிரவணஞ்செய்ய வேண்டுவது முறைமைதான், தளர்வு அறு சிந்தித்தலின் முயல்வார்=(சகல) இடருமறுதற்குக் காரணமான மனனத் தின் முயற்சிப்பர், சந்தேகங்கள் உளார் சிலர்=சந்தேகங்களையுடைய சில பேர், விபரீதப் பேய்தீரா வாதனையோர்=விபரீதப்பேயென்னு மொழியாத (மலின) வாசனையுடையவர், தெளிதலில் நிற்பார்=நிதித்தியாசனத்தின்கண் (முயற்சியுடையராய்) இருப்பர், வெளி உருவு ஆய்=(அஞ்ஞானத்தின்) மறைப்பொழிந்த சொரூபமாய், அறிவு ஆய் = (தேகேந்திரியாதிகளைக் காணும்) அறிவாய், நிறைவு ஆயினர்=(பன்மைப்பேய்களுக்கவகாசமில்லாத) பூரணரூபமாயினோர், வேண்டுவது ஒன்று உண்டோ=வேண்டு மென்று (அநு ஷ்டிக்கத்தக்கது சிரவண மனன நிதித்தியாசனங்களுள்ளே யாதானும்) ஒன் றுண்டோ ! (இல்லை). எ - று.

திதி, வார, நட்சத்திர, யோக, கரணங்களை அறியாதோர் பஞ்சாங்கத் தைக் கேட்டாவது, பார்த்தாவது அறியவேண்டுவதுபோலத் தத்துவம் அறி யாதோர் சிரவணஞ் செய்யவேண்டுவது. பொன்னின்மாற்று நிர்ணயத்திற் சந்தேகமுள்ளவர்கள், ஆணிவைத்து உரைத்துப் பார்த்துக் கொள்ளுவது போலச் சீவபிரஹ்மங்களின் அபேதஞ் சத்தியமா? அல்லது பேதஞ் சத்தியமா என்பது முதலிய சந்தேகமுடையவர்கள் மனனம் பண்ணவேண்டுவது. திக்குப்பிரமை கொண்டோர் அதற்குக் காரணமான சூரியாதிகளை நாடித் தெளிவதுபோல விபரீதபாவனையுடையோர் நிதித்தியாசனஞ்செய்யவேண்டு

வது. "வெளியுநவாய்" என்றதால், சிரவணஞ் செய்தற்குக் காரணமான அஞ்ஞானமும் "அறிவாய்" என்றதால், மனனஞ் செய்தற்குக் காரணமாகிய சந்தேகமும், "நிறைவாய்" என்றதால், நிதித்தியாசனஞ் செய்தற்குக் காரணமான விபரீதபாவனையும் ஆரூடர்க்கு இன்றென்பதைக் குறிப்பித்தனர் என்க. (29)

(197) [வியவகாரமுடைய ஞானிகளிடத்து அஞ்ஞான, சந்தேக, விபரீதங்களுளா விபரீதபாவனை இல்லையென்பது எங்ஙனெனன வினுதல்.]

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா னிகள்போலே
செய்யா நின்றேன் கண்டே னுண்டேன் சென்றே னெனலாமோ
பொய்யாம் விபரீ தங்களவற்குப போயின வென்றீரே
மெய்யாம் பிரமவி சாரமி தன்றோ வெளியா வுரையீரே. (30)

இ-ள். ஐயா கேளீர்=குருவே கேட்பீராக, தத்துவஞானியும்=பிரஹ்மஞானியும், அஞ்ஞானிகள் போலே=அஞ்ஞானிகளைப் போலவே, செய்யாநின்றேன்=(ஸ்நாந முதலியவற்றைச) செய்கின்றேன், கண்டேன்=(இவனைக்) கண்டேன், உணடேன்=(இன்னவந்நாதிகளை) உண்டேன், சென்றேன்=(இன்ன கிராமத்திற்குச) சென்றேன், எனல் ஆமோ=என்று சொல்லலாமா, பொய் ஆம் விபரீதங்கள்=மித்தையாகிய விபரீத பாவனைகள், அவர்க்குப்போயின என்றீரே=அப்பிரஹ்மஞானிக்கு நீங்கின வென்றருளிச் செய்தீரே, மெய்யாம் பிரமவிசாரம் இது அன்றோ=(அவனுக்குரிய) சத்தியமாகிய பிரஹ்மவிசாரம் இஃதல்லவோ, வெளியா உரையீர்=வெளியாக இதனை யருள்வீராக. எ-று.

"பிரஹ்மவிகாரமிதன்றோ" எனவும் பாடமுளது; அது பிறழ்ந்த பாடம். "பிரஹ்மவிசாரமாவது"

" அறுவினுக் கறுவு நானே யப்படி மகத்து நானே
துணியிலெப் பொருளு நானே சோதியுட் சோதி நானே
பணிவுறந் தகுவே னானே பழையனும் புருடனானே
யிணைதனக் கில்லா வீர னாகிய வின்ப னானே "—எ-ம்,

" ஒன்றி லொன்றுமக னொன் றகாரபற் றாலெ மமதை யகங்காரமு மென்ற வொன்றுமிலன், துன்றுகுண மூன்றிலன் சமரசா விலனான் சுத்தன் றாவறினுன், நின்ற சாந்தன் சமரசனான்."—எ-ம்,

"இரண நுனிகள் விசும்பிரவி தேவருநகர் நரரிடத்தில், விரியுமறிவே நான், குறுக்கு மேல்கீழென்போ தப்பெருமை யுலாவியது."

என்பதுமாம்.

நான் சென்றேன், கண்டேன், உண்டேன் என்பது அதற்கு முரணுத லான், இங்ஙனம் வியவகரியாநின்ற ஞானிக்கு விபரீதபாவனை இன்ருவது எவ்வாறுமென்பது சீடன் கருத்து. (30)

[அதற்கு விடைகூறல்.]

ஓய்ந்தக ளுவிற் கண்டப ழங்கதை யோதுவன் வாதனையால்
ஆய்ந்தறி வுற்றவ னப்படி செப்புவ னுபா சனுமாகான்
மாய்ந்தத னுடல்வே மளவும் விண்ணவன் மநுட னெனப்படுவான்
வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகா ரந்தொடரும். (31)

இ-ள். ஓய்ந்த கனுவில்=சாக்கிர வியவகார மொழிந்த சொப்பனத் தில், கண்ட பழங்கதை=(ஒருவன் நாநா வியவகாரங்களைக் கண்டு சாக்கிரத் தில் விழித்துப்) பூர்வந்தான் கண்ட வியவகாரங்களை, வாதனையால்=(பூர்வ) வாசனையால், ஓதுவன்=(எப்படிச) சொல்லுவனே, அப்படி ஆய்ந்து அறிவு ற்றவன்=(ஆன்மா, அநான்மாக்களைத்) தேர்ந்து (அநான்மாவாகிய தேகாதி களில் அத்தியாசமொழிந்து சந்தேகமில்லாமல் ஆன்மாவை) அறிந்தவன், செப்புவன்=(பூர்வவாசனையால் செய்யாநின்றேன், கண்டேன், உண்டேன், சென்றேன் என்று) வியவகரியா நிற்பன், [இங்ஙனம் வியவகரிக்கினும்,] ஆபாசனும் ஆகான்=(வியவகாரகர்த்தாவாகிய) அந்தக்கரண சகிதனும், (வியவகாரகரணமும்) அவனலனுவன், [வியவகாரம் எதுகாறுந் தொடர்ந்து நிற்குமெனின்], மாய்ந்த தன் உடல் வேம் அளவும்=(தேவத்துவ மடைவோ மென்று அக்கினியிற் பிரவேசமாய்) மாய்ந்த தன் தேகம் வெந்து நீருகுமள வும், விண்ணவன்=தேவனு யிருப்பவன், மநுடன் எனப்படுவான்=(அந்நிய ரால்) மநுடனென்று(இங்ஙனம்) வியவகரிக்கப்படுவனே (அங்ஙனம்), வீய்ந்த சிதாபாசன் போம் அளவும்=(தத்துவஞானத்தினுல் அகம்பாவம்)இறந்த சிதா பாசன் (அத்தியந்தம்) அபாவமாகும் (விதேக கைவல்லியம்) அளவும், விவ காரம் தொடரும்=வியவகாரம் தொடர்ந்து நிற்கும் எ-று.

அரசனுயுள்ளோன், நித்திரா மோகத்தாற் சொப்பனத்தில் பிட்சையேற் பவனுகத் தன்னைக் கண்டு விழித்தபின் அம்மோகம் நீங்கி அரசனு யிருந்து கொண்டு முன்னே சொப்பனத்திற் கண்ட வாசனையால் தன்னைப் பிட்சகனு கச் சொல்லினும் உண்மையாகத்தான் பிட்சகனென்பது அவனுக்கு உள்ளே இல்லாமைபோல ஞானியும் பூர்வவாசனையால் சிதாபாசனுகத் தன்னை வியவ காரத்திற் சொல்லினும் அவனுள்ளே அகங்காரக் கிரந்தி யின்மையின் அவன் சிதாபாசனல்லன்.

தான் தேவனுகவேண்டுமென்று அக்கினியிற் புக்கிறந்தோன் உடனே தேவனுனலும் அவன் தேகம் நசிக்குமளவும் மநுடனுக அந்நியரால் எப்படிவிய வகரிக்கப்படுவனே அப்படித் தத்துவஞானத்தால் ஞானியும் உடனே பிரஹ்ம மானுலும் பிராரத்ததேகம் நசிக்குமளவும் அந்நியருடைய திருஷ்டிக்குச் சிதாபாசனுக வியவகரிக்கப்படுவன்; அவ்வியவகாரம் விதேக கைவல்லிய மள வுந் தொடரா நிற்குமென்பது கருத்து. (31)

[திருசியம் மித்தையாயினும், ஞானியும் நிஷ்டைகூட வேண்டியது ஆவசியகமாதலால், கர்த்தவ்வியமான அதனை அநுஷ்டிக்கு மவன் கிருத கிருத்தியனாவது எங்ஙனமென விறுதல்.]

ஆனலையா குருவே காண்ப தசத்திய மென்றாலும்
நானா விவகா ரந்துய ரலவோ ஞானசு கந்தருமோ
போனா லன்றோ நன்றா நிட்டை பொருந்திடல் வேண்டாவோ
தானா நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படியோ. (32)

இ-ள். ஆனல்—ஞானி வியவகாரம் விதேக கைவல்லியமளவுந் தொடருமானல், ஐயா குருவே, காண்பது அசத்தியம் என்றாலும்—திருசியம் பொய்யெனினும், நானா விவகாரம் துயர் அலவோ—(திருசியத்தைப்பற்றிய) நாநா வியவகாரங்கள் துன்பமல்லவா?, ஞானசுகம் தருமோ—பரிபூர்ண பரமாநந்த பரமசீதளமான பிரஹ்மாநந்தத்தைத் தருமா, போனல் அன்றோ நன்று ஆம்—(அவ்வாகிய வியவகாரம்) நீங்கினல்லவா அவ்வாநந்தமுளதாம், (அதற்கு) நிட்டை பொருந்திடல் வேண்டாவோ—நிருவிகற்ப சமாதிகூட வேண்டுமே?, தான் ஆம் நிட்டை புரிந்தால்—தன்மயமாகுஞ் சமாதிசெய்யின், (அவன்) செய்கை தவிர்ந்தவன் எப்படியோ—கிருத கிருத்தியன் (ஆமாறு) எவ்வாறோ யானறியேன். எ - று. (32)

[விறுவிற்கு விடை கூறல்.]

தெரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும் விவகாரம்
உரியதி யானமும் விவகா ரங்களு முள்ளத் தொழி லன்றோ
துரியப ரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண்டோ
அரியச மாதிகள் பழகுவ னேலவ னாரூ டனுமன்றே (33)

இ-ள். தெரிதரும் மகனே—தன்னுண்மை தெரிந்திருக்குமைந்தா, ஆரம்பத்தொடு விவகாரம் தீரும்—பிராரத்தகர்மத்தோடு கூட வியவகாரம் ஒழியாநிற்கும், உரியதியானமும் விவகாரங்களும் -(ஆரூடர்கள் செய்யும்) பிரஹ்மாநந்த மடைதற்குரிய சமாதியும், வாகிய வியவகாரங்களும், உள்ளத்தொழில் அன்றோ—அந்தக்கரணமாத்திரத்தின் வியவகாரமல்லவா (ஆகலின்), துரிய பரம்பொருள் ஆனவர்—துரியமாகிய பரம்பொருளேதாமான வாரூடர், வேறு ஒரு தொழில் செய்வதும் உண்டோ—வேறு யாதானுமொரு தொழிலைச் செய்வதும் உண்டா! (இல்லை), அரிய சமாதிகள் பழகுவனேல்—அந்நியாரலடைதற்கரிய சமாதிகளை (க்கர்த்தவ்விய புத்தியோடு கூடி) முயலுவனாயின், அவன் ஆரூடனும் அன்று—அவன் (கிருத கிருத்தியத்வமுடைய) ஆரூடனுமலனும். எ - று.

(198) வியுத்தான சம்ஸ்காரத்தினொழிவும், நிரோத சம்ஸ்காரத்தின் பிரகடத்தன்மையுமாகிய அந்தக்கரணத்தின் ஏகாக்கிரதத்தன்மை ரூபமான பரிணமஞ் சமாதி எனப்படும்; அச்சமாதியும் சவிகற்பசமாதி நிருவிகற்ப சமாதி எனஇருவகைத்தாம். ஞாதா, ஞான, ஞேயரூபத் திரிபுடித் தோற்றத்தோடு

கூட அத்விதீயப் பிரஹ்மத்தின்கண் அந்தக்கரண விருத்தியின் ஸ்திதி சவிகற்பசமாதி எனப்படும்; அதுவும் சத்தாநுவித்தம்,சத்தாநநுவித்தம் என இருவகைத்தாம்; அவற்றுள், அகம்பிரஹ்மம் என்னும் சத்தத்தோடு கூடியிருப்பதைச் சத்தாநுவித்தமெனவும், சத்தரகிதத்தைச் சத்தாநநுவித்தமெனவுங் கூறுவர். திரிபுடித்தோற்றமின்றி அகண்ட பிரஹ்மாகாரமான அந்தக்கரண விருத்தியின் ஸ்திதியை நிருவிகற்ப சமாதியென்பர். இவ்வாறு சவிகற்ப சமாதி, நிருவிகற்ப சமாதிகட்குப் பேதமுண்டு; அவைகளில் சவிகற்பசமாதி சாதனம்: நிருவிகற்பசமாதி பலமாம்; நிருவிகற்பசமாதியும் அத்வைதபாவனு ரூபமென்றும், அத்வைதாவஸ்தாந ரூபமென்றும் இருவகைத்தாம். அத்வைதப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடு கூடில் அது அத்வைத பாவனுரூப நிருவிகற்ப சமாதியெனப்படும்; அச்சமாதியின் அப்பியாச மிகுதியால் பிரஹ்மாகார விருத்தியுஞ் சாந்தமாய்விடில் விருத்தி ரகிதமான அச்சமாதி அத்வைதாவஸ்தாநரூப நிருவிகற்ப சமாதியெனப்படும். அத்வைதாவஸ்தாந ரூப நிருவிகற்ப சமாதியே முக்கிய பலமாம்: அத்வைத பாவனுரூப நிருவிகற்பசமாதி அதற்குச் சாதனமாம் என்ப; இவ்வபிப்பிராயத்தால் இவ்வாசிரியருஞ் "சமாதிகள்" என்று பன்மையாக்கூறினர்.

(199) ஆரூடஞானிக்கு மனன, நிதித்தியாசனமும் கர்த்தவ்விய மன்று; சீவன்முத்தியின் ஆநந்தநிமித்தம், மனன நிதித்தியாசனங்களிற் பிரவிர்த்தியாநிற்பன்; அதுவும் தனதிச்சையாற் பிரவிர்த்திப்பன். நான் வேதத்தின் ஆக்ஞையைச்செய்யாவிடில் எனக்கு ஜநநமரணரூப சம்சார மூளதாமென்னும் புத்தியோடுகூடிக் கிரியை செய்யில் அது கர்த்தவ்வியமெனப்படும். ஞானி ஆன்மாவை அசங்கனுக அறிந்துளனேனும், தேகத்தின் போஜனுதி வியவகாரங்களை, அல்லது ஜநகன் முதலியோர் போல அதிகமான இராச்சியபார பாலனுதி வியவகாரங்களைச் செய்வன்; அவ்வியவகாரத்திற்கு ஞானம் விரோதியன்று: வியவகாரமும் ஞானத்திற்கு விரோதியன்று. என்னை? யாதொரு ஆன்மசொரூபத்தை அசங்கமாக அறிந்துளனே அவ்வான்மாவின்கண் வியவகாரந் தோன்றுமாயின் வியவகாரத்திற்கு விரோதி ஞானமாம்; அப்படியே ஞானத்திற்கு விரோதி வியவகாரமாம்; அங்ஙனந் தோன்றுமற் சம்பூர்ண வியவகாரங்களும் தேகாதிகளின் ஆசிரிதமென்றும், ஆன்மாவின்கண் வியவகாரத்தோடு கூடிய தேகாதிகளின் சம்பந்தமில்லையென்றுந் தோன்றுகின்றது. இக்காரணத்தால் ஞானிக்குப் பிரவிர்த்தியும் நிவிர்த்தியென்றே சொல்லப்படுகிறது. ஆதலான், "உரியதீ யானமும் வியவகாரங்களு முள்ளாத் தொழிலன்றே, துரியபரம்போத ரானவர் வேறோர் தொழில் செய் வதுமுண்டோ" என்றனரென்க. (33)

[ஆனால், ஆரூடருந் தியானுதிகள் செய்யக் காணப்படுகின்றனர்; அவை யெற்றிற்கென வினவி அதற்கு விடைகூறல்.]

உத்தம குருவே யாரூ டருமா யொருதொழி லற்றவருள்
சித்தம டங்குதி யானுதிகள் சிலர் செய்குவ தென்னென்றால்

இத்தல மருவும் பிராரத்த தப்பிறி வெப்படி யப்படியே
முத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே (34)

இ-ள். உத்தம குருவே=(போதககுரு முதலியோருள்ளே) உத்தமமான விதிதகுருவே, ஆரூடரும் ஆய்=சொரூபத்தில் நிற்பவரும், (திருசியத்தில் வீழாதவரும்) ஆய், ஒரு தொழில் அற்றவருள்=யாதொரு தொழிலுந் தமக்கு வேண்டுமென் றில்லாதொழிந்த கிருத கிருத்தியருள்ளே, சிலர்=சிலபேர், சித்தம் அடங்கு தியானாதிகள்=உளமொடுங்குந் தியான முதலிய வுபாயங்களை, செய்குவது=பயிலா நிற்பது, என் என்றால்=யாது காரணமென்று நீ சங்கிக்கில், இத்தலம் மருவும்=இவ்வுலகில் அவரவரைப் பொருந்தாநிற்கும் பிராரத்தப் பிறிவு எப்படி அப்படியே=பிராரத்தபேதம் எவ்வாறோ அவ்வாறே, முத்தரும்=ஜீவன்முத்தரும், வெகுவிதம் ஆகுவர் என்பது=அநேகப் பிரகாரமான வியவகாரங்களையுடையராவா ரென்பது, முன்னே சொன்னேனே—பூர்வபடலத்தில், 97-வது செய்யுளிற் கூறினேனே. எ-று. (34)

[ஆரூடர் வியவகாரம் லோகசங்கிரக நிமித்தமேயல்லாமல் வேறல்லவென மேலும் வற்புறுத்துகின்றார்.]

நல்லவனே கேளுலகுப காரம் ஞானிகள் விவகாரம்
அல்லது வேறொரு பெறுபே றாமிலை யதனாற் பிணியுமிலை
வல்லசி ருட்டிமு தற்பல தொழிலால் வருபுண் ணியபாவம்
எல்லவ ருக்குமனுக்கிர கஞ்செயு மீசன் னடைந்திலனே (35)

இ-ள். நல்லவனே கேள்=சாதுவே கேளாய், ஞானிகள் விவகாரம்=ஞானிகள் செய்யும் வியவகாரம், உலகு உபகாரம்=உலகுக்குபகாரமாம், அல்லது=இதுவேயன்றி, அதனால்=அவ்வியவகாரத்தால், வேறு ஒரு=வேறேயொரு, பெறுபேறும் இலை=அடையாநிற்கும் இலாபமு மில்லை, பிணியும் இலை=துன்பமுமில்லை, [ஞானிகள் செய்யும் வியவகாரங்களால் அவர்க்கின்ப துன்பங்களில்லவாமென்ப தெவ்வாறேயெனின்] வல்ல சிருட்டி முதல் பலதொழிலால்=வல்லமையுடைய சிருஷ்டி முதலிய அநேக கிருத்தியங்களால், வரு புண்ணிய பாவம்=வாராநிற்குந் தர்மாதர்மங்களை, எல்லவருக்கும்=சர்வ ஜீவர்கட்கும், அநுக்கிரகஞ்செயும் (மக்களிடத்துத் தாய்போலக்) கிருபை செய்யாநிற்கும், ஈசன் அடைந்திலனே=ஈசுரன் அடைந்திலனே (அதுபோலும்.) எ-று.

அகித்திதி, சம்மாரம், திரோபாவங்களால் வரும் பாவத்தையும், இதத்திதி, சிருஷ்டி, அநுக்கிரகங்களால் வரும் புண்ணியத்தையும் ஈசுரன் அடையாதது போல ஞானி லோக சங்கிரகார்த்தம் புறத்தே கிரியைகளைச் செய்யினும் அகத்தே செய்பவனாக இலன்; ஆகலின் இலாப நஷ்டங்களை யடையானென்பது கருத்து. (35)

(200)) [முற்செய்யுளில் ஞானியை ஈசுரனுக்கு ஒப்பாகச் சொன்னதுபற்றி உலகத்திற் பெரும்பாலும் சாமானியமாய் அறிந்தோர்களாலுமடைந்துள்ள விபரீத சங்கைகளைக் குருமுகத்தால் ஒழிவிக்கும் கருத்தினனாய் ஞானியும், ஈசுரனும் எப்படி ஒப்பாவா ரெனச்சீடன் வினாதலும், அதற்கு விடை கூறுதலும்.]

ஈசனு மாயரு வாயுரு வாகி யெழுந்தரு ளுங்குருவே
ஈசனு ஞானியு மொப்பென் றீரெப் படியொப் பென்றால்
ஈசனு ஞானியு மமதை யகந்தை யிகந்ததி னொப்பாவார்
ஈசனு மாம்பல சீவரு மாமுல கெல்லா மிவனாமே (36)

இ - ள். அருவாய்—(பரமார்த்தமாக) அருவமான அறிவுருவாய் (இருந்தபடியிருந்தே), ஈசனும் ஆய்—(மாயையினால் சகத்தின் படைப்பாதிக்குக் காரணமான) ஈசுரனுமாகி, உருவு ஆகி—(என்போலிகளை இரட்சிக்கும் பொருட்டுக் கருணையினால்) திருவுருவாகி, எழுந்து அருளும் குருவே—வந்தருளாநிற்கும் குருவே, ஈசனும் ஞானியும், ஒப்பு என்றீரே—சமானமாவரென்று முற்கூறினீரே, எப்படி ஒப்பு என்றால்—எப்படிச் சமானமாவரென்று நீ சங்கிப்பாயாகில், ஈசனும் ஞானியும், மமதை அகந்தை இகந்ததினால் ஒப்பு ஆம்—(மாயை அவித்தைகளிலும், அவைகளின் காரியங்களிலும்) மமத்துவாபிமானமும், அகந்தாபிமானமும் விட்டிருத்தலாற் சமானமாவர், இவன்—இந்த ஞானியானவன், (ஈசுரனோடு முன் சொல்லியவாற்றால் சமானமாவதுந் தவிர, "பிரஹ்மவித்து பிரஹ்மமே" என்னும் சுருதியால் பிரஹ்மத்தின்கண் ணத்தியந்தமான), ஈசனும் ஆம்—ஈசுரனுமாவன், பல சீவரும் ஆம்—நாநா சீவருமாவன், உலகு எல்லாம் ஆம்—உலகனைத்துந் தானாவன். எ - று.

அத்தியந்தம் அதிஷ்டானத்தைத்தவிர வேறின்மையி னென்க. (௩௬)

(201) [ஒருவன் உண்ண மற்றோர்க்குப் பசி நீங்காததுபோல ஞானி அஞ்ஞான நீங்கி முத்தியடைய ஏனைய சீவர் அடையாமையின் இவன் எல்லாச் சீவரும் ஆமெனல் எவவாறுமென "ஊசிகடாக நியாயம்" போல இடையே சங்கித்தல்.]

எல்லாச் சீவரு மிவனென் றீரிவன் றான்முத் தியடைந்
தெல்லாச் சீவரு முத்திபெ றாமலி ருப்பா னேனையா
எல்லாச் சீவரு மெவ்வெவ் வாறிவ னெல்லா மலவேனோ
எல்லாப் பொருளு முரைத்தருள் குருவே யிதைநீர் மொழியீரே. (37)

இ - ள். எல்லாச்சீவரும்—சுர, நர, திரியக்காதி ரூபங்களாகிய சர்வ சீவரும், இவன் ஆம் என்றீர்—இஞ்ஞானியாகுமென்றருளினீர், இவன் தான் முத்தி அடைந்து—இஞ்ஞானி (அஞ்ஞான நீங்கி) நிரதிசயாநந்தரூப மோட்சமடைந்தனனாக, எல்லாச்சீவரும்—சர்வ சீவரும், முத்தி பெறாமல் இருப்

பான் என்—மோட்சமடையாமலிருக்கு நிமித்தமென்னை, எல்லாச சீவரும்—சர்வ சீவரும், வெவ்வேறு ஆனால்—பரம்பரம் பின்னமாயின், இவன் எல்லாம் அவனே—இஞ்ஞானி முழுதுமல்லனே, எல்லாப் பொருளும் உரைத்தருள்குருவே—யான் வினவாநிற்குஞ் சர்வ விஞக்களின் பயன்களையும் உபதேசித்தருளாநிற்கும் ஆசிரியரே, இதை ர் மொழியீர்—இவ் விருவின் பயனையும் தேவரீர் அருள்வீராக. எ - று.

"ஐயா" எ - து விளி. "இருப்பான" என்பதிலுள்ள பான்விகுதி தொழிற்பெயர்ப்பொருட்டு. (37)

[விம்பப்பிரதிவிம்ப நியாயத்தாற் சங்கைக்கு உத்தரங் கூறுகின்றார.]

அகமெனு மான்மா பூரண மேகம் அநேகவி தஞ்சீவர்
அகமெனு மந்தக் கரண வுபாதிக ளளவிலை யாதலினால்
சகமுழு துங்குளிர் சந்திர னொருவன் சலசந் திரர்பலரம்
சகமதி லேரிகு ளஞ்சிறு குழிசால் சட்டிகு டம்பலவால் (38)

இ-ள். அகம் எனும் ஆன்மா—அகமகமென் றனைத்துயிரினிடத்து மிருந்தவாரத முரைப்பதாகிய ஆன்மா, பூரணம் ஏகம்—பரிபூரணமாயேகமாம், சீவர்—சீவர்கள், அநேகவிதம்—பரிச்சின்னராய், அநேகப்பிரகாரமா யிருப்பர், [என்னை?], அகம் எனும் அந்தக்கரண வுபாதிகள்—நானென்னும் அந்தக்கரண வுபாதிகள், அளவுஇலை ஆதலினால்—பரிச்சின்னங்களாய், அநேகங்களா யுள்ளன வாகலின், [இஃ துவைக்குவமானம்.], சகம் முழுதும் குளிர் சந்திரன் ஏகம்—உலக முழுவதுஞ் சீதளமாதற்குக் காரணமாகும் விம்ப சந்திரன் ஒருவன், சல சந்திரர் பலர் ஆம்—சலப்பிரதிவிம்ப சந்திரர் அநேகராம், [என்னை?] சகமதில்—உலகில், ஏரி குளம் சிறுகுழி சால் சட்டி குடம் பலவால்—ஏரியும், குளமும், சிறுபள்ளமும், சாலும், சட்டியும், குடமும் ஆகிய உபாதிகள் பலவாகலின். எ - று.

அகம்பதம் ஆன்மாவிற்கும், அந்தக்கரணத்திற்குங் கூறியிருப்பது முறையே லட்சியார்த்தம் வாச்சியார்த்த மாகலான் என்க. "அகம்" எ - து, அந்தக்கரணத்திற்கு இயற்பெயர், ஆன்மாவுக்கு ஆகுபெயர் எனினும் ஒக்கும். (38)

[இதுவுமது.]

சட்டிகு டங்களி லொன்று நசித்திடி னதினுட் சலசந்திரன்
ஒட்டுமு தற்சந் திரனொடு கூடுமொ ழிந்தவை கூடாவே
கட்டுமு பாதிந சித்திடு சீவன் காரண வான்மாவில்
கிட்டுமை யிக்கியமு பாதிகெ டாதவர் கேவல மடைவாரே. (39)

இ - ள். சட்டி குடங்களில்—சட்டி குடமுதலிய உபாதிகளில், ஒன்று நசித்திடின்—ஒருபாதி நசிக்கில், அதினுள் சல சந்திரன்—அதிற் பிரதிவிம்பித்திருந்த சந்திரன், ஒட்டும் முதல் சந்திரனொடு கூடும்—தான் கூடுதற்குரிய

காரண சந்திரனோடுகூடும், ஒழிந்தவை=உபாதிகெடாத ஏனைய பிரதிவிம்பங்கள், கூடாவே= (எப்படிக்) கூடாவோ (அப்படி), கட்டும் உபாதி நசித்திடு சீவன்=பந்தியாநிற்கும் அந்தக்கரணத்தின்கண்ணுள்ள அஞ்ஞான வுபாதி ஞானத்தால் நாசமாகாநிற்குஞ் சீவன், காரண ஆன்மாவில்=தனக்குக் காரணமாகும் ஆன்மாவின்கண், ஐக்கியம் கிட்டும்=ஐக்கியத்தைப் பொருந்துவன், உபாதிகெடாதவர்=அஞ்ஞானவுபாதி ஞானத்தாற்கெடாத ஏனைய சீவர், கேவலம் ஆகார்=ஐக்கியமாகார்கள். எ - று.

சீவத்துவத்திற்கு முக்கியவுபாதி சுழுத்தியின்கணுள்ள அவித்தைக் கூறும்; அவ்வவித்தைக்கூறே சாக்கிரத்தில் அந்தக்கரணமாகப் பரிணமித்தலானும், அது தோன்றின பின்னரே, ஜீவதைத் தோன்றலானும் அந்தக்கரணத்தைச் சீவவுபாதியென்றனர்; அவித்தையைச் சீவவுபாதியாகக் கொள்ளாக்கால் பிராஞ்ஞனைச் சொல்லுஞ் சுருதி விரோதமாம்.

எவ்வந்தக்கரணத்தில் ஞானமுண்டாமோ அவ்வந்தக்கரணவவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அஞ்ஞானக்கூறு ஞானத்தால் நிவிர்த்தியாம்: அஞ்ஞானம் நீங்கினோன் முத்தனாவன். எவ்வந்தக்கரணத்தில் ஞானமுண்டாகவில்லையோ அவ்வந்தக்கரணத்தின் அஞ்ஞானக்கூறுமுண்டு, பந்தமுமுண்டு. அஞ்ஞான நீங்கி முத்தனானவன் பிரஹ்மதிருஷ்டியால் சகசீவபரங்களாக விளங்குதலின், அவனெல்லா மாவனென்பதிற் சந்தேகமின்றென் றறிதியென்பதாம். (39)

(202) [36-ம் செய்யுளில் எப்படி ஒப்பாவனென்று வினவிய தன்கருத்தை இங்கே வெளிப்படுத்துகின்றார்.]

இவனயன் மால்சிவ னாகிய வீசரொ டெப்படி யொப்பாவன்
சிவன்முதன் மூவரு மகிலசி ருட்டி திதிநா சங்கள்செய்வார்
அவர்பிறர் மதிகளு முக்கா லங்களு மறிவார் விபுவாவார்
தவமிகு குருவே யிவனுங் கமைவிலொர் சற்றுங் காணேனே (40)

இ - ள். இவன் அயன் மால் சிவன் ஆகிய ஈசரொடு=இஞ்ஞானியென்பவன், அயன், அரி, உருத்திரராகிய வீசுரரோடு, எப்படி ஒப்பு ஆவன்=எங்ஙனம் இணையாவன் சிவன்முதல் மூவரும்=உருத்திரன், நாராயணன், பிரமன் என்னும் அம்மூவரும், அகில சிருட்டி திதி நாசங்கள் செய்வார்=எல்லாவுலகங்களையுஞ் சிருஷ்டி, திதி, சம்மாரங்கள் செய்யாநிற்பர், அவர் பிறர் மதிகளும் முக்காலங்களும் அறிவார்=அவர்கள் அந்நியருடைய புத்திகளையும், பூத, பவிஷ்ய, வர்த்தமானம் என்னுந் திரிகாலங்களையும் அறியாநிற்பர், (இதனால்) விபு ஆவார்=சர்வத்திலுஞ் சம்பந்தித்தவராவர், அல்லது பிரபுவாவார், தவம் மிகு குருவே=தவமிகுந்துள்ள வாசிரியரே, இவனுக்கு=இஞ்ஞானிக்கு, அமைவில் ஓர் சற்றும் காணேனே=அம்மகிமைகளில் ஒரு சிறிதுங் கண்டிலேன். (ஆகலின்), எ - று.

கண்டிலேன் ஆகலின், "எப்படி யோப்பாவன்" எனக்கூட்டுக. இங்கே, "தவம்" எ-து, மனம் பொறிகளின்ஒருமையை: கிருச்சிர, சாந்தராயணாதிகளை,யல்ல. (40)

[அதற்கு விடைகூறல்.]

[வேறு.]

தடத்து நீர்நிலாத் திரியொளி யுபயமுந் தழுவுமூர் தனைக்காக்கும், குடத்து நீர்விளக் கினிலொளி யிரண்டுமோர் குடும்பமாத் திரங்காக்கும், அடுத்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினாற் பிறிவில்லை, கெடுத்த மாயையின் குணங்களான் மேலென்றுங் கீழென்றும் பிரிவாமே. (41)

இ-ள். தடத்து நீர்—ஏரிமுணிச்சலமும், நிலாத்திரி ஒளி—பகல் வர்த்தியினொளியும், உபயமும்—(ஆகிய) இவ்விரண்டும், தழுவும் ஊர்தனைக் காக்கும்—(தம்மைத்) தழுவாநிற்கும் ஊர்முழுதினையும் இரட்சிக்கும், குடத்துநீர்—குடத்துச்சலமும், விளக்கினில் ஒளி—தீபத்தொளியும், (ஆகிய) இரண்டும், ஓர் குடும்பமாத்திரம் காக்கும்—ஓர் குடும்பமாத்திரத்தை இரட்சிக்கும், அடுத்த மைந்தனே—(சற்சங்கத்தைக்) கிட்டிய மைந்தா, ஞானியும் ஈசனும்—தத்துவ ஞானியும், ஈசுரனும், அறிவினால் பிறிவு இல்லை—(நாம் பிரஹ்மமென்னும்) ஞானத்தாற் பேதமில்லை, கெடுத்த—(சீவர்கள் முத்தியடையாமற் போகும்படி அவர்களுணர்வை ஆவரணசத்தியாப் மறைத்துக்) கெடுத்த, மாயையின் குணங்களால்—மூலப்பிரகிருதியின் (சத்துவகுண, ரசோ) குணங்களால், மேல் என்றும்—ஈசுரன் மேலாமென்றும், கீழ் என்றும்—ஞானி கீழாமென்றும், பிரிவு ஆம்—பேதமாம். எ-று.

தடத்தினீரும் நிலாத்திரியொளியும், குடத்தினீரும், விளக்கினொளியும் உபாதியாற் பேதமல்லாமற் காக்குந்தன்மையாற் பேதமில்லாமைபோல ஈசுரனும், ஞானியும் மாயா குணங்களாற் பேதமல்லாமல் ஞானத்தாற் பேதமிலர் என்பதாம். (41)

[மேலும் அதனையே விளக்குகின்றார்.]

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன் முதலான
சுரர்கள் மாயைவல் லவரணி மாதிக டொக்கமா தவமிக்கோர்
தரணி மானுடர்க் கவைகளில் லாமையாற் குறும்புவ பரனுனும்
பிரம பாவனை யாலிவ ரவரொனும் பேதமொன் றிலையாராய். (42)

இ-ள். நரரில்—மநுடர்களுக்குள்ளே, மன்னனைச் சித்தரைப்போலவே—(துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனமுடைய) அரசனையும், (சாபாநுக்கிரக சாமார்த்தியமுடைய) சித்தரையும்போல, நாரணன் முதலான சுரர்கள்—விஷ்ணு முதலான தேவர்கள், மாயைவல்லவர்—மாயை செய்வதில் சமர்த்தர், அணிமா ஆதிகள்தொக்க—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா,

பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டசித்திகளுங் கைவந்த, மாதவம் மிக்கோர்=மாதவமிகுந்தோர், தரணி மாநுடர்க்கு=பூமியில் மநுடதேகமுடைய ஞானிகட்கு, அவைகள்=அம்மஹாயாவல்லபமும், அணிமாதி அஷ்டசித்திகளும், இல்லாமையால்=இன்மையால், தாழ்வு உளர் ஆகுனும்=தாழ்ச்சியுடையராயினும், பிரமபாவனையால்=(நாம்) பிரஹ்மமென்னும் சம்ஸ்காரத்தினுல், இவர் அவர் எனும் பேதம்=ஞானிகள் தாழ்வுடையவரென்றும், ஈசுரனுயர்ச்சியுடையவனென்றுங் கூறுநிற்கும் பேதம், ஒன்று இலே=சிறிதுமில்லே, பாராய்=(இதனை யூகித்துப்) பார்ப்பாயாக. எ - று.

முன்னே, "நாரணன்" எனக்காட்டினது,

"மாயை பண்ணு மவர்களி லறிநான்"—

என்னும் ஈசுரகீதையின் கருத்து. அணிமாதி அஷ்டசித்திகளி னியல்பை திருவிளையாடலில், 33-வது அஷ்டமாசித்தியுரைத்த படலத்திலும், பாகவதத்தில், 11-ம் ஸ்கந்தத்தில் யோகசித்தியுரைத்த வத்தியாயத்திலுங் காண்க. (42)

(203) ["அணிமாதிக டொக்கமாதவ மிக்கோர்" என முற்கூறியதால் அவை ஈசுரவைசுவரியமெனப் பொருள்படுதலின், ஈண்டு முனிவரிடத்துங் காணப்படுவானேனென வினுதலும், அதற்கு விடையும்.]

முத்தி நல்கிய சற்குரு வேபல முனிகளுக் கணிமாதி
சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந்தச் செல்வமீ சனதென்றீர்
புத்தி யொத்திட வுரைத்தரு ளென்றிடிற் புகழுமீ சனைநோக்கிப்
பத்தி செய்திடுந் தவத்தினு லியோகத்தாற் பலித்ததென் றறிவாயே.

இ - ள். முத்தி நல்கிய சற்குருவே=அநர்த்த நிவிர்த்தி, ஆநந்தப் பிராப்தி ரூபமான மோட்சத்தைத் தந்தருளிய சற்குருவே, பலமுனிகளுக்கு=வாதராயணர் முதலிய அநேக முனிவர்களுக்கு, அணிமா ஆதிசித்தி=அணிமா முதலிய அஷ்டசித்திகள், பூமியில் கண்டிருக்கவும்=(உள்ளனவாகப்) பூமியிற் காணப்பட்டிருக்கவும், அந்தச் செல்வம்=அவ்வணிமாதிச செல்வம், ஈசனது என்றீர்=ஈசுரனுடைய செல்வமென்றருளினீர், புத்தி ஒத்திட=(அச்செல்வம் முனிவர்கட்கு இன்னகாரணத்தா லுளவாயினவென்பதை என்) புத்தி சம்மதித்திட, உரைத்தருள் என்றிடில்=உரைத்தருள்வீரென்று நீ வினுவிடில், புகழும் ஈசனைநோக்கி=(சர்வாபீஷ்டப்பிரதராகலின், சர்வமதஸ்தர்களாலும்) துதியாநிற்கும் ஈசுரனை நாடி, செய்திடும் பத்தி (யால்)=(உட்புறமொத்து மனமொழிமெய்களாற்) செய்யாநிற்கும் வழிபாட்டினுலும், தவத்தினுல்=கிருச்சிரசாந்தராயணாதி தவங்களாலும், யோகத்தால்=இயம நியமாதி அஷ்டாங்க யோகத்தினுலும், பலித்தது என்று அறிவாய்=(அணிமாதிச் செல்வம் முனிவர்கட்கு) வாய்த்ததென்றறிவாயாக, எ - று.

இயம, நியமாதி அஷ்டாங்க யோகத்தை, ஈசுரகீதையின், 11-ம் அத்தியாயத்திற் காண்க. (43)

(204) [தவமுதலியவற்றால், அணிமாதிச் செல்வம் முனிவர்கட்கு வாய்த்ததானால் தவத்தால் பிரஹ்மத்தையறிகவென்னுஞ் சுருதியால் தவமில்லாதோர்க்குத் தத்துவஞானமுங் கூடாதேயென்னுங் கருத்தையுட்கொண்டு ஒருவாறு சீடன் வினாதல்.]

சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்திமுத் தியிரண்டும்
தவமு ளோரடை குவரெனி லவர்கள்போற் சகலரு மடைவாரே
அவர்கள் பூருவஞ் சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே
இவர்கண் ஞானிக ளென்றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையேதோ. ()

இ-ள். சிவசொரூபம் ஆம் தேசிக மூர்த்தியே=ஆநந்தவுருவமாகிய குருவே, சித்தி முத்தி இரண்டும்=அணிமாதி சித்தியும், முத்தியுமாகிய இரண்டனையும், தவம் உளோர் அடைகுவர் எனில்=தவமுடையோர் அடைவரென்று (சுருதி) சொல்லில், அவர்கள்போல்=வாதராயணர் முதலிய பூர்வாசாரியர்போல, சகலரும் அடைவாரே=இக்காலத்துள்ள ஞானிகளனைவரு மடையாநிற்பரே?, அவர்கள்=அப்பூர்வாசாரியர், பூருவம் சித்தியும் ஞானமும் அடைந்ததும் கண்டோமே=பூருவம் அணிமாதி சித்தியும், தத்துவஞானமுமாகிய இரண்டனையும் அடைந்திருந்ததும் (புராணங்களிற்) கண்டோம், இவர்கள் ஞானிகள் என்றிடில்=இக்காலத்துள்ள இவர் ஞானிகளென்று சொல்லில், சித்திகள் இவர்க்கு இலா வகை ஏதோ=அணிமாதி சித்திகள் இவர்க்கில்லாதிருக்குங் காரணம்யாதோ! (யானறியேன்; அதனையருள்வீராக). எ-று. (44)

[அதற்கு விடைகூறல்.]

காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவ மிருவகை சித்தியும் போதமுந் தருமைந்தா
ஆமி வற்றிலொன் றியற்றினு லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றினு ரன்றளா பெரியோரே. (45)

இ-ள். காமியத்தவம் (என்றும்)=சகாமதவமெனவும், காமியம் ஒன்றையும் கருதிடாத்தவம் என்றும்=இச்சிக்கப்படும்பொருளொன்றனையும் (அடையக்) கருதாத தவமெனவும் (நிஷ்காம தவமென்றபடி), பூமியில் தவம் இருவகை=பூமியின்கண்ணே தவமானது இருவகைத்தாம், சித்தியும் போதமும் தரும்=(அவற்றுள், சகாமதவம்) அணிமாதி சித்திகளையும், (நிஷ்காம தவம்) தத்துவஞானத்தையுங் கொடாநிற்கும், மைந்தா, ஆம் இவற்றில் ஒன்று இயற்றினுல்=(சித்தி ஞானங்கட்குச்) சாதனங்களாகும் இவ்விருவகைத் தவங்களுள் ஒரு தவத்தைச் செய்யில், ஒன்றையே அடைகுவர்=ஓர் பயனையே அடையாநிற்பர், இது தீர்வை=இது நியமம், யாம் உரைத்த=

நாங்கூறிய, அவ்விரண்டையும் இயற்றினூர்=அவ்விரண்டு தவங்களையுஞ் செய்தனர், அன்று உள பெரியோர்=முற்காலத்துள்ள வாதராயணர் முதலிய பெரியோர். எ - று. (45)

(205) [மேற்சொன்னதைத் தானே இன்னும் வற்புறுத்துகின்றார்,]

அனக மைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமல்
ஜெனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ
இனிய சித்தியே விரும்பினூர் சிலர்சில ரிரண்டையு முயன்றூர்அம்
முனிவர் சித்திகள் வினோதமாத் திரந்தரு முத்தியைத் தாராவே. (46)

இ - ள். அனக மைந்தனே=பாவமற்ற மைந்தனே, முத்தி ஞானத்தையே அடைந்தனர் அல்லாமல்=(நேரே) மோட்ச சாதனமான தத்துவ ஞானத்தைத் தானே யடைந்தனரன்றி, ஜெனகன்; மாபலி, பகீரதன் முதலினோர், சித்திகள் படித்தாரோ=சித்திகளைப் பழகினரா! (இல்லை), சிலர் இனிய சித்தியே விரும்பினூர்=சில முனிகள் (தமக்கு) இனிமையாகிய சித்தியைத்தானே விரும்பினர், சிலர் இரண்டையும் முயன்றூர்=சிலமுனிகள் சித்தி, ஞானம் இரண்டனையும் பழகினர், அம்முனிவர் சித்திகள்=அம்முனிவர்களடைந்துள்ள சித்திகள், வினோதம் மாத்திரம் தரும்=(மணியாழி யுலகமெல்லாங் கணநேரத்தில் விளையாடிவரும்) விளையாட்டைமாத்திரந் தரும், முத்தியைத்தாராவே=அநர்த்தநிவிர்த்தி, ஆநந்தப்பிராப்தி ரூபமான மோட்சத்தைக் கொடாவாம். எ - று. (46)

(206) [ஆயின், முத்தர்களுள்ளுஞ் சிலபேர் அச்சித்திகளின் பொருட்டுச் சரீரவருத்தமுற்ற தென்கொலோவெனுஞ் சீடன் வினவைத் தானே வினவி அதற்கு விடைகூறல்.]

யோக ஞானமே முத்தியைத் தருமெனி லொழிந்தசித் திகள்வேண்டி
மோக மாயுடல் வருந்தினூர் சிலசில முத்தர்க ளேனென்றூல்
போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றே நசித்தேகும்
ஆகை யாலந்தச் சித்திகள் பிராரத்த மாகுமென் றறிவாயே. (47)

இ - ள். யோக ஞானமே=ஜீவான்ம, பரமான்மாக்களினயிக்கிய ஞானமே, முத்தியைத் தரும் எனில்=மோட்சத்தைத் தருமென்று சொல்லில், ஒழிந்த=முத்தியைத் தரவல்லாத,சித்திகள் வேண்டி=சித்திகளை விரும்பி, மோகம் ஆய்=அவை வாய்க்கு நெறியிற் பரவசமாய், சில சில முத்தர்கள்=(சூடாலை முதலிய) சிற்சில ஜீவன்முத்தர்கள், உடல் வருந்தினூர் என் என்றூல்=(முன்னே) மெய்வருத்தமுற்றனர்; அஃதென்கொலோ வென்று நீ வினவிடில், போகம் ஆய் வரும் பிராரத்த கர்மங்கள்=அநுபோகமாய் வாரா நிற்கும் பிராரத்தகர்மங்கள், புசித்து அன்றே நசித்து ஏகும்=புசித்தல்லவா நசித்துப்போம், ஆகையால்=ஆகலின், அந்தச்சித்திகள்=பூருவஞ் சூடாலை முதலியோரா லடைந்தவச்சித்திகள், பிராரத்தம் ஆகும் என்று அறிவாய்=அவர்களது பிராரத்தமாமென்று நீயறிவாயாக. எ - று. (47)

[குருவை வியந்து மேலும் உபதேசிக்கவேண்டுமென்ப தற்குக் காரணங் கூறுகின்றன்.]

இலக்க மாயிரஞ் சுருதியா லூகத்தா லென்மன மசையாமல் [னேன்
பெலக்கவேண்டுமென் றருள்குரு வேயகப் பிராந்திபோய்த் தெளிவா
துலக்க மானகண் ணுடியை யடிக்கடி துலக்கினுற் பழுதன்றே
அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்க டெவிட்டாவே.

இ-ள். இலக்கம் ஆயிரம் சுருதியால்=அநேகஞ் சுருதிப் பிரமாணங்களாலும், ஊகத்தால்=(அநேக) யுக்திகளாலும், என் மனம் அசையாமல்=எனதந்தக்கரணம் (சொரூபத்தினின்றுஞ் சந்தேகத்திஞற்) சலியாமல், பெலக்கவேண்டும் என்று=திடமா யதிலழுந்த வேண்டுமென்று, அருள் குருவே=(யான் சங்கிக்குஞ் சங்கைகளுக்கெல்லாம் உத்தரம்) அருளிவாராநின்ற குருவே, அகப் பிராந்தி போய்=(எனது) அந்தக்கரணத்தில் (முன்னிருந்த பஞ்சப்) பிராந்திசளுமொழிந்து, தெளிவு ஆனேன்=தெளிவுடையவனுயினேன், துலக்கம் ஆன கண்ணுடியை=பிரகாசமான கண்ணுடியை, அடிக்கடி துலக்கினுல்=மேலுமேலுந் துலக்கிடில், பழுது அன்றே=குற்றம் என்னே?, அலக்கண் மாற்றிய=(எனது) துன்பங்களை நீக்கிய, தேவரீர்=சுவாமிகள், எனக்கு உரை அமிர்தங்கள்=அடியேற்குபதேசியா நிற்கும் வாக்கியாமிர்தங்கள், தெவிட்டா=தெவிட்டுகின்றில; (ஆதலால், இன்னுந் தேவரீருபதேச மொழிகளைக்கேட்க விரும்புகின்றேன் அருள் செய்தல் வேண்டும்). எ-று.

• பிரகாசமான கண்ணுடியை மேன்மேலுந் துலக்குவது குறையின்றுதல் போல், பிராந்தி நீங்கித் தெளிவெய்தியவென்னை மேன்மேலுந் தெளிவெய்தப்பண்ணல் குறையின்றுமாசலானும், சுவாமிகளின் வாக்கியாமிர்தத்தில் எனக்கு அமைவுண்டாகாமையானும் இன்னும் உபதேசிக்கவேண்டுமென்பான், "துலக்க மானகண் ணுடியை யடிக்கடி துலக்கினுற் பழுதன்றே, அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்க டெவிட்டாவே." என்று கூறினுன்.

"அகப்பிராந்தி போய்" எ-கு, உ-ம், வள்ளலார்,

"நித்தனன் றுரைத்த வாக்கியப் படியே நிகழ்த்துவன் பிராந்தியைந் தினையுஞ், சத்திய மிந்தச் சகமெனல் கருவி தணந்திடா துடலைநா னென்னல், கத்தபோத் தாவுந் தானெனல் தானுங் கடவுளும் வேறெனக் கருதல், சித்துரு வாகியிருந்து நானுகேன் சிவனெனல் சிதடர்பா லறியே."— (48)

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

(207) [பரஸ்பரம் விரோதமான சுருதி வாக்கியங்களில் யாது வாஸ்தவமாகக் கொள்ளற்பாலதென் வினுதல்.]

கைத வங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாளும்
ஐய னேகுரு வேயெவ ராகினு மநுபவித் தாலன்றிச்

செய்த கர்மங்கள் விடாவென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம்வேவத்
துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனமுந் துணிவதெப் படிநானே. 49

இ-ள். கைதவங்களை=அசத்தியமான வார்த்தைகளை, சாத்திரம் சொல்லுமோ=சாஸ்திரங்கள் போதியாநிற்குமோ! (போதியாதே?), கருணையால் எனை ஆளும்=கிருபையினாலே அடியேனை ஆண்டருளும், ஐயனே குருவே=(எனது) பிதாவாகிய ஆசிரியரே, எவராகிலும்=யாவராயிருந்த போதினும், செய்த கர்மங்கள்=(தாங்கள்) செய்த கர்மபலங்கள், அநுபவித்தால் அன்றி=அநுபவித்தொழித்தாலல்லது, விடா என்ற வசனமும்=நாசமாகா வென்னும் வசனமும், சென்மசஞ்சிதம் வேவ=(அநந்த) ஜநநங்கட்கு(க் காரணமான) சஞ்சிதகர்மங்கள் வெந்து நீறாகும்படி, துய்ய ஞானத்தீ=சுத்தமான ஞானாக்கினி, சுடும் என்ற வசனமும்=தகிக்குமென்னும் வசனமும் (ஆகிய இவ்விரண்டில்), நான் துணிவது எப்படி=(இதுதான் வாஸ்தவம், இஃதல்லவென்று ஒன்றை) எவ்வாறு யான் நிச்சயிப்பது. எ-று.

சுருதி சம்மதமான சீவபிரஹ்மைக்கியஞான மென்பார், "துய்யஞானம்" என்றார். "செய்த கர்மங்கள் விடாவென்ற வசனம்" எ-து,

"நாபுக்தம் க்ஷீயதே கர்மகல்ப கோடி சதைரபி"—

என்பது முதலிய வசனங்களை; இதற்கு, பலத்தைப் புசியாமற் சுபாசுபகர்மங்க ணூறுகோடி கற்பங்களாலும் நாசமாகா தென்பது பொருள். "சென்மசஞ் சிதம்வேவத் துய்யஞானத்தீச் சுடுமென்ற வசனம்" எ-து, கீதையின் நான்காம் அத்தியாயத்தில்,

"எறியாவெரி வருகானிடை யெரியாதன வெவைதா
னறியாவறி வுடையோர்களு மறிவாரது விதுபோற்
குறியால்வரு குணஞானமெ யனலேகொள விடுமேல்
பொறியால்வரு வினையானவை பொடியாமிதொர் பொருளே."

என்று ஸ்ரீ-பகவானால் அருளிச் செய்யப்பட்டிருப்பது முதலிய வசனங்களை என்றறிக. (49)

[அதற்கு விடைகூறல்.]

சீவ பேதங்க ளளவில்லை மைந்தனே செய்கையு மளவில்லை
ஆவ வாமவ ரவரதி காரங்க ளறிந்துபக் குவநோக்கிப்
பூவ லர்ந்துபின் பலங்கள்காட் டுவனபோற் பூருவஞ் சித்தாந்தம்
காவல் வேதங்க ளிரண்டையும் வசனிக்குங் காண்டமூ வகையாலே.

இ-ள். மைந்தனே=மைந்தா, சீவபேதங்கள் அளவு இலை=(சீவத்துவ வுபாதிகளான அவித்தை, அந்தக்கரணங்கள் அளவின்மையின்) சீவபேதங்களும் அளவில்லை, செய்கையும் அளவு இல்லை=(பிரவிர்த்திக்குக் காரணங்களான அவரவர் அந்தக்கரணங்களிலுள்ள சுபம், அசுபம், சுபாசுப

மென்னும் வாசனைகள் அளவின்மையின் அவரவர்கள்) செய்கைகளும் அளவில்லை; (ஆகையால்), ஆவஆம்=அவைகளால் ஆவனவாகும், அவர் அவர் அதிகாரங்கள்=அந்தந்தச் சீவர்களுடைய அதிகாரங்களை, அறிந்து=நிச்சயித்து, பக்குவம் நோக்கி=பக்குவங்களை நாடி, காவல் வேதங்கள்=(கருணையினால் யாவரையும்) இரட்சியாநிற்கும் வேதங்கள், காண்டம் மூவகையாலே=(கர்மம், உபாசனை, ஞானம் என) மூன்றுகூறுடைய காண்டங்களாலே, பூருவம் சித்தாந்தம் இரண்டையும் வசனிக்கும்=பூருவபட்சம், சித்தாந்தமென்னும் இரண்டையும் பிரதிபாதியாநிற்கும், [இனி இதற்குபமானங் கூறுகின்றார்.] பூ அலர்ந்து=(முன்னே) புஷ்பங்களைத் தோற்றுவித்து, பின்=பின்னே, பலங்கள் காட்டுவனபோல்=பலங்களைக் காட்டாநிற்கும் (வாழை முதலிய) விருட்சங்களைப்போல. எ-று.

இங்ஙனங் கூறியவாற்றால், "அநுபவித்தாலன்றிச் செய்த கர்மங்கள் விடா" என்ற வசனம் கர்மகாண்டத்தின் பூருவபட்சம், "சென்மசஞ்சிதம் வேவத் துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனம்" ஞானகாண்டத்தின் சித்தாந்தம் என்பது கருத்து. (50)

[இதுவுமது.]

ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மானாலுந்
தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபொய்யோ
ஈன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யானாலும்
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே. (51)

இ-ள். ஆன பாவிகள்=(சுபாசுப கர்மங்களுள்ளே, அசுப கர்மங்களைச்) செய்பவரான பாவிகள், அடைவன நரகங்கள்=அடைவனவான நரகங்களானவை, அவசியம் ஆனாலும்=நிச்சயமாக வுளவேனும், தான மந்திர விரத ஓமங்களால்=தானம், மந்திரம், விரதம், எக்ஞம் எனும் பிராயச்சித்தங்களால், தவிரும் என்பது பொய்யோ=(பாவநீங்கி விடுவதால்) அவை வாராதொழிந்துபோமென்று சாஸ்திரங் கூறுவது அசத்தியமா (அல்லவே?), (அதுபோல) ஈனம் ஆம்=இழிவான, பலசன்ம சஞ்சிதவினை=அநந்த ஜன்மங்கட்குக் காரணமாகிய சஞ்சித கர்மங்கள், எத்தனை ஆனாலும்=அனேகங்களாயிருப்பினும், ஞானம் ஆம் கனல்=(சமுச்சயரகிதமான பிரஹ்மான்மவைக்கிய) ஞானமாகிய அக்கினியானது, சுடும் என்ற மறைமொழி=(அவற்றைத்) தகித்துவிடுமென்று கூறும் வேத சித்தாந்த வசனத்தை, நம்பினால், வீடு உண்டே=அவை நீங்கி மோட்சமுளதாதல் திண்ணம். எ-று.

"மலமேவிய தீவினை யின்வலியான் மகிழும்பர்ப தத்திலிருந்தவிவன், குலமேவிய தென்புல வாணர்களுங் கொடிதாய்நர கங்குடியேறினரே."—

என்பது முதலிய சுருதிப்பிரமாணத்தாற் பாவிகள் நரகமடைவது சித்தமாயிருத்தலின், "ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மானாலும்"

எ - ம், தான மந்திர விரத வோமங்களாற் பாவந் தவிர்கவென, கர்மகாண்டத்தில் ஈசுரன் விதித்தபடி அவை செய்தோர்க்குத் தவிர்ந்தே யிருப்பதைச் சாஸ்திரத்தும், உலகத்தும் நீ கண்டே யிருக்கின்றாயென்பார், "தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபோய்யோ" எ - ம், தத்துவ ஞானத்தாற் சகலசஞ்சித கர்மங்களும் நாசமாகுமெனும் ஈசுரசங்கற்பமான ஞானகாண்ட சித்தாந்தத்தை நம்பினால் அவர் சத்திய சங்கற்பரென்று சாஸ்திரங்களிற் பிரசித்தமாகவிருத்தலின், அவர் சங்கற்பப்படி ஞானத்தாலவை நீங்கி நீ அமிர்தமயமாவை என்பார், "ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே" என்றுங் கூறினர்.

கர்மகாண்டத்தின் பூர்வபட்சம் அதன் சித்தாந்தமாகிய பிராயச்சித்தத்தாலேயே நீங்காநிற்பதாற் சகல சஞ்சித கர்மங்களையும் ஞானாக்கினி சுடுமென்னும் ஞானகாண்ட சித்தாந்தத்தை நம்பி யநுஷ்டிக்கில் அவை என் நீங்கா, சித்தமாய் நீங்கா நிற்கும் எனத் துணிந்து சந்தேகம் ஒழிதி என்பதாம். (51)

(208) [இங்ஙனம் ஞானத்திற்கு அற்புதமான மஹாத்மியமிருக்க அதனை அடைந்துய்யாமல் அறிவுடையோரும் கர்மப்படு குழியில் ஆழ்தற்குக் காரண மென்னையோவென வினாதல்.]

என்ம னந்திருக் கோயிலாத் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினைகள்வே ரறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞானம்
தன்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல்
கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரண முரையீரே. (52)

இ - ள். என் மனம்=எனது இருதயத்தையே, திருக்கோயிலா=சிறந்த ஆலயமாகக்கொண்டு, தினம் குடி இருந்து அருள்=நாளும் குடியா யெழுந்தருளி யிராநிற்கும், குருமூர்த்தி=குருவே, தேவரீர் மெய்ஞ்ஞானம்=தேவரீர் (அருளாநின்ற) தத்துவஞானமானது, சென்ம சஞ்சித வினைகள்=ஜநநத்திற்குக் காரணமான சஞ்சிதகர்மங்களின், வேர் அறுத்திடும்=மூலமாகிய அவித்தையை அரியாநிற்கும், தன் மயம் தரும்=(பரிபூரண பரமாநந்த பரம சீதளமான) பிரஹ்மத்தின்கண் அபேதமாயிருக்கும் மோட்ச சாம்பிராச்சியத்தையுந் தரும், மகிமையை=இம் மஹத்துவத்தை, விபுதர் ஆம் சமர்த்தரும்=மிகக்கற்றோராய்க் குணதோஷங்களைப் பகுத்தறிய வல்லோரும், அறியாமல்=அறிந்து அதனைப் பெற்றுய்யாமல் (அல்லது, உணர்ந்து அதனை யடைதற்குக் காரணமான நிவிர்த்தி மார்க்கத்தில் புதியமலர்மெல் லணையிற் போலப் பொருந்தாமல்), கன்மம் ஆம் குழியினில்=கர்மமாகிய படுகுழியில், விழுந்து அழிகின்ற=விழுந்து வருந்துகின்ற, காரணம் உரையீர்=காரணத்தை யருள்வீராக. எ - று. (52)

[அதற்கு விடைகூறல்.]

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர்சேர்வர்
வழிந டப்பவர் பராமுக ராயினான் மலர்ந்தகண் ணிருந்தாலும்

குழியில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங் கொண்டுகா மிகளானோர்
பழிதரும்பிற விக்கட லழுந்துவர் பாகதி யடையாரே (53)

இ-ள். அழிவிலாத தற்பதத்தனை=நித்திய நிரதிசயானந்த ரூபமான பிரஹ்மபதத்தை, மைந்தனே, அகமுகத்தவர் சேர்வர்=(உள்ளிலும், புறனிலும்) அகமுகமுடையோர் அடையாநிற்பர், வழி நடப்பவர்=மார்க்கத்திற் செல்பவர், பராமுகம் ஆயினால்=பராமுகமாயினர், மலர்ந்த கண் இருந்தாலும்=விகசிதமான நேத்திரங்களிருப்பினும், குழியில் வீழ்வர்காண்=(எப்படிக்) குழியின்கண் வீழாநிற்பரோ, அப்படி, வெளிமுகங்கொண்டு=(உள்ளிலும், புறனிலும்) பகிர்முகமுடையராய், காமிகள் ஆனோர்=சுவர்க்ககாமிகளாயினோர், பழிதரும் பிறவிக்கடல் அழுந்துவர்=(கருவிநூற் பயிற்சியாலி யால் விரிந்தவறிவிருந்தாலும்) பழிகதத்தக்க பிறவிக்கடலி லமிழ்ந்தாநிற்பர், பரகதி அடையார்=மோட்சமடையார். எ-று.

"மலர்ந்த கண்ணிருந்தாலும்" என்றதற்கியைய விரிந்த அறிவிருந்தாலும் என்பது வருவித்தாம்

அபிப்பிராயம்.—"நாநாவானவை ஈண்டிற்பழுமில்லை" என்னுஞ் சுருதியால் மித்தையென்றாவது, "ஆன்மாவே யிதனைத்தும்" என்னுஞ் சுருதியால் தானென்றாவது வாகியாந்தரப் பிரபஞ்சத்தைப் பார்ப்பது அகமுகம். அவிவேகத்தால் பிரபஞ்சத்தைச் சத்தியமென்றும், அதில் தேகேந்திரியாதிகள் தானென்றும், புத்திரதாராதிகள் தனதென்றும் இப்படிப் பேதமாகப் பார்ப்பது பகிர்முகம் இப்பகிர்முகப் பார்வையால் நசுவரமான சுவர்க்காதிகளில் காமமுடையராயிருக்கையே கர்மப்படுகுழியில் வீழ்வதற்குக் காரணம் என்பதாம்.

"பரகதியடையார்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"வழிபடு மிதனைவிட்டு மற்றுள நூல்களென்னுங்
குழிகளிற் புரண்டஞ் ஞானக்குணதிறைற் பிறப்போர்க்கெல்லா
மொழிவற வொருவர் செய்தற குரிதன்றாய் நானேயுண்டாங்
கழிதலிற் பாமவின்பங் கற்பங்களாலுங் கூடா"—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (53)

(209) [ஈசுரன் சுதந்தரன், அசுதந்தரன் என்று சாஸ்திரங்களிற் கூறியிருத்தலின், அசுதந்தாரான சீவர்கண்மீது குவறேது என வினுதலும், அதற்கு விடை கூறத் தொடங்கலும்.]

சிறந்த நன்மையுந் தீமையு மீசனூர் செய்விக்குஞ் செயலன்றோ, பிறந்த சீவர்களென்செய்வா ரவர்கண்மேற் பிழைசொலும் வழியேதோ, துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண் மார்க்கம், மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய். (54)

இ-ள். சிறந்த நன்மையும் தீமையும்=(யாவர்க்கும் ஒப்பச்) சிறந்த நல்வினையும், (இழிந்த) தீவினையும், ஈசுஞர் செய்விக்கும் செயல் அன்ரு=(சூத்திரதாரியைப்போலச் சுதந்தரஞன) ஈசரன் செய்விக்குஞ் செயலல்லவா?, பிறந்த சீவர்கள்=(சூத்திரப் பாவைபோலும், சுதந்தர ஈனராய் அவன் ஜநிப்பித்தபடியே) ஜநித்த சீவர்கள், என்செய்வார்=யாதுசெய்வர், அவர்கள்மேல்=அச்சீவர்கண்மீது, பிழைசொலும் வழி ஏதோ=குற்றங்கூறு நெறி யாது காரணமோ?, துறந்த தேசிக மூர்த்தியே என்றிடில்=(அனைத்தையும்) நீத்த (அற்புத மகிமையுடைய) குருமூர்த்தியேயென்று விஞவிடில், சுருதிநூல் பொருள் மார்க்கம்=வேதசாஸ்திரார்த்த நெறியை, மறந்த மூடர்கள்=மறந்த அறிவிலிகள், வசனிக்கும் பிராந்திகாண்=சொல்லும் பிராந்திகாண், மைந்தனே அது கேளாய்=மைந்தா அதை நீ கேட்பாய். எ-று.

"நன்மை தீமை"=சுபாசுபக்கிரியை. "பிராந்தி"=அயதார்த்த ஞானம். "அது" எ-து, சுருதிநூற் பொருண் மார்க்கம். (54)

[ஆனல், வேதசாஸ்திரார்த்த வழி ஏதெனிற் கூறுகின்றர்.]

திகழ்ந்த வீசஞர் சிருட்டியுஞ் சீவஞர் சிருட்டியும் வெவ்வேறே
சகந்தனிற்பொது வீசஞர் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம்
இகழ்ந்த சீவஞர் சிருட்டிக ளாகுங்கா ணீசஞர் செயலன்றே. (55)

இ-ள். திகழ்ந்த ஈசஞர் சிருட்டியும்=சுத்தப் பிரஹ்மமாக விளங்காநின்ற ஈசுரனது சிருஷ்டியும் சீவஞர் சிருட்டியும்=சீவனுடைய சிருஷ்டியும், வெவ்வேறே=வேறு வேறும், [அவையாவை யெனின்] சகந்தனில் பொது=சகத்தில் (யாவர்க்கும்) பொதுவான, ஈசஞர் சிருட்டிகள்=ஈசுரனுடைய சிருஷ்டிகள், சர அசரப் பொருள் எல்லாம்=நடப்பன, நிற்பனவாகிய பொருளனைத்துமாம், அகந்தை ஆம் அபிமானங்கள்=(தேகாதிகளில்) நானென்னுமகந்தையும், (இதனல் புத்திரவித்தாதிகளில்) உளவாகும் மமதாபிமானங்களும், கோபங்கள் ஆசைகள்=கோபங்களும், ஆசைகளும், இவை எல்லாம்=ஆகிய அந்தக்கரண கற்பனைகளனைத்தும், இகழ்ந்த சீவஞர் சிருட்டிகள் ஆகும் காண்=உயர்ந்தோரா லிகழ்ந்து வெறுத்த சீவனது சிருஷ்டியாம், ஈசஞர் செயல் அன்று=ஈசுரனுடைய சிருஷ்டியல்ல. எ-று.
மாயாமயமான சராசரப் பிரபஞ்சம் ஈசுரசிருஷ்டி, அந்தக்கரணத்தின் பரிணமமாகிய அகந்தை முதலியவை சீவசிருஷ்டி என்பது வேதசாஸ்திர நிர்ணயமாம் என்க. (55)

[ஈசுர சிருஷ்டி, சீவசிருஷ்டியால் வரும் நன்குதீங்குகளைக் கூறுகின்றர்]

மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசா தனமாகும்
சீவ ஞர்செயுஞ் சிருட்டிக டங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும்

தாவ ராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சனனங்க ணசியா வாங்
கோப மாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள் போமே. (56)

இ-ள். **மூவர் ஆம் பரன் சிருட்டிகள்**=திரிமூர்த்திரூபமான ஈசுரனுடைய **சிருஷ்டிகள், உயிர்க்கு எலாம்**=உயிர்களுக்கெல்லாம், **முத்தி சாதனம் ஆகும்**=மோட்சமடைதற்குச் சாதனங்களாம், **சீவனார் செயும் சிருட்டிகள்**=சீவகற்பிதமான சிருஷ்டிகள், **தங்களைச் செனிப்பிக்கும் பிணி ஆகும்**=(தேவ, மநுட, திரியக்காதி யோனிகளில்) தங்களைப் பிறப்பிக்கும் பந்தங்களாம், [ஈசுர சிருஷ்டி மோட்ச சாதனம், சீவசிருஷ்டி பந்தகாரணம் என்றதற்கு யுக்தி கூறுகின்றார்.] **தாவர ஆதிகள் நசித்திடில்**=(ஈசுர சிருஷ்டியான) தாவர முதலியவை நாசமாயின், **ஒருவர்க்கும்**=யாரொருவர்க்கும், **சனனங்கள் நசியாவாம்**=ஜநநங்கள் நாசமாகாவாம், **கோபம் ஆதிகள் நசித்திடில்**=(சீவசிருஷ்டியான) குரோத முதலியவை நாசமாயின், **பந்தம் ஆம் கொடும் பிறவிகள் போம்**=பந்தமாகிய கொடிய ஜநநங்களுநாசமாம். எ-று.

"படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை"—

என்று தேவாரத்திலும்,

"குலவு மூவ ருருவமுங் கொண்டதே"—

என்று பாகவதத்திலுங் கூறியிருப்பதுபோல இங்கும், "மூவ ராம் பரன்" என்றார். "முத்திசாதனம்" எ-து, குருசாஸ்திராதி ரூபத்தை என்க. (56)

[கூறிப்போந்ததற்கு முக்கியவநுபவம் இனிக் கூறுகின்றார்.]

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார்கள்
தேச காலதே காதிக ளிருக்கவுஞ் சீவகா ரியமோகம்
நாச மாக்கிய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களானார்
பாசமோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே. (57)

இ-ள். **ஈசர் காரியம்**=(சராசரரூபமான) ஈசுர சிருட்டிகள், **பிரளயத்து ஒழியவும்**=(அவரது சங்கற்பத்தின்படியே) பிரளயகாலத்தில் நாசமாகவும், **எவர் பவம் ஒழிந்தார்கள்**=யாவர் ஜநநநாசத்தையடைந்தனர்: (ஒருவரும் அடைந்திலர்), **தேச கால தேகாதிகள் இருக்கவும்**=தேசங்காலந் தேக முதலிய ஈசுர சிருஷ்டி யழியாதிருக்கவும், (குருசாஸ்திராதி ரூபமான ஈசுர சிருஷ்டியாகிய சாதனங்களைக்கொண்டே), **சீவ காரிய மோகம்**=சீவ சிருஷ்டியாகிய மோகங்களை, **நாசம் ஆக்கிய**=(மீண்டெழாமல்) நாசஞ் **செய்த, விவேகத்தின்**=விவேகத்தினால், **உயிரொடும்**=பிராணனோடும், **ஞான முத்தர்கள் ஆனார்**=ஞானமுடைய சீவன் முத்தராயினர், (ஆகலின்), **பாசமோகங்கள்**=பாசமாகிய மோகங்கள், **பசுக்களின் செயல் அன்றி**=சீவர்கள் சிருஷ்டியே யல்லாமல், **பசுபதி செயல் அன்று**=ஈசுர சிருஷ்டியல்ல. எ-று.

"நாசமாகிய" எ-ம், பாடமுளது. சுழுத்தியைப்போலப் பிரளயத்தில் அகந்தை முதலிய வாசனைகள் அநுற்புத்தமாயிருத்தலின், சிருஷ்டியாதியிற் சகல பிராணிகளுந் தத்தம் வாசனையின்படியே நால்வகை யோனிகளை யடைகின்றன; ஆதலால், "எவர்பவ மொழிந்தார்" என்றார்.

"இறப்பிலா விந்தமோக மிறையுமீட் டெண்ணமின்றி; மறப்படுதே நல்லதென்றி"—

"வாசிட்டத்திற் கூறியிருப்பதால், "மீண்டேழாமல்" என்பது வருவித்தாம். "மோகம்" எ-து, அகந்தையாதிகளை; இவை ஜநந பந்தத்திற்குக் காரணமாகலின், "பாசம்" எ-ம், சுதந்தரகீனராகலின் சீவரை "பசுக்கள்" எ-ம், இவர்க்குச் சுதந்தரமுடைய இறையாகலின் ஈசுரனை "பசுபதி" என்றுங் கூறினர். (57)

[ஆசை முதலியவை சீவ சிருஷ்டியே யல்லாமல் ஈசுர சிருஷ்டி யல்ல என்பதற்குச் சுருதிப்பொருளைத் தரிசிப்பிக்கின்றார்.]

அச்சு வத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள்வாழும்
நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத்தின்னும்
மெச்சு மங்கொரு பறவைதின் னுதென வியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே (58)

இ-ள். அசசுவத்தம் என்று ஒரு மரம்=அரசென்று சொல்லப்பட்ட ஓர் விருட்ச முண்டு, அதில்=அவ்விருட்சத்தின்கண், இரண்டு அரும் பறவைகள் வாழும்=இரண்டரிய பட்சிகள் ஆசிரயித்திருக்கும், அங்கு=அவ் விருட்சத்தின் கண்ணுள்ள (இரண்டு பட்சிகளுள்), நச்சும்=(போகங்களை) விரும்புகின்ற, ஒரு பறவை=ஓர் பட்சி, அம்மரக்கனி=அவ்விருட்சத்தின் கனிகளை, நன்று நன்று எனத் தின்னும்=(இது) நல்லது, (இது) நல்லது என்று புசியாநிற்கும், மெச்சும்=(யாவராலும்) கொண்டாடப்பட்ட, அங்கு ஒரு பறவை=அவ்விருட்சத்தின் கண்ணுள்ள மற்றோர் பட்சியானது, தின்னுது என=(அவ்விருட்சத்தின் கனிகளைப்) புசியாதிருக்கும் என்று, * வியங்கியப்பொருள் ஆக வைச்சு=வியங்கியார்த்தமாக வைத்து, மாமறை= மகத்துவமுடைய முண்டகோபநிடதமானது, சீவனை ஈசனை=சீவனையும், ஈசுரனையும், வகுத்த ஆறு அறிவாய்=பகுத்துக்கூறிய வழியை நீ விசாரித்தறிவாய். எ-று.

(210) மூலசுருதியின் பாஷியார்த்தம்.—சியப்ய, நியாமகபாவப் பிராப்திரூபமான கமனத்தால், அல்லது பட்சியைப்போல விருட்சத்தை ஆசிரயித்திருப்பதாற் சீவேசுரரை, "பறவை" என்றது. விருட்சம்போலச் சேதிக்கப்படுந் தருமமுடையதா யிருத்தலாற் சரீரத்தை, "விருட்சம்" என்றது.

* வியங்கியப்பொருள் எனினும், குறிப்புப்பொருள் எனினும் ஒக்கும்.

சரீரரூபவிருட்சமானது மேலான பிரஹ்மத்தை மூலமாகவுடையது, கீழான பிராணன் முதலியவற்றைச் சாகைகளாகவுடையது, தனது ஸ்திதியம் இன்மையின், அச்சுவத்தம் என்னும் நாமமுடையது, அஞ்ஞானபரியந்தம் இருப்புடையது, க்ஷேத்திரம் என்னும் நாமமுடையது, சர்வப்பிராணிகளின் கர்மபலங்கட்கும் ஆசிரயமானது, பட்சிகள்போல அவித்தை காம கர்மங்களினுடைய வாசனைக்கு ஆசிரயமாகிய லிங்க சரீர வுபாதியுடைய சீவனும், ஈசுரனும் ஆகிய இருவருங் கூடியிருப்பது; கூடியிருக்கும் அவ்விருவருள்ளும், லிங்க சரீரரூபவுபாதியுடைய க்ஷேத்திரஞ்ஞன் என்னுஞ் சீவனே அவ்விருட்சத்தின்கண் ஆசிரயித்திருக்குங் கர்மஜந்நியங்களாகிய சுகதுக்கமயமான அனேகவித வேதனைகளின் அநுபவரூபமென்னும் இஷ்டபலன்களை அவிவேகத்தாற் புசிக்கின்றனன்; நித்தியசுத்த, நித்தியபுத்த, நித்தியமுத்த சுபாவமுடைய சர்வஞ்ஞனாகிய சுத்தசத்துவகுணப் பிரதானமான மாயா வுபாதியுடைய வீசுரன் புசிக்கின்றிலன். என்னை? அவ்வீசுரன் நித்தியமான சாட்சித்தன்மையின் சத்தாமாத்திரத்தால் போக்கியம், போக்தா என்னும் இவ்விரண்டின் பிரேரகனாயுள்ளன் ஆகலின் அவன் புசிக்கின்றிலன், விருட்சத்திற்கு அந்நியனாய்க் கேவலம் பார்ப்பவனாகவே இருக்கின்றனன், அவனுடைய தரிசனமாத்திரத்தாலேயே இராஜாவைப்போலப் பிரேரகத்தன்மை சித்திக்கிறது என்பது மூலசுருதியின் பாஷியார்த்தம்.

(2,11) * வியஞ்சன விருத்தியால் யாதொரு பொருள் தோன்றுகிற்குமோ அது வியங்கியப் பொருளெனப்படும். வியஞ்சன விருத்திக்கு உதாரணம்:—சத்துருவின் கிரகத்திற் போஜனநிமித்தம் புக்க புருடனை அவனிடத்தன்புடைய மற்றொரு புருடன் பார்த்து விஷத்தைப்புசி என்புழி, விஷத்தைப்புசி என்பதற்கு நஞ்சையுண்ணு என்பது சக்தி விருத்தியாற் போந்தபொருளாம். வக்தாவினுடைய தாற்பரியமோ அதுவன்று, புசிக்க வேண்டாம் என்பதாம். போஜனத்தில் சக்தியுடைய அப்பதத்திற்கு அபாவத்தில் சம்பந்தமின்மையால் லட்சணையும் பொருந்தாது. ஆதலால், சத்துரு கிரகத்திற் போஜன நிவிர்த்தி வாக்கியத்தின் வியங்கியார்த்தமாம்; அதுபோலப் பறவை என்னும் பதத்தின் சக்தி விருத்தியானும், இலட்சணா விருத்தியானும் சீவேசுரர் பெறப்படாமல் வியஞ்சன விருத்தியானற் பெறப்படுதலின், "வியங்கியப் பொருளாக" என்றார். (58)

(212) [இவ்வாறு சுருதி, யுத்தி, அநுபவங்களால் காமக்குரோதாதிகள் சீவச்செயலேயன்றி சிவன்செயலன்றெனக்கூறி, இங்ஙனம் அறியாதோர்க்கு வரும் அநர்த்தத்தையும், அறிந்தோர்க்குவரும் க்ஷேமத்தையும் இனிக்கூறுகின்றார்]

இந்தச் சீவனால் அருமறை பகையெலா மிவன்செய லென்னாமல்
அந்தத் தேவனால் வருமென்ற மூடர்கணிரதகதி யடைவார்கள்

* "வியஞ்சன விருத்தி"—பிறிதுமொழிதல் என்னும் அலங்காரமாம்: ஒட்டு அணியெனினும் ஒக்கும்.

இந்தச் சீவனால் வருமறு பகைகளெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனு லன்றெனும் விவேகிக ளமலவீ டடைவாரே. (59)

இ - ள். வெளி.

அறுபகை எனினும், அரிசட்வர்க்கம் எனினும் ஒக்கும். தற்செயலான காம முதலிய ஈன குணங்களைச் சர்வஞ்ஞத்வ முதலிய கல்யாண குணங்களை யுடைய சிவச்செயலாகச் சொல்பவர், பின்னராயினும் அப்படிச் சொல்வது குற்றமென்று கருதி அவைநீங்கி க்ஷேமமடையச் சன்மார்க்க முயற்சி யடையாமையின், தனது உடற்கட்பொருந்திய நோய்க்குச் சிகிச்சை தேடாமல் அபத்தியஞ் செய்து வருபவன் அந்நோய் அதிகரிக்கப்பெற்றுப் பின்னும் நாநாவித துன்பத்துளாழ்வதுபோலப் பாவம் அதிகரித்துப் பின் நரகமுதலிய நாநாவித துன்பங்களை யடைதலால், "அதோ கெதியடைவார்" எ - ம், அவ்வீன குணங்களைத் தற்செயலாகவே சொல்லும் விவேகிகள் அவை நீங்கி க்ஷேமமடையக் கருதிச் சன்மார்க்கத்திற் பிரவிர்த்தித்தலாற் புண்ணிய மிகுந்து சித்தசுத்தி யுடையராய் ஞானமடைந்து அஞ்ஞானத்தினும், அதன் காரியமான அநர்த்தத்தினும் நின்றுவிடுபடுவதால், "அமலவீடடைவார்" என்றுங் கூறினர். "மூடர்கள் அதோகெதி யடைவார், விவேகிகளமலவீடடைவார்" எனக் கூறினும் மூடர்கள் அதோகெதியை விரும்பாமையானும், விவேகிகள் அமலவீடடையத் தாமே சுதந்தரமுடையராகாமையானும் உலகில் அரசனானவன் தனது நியதிப்படி நடவாதோரைத் தண்டித்து, நடப்போரைச் சவுக்கிய மடைவிப்பதுபோல ஈசுரனும் தமதருணூலில் விலக்கியவற்றைச்செய்து, விதித்தவற்றைச் செய்யாதோரை நரக முதலிய துன்பங்களாற் றண்டிப்பன், விலக்கியவற்றைச செய்யாதொழித்து, விதித்தவற்றை விருப்பமாகச செய்யாநிற்பவரைப் பரமசவுக்கியமடையப் பண்ணாநிற்பன் என்பது பெறப்படுகின்றது. (59)

(213) [ஈசுரனிடத்து வைஷம்மிய தோஷங்கூடுமோ என வினாதலும், அதற்கு விடை கூறலும்.]

நலமெய் யாயினை யெல்லவர்க்குந் தெய்வ நாயகன் பொதுவா
னால்,சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே னென்றா
லியல், குலவு மக்களைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்ந்து துட்
டரைக்காய்வன், கலைக ளல்வழி வரச்செயுந் தண்டமுங் கருணை
யென் றறிவாயே (60)

இ - ள். நலம்மெய் யாயினை = ஆநந்தந்தானே திருமேனியாகத் (திரண்டுவந்த) குருவே, எல்லவர்க்கும் = (சிஷ்டர், துஷ்டரென்னும்) யாவர்க்கும் தெய்வ நாயகன் = (பிரமன், நாராணன், உருத்திரன் என்னும்) தெய்வங்களுக்கு இறைவனான ஈசுரன், பொது ஆனால் = சாதாரணமாயின், சிலரை வாழ்வித்தல் = சில சிஷ்டரை (ப் புகதி, முகதிகளைக் கொடுத்து) வாழ்வித்த

னும், சிலரோடு கோபித்தல்=சில துஷ்டரை முனிதலும், செய்வது= செய்யாநிற்பது, ஏன் என்றுயேல்=என்ன காரணத்தாலென்று சங்கிப்பையாயின், குலவு மக்களை=விளங்காநின்ற (தம்) புத்திரர்களை, தந்தை போல் =(குணங்கண்டு கொண்டாட்டலும், குற்றங்கண்டு கோபித்தலுஞ் செய்யாநின்ற) பிதாவைப்போல, *சிட்டரைக் குளிர்ந்து=(தன்னால் அருளிச்செய்யப்பட்ட சாஸ்திரவிதி நெறிநடக்குஞ்) சாதுக்களைச் சந்தோஷித்து (இன்பமடையப்பண்ணி), துட்டரைக் காய்வன்=(நிஷேத வழியிற்செல்லும்) அசாதுக்களை (நரகாதிகளால்) தண்டிப்பன், கலைகள் நல்வழிவர=சாஸ்திரங்களின் (நிஷேத மார்க்கத்தைத் தவிர்ந்து,) விதிமார்க்கத்தில் வருதற்பொருட்டு, செய்யும் தண்டமும்=செய்யாநிற்குந் தண்டமும், கருணையென்று அறிவாய்=கிருபையே (அல்லாமல் வேறல்ல) என்றறிதி. எ - று.

முனிதல்=தாரித்திரம், வியாதி, நரகமுதலிய துன்பங்களால் வருத்துவிப்பது. நன்னெறியிற் செல்லும் புத்திரரைச் சந்தோஷித்து அவர்கட்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதும், தீநெறியிற் செல்லும் புத்திரரைத் துவேஷித்து நன்னெறியில் வரத்தண்டிப்பதும் பிதாவுக்கு எப்படிப் பாரபட்சமில்லாத கருணையாமோ அப்படியே சாது, அசாது இருவரிடத்தும் ஈசுரன் செய்யும் அருண், முனிவுகள் இரண்டுங் கருணையேயல்லாமல் பாரபட்சமான விஷம திருஷ்டியன்று என்பதாம். (60)

[ஈசுரன் விஷம திருஷ்டியின்றி யாவரிடத்தும் சமதிருஷ்டி யுடையவன் என்பதை இன்னும் அநேக திருஷ்டாந்தங்களால் வற்புறுத்துகின்றார்.]

மனைவிலங் கறுமைந்த னேகற்பக மரங்கனல் புனன்மூன்றுந்
தனையடைந் தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளும் [யான்
அனையவீசனு மடைந்தவர்க் கருள்செய்வ னகன்றவர்க் கருள்செய்
இனையகுற்றங்க ளெவர்க்கு மாகுமென் றெண்ணிநீ யறிவாயே. (61)

இ - ள். மனை விலங்கு அறும் மைந்தனே=குடும்பமாகிய (கடை) விலங்கறப்பெற்ற மைந்தா, கற்பக மரம் கனல் புனல் மூன்றும் (பாரபட்சமில்லாமலிருந்து) தனை அடைந்தவர் வறுமையும் சீதமும் தாகமும், தவிர்த்து ஆளும்=(முறையே) தவிர்த்து இரட்சிக்கும், அனைய ஈசனும்=அவைபோலும் (ஒருவரிடத்து விருப்பும், ஒருவரிடத்து வெறுப்பும் இல்லாத) ஈசுரனும், அடைந்தவர்க்கு=(பாரபட்சமில்லாதவனென்றறிந்து தன்னை வேதத்தின் காண்டத்திரயவழியால்) ஆராதிப்பவர்க்கு, அருள்செய்வன்=அநுக்கிரகம் பண்ணுவன். அகன்றவர்க்கு அருள்செய்யான்—(தன்னை ஆராதனஞ் செய்யாது) நீங்கினோர்க்கு அநுக்கிரகம் பண்ணான், இனைய குற்றங்கள்= இத்தன்மையான தோஷங்கள், எவர்க்கும் ஆகும் என்று=யாவருடைய குற்றங்களாகுமென்று, மனமே நீ அறிவாய்—விசாரித்தறியக்கடவாய். எ - று.

" அனைய வீசனு மடைந்தவர்க் கருள் செய்வ னகன்றவர்க் கருள் செய்யான் " எ - கு, உ - ம், பகவற்கீதை,

" எப்பொரு டனக்கு மியானைத் திருத்தலா லெனக்கி யாரு
மொப்பர்க ளினிய ரின்னா தாரென வொருவ ரில்லை
யிப்படி யறியு மன்பர் பக்கலே யானு நிற்ப
னப்படி யவரு மென்பா லங்ஙன மமர்ந்து நிற்பார் "—

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"இனைய குற்றங்க ளோவாதுற்ற மாதும" எ - ந, " - ம், பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை,

' பொருதிடங் கொண்ட பொன்னெயிற் புக் கு
பருதிடங் கொண்ட பருந்த வ ழை
நின்னது குற்ற முளதோ நின்னினை ந
தெண்ணை ருங்கோடி யிடர்ப்பகை களைந் து
கண்ணுறு சீறறத்துக் காலனை யுதை யா
இறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்பொ டு
தேவ ராவின் கன்றெனத் திரியா ப்
பாவிக ளடங்க பாவம யாதெனி ல்
முறியுற பெறுகநன் முப்பழங் கலந் த
வறுசுவை யடிசி லட்டுணி திருப்ப ப்
புசியா தொருவன் பசிபால் வருந்து த
லயினியின் குற்ற மன்று வெயிலின் வை த்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப் ப
மடாது ஒருவன் விடாது வெட் கை
தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன் று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் துறு மி
வானுகங் கிடந்த சோலைகிடப ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப ப
வடுபெயர்ந திடுவா னை நு வ
னெடிது வருந்துத னிழற்றீங் கன் று."

என வரும். மற்றும் வருவனவற்றுற் காணக. (61)

(214) [ஆயின், அக்குற்றம் நீங்கி உய்யச் சீவர்களாற்
செய்யற்பால தென்னையோ வெனின்?
அதற்குக் கூறுகின்றார்.]

ஒன்று கேட்பாக வேடையான் முயற்சியா லுறைத்துயர் றடர்க் கிசன், நன்று செய்யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னோ,

சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய்ச் செனித்தமா யையைத் தள்ளி, நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிது தானே. (62)

இ-ள். மகனே, ஒன்றுகேள்=(சகல ஞான சாஸ்திரங்களின் சார பூதமான) ஒருபாயத்தை(ச் சொல்லுகிறோம்) கேட்பாய், புமான் முயற்சியால் உறைத்து=புருஷப் பிரயத்தனத்தா லழுந்தி, மாநுடர்க்கு ஈசன் நன்று செய்யவே=மநுடர்களுக்கு ஈசுரன் பிரஹ்மாநந்தங் கொடுத்தற் பொருட்டே, காட்டிய=அருளிச்செய்த, நூல வழி நடந்து=வேதத்தின் (காண்டத்திரய) நெறியில் நடந்து, நல்லவர் பின்னேசென்று=(பின் பிரஹ்மநிஷ்டர்களான) பெரியோர்கள் பிறகே திரிந்து, துட்ட வாதனைவிட்டு=(அப்பெரியோர்கள் சகவாசத்தாற் சாந்தியாதி வாசனைகளையுடையராய் முன்னுள்ள) குரோதாதி மலினவாசனைகளை யொழித்து, விவேகர்ஆய்=ஆன்மாநான்ம விவேகத்தை யுடையவர்களாய், செனித்த மாயையைத்தள்ளி=அவிவேகத்தாலுண்டான பேதபுத்தியைப்போக்கி, நின்று=(தன்னநுபூதியிற் சிவோகமென்று) நின்று, ஞானத்தை அடைந்தவர்=(சமுசயரகித பிரஹ்மான்ம வாக்கிய) ஞானத்தைப் பெற்றவருடைய, பவங்கள்போம்=(சுரநரதிரியக் காதிரூபங்களான வெகுவித) ஜநநங்களெல்லாம் நீங்கும், இது தானே நிச்சயம்=இதுவே (சுருதி, ஸ்மிருதிகளின்) சித்தாந்தமாம். எ-று.

எவ்வகை முயற்சிசெய்பவரும், நெடுங்காலம், நிரந்தரம், நேசத்தோடு செய்தினன்றி அவ்வப்பயனை யடையாராகலின், "புமான் முயற்சியாலுறைத்து" என்றார். "மாநுடர்க்கு" எ-து,

"மடல்விரிந்தமரை மலர் வைகுவோன்
சடமனைத்தையுந் தந்துழு வநதில
ளிடர றுக்குமென் றெண்ணிநன் மாநுட
வுடல்படைத்தபி னுவகையுற் றனனரோ."—

என்னும் பாகவதத்தின் கருத்தினால் என்க. ஈசுரார்ப்பணமாகச் செய்யும் நிஷ்காமகர்மாநுஷ்டானத்தால் அந்தக்கரணத்தின் மலதோஷமும், ஈசுரோபாசனையினால் விக்ஷேபதோஷமும் நீங்கித் தீவிரமான சிஞ்ஞாசையோடு கூடிப் பெரியோர்களை யடைந்தென்பார், "நூல் வழிநடந்து நல்லவர் பின்னே சென்று" என்றார்.

ஞானம் சர்வப் பிராயச்சித்தரூபமாகலின், இதனைச் சொல்லிய சோபானக்கிரமமாக வடைந்தாலன்றித் தற்செயலை ஈசுரச் செயலாகச் சொல்லித் திரிந்த பெருந்தோஷந் தவிராது என்பது கருத்து. (62)

(215) [ஞானத்திற்கு முக்கியவந்தரங்க சாதனம் யாதென்றும், அதன் சொரூபம் யாதென்றுஞ் சங்கித்து அவற்றைக் கூறுகின்றார்.]

இந்த ஞானந்தான் வருவதெப படியெனி லிடைவிடா விசாரத் தால், வந்தடைந்திடும் விசாரந்தா னெதெனின் மனுதியாஞ் சரீரத்

தில், இந்த நானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன் ருக்கூடும், பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதாகும். (63)

இ - ள். இந்த ஞானந்தான்=(சம்சார நிவிர்த்திக்குக் காரணமாக) முன் சொன்ன பிரஹ்மான்மவயிக்கிய ஞானமானது, வருவது எப்படி எனில்= வாராநிற்பது எவ்விதமான முக்கியோபாயத்தாலென்று நீ சங்கிக்கில், இடைவிடா விசாரத்தால்=நிரந்தரம், நெடுங்காலம், (நேசத்தோடுகூடிச்) செய்யும் விசாரத்தாலேயே, வந்து அடைந்திடும்=வந்து பொருந்தாநிற்கும், விசாரந்தான் ஏது எனின்=விசாரத்தின் சொரூபமாவது எவ்விதமாமென்று கேட்பாயாயின், இந்தமன ஆதி ஆம் சரீரத்தில்=இம்மன முதலாகிய சரீரத்திரயங்களில், நான் எவன்=அகம் சத்தார்த்தமாவது யாது, சித்து எது=இவைகளிற் சித்தாயிருப்பது யாது, சடம் எது=சடமாயிருப்பது யாது, இரண்டும் ஒன்ருக்கூடும் பந்தம் எது=சிற்சடங்கள் இரண்டும் (தப்தாயபிண்டம்போல) ஒன்ருகப் பொருந்துகின்ற பந்தமாவது யாது, வீடு எது=மோட்சமாவது யாது, என உசாவுதல்=என்று (நிரந்தரம் அழுந்த) ஆராய்தலே, பகர்விசாரமது ஆகும்=(சாஸ்திரங்களாலும், பெரியோர்களாலும்) கூருநிற்கும் விசாரரூபமாம். எ - று.

(216) "ஞானக்கு முந்துசவ ணுதிகமே காரணம்"— என வேதாந்தசூடாமணி முதலிய நூல்களிற் கூறியிருப்பதுபோற் கூருமல் "இடைவிடாவிசாரத்தால் வந்தடைந்திடும் விசாரந்தான், நானெவன் சித்தெது சடமெது, எனவுசாவுதல்" என இங்கே கூறினதற்குக் காரணமென்னையோ வெனின்:—விவேகம், வைராக்கியம், சமாதி சட்சம்பத்தி, முமுட்சுத்துவம் இவை நான்கும், சிரவண, மனன, நிதித்தியாசனங்கண் மூன்றும், தற்பதார்த்தம், துவம்பதார்த்த சோதனையொன்றும் ஆக இவ்வெட்டும் அந்தரங்க சாதனமென்றும், எக்ஞாதிகர்மங்கள் பகிரங்கசாதனமென்றுஞ் சொல்லப்படும் : அவைகளில் சிஞ்ஞாசுக்குப் பகிரங்க சாதனங்கள் தள்ளற்பாலன : அந்தரங்க சாதனங்கள் கொள்ளற்பாலன. சிரவணத்தில் அல்லது, ஞானத்தில் யாது பிரத்தியட்சப்பயனை யுடையது அது அந்தரங்கசாதன மெனப்படும். [பலன் எ - து, இங்கே உபயோகத்தை.] விவேகாதிகளின்றிப் பகிர்முக புருஷனுக்குச் சிரவணங்கூடாதாகலின், விவேகாதி நான்கனுபயோகஞ் சிரவணத்திலுளது; அப்படியே சிரவணுதிகளின்றி ஞானமுண்டாகாதாகலின் சிரவண, மனன, நிதித்தியாசனங்களினுபயோகம் ஞானத்திலுளது; அப்படியே தற்பதார்த்தம், துவம்பதார்த்தங்களையறிந்தாலல்லாமல் அபேதஞானம் உண்டாகாது. இவ்வாற்ருல், விவேகாதி நான்கு சாதனங்களினுபயோகம் சிரவணத்திலும், சிரவணுதி நான்குசாதனங்களினுபயோகம் ஞானத்திலுமிருப்பதால் எட்டும் அந்தரங்க சாதனங்கள்; யாதுஞானத்தில் அல்லது, சிரவணத்தில் பிரத்தியட்சப்பயனை யுடைத்தாகாமல் அந்தக்கரணசுத்தியாகிய பயனையுடைத்தாயிருக்குமோ அது ஞானத்திற்குப் பகிரங்கசாதனமெனப்படும். இப்படிப்பட்டவை எக்ஞாதி கர்மங்களாம்.

எப்படியும் எக்ஞாதிகர்மங்கள் சம்சாரத்திற்குச் சாதனங்களாகலின் அவை களால் அந்தக்கரண சுத்தி உளதாமெனலுங் கூடாது; அப்படியானாலும் சகாம புருஷனுக்குச் சம்சாரத்திற் கேதுவாம்: நிஷ்காமனுக்கு அந்தக்கரண சுத்தி க்கு ஏதுவாம்; இவ்வாற்றால், நிஷ்காம புருஷனுக்கு அந்தக்கரணசுத்தி வாயி லாக ஞானத்திற்கு ஏதுவாதலின், பகிரங்க சாதனமென்றும், விவேகாதிகள் அந்தரங்க சாதனமென்றுஞ் சொல்லப்படும். தூரமாவுள்ளதற்குப் பகிரங்க மென்றும், சமீபமாவுள்ளதற்கு அந்தரங்கமென்றும் பெயர். எக்ஞாதி கர்மங் களையும், அவைகளின் சாதனங்களான ஸ்திரீ, தன, புத்திராதிகளையும் விடில் அவன் ஞானத்துக்கு அதிகாரியாவன். ஞானத்திற்கு அதிகாரியிடத்து எக்ஞாதிகள் பொருந்தாமையின் அவை தூரமாம்; விவேகாதிகள் ஞானதி காரி யிடத்துப் பொருந்தியிருத்தலின் சமீபமாம்; இவற்றினும் பேதமுள; அவையாவையோவெனின்:—விவேகாதிகளினுபயோகம் சிரவணத்திலும், சிரவணாதிகளினுபயோகம் ஞானத்திலு மிருப்பதால் விவேகாதிகளை நோக் கச் சிரவணாதிகள் அந்தரங்கமாம்: சிரவணாதிகளை நோக்க விவேகாதிகள் பகி ரங்கமாம். எப்படியும், விவேகாதிகளும் ஞானத்திற்கு அந்தரங்க சாதனங்க ளென்றே சர்வ கிரந்தங்களிலுங் கூறியுள்ளன: பகிரங்கமாகக் கூறவில்லை; அப்படியானாலும், விவேகாதிகட்கு ஞானத்தின் சாதனமான சிரவணத்தில் பிரத்தியட்சப் பயனிருக்கின்றது. சிரவணாதிகளைப்போல விவேகாதிகளும் சிஞ்ஞாசுவினு லடையற்பாலனவேயாம்: எக்ஞாதிகளைப்போலத் தள்ளற் பாலனவல்ல; ஆதலால், அந்தரங்கமென்றனர்: எக்ஞாதிகளை நோக்கவும் அந்தரங்கமாம்; ஆகலின், அந்தரங்க சாதனத்திற் சேர்த்துக்கூறினர். விசா ரத்தினாற் பார்க்கில் ஞானத்திற்கு முக்கிய வந்தரங்க சாதனம் தத்துவமஸி யாதி மஹாவாக்கியங்களாம்: சிரவணாதிகளுமல்ல. என்னை? யுத்தியினால் வேதாந்த வாக்கியங்களின் தாற்பரிய நிச்சயம் சிரவணமெனப்படும். சீவபி ரஹ்மங்களின் அபேதத்தின் சாதகமும், பேதத்தின் பாதகமுமாகிய யுத்திக ளால் அத்துவிதீயப் பிரஹ்மத்தின் சிந்தனம் மனனமென்று சொல்லப்படும். அநான்மாகார விருத்தியின் வியவதான ரகிதமான பிரமாகார விருத்தியின் ஸ்திதி நிதித்தியாசனமென்று சொல்லப்படும். நிதித்தியாசனத்தின் பரிபாகா வஸ்தையையே சமாதியென்பர்; இதனால் சமாதியும் நிதித்தியாசனத்தில் அந்தர்ப்பாவமாம்: வேறு சாதனமல்ல; இங்ஙசு சிரவண மனன நிதித்தியாச னங்கள் ஞானத்திற்குச் சாட்சாத் சாதனமல்ல; பின்னை எப்படிப்பட்ட தெனின்:—புத்தியினது தோஷமாகிய அசம்பாவனை, விபரீதபாவனைகளின் நாசகமாம். சமுசயத்தை அசம்பாவனை என்பர். இப்படி விசாரசாகரத்திற் கூறியிருக்கின்றது; இவ்வபிப்பிராயத்தினாலேயே இவரும் சிரவண, மனன, நிதித்தியாசனங்களால் ஞானம் வருமென்னாது, "முடைவிடா விசாரத்தால் வந்தடைந்திடும்" என்றார்.

"விசாரமதாம்" ஈ-கு, உ-ம், வசிட்டம்,

"கெடாத சிற்கண்ணு னீதான் கிளர்மே லவர்களுடனே தான் விடாதிவ் வுலகே தியாமாரெய் நாலாறக்க மெல்லா விசாரிப்பாய்

தடாதுட் பொருடேர் வித்தைக்கு விசாரந் தானே தனிஞானங் கடாவி யறியத் தக்கததிற் காணும் பாலின் மதுரம்போல். "எ-ம்,

"முனிய கன்றபின் னெயினர்கோன் றனியிட முந்திநன் மதி யாலே, யனிச நானென்ப தாரென நாடிஞ னடிமுதன் முடியீறுந், தனியு டம்பைநா னென்பது புதுமையாஞ் சடவுடல் காண்கேனுன், றனிசெ யிவ்வுட லசேதனந்தசைமுதற் றன்னுமா தலினன்றே."— எ - ம்,

"காண மீரைந்து மன்னியஞ் சடமெனுங் கணக்கினு ஞனன் றித், திரளை னக்கில வுடன்முத ஞனலன் சேடமே தெனநோக்கில், விரவு சீவனே சேடமா மின்னதும் வேறென்றுற் றெரிகின்ற, தூரவி தானவே றென்றினுற் றெரியுமீ துயர்ந்ததத் துவமாகா."—எ-ம்,

"தெரிவ தாகிய விதனையு மகற்றவன் றெரிபொரு ளுளுமோ
பெரிது சேடமாய் விகற்பமற் றமலமாம் பேரறி வியாளுகு
மரிய யன்சிவ னிந்திர னந்தக ளுதியா மிடந்தோறுஞ்
சொரிகொண் முத்திறு ளுறனை நிற்குமாற் றேன்றுமிவ் வுயர் போதம்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (63)

(217) [**பிரஹ்மான்ம வயிக்கிய ஞானத்திற்கு விசாரமே முக்கிய அந்தரங்க சாதனமா மென்று முற்கூறியதைத்தானே இச் செய்யுள் தொடங்கி, 67-ம் செய்யுள் வரையில் வினு விடைகளாற் சாதிக்கின்றர்.**]

போன சன்மங்க டமிலநுட் டித்தநற் புண்ணிய பரிபாகம்
ஞான மாக்குமே விசாரமே னென்றிடி னுமுறைந் திடக்கேளாய்
ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி னசுசிபோஞ் சுசியாகும்
மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவாயே. (64)

இ - ள். போன சன்மங்கள் தமில் அநுட்டித்த=கீழ்ப்போன (அநந்த) ஜநநங்களி லநுஷ்டித்து வந்த, நற்புண்ணிய பரிபாகம்=சற்கரும பரிபாக மானது, ஞானம் ஆக்குமே=ஞானோதயமாகும்படி செய்யுமே, விசாரம் ஏன் என்றிடில்=ஆன்மாநான்ம விசாரமெற்றிற்கென்று நீ வினவிடில், நாம் உரைத்திடக் கேளாய்=அதற்கு யாஙகூறும் உத்தரத்தைக் கேட்பாய், ஆன புண்ணியம் ஈசுரார்ப்பணம் செயின்=(தத்தம் வருணாசிரமங்களுக்கு) உசித மான புண்ணியங்களை (ப் பலாபேட்சையின்றி) ஈசுரார்ப்பணமாகச் செய் யில், அசுசி போம் சுசிஆகும்=(அந்தக்கரணத்தின் கணணுள்ள) பாவமாகிய அசுத்தம் நீங்கி (மலின நீங்கிய தர்ப்பணம்போல) அது சுத்தமாம், மான தம்பினை விசாரித்து=சுத்தமான அம்மனமானது பின்னர்ச் சிற்சடங்களை

விசாரித்து, ஞானத்தை மருவும் என்று அறிவாய்=ஞானத்தைப் பொருந்தா நிற்குமென் றறிவாயாக. எ - று.

சற்கருமாநுஷ்டானமானது சித்தசுத்தி மாத்திரப் பயனைப் பயவாநிற்கு மல்லது, விசாரம்போல நேரே ஞானத்தைப் பயவாது என்பதாம்.

இங்ஙனம் வினவியது ஞானசாதன சமுசயம். (64)

[சகலத்தையும் பயக்கவல்ல சற்கருமங்கள் அஞ்ஞானத்தை நிவிர்த்தித்தல் இலேசாகலின், விசாரம் ஏனெனை மீட்டும் வினுதல்.]

பத்தி யும்வயி ராக்கிய மும்பர லோகமு மணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமுஞ் சாரூப
முத்தி யுந்தரும் விசித்திர கருமங்கண் மோகமாத் திரந்தள்ளும்
புத்தி தந்திட லருமையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி.(65)

இ - ள். பத்தியும்=ஈசுரனிடத்தன்பும், வயிராக்கியமும் = (சகலத்தினும்) நிராசையும், பரலோகமும்=சுவர்க்கலோகமும், அணிமா ஆதி சித்தியும்=அணிமா முதலிய வஷ்டசித்தியும், தவ நிட்டையும்=தவத்தி லுறுதியாக நிற்றலும், யோகமும்=இயமாதியஷ்டாங்க யோகமும், தியானமும்=சகுண, நிர்க்குணத் தியானமும், சாரூப முத்தியும்=சாரூபமோட்சமும் (ஆகியவிவற்றை), தரும் விசித்திர கருமங்கள்=கொடுக்கும் ஆச்சரியமான சற்கருமங்கள், மோகம் மாத்திரம் தள்ளும்=தன்னைப் பிரஹ்மமாக அறியாத வறியாமை மாத்திரத்தை நிவிர்த்திப்பிக்கும், புத்தி தந்திடல் அருமையோ= ஞானத்தைத் தருதல் அருமையா, விசாரம் என்=விசாரம் யாதுக்கு, புண்ணிய குருமூர்த்தி=புண்ணியரூபமான குருவே. எ - று. (65)

[விசாரத்தாலல்லது, ஞானம் உதயமாகாதென்பதை திருஷ்டாந்தமுகத்தா லுணர்த்துகின்றார்.]

வேட மாறிய பேர்களை யறியவே வேண்டினன் மகனேகேள்
கூட மாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்தேறி
ஆடி யும்பல கருமங்கள் செய்யினு மவருண்மை தெரியாதே. (66)

இ - ள். வேடம் மாறிய பேர்களை=தம்வேடத்தைவிட்டு மாறுவேடங் கொண்டு மறைந்தோரை, அறியவே வேண்டினுல்=அறியவேண்டின், மகனேகேள்= மைந்தா நீ கேட்டி, கூடம் ஆம் அவர்=மறைந்திருப்பவைகளான அவரது, சுபாவங்கள்=குணங்களையும், சீலங்கள்=ஒழுக்கங்களையும், குறிகள்=சின்னங்களையும், ஆய்ந்து அறியாமல்=ஆராய்ந்து (அவர் இனையரென) அறியாமல், ஓடியும்=வெகுதூரங் கால் சலிக்கவோடியும், குதித்தும்=வரையிலேறிப் பாய்ந்தும், தலைகீழ் நின்றும்=தலைகீழ், (கால் மேலாக) நின்றும், உயர்ந்த கம்பத்து ஏறி ஆடியும்=உன்னதமான கம்பத்

தின் மீதேறிக் கூத்தாடியும், பலகருமங்கள் செய்யினும்=இன்னும், அநேக கருமங்களைச் செய்யினும், அவர் உண்மை தெரியாது=வேடமாறினோருண் மை யறியவாராது. எ - று. (66)

[முற்கூறிய திருஷ்டாந்தம்போலத் தாஷ்டாந்தத்தும் ஆமெனல்.]

இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத்தால் வேதம்,
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்
தாலும், அன்ன தானங்க டவங்கண்மந் திரங்களா சாரங்கள் யாகங்
கள், என்ன செய்யினுந் தன்னைத்தா னறிகின்ற நிலைகளால்
வாராதே (67)

இ - ள். இன்ன ஆறு=இத்திருஷ்டாந்தப்படி, அந்தப் பிரமத்தை= (நீலாதி வஸ்துக்களோடு கூடி அவ்வண்ணமாய்த் தோற்றும் ஸ்படிகம்போலப் பஞ்சகோசங்களோடு கூடி அவைகளே தானாய்த்தோற்றும்) அப்பிரஹ்மத்தை, இலக்கணத்தால்=(சொரூபம், தடஸ்தம், அதத்வியாவிருத்தி) என்னுமூவகை இலக்கணங்களால், அறிவிக்கு=அதிகாரிக்குத் தெரிவிக்கும், வேதம் சொன்ன ஞானமும்=வேதங்களாற் பிரதிபாதிக்கப்பட்ட (பிரஹ்மான்மவயிக்கிய) ஞானமும், விசாரத்தால் வரும் அன்றி=63 - ம் செய்யுளிற் கூறிய விசாரத்தால் வருமே யல்லாமல், சுருதி நூல் படித்தாலும்=வேத சாஸ்திரங்களைக் கற்றாலும், அன்ன தானங்கள்=அன்னதான (முதலிய தான) ங்களும், தடங்கள்=கிருச்சிர சாந்தராயணாதி தவங்களும், மந்திரங்கள்=(பஞ்சாட்சர, அஷ்டாட்சராதி) மந்திர செபங்களும், ஆசாரங்கள்= (வருணாசிரம) ஆசாரங்களும், யாகங்கள்=(தத்தம் வருணத்திற் குரிய) யாகங்களும், (ஆகிய இவைகளில்) என்ன செய்யினும்=யாதுசெய்யினும், தன்னைத் தான் அறிகின்றது=தன்னைத் தானறிவது, இவைகளால் வாராது =இவற்றாலுளதாகாது. எ - று.

"தன்னைத்தா னறிகின்றது" என்று பின்னும் கூறினது ஞானத்தின் சொரூபம் இனைத்தெனக் காட்டினது; இப்படியே "திருமந்திரத்தில்,

"தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகுமே"—

என்றருளிச் செய்திருப்பது காண்க. சொரூபலட்சண முதலிய மூன்றனையும், "ஆகமுதலன" என்னும் வேதாந்த சூடாமணியின் செய்யுளாலறிக. (67)

(218) [கருமத்தாலன்றி, ஞானத்தால் அஞ்ஞானம் ஒழியுமாறு எவ்வாறெனத் திருஷ்டாந்த முகத்தாற்

சீடன் வினாதல்.]

துலங்கு தாமணி மழுக்கறக் கைக்கொண்டு துலக்கினாற் போயன்றி, விளங்கு புத்தியா லுலகிலார் துலக்கினு மியல்பே சிக

மூர்த்தி, களங்க மாகுமஞ் ஞானமு மப்படிக் கருமத்தாற் கழுவா
மல், உளங்குறித்தஞா னத்தினு லெப்படி யொழியுமீ தருள்வீரே ()

இ-ள். துளங்கு தர்ப்பணம் அழுக்கு அற=ஒளிர்கின்ற கண்ணாடியிலேறிய அழுக்கறும்படி, கைக்கொண்டு துலக்கினால்போம் அன்றி=(அதை யகற்றவல்ல சாதனங்களைக்) கையிற்கொண்டு விளக்கினாற் போகுமல்லாமல், விளங்கு புத்தியால்=விளங்குகின்ற புத்தியினால், உலகில் துலக்கினோர் ஆர்=உலகின்கண் விளக்கினோர் யாவர்! (ஒருவருமிலர்), விமல தேசிக மூர்த்தி=அவித்தியாமல மிறந்த குருவே, அப்படி=அத்திருஷ்டாந்தப்படி, களங்கம் ஆகும் அஞ்ஞானமும்=களங்கமாகிய வஞ்ஞானமும், கருமத்தால் கழுவாமல்=சற்கருமத்தால் நீக்கப்படாமல், உளம் குறித்த ஞானத்தினால்=அந்தக்கரணத்தால் (மித்தையென) மதிக்கும் ஞானத்தால், எப்படி ஒழியும்=எவ்வாறு நீங்கும், ஈது அருள்வீர்=இதனை உரைத்தருள்வீராக. எ-று.

அஞ்ஞானத்தைக் "களங்கம்" எ-து ஆன்மாவை மறைத்தலின் என்க. (68)

[முற்செய்யுளிற் சீடர் கூறிய திருஷ்டாந்தம் விஷமமென்று காண்பித்து
மறுத்துத் தார்ஷ்டாந்தத்திற்குச் சமமான திருஷ்டாந்தம் இது
வெனக் காண்பிக்கின்றார்.]

தர்ப்பணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசமா தலின்மைந்தா
கற்பளிங்கினிற் கருநிறஞ் சகசமாக் கறுத்ததன் றாரோபம்
தர்ப்பணத்தினி லழுக்கற வேண்டினுஞ் சாதனத் தொழில்வேண்டும்
கற்பளிங்கிலா ரோபமே கறுப்பென்று கண்டிட மனம்போதும் (69)

இ-ள். தர்ப்பணத்தினில் களிம்பு=கண்ணாடியின் கண்ணுள்ள களிம்பானது, வாஸ்தவமலம் சகஜம்=* வாஸ்தவமலமும் † சகஜமுமாம், மைந்தா=மகனே, கற்பளிங்கினில்=ஸ்படிகக் கல்லில், கருநிறம்=பற்றி பாய்ந்துள்ள கறுப்புநிறம், சகசமாக் கறுத்தது அன்று=சகஜமாகக்கறுத்திருப்பதல்ல, ஆரோபம்=பொய்யாக வந்தது, ஆதலின்=ஆதலினால், தர்ப்பணத்தினில் அழுக்கு அறவேண்டினால்=கண்ணாடியின்கண்ணுள்ள அழுக்கை யொழிக்க வேண்டிடில், சாதனத்தொழில் வேண்டும்=அதனை யொழிக்கவல்ல சாதனமாகிய தொழில்வேண்டும், கற்பளிங்கில்= படிகக்கல்லில், கறுப்பு ஆரோபமே என்று கண்டிட=கருநிறம் பொய்யேயென்று கண்டுகொள்ள, மனம்போதும்=மனமேபோதும். எ-று.

அறுக்கவென்னும் பிறவினையில், "அற" என்பது தன்வினைவந்தது. ஏனைய கண்ணாடியினழுக்கைக் களிம்பென்று வழங்காமையின் இதின் முதற் பாதத்தில் "தர்ப்பணம்" எ-து, செம்புக் கண்ணாடியை; இங்ஙனங்கூறியது கண்ணாடியின் மலத்திற்குச் சகஜதர்மங் கூறி மறுத்தற்பொருட்டு என்க. (69)

* வாஸ்தவம்—சத்தியம். † சகஜம்—கூடவே உண்டானதர்மம்.

[ஸ்படிகம்போலும் அஸ்திபாதிப்பிரிய ரூபமான தன்னில் நான் செத்துப் போகிறவன், சடன், துக்கி என்னும் விபரீதப்பிரதீதி மாயையினால் ஆரோபமாகத் தோற்றுகின்றதாகலின், சற்கருமங்கள் அதற்குச் சாதகமல்லது, பாதகமாகாது என மறுத்து ஞானமே பாதகமாம் என்னுஞ் சித்தாந்தத்தைச் கூறுகின்றார்.]

இங்கு மப்படிச் சச்சிதா னந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றும்
தங்கு மாயையின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன்றே
பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும்
துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே.(70)

இ-ள். இங்கும்=தாஷ்டாந்தத்திலும், அப்படி=அத்திருஷ்டாந்தப் படி, சத் சித் ஆநந்தத்தில்=அஸ்தி பாதிப் பிரியரூபமாகிய தன்னில், பொய் சடம் இடர் மூன்றும்=அசத்து சட துக்கங்கண் மூன்றும், தங்கும் மாயையின் கற்பிதமே அன்றி=(சுத்தியில் ரஜதம்போல ஆரோபமா) யிருக்கும் (சரீரத்திரய ரூபமான) அஞ்ஞானத்தினுற் கற்பிதமேயல்லாமல், சகச வாஸ்தவம் அன்று=சகஜமுமன்று, வாஸ்தவமுமன்று, பங்கம் ஆகும் அஞ்ஞானத்தை=அசத்து சட துக்காதமகமான அஞ்ஞானத்தை, கருமங்கள்=(புண்ணிய) கருமங்கள், பகைசெயாது=பகைத்து நாசஞ்செய்யாமல், உறவு ஆக்க்கும்=(தமக்கு) உறவாகப்பண்ணும், துங்கஞானமே=உயர்வான பிரஹ்மான்மவயிக்கிய ஞானமே, கரும அஞ்ஞானத்தை=கருமத்தையும், அஞ்ஞானத்தையும், சுடுகின்ற நெருப்பு ஆம்=தகிக்கவல்ல தீயாம். எ-று.

"மாயையின்" என்னும் பதத்திற்கு, சரீரத்திரய ரூபமானவஞ்ஞானத்தினுல் என்று பொருளுரைத்தது இனி 77-வது செய்யுளில், "உலகமான வஞ்ஞானமும், பலவுமான வஞ்ஞானமும்" என இவ்வாசிரியர் கூறியிருக்கும் அபிப்பிராயங்கொண்டு என்க. அந்தகாரத்தை மேகபடலம்போலச் சற்கருமங்கள் அகர்த்தா, அபோக்தாவாகிய தன்னைக் கர்த்தா, போக்தாவாகச் செய்தலின், "அஞ்ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும்" எ-ம், சூரியன் அந்தகாரத்தைக் கெடுப்பதுபோலச் சமுசயரகிதமாயெழும் பிரஹ்மான்மவயிக்கியஞானம் அஞ்ஞான கர்மங்களை நாசஞ் செய்வதால், "துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாம்" என்றுங் கூறினர். (70)

[கூறிப்போதத்தைப் பிரசித்தமான அநுபவத்தாற் சாதிக்கின்றார்.]

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநூ றழுதாலும்
நினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிந்த நின்மல வான்மாவும்
உணர்த்த மாணுதன் மறதியைக் கெடுத்துத்தன் னறிவினாற் காணுமல்
கணத்த கர்மங்க ளநூறாஞ் செய்யினுங் காணுமோ காணுதே. (71)

இ-ள். மனைக்குள் வைத்த பண்டங்களை=மனையினுள் வைத்த (அல்லது, புதைத்து வைத்த) இரத்தின முதலிய பதார்த்தங்களை, மறந்தவன்=

வைப்பிடந்தெரியாது மறந்த புருஷன், வருடம் நூறு அழுதாலும்=நூறு வருஷம் உரோதனஞ்செய்யினும், நினைத்து உணர்ந்தபின் கிட்டும்=(உரோதனஞ் செய்ததாற் கிடைக்காமல்) யோசித் தறிந்தபின் (அப்பதார்த்தங்கள்) எப்படிக் கிடைக்குமோ, அப்படி=அந்தப்படி, இந்த நின்மல ஆன்மாவும்= யாவர்க்கும் அபரோட்சமான நிர்மலமாகிய ஆன்மாவும், அனர்த்தம் ஆன= துன்பத்திற்குக் காரணமான, தன் மறதியைக்கெடுத்து=தனதறியாமையை (விசாரத்தால்) நசிப்பித்து, தன் அறிவினால் காணாமல்=தனது ஞானத்தாற் காணப்படாமல், கனத்த கர்மங்கள்=பாரமாகிய கர்மங்கள், நூறு உகம் செய்யினும்=அநேக உகங்களிலியற்றினும், காணுமோ காணாது=காணப்படுமோ? படாது. எ - று.

"இந்த ஞானந்தான்" என்னுஞ் செய்யுண் முதல், "மனைக்குள் வைத்த" என்னுஞ் செய்யுள்வரையும் ஞானசாதனங் கருமமா? அல்லது, விசாரமா என்றெழுந்த சந்தேகந் தெளிவித்ததாம்.

இவை பிரமேய சந்தேகங்களெனக் காண்க. (71)

(219) [பிரமாணசந்தேகந் தெளிதற்பொருட்டுச் சீடன் வினாதல்.]

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யெனும் வேதம்
தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குநண்மாந்தர்
சென்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுகமென்று
கன்ம காண்டத்தில் விதித்ததென் விதித்துள காரண முரையீரே ()

இ - ள். குருவே, நன்மை ஆம் சுகம் தருவது=நிரதிசயானந்தமான சுகத்தைத் தரத்தக்கது, ஞானமே எனும் வேதம்=(பிரஹ்மான்மவயிக்கிய) ஞானமேயென்று சொல்லும் வேதமானது, தன்ம பாவம் மிசிரங்களால்= புண்ணிய கருமம், பாவ கருமம், மிசிர கருமங்களால், (முறையே) தேவர்கள் (சென்மம்)=தேவ ஜன்மமும், விலங்குகள் தரு (சென்மம்)=மிருக முதல், ஸ்தாவர பரியந்தமான ஜன்மமும், மாந்தர் சென்மம்=மநுடஜன்மமும், ஆகுவ (என்று)=உண்டாவனவாமென்றும், சாதி ஆசாரமே செய்தவம் (என்று)=(அவனவன்)சாதியி னொழுக்கமே(அவனவனுக்குச்) செய்யத்தக்கனவான தவமாமென்றும், சுகம் என்று=இதனாலே சுகமுண்டாமென்றும், கன்ம காண்டத்தில் விதித்தது என்=கர்மகாண்டத்தில் விதித்திருப்பது யாது கருதி, விதித்து உள=(இப்படியாக) விதித்திருக்கின்ற, காரணம் உரையீர்=காரணத்தை யருளிச்செய்வீராக. எ - று.

புண்ணியம், பாவம், மிசிரம் என்னும் மூவகைக் கருமங்களும் உத்கிருஷ்ட, மத்திம, சாமான்யபேதத்தால் ஒவ்வொன்றும் மும்மூன்று விதமாயிருக்கும்; புண்ணிய உத்கிருஷ்டத்தால் இரண்யகர்ப்பாதி சரீரப் பிராப்தியும், புண்ணிய மத்திமத்தால் தேவேந்திராதி சரீரப் பிராப்தியும், புண்ணிய சாமான்யத்தால் யட்ச, ராட்சச, கின்னர, கிம்புருஷ, பைசாசாதி சரீரப்பிராப்தியும், பாவ உத்கிருஷ்டத்தால் பிராணிகளுக்குத் துக்கத்தைக் கொடாநிற்கும்

தேள், பாம்பு, கொசுகு, மூடு, புலி, கரடி முதலிய சரீரப்பிராப்தியும், பாவ மத்திமத்தால் புளி, மா, பலா, தென்னை, எருமை, பருந்து முதலிய சரீரப் பிராப்தியும், பாபசாமான்யத்தால் பசு, யானை, குதிரை, அரசு, துளசி முதலிய சரீரப்பிராப்தியும், மிசிர உத்கிருஷ்டத்தால் நிஷ்காம புண்ணியபலத்தாலுளதாகுஞ் சித்தசுத்தியும், அதனால் சாதன சதுஷ்டயமும், அவற்றால் சற்குருலாபமும், அதனால் சிரவணாதிகளும், சிரவணாதிகளால் அபரோட்ச ஞானமும் பெற்று அவ்வபரோட்ச ஞானத்தால் சீவன் முத்திச் சுகத்தை யடையத் தக்க சரீரப்பிராப்தியும், மிசிர மத்திமத்தால் ஆசிரமத்திற் குசிதமாகிய காமிய கர்ம யோக்கியமான சரீரப்பிராப்தியும், மிசிரசாமான்யத்தால் சண்டாள, பாண்டு, குஷ்ட, பெருவியாதிகளையுடைய சரீரப்பிராப்தியும் உண்டாவதால், "தன்மபாவ மிச்சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர், சென்மமாதுவ" என்றது.

"சாதியா சாரமே செய்தவம்" எ-கு, உ-ம், பகவற்கீதை,

"கறைசெயைம் புலன்களைக் கரண நான்குடன்
றுறை துறை யடக்கலுந் தவமுந் தூய்மையும்
பொறையொடு கல்வியும் பொருந்து ஞானமு
மறையவர் தொழிலென வகுக்கப் பட்டதே"—எ-ம்,

"நலைமையுங் கொடையொடு தறுக ணாண்மையு
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங்
கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமையுஞ்
சிலைமலி தோளினு யரசர் செய்கையே"—எ-ம்,

"உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிகம்
வழுவறச் செய்தொழில் வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள் வேளாளர் தென்பவே."—எ-ம்,

"தீரா வகைதரு செயலே செயவே
நாரா யணனு முதனு யகனுங்
காரா தணையா மதனு லவனே
வாரா வழியாம் வரமே தருமால்."—

எனவும் வரும். மற்றும் வருவன வற்றுற்காணக. (72)

[மேலைவினாவிற்கு நான்கு செய்யுளால் உத்தரங் கூறல்.]

தினமுமண் ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர் காட்டிக், கனமருந்துக வொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய்போலே, மனைய றங்கள்செய மகங்கள்செய் நன்றென்று மலர்த் தவா சகஞ்சொல்லும், நினைவு வேறுகாண் சுவர்க்ககாமிகளந்த நினை யாயக் தெரியாரே. (73)

இ-ள். தினமும்=நாள்தோறும், மண் நுகர் பிள்ளை நோய்க்கு=(சாரமற்ற) மண்ணையுண்ணுந் தன் பிள்ளையின் வியாதிக்கு, இரங்கி=(மனம்) இரங்கி, தீம்பண்டம் எதிர்காட்டி=(அப்பிள்ளைக்கு) இனிப்பான பதார்த்தங்களை எதிரேகாட்டி, கன மருந்துகள் ஒளித்துவைத்து=கனமான அவுஷதங்களை மறைத்துவைத்து, அழைக்கின்ற=(பன்முறை) அழையாநின்ற, கருணை நற்றாய் போலே=கருணையுடைய நல்ல மாதாவைப் போலவே, மனை அறங்கள் செய்=இல்வாட்கைக்குரிய அறங்களைச் செய்வாயாக, மகங்கள்செய்=எக்ஞங்களைச் செய்வாயாக, நன்று என்று=(இவற்றால்) சுகமுண்டாகுமென்று, மலர்ந்த வாசகம் சொல்லும்=விரிந்த (சுருதி) வாக்கியங்கள் கூறுகிற்கும், நினைவு வேறு காண்=(இங்ஙனங் கூறுகின்ற சுருதியின்) கருத்தானது (இதுவல்ல), வேறாகும், சுவர்க்க காமிகள்=சுவர்க்கபோகங்களில் இச்சையுடையோர், அந்த நிண்ணயம் தெரியார்=அந்நிச்சயத்தை யறியார். எ-று.

"தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர்காட்டிக், கனம நர்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய் போலே" என்றுங் கூறிய திருஷ்டாந்தத்தால் தாஷ்டாந்தத்தின்கண் ஜநநந் தோறும் சாரமற்ற விஷயங்களை யுண்டு வருவதால் அஞ்ஞானியாகிய பாலனடைந்துள்ள ஜநநமரணரூபமான நோய்க்கு மனமிரங்கி அதனைத் தீர்க்கவல்ல பரமாத்வைத ஞானத்தை யொளித்துவைத்து அவனுக்கிதமாகத் தோற்றுகின்ற சுவர்க்கவின்பங்களைக்காட்டி என்னும் பொருள் கொள்ளக் கிடந்தமை காண்க. "தீம்பண்ட மெதிர்காட்டிக், கனமநர்துக ளொளித்துவைத்து" எ-து, "குடசிக்வாநியாயம்." (73)

[அங்ஙனம் விதிந்த சுருதியின் கருத்து வேறெனப்படுதற்கு யுத்தி கூறுகின்றார்.]

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாண்
ஆக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ
காக மேகறுத் திடுநெருப் பேசுடு நசந்திடு வேம்பேநீ
வேக வாயுவே யசையென வொருவரும் விதித்திடல் வேண்டாவே.()

இ-ள். போகம் ஆர் உயிர்=(ஐம்புலன்களாலும்) போகங்களை யுண்ணுகின்ற வுயிர்கள், கண்டதை உண்பதும்=நேர்ந்த பதார்த்தங்களை யுண்ணுகிற்பதும், புணர்வதும்=(நேரிட்ட பெண்களைக்) கலவி செய்வதும், இயல்பே காண்=சுபாவமே (அல்லாமல், வேறில்லை), ஆகமங்களும்=சுருதிகளும், சுபாவத்தை விதிக்குமோ=(உயிர்கட்கு) இயல்பாயுள்ள அவ்வுருந்தல், பொருந்தல்களை (விலக்குமே யல்லாமல்) விதிக்குமோ?, அத்தனை தெரியாதோ=(சர்வஞ்ஞமுடைய சுருதிகட்கு) அவ்வளவு தெரியாதா?, [சுபாவத்தை விதிக்கவேண்டாமென்பதற்குத் திருஷ்டாந்தங் கூறுகின்றார்.] காகமே கறுத்திடு=வாயசமே நீ கறுத்திடு, நெருப்பே சுடு=தீயே நீ சுடு, வேம்பே நசந்திடு=வேம்பே நீகைத்திடு, வேக வாயுவே அசை=வேகமுடைய வாயுவே

நீ சலித்திடு, என=என்று, ஒருவரும்=யாரொருவரும், விதித்திடல் வேண்டாவே=விதிக்கவேண்டுவதில்லையே. எ - று.

இதனால், யாதொரு வேதத்திற்கும் பிரவிர்த்தியில் அபிப்பிராயமில்லை; மற்றென்னை அபிப்பிராயமென்னில் :—*நிஷித்த சுபாவீகமான பிரவிர்த்தியினின்றுந் தகைவதிற்றனே அபிப்பிராயமாம் என்க.* (74)

[" மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று " விதித்த சுருதியின் அபிப்பிராயம் உணர்த்துகின்றார்.]

கள்ளு மூனுநீ விரும்பினன் மகங்கள்செய் காமத்தின் மனதானல், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந் தொடானென்றே, கள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும், விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே. (75)

இ-ள். கள்ளும் ஊனும் நீ விரும்பினல்=மதுவும், மாமிசமும், (உண்ண) நீ இச்சித்தால், மகங்கள்செய்=யாகங்கள்செய்து (அந்த யாகஸ்தலத்தில் நீ யுண்பாய்), காமத்தில் மனது ஆனல்=ஸ்திரீயின் புணர்ச்சியில் மனதிருந்தால், கொள்ளும் பெண்டொடு கலவிசெய்=(விவாகத்தால் மனைவியாக) வரித்த ஸ்திரீயுடன் புணர்தலைச்செய், எனில்=என்று (நாம்) விதிக்கின், (நமது ஆக்ஞைக்கஞ்சி) இவன்=இப்புருடனனவன், குறை எலாம்=(நிரந்தரம்) நேரிட்ட போகங்களையும், நேரிட்ட எனைய ஸ்திரீகளையும், தொடான் தள்ளும் என்றே=ஸ்பரிசியாமல் விட்டுவிடுவனென்றே, வேதத்தின் சம்மதம்=சுருதியின் சம்மதம். (ஆகலின்) சகலமும் தவிர்வதே கருத்து ஆகும்=சகலத்தையும் விட்டொழிவதே அதற்கபிப்பிராயமாம், (ஆயின்) விள்ளும் இவ்விதி என் எனின்=("மனைய றங்கள் செய் மகங்கள் (செய் நன்றென்று") முன் சொல்லிய அவ்விதியானது என்ன விதி யென்று நீ சங்கிக்கில், பூருவ நியமம் ஆம் விதி=பூருவபட்சமான விதியாம்: (சித்தாந்தமன்று.) எ - று. அன்று, ஏ - அசைகள். (75)

[வேதத்தின் அபிப்பிராயம் நிவிர்த்தியிலேயே யல்லாமல், பிரவிர்த்தியில் இல்லை யென்றுஞ் சித்தாந்தத்தை விரித்தும், சர்வத்தையும் விடுவதால் வேதநிந்தை, உலகநிந்தை இன்றென்பதை அநுபவத்திலுங் காட்டுகின்றார்.]

மதுவிலைச் சிசுருமென் றொன்று சுருதியின் பயனந்தரமெனல் பாராய், மிதுன விச்சையும் புத்திரோத் பத்தியால் விரும்பென்று விதிபாராய், இதனையும் விட்டொழி யதிலிட்டு தவங்கிக் கிகழ்ச்சியற் றதும்பாராய், அதைய் நிந்தகன் மங்களா சைகளொழிந் தானந்த மடைவாயே (76)

இ-ள். *மது இறைச்சிகள் உண் என்ற சுருதி—மதுபானம், மாமிச பட்சணங்களில் (இச்சைவரில் நரகதுக்கம் வாராமற் போகும்படி எக்ஞஞ்செய்து அவ்வெக்ஞஸ்தலத்தில்) அவைகளைப் புசிப்பாயாக வென்றவேதம், பின்—பின்னே, மணந்துபார் எனல்பாராய்—(எக்ஞஸ்தலத்திலும் மது மாமிசங்களை மோந்துபார்ப்பது மாத்திரமாய் ஒழிவாயாகில் வெகுகாலம் சுவர்க்க போகங்களை யனுபவிக்க வருமாகலின், அவைகளை யுண்ணாமல்) மோந்து பாரென்று சொல்லுஞ் சுருதி வசனத்தையும் நீ பார்ப்பாய், மிதுன இச்சையும் புத்திர உற்பத்தியால் விரும்பு என்ற விதிபாராய்—மனைவியோடு புணரும் புணர்ச்சி விருப்பும் புத்திரோற்பத்தி நிமித்தம் விரும்புதியென்ற விதியையும் பார்ப்பாய், (இனி, இதற்கு விசேஷவுரை:—நேரிட்ட ஸ்திரீகளைப் புணரில் இம்மையிற் பாவமும், பழியும் மறுமைக்கண் நரகதுக்கமு முண்டாகுமாதலால், ஒருத்தியை மணஞ்செய்து அவளைப்புணர்தியென்ற வேதம் பின்னே விதியாத தினத்திற்கூடில் துர்ப்புத்திரனுண்டாய் அவனால் இம்மையிற் பாவமும், பழியும் மறுமையில் நரகதுக்கமும் வருமாதலால், சற்புத்திரனுண்டாய் உனக்கும், உன் குலத்துக்கும் இம்மையிற் புகழும், அறமும் மறுமையிற் சுவர்க்கமுமுண்டாதற்பொருட்டு விதித்ததினத்தில் அவளைப் புணர்தியென்று சொல்லும் விதியையும் நீ பார்ப்பாய்), இதையும் விட்டு ஒழி (என்ற விதிபாராய்)—(யாகஞ்செய்து மது,மாமிசங்களை மணந்து பாரென்றும், விதித்ததினத்தில் உன் மனைவியைப் புணர்தியென்றும் விதித்தவேதம் பின்னே உன்னால் யாகத்திற் கொல்லப்பட்ட ஆடானது சுவர்க்கத்தின் கண்ணே இருப்புக்கொம்போடுகூடிச் சினந்து உனது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்து நீ சுவர்க்கத்துக்குப் போகும்போது உன்னை இருப்புக்கொம்பினாற் பாய்ந்து குத்தி, வயிற்றைப்போழ்ந்து துன்பப்படுத்து மாதலால் யாகஞ்செய்வதையும், மனைவி புத்திராதியரிடத்துள்ள ஆசைகள் அநேகவித ஜநநமரண துக்கத்தைக் கொடுப்பதால்) மனைவி புத்திராதியரையும் விட்டொழிவாய் என்று கூறுவதையும் பார்ப்பாய், மநு நயிட்டிக வந்நிக்கு இகழ்ச்சி அற்றதும் பாராய்—(ஆசைகளைவிட்ட) சந்நியாசிக்கும், நயிட்டிகப் பிரமசாரிக்கும் நிந்தையற்றிருப்பதையும் நீ பார்ப்பாய், அதை அறிந்து—அங்ஙனங் கூறிய வேதத்தின் சித்தாந்தத்தையும், (சாதனங்களோடு கூட யக்ஞாதி கர்மங்களைத்துறந்த சந்நியாசியையும், நயிட்டிகப் பிரம சாரியையும் வேதமும், உலகமும் இகழாமற் புகழாநிற்பதையும்) அறிந்து, கன்மங்கள் ஆசைகள் ஒழிந்து—(யக்ஞாதி சகல) கர்மங்களையும், (ஸ்திரீ, புத்திரர், தன முதலியவற்றிலுள்ள) ஆசைகளையும் விட்டு, ஆநந்தம் அடைவாய்—(சிரவணாதிப் பிரயத்தனத்தா லடையாநிற்கும் சமுசய ரகிதமான பிரஹ்மாத்ம வயிக்கிய ஞானத்தால் சகல அநர்த்தத்தினின்று விடுபட்டு) நிரதிசய ஆநந்தமடையக்கடவாய். எ-று.

இல்வாழ்வார் மனைவியோடு கூடுதற்கு விதித்த தினங்களாவன:—மாதர்க்கு இருதுகாலம் வழக்கமாகப் பதினாறுநாட்களாம்; அவற்றுள், மாதவிடாயானது முதல் நான்கு தினம் பெரியோர்களால் நிந்திக்கப்படுகின்றது;

ஆதலால் அந்நான்கு தினமும், ஏகாதசி, திரயோதசிகளும் நீக்கி ஏனைப்பத்து தினத்திற் கூடுவதுமுறைமை. மாதவிடாயான நாடொடங்கி ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினான்கு, பதினாறுந்தினங்களி னிரவிற்சேர்ந்தால் பிள்ளைகளும், ஐந்துமுதல் ஒற்றைப்பட்ட நாட்களிற் சேர்ந்தால் பெண்களும் பிறக்கும்; ஆதலால், புத்திர விருப்புள்ளவன் 'இரட்டைத்தினத்திற் சேர வேண்டியது, எவன் நீக்கவேண்டிய முதல் நான்குதினத்தையும் ஏகாதசி, திரயோதசி, அமாவாசை, பௌர்ணமைகளையும் நீக்கி மற்றைத் தினத்தி னிரவிற் றன் மனைவியோடு சேருகிறானோ அவன் கிரகஸ்தனாக விருப்பினும் பிரமசாரி யென்றே சொல்லப்படுகிறானென்று தர்மசாஸ்திரத்திற் சொல்லியிருப்ப தால் அவையே மனைவியோடு புணர்தற்கு விதித்ததினமாம் என்க. "இதை யும் விட்டொழி" எ-கு, உ-ம், பாகவதம் 4-வது ஸ்கந்தத்தில் பிராச்சீன் பரிகி ஆவிர்த்தானனுக்கு நாரதர் அருளிச்செய்வது,

"அயம கத்தினி லரசநீ படுத்தவம் பறிகள்
செயிர்த கைந்துகண் டையுக வரவுடாத் திருக்கும்
பயில்வி சும்புசெல் காலையில் வெருவரப பாய்ந்து
வயிறு போழும்வல் விருப்பினெண் மருப்பினின் மாதோ.—எ-ம்."

" படுத்திடு மறிகள் வேள்வி புரிந்தவன் பனிவி சும்பி
னடுத்திடுங் கால நோக்கி யழல்விழி யொழுநப் பாய்ந்து
வடித்தகா ரிருப்பிற் செய்த மருப்பினால் வயிறு போழ்ந்த
தெடுத்துநா முரைக்குங் கேட்டி யிறைவவென் றுரைக்க லுற்றான்."
—எ-ம்;

"மகமியற் றுழி மாய்த்தம றியெலாந்
திகழி ருப்பினிற் செய்நம ருப்பினா
னகுபொன் னாட்டக நண்ணுபு ரந்தனை
னகடு கீண்ட வழன்றெதி ருக்கிய"—எ-ம்,

"பண்ணவ னகல வொன்றும் பற்றில னாகி நெருநற்
கண்ணனை யுளத்து நாடிக் கபிலனா திருக்கைசார்ந்து
விண்ணவர் வழுத்தும் வண்ணம் விழைந்தவா பலவு மாற்றி
யண்ணலந் தனிவீட் டின்ப மண்மின னரச ரேறே."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

'கன்மங்க ளாசைகளொழிந் தாநந்த மடைவாய்"எ-கு, உ-ம், பிரமகீதை,

"திரமாம ருத்தத்தி னுண்மைந்த ராலும் தீராத வற்றின்றி யாக த்தினாலே, யுரமான வேதாந்த மாவாக்கி யத்தா லுற்பன்ன மாம்

விச்சை யாநிச்ச யுத்தாற், பரமான வஞ்ஞான வந்தத்திலேயப் படி ஞான வுபதேச மொன்றுளு மேயிப் பராமமு டம்புக்கு ளேயந்த முத்திப் பொருள் கண்டு வீடெய்து வாரிப்பு விக்கே."—

எனவரும். மற்றும் வருவனவற்றுங் காண்க.

பரமாத்வைத ஞானத்தானன்றிக் கர்மத்தால் ஆநந்தமடைபாற் பாற்ற ன்று எனக்கூறினதாம். (76)

(220) [தமப்பிரகாசங்கட்கு அவிரோதங்கூடாதே என வினுதல்.]

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழி கூடும்
பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதானல்
நிலவி லேமறுப் போலவஞ் ஞானமு நிமலஞா னத்தோ டே
குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி.(77)

இ-ள். உலகம் ஆன அஞ்ஞானமும் கருமமும்—பிரபஞ்சரூபமான வஞ்ஞானமும், சற்கருமங்களும், உறவு என்ற வழி கூடும்=(ஒன்றற்கொன்று பாதகமன்று) சாதகமாமென்று (70-வது செய்யுளிற்) கூறிய நெறியொக் கும், பலவும் ஆன அஞ்ஞானமும் ஞானமும்=பலவுந் தானான வஞ்ஞான மும், ஞானமும், பகை என்பது=பாதகமாமென்பது, உளது ஆனல்=உண் மையாயின், நிலவிலே மறுப்போல=சந்திரனிடத்துக் களங்கம்போல, அஞ் ஞானமும்=அஞ்ஞானமானதும், நிமலஞானத்தோடே குலவிநின்று=நிர்மல மாகிய ஞானத்தோகூடப் பொருந்திநின்று, இந்தச் சிருட்டிகள் செய்ய வும் கூடுமோ=இச் சகசிருஷ்டிகளைப் பண்ணவுங்கூடுமோ?, குருமூர்த்தி= குருவே. எ-று.

தமப்பிரகாசங்கள் தம்மின் விரோதிகளாகலின், இரண்டும் கூடி நிற்றல் கூடாதென்பது சீடன் கருத்து. (77)

[அதற்குத்தரங் கூறல்.]

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞானமு மிரண்டாம், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன் றும்வே றில்லைமைந்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் துருவன்று சுழுத்தியிற் கண்டாமே, சொரூப ஞானத்தின் பருமஞ் ஞானத் தைச் சுடும்விருத் தியின்ஞானம் (78)

இ-ள். மைந்தா, சோதி ஞானமும்=பிரகாசமான ஞானமானதும், சொரூப ஞானமும் விருத்தி ஞானமும் என்று இரண்டு ஆம்=சொரூபஞான மெனவும் விருத்தி ஞானமெனவு மிருவகைத்தாம்; [அவைகட்குப் பேத முண்டோவெனின்] சொரூபஞானமே=சொரூபஞானந்தானே, விருத்தி யின் ஞானம் ஆய்த்தோன்றும்=விருத்தி ஞானமாக வுண்டாகும், வேறு இல்லை=(ஆகலின்) பேதமில்லை,. (ஆயினும்) சொரூப ஞானம் அஞ்ஞான

சத்துரு அன்று—(காஷ்டத்திலிருக்குஞ் சாமான்ய வக்கினியானது அந்த காஷ்டத்திற்கெப்படி விரோதியன்றோ அப்படி) சொரூப ஞானமானது அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; (பின்னை யெப்படிப்பட்டதெனின், அதற்குச் சாதகமாம்.) [இதற்கு அநுபவங் கூறுகின்றார்.] சுழுத்தியில் கண்டாயே—சுழுத்தியவத்தையில் (பிரகாச சொரூபமான ஆன்மாவின்கண்ணே அஞ்ஞானம் விளங்கா நிற்பதை நீ) அநுபவித்தறிந்தாயல்லவா, (ஆதலால், சொரூபஞானம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்றாம்.) [அஞ்ஞானத்திற்கு விரோதி மற்றியாதெனில்?] சொரூபஞானத்தின் மருவும் அஞ்ஞானத்தை—சொரூப ஞானத்தின் கண்ணே (அதனைப் பாதகமாகப் பொருந்தாமற் சாதகமாகப்) பொருந்தியுள்ள வஞ்ஞானத்தை, விருத்தியின் ஞானம் சுடும்—(அகம்பிரஹ்மமென்றந்தக்கரணத்தினின்றும் எழாநிற்கும்) விருத்தி ஞானமானது தகிக்கும்; (ஆதலால், விருத்தி ஞானமே அஞ்ஞானத்திற்கு விரோதியென்றறிதி.) எ - று.

சொரூபஞானம் அஞ்ஞான சத்துருவென்றும் பாடமுளது; அது எழுதினவன் எட்டைக்கெடுத்தான் என்னும் வழக்குப்படி எழுதினவனுடைய புத்திதோஷத்தாற் பிறழ்ந்ததேயாம். சாஸ்திர சம்பிரதாயமறியாமல் அதைச் சரியானபாடமாகவொப்பி யவ்வாறே முன் இதற்குரைசெய்தோர் பொருள் கூறியிருப்பது சுருதி, யுத்தி, அநுபவ விருத்தமாம் என்க. (78)

[அஞ்ஞானமானது காரணமான சொரூபஞானத்தினால் நிவிர்த்தியாகாமல் காரியமான விருத்தி ஞானத்தினால் எங்ஙனம் நிவர்த்தியாம் என்று சங்கித்து அதற்குத் திருஷ்டாந்த முகத்தாற் சமாதானங் கூறுகின்றார்.]

திருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாத தற்சொரூப ஞானந் தானே, விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப்படியெனில். வெய்யிலா லுலகெங்கும், பரித்த சூரியன் சூரிய காந்தந்தனிற் பற்றியக்கினியாகி, எரித்தவாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென் றறிவாயே.

இ - ள். திருத்தி மாயையை—திருத்தியைப்போலுஞ் (சங்கோச விகாசங்களையுடைய) அவித்தையை, சுழுத்தியில சுடாத தற்சொரூப ஞானம் தானே—சுழுத்தியின்கண் (விரோதியாய்த்) தகிக்காமல் (அதற்குச் சாதகமாகவேயிருந்த) சொரூபஞானமே, விருத்திஞானம் ஆய்—விருத்தி ஞானரூபமாய், சுட்டது எப்படி எனில்—தகித்ததெவ்வாறென்று நீ சங்கிக்கில், வெய்யிலால்—(தனது) கிரணத்தால், உலகு எங்கும் பரித்த—உலகெங்கணும் (சாதகமாய் நின்று) காத்த, சூரியன்—சூரியனானவன், சூரியகாந்தத்தில்—சூரியகாந்தக் கல்லில், பற்றி அக்கினி ஆகி—பொருந்தி அக்கினிரூபமாய்த்தோன்றி, எரித்த ஆறுபோல்—சுட்ட தன்மைபோல, சமாதியில்—* சமாதியின்கண், விருத்தியால்—விருத்திரூப ஞானத்தால், எரிக்கும்

* சமாதியின்சொரூபம், 198-வது பிரசங்கத்திற் காண்க.

என்று அறிவாய்=(விரோதியாய் நின்று அவ்வஞ்ஞானத்தைச்) சுடுமென்று நீ அறிவாயாக. எ - று.

(221) ஆன்மா பிரகாசரூபமாயிருப்பினும், ஆன்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; அது அஞ்ஞானத்திற்கு விரோதியாகிற் சுழுத்தியில் பிரகாசரூபமான ஆன்மாவின்கண்ணே அஞ்ஞானம் தோன்றவேண்டுவதில்லை. கோரமான நித்திரையினின்றும் விழித்தவனுக்கு நான் சுகமாக வுறங்கினேன், ஒன்று மறியாதிருந்தேன் என்றிவ்வாறான ஞானமுண்டாகின்றதாகலான் இஞ்ஞானத்திற்குச் சுகமும், அஞ்ஞானமும் விஷயமாகின்றன; இவ்விரண்டு ஞானமும் சாக்கிரகாலத்தில் பிரத்தியட்சரூபமல்ல: ஸ்மிருதி ரூபமாம்; அந்த ஸ்மிருதியும், அஞ்ஞாதவஸ்துவின் ஸ்மிருதியல்ல: ஞாதவஸ்துவின் ஸ்மிருதியேயாம்; ஆகலின், சுழுத்தியின்கண்ணே சுகம், அஞ்ஞானங்களின் ஞானமுண்டு; அச்சுழுத்தியின்கண்ணுள்ள ஞானம் அந்தக்கரணத்தினாலும், இந்திரியங்களாலும் உண்டானதன்று. என்னை? சுழுத்தியின்கண்ணே ஆன்மசொரூபஞானமேயன்றி அந்தக்கரணமும், இந்திரியங்களும் இல்லையாகலின், அவைகளாலுண்டானதன்று; [ஞானமெனினும் பிரகாசமெனினும் ஒக்கும்.] இவ்வாற்றால், சுழுத்தியின்கண்ணே ஆன்மா பிரகாசரூபமாகவுளது; அந்தப் பிரகாசரூபமான ஆன்மாவினால் சொரூபசுகமும் அஞ்ஞானமும் விளங்காநின்றன. ஆன்மசொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியாமாயின், ஆண்டஞ்ஞானம் விளங்கவேண்டுவதில்லை; ஆதலால், ஆன்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று: மாறாக அதற்குச் சாதகமாம்; இவ்வபிப்பிராயத்தாலேயே வேதாந்த சாஸ்திரங்களில் சாமான்ய சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; விசேஷ சைதந்நியமே அஞ்ஞானத்திற்கு விரோதியாம் என்ப; வியாபகமான சைதந்நியம் சாமான்ய சைதந்நியம், விருத்தியின்கண்ணுள்ள சைதந்நியம் விசேஷ சைதந்நியமாம்; காஷ்டத்திலிருக்கும் சாமான்ய அக்கினி அந்தகாரத்திற்கு விரோதியாகாமல் மதனத்தினால் அதினின்றும் வெளிப்பட்ட வக்கினி வத்தியைப்பற்றிநின்று அந்தகாரத்தை விரோதிப்பதுபோல வியாபக சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகாமல் வேதாந்தத்தின் விசாரத்தினாலுண்டாகின்ற அந்தக்கரணத்தின் பிரமாகாரவிருத்தியின் கண்ணுள்ள சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகின்றது ஆதலால், கேவலம் சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று.

(222) விருத்தியோடுகூடின சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாம்; அல்லது, சைதந்நியத்தோடுகூடின விருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம். முதற்பட்சத்தில் அஞ்ஞானநாசத்திற்கேது சைதந்நியமாம்; விருத்திசகாயமாம். இரண்டாம்பட்சத்தில் அஞ்ஞானநாசத்திற்கேது விருத்தியாம். சைதந்நியம் சகாயமாம்; இஃதிவ்விசேஷவாதத்தின் றன்மை.

(223) ஆபாசவாதத்தில் சாமான்ய சைதந்நியத்தைப் போல விசேஷ சைதந்நியமும் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; பின்னை விரோதியாவது

வெனின்:—விருத்தியோடுகூடின ஆபாசம் அல்லது, ஆபாசத்தோடுகூடின விருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம்; இங்ஙனம் விசாரசாகராந்தத்தீற் கூறியிருக்கின்றது. பஞ்சதசி முதலிய கிரந்தங்களின் அபிப்பிராயமும் இதுவே; ஆதலால், இவ்வாசிரியரும் "சொரூபஞான மஞ்ஞான சத்துரு வன்று" எ-ம், "விருத்தியின் ஞானஞ்சுடும்" எ-ம், "சமாதியில் விருத்தியா லெரிக்கும்" என்றுங் கூறினர். முன்னிதற்கு உரைசெய்தோர் சுழுத்தியில் சொரூபஞானம் அஞ்ஞானத்தை யெதிரிட்டுக்காண்டலின், விரோதியாமென்று பதவுரை செய்திருக்கின்றனர்; அந்தகாரத்திற்கு விரோதிகளான சூரியன், அல்லது, தீபம் இவை அந்தகாரத்தை எதிரிடுவது எங்கேனும், யாவரேனுங் கண்டதுண்டா? இங்ஙன முரைசெய்தோர், "துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாததற் சொரூபஞா னநதாமே, விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப்படி" என்னும் செய்யுளை உய்த்துணராமற் பொருள்கூறினமையின். அவருரை* ஸ்வகபோல கற்பனையென்றே நிச்சயிக்கப்படுகிறது.()

(224) [ஆநந்தாதி, அஸ்தூலாதி குணங்களால் இலட்சிதமான வகண்டாகாரசப்பிரஹ்மம் நானேன்னும் நிர்க்குண வுபாசனை மானச கர்மமாகலின் அதற்கும், ஞானத்திற்குமுள்ள தாரதம்மிய மறியச் சீடன் வினாதல்.]

அருளு மையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாம்
கரும மல்லவோ விருத்திஞா னமுமந்தக் கரணகா ரியமன்றோ
உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென் றோதினா லாகாதோ
பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்ட பெருமையையுரையீரே.

இ-ள். அருளும் ஐயனே=(அடியேன் சந்தேகநீங்கிக் கிருதார்த்தனாகும்பொருட்டு யான் வினவாநிற்கும் சங்கைகட்கெல்லாந் திருவுளத்தின்கண் முனிவுறுமலுத்தரம்) அருளாநின்ற குருவே, திரிவித கரணத்தால்=(மன வாக்குக் காயமென்னும்) மூவகைக் கரணங்களால், ஆகிய தொழில் எல்லாம்=உளவாகுங் கிரியைகளனைத்தும், கருமம் அல்லவோ, விருத்தி ஞானமும்=(அகம்பிரஹ்மமென்னும்) விருத்திஞானமும், அந்தக்கரண காரியம் அன்றோ=அந்தக்கரணத்தின் (பரிணாமமாகலின், அதன்) காரியமல்லவோ (ஆகலின்), உரியகர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்று=(கர்மங்களுக்குள்ளே, அஞ்ஞானத்தைக் கெடுத்தற்கு) உரிய (அகம்பிரஹ்மமென்னும் அந்தக்கரணவிருத்தி ரூபமான மானச) கர்மமானது அஞ்ஞானத்தைப் போக்குமென்று, ஓதினால் ஆகாதோ?=சொன்னால் (அது சாஸ்திரத்திற்கும் பெரியோர்க்குஞ் சம்மதம்) ஆகாதோ?, பெரிய ஞானம் என்று=மஹத்தான ஞானமாமென்று, அதற்கு ஒரு பெயர் இட்ட=அதற்கொருநாமந் தரித்த, பெருமையை உரையீர்=மகிமையை யருள்வீராக., எ-று. (80)

* ஸ்வகபோல கற்பனை-என்பது, பிரமாணமில்லாமலும், தம்மனத்தின்கண்ணேயில்லாமலுங் கூறுவது.

[உத்தரங்கூறல்.]

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கினுமைந்தா
ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே
கருத்த னாகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளவைபோல
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வஸ்துதந் திரமாமே. (81)

இ-ள். மைந்தா, விருத்தி ஞானம்=(நான் பிரஹ்மமாகின்றேனென்னும்), விருத்தி ஞானமானது, அந்தக்கரணத்து விருத்தி ஆகிலும்=அந்தக்கரணத்தினுடைய பரிணாமமாயினும், ஒருத்தி மக்களே=ஒரு மாதாவின் புத்திரரே, தங்களில் பகைக்கின்றது=தம்முள் விரோதித்திருக்கின்றதை, உலகு எங்கும் கண்டோம்=உலகிலெவ்விடத்தும் கண்டிருக்கின்றோம், கருமங்கள்=கருமங்களானவை, கருத்தன் ஆகிய புருட தந்திரங்கள் ஆம்=கர்த்தாவாகிய புருஷனுடைய அதீனங்களாம், வருத்த ஞானமோ=விசாரப்பிரயத்தனத்தா லுளதாகா நிற்கும் விவேகஞானமோ, அவைபோல=அக்கருமங்கள்போல, புருடதந்திரம் அன்று=புருஷனுடைய அதீனமன்று, வஸ்து தந்திரம் ஆம்=வஸ்துவினதீனமாம். எ-று.

"அந்தக்கரணத்தொடு" என்பதில், ஒடு இசைநிறை யிடைச்சொல்.

ஓர் மாதாவின் புத்திரரில் ஒருவன் வித்துவானும், ஒருவன் மூடனும், ஒருவன் சிஷ்டனும், மற்றொருவன் துஷ்டனும், உலகில் மாறுபட்டுக் காணப்படுவதுபோல மானசக் கிரியாரூபமான நிர்க்குண வுபாசனையும், விவேகஞானமும் ஓரந்தக்கரணத்தின் காரியமே யாயினும், உபாசனை புருஷதந்திரமாதலானும், ஞானம் வஸ்துதந்திரமாதலானும் அவை தம்முட் பேதமாமென்பது கருத்து. (81)

[மானசக் கிரியா ரூபமான நிர்க்குண வுபாசனை கர்த்ரு தந்திரமென்றும், ஞானம் வஸ்து தந்திரமென்றும் முற்கூறியதற்கு யுத்திகூறி உபாசனை அவாஸ்தவமாதலானும், ஞானம் வாஸ்தவமாதலானும் அவை பேதமாமெனக் கூறுகின்றது.]

வகுத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றொன்றாக் கவுங்கூடும், மிகுத்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞான மும்வேறே, செகத்தி லொன்றையொன் றாவிவன் பாவிக்குந் தியானங் கற்பிதயோகம், முகத்த மாங்கண்ட ஞானமே வாஸ்தவ மோகமாய் மயங்காதே. (82)

இ-ள். வகுத்த கர்மங்கள்=(சாஸ்திரங்களில்) விதித்த மானசக்கிரியாரூபமான வுபாசனைகள் செய்யவும்=(புருஷனுக்கிச்சையுண்டாகில் விதித்தபடி) செய்யவும், தவிரவும்=(இச்சை யில்லையாகில்) செய்யாமல் விடவும், மற்று ஒன்று ஆக்கவும்=(வேறொரு பிரகாரமாகச் செய்ய இச்சையுண்டாமாகில் அப்படியே) வேறொரு பிரகாரமாய்ச் செய்யவும், கூடும்=இயலும்,

மிகுத்த ஞானம் அப்படி அன்று=மேலான ஞானமானது (தியானம் போல விதி, புருஷனுடைய இச்சை, விசுவாசம், ஹடம் இவைகளின் அதீனமாயில்லாமல் பிரமாண, பிரமேயங்களின் அதீனமாயிருத்தலின்) செய்யவும், தவிரவும், மற்றொன்றாக்கவுங் கூடாது, (ஆகலின்), தியானமும் விவேகஞானமும் வேறே=மானசக்கிரியா ரூபமான தியானமும், விசார ஜன்னியமான விவேக ஞானமும், (அந்தக்கரண காரியங்களேயாயினும்) வேறுதான், செகத்தில்=உலகின்கண், ஒன்றை ஒன்றா இவன் பாவிக்கும் தியானம்=ஒன்றை வேறொன்றாக இவன் தியானிக்குந் தியானமானது, கற்பித யோகம்=கற்பிதத்தியானமாம், முகத்தமாக்கண்ட ஞானமே வாஸ்தவம்=பிரத்தியட்சமாகக் கண்ட ஞானமே வாஸ்தவமாம், மோகம் ஆய் மயங்காதே=இவற்றிலறியாமை யுடையனாய்க் கலங்காதொழிதி. எ-று.

"ஒன்றையொன் றிவன் பாவிக்குந் தியானங் கற்பிதம்" என்று இவ்வாசிரியர் கூறியதுபோலவே வாசிட்டத்திலும்,

"ஒன்றாற வொன் றைக்கருத வொன்றா வெளிப் படுங்குருவினுபதேசத்தால்"—

என்று கூறியிருப்பது காண்க. (82)

["தியானங் கற்பிதம், ஞானம் வாஸ்தவம்" என்பதற்குக் காரணங்கூறிச் சங்கையி னுத்தரத்தை முடிக்கின்றார்.]

கண்ட றிந்தது ஞானங்கேட் டதுதனைக் கருதுபா வனையோகம்
கண்ட பேர்சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே
கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய் கறவியஞ் ஞானத்
கண்ட அக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே. [தைக்

இ-ள். கண்டு அறிந்தது ஞானம்=ஒன்றை யநுபவித் தறியாநிற்பது ஞானத்தின் (உருவம்), கேட்டது தனைக் கருது பாவனை யோகம்=கேட்ட வஸ்துவை (க் கேட்டவண்ணம்) பாவியாநிற்கும் மானச கர்மமாகிய பாவனை தியானத்தின் (உருவம்), கண்டபேர் சொலக்கேட்டது மறந்துபோம்=அநுபவித்த பெரியோருபதேசிக்கக் கேட்டுத் தியானிப்பது மறந்துவிடும், கண்டது மறவாது=கண்டனுபவித்தது மறவாதிருக்கும், (ஆகலின்,) கண்ட வஸ்து மெய்=அநுபவித்த வஸ்து மெய்யாம், தியான வஸ்துக்கள் பொய்=தியானியாநிற்கும் வஸ்துக்கள் பொய்யாம், கறுவி அஞ்ஞானத்தை=கோபித்து அவித்தையை, கண்ட அக்கணம்=தோன்றின அந்தட்சணமே, கொல்வது ஞானமே=நாசமாக்குவது விருத்திஞானமே, கருமம் அன்று அறிவாய்=கருமமல்ல (என) நீ அறிவாயாக. எ-று.

மூர்த்தித்தியானம்போலத்தியானமாத்திரத்தால் நாம் பிரம்மமென்னு நிச்சயமானது தியானம் விடில் இல்லாமற்போவதால், "தியான வஸ்துக்கள் பொய்" எ-ம், பிராமணனுக்கு நான் பிராமணனென்பது மறந்தும் போகா

ததுபோல ஆரூட ஞானிக்கு மறந்திருந்தாலும் பிரஹ்மத்துவஞ் சுபாவசித்தமா யிருத்தலால் "கண்டது மறவாது" என்றுங் கூறினர்.

(225) மூன்று செய்யுளின் திரண்டபொருள்:—ஞானமோ பிரமாண, பிரமேயங்களினதீனமாம்: விதி, புருஷனுடைய இச்சை இவைகளினதீனமல்ல. தியானம் விதி, புருஷனுடைய இச்சை, விசுவாசம், அப்படியே ஹடம் இவைகளினதீனமாம். பிரத்தியட்ச ஞானத்தில் பிரமாணம் நேத்திரம்: பிரமேயம் கடாதிகள்; அங்கே நேத்திரத்திற்கும், கடத்திற்குஞ் சம்பந்தமாமேல் புருஷனுடைய இச்சை யின்றியும் கடஞானம் பிரத்தியட்சமாகின்றது. ஆவணிமாசத்தின் சதுர்த்தி தினம் சந்திரதரிசனம் நிஷேதிக்கப் பட்டிருக்கின்றது: விதியில்லை. புருஷனுக்கும் இன்றைக்குச் சந்திரதரிசனங் கூடாதென்னும் நிச்சயமிருக்கின்றது; இப்படியிருந்தும், ஏதேனு மொருவிதத்தினால் நேத்திரமான பிரமாணத்திற்குப் பிரமேயமான சந்திரனோடு சம்பந்தமுண்டாகிவிடில் சந்திரஞானம் அவசியம் பிரத்தியட்சமாகின்றது. ஆதலால், ஞானம் பிரமாண பிரமேயங்களின் அதீனமே யல்லாமல் விதி இச்சைகளினதீனமல்ல. ஒருவன் சாலிக்கிராமம் விஷ்ணுவினுருவமென்று தியானஞ்செய்யில், அவனுக்கு உத்தமமான பல மடையப்படும்; அத்தியானத்திலே சாஸ்திரப் பிரமாணத்தால் விஷ்ணு ரூபம் சதுர்ப்புஜ மூர்த்தியாக சங்கு, சக்கிர, கதை, பத்மம், இலக்குமி இவைகளோடு கூட அறியப்படுகின்றது: நேத்திரப் பிரமாணத்தால் சிலையாக அறியப்படுகின்றது; அப்படி யறியப்படினும் விதி, விசுவாசம், இச்சை இவைகளால் சாலிக்கிராமம் விஷ்ணுவென்று தியானம் பண்ணப்படுகிறது; அத்தியானம் நாநாவிதமாம். ஓரிடத்து ஒன்றை யொன்றாகத் தியானிக்கப்படும்; அது முன் சொன்ன சாலிக்கிராமத்தை விஷ்ணு ரூபமாகத் தியானிக்கப்படுவதாம்; இதனைப் பிரதீகத் தியானமென்பர். வேறே வைகுண்டலோக வாசியாகிய விஷ்ணுவை சங்கு சக்கிராதிகளோடுகூடின சதுர்ப்புஜ மூர்த்தியாகத் தியானிக்குந் தியானம் ஒன்றை யொன்றாகத் தியானிக்குந் தியானமல்ல: தியேயாநுசாரத் தியானமாம். எனவே? வைகுண்ட வாசியாகிய விஷ்ணுவின் சொரூபம் பிரத்தியட்சமாகவோ இல்லை, கேவலம் சாஸ்திரத்தாலறியப்படுகிறது; சாஸ்திரங்கள் சங்கு, சக்கிராதி சகிதமாகவே விஷ்ணுவின் சொரூபங் கூறுகின்றனவாகலின், * தியேய சொரூபத்தி னநுசாரமாகவே அத்தியான முண்டாகின்றதெனக.

விதி, விசுவாசம், இச்சை இவைகளின்றித் தியானமுண்டாகாது; இவற்றுள், விதியாவது இவ்வாறு தியானஞ் செய்வாயாக வென்னும் புருஷனது பிரேரகவசனமாம்; அவ்வசனத்திலுள்ள சிரத்தையை விசுவாசமென்பர். அந்தக்கரணத்தினுடைய காமரூபமான பிரீஜாகுணவிருத்தி இச்சையாம்; இம்மூன்றும், தியானத்திற்கேதுவே யல்லாமல் ஞானத்திற்கேதுவல்ல: இன்னும், தியானம் அடத்தினாலு முளதாம்: ஞானத்தில் அடத்தினபேட்சையி

---

* தியேயம் = தியானிக்கப்படுவது.

ல்லை. என்னை? நிரந்தரம் தியேயாகாரமான சித்தவிருத்தியைத் தியானமென்பர்; அதகே விருத்தியில் விட்சேப முண்டாகுமாயின், அடத்தினல் விருத்தியின் ஸ்திதி செய்யவேண்டும். ஞானரூபமான அந்தக்கரண விருத்தியினல் தற்காலம் ஆவரணம் பங்கமாயிடில், விருத்தியின் ஸ்திதிக்கு உபயோகமில்லை; ஆகலின்,அடத்தினபேட்சையில்லை. வைகுண்ட வாசியான சதுர்ப்புஜமுடைய விஷ்ணுவின் தியானம்போல நான் பிரஹ்மமாகிறேனென்னுந் தியானமும் தியேயாநுசாரமாம்; ஆகலின், இது பிரதீகத்தியானமல்ல: அகங்கிரகத்தியானமாம். தியேய சொரூபத்தைத் தன்னோடபேதமாகச் சிந்திப்பதை அகங்கிரகத் தியானமென்பர். யாவனொருவனுக்கு அபரோட்ச ஞானமுண்டாகவில்லையோ! அவன் வேதத்தின் ஆக்ஞாரூபமான விதியில் விசுவாசஞ்செய்து அடத்தினல் நிரந்தரம் நான் பிரஹ்மமாகின்றேனென்னும் விருத்தியின் ஸ்திதிரூபமான அகங்கிரகத்தியானஞ் செய்யவேண்டுவது; அங்ஙனஞ் செய்யில் அவனுக்கு ஞானமுண்டாகி மோட்சமுளதாம். "ஒன்றையொன்று விவன்பாவிக்கும்" எ-து, சாலிக்கிராமத்தில் விஷ்ணுத்தியானம் போலப் பிரதீகமல்ல: வைகுண்ட வாசியாகிய விஷ்ணுத்தியானம் போலத் தியேயாநுசாரமாம்; ஆயினும், அபரோட்சமாகுமளவும் மனோமயமாக விருத்தலின் அங்ஙனங்கூறினர்; இவ்வாறு மானசக் கிரியாரூபமான தியானத்திற்கும், ஞானத்திற்கும் தாரதம்மிய மிருத்தலின், இவ்விரண்டும் ஒன்றல்ல. விரோதி யல்லாமையின்,கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்கமாட்டாது; விரோதியாகலின், ஞானமே அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்பது. (83)

(226) [பொய்யான மருத்தலசலம் தாகசாந்தி பண்ணிற்றென்பது ஓரிடத்துங் காணப்படாமையின், பொய்யான தியானம் மெய்யான மோட்சத்தை எங்ஙனந் தரற்பாலதா மென்று சங்கித்துச் சமாதானங் கூறுகின்றார்,]

சருவ முத்தியைத் தருகின்ற தியானமுஞ் சத்திய மன்றென்றால், சருவ முத்தியுஞ் சத்திய மன்றென்று சங்கியாதே நீகேள், உருவங் கேட்டவன் றியானிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ் தவமன்றே, உருவ மாகுமப் பொழுதுகண் ணுற்கண்ட வுருவம்வாஸ் தவமாமே. (84)

இ-ள். சருவ முத்தியைத் தருகின்ற தியானமும்=சர்வ (அனர்த்தத்தின் றெம்சரூபமான) பிரஹ்மா * வஸ்தாரூபத்தைத் தாராநின்ற (நிர்க்குணப் பிரஹ்மத) தியானமும், சத்தியம் அன்று என்றால்=சத்திய மல்லவென்று கூறிடின், சருவமுத்தியும்=சர்வ (அனர்த்தத்தின் றெம்சரூபமான) பிரஹ்மாவஸ்தாரூபமும், சத்தியம் அன்று என்று=அசத்தியமாமென்று, நீ சங்கியாதே=சங்கைசெய்யாதே, கேள்=(அதற்குச் சமாதானங் கூறுதும்) கேட்பாய், உருவம் கேட்டவன்=சங்கு சக்கிராதி சின்னங்களை யுடைய

* அவஸ்தாநம்=சொரூபநிலை பெறல்.

விஷ்ணுவாதி உருவங்களை (ச் சாஸ்திரங்களாலும், பெரியோர்களாலும்) கேள்வியுற்றவன், தியானிக்கும் பொழுதில்=தியானிக்குங் காலையில், அவ்வுருவம் வாஸ்தவம் அன்று=அவ்வுருவம் (பாவனாமயமாகலின்,) சத்தியமல்ல, உருவம் ஆகும் அப்பொழுது=(அப்பாவனையானது திடமாய்) அம் மூர்த்தி தானாகும்போது, கண்ணால் கண்ட உருவம்=நேத்திரப் பிரமாணத்தினாற் காணுகின்ற அவ்வுருவமானது, வாஸ்தவம் ஆம்=சத்தியமாம்; (அதுபோலப் பிரஹ்மத்தைச் சாஸ்திரங்களும், பெரியோர்களு முபதேசிக்கக் கேட்டவன் தியானிக்கும்போது பாவனை மாத்திரத்திற் பிரஹ்மமாயிருத்தலின், அப்பாவனாரூபப் பிரஹ்மம் சத்தியமல்ல: தியான பரிபாக வசத்தா லடையாநின்ற பிரஹ்மாவஸ்தாசுரூபம் சத்தியமாம்.) எ - று.

தாஷ்டாந்தம் எஞ்சிநின்றதால் வருவித்தாம். சர்ப்பத்தின் றெரும்சுரூபம் எப்படி ரச்சுரூபமோ! அப்படிச் சர்வ வனர்த்தத்தின் றெரும்சுரூபம் பிரஹ்மமாவதால், "சர்வமுத்தி" என்றார். சர்வ வனர்த்தத்தின் அபாவரூபம் பிரஹ்ம மென்பதை முதற்படலத்தில், 56-ம் செய்யுளின் விசேஷ வுரையிற் காட்டினும்.

"உருவ மாகுமப் பொழுதுகண் ணாற்கண்ட வுருவம் வாஸ்தவமாம்"

எ - கு, உ - ம், வாசிட்டம்,

"பிரம ணுமேசிருட்டியெலாம் பிறப்ப தெம்பா லென்றுள்ளே
திரம தான மனத்தாலே சிந்தித் துடலிற் சிந்தையற
மரம தென்ன விருத்தலுமே வருநாட் பலபோய் மனோபாவ
முரம தாகி யயனுரொருப னுலக முளதான."— (84)

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

[பொய்யாகிய தியானத்திற்கு மெய்யாகிய மோட்சத்தைத் தரும்படி யான திடத்துவமெப்படிக் கூடுமென் றுசங்கித்து அதற்குத் திருஷ்டாந்த முகத்தாற் சமாதானங் கூறுகின்றார்.]

சடம தாகிய தியானம் மெய் யாகிய சர்வமுத் தியைநல்கும்
திடம தானதெப் படியெனி லவரவர் தியானமே பிறப்பாகும்
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களா குவர்மைந்தா
தொடர்ப வங்கெட ரொரூபமே தியானிக்கிற் சொரூபமா குவர்
[மெய்மை. (85)

இ - ள் சடமது ஆகிய தியானம்=பொய்யாகிய நிர்க்குணத் தியானமானது, மெய் ஆகிய, சர்வ முத்தியை நல்கும்=சர்வ அனர்த்தத்தின் றெரும் சுரூபமான பிரஹ்மத்தினவஸ்திதியைத் தரும், திடமது ஆனது=திடத்தையுடைத்தாயிருப்பது, எப்படி எனில்=எங்ஙனமென் றுசங்கிக்கில், அவர் அவர் தியானமே பிறப்பு ஆகும்=(மரணகாலத்திலுண்டாகின்ற) அவரவர் பாவனையி னநுசாரமாகவே (அவரவர்க்கு) ஜன்மமாமென்று சொல்லப்படும், (ஆகலின்,) மைந்தா, உடலம் ஆசையால் தியானிக்கில்=சகுணப் பிரஹ்மப்

பிராப்தியின் இச்சையோடு கூடி (ச் சகுணப் பிரஹ்மங்களை) த் தியானிக்கில், தியானித்த உடல்கள் ஆகுவர்=தியானித்த சகுணப் பிரஹ்மங்களாகுவர்; தொடர்பவம் கெட=அநாதிகாலந் தொடுத்து வந்த ஜன்மமானது (மீண்டுண்டாகாமல்) நாசமாகும்படி, சொரூபமே தியானிக்கில்=(நிர்க்குணப் பிரஹ்மப் பிராப்திக் கிச்சையோடுகூடி) நிர்குணப் பிரஹ்மசொரூபத்தையே தியானிக்கில், சொரூபம் ஆகுவர்=அந்நிர்க்குணப் பிரஹ்ம சொரூபமே யாகுவர், மெய்யே=இஃதுண்மையே, எ-று.

தியானமேற் பிறப்பாகும் என்றும் பாடமுளது. இது சுருதி ஸ்மிருதிகளின் சித்தாந்தமா மென்பார், "மெய்யே" என்றார்.

"அவரவா தியானமே பிறப்பாகும்" எ-கு, உ-ம், பகவற்கீதை,

"இந்த வுடலம் விடும்பொழுது யாவ னியாதொன் றினைநினைந்தா, னந்த வவனே யந்தப்பா வனையா லதனை யடையுமா, லென்றனியல்பே யெப்பொழுது மிதயத் திடைகொண் டென்பாலாஞ், சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி லதனை லெனையே சேருதியால்."—
எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (85)

(227) [நிர்க்குணப் பிரஹ்மத் தியானத்தினாலேயே பிரஹ்மப் பிராப்தியான மோட்சமுண்டாமாயின் விசாரமும், விசாரஜந்யஞானமும் எற்றிற்கு வேண்டற் பாலவாமென் றாசங்கித்து அதற்குச் சமாதானங் கூறுகின்றார்.]

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமா குவரென்றால்
நரசரீரமாங் குரவனே விசாரமென் ஞானமே னென்றுதே
பரம பாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சம்
திரவி சாரமா ஞானமா முத்தியாந் திண்மையீ தறிவாயே. (86)

இ-ள். பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும்=(விசாரத்திற் சமர்த்தர்களாய் நிர்க்குணப்) பிரஹ்ம ரூபத்தையே தியானித்தவர்களும், பிரமம் ஆகுவர் என்றால்=(தியானத்தின் பரிபாகவசத்தால் நிர்க்குணப்) பிரஹ்மரூபமாவரென்று கூறப்படுமாயின், நர சரீரம் ஆம் குரவனே=(அருளே திரண்டு) மாநுட வடிமாக வெழுந்தருளிய குருவே, விசாரம் என்=(ஞானஜநகமான) விசாரமெற்றிற்கு, ஞானம் என்=(நிரந்தர விசாரப் பிரயத்தனத்தால் ஜநியாநிற்கும்) ஞானமெற்றிற்கு, என்றுதே=என்று சங்கியாதே, பரம பாவனை=பிரஹ்மத் தியானமானது, பரோட்சம் ஆம்=(முன்னே தியானிக்கும்போது) பரோட்ச புத்தியாம், பின்பு=(அத்தியானம் பரிபாகமான) பின்னர், அந்தப் பரோட்சமே=அப்பரோட்ச புத்தியே, அபரோட்சம்=(உபாசனையின் சாமர்த்தியத்தால்) அபரோட்ச புத்தியாம், திர விசாரம் ஆம்=(இவ்வபரோட்ச புத்தியே) திரமான விசாரமுமாம், ஞானம்

ஆம்=(மூலாவித்தையை நிவிர்த்திக்கத் தக்கதான) ஞானமுமாம், முத்தி ஆம்=மோட்சமுமாம், ஈது தீர்வை அறிவாய்=இது (சுருதி, ஸ்மிருதிகளின்) சித்தாந்தமாமென் றறிவாயாக. எ - று.

மானசக் கிரியா ரூபமான நிர்க்குண வுபாசனைக்கு முத்தியின் சாதனத் தன்மை கூறிடின், விருத்தமாமே யென்னுஞ் சங்கைக்கு அவிமுக்தமென்னுஞ் சகுணப் பிரஹ்மத்தி னுபாசனையால் தாரகப் பிரஹ்மமாகிய சகுணப் பிரஹ்மத்தின் புத்தி யுண்டாவதுபோல நிர்க்குணப் பிரஹ்ம வுபாசனையின் சாமர்த்தியத்தால் மூலாவித்தையை நிவிர்த்திக்கவல்ல புத்தி யுண்டாவதால் விரோதமாகாதென்று பஞ்சதசியில் தியானதீபத்தில் வித்தியாரண்ணிய சுவாமிகள் அருளிச்செய்திருப்பதுபோல இவ்வாசிரியருங் கூறினரென் றறிக.

நிர்க்குணவுபாசனையின் முடிவில் விசாரமும், ஞானமுமுளவாகலின், முத்திக்கு அவை இன்றியமையாதன வென்பது கருத்து. (86)

(228) [தத்துவஞானத்தாற் காரியத்தோடுகூட அவித்தை நிவிர்த்தியாயினும் தத்துவஞான நிவிர்த்திக்கு வேறே காரணங் காணப்படாமையின், அகண்டாநுபூதி எங்ஙனங்கூடுமென் றட்சேபித்து அது நிவிர்த்தியாதந் தன்மையைத் திருஷ்டாந்த முகமாகக் கூறுகின்றார்.]

வீட்டாம்பரி பூரண சொரூபத்தில் விருத்திஞா னமுங்கூடிச்
சேட மாகிற லகண்டமா மநுபவ சித்தியெப் படியென்றால்
சாடி நீர்மண்ணைப் பிரிக்குந்தேற் றம்பொடி தானுமண் ணொடுமாயும்
ஊடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுந்தானே. ()

இ - ள். வீடது ஆம் பரிபூரண சொரூபத்தில்=முத்தி ரூபமான பரிபூரணப் பிரஹ்ம சொரூபத்தில், விருத்தி ஞானமும் கூடிச் சேடம் ஆகினல்=(காரியத்தோடுகூட அஞ்ஞானத்தை நிவிர்த்தித்த) அந்தக் கரணத்தின் விருத்தி ரூபமான தத்துவஞானமுங் கூடிச் சேஷமாயிருந்தால், அகண்டம் ஆம் அநுபவ சித்தி=* அகண்டமாகிய வநுபவ சித்தி, எப்படி என்றால்=எங்ஙனமாமென் றட்சேபிக்கின், சாடி நீர் மண்ணைப் பிரித்த=குடசலத்திலுள்ள சேற்றை வேறுபடுத்திய, தேற்றம் பொடி தானும் மண்ணொடு மாயும்=கதக ரேணுவும் அச்சேற்றோடுகூட எப்படிக் கெடுமோ அப்படி, ஞானமும் ஊடி அறிவிலாமையைக் கெடுத்து=தத்துவஞானமும் பகைத்து அஞ்ஞானத்தை நாசஞ்செய்து, ஒக்கவே தானே கெடும்=(அவ்வஞ்ஞானத்தோடு) கூடவே தானே நாசமாகும். எ - று.

"தானே" எ - து, தத்துவஞான நிவிர்த்திக்குக் கதகரேணுவுக்குப் போல சாதனாந்தரத்தி னபேட்சை யின்றென்பதை விளக்குகின்றது.

---

* அகண்டம்=பேதரகிதம்.

மஹாவாக்கிய விசாரத்தால் ஜநியாநிற்கும் அந்தக்கரணத்தின் பிரஹ்மாரூபமாகிய விருத்திஞானம் காரியத்தோடுகூட அஞ்ஞானத்தை நிவர்த்தித்துத்தானும் நசித்துப்போய் அகண்டைகரசப் பிரஹ்மமாத்திரம் சேஷித்திருத்தலால், அகண்டாநுபவசித்தி நிர்விவாதமாய்க் கூடுமென்பது கருத்து.(87)

(229) [இவ்வநுபவஞ் சீவன்முத்தரிடத் தெவ்வாறிருக்குமென் றட்சேபித்து அஃதவர்பாலுள்ள தன்மையை யுணர்த்துகின்றார்.]

இந்த நிச்சய முத்தரு ளநுபவ மிருப்பதெப் படியென்றால்
சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர்
பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொலி னகையாவர்
அந்தரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ.

இ-ள். இந்த நிச்சய அநுபவம்=இந் நிச்சய ரூபமான வகண்டாநுபவமானது, முத்தர் உள்=சீவன் முத்தரிடத்தே, இருப்பது=இருக்கின்றது, எப்படி என்றால்=எவ்வாறென்று நீ வினவிடில், சிந்தை அற்ற=சிந்தாரூபமான துன்பமற்ற, பூமண்டல இராசனும்=சக்கிரவர்த்தி ராசாவும், சிசுவும்போல்=(அதி) பாலனும்போல, சுகம் ஆவர்=பரமாநந்த சொரூபமாகவே யிருப்பர், பந்த முத்திகள் மறந்துபோம்=பந்தமுத்தி (ரூபமான பாவனா விகற்பங்) களொழிந்துபோம், உண்டு என்று=(பந்தமுத்திகள்) உளவாமென்று, பலர் சொலில்=பல (மதஸ்த) ர் கூறிடில், நகையாவர்=(இஃதென்னை! நம்பிராந்தியென்று) நகையாநிற்பர், [இதற்குவமை கூறுகின்றார்.] ஓர் கொசுகு=(அற்பமான) ஓர் மசகமானது, அந்தரத்தை உண்டு உமிழ்ந்தது=(சர்வத்திர பரிபூரணமான) ஆகாசத்தை (யான்காண) உண்டுகக்கிற்று, எனும் அவர்களை=என்று கூறுமப்பிராந்தர்களை, நகையாரோ=யாவர் நகையார்; (அதுபோல) எ-று.

சர்வ போகங்களாலுந் திருப்தனான சார்வபூமனானவன் மநுஷ்யாநந்தத்தி னவதியை யடைந்து வேண்டற்பாலனவான விஷயங்களின்மையின் இராகாதி ரகிதனாய், ஆநந்த மூர்த்தியா யிருப்பதுபோலும், அதிபாலன் ஸ்தனபானஞ்செய்து மிருதுவான சையையிற்கிடந்து சிரித்துக்கொண்டு யானென தென்பன முதலிய ஞானமின்மையின், இராகாதி ரகிதனாய்ச் சுகமூர்த்தியாகவே யிருப்பதுபோலும், பிரத்தியகபின்ன பிரஹ்ம சாட்சாத்கார முடையோரும், கிருதகிருத்திய ரூபமான வித்தியாநந்தத்தின் பரம *காஷ்டையான சீவன்முத்தித் தன்மையை யடைந்து பரமாநந்த சொரூபராகவே யிருப்பரென்பார், "சிந்தையற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற்சுகமாவர்" எ-ம், நித்தியமுத்த ஆன்மசொரூபந் தாமான சீவன்முத்தர் அந்தக்கரணத்தில் முன் பெத்தராயிருந்து பின் முத்தரானோ மென்னும் விகற்பம் மறந்துமெழாமையின், "பந்த முத்திகண் மறந்துபோம்" எ-ம், பதிகரிருவர் ஓரிடத்துப் படுத்து ஒருவன் நித்திரைசெய்ய மற்றொருவன் விழித்திருந்

* காஷ்டை=அவதி.

தாணுக: நித்திரை செய்யாநிற்கும் ஒருவன் கள்ளர்கள் வந்து தன்னை வாய் திறக்க வொட்டாமலடித்து வுபத்திரவஞ் செய்து கைகால்களைக் கட்டிவிட்டுத் தன்னிடத்துள்ள நிதியைக் கவர்ந்துகொண்டு போவதாக அந்நித்திரா மோகத்தினாற் கண்டு அந்நித்திரையிற்றானே கட்டினை யவிழ்த்துவிட வல்லோர் ஈண்டிலரோவென்று வெளிக்குக் கேட்பக் கூப்பிட்டலறும்போது விழித்திருக்கு மற்றொருவன் ஈதென்ன! பிராந்தியென்று சிரிப்பதுபோலப்பரமார்த்த திருஷ்டியிலில்லாத பந்தமுத்திகளை உண்டென்று பலமதஸ்தர்கள் வியவகரிக்கில் அவர்களுடைய பிராந்தியின் மகிமையை நாடிச் சிரித்தலின், "உண்டென்று பலர்சொலி னகையாவர்" என்றுங் கூறினர். "அந்தாம்" எ-து, திக்கு, கால, தேசாதிகளால் அபரிச்சின்னமான சொரூபத்திற்கும், "கோசுரு" எ-து, மண்ணின்கட் கடசத்தி ஏகதேசம்போல அச்சொரூபத்தின்கண் ஏகதேசமாயுள்ள துச்சரூபமான மாயைக்கும் உபமானம். "பலர்"என்றதால், மதஸ்தர் என்றும். மநுஷியாநந்தத்தி னவதியை யடைந்துள்ள இராசாவைப்போலவென்பது பாமர திருஷ்டியைப்பற்றிய உபமானமாம்: தத்துவ திருஷ்டியாலோவெனின்.—சீவன் முத்தருடைய ஆநந்தத்திற்கு அஃதுபமானமல்ல. "வாக்கானது யாதொன்றின்கட் செல்லாதுமீளுமோ" என்பது முதலிய சுருதிகளால் இரணிய கற்பாநந்தாந்தந்திவலேயாம், பிரஹ்மாநந்தமளவிறந்த மஹார்ணவமாம் எனப் பிரதிபாதிக்கப்படுதலின் என்று பெரியவாசிட்டத்தில் வியாக்கியானஞ் செய்திருக்கிறது; இவ்வாறே, "பின வாநந்தங்க ளுரையாம் பிராய வெள்ளக் கடல்பிரமாநந்தம்" என்று இப்படலத்தின் 131 - வது செய்யுளிற் கூறியிருப்பதுங் காணக.

சர்வவனர்த்தங்களும், அவைகட்கு மூலமான சகல விகற்பங்களுமொழிந்து பரிபூரண பரமாநந்த பரம சீதளமான பிரஹ்மமாத்திரமாய் நிற்பதே அகண்டாநுபவமாமென்பது கருத்து.

"சிந்தைந் யற்றபூ மண்டல விராசனும்போல்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

" அன்னான் சமமா மழிவில்லா வான்மா வாய்நின் றின்பமுறு
மென்னா கினுமொன் றுடுப்பவனா யென்னா கினுமொன் றுண்பவனா
யுன்னா தெங்கா கினுமொருபா லுறங்கு வோனா யாங்கவனே
பொன்னார் பூமி முழுதாளும் பூபாலனைப்போற் பொலிவுறுமால்."—

என வரும். மற்றும் வருவன வற்றூற்காண்க. (88)

(230) [சீடனுக்கு இவ்வகண்டாநுபூதி சித்திந்தற்குச் சகத்தில் அநாதாபுத்தியுண்டாக வேண்டுமாதலின், அதற்கு வாசிட்டத்திற் கூறியுள்ள பாலகாக்யாயிகைபோல ஓராக்யாயிகை இங்கே கூறுகின்றார்.]

மலடி மைந்தனுந் தானுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலைபேசிக்

கலக மாய்முயற் கொம்பினாற் குத்தியே களைத்திரு வருமாண்டார்
அலகை யாயினா ரெனும்விவ காரத்தை யறிந்தவன் மயங்கானே. (89)

இ - ள். மலடி மைந்தனும்=மலடி ஈன்ற மகனும், தாணுவில் புருடனும்=கட்டையிற்றோன்றிய புருஷனும், வான்மலர் முடிசூடி=ஆகாய (த்திலுண்டாகிய) புஷ்பங்களை முடியில் (அலங்காரமாகச்)சூடிக்கொண்டு, இலகு கந்தர்ப்ப நகரிலே=விளங்குகின்ற * கந்தர்வ நகரத்திலே, சுத்திகை இரசதம் விலை பேசி=இப்பி வெள்ளியை விலைகூறி, கலகம் ஆய் முயல் கொம்பினால் குத்தி=(அதனாற்) கலகம் விளைந்து சசவிஷாணத்தினால் ஒருவரை யொருவர் குத்தி, களைத்து இருவரும் மாண்டார் அலகை ஆயினார்=களை (மேலிட்டு மூர்ச்சி) த்து (வீழ்ந்து) இருவருமடிந்து (அது துன்மரண மாகலின்) பேயாயினர், எனும் விவகாரத்தை=என்று கூறும் இவ்வழக்கை, அறிந்தவன் மயங்கான்=(பொய்யென்று தெளியாத பாலன் அல்லது)தெளிந்தவன் மயங்கான். எ - று.

“கலக மாயினா ரிடையினிற் கயிற்றாராக் கடித்திரு வருமாண்டார்,” என்றும் பாடமுளது.

கூறிய ஆக்யாயிகையில் அறிந்தவன் மயங்காமைபோல விவேகியாகிய நீயும் துச்சமான சகத்தின்கண் மயஙகாதிரு வென்பது கருத்து. (89)

(231) [பிரத்தியட்சாதி பிரமாணங்களால் அநுபவிக்கப்படாநின்ற சகத்து, பாலகாக்யாயிகை போலத் துச்சமென்பது எவ்வாற்றலாம் என உள்ளே சிந்தித்துக்கொண்டு ஒன்றும் கூறு திருக்குஞ் சீடன் கருத்தினை யுணர்ந்து காரணந் துச்சமாகலின், காரியமுந் துச்சமாம் என்று ஆசாரியர் கூறுகின்றார்.]

மாயை யென்பது பொய்யெனி லதுபெற்ற வகையெலாம் பொய்யா
தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ [மே
சேய சொர்க்கமு நரகமு நன்மையு நீமையும் பாராமல்
தூய சத்துச்சித் தாநந்த பூரண சொருபமா யிருப்பாயே. (90)

இ - ள். மாயை என்பது பொய் எனில்=(சகத்திற்கு உபாதான காரணமான) மாயையென்று சொல்லப்படுவது யாது ! அது (சுருதி, யுத்தி, அநுபவங்களான்) மித்தையென்று சொல்லப்படுமாயின், அது பெற்ற வகை எலாம்=அம்மாயை கற்பித்த கூறுபாடுகளனைத்தும், பொய் ஆம்=(அதற்கு முன்னரே) மித்தையாம், [இஃதெதுபோலவெனின] தாயை அன்றி=தாயையல்லாமல், மக்களுக்கு=புத்திரர்க்கு, ஒரு பிறவியும் சாதியும்=ஒரு ஜன்மமும், ஒரு ஜாதியும், வேறு உண்டோ=வேறே யுண்டாமோ (அது போலாம், (ஆகலின்) சேய சொர்க்கமும் நரகமும் =சேய்மையான சுவ

* கந்தருவநகரம்=கந்தருவருடைய நகரம்போலச் சூன்யவதிஷ்டானத்தில் புராகாரமாக நீலபீதாதி மேகங்களாற் பண்ணப்பட்ட வேறுபாடு,

ர்க்க நரகங்களும், நன்மையும் தீமையும்=நன்காயுள்ளன, தீங்காயுள்ளனவும் (ஆகிய பிரபஞ்ச முழுவதையும்), பாராமல்=(சத்தியமாகப்) பாராமல் (மித்தையென் றுபேட்சித்து), தூய சத்தும சித்து ஆநந்த பூரண சொரூபம் ஆய் இருப்பாய்=சுத்தமான சச்சிதாநந்த பரிபூரண பிரமம சொரூபந் தானுய் நிற்பாய். எ - று.

"வகையெலாம்" எ - து, மகதத்துவம், அகங்காரதத்துவம், பஞ்ச தன் மாத்திராதி ரூபங்களான சகத்தனைத்தையும், தாய யானையாகில் கன்றும் யானையாய், தாய் பசுவாகில் கன்றும் பசுவாய், தாய் புலியாகில் குட்டியும் புலியாய்ப் பிறக்கக்காணடலின், "தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ" என்றார்.

"இதுவே நன்றி நன்றென் னு மிதுவே விந்தா மிடரொழுங்குக்கு"—

என்று வாசிட்டத்திற் கூறியிருப்பதால் துக்க நிவிர்த்தியை விசசித்திருக்கின்ற நீ காஞ்சன வியதிரிக்தமாகக கடக, மகுடாதி பூஷணங்களில்லாதது போல அத்தியஸ்தமான சகத்து அதிஷ்டான வியதிரிக்தமாக இன்றென்று நிச்சயித்துச சகத்தென்னும் வாசனையை யொழித்தென்பார், "சேய சோர்க்கமு நரகமு நன்மையுந் தீமையும் பாராமல்" என்றார். "தூய" என்பது, லட்சியார்த்தத்தைக் காட்டி நின்றது.

பொய்யில் உறக்கமும், மெய்யில் விழிப்புமாகியிரு என்பதாம். (90)

(232) [யாவர்க்கும் நன்மை பயக்கத்தக்கனவான பிரபஞ்சங்களை மித்தை யென்றுநாதரஞ் செய்யின், அஃதபராதமாகாதோ என்று சீடன் வினுதல்.]

பங்க யாசனன் முதற்பல தேவரும பாருள பெரியோரும்
கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமு மறைநாலும்
அங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மெனச்சொன்னால்
எங்க ணுயக னேயத் னுற்குற்ற மில்லையோ மொழியீரே (91)

இ - ள். பங்கயாசனன் முதல் பல தேவரும்=பிரமன் முதலிய பற்பல தேவர்களும், பார் உள பெரியோரும்=பூமியின் கணணுள்ள பெரியோர்களும், கங்கை ஆதி ஆம் தீர்த்தமும்=கங்கை முதலிய (புண்ணிய) தீர்த்தங்களும், தேசமும்=(குருக்கேத்திர முதலிய புண்ணிய) தேசங்களும், காலமும்=(அர்த்தோதயம், மஹோதய முதலிய புண்ணிய) காலங்களும், மறை நாலும்=இருக்கு முதலிய வேதங்கணன்கும், அங்கம் ஆறும்=(சந்தசு, கற்பமுதலிய) ஆறங்கங்களும், மந்திரங்களும்=(பஞ்சாட்சர முதலிய) மந்திரங்களும், தவங்களும்=(கிருச்சிர சாந்தராயணுதி) தவங்களும், அசத்தியம் எனச்சொன்னல்=பொய்யென்று சொலலில், எங்கள் நாயகனே=எங்கட்கிறைவனே, அதனுல்—(தமக்குமுந் கோண்டினோர் வழிபாடுசெய்து புண்

ணிய மேலிட்டுப் பாவமகன்று பரகதியடையக் காரணமாய்ச் சுருதி சித்த மாயுள்ள வுயர்வான பிரபஞ்சங்களைப் பொய்யென்று சொல்) வதனால், குற் றம் இல்லையோ=தோஷமில்லையோ, மொழியீர்=அதன் உண்மையை யுரைத்தருள்வீர். எ - று. (91)

[அதற்கு விடைகூறல்.]

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழை யானால், அற்ப மாயையிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழை யாமே, சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல் லலா மெனின்மைந்தா, அற்ப மாயையிற் றோன்றிய சகமெலா மசத் திய மெனலாமே. (92)

இ - ள். சொற்பனந்தனிற் கண்டதை=சொப்பனாவஸ்தையிற் காணப் பட்ட (பிரமா முதலிய தேவர்கள், கங்கை முதலிய தீர்த்தங்களாதிய சொப் பன சுருதி சித்தமான உயர்வாகிய) பிரபஞ்சங்களை, பொய் என்று சொல் வது=(சாக்கிரத்தில் விழித்தவன்) மித்தையென்று கூறுவது, பிழை ஆனல் =தோஷமாயின், அற்ப மாயையில் தோன்றிய சகங்களை=(மண்ணிற் கட சத்திபோலத் தன்னில்) ஏகதேசமான மாயையிலுண்டான பிரபஞ்சங்களை, அசத்து எனல் பிழை ஆம்=மித்தையென்று சொல்லுவதும் தோஷமாம், சொற்பனந்தனிற் கணடதை=சொப்பனத்தில்(யோக்கிய தேச கால சாமக் கிரியின்றி நித்திராதோஷ சகித வவித்தையினு லுண்டாய்க்) காணப்பட்ட வுயர்வான பிரபஞ்சங்களை, பொய் என்று சொல்லல் ஆம் எனின்=(சாக்கி ரத்தில் விழித்தவன்)மித்தையென்று சொல்லலாம், (அதனாற் றோஷமில்லை) என்று சொல்விடில், மைந்தா=மகனே, அற்ப மாயையில் தோன்றிய சகம் எலாம்=(பிரத்தியகபின்ன பரமான்மாவாகிய தன்கண்) ஏகதேச மாயையிற் றோன்றிய சகமனைத்தும், அசத்தியம் எனல் ஆம்=(தன்னில் விழித்த ஞானி க்கு முயற்சியின்றியே மித்தையாகத்தோன்றுதலின், அவன்) மித்தையென்று சொல்லலாம், (அதனாற்றோஷமின்றென் றறிதி). எ - று.

சொப்பனத்தில் நித்திரா மோகத்தாற் கண்டு யாவராலும் வழிபட்டு வழி பாட்டிற் கேற்ற பலன்களை யடையத் தக்கனவான ஈசுராதிகள் சாக்கிரத் தில் விழிக்கில் அசத்தாய்ப் போதலின், அவைகளை அசத்தென்று சொல்லு தல் அபராதமாகாததுபோலச் சுத்தப்பிரஹ்மத்தில் ஏகதேச கற்பிதமான மூலாஞ் ஞானமாகிய நித்திரையினுற கற்பிக்கப்பட்டு வழிபட்டு வந்த ஈசுரா திகள ஞானமாகிய சாக்கிரததில அசத்தாய்ப்போதலின், அசத்தியமென்று சொல்லுவது அபராதமாகாதென்பது.

"அற்பமாயை" எ - கு, உ - ம், பஞ்சதசி,

" பிரமத்தோ ரிடத்தல் லாது பிறங்குறு தன்ன தெங்கும்
வருகுட சத்தி மென்மை மண்ணினி னிகழு மாபோ

லொருபத'மனைத்தா மீதி னெளிருமுப் பதமற் றுண்டு
சுருதியோ ரிடத்து மாயை துன்னிடு மென்றுஞ் சொல்லும்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (92)

[அபராதமாகா தென்பதைத்தானே இன்னும்
வற்புறுத்துகின்றார்.]

பொய்யை மெய்யென்ற மூடர்புண் ணியரென்று புராணங்
கூபிடுமானல், மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதி
த்த சாத் திரமுண்டோ, பொய்ய தேதெனி னுமரூபங்களாம் பூதமா
கிய மாயை, மெய்ய தேதெனிற் சச்சிதா நந்தமாய் வியாபிக்கு மான்
மாவே. (93)

இ-ள். பொய்யை மெய் என்ற மூடர்=(சுருதி, யுத்தி, யநுபவ சித்த மான அத்வைதத்தை அநாதரவு செய்து சுருதியாதிகளால்) மித்தையென்று நிஷேதிக்கப்பட்ட தொய்தத்தைச் சத்தியமென்று கூறுநிற்கும் (சாங்கிய கணாத முதலிய மதாநுசாரியரான) மூடரை, புண்ணியர் என்று=தர்மவான் களென்று, புராணம் கூப்பிடும் ஆனல்=புராணங் கூறுமாயின், மெய்யை மெய் என்ற ஞானிக்கு=(சுருதியாதிகளாற் சித்தமான) அத்வைதத்தைச் சத்தியமென்று கூறுநிற்கும் ஞானிக்கு, குற்றங்கள் விதித்த சாஸ்திரம் உண்டோ=அபராதங்களை விதித்த சாஸ்திரம் எது? (இல்லை), பொய்யது எது எனில்=மித்தையாவது யாதெனில், நாம ரூபங்கள் ஆம் பூதம் ஆகிய மாயை=நாம ரூபங்களான பூத பௌதிக ரூபமாகிய மாயையாம், மெய்யது எது எனில்=சத்தியமாவது யாதெனில், சத் சித் ஆநந்தம் ஆய்=சச்சிதாநந்த ரூபமாய், வியாபிக்கும் ஆன்மாவே=யாவரிடத்தும் வியாபித்திருக்கும் பிரத்தியகான்மாவே. எ-று.

சுருதி, யுத்தி, பிரஹ்மவித்துக்க ளநுபவம் இவைகளான் மித்தையென்று நிஷேதித்த பிரமா முதலிய தேவர்கள், பெரியோர்கள், கங்கை முதலிய தீர்த்தங்கள், தேசங்கள், காலங்கள், வேதங்கள், அங்கங்கள், மந்திரங்கள், தவங்கள் முதலியவற்றைச சத்தியமென்று நிச்சயித்துத் தீர்த்தமாடல், சேவை, அர்ச்சனை, தானம், தவம் மக முதலியவற்றைச செய்யாநிற்கும் பரமார்த்த வறிவின்மையரையே தர்மவான்களென்று புராணங்க டுதிக்குமாயின் என்பார், "பொய்யை மெய்என்ற மூடர்புண் ணியரென்று புராணங்கூப்பிடுமானல்" எ-ம், பரமாத்வைத ஞானியைச் சுருதி, ஸ்மிருதி, இதிகாச, புராணங்கடுதிக்கக் கண்டேமல்லது நிந்திக்கக் கண்டிலே மென்பார், "மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள விதித்தசாத் திரமுண்டோ" என்றுங் கூறினர்.

"ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத்திரமுண்டோ" எ-கு, உ-ம், பிரமகீதை,

" ஈசனு ஞானி யிருந்துழி விடத்தே யிருப்பது முத்திதா னந்தத்
தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியி லிருப்பது மன்னி

மாசிலாப் பரம ஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கி
லாசிலா வரியு மொப்பல னுமொப்பல னேவரொப் பாரே."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (93)

(233) [மாயை மித்தை யென்பதை நன்றயறிந்து அஞானை யகற்றுதற் போருட்டு அதனது சொரூப முதலியவற்றை வினுதல்.]

மாயை யென்பதே துடையரா ரெப்படி வந்தது வருவானேன்
மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே
மாயையென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே
மாயை யென்றமே கங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த்தி. (94)

இ - ள். மாயை என்பது=மாயையென்று சொல்லப்படுவது, எது= எப்படிப்பட்ட சொரூபமுடையது, உடையர் ஆர்=(சீவேசுரருள், அதனை அபிமான வாசிரயமாக) உடையோர் யாவர், எப்படி வந்தது=(ஆரம்ப, பரிணாம, விவர்த்த பட்சங்களுள்) அதனதுற்பத்தி எவ்வாறு, வருவான் ஏன்= என்ன காரணத்தால் (எனக்கு) வந்தது, மாயை என்பது=மாயை யென்று சொல்லப்படுவது, பிரமத்தின் வேறு எனின்=பிரஹ்மத்தைப் பார்க்கிலும் பின்னமென்று சொல்லில், வஸ்துவும் இரண்டு ஆமே=பிரஹ்மமும் (தம் பதிபோல) உபயமாமே, மாயை என்பதும் பிரமமும்=மாயையும், பிரஹ்மமும், ஒன்று எனின்=அபின்னமென்று சொல்லில், வஸ்துவும் பொய் ஆமே =பிரஹ்மமும் (உப்பளத்தில் வீழ்ந்த மாங்கனி முதலியவை தமது தன்மை போய் அவ்வுப்பாவதுபோலத் தனது சச்சிதாநந்த சுபாவங் கெட்டு) அசத்துச் சட துக்கமாமே, மாயை என்ற மேகங்களுக்கு=மாயை யென்று சொல்லப்பட்ட மேகங்களைப் போக்குதற்கு, ஒரு=ஒப்பற்ற, சண்டமாருத குருமூர்த்தி=சண்டமாருதமென்று சொல்லுங் குருவே. எ - று.

"மாயை யென்ற மேகங்களுக்கு" என்று பன்மைகூறினது மாயையானது ஆவரணம், விட்சேபமென்னும் இருகூறு யிருத்தலினென்க. சொரூபத்தை ஆச்சாதனஞ் செய்தலின் மாயையை, "மேகம்" எ - ம், உபாயத்தால் அதனை நிவிர்த்திக்குஞ் சாமர்த்திய மிகுந்துடைமையின் குருவை, "சண்டமாருதம்" என்றுங் கூறினன். (94)

(234) [அறுவகை வினுக்களுள், முதலுள்ள விருக்களுக்கு உத்தரங் கூறுகின்றார்.]

அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையா லவாச்சிய மதாகும்
இதுதனக்குள தாட்சியா றுலகுமெய் யெனுமவ ருடையோர்கள்
கதையி லாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலைமைந்தா
விதனை மாயையென் றறிந்தநின் றற்புதத்தி விசாரமற் றதனாலே. (95)

இ - ள். அதனை=அம்மாயையை, இன்னது என்று=(பின்னம், அபின்னம், பின்னாபின்னம், சத்து, அசத்து, சதசத்து, சாவயவம், நிரவய

வம், சாவயவம் நிரவயவமென்னும் இவற்றுள்) இத்தன்மைத்தான சொரூப முடைய்தெனஉரைத்திடப் படாமையால்=நிச்சயித்துச் சொல்லக்கூடா மையின், அவாச்சிய வடிவு ஆகும்=அநிர்வசனீய சொரூபமாம், இது தன க்கு உளது=இப்புத்திராதி க்ஷேத்திராதி தனக்குடையன, உடல் யான்= இத்தேகம் நான், உலகு மெய்=பிரபஞ்சஞ் சத்தியம், எனும் அவர் உடை யோர்கள்=என்னும் (அபிமானமுடைய) சீவர்களே அதனை யுடையவர்கள், கதையிலாத பொய்=வாக்கால் (சத்தசத்தென்று) வசனித்தற்கில்லாத அம் மாயை, வந்தது இப்படி என்று=(அநாதியாகலின்) அஃது உண்டானது (ஆர ம்பம், பரிணாமம், விவர்த்தம் என்னும் பட்சத்திரயங்களுள்) இவ்விதமாமெ ன்று, கண்டபேர் இலை=கண்டவர் (ஒருவரும்) இலர், மைந்தா=மைந்தனே, விதன மாயை=(அசத்துச் சட) துக்காத்மகமான மாயை, என் வந்தது என் றால்=(எனக்கு) என்ன காரணத்தா லுண்டாயிற்றென்று நீ சங்கிக்கில், புத்தி விசாரம் அற்றதனால்=(உன்) புத்தியின்கண் (யாமார்? சகத்தேது என் னும்) விசாரமின்மையினாலே (வந்தது என்றறிதி). எ-று.

(235) அஞ்ஞானம், அவித்தை, மாயை, பிரகிருதி, சத்தி என்பன ஒரு பொருட் சொற்கள். மாயை, அவித்தையின் பேதவாதம் ஏகதேசிகள் மதம். நையாயிகர் முதலியோர், ஞானபாவத்தையே அஞ்ஞானமென்பர்; சித்தாந்த த்தில் ஆவரண, விட்சேப சத்திகளையுடைய அநாதி பாவரூபபதார்த்தம் அஞ் ஞானம். அவ்வஞ்ஞானமும், சேதனத்தோடு பின்னமோ? அபின்னமோ எனின்:—அவ்விரண்டு பட்சமுங் கூடாது. என்னை? "ஏண்டு நாநா அஸ்தி யமில்லை" என்பது முதலிய சுருதி வசனத்தால் சேதனத்தோடு பின்னமெ ன்பது நிஷேதிக்கப்படுகிறது. சட சேதனங்கட்கு அபேதங் கூடாமையின், அபின்னமென்பதுங் கூடாது. பின்னத்துவ, அபின்னத்துவங்கட்கு பரஸ்பரம் விரோதமாகலின், அஞ்ஞானம் சேதனத்தோடு பின்னாபின்னமென்பதுங் கூடாது. அப்படியே அத்வைதப் பிரதிபாதக சுருதி விரோதத்தால் அஞ்ஞா னத்திற்குச் சத்ரூபத்தன்மை கூடாது. பிரபஞ்சத்தின் காரணத்தன்மை கூடாமையின், துச்சத்துவரூப அசத்ரூபத்தன்மை கூடாது. பரஸ்பரம் விரோதி தர்மங்கள் ஒன்றன்கட் சம்பவியாமையின், சதசத்தென்னல் கூடாது. அப்படியே அஞ்ஞானத்தைச் சாவயவமென்று ஒப்பிடில், நியாயம தத்தில் திரவிய வாரம்பக உபாதானத்தை அவயவமென்றனர். சாங்கியாதி மதங்களில் திரவியரூப பரிணாமமுடைய உபாதானத்தை அவயவமென்ற னர். உபாதானத்தையே அவயவமென்னில், சத்தத்திற்கு உபாதான வாகாச மும் சத்தத்திற் கவயவமாம். அப்படியே தமஸ் குணம், கிரியைகட்கு உபாதா னகாரணமான கடாதிகளும் உருவ முதலிய குணங்கட்கும், சலன ரூபமான கிரியைக்கும் அவயவமாம்; ஆகலால், திரவியவுபாதான காரணத்தை அவயவ மென்றனர்: அந்நியங்களின் உபாதானத்தை அவயவமென்கிலர்; அவயவத் தினின்றும் ஜந்நியமானதைச் சாவயவமென்பர். அவித்தை திரவியமாயின், சாவயவத்தன்மை கூடும்; திரவியம், திரவியத்துவம் இரண்டும் அதற்குப் பொருந்தாது. என்னை? நித்திய அநித்திய பேதத்தால் திரவியம் இருவகை

த்தாம்; அவித்தையை நித்தியத்திரவிய ரூபமாக வொப்பிடில்,' சாவயவத்துவ மென்று சொல்லுதல் அசங்கதமாம்: அப்படியே ஞானத்தால் அவித்தை நாசமாக வேண்டுவெதில்லை. அநித்தியத் திரவிய ரூபமாக வொப்பிடில், அதனவயவமும் ஆன்மாவினும் பின்னமாகலின் அநித்தியமேயாம்: அவயவத்தின் அவயவமும் அநித்தியமாவதால் அநவஸ்தாதோஷம் வரும். அந்தியவவயவத்தைப் பரமாணுவைப்போல நித்தியமாக வொப்பிடில், அத்வைதப் பிரதிபாதக சுருதி வசனத்திற்கு விரோதமாம். நியாயமதத்தில் பரமாணுவையும், சாங்கியமதத்தில் பிரதானத்தையும் நித்தியமாக அங்கீகரித்திருப்பது சுருதி விருத்தமாம்; இவ்வாற்றால், திரவியத்துவத்தி னபாவத்தால் அஞ்ஞானத்தில் சாவயவத்துவங்கூடாது. அப்படியே உபாதானத்தன்மை கூடாமையின்,அஞ்ஞானம் நிரவயவமென்று சொல்லுதலுங் கூடாது. சாவயவமே உபாதான காரணமாம்.நியாயமதத்தில் சத்தத்திற்குபாதானகாரணமான ஆகாசம் நிரவயவமென் றொப்பினர்;அதுவும் ஆன்மாவினின்றும் ஆகாசமுண்டாயிற்றென்னுஞ் சுருதிக்கு விருத்தமாம்: அப்படியே துவியணுகத்தின் உபாதான காரணமான பரமாணு நிரவயவமென்றொப்பினர்; அதுவும் நிரவயவ பரமாணுவின் சம்யோகங்கூடாதென்பது முதலிய தோஷத்தால் சூத்திரகாரர் சாரீரக சாஸ்திரத்தின் துவிதீய அத்தியாயத்திலுள்ள துவிதீய பாதந்தில் நிஷேதித்திருக்கின்றனர். ஆதலால், பிரபஞ்சத்தின் உபாதானமான அஞ்ஞானத்திற்கு நிரவயவத்தன்மை சம்பவியாது. அஞ்ஞானத்திற்குப் பிரபஞ்சத்தின் உபாதானத்தன்மை "மாயையைப் பிரகிருதியென் றறியத்தக்கது" என்னுஞ் சுருதியில் பிரசித்தமாயிருக்கிறது. மாயை அஞ்ஞானங்கட்குப் பேதமில்லை. இவ்வாற்றால், அஞ்ஞானத்திற்குச் சாவயவத்தன்மை அல்லது நிரவயவத்தன்மை கூடாது: அப்படியே பரஸ்பரம் விருத்தமான உபயரூபத் தன்மையுங் கூடாது.

இப்படி எவ்வித தர்மத்தினாலும், அஞ்ஞானத்தின் நிரூபணம் அசக்கியமாவதால் அதனை அநிர்வசனீயமென்றனர். அநிர்வசனீயமான வஞ்ஞானம் அநாதிபாவரூப பதார்த்தமாமென்று அதற்குப் பாவரூபத்தன்மை சொல்லுவதால் சத்துரூபத்தன்மை சித்திக்கிறது; சத்துரூபத்தன்மை நிஷேதிக்கப் பட்டிருப்பதால் அங்ஙனங் கூறுதல் கூடாதேயெனின்:—அதற்குச் சமாதானம். அஞ்ஞானம் சத்து விலட்சணமெப்படியோ! அப்படியே அசத் விலட்சணமுமாம். ஆதலால், அபாத்தியரூப சத்துவமோ அஞ்ஞானத்தி லில்லையாயினும், துச்சரூபமான அசத்தினும் விலட்சணத்தன்மை ரூபமான சத்துவம் அஞ்ஞானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது; இக்காரணத்தால், சத்து அசத்தினும் விலட்சணமான அநிர்வசனீயம் அஞ்ஞானமாம். சர்வதாவசனத்தின கோசர அநிர்வசனீயமல்ல; பாரமார்த்த சத்ரூபப்பிரஹ்மத்தின் விலட்சணமும், சர்வதா சத்தாஸ்பூர்த்தி சூனிய சசிருங்காதி அசத்தின் விலட்சணமுமே அநிர்வசனீய சத்தத்தின் பாரிபாஷிகவர்த்தமாம்; ஆதலால், அநாதி பாவ ரூபத்தன்மையதெனல் கூடும்.

உற்பத்தியின்மையின், அநாதியாம். கடம்போல அவயவசமேதரூப மான சாவயவமல்ல : அந்தகாரம்போலச * சாப்ஸ்யமாம் ; ஆகலின் † சர்வதா வசனத்திற் ககோசரமென்றது, "அகனை யின்னதென் றுரைத்திடப் படா மையா லவாச்சிய வடிவாதும்" எ-ம், அகந்தை மமதையோடுகூடி அசத்தியமான பிரபஞ்சத்தில் சத்தியத்துவப் பிராந்தியையுடைய ஜீவரிடத்து நான் அஞ்ஞானியென்னும் அநுபவங் காணப்படுதலின், "இது நனக்குள தூடியா னுலது மெய் யெனுமவ நடை யோர்கள்" எ-ம், ஆதியின்மை யின் அநாதி : உற்பத்திக்கு ஆதி என்று பெயர் ; மாயையின் உற்பத்தி அங்கீ கரிக்கில் புத்திரனினின்றும் பிதாவினுற்பத்தி கூடாததுபோல மாயாகாரிய மான பிரபஞ்சத்தினின்றும் மாயைக்கு உற்பத்தி கூடாது. சேதனத்தினின் ன்றோ மாயைக்கு உற்பத்தியொப்பவேண்டும் ; அங்கே ஜீவபாவமும், ஈசர பாவமும் மாயையின்காரியமாகலின், மாயை சித்தியாமற் ஜீவேசுரருருவம் சித்தியாது ; ஆதலால் ஜீவசேதனம், ஈசசேதனங்களினின்றும் மாயையி னுற்பத்தி கூறுதல் கூடாது. சுத்தசேதனமோ! அசங்கமாயும், அக்கிரியமா யும், நிர்விகாரமாயும் இருப்பதால் அதினின்றும் மாயையினுற்பத்தி யொப்பி டில், விகாரியாம் ; அன்றியும், சுத்தசேதனத்தினின்றும் மாயை உற்பத்தியா மேல், மோட்சதசைக்கண் பின்னரும் மாயை யுண்டாகாநிற்கும் : அங்ஙனுண் டாகவே, மோட்சநிமித்தமான சாதனங்கள் நிஷ்பலமாம் ; இவ்வாற்றான், மா யை உற்பத்திரகிதமாயிருத்தலின், "நனையி லாதபோயி வநாதிப் படியே ன்று கண்டபேரில" எ-ம், பாலனுக்கு அவிவேகத்தால் வெறும் பொய்யா னபேய்த்தோற்ற முண்டாவதுபோல அசத்தாச சடதுக்காதமகமான மாயை அவிவேகத்தாற் றோன்றுவதால், "பிரமமாமையயேன் வஸ்துவென் றும் புத்தி விசாரமற் றஞனுலே" என்று கூறினார். 'பிரமம்' என்றதனுல், அசத்துச் சடங்கள் வருவித்தார். (95)

(236) [5-ம், 6-ம், விருத்தங்கள் உத்தரங்கூறத் தொடங்கிப் பிரவிர்த்தி பத்தின் சத்தி காரியதுப்பமான வையகத்தா லறியப்பாலதெனத்
திருஷ்டாந்தபூர்வமாகக் கூறுகின்றார்]

அருவமாகுமாயாவி வித்தைகள் வினையின் முன் தெரியாவே
உருவமாம் பல கர்த்தர்ப்பேதையாயுதித்தலின் வெளியாகும்
பிரம சத்திக ளதனதாரமையதாக்கன்றி ஒருநிலை கூடாதே
பரவு பூதங்கள் கண்டமாமதைத்தாங்குமுருவது வெளியாமே (96)

இ-ள். மாயாவி=இந்திரஜால வித்தைகாரனுடைய, அருவம் ஆகும் வித் தைகள்=அருவமாகிய (மந்திரதந்திர ரூபமான) வித்தைகள், வினையா டும் முன்=(கர்த்தர்வாகனமுதலானவைக்காட்டி அவன்) வினைபாவிப்பதற்கு முன்னே, தெரியா=(ஒருவருக்கும்) தோன்றாவாய், உருவம் ஆம் பல கர்த்தர்ப்பேதமை ஆய்=உருவமாகிய பற்பலவான கர்த்தர்வசேனைகளாகி, உதி

* சாப்ஸம்=அம்ஸத்தோடு கூடினது ; அம்ஸம்=கூறு.
† சர்வதா=சர்வப்பிரகாரம்.

த்தபின் வெளி ஆகும்=உண்டானபின் (யாவர்க்கும்) தோன்றுநிற்கும் (அதுபோல) பிரமசத்திகள் அநந்தம் ஆம்=பிரஹ்மத்தின் சத்திகள் அநேகமாம், அதைக்கண்டு பிடித்திடல்=அவைகளைக் கண்டறிந்திடல், கூடாது=(ஒருவருக்கும்) கூடாது, பரவு பூதங்கள் கண்ட=எங்கும் விரிந்துள்ள ஆகாசாதி பூதங்களைக்கண்டு அநுமானித்த. அநுமானத்தால்=இலிங்கஞானத்தால், பலருக்கும் வெளி ஆம்=யாவர்க்கும் (அச்சத்திகள்) வெளியாகும். எ-று.

சத்திகள் காரியத்திற்கு முன் ஒருவாறு மறியக்கூடாமையின் காரிய ரூபமான லிங்கத்தால் அறியலாயினவென்பதாம். "பிரம சக்திக ளநந்தமாம்" எ-கு, ௨-ம், வாசிட்டம்,

முழுதுசத் தியுமாய்ப் பூரணமா மொன்று முழுவதும் பிரமமா வதுதாம், பழுதின்ஞா னிகட்கு மனமலா தில்லை பரமமா மிதிலிலா திலதாம்; எழுதருஞ் சத்தி யாவுமா யிலங்கு மிவைகளோர் காலமொன் றுளதாம், வழுவிலாப் பிரமமுறைடயசிற் சத்தி மறிதரு முடல்களிற் றோன்றும்."—எ-ப.

"காற்றிலே யசைவுங் கல்லிலே திடமுங் கனலிலே சூடும்வான் றனிலே, தோற்றலா மையுநன் னீரிலே நெகிழ்வுந் தொலைவுறா மாய்விலே மாய்வு, மூற்றுமாம் விதையின் மரங்களும் போல் முன்றுறை பிரமசத் திகடா, மாற்றல்சால் சாலகேசரிக் கிரத்தா லவைவிரிற் றாவிபோற் றோன்றும்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுங் காண்க. (96)

[சத்திக ளனுமானத்தா லறியற்பாலன வல்லது, பிரத்தியட்ச மாகா வென்பதைத் திருஷ்டாந்தமுகமாக வற்புறுத்துகிறார்.]

காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணுபற் றதுமாயும்
பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும்
வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா ததுபோலே
பேரி யற்பிர மத்துக்கு முலகுக்கும் பிறிதுசத் தியுமன்றே. (97)

இ-ள். பாரில் நின்ற மாயாவியும்=பூமியின்கண் நிற்கின்ற இந்திரசால மறிந்தவனும், சேனையும்=(அவன் இந்திரசால சத்தியினால் ஆகாசத்தின்கட் டோற்றுவிக்கின்ற கந்தர்வ) சேனைகளும், பார்ப்பவர் கண்காணும்=பார்ப்பவர்களுடைய கண்களுக்கு வெளியாகும், வீரியம் திகழ்=பராக்கிரம முடையதாய் விளங்குகின்ற, வித்தை ஆயின சத்தி=இந்திரசால வித்தை ரூபசத்தியானது, வெளிப்படாது=(பார்ப்பவர் கண்களுக்கு) வெளியாகக் காணப்படாது, அதுபோலே=அத்திருஷ்டாந்தம் போலவே, சத்தி காரியங்களும்=மாயாசத்தியின் காரியங்க(ளான ஆகாசாதிப்பிரபஞ்சங்க)ளும், (சத்தி) ஆதாரமும்=மாயாசத்திக் காசிரயமான பிரஹ்மமும், காணும்=

(பார்ப்பவர்க்கு) காணப்படும், மறறது மாயம்=(காரியத்திற்கும், ஆதாரத்திற்கும் விலட்சணமான) சத்தியானது காணப்படாது, பேர் இயல் பிரமத்துக்கும்=பரிபூரணத்துவமான சுபாவமுடைய (ஆதாரமாகிய) பிரஹ்மத்திற்கும், உலகுக்கும்=(காரியமாகிய) சகத்திற்கும், பிறிது சத்திகள் உண்டு=விலட்சணமாக அநந்த சத்திகளுளவாம். எ - று. (97)

[" மாயையென்பது பிரஹ்மத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே, மாயையெனபதும் பிரஹ்மமு மொன்றெனின வஸ்துவும் பொய்யாமே " என்று 94-ம் செய்யுளில் சீடன் வினவிய வினாவுக்கு உத்தரங் கூறுகின்றார்.]

சத்தி சத்தனைத் தவிர வேறன்றுகாண் சத்தனு மாயாவி
வித்தை காட்டிய விந்திர சாலம்பொய் விததுவான் மெய்போலப்
புத்தி மைந்தனே சத்திமா னாகிய பூரண வான்மாவின்
வத்து நிர்ணயஞ் சொன்ன நிட்டாநந்தநின் வழிகண்டு தெளிவாயே.

இ - ள். சத்தி=(இந்திரசால) சத்தியானது, சத்தனைத்தவிர=(அதையுடையவனான) இந்திரசாலக்காரனைத் தவிர, வேறு அன்றுகாண்=பின்னமல்ல, சத்தன் ஆம் மாயாவி=சத்தியுடையவனான இந்திரசாலக்காரன், வித்தைகாட்டிய=இந்திரசால வித்தையாற் றோற்றுவித்த, இந்திரசாலம் பொய்=இந்திரசாலம் பொய்யாய், விததுவான் மெய்போல=இந்திர சாலக்காரன் மெய்யாயிருப்பது போல, புத்தி மைந்தனே=அறிவுடைய மைந்தனே, சத்திமான் ஆகிய=சர்வசத்திமானாகிய, பூரண ஆன்மாவின்=பரிபூரண ஆன்மாவினுடைய, வஸ்து நிர்ணயம்=வஸ்து நிர்ணயத்தை, சொன்ன நிட்டாநந்தத்தின் வழி=செப்பிய நிட்டாநந்த வழியிலாக, கண்டு=(இந்திரசாலியினுடைய இந்திரசால சத்தியைப்போல பரப்ரஹ்மத்தின் மாயா சத்தியும் பிரஹ்மத்திற்குப் பின்னமல்லாமையின், வஸ்து இரண்டாவதல்ல. இந்திரசாலம் பொய்யாய், இந்திரசாலி மெய்யாயிருப்பது போல பிரபஞ்சம் தோற்றவதனையிற் கண்டது மற்றொருவனைக் காணாதழிதலின் அசத்தியமென்றும், பிரஹ்மம் அசலகமாதலால் அழியாமல் சாட்சியாயிருத்தலின் சத்தியமாமென்றும்) அறிந்து, தெளிவாய்=(பின்னமெனின் வஸ்து இரண்டாமே, அபின்னமெனின் வஸ்துவும் மித்தையாமே என்னும்) சந்தேக மொழியாயாக எ - று.

"புத்திமைந்தனே" என்னுஞ் சம்போதனையால், புத்திமானாகிய சீடனுக்கு ஆசிரியர் பொருள்களின் நிச்சயத்திற்கு முக்கியகாரணமான அறிவுடைமையையாதலால், நினக்கு தெரிதல்ல வெனவும் தக குறிப்பித்தாரென்க. "பூரணவான்மா" எ - து, பிரஹ்மத்தினுடைய பாரமார்த்திகரூபம், "சத்திமான்" எ - து, அதற்கே சோபாதிகரூபம் ஆம்.

கானற்சலத்தால் மருபூமி நனையாததுபோல மாயையால் பிரஹ்மத்தின்சொரூபம் ஹானியடையாது. மாயையும் மாயாகாரியப் பிரபஞ்சமும் பிரஹ்மமேயல்லாமல் வேறில்லை என்பது கருத்து. (98)

(237) [முன் அநுமானத்தாற் சாதித்த சத்தியை முன்னும் சங்கித்து உணர்த்துகின்றார்.]

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கில்
புல்லை யாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக் காய்ப்பனபாராய்
நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடாத்திடா திருந்தக்கால்
தொல்லை யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறாமே.

இ - ள். இல்லை ஆகிய சத்தியை=(பிரஹ்மத்தைத் தவிர) வேறில்லையென்னுஞ் சத்தியை, உண்டு என்பது=உண்டென்று கூறுவது, எப்படி எனக்கேட்கில்=எங்ஙனமென்று வினவிடில், புல்லை ஆதி ஆம்=புல் முதலாகிய, அசேதனப் பொருள் எலாம்=அசேதனமாகிய பொருள்களனைத்தும், பூத்துக் காய்ப்பன பாராய்=(புஷ்பிக்கும் காலத்தில்) புஷ்பித்துக் (காய்க்கும் காலத்தில்) காய்க்கும் விசித்திரங்களைப் பார், நல்லை ஆம் மகனே=நற்குணங்களை யுடையையாகிய மைந்தா, அதில் சிற்சத்தி=அவ்வப் பொருள்களிற் பிரஹ்மத்தின் சத்தியானது, நடாத்திடாது இருந்தக்கால்=சஞ்சரியாதிருந்தால், தொல்லை ஆய் வரும்=அநாதியாய் வரும், சர அசர உயிர்க்கு எலாம்=சராசரமாகிய உயிர்களனைத்திற்கும், சுபாவங்கள் வேறு ஆம்=இயற்கைகள் வேறாய்விடும். எ - று. (99)

[இன்னும், சரவுயிர்களிடத்துள்ள சத்திவிசித்திரத்தையும், அஃதில்லாவிடிற் பிரபஞ்ச சுபாவம் மாறுபடுமென்பதையும் விரித்துணர்த்துகின்றார்.]

கருப்பையுள் முட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்தசித் திரம்பாராய்
அருப்பமாஞ் சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம்
நெருப்புநீ ராங்கைப் பும்மது ரமாநீச னும்மறை யோதும்
பொருப்புமே கமாங் கடலெல்லா மனைத்துமாம் புவனமெப் படியோ பாராயே.

இ - ள். கருப்பை=கருப்பாசயத்தில் (கட்டப்பட்டுள்ள), முட்டையுள்=முட்டைக்குள் (சலமயமாயிருக்க கரு,) பறவைகள்=(பின்) பறவைகளாய், பல நிறம் கலந்த=பற்பல வர்ணங்களோடும் கூடி வந்த, சித்திரம் பாராய்=ஆச்சரியத்தைப்பார், அருப்பம் ஆம்=அருவமாகிய, சத்தி நியமம் இல்லாவிடில்=சத்தியாகிய ஆதாரம் (அல்லது, நிச்சயம்) இல்லையாயின், அரசு இலா நகர் போல ஆம்=அரசனில்லாத நகரம்போல (ச் சகல பிரபஞ்ச சுபாவமும்) மாறுபடும், [அஃதெங்ஙனெனில்,] நெருப்பு நீர் ஆம்=(உஷ்ண சுபாவமான) அக்கினி சலம்போல (ச் சீதள சுபாவம்) ஆம், கசப்பு மதுரம் ஆம்=கைப்பு (ச் சுபாவமுடைய வேம்பு) மதுரமுடையதாம், நீசனும் மறை ஓதும்=(வேதாத்தியயனாதிகளிற்கு வெகு தூரமான) சண்டாளனும் வேதாத்தியயனஞ் செய்வன், பொருப்பு மேகம் ஆம்=(அசஞ்சல

---

* அருவம் "அருப்பம்" எனத் திரிந்தது, காவியம் காப்பியமென்றாற்போல் என்றறிக.

சுபாவமுடைய) பருப்பதங்கள் மேகங்கள்போல (ச்சலனசுபாவங்களையுடையன) வாம், கடல் எலாம் மண்கள் ஆம்=(இட்சு, க்ஷீராதிசுபாவங்களையுடைய) சமுத்திரங்களெல்லாம் மண்களாகும், புவனம்=சகத்தானது, இப்படிப் போம்=இங்ஙனம் (தத்தஞ் சுபாவ) மாறிப்போம். எ - று.

பிரத்தியட்சப்பிரமாணசித்தமான அக்கினியாதிகளின் சொரூபம் பிரதிபந்திக்கக் கூடாமையின், மணி மந்திராதிப் பிரதிபந்தமும் நிர் விஷயமாம் ஆதலால், சத்திமானைப் பார்க்கிலும் பின்னமாகப் பிரதிபந்தத்தின் விஷயமான சத்தியை ஒப்பவேண்டுவதுபோலப் பிரஹ்மத்தினும் பின்னமாகச சத்தியையொப்பவேண்டுமென்பது கருத்து.

முட்டை கருப்பாசயத்திற் கட்டுப்பட்டுள்ளதென்பதற்கு, - ம், சாந்தலிங்கர் திருவாக்கு,

" கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லிடைத் தேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன் - றிருப்பொன்
வட்டி வளர்க்காதோ வேலையில் யன்றைக்கே
வாட்ட முறவைக்கேன் மனம் "—
எனவரும் மற்றும் வருவனவற்றுங் காண்க.
"பாசமில்லாவிடில்" எ - ந, உ - ம், சாக்கைக்கு,

" உற்பவ பாசவிரோதி பொருந்தாவும்
பாவ தாகமோடு பாவலடைந்து
பெற்றவளை முப்பிய ரெட்டவை பாவும
இப்படி ருக்குமது வென்றனிய முகநா "—
எனவரும். மற்றும் வருவனவற்றுங் காண்க. (100)

(238) [இவ்வாறு, பிரஹ்மத்திற்குப் பின்னமாக சத்தியொன்றுஒப்பப்படுமாயின், அத்வைதாபாவமே கூடாமையின் மோட்ச பிரதிபாதனம் பயனில் கூற்றேயாகும்; ஆகவே, அந்நிவிர்த்தியுபாயங் கூறவேண்டுமென வினாதல்.]

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென் றவாச்சிய வடிவென்றும்
சேர்க்கு நாமரூ பப்பாயி விர்த்தென் றுஞ் செப்பிய சித்தி [முப்
பேர்க்கு மாறெக்ஙன் பிரிக்கிடப் படாதெனிற் பிரபாவ லனையோன்
பார்க்கு மாறெங்ஙன் முத்திபா குவதெங்ஙன் பரமசற் குருமூர்த்தி.

இ - ள். ஆர்க்கும்=யாவர்க்கும், காணவும் அறியவும் படாது என்றும் =(வாகியமான கட படாதிகளைப்போலக்) காணவும், (ஆந்தரவிஷயமான சுகதுக்கங்களைப்போல) அறியவுங் கூடாதென்று, 96 - 97 - ம் செய்யுளிலும், அவாச்சிய வடிவு என்றும்=' அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையால் அவாச்சிய வடிவாகும்'' என்று, 95 - ம் செய்யுளிலும், நாம ரூபப்

பயிர் சேர்க்கும் வித்து என்றும்=நாம ரூபமாகிய பயிர்களை யுண்டாக்கா நிற்கும் விதையென்று, 99-100-வது செய்யுளிலும், செப்பிய சிற்சத்தி= சொல்லிய மாயையை, பேர்க்கும் ஆறு எங்ஙன்=நிவிர்த்திக்கும் வழி யெப்படி, பிறித்திடப்படாது எனில்=நிவிர்த்திக்கக் கூடாதென்று சொல்லில், பிரமபாவனை ஒன்றுப்பார்க்கும் ஆறு எங்ஙன்=பிரஹ்மத் தியானத்தால் (அல்லது, பிரஹ்ம விசாரத்தால்)பிரஹ்மத்தை ஏகமாகப் பாவிக்கும் விதமெப்படி, முத்தி ஆகுவது எங்ஙன்=(சர்வவனர்த்த நிவிர்த்தி, ஆநந்தப்பிராப்தி ரூபமான) மோட்ச முண்டாவதெப்படி, பரம சற்குரு மூர்த்தி=யாவர்க்கு மேலான சற்குருவே. எ-று. (101)

(239) [மாயாநிவிர்த்திக்கு உபாயங் கூறல்.]

வாயுத் தம்பனஞ் சலத்தம்ப னம்மணி மந்திர மருந்தாலே
தேயுத் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே
நீயச் சச்சிதா நந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பாயேல்
மாயச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணேமே. (102)

இ-ள். வாயுத் தம்பனம்=வாயுஸ்தம்பனமும், சலத்தம்பனம்=சலஸ்தம்பனமும், தேயுத் தம்பனம்=தேயுஸ்தம்பனமும், மணிமந்திர மருந்தாலே செய்திடில்=மணிமந்திர வவுடதங்களினாலே (மந்திரவாதியாற்) செய்யப்படுமாயின், அதில் அதில்=அவ்வப்பொருள்களில், சிறந்த சத்திகள் எங்கே= விசேஷமாகவுள்ள (சலன, திரவ, தாக சத்திகள் நாசம், அல்லது திரோதானமாய் நிவிர்த்தித்துப் போமேயல்லது) எங்கே காணப்படும், (அதுபோலவே) நீ அச்சத் சித் ஆநந்தம் ஆய்=நீயும் (மாயைக்காதாரமாகிய)சச்சிதாநந்தாத்மகமான பிரஹ்மமாய், வேறு ஒன்றும் நினைந்திடாது இருப்பாயேல்= அந்நியமொன்றையும் நினையாதிருப்பாயாயின், மாயச் சத்திபோம்= (அசத்துச்சட துக்காத்மகமான) மாயாசத்தி (மீண்டெழாமல்)நிவிர்த்தியாய்விடும், ஈது அன்றி=(ஜநநமரணரூபமான மாயாநிவிர்த்திக்கு) இத்திருசிய * விஸ்மரண மல்லாமல், மந்திரம்=குப்தமான வசனம், மறைகளில் காணேம்=சுருதிகளில் யாம் கண்டிலேம். எ-று.

சாதன சதுஷ்டய சம்பன்னனான அதிகாரி மாயையை நிவிர்த்தித்தற்கு முக்கியோபாயமான திருசிய விஸ்மரணமே சுருதிகளால் இரகசியமாகக் கூறப்பட்டிருக்கின்றதென்பது கருத்து.

"வேறொன்று நினைந்திடா திருப்பாயேல், மாயச் சத்திபோம்" எ-கு, உ-ம், வாசிட்டம்,

" பிறப்பிறப்பாம் பெயருடைய வித்து மாயைப்
பெருமையினை முடிவுபெறப் பேச வொண்ணா
வறப்பெரிய தன்மனமது வென்றுன் மாறா
மல்லதொரு வகையாலு மகற்ற லாகா

* விஸ்மரணம்=நினைவின்மை.

சிறப்புடைய வன்மாயை விரிவி னுள்ள
சித்திரந்தோன் றிடவுனக்குச் செப்புங் காதை
மறப்பறுசிந் தையனாகிக் கேட்டி யென்று
மனுகுலநா யகனுக்கு வசிட்டன் சொல்வான் ”—

எனவரும். மற்றும் வருவனவற்றுட் காண்க. (102)

(240) [அக்கினியின் கண்ணுள்ள தாகசக்தி அதற்குப் பின்னமல்லவெனின், மணிமந்திராதிப் பிரதிபந்தம் நிர்விஷயமாம்; ஆகலால், அது பின்னமாவதுபோல மாயையும் பிரஹ்மத்திற்குப் பின்னமென்றும், காரியத்தால் அநுமேயமென்றுங் கூறப்பட்டிருப்பதால், காரியமான திருசிய விஸ்மரணத்தால் காரணமான மாயாசக்தி எங்ஙனம் நிவிர்த்தியாமென்றுசீடன் கொள்ளுமாசங்கையை அறிந்து சிருஷ்டிக்குமுன் அவ்வியாகிருதமாயிருந்த சகத்து சிருஷ்டியவசரத்தில் நாமரூபமாகப் பிரகடமாயிற்று; பிரஹ்மத்தின்கண் யாதொரு அசிந்திய மாயையுண்டோ அஃது அவ்வியாகிருத நாமமுடையதாம் என்னும் பிருகதாரண்ணியசுருதியால் காரியகாரணங்கள் அபேதமாகலின், காரியமாகிய திருசிய விஸ்மரணத்தால் காரணமாகிய மாயாசத்தியினிவிர்த்திகூடும் என்பதைத் திருஷ்டாந்தமுகமாகக் கூறுகின்றார்.]

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் வியவகரித் திடவேண்டில்
நாவி னுன்மண்ணைக் குடமென்ப ரக்குட நசிப்பது நாவாலே
பாவு நாமரூபங்களை மறந்துமன் பாரப்பிர்ம பரமார்த்தம
சீவ பேதகற் பிதங்களை மறந்துநீ சின்மய மாவாயே. (103)

இ-ள். மேவும் மண்ணில்=திரளையான மண்ணில், அவ்வியத்தமே=(குலால வியாபாரத்திற்கு முன்) அப்பிரகடமாயிருந்த கடசத்தியே (வெளிப்படாததாயிருந்த வென்றபடி), வியத்தம் ஆம்=(குலால வியாபாரத்திற்குப் பின்) பிரகடமாய்க் கடமென்னும் நாமத்தையடையும், (அதுபோலச் சிருஷ்டிக்குமுன் * அவ்வியாகிருத நாமமுடையதாயிருந்த இந்த ஆகாச முதலிய சகத்தே பின் சிருஷ்டியவசரத்தில் நாமரூபங்களாகப் பிரகடமாயின; இங்ஙனங் கூறிய பிருகதாரண்ணிய சுருதியின் றாற்பரியம் காரிய காரணங்கள் அபேதமாகலின், காரியமான திருசிய விஸ்மரணத்தால் காரணமான மாயை நிவிர்த்தித்துப்போமென்பதாம்) [சத்தியின் காரியமான கடம் மித்தை, சத்தியின் ஆதாரமான மண் சத்தியம் என்னும் சாந்தோக்கிய சுருதியின் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றார்.] வியவகரித்திட வேண்டில்=(கடத்தை) வியவகரிக்கவேண்டின், நாவினால்=வாக்கினால், மண்ணைக் குடம் என்

* அவ்வியாகிருதம்=அப்பிரகடம்.

பர்=(மண்ணைத்தவிரக் கடமின்மையினுன்) மண்ணைத்தானே கடமென்று வியவகரிப்பர், அக்குடம் நசிப்பதும் நாவாலே=அக்கடம் நசித்ததென்னும் வியவகாரமும் வாக்கு மாத்திரத்தாலே (உளதாம்,) (இப்படிக் காரியமான கடம் உபாதான காரணமான மண்ணைத்தவிர வேறின்மையின், உண்டென்பதும், நசித்ததென்பதும் வாக்கு மாத்திரமாதலால்),பாவும் நாம ரூபங்களை மறந்து=சத்தியின் விரிவாகுங் கடமென்னும் நாமமும், (* பிருது புதரோதராகாரமான) உருவமும் ஆகிய இவைகளை (மித்தையென்று) உபேட்சித்து, மண் பார்ப்பதே=(கடம்) மண்ணென்று பார்ப்பதே, பரமார்த்தம்=பரமார்த்தமாம், (அதுபோல ஆகாசமென்பது முதலிய நாமமும், அவகாச மென்பது முதலிய உருவமும் அஸ்தி பாதிப் பிரிய ரூபமான பிரஹ்மத்தைத் தவிர வேறின்மையின், சகத்தென்பது வாக்கு மாத்திரமாம் ஆகலின்) சீவபேத கற்பிதங்களை=சீவத்துவிதமாகிய (நாம ரூப) கற்பனைகளை, மறந்து=(மித்தையென்று) உபேட்சித்து, நீ சின்மயம் ஆவாய்=நீ (சதாநந்த) சின்மய ருவாய். எ - று.

(241) தாஷ்டாந்த ஞானத்தின் பொருட்டுத் திருஷ்டாந்தத்தை விரிக்குதும்:—பிருது புத்ரோதராகாரமான கடம் காரியம்; சத்தாதி ஐந்து குணங்களோடு கூடிய மண் ஆகாரம்; சத்தி இவ்விரண்டற்கும் விலட்சணம். என்னை? சத்தியின்கண் பிருது புத்நாதி காரிய தர்மமும் இல்லை, சத்த முதலான காரண தர்மமுமில்லை; ஆகலான், சத்தி இரண்டற்கும் விலட்சணமாம்; ஆனால் அஃதெப்படியுளதெனில்? எப்படியோ அப்படியுளது; அப்போதசிந்தியத்தன்மைய தென்றமாலோவெனின்:—பேதமென்றாவது அபேதமென்றாவது, அசிந்தியமென்றாவது சொல்ல யோக்கிய முடையதன்று. காரண சொரூபத்தினும் பின்னமாகச் சத்தியிருக்குமேல், காரண சொரூபத்தைப்போலத் தோன்றாததேனெனின்:—மண்ணின் சத்தி கடாதி காரியோற்பத்திக்கு முன் மண்ணின்கட் கூடமாயிருந்ததால் தோற்றவில்லை என்க. ஆனால் பின்னருந் தோன்றாததெனின்:—நவநீத முதலியவை மதநத்தாற் றோற்றுகிற்பதுபோலக் குலாலாதிகளின் சகாயத்தாற் கடாதியாகாரத்தை யடையும். உபாதானகாரணத்தினும் பின்னமாகச் சத்தியின் காரியமுண்டென்றால் காரிய காரணங்களின் பேதம் ஏன் றோற்றவில்லை எனின்:—அவிவேக சனங்கள் பிருதுபுத்நாதி ரூபமான காரியத்தையும், சத்த பரிசாதி குணரூபமான காரணபூதமாகிய மண்ணையும் ஒன்றாய்ச்சேர்த்துக் கடமென்று சொல்லுவதால் காரியகாரணங்களின் பேதந் தோற்றவில்லை என்க; அஃது அவிசாரமென்பது; என்னை? குலால வியாபாரத்திற்கு முன் எத்துணைக்கூறுண்டோ அத்துணைக்கூறுங் கடமல்லாமையின் என்க. ஆனால் யாது கடமெனின்:—குலால வியாபாரத்திற்குப் பின் பிருது புத்ரோதராகாரத்திற்கே கடசத்தத்தின் வாச்சியத்தன்மை யுசிதமாம். என்னை? சொல்லிய ஆகாரத்தினுற்பத்தியின் பின்னரே கடசத்த வியவகாரங் காண்டலின் என்க. மண்ணி

---

* பிருது=ஸ்தூலம், புத்நம்=வட்டவளைவு, உதரம்=வயிறு, ஆகாரம்=வடிவு.

னின்று வேறுசெய்யின் கடம் காணப்படாமையின் மண்ணுக்குப் பின்னமு மல்ல: பூர்வம் பிண்டாவஸ்தையிற் கடம் காணப்படாமையின், மண்ணுக்கபின்னமுமல்ல; ஆதலால் சத்தியைப்போலக் கடமும் அநிர்வசனீயமேயாகலின், கடம் சத்தியின் காரியமாம். சங்கை:—சத்தியும், காரியமும் அநிர்வசனீய மாயின், சத்தியென்றும், காரியமென்றும் பேதவிய வகாரம் வருவானேனே னின்:—அவ்வியத்தமாயிருந்தபோது சத்தியென்றும், வியத்தமானபோது கடமென்றுஞ் சொல்லப்படுகிறது; இது பிரசித்தமாகக் காணப்படவில்லையே யெனின்:—இந்திரஜால சம்பந்தியான மாயையும் மணிமந்திராதிப் பிரயோகத்திற்குமுன்னே பிரகடமாகாமல் மணிமந்திராதிப் பிரயோகத்தின் பின்னர்ப் பிரகடமாவதால் இது பிரசித்தமாமென்க. மாயையின் காரியமாதலால் கடாதி விகாரங்கள் மித்தையென்றும், விகாரங்கட் காதாரமான மண் மாத்திரமே சத்தியமென்றும் சுருதி கூறுகின்றது. இதற்கபிப்பிராயமேதோவே னின்:—சத்தியும், காரியமும் ஒவ்வோர் காலத்தில் தோற்றுவதால் மித்தை, ஆதாரம் மூன்றுகாலத்தினு மிருப்பதால் சத்தியம் என்பதாம். காரியம் மூவகை யேதுக்களால் அசத்தியமாம்; மூவகை யேதுக்கள், அசத்தாய்த் தோற்றுகின்றதும், உற்பத்தி நாசமுடைத்தாய்க் காணப்படுகின்றதும், உற்பத்தியானபின்னர் வாக்கிரியத்தால் கூறியாநின்ற நாமஸ்வரூபமாக வியவகரிக்கப்படுகின்றதும் ஆம்.

(242) அன்றியும், கடம் நசித்தும் நாமம் நசியாது மநுடருடைய முகங்களிலே பின்னரு மிருக்கின்றது; இதனால் ஏதாயிற்றெனில்? விவாதத்துக்குவிஷயமான கடம் சத்தரூபமாகைக்கு போக்கியமாம், கடசத்தத்தால் வியவகரிக்கப்படுதலின், கடசத்தத்தைப்போல என்னும் அநுமானத்தினாலும் கடம் மித்தையாம்.

(243) இவ்வியவகாரத்திற் கதிஷ்டானரூபமாகிய மண்ணின் சத்தியத்தன்மையின் அநுமானமாமாறு.—மிருத்திகை ரூபமான வஸ்து சத்தியமாகைக்கு யோக்கியமாம்; மூன்று காலத்தினும் ஒரே ஆகாரமுடையதாயிருப்பதால், ஆன்மாவைப்போல மிருத்திகை ரூபமான வஸ்து சத்தியமாம், வாஸ்தவமாவதால், ஆன்மாவைப்போல என்க.

(244) பரிணாமம், ஆரம்பம், விவர்த்தம் எனக் காரியோற்பத்தி மூவகையுள், சித்தாந்தத்தில் விவர்த்தபட்சம் அங்கீகரிக்கப் பட்டிருப்பதால், க்ஷீரம் போல அந்நியாவஸ்தையை யடையாநின்ற மிருத்திகை, சுவர்ணங்கள் விவர்த்தத்திற்கு எப்படித் திருஷ்டாந்தமாமெனின்:—க்ஷீரமானது பூர்வரூப பரித்தியாக பூர்வகமாக அந்நியாவஸ்தையை யடையாநிற்பது உண்மையாகலின், பரிணாமமேயாம். மிருத்திகை, சுவர்ணங்கள் அந்நியாவஸ்தையை யடையாநிற்பினும் பூர்வ ரூபத்தை விடாமையின், விவர்த்தத்தன்மையுமாம். மிருத்திகை, சுவர்ணங்களைப் பரிணாமமும், விவர்த்தமுமாக அங்கீகரித்ததுபோல ஆரம்பமாகவும் ஏன் அங்கீகரிக்கவில்லையெனின்:—ஆரம்பவாதி மதத்தில் காரணத்துவ, காரியத்துவ ரூபவியவகார பேதத்தாற் காரிய காரணங்களின் பேதந் தோற்றுகின்றது. ஆதலால், காரண ரூபமாகவும், காரிய ரூபமாகவும் காரணம்

ஒன்றேயிருப்பதால் காரியத்தின் சொரூபத்தில் காரணத்தின் இருவகைக் குணத்தன்மையுண்டாகும். எப்போது காரணத்தில் இருவகைக் குணத்தன்மை யுண்டாயிற்றோ அப்போது காரணகதமான சத்த, பரிச, ரூப, ரச, கந்தகுண முதலிய தர்மங்களுக்கும், காரியகதமான சத்தாதிகுண முதலிய தர்மங்களுக்கும் இருவகைக் குணத்தன்மையாகிய பின்னத்தன்மை யுண்டாதல் வேண்டும். ஆனாலும், இவை தந்துவின் ரூபாதிகளென்றும், இவை படத்தின் ரூபாதிகளென்றும் இப்படிப்பட்ட வியவகாரங் காணப்படவில்லை. காரியத்துவ, காரணத்துவ வியவகாரபேதத்தால் எங்ஙனம் காரிய காரணங்களினுடைய அபேதஞ் சித்திக்கவில்லையோ அங்ஙனம் தந்து அல்லது, மிருத்திகை முதலிய காரணங்களின் பின்னமாகப் படம், கடம் முதலிய காரியங்கள் தோற்றாமையின், காரியகாரணங்களின் பேதமுஞ் சித்திக்கமாட்டாது. பின்னையோவெனின்:—காரியகாரணங்களின் பேதங் கற்பிதம்: வாஸ்தவம் அபேதமாம்; ஆதலால், ஆரம்பவாத மசங்கதமாம் என்க. சாந்தோக்கியத்தின் ஆறம் அத்தியாயத்தில் மண், பொன், இரும்பென்னும் மூன்றும் விவர்த்தத்திற்குத் திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால், பூதபௌதிகரூபமான சர்வவஸ்துக்களிலும் காரியத்தின் மித்தியாத்தன்மையை அடிக்கடி யநுபவித்து அதனை அவ்வநுபவஜந்திய சம்ஸ்காரரூபமான வாசனைக்கு விஷயமாக்கல் வேண்டும்.

(145) இங்கே ஈதிரகசியம்:—இரச்சுவைப்போல மிருத்திகை, சுவர்னங்களை அதிஷ்டானமாக ஒப்பிக் கடம், குண்டலாதிகளை விவர்த்தமென்றது ஸ்தூல திருஷ்டியால்; சூட்சுமதிருஷ்டியால் விசாரித்துப்பார்க்கின், மிருத்திகை முதலியவற்றிற்குக் கடாதிகளின் அதிஷ்டானத்தன்மை பொருந்தாது. என்னை? சித்தாந்தத்தில் யாதொரு கற்பிதவஸ்துவும் அந்நியகற்பிதங்கட்கு அதிஷ்டான மென்னல் பொருந்தாது. பின்னையாதெனின்:—சேதனமே சர்வத்திற்கும் அதிஷ்டானமாம். மிருத்திகை முதலியவை தாமே கற்பிதமாகலின் கடாதிகட்கு அதிஷ்டானமென்னல் பொருந்தாது. எப்படி இரச்சு வுபகிதசேதனம் கற்பித சர்ப்பத்திற்கு அதிஷ்டானமோ அப்படி மிருத்திகை, சுவர்னமுதலிய தத்தம் உபாதானங்களால் உபகிதமான சேதனம் கடம், குண்டல முதலிய காரியங்கட் கதிஷ்டானமாம். ஆதலால், கடாதிகளில் விவர்த்தத்தன்மை நிர்விவாதத்தால் சித்தமாம். (103)

(246) [சுத்தியிலாரோபிதமான வெள்ளி சுத்திஞானத்தால் நிவிர்த்தியாவதுபோல, மாயாமயமான சகத்தும் அதிஷ்டான ஞானத்தால் நிவிர்த்தியாகாமற் பூர்வம் போலவே தோற்றுவதால் அஃதெவ்வாறு நிவிர்த்தி யாமென் றட்சேபித்துச் சுத்தி ரஜதம் நிருபாதிகப் பிரமையாகலின், அது அங்ஙனமாம்: சகத்துச் சோபாதிகப் பிரமையாகலின், இதில் மித்தியாத்துவபுத்தி யுளதாதலே நிவிர்த்தி யானதா மென்று திருஷ்டாந்த முகத்தாற் கூறுகின்றார்.]

புரிக் குங்ஙன சச்சிதா நந்தத்திற் பொய்ச்சடங் குயர்மூன்றும் [மூல்
தாரத் தாயினுந் தோன்றுமாய் விபரீதந் துடைப்பதெப் படியென்

நீரிற் றோன்றுந்தன் னிழறலை கீழதாய் நின்றலை யினுநேராய்ப்
பாரிற் றோன்றிய தன்னைநோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யாமே.()

இ - ள். பூரிக்கும்==(பொன்முனை பூஷணத்தைப்போலச் சர்வத்தையு) நிறைத்துநிற்கும், கன சத் சித் ஆநந்தத்தில்==பரிபூரணமாகிய சச்சிதாநந்த ரூபப்பிரஹ்மத்தில், பொய் சடம் துயர் மூன்றும்==அசத்துச் சடதுக்காதம கமான மாயாம்ச மூன்றும், ஆரத்து ஆயினும்==(நீரிலே புழுதியும், கனலிலே தோயமும்போலச்) சேய்மைத்தாயினும், (இல்லையாயினுமென்ற படி), தோன்று பாழ் விபரிதம்==தோற்றுகின்ற அபாவரூபமான விபரீதத்தை, துடைப்பது==(தோற்றமல்) நாசமாக்குவது, எப்படி என்றால்==எவ்வித வுபாயத்தாலென்று ஆட்சேபித்தால், நீரில் தோன்றும் தன் நிழல்—தடா கசலத்திற் றோன்றுநிற்குந் தன்னுடைய சாயையானது, தலை கீழது ஆய்== அதோமுகமாய், நின்று அலையினும்==நின்று சலிப்பினும், நேர் ஆய்==ஊர்த் த்முகமாய், பாரில்தோன்றிய—(தடாகக்) கரையினின்று விளங்கிய, தன்னை நோக்கிடில்==தன்னை நாடிடில், அந்தப் பாழ் நிழல்==அவ்வபாவமான அதோ முகச்சாயை, பொய் ஆம்==மித்தையாம். எ - று.

அதுபோலக் காரணஞானத்தாற் காரியம் மித்தையென்னும ஞானமுமா தாம்; இவ்வாறுளதாகும் ஞானத்தையே அத்வைதவாதத்திற் புருஷார்த்த மென் றுரைப்பினர் என்பது எஞ்சிநின்றது.

தடாகசலத்தில் அதோமுகமாச் சாயை தோற்றினும வாஸ்தவமாகப் புருஷன் அப்படிக்கில்லாதது போலச சச்சிதாநந்தப் பிரஹ்மத்தில் அநிருத சடதுக்க ரூபமான சகத்துத் தோற்றினும் வாஸ்தவமாக இல்லை. யாதொரு புருஷருக்கும் அதோமுகப் புருஷச் சாயை யினிடத்து புது சத்தியமென் னும் அபிமானம் யாதொரு தேசத்திலும், யாதொரு காலத்திலும காணப்பட வில்லை. அப்படிச் சோபாதிகப் பிரம [மாசு] ஸ்தலத்தில் சத்திய புத்தியின் நாசமே ஞானத்தாலுளதாகும் நிவிர்த்தியெனக் கொள்ளற்பாலதாம் என்பது தாற்பரியம். (104)

(247) [காரணமிது காரியமிது வென்றும, பிரபஞ்சமுளதாயில் காரியத்தோற்ற மபாவமாகா தாகலான, அதனை மித்தை யென் றுநாதரஞ் செய்து காரணமாத்திரமாய நிற்றியே னறு கூறுகின்றார்.]

ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பமபேய்கள்
ஆன தெப்படி யழிந்த தெப்படியென வாய்குதல் டாலனன்றே
மான மைந்தனே தீர்க்கசொப் பனசகம வந்ததும் பாராமல்
போன துங்கினை யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே (105)

இ - ள். ஞானம் காரணம்==அறிவாகிய பொருள் காரணம், அறிபொருள் காரியம்==அறியப்படுவனவான பொருள்கள் காரியமாம், நாமரூபப் பேய்கள்

=நாமரூபங்களாகிய இட்பசாசங்கள், ஆனது எப்படி=உண்டாகுமா றெங்ஙனம், அழிந்தது எப்படி=(அத்தியந்தந் தோன்றாமல்) அழியுமா றெங்ஙனம், என ஆய்குதல் பலன் அன்று=என்று விசாரித்தல் பயனின்றாம், [மற்றியாது பயனெனின்] மான மைந்தனே=பெருமை யுடைய மைந்தா, தீர்க்க சொப்பன சகம்=நீண்ட கனவென்னும் பிரபஞ்சம், வந்ததும் பாராமல்=இன்ன காரணத்தினின்று இவ்வாறுண்டாயிற் றென்பதையும் விசாரியாமல், போனதும் நினையாமல்=அத்தியந்தந் தோன்றாமல் (என்ன வுபாயத்தால்) நிவிர்த்தியா மென்பதையும் விசாரியாமல், உன்போதம் ஆய் பூர்ணம் ஆய் இருப்பாய்=உனதான்மாவாய்ப் பரிபூர்ணமாகிய பிரம்மமா யிருக்கக்கடவாய்; (இதுவே பயனும்). எ - று.

"ஆனது, அழிந்தது" என்பன இயல்பினால் வந்த காலவழுவமைதி. அறிதல்காண் காரியம் என்றும் பாடம். பாலனுக்குப் பேய்போல அவிவேக திருஷ்டிக்கு நாம வுருவங்கள் உண்மையாகத் தோற்றா லாகலின், அவற்றை "பேய்" எ - ம், "பன்மைப்பேய, இயக்கங் காணாப்போநள்" என்னுஞ் சுருதியாலும், பிராரத்தத்தாற் பிரதி பந்திக்கப் பட்டுள்ள விட்சேப ரூபமான அஞ்ஞானுர்ஸமானது பிராரத்த முள்ளளவில் தக்ஷபடம் போலத் தோற்றுவதல்லது யாதோருபாயத்தாலும் நிவிர்த்தியாகாதாகலானும், "ஆனதெப்படி யழிந்த தெப்படி யெனவாய்குதல் பலனன்று" என்றுங்கூறினர். "தீர்க்க சொப்பன சகம்" எ-து, பிராரத்த முள்ளளவுந் தோற்றலாகலின். "சொப்பனம்" எ - து, தேசகால சாமக்கிரியின்றித் தோற்றலாகலின்: அன்றியும், "சொப்பனம்" எ - து, ஏது கற்ப விசேஷணமுமாம். இதற்கு, உ - ம், வாசிட்டம்,

"பொய்ய தாமுயற் கொம்பினைப் பற்றவு மேபாக்கவு நினைப்பாரா
ரைய னேபர போதபூ ரணத்திலே யயலொன்று வருமாறென்
பொய்ய தாகிய வநேகபா வனையினைப் பொருந்தல்புன் பிறப்பாகு
மைய மின்றிய வேகபா வனையினி லழுந்துதல் பவந்தீர்தல்."—எ-ம்,

"எங்கே யெனினுந்தோன் றாமிந்த மனமதை முக்திச
சங்கே ததந்தா னூரகந் தன்னிற் கூட்டி னன்றாம்"—எ - ம்,

"யாதினிற்றோன் றியதென்று மியாதிதென்று மிறந்த நெறி யாதென்று மிறந்தாற் றோன்று, மாதவினால் வன்றுயரிம் சாலையானவித்தைதயெனு நோய்க்குமருந் தருந்தச் செய்தால்."—

என்றும் வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (105)

(248) [பிரஹ்மஞானத்தின் றிடத்துவம் தொய்ரத்தின் அநாதரவின் வாயிலாக வுண்டாவதால் சிரவணாதிகள் போலத் தொய்நரித்தை யெனவும் நாராவும் சிஞ்ஞாசுக்குக் கர்த்தவ்வியமே யென்று கூறுகின்றார்.]

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினு லம்மட்டும் நிசத்தி னுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால்

வசத்தி னுமனம் நின்றுசின் மாத்திர வடிவமா யிடின் மைந்தா
கசந்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல்வடி வாவாயே. (106)

இ-ள். அசத்தில் = மித்தையான நாம ரூபத்தில், எம்மட்டு உண்டு = எவ்வள வெவ்வள வாதர முண்டோ, அம்மட்டும் = அவ்வள வவ்வள வாதரமும், பராமுகம் ஆகினால் = உபேட்சிக்கப் படுமாயின், அம்மட்டும் = அவ்வள வவ்வளவும், நிசத்தில = சத்தியரூபமான பிரமத்தில், உள் விழிப்பார்வை ஆம் = அகமுக திருஷ்டியுளதாம், (எவ்வெவ்வள வெவ்வெவ்வளவு பிரம்ம தரிசனமாமோ! அவ்வள வவ்வளவு நாம ரூபம் விடப்படும்) [நாம ரூபத்தின் அநாதரமும், பிரம்மதரிசனமுமாகிய இருவித அப்பியாசத்தினையும் கூறுகின்றார்.] இப்படி நிரந்தரப் பழக்கத்தால் = இப்படி நிரந்தரம் (நெடுங்கால மாதரத்தோடு கூடிச் செய்யும்) அப்பியாசத்தால், மனம் உன் வசத்தில் நின்று, சின்மாத்திர வடிவம் ஆயிடின் = சேதனமாத்திர ரூபமாய் நிலைபெறில், மைந்தா, கசந்த தேகத்தில் இருக்கினும் = வெறுக்கத்தக்க துக்கமயமான தேகத்தி லிருப்பினும், ஆனந்தக் கடல் வடிவு ஆவாய் = ஆனந்த சமுத்திர ரூபமாவாய் எ-று.

ஆதரவு = அபிமான ரூபமான ஆசை. "உள்விழிப் பார்வை" எ-து, பிரம்ம தரிசனத்தை. எவ்வளவெவ்வளவு பிரம்ம தரிசனமாமோ அவ்வள வவ்வளவு நாம ரூபம் விடப்படுமென்னும் இதற்கு முன்னூலான பஞ்சதசியின் சுலோகார்த்தம் எஞ்சி நின்றதால் அதனை வருவித்ததாம். சீவித்தவண்ணமே பிருந்தே முத்தனுவாயென்பார், "கசந்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல் வடிவாவாய்" என்றார்.

இவ்வாசிரியர் கூறினவாறே, பஞ்சதசியிற் கூறிய ரூபமுமன்றி வாசிட்டத்தும்,

"எத்தனையெத் தனைநீத்தனை பகலத்தனைத்த பரஞ்சுடரா யெறிக்குஞ் சோதி, யத்தனையத் தனை தோன்றும்" —

என்று கூறியிருப்பது காண்க.

மேலே, 121-வது செய்யுள் தொடங்கி இனிக் கூறப்படும் எண்வகை யானந்தங்களுள், இஃது அத்துவிதானந்தம் எனவறிக. (106)

(249) [ஆசாரியர் மாயாலட்சணங் கூறப்புகுந்த வாயிலாக அத்துவிதானந்தஞ் சாதித்தல்லை, அகமகிழ்ந்த ஆன்மானந்தத்தை யறியுங் கருத்தினராய ஆன்மா சச்சிதானந்த ப்ரகாசமானால் சருவ விருத்திகளிலும் சத்து, சித்துப்போல ஆநந்தமும் ஏன் விளங்கவில்லையென வினாவ.]

[வேறு.]

தானறி வேறொன் றில்லாத பூரணா
சச்சிதானந்த குணமா !
வானின்ற வுயிர்க் கோரு பொன்குருவே மென்முலம்
தொக்கின்ற படிகண்டி லேன்

நானென்ற சீவன்கள் சத்தான வகையொக்கு
ஞானங்கள் வெளிகண்டதால்
ஆனந்த மிதுபோல வெளியாக வுதியாத
வடைவேது குருநாதனே. (107)

இ-ள். குருநாதனே, தான் அன்றி வேறு ஒன்றும் இல்லாத=தானல்லாமல் மற்றொன்றும் (பரமார்த்தமாகத் தன்கண்) இல்லாத (ஆன்மா), பூரண சத் சித் ஆநந்த குணம் ஆய்=பரிபூரண சச்சிதாநந்த சுபாவமாய், ஹனின்ற உயிர்தோறும்=தேகத்தின்கண், நானென்று வியவகரித்துள்ள வுயிர்கடோறும். ஒன்று ஆகும் என்றால்=ஏகரசமாக இருக்குமென்று கூறப்படுமாயின், அஃது ஒக்கின்றபடி கண்டிலேன்=(அவ்வான்மா) அங்ஙனம் பொருந்தாநின்ற தன்மையை யறிந்திலேன், [அதற்குக் காரணங் கூறுகின்றன்] நான் என்ற சீவன்கள்=யான் (கண்டேன், ண்டேன்) என்று வியவகரிக்கின்ற சீவர்கள், சத்து ஆன வகை ஒக்கும்=சத்தென்னுந் தன்மைகூடும், ஞானங்கள் வெளிகண்டது=ஞானங்கள் வெளியாகக் காணப்பட்டது, ஆநந்தம்=ஆனந்தமானது, இதுபோல=இச்சத்துஞ் சித்தும் போல, வெளியாக உதியாத=(சர்வவிருத்திகளிலும்) வெளியாகத் தோன்றாத, அடைவு ஏது=முறைமை யாது. எ-று. ஆல்=அசை.

"சச்சிதாநந்த குணமாய், ஒன்றதும்" என ஒட்டுக. சீவர்கள் சத்தல்லவாயின், வந்தியா சுதன்போல வியவகாரங் கூடாமையின், "நானென்ற சீவன்கள் சத்தான வகையொக்கும்" எ-ம், நேத்திராதி இந்திரியங்களின் வாயிலாகப் பிரமாண மென்னும் அந்தக் கரணத்தின் விருத்தி வெளிப்பட்டு உருவ முதலிய பிரமேயங்களை யடைந்தபோது நான் கண்டேன், கேட்டேனென்னும் அநுவியவசாய ஞான வியவகாரம் உளதாகலின், "ஞானங்கள் வெளி கண்டதால்" என்றுங்கூறினன். "ஞானங்கள்" என்ற பன்மை உபாதியான விருத்தியின் பன்மையாம் என்க. (107)

[சச்சிதாநந்தங்கள் ஆன்மாவின சொரூபமாயின், சத்துஞ் சித்தும் போல ஆநந்தமும் சர்வவிருத்திகளிலும் பாதமாகவேண்டுமே யென்னும் சீடனுசங்கைக்கு அது நியமமில்லை யென்று திருஷ்டாந்த முகத்தாற் சமாதானங் கூறுகின்றார்.]

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி
லொன்றாகு மென்றாலுமே
கரணங்க ளோரொன்றி லோரொன்று தெரியுங்க
ணக்கன்றி வாராதுகாண்
அருமந்த சச்சிதா நந்தச் சுபாவங்க
ளான்மாவின் வடிவாகிலும்
பிரபஞ்ச மயமாம்வி ருத்திபே தத்தினாற்
பேதங்க ளாமைந்தனே. (108)

இ-ள். ஓருபூவில்=ஓர் (தாமரைப்) புஷ்பமாகிய திரவியத்தில், உருவங்கள் இரதங்கள் பரிசங்கள்=ரூப, ரச, பரிச, கந்தங்கள், ஒன்று ஆகும் என்றாலும்=ஏகமாக இருக்குமாயினும், கரணங்கள் ஓர் ஒன்றில்=இந்திரியங்களொவ்வொன்றில், ஓர் ஒன்று=ஒவ்வொரு குணங்கள், தெரியும் கணக்கு அன்றி=தோன்றுமளவினதல்லாமல், வாராது காண்=(ஓரிந்திரியத்தில் சகல குணங்களுமெப்படித்) தோன்றுவோ (அப்படி), அருமந்த=அருமருந்தன்ன [அமுதமொப்பானவென்று பொருள்.] சத் சித் ஆநந்தச் சுபாவங்கள் =சச்சிதாநந்தமாகிய குணங்கள் ஆன்மாவின் வடிவு ஆகிலும்=ஆன்மாவின் சொரூபமாயினும், பிரபஞ்ச மயம் ஆம்=பிரபஞ்ச மயமாகிய, விருத்தி பேதத்தினால்=விருத்திகளின் பேதத்தால், பேதங்கள் ஆம்=பேதங்களாகப் பாசமாம், மைந்தனே. எ-று.

அடைந்தோரை அஜராமரண ரூபமாக்குதலின், "அருமந்த சச்சிதாநந்தச் சுபாவங்கள்" என்றார். (108)

[இனி விருத்திபேதத்தைத் தெரித்துணர்த்துகின்றார்.]

தாமதமி ராசதஞ் சாத்துவித முக்குணத்
தால்வரும்வி ருத்திமூன்றாம்
ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமும்
மபிதான மாகுமகனே
ஏமுறவி ருக்கின்ற சச்சிதா நந்தங்க
ளொன்றென்று மொன்றாகிலும்
நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னாற்சொரூப
ஞானதி பிரிவாகுமே. (109)

இ-ள். தாமதம்=தாமதமும், இராசதம்=இராசதமும், சாத்துவிதம்=சாத்துவிதமும், (என்னும்) முக்குணத்தால்=எனப்படும் இம்மூவித குணங்களால், வரும் விருத்தி மூன்று ஆம்=உண்டாகாநின்ற விருத்திகளும் மூவகையாம், ஆம் அவைகள்=அம்மூவகை விருத்திகளும், (முறையே) மூடமும் கோரமும் சாந்தமும்=மூட விருத்தி யெனவும், கோர விருத்தி யெனவும், சாந்த விருத்தி யெனவும், அபிதானம் ஆகும்=பேர் பெறும், மகனே=மைந்தா, ஏமுற இருக்கின்ற=(அடைந்தோர்) இறுமாப்புறக் காரணமாக விருக்கின்ற, சத் சித் ஆநந்தங்கள்=அஸ்தி பாதிப் பிரியங்கள், என்று என்றும்=சர்வகாலமும், ஒன்று ஆகிலும்=(ஆன்மாவின் கண்) ஏகரசமாக விருக்கினும், நாம் உரைக்கும்=யாங்கூறாநிற்கும், விருத்திப் பிரிவினால்=(மூட, கோர, சாந்த மென்னும்) விருத்தி பேதத்தால், சொரூப ஞானதி=ஆன்மாவின், சச்சிதாநந்தங்கள், பிரிவு ஆகும்=பேதமாக வயிவியத்தியாம். எ-று.

"ஏழுற விருக்கின்ற" என்பதற்கு, உ-ம், தேவாரம்.

"இறுமாந் திருப்பன் கொலோ வீசன் பல்கணத் தெண்ணப் பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங் கிறுமாந்திருப் பன் கொலோ."

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (109)

[விருத்தி பேதத்தால் சச்சிதாநந்தங்கள் பேதமாகப் பாசமாது மென்பதை, அநுபவ வாயிலாகக் காட்டுகின்றார்.]

சடமான மூடத்த ருக்கல்லு மண்களிற்
சத்தொன்று மேதோன்றுமால்
விடமான காமாதி கோரத்தி லாநந்தம்
விளையாது மற்றவைகளாம்
திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி
தாநந்த மூன்றும்வெளியாம்
மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த
மனமாகி லாநந்தமே (110)

இ-ள். சடம் மூடம் ஆன=சடமும், மூடமுமான, தரு கல்லு மண்களில்=விருட்சம், பாஷாணம், மிருத்திகை முதலியவற்றில், சத்து ஒன்றுமே தோன்றும்=(பிரமத்தின் சுபாவங்களுள்) சத்தொன்றுமே பிரகடமாம் (ஏனைய சிதாநந்தங்கள் பிரகடமாகா), விடம் ஆன காமாதி கோரத்தில்=விஷம்போலும் (புருஷனை மயக்குவன) ஆன காமக் குரோதாதி (ரூப புத்தியின்) கோர விருத்தியிலும், (மோக பயாதிரூப புத்தியின் மூட விருத்தியிலும்), ஆநந்தம் விளையாது மற்றவைகள் ஆம்=ஆநந்தம் பிரகடமாகாது: சத்தும், சித்தும் பிரகடமாம், திடம் ஆன ஒழிவு ஆதி சாந்தத்திலே=திடமாகிய வைராக்கியம், பொறுமை, தாரா முதலிய (ரூப புத்தியின்) சாந்த விருத்தியில், சச்சித் ஆநந்தம் மூன்றும் வெளி ஆம்—சச்சிதாநந்தங்கள் மூன்றும் வியத்தமாம், [இனி விஷயத்தில் வைராக்கியத்திலோ மஹத்தமசுக முண்டாகுமென்று கூறுகின்றார்.] மடம் ஆன மூடங்கள் கோரங்கள்=அறியாமையினுண்டாவனவான (மோக பயாதிரூப) மூட விருத்திகளையும், காமக் குரோதாதிரூப கோர விருத்திகளையும், விடு சாந்த மனம் ஆகில்=விட்ட சமையாதி ரூபமாகிய அர்த்தர்முக விருத்தி யுண்டாயின், ஆநந்தம் (ஆம்)=(நிர்விக்கினமாகப் பிரமத்தினது) ஆநந்தம் பிரதிவிம்பிக்கும். எ-று.

கோர, மூட விருத்திகளில் சுகாநுபவங் காணப்படவில்லை: சாந்தவிருத்தியில் சுகாநுபவம் காணப்படுகின்றது; அதுவும், நியூனமதிகமாகக் காணப்படுகின்றது. கோர மூட விருத்திகளில் சுகம் ஏன் காணப்படவில்லை எனின்:—சிரக சந்தனாதி விஷயங்களில் இது நமக்கு வேண்டுமென்னும் இச்சை யுண்டாகும்போது கிடைக்குமோ? கிடையாதோ என்னும் சமுசய

மூண்டாவதாற் றுக்கமுண்டாகின்றது; கிடையாமற் போமாயின், அத்துக்க மிகுகின்றது. ஒருவரால் விக்கினஞ் செய்யப்படின், குரோத முண்டாகின்றது: பிரதிபந்தத்தை நிவிர்த்திக்கக் கூடாவிடின், விஷாத முண்டாகின்றது; இப்படிக் குரோதாதிகளில் மஹத்தான துக்கமே யிருக்கிறது: சுகமுண்டென்பதற் கிடமில்லை வாஞ்சித வஸ்து லபித்தபோது சாந்த விருத்தி யுண்டாகின்றமையின், மஹத்தாகிய சுகமுண்டாம். போகத்தில் மஹத்தர சுகமுண்டாம்: இலாபப் பிரசக்தியில் அற்ப சுகமுண்டாம். சாந்த விருத்தியிலும் விஷயலாபத்திற்குத் தக்கதாகத் தாரதம்மிய சுகம் பானமாம். ஞானிக்கு இச்சையி னபாவரூப வைராக்கியத்தால் * மகத்தம சுகமுண்டாகும்; இது வித்தியாநந்தமாம் என்றறிக.

கோர, மூடவிருத்தி யிரண்டும் கலங்கிய விருத்தி யாதலால், சத்தும், சித்துமன்றி அவைகளி லாநந்தந் தோன்றாமல் சாந்த விருத்தி நிர்மல மாதலால் அதில் சச்சிதாநந்தங்கண் மூன்றும் பான மாகின்றன; ஆதலால், சத்துஞ் சித்தும் போல ஆநந்தமும், ஆன்மாவின் சொரூப மென்றே அறியற்பாலதென்று தாற்பரியம். (110)

(250) [சச்சிதாநந்த விலக்கண மறியும்பொருட்டுச் சீடர் வினாதலும், அதற்காசாரிய விடைகூறலும்.]

இகமார்ந்த குருநாதனே சச்சி தாநந்த
மெனுமிலக் கணமறிகிலேன்
அகலாத சத்தாவ தேதுசித் தாவதே
தாநந்த மேதென் றிடில்
மிருகால மூன்றினுங் கெடாதிருப் பதுசத்து
வேறுபா டறிதல்சித் தாம்
மகிழ்காம நுகர்போது சுகமாகு மதுவுநீ
வாழ்மெய்ப தாநந்தமே (111)

இ-ள். இகம் ஆர்ந்த குருநாதனே=இகத்தில் (அருளுருவாய்) எழுந்தருளிய குருவாகிய இறைவனே, சத் சித் ஆநந்தம் எனும்=சச்சிதாநந்த மென்பவற்றின், இலக்கணம் அறிகிலேன்=இலக்கணங்களை யானறிந்திலேன், அகலாத=நீங்காத, சத்து ஆவது எது=சத்தி னிலக்கணம் யாது, சித்து ஆவது எது=சித்தி னிலக்கணம் யாது, ஆநந்தம் எது=ஆநந்த விலக்கணம் யாது, என்றிடில்=என்று நீ வினவிடில், மிருகாலம் மூன்றும்=மிகுந்த காலத்திரயங்களிலும், கெடாது இருப்பது=நிவிர்த்தி யாகாமலிருப்பது, சத்து=(ஆன்மாவின்) சத்து லட்சணமாம், வேறுபாடு அறிதல்=ஒன்றற்கொன்று பிருதக்கான (அகங்காராதிப்) பிரபஞ்சத்தை யறிதலே, சித்து ஆம்=(ஆன்மாவின்) சித்து லட்சணமாம், மகிழ் காமம் நுகர்போது=வாஞ்சித

* மகத்தமம்=அதிசயம்.

வஸ்து (லபித்து, அதனை) அநுபவிக்கும்போது, சுகம் ஆகும்=(சந்தோஷ ரூபமான சாந்த விருத்தியின்கண்) சுகமா யெழுவதான, அநுபூதி வாழ்வு என்பது=அநுபூதி * வாழ்வென்று சொல்லப்படுவதே, ஆநந்தம்=(ஆன்மாவின்) ஆநந்த லட்சணமாம். எ-று.

(251) யாதொரு வஸ்து ஞானத்தால் அபாவமாமோ அஃதசத்தென்றும், யாதொரு வஸ்து யாதொரு காலத்தும் நிவிர்த்தி யாகாதோ அது சத்தென்றுஞ் சொல்லப்படும். சர்வ பதார்த்தங்கட்கும், அவைகளி னிவிர்த்திக்கும் ஆன்மா அதிஷ்டானமாம்; ஆன்மாவுக்கு நிவிர்த்தி யுண்டெனின்:—சூனியத்தில் நிவிர்த்தி கூடாதாகலின் அதற்கு வேறே அதிஷ்டானஞ் சொல்லல் வேண்டும்; ஆன்மாவிற்கும், அத னிவிர்த்திக்கும் அந்நிய அதிஷ்டான மங்கீகரிக்கின் அதற்கு வேறே அதிஷ்டான மங்கீகரிக்க வரும் இவ்வாற்றால், அநவஸ்தை யுளதாம்; அன்றியும், ஆன்மாவி னிவிர்த்தி அங்கீகரிப்பவரை ஆன்மாவின் நிவிர்த்தியாரேனு மநுபவித்த துண்டா? அல்லது இன்று என்று வினவுமாம்; அநுபவித்த துண்டெனின்:—அது பொருந்தாது. என்னை? அநுபவித்தது யாது அது ஆன்மாவாம்; அன்றியும், தன் சொரூப நிவிர்த்தி யினநுபவம் தனது மஸ்தகச்சேதனத்திற்குச சமானவநுபவமாம்; ஆதலால், ஆன்மாவின் நிவிர்த்தி யநுபவம் பொருந்தாது: ஆன்மாவின் நிவிர்த்தியுண்டு, அதனநுபவம் ஒருவர்க்கு மில்லையெனின்—அப்போது ஆன்மாவின் நிவிர்த்தி இல்லை யென்னும் வார்த்தை சித்தித்தது. என்னை? யாரொருவரானும் அநுபவிக்கப் படாத ஒருவஸ்து வந்தியாபுத்திரனுக்குச் சமானமாம்; ஆகலின், ஆன்மா ஒருபோதும் நிவிர்த்தி யாவதில்லை; இதனன், "மிருகால மூன்றுங்கே டாதிருப் பதுசத்து என்றார்.

(252) ஆன்மா சித்தாம்: பிரகாசரூபமான யாதொரு ஞானமுண்டு அது சித்தெனப்படும். ஆன்மா அப்பிரகாசரூப மென்னின், அநான்மாக்களாகிய சட வஸ்துக்கள் ஒர்போதும் பிரகாசமாகா. அந்தக்கரணம், இந்திரியம் இவைகளால் பதார்த்தங்கள் பிரகாசிக்கின்றன வென்னின்:—அது பொருந்தாது. என்னை? அந்தக்கரணமும் இந்திரியங்களும் பரிச்சின்னங்களாகலின், காரியங்களாம்; தேச காலங்களால் யாது அந்தமாமோ அது பரிச்சின்ன மெனப்படும்; யாதொன்று காரியமாமோ அது சடமா மாகலின், அந்தக்கரணமும் இந்திரியங்களுஞ் சடமாம்; அவைகளால் யாதொரு வஸ்துவும் பிரகாசியாது; ஆதலால், யாதொரு ஆன்மா சர்வத்தையும் பிரகாசிப்பிக்கின்றதோ அது பிரகாசரூபமாம்; ஆன்மா பிரகாசரூபமன்று பின்னையோ சடமாம், அதன்கண் ஞான குணமுண்டு அந்த ஞானத்தால் ஆன்மாவும், அநான் மாக்களும்பிரகாசிக்கின்றன வெனின்:—இங்ஙனங் கூறு நிர்பவரை ஆன்மாவின் ஞானகுணம் நித்தியமா? அல்லது அநித்தியமா என்று வினவுவாம்; நித்திய மெனின்:—ஞானம் ஆன்மாவின் சொரூபமென்றே சித்தித்தது. என்னை? இது நியமம்: யாதொன்று ஆன்மாவின் வேறே அஃதநித்தியமாம்.

* வாழ்வு=இன்பம்.

ஞானத்தை ஆன்மாவின் வேறாக வங்கீகரிக்கில், அநித்தியமேயாம்; ஆதலால், நித்தியமாக வொப்பி ஆன்மாவின் வேறாக ஞானமுண் டென்னல் பொருந் தாது. அநித்தியமாக வங்கீகரிக்கில், கடாதிகள் போலுஞ் சடமாம்; யாதொன்றநித்திய வஸ்துவாமோ அது சடமாம்; ஆதலால், ஞானம் அநித்தியமென்னல் பொருந்தாது. பின்னையோ வெனின்:—ஞானம் நித்தியமேயாம்: அந்நித்தியமான ஞானம் ஆன்மாவின் சொரூபமே; அநித்தியமென் றங்கீகரிக்கில், ஆன்மாவின்கண் ஞானம் ஓர் போதிருப்பதும், ஓர் போதிராததுமாம்; ஆதலால், ஞானம் ஆன்மாவின் வேறுமாம்: ஞானம் நித்தியமென் றங்கீகரிக்கில், வேறாகாது. யாதொன்று குணமாமோ அது குண முடையதன்கண் ஓர்பொழு திருப்பதும், ஓர்பொழு திராததுமாம்; அஃதெங்ஙன மெனின்:—வஸ்திரத்தின்கண் நீலாதி குணங்கள் ஒருகா லிருப்பதும், ஒருகா லில்லாமற் போவதும் போலாம்; அப்படிப் போகாமல் ஞானம் நித்தியமா யிருத்தலால், ஆன்மாவின் சொரூப மென்றே கொள்ளற் பாலதாம்.

ஞானத்தை அநித்திய மெனின்:—இந்திரியம், அல்லது அந்தக்கரணம இவைகளால் ஞானம் உற்பன்ன மாயிற்றென்று சொல்லல்வேண்டும்; அது கூடாது. என்னை? சுழுத்தியின்கண் இந்திரியாதிக ளில்லாதிருக்கவும் சுகத்தின் ஞானம் உண்டாகின்றது; அஃதுண்டாக வேண்டுவதில்லை; சுழுத்தியின்கண் சுகத்தின் ஞானம் அங்கீகரிக்க வில்லையாயின், விழித்து நான் சுகமாக நித்திரை செய்தேனென்று சுழுத்திச சுகத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது; அஃதுண்டாக வேண்டுவதில்லை. யாதொருவஸ்துவின் ஞானம் பூர்வமுண்டோ அதன் ஸ்மிருதி உண்டாகின்றதே யல்லாமல், அஞ்ஞாத வஸ்துவின் ஸ்மிருதி உண்டாகின்ற தில்லை: சுழுத்திச் சுகத்தின் ஸ்மிருதி விழித்த பொழுதுண்டாகின்றது; ஆதலால், சுழுத்தியின்கண் சுகத்தின் ஞானம் உண்டாயிருக்கின்றது; அந்த ஞானத்திற்கு ஜநகமாக இந்திரியாதிகள் சுழுத்தியின்கண் இல்லை; ஆதலால், ஞானம் நித்தியமாம்: ஞானத்தை விடுத்து ஆன்மா ஒருபொழுது மிருக்கவில்லை; ஆதலால், ஞானம் ஆன்மாவின் சொரூபமாம். எப்படி உஷ்ணத்தன்மையை விடுத்து அக்கினி ஒருபொழுது மிராமையால் உஷ்ணத்தன்மை அக்கினியின் சொரூபமோ அப்படி ஞானமும் ஆன்மாவின் சொரூபமாம். யாதொன்று ஆகமாபாயியாமோ அது குணமாகும்; உஷ்ணத்தன்மையும், ஞானமும் ஆகமாபாயியல்ல; ஆதலால், முறையே அக்கினி, ஆன்மா இவைகளின் சொரூபங்களாம்: யாதொரு வஸ்து ஒருகா லிருந்து ஒருகாலிராதோ அது ஆகமாபாயி யெனப்படும்; உற்பத்தியும், விநாசமும் அந்தக் கரணத்தின் விருத்திக் குளவாகாநிற்கும்: ஞானத்திற்கில்லை. ஆன்ம சொரூபமாகிய யாதொரு ஞானமுண்டோ அது விஷய வியவகாரத்திற் கேதுவல்ல; மற்றெது ஏதுவெனின்:—ஞானசகித விருத்தி, அல்லது விருத்தியின்கண் ஆரூடஞானம் வியவகாரத்திற் கேதுவாம்: இஃது அவச்சேதவாதத்தின் கொள்கை. ஆபாசவாதத்தில் ஆபாசசகித விருத்தியால் வியவகாரமாம். ஆபாச வாயிலாக அல்லது, நேரே விருத்திவாயிலாக ஆன்மசொரூப ஞானத்தாலேயே சர்வ வியவகாரங்களும் உளவாம்; இல்லையாயின் உள

வாகா ; இவ்வாறு, ஆன்மா சர்வப்பிரகாசக ஞானசொரூபமாக் இருப்பதால், "வேறுபா டறிதல் சித்தாம்" என்றார்.

(253) ஆன்மா ஆனந்தரூபமாம் ; அல்லவெனின்:—விஷயசம்பந்தத்தால் யாதொரு சொரூபாநந்தத்தின் பாநமுண்டாகின்றதோ அஃதுண்டாக வேண்டுவ தில்லை. விஷயத்தின்கண் ஆநந்த மில்லை ; உண்டெனின்:—யாதொரு விஷயத்தால் எந்தப் புருஷனுக்குச் சுகமுண்டாமோ அதனாலேயே அந்நியனுக்குத் துக்க முண்டாகின்றது. அஃதெங்ஙன மெனில்:—அக்கினியின் பரிசத்தால் அக்கினி கீடத்துக்கும், சர்ப்பசிம்மங்களி னுருவங்களைக் காண்டலால் * சர்ப்பணி, சிம்மனிகளுக்கும் ஆநந்தமுண்டாகின்றது; அஃதுண்டாக வேண்டுவதில்லை; சித்தாந்தத்திலோ அக்கினி கீடத்துக்கு அக்கினியின் பரிசவிச்சை யுண்டாமேல், அப்பொழுது சொரூபாநந்தத்தின் பாநமுண்டாகிறதில்லை ; அக்கினி சம்பந்தத்தால் க்ஷணமாத்திரம் இச்சைநீங்கி நிச்சல புத்தியின்கண் சொரூபாநந்தத்தின் பாநமாகின்றது ; அந்நியபுருஷனுக்கு அக்கினி சம்பந்தத்தி னிச்சையில்லை; பின்னையாதுண் டெனின்:—அந்நிய பதார்த்தத்தி னிச்சை புண்டு; அவ்வன்னிய பதார்த்தத்தி னிச்சை அவற்றானன்றி அக்கினி சம்பந்தத்தா னிவிர்த்தியாகாது. ஆதலால், அவனது சஞ்சல வந்தக்கரணத்தின்கண் அக்கினி சம்பந்தத்தால் ஆநந்த முண்டாகமாட்டாது. சங்கை :—யாதொரு இச்சாரூபமான அந்தக்கரணத்தின் விருத்தியுண்டோ அது அவ்விஷயப் பிராப்தியால் நாசமாய் விட்டது ; அந்நியவிருத்திக்கு யாதொரு நிமித்தமு மில்லை ; ஆகலின், அந்நிய விருத்தி உற்பத்தியாகவில்லை. விருத்தி யின்றிச் சொரூபாநந்தம் பாநமாகாதாகலின், விஷயத்திலேயே ஆனந்தமுண் டெனின் :—அது கூடாது. என்னை ? இச்சாரூப அந்தக்கரணத்தின் விருத்தி அபாவமாயிருக்கின்ற துண்மைதான் ; அவ்விச்சாரூபவிருத்தி அபாவமாகா திருக்கினும் அஃதிராஜதமாகலின், அதன்கண் ஆநந்தம் பிரகாசமாகாது ; ஆநந்தத்தின் பிரகாசம் சாத்வீகவிருத்தியின்கட் டோன்றும் : சத்துவகுணத்தால் ஞானமுண்டாமென்பது நியமமாகலின். வாஞ்சிதபதார்த்தம் கிடைத்து அதை விஷயம் பண்ணும்பொருட்டு யாதொரு அந்தக்கரணத்தின் ஞானரூப விருத்தியுண்டாகின்றதோ அது சாத்வீகந்தான்; அச்சாத்வீக விருத்தியில் ஆநந்தம் பாநமாம்: ஆயினும், அந்த ஞானரூப விருத்தி பகிர்முகமாக விருப்பதால் அதன் பிருஷ்டபாகத்திலுள்ள அநுபஹிதசேதன சொரூபாநந்தத்தை அது கவராது ; ஆதலால், விஷயவுபஹிதசேதனரூபாநந்தம் அவ்விருத்தியிற் பாநமாகின்றது; அவ்விஷய வுபஹிதசேதனம் ஆன்மாவின் வேறல்ல ; ஆகலின், ஆன்மாநந்தமே விஷயத்தில் பாநமாகின்றதென்று சொல்லப்படுகின்றது ; அந்த ஞானரூப விருத்தியில் விஷயத்தோடுகூட நேத்திராதி இந்திரியங்களின் சம்பந்தமே நிமித்தமாம்; அல்லது, யாதொரு ஞானரூப பகிர்முக விருத்தியுண்டோ "அதனினு மந்நியமாக அந்தர்முக விருத்தி யுண்டாகின்றது," அதன்கண் அந்தக்கரண வுபஹிதசேதன

* சர்ப்பணி, சிம்மனி என்பன, சர்ப்பசிம்மங்களின் பெண்பால்.

ரூப ஆநந்தமே பாநமாகின்றதென்னும் இது உத்தம சித்தாந்தமாம்; அவ்விருத்தியி னுற்பத்தியில் இச்சைமுதலியவற்றி னபாவமே நிமித்தமாம்;இச்சைமுதலியவையின்றி ஏகாந்தத் துதாசீனனாயிருக்கும் புருஷனுக்குப் பகிர்முக ஞானரூபவிருத்தி யுண்டாகாதிருந்தும் ஆநந்தம் பாநமாகின்றது; ஆதலால், இச்சை முதலியவற்றின் அபாவரூப நிமித்தத்தால் ஆநந்தத்தைக் கவர்வதாய் அந்தர்முக விருத்தி எப்படி யுண்டாகின்றதோ அப்படி வாஞ்சித விஷயலாபத்தால் உளதாகும் இச்சை முதலியவற்றி னபாவத்தால் ஞானத்திற்குப் பின்னர் அந்தர்முக விருத்தியுண்டாய் அதனால், அந்தக்கரண வுபகித வாநந்தமே கவரப்படுகின்றது; அச்சொரூபாநந்தத்தின் கவர்ச்சியும், விஷயத்தின் ஞானமும் அத்தியந்தம் அவ்வியவஹிதமா யிருத்தலின், புருஷனுக்கு யான் விஷயத்தில் ஆநந்தமநுபவித்தேனென்னும் பிராந்தி யுண்டாகின்றது. பிரதம பட்சத்தினும் இப்பட்சம் உத்தமமாம். எங்ஙனே? விஷய ஞானரூப விருத்தியினான் அந்தக்கரண வுபகித ஆநந்தபாநம் கூடாது; கூடுமாயின், மார்க்கத்திற் செல்லுழியுளதாகும் விருட்சத்தின் ஞானரூப விருத்தியும் சாத்துவிகமே யாதலால், அதனானும் விருட்சவுபகிதசேதன சொரூபத்தின் ஆநந்தம் பாநமாதல்வேண்டும். அப்படியே சர்வ ஞானத்தாலும ஞேயவுபகித சொரூபத்தின் ஆநந்தம் பாநமாதல் வேண்டும்;அங்ஙனமாகாமல் ஆன்மசொரூபத்தின் ஆநந்தமே பாநமாவதால், "மகிழ்நாம நுகர்போது சுகமாது மநுபூதி வாழ்வென்ப நாதநுகம்" என்றார். இவ்வாறே வாசிட்டத்தும சத்தா,

"அறிவானு மறிபொருளு கூடியகட்டு மாவிலெழு மறிவானந்து, பிறியாது வாவாயநத துவதந்தமுநத தாமதனைப் பேணல் செய்வாம்"—என்றனர்.

திரிகாலத்தினும் அபாத்தியமா யிருப்பதே சத்திலக்கணமென்றும்,சர்வப்பிரகாசக ஞானசொரூபமாக இருப்பதே சித்திலக்கணமென்றும், விஷய சம்பந்தத்தாற் சாத்துவிக அந்தக்கரண விருத்தியின்கண் எழாநிற்குஞ் சுகமே ஆநந்தத்தி னிலக்கணமென்றும் கூறியதாம். (111)

(254) [இவ்வாறு சச்சிதாநந்த விலக்கணமுடைய பிரமமே நீ யெனச் சுருதிகளாலும், குரவனாலும் உபதேசிக்கினும், நீ யென்றும் சம்சாரியெனும் புருஷனுடைந்து அவற்றை னநுபவமெவ்வாறு பெறலாமெனச் சீடன் வினவுதல்.]

நாசமுறு சீர்த்தி நாதருள ரிதன்ன
சால்வேதமா மானமாம்
நீசச்சி தாநந்த மென்றிடு மாசிரியர்
நீபிரம மாகுமென்றிடும
பாசற்ற சச்சிதா நந்தந னென்னவிவன்
மனிலும பவமென்பதென
கோசப்பரங்கிளைமி யாத்தந்த சாகருமத்
குஞ்சரக் குருநாதனே. (112)

இ-ள். நாசச் சரீரத்து இருக்கும் சரீரிதனை=நாசத்தையுடைய சரீரத்தின்கண் (அபிமானியாய்) இருக்குஞ் சரீரியை, நால்வேத மாவாக்கியம்=நான்கு வேதங்களிலுள்ள நான்கு மஹாவாக்கியங்களும், நீ சத் சித் ஆநந்தம் என்றிடினும்=நீயே சச்சிதாநந்தப் பிரஹ்மமென்றுபதேசிக்கினும், ஆசிரியர் நீ பிரமம் ஆகும் எனினும்=நீயே சச்சிதானந்தப் பிரஹ்மமென்று ஆசிரியருபதேசிக்கினும், மாசு அற்ற=குற்றமற்ற, சத்சித் ஆநந்தம் நான் என்ன=சச்சிதாநந்தப் பிரஹ்மமே நானென்றநுபவிக்க, இவன் மன்னும் அநுபவும் எங்ஙனே=சரீரியாகிய இப்புருஷனிடத்தே நிலைபெற்ற (அச்சச்சிதாநந்தங்களின்) அநுபவமெவ்வாறு (உள்ளன?), கோசப்புரங்களை=பஞ்ச கோசமாகிய நகரங்களை, இடித்துத் தகர்க்கும்=இடித்துப் பொடியாக்கும், மதகுஞ்சரக் குருநாதனே=(ஞான) மதயானையாகிய குருபரனே. எ-று.

பஞ்சகோசத்தில் நானென்னும் புத்திரூப அபிமானத்தைச் சுருதி, யுத்திகளால் அபாவமாக்குவதை, "இடித்துத் தகர்க்கும்" என்றார். "குஞ்சரம்" எ-து, உருவகம். (112)

[சரீரியினகண்ணுள்ள சச்சிதாநந்த வநுபவம் யாவாகு மோப்ப இரண்டுசெய்யுளாற் கூறுகின்றார்.]

ஜென்மாந்தரஞ்செய்த வினைகளுட றருமெனிற்
செல்கால மிவனுண்டலோ
கன்மானு பவநரக சொர்க்கமெனில் வருகின்ற
காலத்து மிவனுண்டலோ
உன்மாத யாதனை யுடல்கடவு ளுடன்மனுட
வுடன்மாறி மாறியழியும்
தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு
சத்தென்ப தொக்குமகனே. (113)

இ-ள். ஜென்மாந்தரம் செய்த வினைகள்=அந்நிய ஜநநங்களில் (தான் மனவாக்குக் காயங்களாற்) செய்த கர்மங்கள், உடல் தரும் எனின்=தேகத்தைத் தருமென்று சொல்லின், செல்காலம்=இறந்த காலத்தும், இவன்=இச்சரீரி யென்பவன், உண்டலோ=உண்டல்லவா, கன்ம அநுபவ நரக சொர்க்கம் எனில்=(நிகழ் காலத்தில் இவன் செய்யாநின்ற) பாவ புண்ணியத்திற்கு அநுபோகமாக (முறையே) நரகமும், சொர்க்கமும் வருமென்று சொல்லின், வருகின்ற காலத்தும்=எதிர்காலத்தும், இவன் உண்டலோ=இச்சரீரி (யாதனா சரீரந் தேவசரீரங்களைப் பரித்துக் கொண்டு) உளனல்லவா, உன்மாத யாதனை உடல்=சித்தவிப்பிரமைக்குக் காரணமான யாதனா சரீரமும், கடவுள் உடல்=தேவ சரீரமும், மனுட உடல்=மநுஷ சரீரமும், மாறி மாறி அழியும்=(அநேகமாய்) வேறு வேறாயுண்டாய் நசிக்கும், தன் மாய உடல் கெடினும்=தனது மாயாமய சரீரங்களுநசமர்யினும், இவன்

இருப்பது கொண்டு=இச்சரீரி (திரி காலத்தும் அபாத்தியமாய்) இருப்பதால், மகனே சத்து என்பது ஒக்கும்=மைந்தா (இவன்) சத்தென்று சொல்லுவது (யாவர்க்குஞ்) சம்மதமாம். எ - று.

தரித்திரன், மகாராஜன், கருமி, பக்தன், முமுட்சு இவ்வைவருடைய வசனத்தால், "சென்மாந்தரஞ்செய்த வினைகளுடனுமெனிற் செல்காலமிவனுண்டலோ, சன்மாந்த பவநரக சொர்க்கமெனில் வருகின்ற காலத்துமிவனுண்டலோ" எனினும் ஆம்; இவ்வைவர் வசனம் வாசுதேவமனனத்தில் சச்சிதாநந்த நிருபணத்திற் காண்க. (113)

இருளாக மூடுஞ் சுழுத்தியி லிராத்திரியி
லிரவிசுட ரற்றபொழுது
மருளாம லிருளையும் பொருளையுந் தெரிகின்ற
வகைகொண்டு சித்தாகுமே
பெருவாழ்வு மிக்கதா னேதன்னி டத்தனிற்
போராத பிரியமதனால்
அருகாத பிரியஞ்சு கத்தில்வரு மாதலா
லாநந்த மாமைந்தனே (114)

இ - ள். இருள் ஆக மூடும் சுழுத்தியில்=(மறைநிசி) இருள்போல (யாதொரு விஷயமுந் தோன்றாமற்போக) மறையா நிற்குஞ் சுழுத்தியின்கண், மருளாமல்=மயங்காமல், இருளையும் பொருளையும்=(அவித்தையாகிய) இருளையும், (அதிற் பிரதிபலியா நிற்கும் ஆநந்தமாகிய) பொருளையும், இரவி சுடர் அற்றபொழுது=சூரிய(ன் முதலியனவாகிய) பிரகாசங்களொழிந்த (காடாந்த கார) சமயத்தில், இராத்திரியில்=இரவில் (உளதாகுஞ் சாக்கிரத்தின்கண்), மருளாமல்=மயங்காமல், இருளையும் பொருளையும்=காடாந்த காரத்தையும் (அதிற் சாமான்யமாகப் பரிசத்தாற் றோன்றா நிற்குங் கடபடாதிப்) பொருள்களையும், தெரிகின்ற வகைகொண்டு=அறிகின்ற தன்மையால், சித்து ஆம்=சித்தென்பது நுபவமாம், பெருவாழ்வுமிக்க=பேராநந்தத்தால் கிரதிசயமாகிய, தானே தன்னிடத்தினில்=தான்றானே தன்னிடத்து, போராத பிரியம் அதனால்=மாறாத பிரேமை வைத்திருப்பதால், அருகாத பிரியம்=குறைவற்ற பிரியமானது, சுகத்தில் வரும் ஆதலால்=(யாவர்க்குந் துக்கத்தின்கணுண்டாகாமல்) சுகத்தின்கணுண்டாவது உலகிற் பிரசித்தமாதலால், மைந்தனே, ஆநந்தம் ஆம்=இவன் ஆநந்தமென்பது நுபவமாம். எ - று.

ஓர் விருட்சத்தி னின்று முண்டான பீஜம் அந்நிய விருட்சத்திற்குக் காரணமாவதல்லது, தன்னையுண்டாக்கிய விருட்சத்திற்குக் காரணமாகாதது போல வர்த்தமான தேகத்தினின்று முண்டாகாநின்ற வினைகள் மேல்வரும் ஜநநத்திற்குக் காரணமாவதல்லது, அச்சநநத்திற்குக் காரணமாகாமையின், "ஜென்மாந்தரஞ்செய்த வினைகளுடனும்" எ - ம், இப்படி உத்தரோத்தர

ஜநநத்திற்குப் பூர்வ பூர்வவினைகள் காரணமாக முன்சென்ற அநேககோடி கற்பங்களிலும் ஆன்மா சரீரமுடையவனாக இருந்திருத்தலின், "செல்கால மிவனுண்டலோ" எ-ம், இச்சநநத்தில் சிரவணாதிப்பிரயத்தனத்தால் பிரஹ்மான்மவயிக்கிய ஞானத்தைப் பிரதிபந்தரகிதமாக அடையாவிடின், பூர்வ கர்மத்தின் பயனாக இச்சரீரம் வந்ததுபோல இப்போது செய்யுங் கருமத்திற்குப் பயனாக இன்னும் அநேககோடி ஜநநங்கள் வருமாகலின், அவைகளைத் தரித்துக்கொண்டு இனிவரும் அநேககோடி கற்பங்களிலும் ஆன்மா இருப்பதால், "கன்மாநு பவநரக சொர்க்கமேனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ" எ-ம், முன் வந்ததும், இனிவருவதுமாகிய அநேககோடி சரீரங்களழிந்தும் சரீரி யழியாமையின் இவன் சத்தெனல் யாவர்க்கு மொப்ப அநுபவமா மென்பார், "யாதனு வுடல்கடவு ளுடன்மநுட வுடன்மாறி மாறியழியுந், தன்மாய வுடல்கெடினு மிவ னிருப் பதுகொண்டு சத்தென்ப தோக்தும்" என்றுங் கூறினர். "இரவி" என்பது, உபலட்சணமாகலின் வாகியப்பிரகாசங்க ளனைத்துங்கொள்க. "இரவிகூட ரற்றபொழு தீராத்திரியில்" என்றதால், காடாந்தகார சமயத்தில் என்பதும், "மரு ராம விருளையும் பொருளையுந் தெரிகின்ற வகை கொண்டு" என்றதால், சாக்கிரத்தின்கண் என்பதும் வருவிக்கப்பட்டன. வாகியவொளிகளற்ற சாக்கிரமாவது மழை நாளிரவிற் காடாந்தகார சமயத்திலுளதாகுஞ் சாக்கிரம், அல்லது இரவிற்கபாட முதலியவை பந்திக்கப்பட்டுத் தீபமணைந்த அந்தர்க்கிரகத்தி லுளதாகும் சாக்கிரமெனினுமாம். இங்ஙனம் கூறியது பிரகாசாந்தர அபேட்சை யின்றியே ஆன்மா சொப்பிரகாச சித்துருபமா யிருக்கும் அநுபவம் விளக்குதற் பொருட்டென்க. சூரியன், சந்திரன், அக்கினி முதலிய பிரகாசங்களொழிந்த சாக்கிரத்தின்கண் நேத்திரமுதலிய இந்திரிய வாயிலாக இருண் முதலியவற்றைக் கோசரிக்கும் அந்தக்கரண விருத்தியும், சுழுத்தியின்கண் அஞ்ஞான கோசரம், ஆநந்த கோசரமாகிய அவித்தியா விருத்தியும் அக்கினியானது உருபபதார்த்தங்களைப் பிரகாசித்தற்குத் திரி முதலியவைபோல உபாதிமாத்திரமா யிருக்கின்றன. புத்திக்கு ஞான மொருகாலு மின்றென்று ஆன்ம போதத்திற் பூசியபாதரான ஸ்ரீ-சங்கராசாரியரால் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது சாக்கிரம், சுழுத்தி இரண்டிற்கும் மத்தியமான சொப்பனத்தின் கண்ணும் ஞாதா, ஞான, ஞேய ரூபமான திரிபுடிகளையும் பிரகாசாந்தரங்களை யபேட்சியாமலே ஆன்மாவாகிய தான் பிரகாசிப்பிக்கின்றதும் இவன் "சித்து" என்பதற் கநுபவமா மெனக்கொள்க. யானெப்போது மிலனாகாமல், உளனாதல வேண்டும் என்றிவ்வாறான பிரேமை ஆன்மாவின் கண் யாவர்க்குமுளது; அந்நியங்களில் யாதொரு பிரேமை யுண்டாமோ அதுவும் தன் பொருட்டேயாம்: ஆன்மாவின் கணுள்ள பிரேமையோ அந்நியத்தின் பொருட்டன்று; இப்படி ஆன்மாவின் கண்ணே பரமமான பிரேமை யிருத்தலால் இச்சரீரி, "ஆநந்தம்" என்பது அநுபவமா மென்றறிக.

இதற்கு. உ-ம், பிரமகீதை,

"சீவ னன்று புரமூன்றிற் சித்தா மவனே விளையாடு
மேவு மெல்லா மெய்ப்போல வவனால் விளைத லான்மெய்யத்

*தேவ னேசான் முதலினுற் சித்து மவனே யத்துவிதன்
யாவுந் தானு தலினெதினுந் தனேயே விரும்ப லாலின்பன்."—எ-ம்,

"இந்தப் புரங்க ளொருமூன்று மிவன்ற னிடையே யிறப்பதுநிர்த்
தொந்தப் புருட னொருகாலு நசியா னுதலாற் சொல்லு
மந்தப் பரம னேயவன்மு னறியா மையினு லப்பானேப்
பூந்தப்படுமோர் சிவனெனப் பார்ப்பார் பவத்தே யழைக்கின்முர்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்முற் காண்க.

"இருளாக மூடுஞ்சு ழுத்தியி லிராந்திரியி லிரவிசுட ரற்றபொழுது"
எ-கு, உ-ம், பிரமகீதை,

"காண்டல் கேட்டல் கருதல்செ யப்படு வானலன்முன்
காண்டல் கேட்டல் கருதல்செ யப்படு வானுெருத்தன்
றாண்டு சோதியி னுலனல் சோம னருக்கனெல்லா
மாண்ட போதும் விளங்கும னக்கரி யாகிநின்றே."—எ-ம்,

"சித்தமத் தமித்திடத் தபாவமுந் தெரிந்திடுஞ்
சுத்தநற் சுழுத்தியிற் றுப்க்குமாவை கண்டிடு
மத்தமித் தலும்பிறத் தலும்மிலா னமாவயா
வத்தைவிட் டகண்டமா யறிந்தபோ தடங்குவார்."—
எனவும் வரும். மற்றும் வருவனவற்முற் காண்க. (114)

(255) [சுகத்திற் சாதனரூபமான அந்நபானுதிகளிடத்துப் பிரீதி காணப்படுவதுபோல ஆன்மாவிடத்தும் பிரீதி காணப்படுதலின், ஆன்மாவும் அந்நபானுதிகள் போலச் சுகசாதனமாகுங்கொலெனு வருமாசங்கையை அந்நபானுதிகளிடத்துப் போக சாதனத்தன்மை நுபவுபாதி யிருத்தலின், அவை சுக சாதனமாம் ஆன்மாவி னிடத்து அஃதில்லாமையின், ஆன்மா சுக சாதனமல்ல வென்னும் அபிப்பிராயத்தாற் பரிகரிக்கின்றர்.]

அன்னபா னுதிசுக சாதனம தாதையா
லார்க்கும் வெகு பிரியமாகும்
இன்னவா முன்மாவு மாநந்த சாதன
மெனக்கருதல் பொருளல்லவே
சொன்னவான் மாவையொரு சுகசாத னங்களொடு
சொல்லுவா யாகின் மகனே
உன்னதா நந்தம்வே றேதநுப் விப்பதா
ருபயவான் மாவுமுளவோ. (115)

இ-ள். அன்னபான ஆதி=அந்நபான முதலியவை, சுக சாதனமது ஆகையால்=சுகத்திற்குச் சாதனமா மாதலால், ஆர்க்கும் வெகு பிரியம் ஆகும்=யாவர்க்கும் அவை யதிகப்பிரியமாம், இன்ன ஆறு=இந்தப்படி, ஆன்மாவும் ஆநந்த சாதனம் என=ஆன்மாவும் ஆநந்தத்திற்குச் சாதனமா மென்று, கருதல் பொருள் அல்ல=எண்ணு நிற்பது சுருதி விரோதமாம், சொன்ன ஒரு ஆன்மாவை=(சுக ரூபமென்று சுருதி) கூறிய ஏகமானவான்மாவை, சுக சாதனங்களொடு=(அந்நபானாதிக ளென்னுஞ்) சுகசாதனங்களோடு சேர்த்து, சொல்லுவாய் ஆகின்=(இதுவும் சுக சாதனமா மென்று) கூறுவையாயின், மகனே, உன்னது ஆநந்தம் வேறு எது=உன்னுடைய (அநுகூலவிஷயமான) ஆநந்தம் வேறே எது, அநுபவிப்பது ஆர்=அதனை யநுபவியாநின்ற (கர்த்தா வேறே) யார், உபய ஆன்மாவும் உளவோ=(விஷயபாவம், விஷயீபாவமாக) இரண்டான்மாவு முண்டா. எ-று.

ஒரே ஆன்மாவுக்கு ஒரு காலத்தில் * உபகாரியத்தன்மை, † உபகாரகத் தன்மையென்னும் இரண்டு தர்மம் விரோதமா மாகலின், அங்ஙனங் கூறுதல் கூடாதென்பார், "உன்னதா நந்தம்வே றேதநுப விப்பதா ருபயவான் மாவு முளவோ" என்றார்.

(256) [ஆன்மாவுக்கு அந்நாதிகள்போலச் சுகசாதனத்தன்மையில்லையாயினும், சுகம்போலப் போக்தாவி னுபகாரத்தன்மை யிருக்கலாமே யென்று சங்கித்து அவத்து நிரதிசயப் பிரேமைக்கு விஷயத்தன்மை யிருப்பதால் அங்ஙனங் கூறுகிற்பது பொருந்தாதென்று பரிகரிக்கின்றார்.]

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும்
வெகுபிரிய மான் மாவிலாம்
விடயசுகம் வருபிரிய மாறிவரு மான்மாவில்
வெகுபிரிய மாறாது காண்
விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவை
விடுவதெவர் கொள்வ தெவர்பார்
விடயசுக போகங்கள் விடுமவனை யவனால்
விடப்படா தொரு நாளுமே (116)

இ-ள். விடய சுகமதில்வருதல் பிரியமாத்திரம் ஆகும்=விஷயஜந்ரிய சுகத்தின்கண் வாராநிற்பது பிரீதிமாத்திரமேயாம், (நிரதிசயப்பிரீதியன்று;) ஆன்மாவில் (வருதல்) வெகு பிரியம் ஆம்=ஆன்மாவின்கண் வாராநிற்பது நிரதிசயப்பிரீதியாம்; (ஆதலால், விஷய ஜந்நியசுகம் போலல்ல), [ஏதனாலெனின்] விடய சுகம் வருபிரியம் மாறி வரும்=விஷயஜந்நிய சுகத்தின்கண் வாராநின்ற பிரீதி வியபிசாரத்தை யடைகின்றது; (ஒருகாலங்கியசுகத்திற் செல்கின்றது, அவ்விஷயத்திலேயே நியமமாக விருக்கவில்லை யென்றவாறு),

* உபகாரியத்தன்மை=கர்மம். † உபகாரகத்தன்மை=கர்த்தா.

ஆன்மாவில் மாறுது காண்—ஆன்மாவின் கண்ணுள்ள (பிரியம்) விய பிசாரத்தை யடைவதில்லை, (ஆதலால்) வெகு பிரியம்—(அவ்வான்மாவின் கண்ணுள்ள பிரீதி) நிரதிசயமாம், [விஷயப் பிரீதியின் வியபிசாரத்தைத் தரிசிப்பிக்கின்றா.] விடய சுகம் விடலும் ஆம் கொளலும் ஆம்—ஓர் விஷய ஜந்நிய சுகத்தை விடவுங்கூடும், (அந்நிய விஷயஜந்நிய சுகத்தைப்) பற்றவுங் கூடும், [இனி ஆன்மாவின் கண்ணுள்ள பிரீதி வியபிசார மில்லாதிருப்ப தைத் தரிசிப்பிக்கின்றார்.] ஆன்மாவை விடுவது எவர் கொள்வது எவர் பார்—ஆன்மா (தள்ளத் தக்கவனும், கொள்ளத் தக்கவனும் அலனாதலால்) அவனை விடத்தக்கவர் யாவர்? கொள்ளத் தக்கவர் யாவர்? பாராய், [பலிதத்தைச் சொல்லுகின்றா.] விடயசுக போகங்கள்விடும் அவனை—விஷய (ஜந்நிய) சுக போகங்களைத் தியாகஞ்செய்யும் அவ்வான்மாவை, அவனால் ஒருநாளும் விட ப்படாது—அவ்வான்மாவால் சதாத் தியாகம் பண்ணக்கூடாது. எ - று.

ஆன்மாவைத் தியாகஞ்செய்யவும், கிரகணஞ் செய்யவுங் கூடாமையின், அவனிடத்துள்ள பிரீதி எப்படி வியபிசாரத்தை யடையுமென்பார், "விடய சுக போகங்கள் விடுமவனை யவனால் விடப்படா தொரு நாளுமே" என்றார். (116)

(257) [உலகின்கண்ணே சிலா துவேஷத்தால் ஆன்மத் தியாகஞ் செய்யக் காணப்படுதலின், ஆன்மா தியாகத்தின் விஷய மன்றேனல் கூடா தென்றுவருஞ் சங்கையை அத்தியாகம் ஆன்மாவின் வேறா நேகத்தி ந விஷயமே யன்றி ஆன்ம விஷயமன்றேனப் பரிகரிக்கின்றா.]

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன் றா
விடுகிறே னென் றா சிலபோ்
சாகின் ற படியினாற் றன்னையே தான்கொன் று
சாவனெனல் சங்கை யலவே
தேகத்தை க்கொல்லு மவனால் விடப்பட்ட
தேகமவ னல்லன் மகனே
ஆகந்த னிற்கோப மலதுதனை யொருநாளு
மான்மாவெ றுப்ப தில்லையே. (117)

இ - ள். வேகின்ற கோபங்களால்—(இருட்சர் தானடைந்த தீயால் வேதல்போலத் தாம்) வேகாநின்ற (வியாதி) கோபங்களால், என்னை நான்—என்னையான், கொன்று விடுகிறேன் என்று—கொலைசெய்து தியாகம் பண்ணுகின்றேனென்று சொல்லி, சிலபேர்—சிலர், சாகின்றபடியினால்—(ஓரோர் காலத்தில் உலகில்) மரண மாகின்றமையின், தன்னையே தான் கொன்று—(ஆன்மாத்) தன்னையேதான் (விருச்சிகாதிகளிற்போலத் துவே ஷித்துக்) கொலைசெய்து, சாவன் எனல்—மரணரூபமான தியாக விஷய மாகின்றனனென்று சங்கித்தல், சங்கை அல—சங்கையன்று, [அத்தியாதி

னுலேனின்], தேகம் தனைக் கொல்லும் அவனும்=தேகத்தின் வேருயிருந்து அதனைக் கொன்று தியாகம் பண்ணுகின்ற யாதொரு சீவனுண்டோ அவனல், விடப்பட்ட தேகம்=தியாகம் பண்ணப்படுகிற தேகம், அவன் அல்லன்=அவனல்லனும், மகனே, ஆகம்தனில் கோபம் அலது=அந்நியமான தேகத்தின் கண் துவேஷமே யல்லாமல், தனை ஒரு நாளும்=தன்னை யொருபோதும், ஆன்மா வெறுப்பது இலை=தான் துவேஷிப்பதில்லை எ-று.

ஆன்மா அந்நாதிபோலப் பிரியவிஷயமும், விருச்சிகாதிபோலத் துவேஷ விஷயமும் அல்லனுயின், திரணுதிபோல உபேட்சா விஷயமாவனோவெனின்:—உபேட்சிப்பவனுடைய சொரூபமே யாவனுதலால் உபேட்சாவிஷயமு மாகான் என்றறிக. (117)

(258) [ஆன்மாவே பிரிய வஸ்துவாயின், வித்த, புத்திராதிகளும் பிரிய வஸ்துக்களாகத் தோற்றுவானேனென்று சங்கித்து ஆன்மாவைச் சமீபித்தது கொண்டு அவைகளில் தாரதம்மியமான பிரீதி தோன்றுகின்றதென்று அநுபவத்திற்காட்டி அவையனைத்தினும் ஆன்மாவில் அதிகப்பிரியமிருத்தலால் ஆன்மாவே முக்கியமென்று கூறுகின்றது.]

தாகப்படும்பொருளி லும்மகன் பிரியமாந்
   தனயனிலு முடல்பிரியமாம்
ஆகத்தி லும்பிரிய மிந்திரிய மாங்கரண
   மதனிலும் பிரியமுயிராம்
ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மான்மாவி
   லிந்தவான் மாமுக்கியம்
ஊகத்தி னற்கௌண மிந்தைதக் தாமுன்று
   மோரொன்றி லிகிவாகமே. (118)

இ-ள். தாகப்படும் பொருளிலும்=யாவரும் பிரியப்படுகின்ற தனத்திலும், மகன் பிரியம் ஆம்=புத்திரன் பிரியமாம், தனயனிலும்=புத்திரனிலும், உடல் பிரியம் ஆம்=அந்நமயமான தேகம் பிரியமாம், ஆகத்திலும்=தேகத்திலும், இந்திரியம் பிரியம் ஆம்=இந்திரியங்கள் பிரியமாம், கரணம் அதனிலும்=இந்திரியங்களிலும், உயிர் பிரியம் ஆம்=பிராணன் பிரியமாம், ஏகப் பிராணனிலும்=(மனாதி) ஒன்றுகிய பிராணனிலும், ஆன்மாவில் வெகுபிரியம்=ஆன்மாவிடத்து அபரப் பிரியமாம், இந்த ஆன்மா முக்கியம்=ஆதலின், இச்சாட்சியே பிரதானரூபமாம், [ஆயின், ஆன்மா புத்திரனுனன், புத்திரனில்லாதவனுக்குப் பரலோக மில்லை; இம்மநுட லோகமும் புத்திரனுலேயே சம்பாதிக்கப்படுகிறது, அந்நிய கர்மங்களா லில்லை என்று சுருதியின் கண்ணே புத்திரனைப் பிரதானமாகக் கூறியிருப்பது என்னையோவெனச் சங்கித்துப் புத்திராதி

கள் ஓரோர் சமயத்தில் முக்கியமாதல்பற்றி அங்ஙனங் கூறிற்றென்று கூறுகின்றார்;] ஊகத்தினால்=(சுருதிக் கவிரோதமாகிய) தர்க்க உத்தியால் (ஆராயின்), கௌணம் மித்தை கர்த்தா மூன்றும்=கௌணான்மா, மித்தையான்மா, கர்த்தான்மா இவை மூன்றும், மகனே, ஓர் ஒன்றில் அதிகம்=ஓரோர் சமயத்திற் பிரதானமாம். எ - று.

புத்திராதிகளினாபத்தை நிவாரணஞ் செய்தற் பொருட்டுத் தனத்தைச் செலவிடுதலால் பொருளின், மகன்பிரியம்; தனது தேகத்தை இரட்சித்தற் பொருட்டு ஓர்போது புத்திராதிகளையுந் தானஞ் செய்தலின், தனயனிலுமுடல்பிரியம்; இந்திரியங்களுக்குற்ற நாசத்தை நீக்குதற்பொருட்டுத் தாடனாதிகளாலுளதாகும் தேகத்தின் பீடையையும் அங்கீகரிக்கப் படுவதால் ஆகத்தின் இந்திரியம் பிரியம்; பிராணனீங்கும்படி வரில் அதைக் காத்தற் பொருட்டு இந்திரியங்களின் சேதனாதிகளையும் அங்கீகாரம் பண்ணப்படுதலின், கரணமதனின் பிரியமுயிராம்; இப்படித் தன முதல், பிராண பரியந்தமாகிய பதார்த்தங்களில் உத்தரோத்தர மதிகப் பிரியத்தன்மை சர்வாநுபவசித்தம். ஆன்மாவின் நிரதிசயப் பிரேமையின் விஷயத்தன்மை ஞானிகளநுபவசித்தமாம். பூர்வ பூர்வ பதார்த்தங்களினும், உத்தரோத்தர பதார்த்தங்களில் அதிகப் பிரீதியிருப்பது ஆன்மாவைச் சமீபித்திருத்தலின் என்க; அவை ஆன்மாவைச் சமீபித்திருக்குமாறு — ஆன்மாவின் ஆபாசம் சூட்சுமசரீரத்திலுண்டு; மற்றொன்றிலில்லை; ஆகலின், ஆபாசவாயிலாக ஆன்மாவுக்குச் சூட்சுமசரீரத்தோடு சம்பந்தமுண்டு. ஸ்தூல சரீரத்தோடு சூட்சும சரீரத்திற்குச் சம்பந்தமுண்டு; ஆகலின், ஸ்தூல சரீரத்தோடு சூட்சும சரீரவாயிலாக ஆன்மாவுக்குச் சம்பந்தமுண்டு. புத்திரனோடு ஸ்தூலசரீர வாயிலாகச் சம்பந்தமுண்டு; புத்திரனுடைய மித்திரரோடு புத்திர வாயிலாகச் சம்பந்தமுண்டு. இவ்வாறு உத்தரோத்தரம் யாதொன்று ஆன்மாவின் சமீபமோ அதன்கண் அதிகப் பிரீதியுளது. யாதொரு ஆன்மாவின் சம்பந்தத்தால் பதார்த்தங்களிற் பிரீதியுண்டாகிறதோ அவ்வான்மாவின்கண் முக்கியப் பிரீதியுண்டு: வேறொரு பதார்த்தங்களிலில்லை. புத்திரனுடைய மித்திரரிடத்துப் புத்திரனுடைய சம்பந்தத்தால் பிரீதியுண்டாகலின், புத்திரனிடத்தே அதிகப் பிரீதி பிதாவுக்கு இருப்பதுபோல ஆன்மாவினுடைய அதிக சமீபத்தில் அதிகப் பிரீதியுண்டாயிருப்பதால் ஆன்மாவின்கணுள்ளமைய சகலர்க்கும் பிரீதியிருக்கின்றது: அப்பிரீதி ஆநந்தத்திலும் துக்கத்தினபாவத்திலும் உண்டாகின்றது; வேறொன்றில் இல்லை. வேறுபதார்த்தங்களில் உண்டாகும் பிரீதி ஆநந்த நிமித்தமும், துக்கத்தினபாவ நிமித்தமுமேயாகலின், அவையன்றி வேறு பதார்த்தங்களில் பிரீதியில்லை. சகலர்க்கும் பிரீதிக்கு விஷயமான ஆன்மா ஆநந்தரூபமும், துக்கத்தினபாவரூபமுமாம்; சர்ப்பத்தினபாவம் இரச்சுரூபமாவதுபோலக் கற்பிதத்தினபாவம் அதிஷ்டான ரூபமாகலின், கற்பிதமாகிய துக்கத்தினபாவமும் ஆன்மரூபமாம்; ஆதலால், "இந்தவான்மா முக்கியம்" என்றார்.

இங்கே பிராண சத்தத்தால் பிராண வுபலட்சிதமான மனதுகொள்ளற் பாலதாம். என்னை? மனது சொரூபாநந்தத்தின் பிரதி விம்பத்தை யுடைத்தா யிருப்பதானும், இந்திரியங்களைப் பிரேரிப்பதால் அவைகட்குச சுவாமியாகலானும், நேத்திராதி இந்திரியங்களில் பீடை வந்ததுகொண்டு மனதுக்கு விட்சேப முண்டாகில் அப்போது இந்திரியங்க ளொழிந்து போமாயின் நான் சுகியாயிருப்பே னென்று மனோ விசிஷ்டனான புருஷன் சொல்வதனானும், மனத்தின் சஞ்சாரமும் அது தேகத்தினின்று வெளிப்படுதலும் பிராணனின்றிக் கூடாமையானும் பிராண சத்தத்தால் மனது கொள்ளற் பாலதாம் எனப் பஞ்சதசியின், * டிப்பணத்தி லெழுதப்பட்டிருக்கின்றது. வாசிட்டத்திலும்,

"தொடர்பமை பிராணனென்னின், மெய்ந்துயர்க்காய நூட்டனை நுழைந்து விசையுயி ரசைவாகும்"—

என வீதகவ்வியர் கதையில், 29 - வது செய்யுளில் மனதுக்கும், பிராணனுக்கும் அபேதங் கூறியிருக்கிறது; "ஏகப்பிராணனை" என்றது இக்கருத்தே பற்றியென்க. (118)

(259) [கௌணான்மா முதலியவற்றுள், இந்நாரணத்தில் இவ்வான்மா முக்கியமாமெனக் கூறுகின்றார்.]

கெடலான பொழுதிவன் காணிக்கு மகனான
கெவுணவான் மாமுக்கியம்
விடலாத வுடலம் பரிக்குநா ளுடலான
மித்தையான் மாமுக்கியம்
திடமான நன்மைகதி வேண்டினாற் சாத்திரச்
சிவவான் மாமுக்கியம்
சடமாயு முத்தியினின் ஞானவான் மெய்யான
தானேயான் மாமுக்கியம். (119)

இ - ள். கெடல் ஆனபொழுது=ஒருவனுக்கு மரணம் வந்தகாலையில், (தான் மரணமடையினும், புத்திராதிகள் எவ்வாறு தன முதலியவற்றால் சீவிப்பரோ அவ்வாறே எத்தனஞ் செய்கின்றதால்), இவன் காணிக்கு மகன் ஆன=இவன் பூமி முதலியவற்றை ஆளுதற்குரிய புத்திரனாகிய, கெவுண ஆன்மா முக்கியம்=கௌணான்மா பிரதானமாம், விடலாத உடலம் பரிக்கும் நாள்=விடத்தக்க தல்லாத அந்நமய கோசமான தேகத்தை (நான் இளைத்தேன், இனிபுஷ்டியைச் சம்பாதிப்பே னென்று புஷ்டிக் கேதுவான அந்நாதிகளைப் புத்திராதிகளைச் சேர்க்காமல் தானேயுண்டு) இரட்சிக்குங் காலையில், உடல் ஆனமித்தைத் ஆன்மா முக்கியம்=தேகமான மித்தையான்மாப் பிரதானமாம், திடம் ஆன நன்மைகதி வேண்டினால்=உறுதியான (அமிர்

* டிப்பணம்=உரையின் அரும்பதவுரை.

தாதிப்) பிரயோஜனத்தைபுடைய சுவர்க்கத்தையடைய விச்சி (த்துத் தேக போகங்களை வெறுத்தொழித்துக் கிருச்சிர சாந்திராயணாதிரூப தவத்தினை யாசிரி) க்கில் (அப்போது), கர்த்தன் ஆம் சீவ ஆன்மாமுக்கியம்=கர்த்தா வென்னுஞ் சத்தத்திற்கு வாசசிய மான (விஞ்ஞானமயகோசமாகிய) ஜீவான் மாப் பிரதானமாம், [அன்றியும், முக்தி யான்மாவினது ஸ்தலத்தை இனிக் கூறுகின்றார்.] சடம் மாயும் முத்தியினின்=அஞ்ஞானம், (அதன் காரியங்க ளனைத்தினோடும்) அபாவமாகாநிற்கும் மோட்ச தசையில், ஞான ஆன்மா ஆன தானே=சிதான்மாவாகிய தானே, மகா முக்கியம்=மிகவும் பிரதானமாம். எ - று.

சமதமாதி சாதனங்களைச் சம்பாதித்து மோட்சத்தை யடைவேனென் னும் புத்தியை எப்பொழு தடைவனோ அப்பொழுது குருவா லுபதேசிக்கப் பட்ட மஹாவாக்கிய விசாரத்தா லுண்டாகின்ற அபரோட்ச ஞானத்தால் நான் கர்த்தா முதலிய ரூபனல்லன், சச்சிதாநந்தரூபப் பிரஹ்மமாகிறேன் என்றிப் படிச் சிதான்மாவை யடைகின்றனன். இவ்வியவகாரத்தில் அவனுக்குச் சுத்த சேதனத்தன்மை ரூபமே உசிதமாம், கர்த்தா முதலிய ரூபத்தன்மை அங்கே உசிதமாக இல்லை யென்பார், "முத்தியினின் ஞானவான் மாவான தானே மகாமுக்கியம்" என்றார். சத்திய ஞானநந்தம் பிரஹ்மம், விஞ்ஞான மாநந்தம் பிரஹ்மம் * அநந்தரம், † அபாகியம், சம்பூர்ணம், ‡ பிரஞ்ஞான கனம் ஆன்மா என்னும் இவை முதலிய சுருதிகளால் ஆன்மாவுக்குப் பிரஹ்ம ரூபத்தன்மை யுண்டெனக.

(260) சப்தத்தின்கண் சத்திவிருத்தி, லட்சணா விருத்திகள் எப்படியோ அப்படி மூன்றாவதான கௌணீ விருத்தியுமுண்டு; எப்படிச் சத்திவிருத் தியா லுணர்த்தாநின்ற பொருளைச் சக்தி யார்த்தம், முக்கி யார்த்தம், வாச்சி யார்த்தம் என்றும், லட்சணாவிருத்தியா லுணர்த்தா நின்றபொருளை லட்சி யார்த்தம் என்றுங் கூறுகிற்பரோ அப்படிக் குண விருத்தியா லுணர்த்தாநிற் கும் பொருளைக் கௌணார்த்த மென்பர். பதத்தின் வாசசியார்த்தத்தில் யாதொரு குணமுண்டோ அக்குணமுடைய அவாசசியார்த்தத்தில் பதத்தின் கௌணீ § விருத்தியுண்டு. "சிம்மம் தேவதத்தா" என்னும் வாக்கியத்தில் சிம்மசப்தத்தின் வாசசி யார்த்தமான சிம்மமாகிய பசுவின் கண்ணுள்ள குரூரத் வம், குரூரத்துவ முதலிய குணங்களை யுடைய சிம்மபதத்தின் அவாச்சியார் த்தத்தில் சிம்மபதத்தின் கௌணீவிருத்தி யுண்டு; அப்படி ஆன்மபதத்தின் வாஸ்தவ வாச்சியார்த்தமோ சாட்சியாம்; ஆதலால், சாட்சி முக்கியான்மா வெனப் படும். சாட்சியின்கண் ணாரோபிதமாதலால், ஆன்ம பதத்திற்கு மித் தியா வாச்சியார்த்தம் லிங்கதேகமும், ஸ்தூலதேக முதலிய சங்காதங்களு மாம்; அச்சங்காதங்களுள் இக்லோக, பரலோக சம்பந்திகளான கர்மங்க ளில் பிரவிர்த்திரூபமான யாதொரு குணமுண்டோ அக்குணமுடைய ஆன்

* அநந்தரம்=அந்தரரகிதம். † அபாகியம்=வாகியரகிதம்.
‡ பிரஞ்ஞானகனம்=அதிசயஞானரூபம். § விருத்தி=சம்பந்தம்.

மபதத்தின் அவாச்சியமான புத்திராதிகளில் ஆன்மபதத்தின் கௌணீ விருத்தியுண்டு; அக்கௌணீ விருத்தியால் உணர்த்தாநின்ற புத்திராதி ரூபங்களான பதார்த்தங்கள் கௌணான்மா வெனப்படும். கள்ளனின் வேறான கட்டையைக்கள்ளனென்பது எப்படி மித்தையோ அப்படிப் பஞ்சகோசங்களை ஆன்மாவென்பது மித்தையாம். சர்வத்தினும் ஆந்தரமாகலின், சர்வத்திற்குஞ் சாட்சியாகிய ஆன்மா முக்கியவான்மா வெனப்படும் என்க. (119)

(261) [விஷயங்களிலுள்ள விருப்பு, வெறுப்பு, நொதுமல் என்னும் இவை நியமமாயிராமல் மாறுவபோல ஆன்மாவின் கண்ணுள்ள விருப்பு மாறாமையின், ஆன்மாவே ஆநந்தரூபமென்று ஆன்மாநந்தத்தை முடிக்கின்றார்.]

புலியுமநு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற்
புதல்வனெனி னும்வெறுப்பாம்
உலகிலிரு வகையுமல் லாதபுல் லாதியிலு
தாசீன மாமாதலான்
மலினமறு சின்மயன் பலவகையு மிப்படி
மகிழ்ச்சியில் விருப்பமிகழான்
அலகிலா நந்தவடி வாகுமுன் சொரூபத்தை
யாராய்ந்து பார்மைந்தனே. (120)

இ-ள். புலியும்=(வெறுப்பு விஷயமான) வியாக்கிரமும், அநுகூலம் எனில் இட்டம் ஆம்=(விநோதப்போர் புரிவதால் சுகத்திற்குச்) சாதனமாமாயின், (அப்போது) பிரிய விஷயமாம், பகைசெயில்=பிரதிகூலமான செய்கையை (த் தனக்குச) செயயில், புதல்வன் எனினும்=(அப்போது விருப்பு விஷயமான) புத்திரனாலும், வெறுப்பு ஆம்=வெறுப்பு விஷயமாம், உலகில், இருவகையும் அல்லாத=விருப்பு விஷயமும், வெறுப்பு விஷயமுமல்லாத, உதாசீன புல்ஆதியில்=நொதுமல் விஷயமான திரண முதலியவற்றில் (இருவகையும்) ஆம்=(தீக்காய்தன் முதலிய செய்கையில் அது பற்றுவித்தன் முதலியவற்றிற் குபகாரியாமாயின், அப்போது) விருப்பும், (நடத்தன் முதலிய செய்கையில் காலின் கண் ணழுந்தத் தைத்தன் முதலியவற்றால் அபகாரியாமாயின், அப்பொழுது) வெறுப்பு முளவாகாநிற்கும், மலினம் அறு சின்மயன்=சுத்த சின்மயனான ஆன்மா, பலவகையும்=பலதிறத்தும், இப்படி=(வியாக்கிரம், புத்திரன், திரணாதிகளில் விருப்பு, வெறுப்பு, நொதுமல்) இப்போது கூறியபடி நியமமாகவில்லாமல் நீங்காநிற்பனபோல, மகிழ்ச்சியல்=தன்னாநந்தத்தில், விருப்பம் இகழான்=ஒருபோதும் விருப்பம் விடாமலுடையனாகின்றான், ஆதலால், அலகில் ஆநந்த வடிவு ஆகும் உன் சொரூபத்தை=அபரிச்சின்ன ஆநந்தரூபமான உனது சொரூபத்தை, மைந்தனே, ஆராய்ந்து பார்=(தைத்திரீய சுருதியிற் கூறியபடி பஞ்சகோசத்தை வேறுபடுத்தி அவைகளுள்ளே), அநுபவித்தறிவாய். எ-று. (120)

(262) [இனி இவ்வான்மாநந்தந்தானே யோகாப்பியாசத்தால் முக்கியாநந்தமாக வெளிப்படுகிறதென்றும், சார்வபௌமாதியாநந்தங்கள் இதனது லேசமென்றும் தரிசிப்பித்தற்பொருட்டு ஆநந்தத்தின் பேதமித்தன்மைத் தெனச் சங்கித்துணர்த்துகின்றார்.]

மானஞ்சி றந்தகுரு நாதனே யாநந்த
வகைகளெத் தனையென்னிலோ
ஞானந்தி கழ்ந்தபிர மாநந்தம் வாசனா
நந்தம்விட யாநந்தமென்
றாநந்த மூன்றவித மெட்டுவகை யென்பர்சில
ரவ்வைந்து மிதிலடக்கம்
யானந்த வகைசொலக் கேண்மைந்த னேயெட்டு
மிஃதின்ன தின்னதெனவே. (121)

இ-ள். மானம் சிறந்த=பெருமை மிகுந்த, குருநாதனே, ஆநந்தவகைகள்=ஆநந்தத்தின் கூறுபாடுகள், எத்தனை என்னில்=எத்தனையென்று நீ வினவில், ஞானம் திகழ்ந்த பிரமாநந்தம்=தனது ஞானத்தாலேயே (சுழுத்தியின்கண்) விளங்குவதான பிரஹ்மாநந்தமும், வாசனாநந்தம்=(தாஷ்ணீம் ஸ்திதிக்கண் விஷயத்தி னநுபவமின்றி விளங்குவதான) வாசனாநந்தமும், விடயாநந்தம்=(வாஞ்சித்த விஷயத்தின்லாபத்தால் அந்தர்முக மனத்தின்கண் பிரதிவிம்பிக்கின்ற) விஷயாநந்தமும், என்று=என, ஆநந்தம் மூன்றுவிதம்=ஆநந்தம் மூவகையாம்; (இம்மூவகை யாநந்தங்களின் வேறாக இச்சகத்தின்கண் யாதொரு ஆநந்தமுமில்லை), எட்டுவகை என்பர் சிலர்=ஆநந்தமெண்வகை யென்பர் சிலபெரியோர், அவ்வைந்தும் இதில் அடக்கம்=அவர்கூறும் ஏனைய ஆநந்தங்களும் இம்மூவகை ஆநந்தங்களுள் அந்தர்ப்பாவமாம், எட்டும் இஃது இன்னது (இஃது) இன்னது என=எட்டினையும் இன்னவாநந்தம் இன்னநாமமுடையது, இன்னவாநந்தம் இன்ன நாமமுடையதென்று, யான்=நான், அந்தவகை சொல=அவ்வாநந்த வேறுபாடுகளேயும், அவற்றின் நாமவேறுபாடுகளேயுங்கூற, மைந்தனே கேள். எ-று.

(263) முக்கியாநந்தம், ஆன்மாநந்தம், அத்துவிதாநந்தம் இம்மூன்றும் பிரஹ்மாநந்தத்திற்கு வேறின்மையின், பிரஹ்மாநந்தத்தில் *அந்தர்ப்பாவமாம் என்னை? பிரஹ்மாநந்தந்தானே அதிவிவேகிக்கு யோகரூபவுபாயத்தால் முக்கியாநந்தமாகவும், மந்தப் பிரஞ்ஞையுடைய சிஞ்ஞானுக்கு ஆன்மாநந்த விவேகரூபவாயிலாகப் பரமப்பிரேமாஸ்பத வாநந்தமாகவும் வெளிப்படலானும், ஆன்மாவாகலாற் சஜாதீய மென்னும் கேவலான்மாவாகிய புத்திரபாரியாதிகளினும், அநான்மாவாகலின், விஜாதீயமென்னும் ஆகாசாதிகளினும் வேறு

* அந்தர்ப்பாவம்=உள்ளடங்கியிருப்பது.

ய்ச்*சத்வைதமான ஆன்மாநந்தத்திற்கு அத்துவிதீய முக்கியாநந்தத்தின்றன்மை கூடாதென்றுவரும் வாதியின் சங்கையைப்பற்றி தைத்திரீய சுருதியிற் கூறிய ஆகாசமுதற் றனது தேகபரியந்தமான சகத்து ஆநந்தத்தின் அந்நியமல்லாமையின், ஆன்மாநந்தத்துக்கு அத்துவிதீயப் பிரமத்தன்மை உண்டென்று இதற்கு முன்னூலான பஞ்சதசியிற் கூறியிருப்பதனாலும் சுழுத்தியின்கண் சுவப்பிரகாசமாயுள்ள பிரஹ்மாநந்தத்தில் முக்கியாநந்தம், ஆன்மாநந்தம், அத்துவிதாநந்தம் மூன்றும் அந்தர்ப்பாவமாம். இவர் யோகாநந்தத்தைப் பஞ்சதசியிற் கூறியபடி நிஜாநந்த மென்னாது முக்கியாநந்தமென்று இனிக்கூறுவது சிரத்தை முதலியவற்றின் வாயிலாக ஓர்பொழுது ஆநந்தத்தி னிச்சயத்தையுடைய புருஷன் உதாசீன காலத்திலுந் தோன்றுவதான யாதொரு ஆநந்தத்தின் வாசனையுண்டோ அதை யுபேட்சித்து முக்கியாநந்தத்திற் றற்பரனாய் அம்முக்கியாநந்தத்தையே பாவிக்கின்றனனென்று பஞ்சதசியிற் கூறியிருப்பதுகொண்டே என்க. [ஜந்நியமாகலான் விஷயாநந்தம், வாசனாநந்தம் அமுக்கியம் ஜநகமாகலாற் பிரஹ்மாநந்தம் முக்கியம் பிரஹ்மாநந்தத்திற்கும், முக்கியாநந்தத்திற்கும் பேதமில்லை.] இவர் நிசாநந்தமென்று இனிக்கூறுவதை வாசனாநந்த நாமமுடையதாகப் பஞ்சதசியிற் கூறியிருக்கின்றனர். சுழுத்தியினின்றும் எழுந்தகாலையில் சுகதுக்கங்களினபாவமிருத்தலின், அது உதாசீனதசையாம்; அதில் சுழுத்தியில் அநுபவித்த பிரஹ்மாநந்தத்தின் வாசனை சொற்ப காலபரியந்தந் தொடர்ந் திருப்பதால் இச்செய்யுளில் பஞ்சதசியிற் கூறியபடி வாசனாநந்த மென்றனர். அப்படியே சாக்கிரத்தில் எங்கே எங்கே சுகதுக்கமிரண்டும் அபாவமா யிருக்குமோ அவ்வக்காலம் உதாசீனமென்று சொல்லப்படுகிறது. எங்கே சுகமுண்டோ அங்கே இராகமுண்டாம். எங்கே துக்கமுண்டோ அங்கே துவேஷமுண்டாம்; ஆகலின், சுகதுக்கரூப நிமித்தகாலுண்டாகாமையற்கும் இராகத்துவேஷங்களின் அபாவகாலத்தை உதாசீனத்துவமென்றும், தூஷ்ணீம் ஸ்திதியென்றுங் கூறுவர்; ஆகலால், தூஷ்ணீம் பூதாவஸ்தையிலுளதாகும் ஆநந்தம் இங்கே கூறிய வாசனாநந்தத்தில் அந்தர்ப்பாவமாம். என்னை? இரண்டும் நிர்விஷயமாகலின், விஷயாநந்தம்போல வித்தியாநந்தமும் அந்தக்கரண விருத்திரூபமேயாதலால், விஷயாநந்தத்தில் அந்தர்ப்பாவமாமென்றறிக. (121)

(264) [எண்வகையாநந்தங்களின் நாமங்களோடு அவற்றின் நடங்களைத் தொகுத்துக் கூறுகின்றார்]

போகத்தில் வருஞ்சுகம் விடயாநந்த நித்திரையிற்
போதாது பிரமாநந்தம்
மோகத்தைத் தணிந்ததிற் சுகம்வாசனைச் சுகமு
மொப்பிரிய மான்மாநந்தம்
யோகத்தி லுளதும்முக் கியசுகமு தாசீன
முற்றநிச சுகமதாம்

* சத்வைதம் — துவைதத்தோடு கூடியது.

ஏகத்தை நோக்கலத் துவிதசுகம வாக்கியமெ
ழுந்தசுக ஞானசுகமே (122)

இ-ள். போகத்தில் வருசுகம் விடயசுகம்=(இஷ்ட விஷயங்களான மாலை முதலியவை லபித்து அவைகளை) அநுபவிக்கும்போது (இச்சாநிவிர்த்தியின் நிமித்தத்தா லுளதாகாநிற்கும் அந்தர்முக மனோவிருத்தியின்கண் யாதொரு ஆன்மசொரூபாநந்தம்) பிரதிவிம்பியாநிற்குமோ அது விஷயாநந்தமாம், நித்திரைப்போது உளது பிரமசுகம் ஆம்=சுழுத்திகாலத்தில் (சொப்பிரகாசமான யாதொரு) சுகமுண்டோ அது பிரஹ்மாநந்தமாம், மோகத்து அனந்தலில் சுகம்=(சாகரணமடைந்த புருஷனுக்கு) மயக்கத்தையுடைய சுழுத்தியின்கண் (அநுபவித்த)பிரஹ்மாநந்தத்தின் ✻வாசனை பின்னர்ச் சொற்பகாலபரியந்தந் தொடர்ந் திருப்பதால்) வாசனைச் சுகம்=வாசனாநந்தமாம், முழுப்பிரியம்=பிரியவஸ்துக்களுள், யானே அதிகப்பிரிய வஸ்துவென்னும் விவேகத்தால் எழாநின்ற ஆநந்தம், ஆன்மசுகம் ஆம்=ஆன்மாநந்தமாம், யோகத்தில் உளது=சமாதியின்கண் (நிராவரணமாய்த்) தோன்றாநிற்கும் ஆநந்தம், முக்கிய சுகம்=முக்கியாநந்தமாம், உதாசீனம் உற்றசுகம்=உதாசீனகாலத்திற் பொருந்தாநிற்கு மாநந்தம், நிசசுகமது ஆம்=நிசாநந்தமாம், ஏகத்தை நோக்கல்=(துவிதத்தை மாயாமயமென் றுபேட்சித்து) அத்துவிதமான தன்னை நாடாநிற்கும் (விவேகத்தாற் றோன்றாநிற்கும்) ஆநந்தம், அத்துவிதசுகம்=அத்துவிதாநந்தமாம், வாக்கியம் எழுந்த சுகம்=மஹாவாக்கிய விசாரத்தா லுண்டாகாநின்ற (சமுசயரகிதமான ஞானத்தால் அந்தக்கரண விருத்தியின்கண் பிரதிவிம்பியாநின்ற) ஆநந்தம், ஞானசுகம்=வித்தியாநந்தமாம். எ-று. (122)

(265) [இனி அஷ்டவிதாநந்தங்களை விஸ்தாரமாகக் கூறத்தொடங்கி விஷயாநந்தத்தின் சொரூபத்தைத் தரிசிப்பிக்கின்றார்.]

[வேறு.]

இவ்வா றுரைசெயுஞ் சுகபேதங்களி னியல்பா மவைசொல
மகனேகேள், ஒவ்வா நனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சய
னமது றுமிரம், செவ்வா மலமக முகமா மதிலொளிர் சித்தின் சுக
நிழல் சேருங்கால். அவ்வா றிவனுள மகிழ்வா மநுபவ மதுதான்
விஷயசுகாநந்தம் (123)

இ-ள். இவ்வாறு உரைசெயும்=இந்தப்படியாக (பஞ்சதசி முதலிய சாஸ்திரங்களிற்) பிரதிபாதியாநிற்கும், சுகபேதங்களின்=ஆநந்த வேறுபாடுகளின், இயல்பு ஆம் அவை சொல=சுபாவங்களையாங்கூற, மகனே கேள்=மைந்தனே கேட்பாய், நனவினில் உழல்வான்=சாக்கிரத்தின்கண் (தனக்கு வேண்டுவனவான, விஷயங்களைச் சம்பாதித்தல் முதலிய வியவகாரங்களிற்) சுழலாநின்ற ஜீவனானவன், ஒவ்வா இடர்கெட=(அவ்வியவகாரங்

✻ வாசனை—சம்ஸ்காரம்.

களா லுளவாகாநிற்கும்) சகிக்கக்கூடாத துன்பங்கள் நீங்குதற் பொருட்டு உறங்கும் சயனமது உறுநேரம்=நித்திரை பண்ணுதற் கேதுவாகும் மிருதுவான சையை முதலியவற்றிற் சயனஞ்செய்யுஞ் சமயத்தில், செவ்வாமனம்=செவ்வையாக அவனது புத்தியானது, அகமுகம் ஆம்=அந்தர்முகமாகும், அதில்=அவ்வந்தர்முகமான புத்தி விருத்தியின்கண் (தனது எதிரான தர்ப்பணத்தின்கண் முகம்போல) ஒளிர் சித்தின் சுகநிழல்=விளங்காநின்ற சொரூப பூதாநந்தத்தின் சாயையானது, சேருங்காண்=பிரதிவிம்பியாநிற்கும், அவ்வாறு=கூறியவழியாக, இவன் உளம்=புருஷனுடைய புத்திவிருத்தியில், மகிழ்வு ஆம் அநுபவம் அதுதான்=இன்பமாகிய அவ்வநுபவமே, விஷய சுக ஆநந்தம்=விஷயசுகமான ஆநநதமாம். எ - று.

உரைசெய்த வென்றும் பாடம். (123)

(266) [பிரஹ்மாநந்தவியல்பு கூறுகின்றார்.]

ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடரா மெனமன மசையாமல்
சேனந் தனதுகு லாயந் தனில்விழு செயல்போ னித்திரை செறிசீவன்
தானந் தமில்பர னுடனொன் றுவனொரு தனையல் லதுபிற நினையாமல்
ஆனந் தமயனு மாவன் சுகமிகு மதுதா னுயர்பிர மாநந்தம். (124)

இ - ள். ஈனம் தரு விடயசுகம்=இழிவைத்தராநின்ற விஷயசுகமானது, திரிபுடி இடர் ஆம் என=புசிப்பவன், போகம், போக்கிய ரூபமான திரிபுடியோடு கூடினதால் துக்கமாமென்று கருதி (அத்திரிபுடியா லுண்டாகாநின்ற சிரம நிவிர்த்தியின் பொருட்டு), மனம் அசையாமல்=மனஞ்சலியாமல், நித்திரை செறி சீவன்=நித்திரை பொருந்திய அச்சீவனானவன், அந்தம் இல் பரன் உடன் ஒன்றுவன்=அந்தமற்ற (ஆநந்தரூபமான) பிரஹ்மத்தோடுகூடத் தாதாத்மியத்தை யடைவன், ஒரு தனை அல்லது=அத்வைதமான தன்னையல்லாமல், பிறநினையாமல்=வேறொன்றையுஞ் சிந்தியாமல், தான் ஆனந்தமயனும் ஆவன்=(சுழுத்தியில் பிரஹ்மத்தோடு ஏகத்துவத்தை யடைகிறானென்னுஞ் சுருதியால்) தானும் அச்சுழுத்தியின்கண்ணுள்ள ஆநந்தரூபனுமாவன், மிகுசுகம் அது தான்=(சுழுத்தியிலுள்ள) மிக்க ஆநந்தமாகிய அதுவே, உயர் பிரமாநந்தம்=உயர்வான பிரஹ்மாநந்தமாம், [சொல்லிய சுழுத்தியின்கண்ணுள்ள ஆநநதத்திற்குச் சேன முதலிய வேத திருஷ்டாந்தங்கள் சுருதியிற் கூறியிருக்கின்றதென்று கூறுகின்றார்.] சேனம்=பருந்தானது, தனது குலாயம் தனில்=தனது கூட்டில், விழுசெயல் போல்=ஆகாசத்தினின்றும் வீழாநின்ற செய்கைபோல. எ - று.

(267) "சேனம்" என்பது, உபலட்சணமாகலின் சுழுத்தியாநந்தத்திற்குத் திருஷ்டாந்தமாகச் சுருதிகளிற் கூறியுள்ள சகுனி, சேனம், குமாரன், மஹாராஜன், மஹாப்பிராமணன் என்னும் ஐவகைத்திருஷ்டாந்தமுங்கொள்ளற்பாலனவாம்; அத்திருஷ்டாந்தங்களாவன:—1 - வது—அஸ்த, தம்ப முதலானவைகளிற் கட்டுண்டிருந்த * சகுனிப் பட்சி இரை முதலியவற்றைக்

* சகுனி=இராஜாளிப்பட்சி.

கவர்தற்பொருட்டுப் பூர்வாதி திசைகளிற் சுழன்றுதிரிந்து அங்கே விசிராந்தி யடையாமற் பின்கட்டுண்ட ஸ்தானமான அஸ்தம் முதலானவைகளை யாசிர யிப்பதுபோலச் சீவனுடைய உபாதிரூபமான மனதும் புண்ணியபாவப் பய னை சுகதுக்கங்களை யநுபவித்தற் பொருட்டுச் சொப்பன, சாக்கிரமென் னும் அவஸ்தைகளில் அங்கங்கே சுழன்று போகப்பிரதமான கன்மம் நசிக்கில் தனது உபாதானமான அஞ்ஞானத்தில் லீனமாம்; அம்மனம் லயமாகின், மனோரூப உபாதியுடைய சீவன் பரமான்மாவே ஆய்விடுவன்; இது சாந்தோ க்கிய சுருதியின் சஷ்டாத்தியாயத்திலுள்ள வாக்கியார்த்தம். 2-வது— ஆகாசத்தின்கண் எங்குஞ் சஞ்சரியாநின்ற சேனமென்னு நாமமுடைய பட்சி ஆகாசத்தில் சஞ்சாரரூப நிமித்தத்தா லுளதான சிரம நிவிர்த்தியின் பொருட் டுச் சயனஞ் செய்தற்குத் தனது ஸ்தானத்தின் அபிலாஷையொன்றனையே யுடைத்தானதாய்த் தனது குடம்பையிற் பட்சங்களை யொடுக்கிக்கொண்டு அதிவேகமா வீழாநிற்பதுபோல மனோவுபாதியையுடைய சிதாபாசனும் பிர ஹ்மாநந்தம் ஒன்றிலேயே அபிலாஷையுடையனாய் யாதொன்றினானுந் தடை ப்படாமல் சுழுத்தி நிமித்தம் இருதயாகாச ரூபமான ஸ்தானத்தில் வேக மாகச் செல்லாநின்றனன்; இது பிருகதாரண்ணிய வுபநிடத வாக்கியார்த் தம். 3-வது—அதிபாலன் கழுத்தளவு நிரம்ப ஸ்தனபானஞ் செய்து மிரு துவான சையையிற் சயனித்துக் கொண்டு யான், எனது என்பனவாதிய விசேஷ ஞானமின்மையின், இராகாதிரகிதனாய்ச் சுக மூர்த்தியாகவே யிருக் கின்றனன். என்பதும். 4-வது—சக்கிரவர்த்தியாகிய அரசன் ஞானத்தோடு கூடிய புத்தியின்மையனாயினும், சர்வ மநுடாநந்தங்களோடுங் கூடினவனாத லால் பிரார்த்திக்க யோக்கியமான விஷயங்களி னபாவத்தால் இராகாதிரகி தனாய், ஆநந்த மூர்த்தியாகவே யிருக்கின்றனன் என்பதும். 5-வது—மஹாப் பிராமணனென்னும் பிரத்திய பின்ன பிரஹ்மசாட்சாத்கார முடையவன் நான் கிருதகிருத்திய னாகின்றேனென்னும் விததியாநந்தத்தின் பரமகாஷ் டையை யடைந்தவனாய்ப் பரமாநந்தசொரூபமாகவே யிருக்கின்றனன் என் பதும் பிருகதாரண்ணியத்திற் பாலாகிப் பிராமணப்பிரகாணத்திலுள்ளன; இவ்வைந்து திருஷ்டாந்தங்களானும் சுழுத்தியை யடைந்த புருஷன் ஆநந்த ரூபமாகவே யிருக்கின்றமை காண்க.

(268) குமாரன் முதலிய மூவகைப் புருஷரை உதாரணமாகக் கூறிய தன் தாற்பரியமேதெனின்— அவிவேகரகித புருஷரின் மத்தியில் அதிபாலன் சுகியாயிருக்கின்றனன். * விவேகி புருஷரின் மத்தியில் சார்வபௌமன் சுகியாயிருக்கின்றனன். அதிவிவேக புருஷரின் மத்தியில் ஆனந்தரூபமான ஆன்ம சாட்சாத்கார முடைய புருஷனே சுகியாயிருக்கின்றனன். அந்நிய புருஷரோ சர்வதா இராகாதியுடையராயிருத்தலின், சுகமின்மையராகவே யிருக்கின்றனர்; ஆதலால், அவர்களைச் சுழுத்தியுடையவனுக்குத் திருஷ்டா ந்தமாகக் கூறவில்லை என்க. (124)

* விவேகி—வியவகாராதிகளிற் குசலர்.

(269) [சுழுத்தியின்கண் ஆநந்தமுண்டென்பதைச் சுருதி, யுத்தி, அநுபவங்களா லுணர்த்துகின்றார்.]

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்விழி துயில்வோர்கள், தாங்கும் மலரணை நன்றாகச்சிலர் சம்பாதிப்பது தானூகம், தீங்கும் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தமளிசெய் பொழுதேபோல், ஆங்குள் வெளிகளு மறியா வநுபவ மதனா லதுபிரமானந்தம். (125)

இ-ள், தூங்கும் சுகமது=உறங்குங் (காலையில் சகலப் பிரபஞ்சமும் விலீனமான தமப்பிரதான பிரகிருதியால் ஆச்சாதிதனான சீவனனுபவம் அடையாநின்ற) சுகமானது, பிரமச்சுகம் எனல்=பிரஹ்மாநந்த மென்று சொல்லுதல், சுருதிப்பொருள்=சுருதியின் அர்த்தமாம், விழி துயில்வோர்கள்=நித்திரை செய்யா நிற்பவர்களுள்ளே, சிலர்=(தனவான்களான) சிலபேர், தாங்கும் மலர் அணை=(நித்திரைக்கு விக்கினமாகச் சரீரத்திற்குப் பீடை யுறாமல்) காக்கத்தக்க மிருதுவான பூவணை முதலியவற்றை, நன்றாக=திரவியஞ் செலவிட்டுச் சரீரபீடைமுதலிய வெகு பிரகாரமான பரிசிரமத்தால், சம்பாதிப்பது தான்=சம்பாதிப்பதே, ஊகம்=(சுழுத்தியில் பிரஹ்மாநந்தமுண்டென்பதற்கு) யுத்தியாம், தீங்கும் நன்மையும்=நன்மை தீமைகளான வாகிய விருத்தாந்தமும், ஆந்தர விருத்தாந்தமும், ஆண் பெண் முறைமையும்=ஆண்பெண்ணென்னு மொழுங்கும், தெரியாது=(கிஞ்சித்தும்) அறியாமல், * அமளிசெய்பொழுதே போல்=(காமியாகிய புருஷன் தனக்குப் பிரியமான) ஸ்திரீயை ஆலிங்கனஞ் செய்யுங்காலையிலே (சுகமூர்த்தியாயிருப்பது) போல, ஆங்கு=அச்சுழுத்தியின்கண் (பிராஞ்ஞனவன் பரமாத்மாவோடுகூட ஏகத்துவத்தை யடைந்தவனாய்) உள் வெளிகளும் அறியா=ஆந்தரவாகியங்களுள் ஒன்றுமறியாமல் (ஆநந்தமூர்த்தியாகவே) இருப்பது, அநுபவம்=அநுபவமாம், அதனால்=இப்படிச் சுருதி, யுத்தி, அநுபவங்களுளவாகையால், அது பிரமாநந்தம்=(சுழுத்தியின்கணுள்ள) அவ்வாநந்தம் பிரஹ்மாநந்தமாம், எ-று.

சுழுத்திகாலத்திற் சகலபிரபஞ்சமும் விலீனமான தமப்பிரதானமாகிய பிரகிருதியால் ஆவிருதனான சீவன் சுகரூபமான பிரஹ்மத்தையடைகின்றானென்று அதர்வணவேதத்தின் கைவல்யசுருதி கூறுகின்றதென்பார், "தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்" எ-ம், சுழுத்தியின்கண், சுகமில்லையாயின், மகத்தரப்பிரயாசத்தால் மிருதுசய்யாதி சாதனங்கள் ஏன் சம்பாதிக்கின்றார்களென்பார், "விழிதுயில்வோர்கள் தாங்கும் மலரணை நன்றாகச்சிலர் சம்பாதிப்பது தானூகம்" என்றும் கூறினர். "அமளிசெய் பொழுதேபோல்" என்னும் சுருதி பிருகதாரண்யகத்தின் ஜோதிர்ப்பிராஹ்மண நாமப்பிரகரணத்திலுள்ள வாக்கியம். திருஷ்டாந்தத்தில வெகு மார்க்கங்கள் ஏகமேயொன்றாகக் கூடுகின்றனவோ அப்படிப்பட்ட ஸ்தானம்

* "அமளிசெய்" என்பது, இடக்கரடக்கல்.

அல்லது, லகுமார்க்கம் இவை முதலியவை வாகிய விருத்தாந்தம், கிரககிருத்தியம் ஆந்தர விருத்தாந்தம்: தாஷ்டாந்தத்தில் சாகரணம் வாகியவிருத்தாந்தம், நாடியின் கண்ணுள்ள சொப்பனம் ஆந்தர விருத்தாந்தம் என்றறிக. "தீங்குந் நன்மையு மாண்பேண் முறைமையும்" என்பது, இவர் கருத்து இதற்கு முன்னூலான பஞ்சதசியை ஆராய்ந்து இவ்வா றுரைசெய்யாமல் சுவகபோல கற்பனையாக இச்செய்யுளுக்கும், இதற்கு முன்னும் பின்னு முள்ள செய்யுள்கட்கும் உரைசெய் திருக்கின்றனர்; அறிந்தோர்கள் அதனை உரையென்று ஒப்பார்கள். ஆநந்த மூவகையென்றும், அதன்விரிவு எண்வகையென்றும், ஏனையவைந்தும் மூவகையி லந்தர்ப்பாவ மென்றும், பிரஹ்மாநந்தம், வாசனாநந்தம், விஷயாநந்த மென்னும் இம்மூவகை ஆநந்தத்திற்கு அந்நியமாக உலகில் ஆநந்தமில்லை யென்றும் இதற்கு முன்னூலான பஞ்சதசியில் ஸ்ரீ-வித்யாரண்ய சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டிருக்க அதற்கு மாறாக தானசுகமென்று பாடங்கூறி அதற்குரை செய்திருப்பது வேறே எப்பிரமாணநகொண்டோ யாம் அறியோம். (125)

(270) [அநுபவம், ஸ்மரணம் இவ்விரண்டற்கும் அதிகரணம் ஒன்றே யென்னும் நயமத்தால் யான் சுகமாக வுறங்கினேன், ஒன்று மறியாதிருந்தேனை என்று சுழுத்திகாலத்திலுள்ள சுகத்தையும், அஞ்ஞானத்தையும் விஞ்ஞானமய சத்தவாச்சியனை சீவன ஸ்மரணஞ் செய்யக் காணப்படுவதால் ஆனந்தக் கஞ்சேவ்வாறு கூடுமென்று சீடன் சங்கித்தல்.]

உதவுமெ புவியினி லொருவன் னநுபவ மொருவன் மனதினி லுதியாதே, மகியுந் தெகிழ்கிற துயில்கொண் டானந்த மயனன் றேசுக முறுகின்றான், இதுவிஞ் ஞானமயனாஞ் சிந்தையி னினைவாய் வந்திட லழகன்றே, சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீரே (126)

இ-ள். உதவும் புவியினில்=(கர்மாநுஷ்டான வாயிலாகச் சர்வாபீஷ்டங்களையும் யாவர்க்கும்) பயவா நிற்கும் பூமியின்கண்ணே, ஒருவன் அநுபவம் ஒருவன் மனதினில் உதியாதே=தேவதத்தன் என்னு மொருவன் அநுபவம் எஞ்ஞதத்தன் என்னு மற்றொருவன் மனதின்கண் (* ஸ்மரணரூபமாக) உதிக்கமாட்டாதே, மகியும் கெகிழ்கிற துயில்கொண்டு=(மனோமய கோசத்தோடு) விஞ்ஞானமய கோசமும் நாசமாகின்ற நித்திரையடைந்து, ஆநந்தமயன் அன்றே சுகம் உறுகின்றான்=ஆநந்தமயனல்லவா சுகமநுபவிக்கின்றான், இது=இவ்வநுபவம், விஞ்ஞானமயன் ஆம்=விஞ்ஞானமயனாகும் (கர்த்தாவின்), சிந்தையில்=கரணரூபமாகும் மனதில், நினைவு ஆய் வந்திடல் அழகு அன்றே=ஸ்மரணமா யெழுதல் தகவில்லையே: (ஆகவின், இது பொருந்துமாறெவ்வாறு?), சுதை விண்ணோர் புகழ் குருவே=அமுத (பானஞ்செ

* ஸ்மரணம்=ஞாதவஸ்துவின் அநுபவாதீன சம்ஸ்கார ஜந்யஞானம்.

ய்து அஜராமரணராயுள்ள தேவர்களாலுந் துதிசெய்யப்படுகின்ற) மகிமை யினையுடைய குருவே, நீர்—தேவரீர், சகலமும் வல்லீர்—(என்போலிகள் வினவாநிற்குஞ் சந்தேகங்கள்) அனைத்தையும் போக்கவல்ல சர்வஞ்ஞராத லால், இது சொல்லீர்—இச்சந்தேகத்துக்குஞ் சமாதான மருள்வீராக. எ-று

நினைவாய் வந்திடு மெனல்கண்டேன், என்றும் பாடம். (126)

[மேலதற்கு உத்தரங் கூறுகின்றார்.]

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி நினைவிற் பிறிவ்றி வினிலில்லை, செய்யுந் நனவினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய விஞ்ஞானன், நையுந் துயர்மன நழுவும் பொழுதுணர் ஞானச் சுக முணு மாநந்தன், பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாகும் போலிவ் வர் பிறிவன்றே. (127)

இ-ள். நெய்யும் வெண்ணெயும்—(உருக்கின) நெய்யும், (உருக்காத) நெய்யும்(உருவின்வேறு சுவையி னொன்றுபோல), இருபேர்களும்—ஆநந்த மயன், விஞ்ஞானமய னென்னு மிருவரும், நினைவில்பிறிவு அறிவினில் இல்லை —அவித்தை, அந்தக்கரணவிருத்தி (ரூபஉபாதி திருஷ்டி) யினாற் பிரிவேய ன்றிப் பிரதிவிம்பசேதன ரூபதிருஷ்டியினாற் பிரிவில்லை, [ஓர் பிரதிவிம்ப சேதனந்தானே உபாதிபேதத்தால் இருவகை நாமமடைந்ததே யன்றிச் சொரூபமாகப் பேதமின்றென்பது நன்றாக விளங்குதற்பொருட்டு அநேக திருஷ்டாந்த முகத்தால் கூறுகின்றார்.] செய்யும் நனவினில்—(போகப் பிர தமான கர்மவசத்தால் நாநாவியவகாரங்களையுஞ்) செய்யாநின்ற சாக்கிரத் தின்கண், இறுகும் மனதொடு சேரும்—தூலமாகு மந்தக்கரண வுபாதியோடு கூடாநிற்கும், சின்மய விஞ்ஞானன்—சின்மயனான விஞ்ஞானமய னென் னும் ஆன்மா, நையும் துயர் மனம்—வருந்துந் துன்ப காரணமான அந்தக்க ரணம், நழுவும் பொழுது—(போகப்பிரதமான கர்மக்ஷயவசத்தால் நித்திரா ரூபமாக) விலீனமாகுங் காலையில், உணர்ஞானச் சுகம் உணும் ஆநந்தன்— (கரணசாபேட்சையின்றி அஞ்ஞானத்தை) அறியவல்ல பிரஹ்மாநந்தத்தை அநுபவியாநிற்கும் ஆநந்தமயன் என்று சொல்லப்படுவன், (ஆகவின்) பெய் யும் துளிகளும்—(மேகத்தாற்) சொரிகின்ற மழைத்துளிகளும், நீரும்—கூவ தடாகாதிகளிலுள்ள புனலும், குளமொடு பாகும்போல்—வெல்லமும், பாகு ம்போலவும், இவர் பிறிவு அன்று—இவர் வேறல்லர், அறி—(என) இங்ஙனம் அறிதி. எ-று.

இக்காரணத்தால், ஆநந்தமயனநுபவஸ்மரணம் விஞ்ஞானமயனுக் குண் டாவதால் விரோதமின்றாமென்பது கருத்து

இதன் விவரம் முதற்படலத்தில், 23.வது செய்யுளின் விசேஷவுரை யில் அவஸ்தைகளி னிலக்கணங் கூறியிருப்புழி காண்க. "ஞானச்சுக முணும்" என்றதால், சுழுத்தியின்கண் ணந்தக்கரணம் அபாவமாயின்த்

தலின், அதனை யுண்ணுதற்கு வேறே கரணமே தெனின்:—சொரூப பூத மான சுகத்தைச் சிதாபாசசகித அஞ்ஞானத்தினின்றும் உற்பன்னமாய்ச் சுகாதிகளை விஷயமாக வுடைய சத்துவ குணத்தின் பரிணாம விசேஷரூப மான விருத்தியால் உண்ணுகின்றனனெனக்கொள்க ; இதனை,

"பிரமானந்த முறமையா விருத்தியென்னு நுண்ணாணாங் கன்னு லநுபவித்தல் சுழுத்தியாம்."—

என்னும் வேதாந்த சூடாமணியானும் அறிக. இங்கே "வெண்ணெய்" எ - து, அக்கினியின் சையோகாதிகளால் உருகிப் பின்னர் வாயு வாதிகளின் சம்பந்தத்தால் உறைந்து வெண்மை நிறமுற்ற நெய்யை. (127)

(271) [சுழுத்தியின்கண் ஆநந்தமய னுகிய சீவனுல் பிரஹ்மசுக மநுபவிக்கப் படுமாயின், அதைப் பரித்தியாகஞ் செய்து வாகியத்தில் துக்கா லயமான சாக்கிரத்திற்கு வருவானே னென்று சங்கித்துச் சமாதானங் கூறுகின்றார்.]

ஒன்றா கியபிர மாநந் தச்சுக மொழிவா னேன்வெளி வருவா னேன், என்றான் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ் சுழு த்திவிட் டெழுந்தோனும், நன்றா யினசுக மகலான் வெளியிலு நட வான் மறதியும் பெறமாட்டான், அன்றா மெனவிருந் தறங்குஞ் சில கணம், மதுவே வாதனை யாநந்தம். (128)

இ - ள். (ஆனந்தமயனான சீவனானவன்) ஒன்று ஆகிய பிரமாநந்தச்சுகம் =ஏகமாகிய பிரஹ்மாநந்த சுகத்தை, ஒழிவான் என் =பரித்தியாகஞ் செய் தற்குக் காரண மென்னை, வெளி வருவான் என்=வெளியே (சாக்கிரத்தில்) வருதற்குக் காரண மென்னை, என்றால்=என்று சங்கிக்கின், முன்செய்த கருமம் வெளியினில் இழுக்கும்=பூர்வஞ் செய்த (புண்ணிய பாவரூபமான பாசத்தால் கட்டுண் டிருத்தலால்)அக்கர்ம பாசம் (சாட்சாதனு னநுபவித்திரு ந்த பிரஹ்மா நந்தத்தையும் பரித்தியாகஞ் செய்யும்படி பண்ணி)வாகியத்தில் சாகராதிகளில் இழுக்கும், (இப்படிக் கர்ம வசத்தால் சாகராதி அவஸ் தைகள் உளவாமென்பதை நூ லறியப்படுகின்ற தெனின், சுழுத்தியடை ந்த சீவன் சொப்பனம் அல்லது, சாகரணத்தை யடைகின்றானென்னும் கைவல்யசுருதி வாக்கியத்தால் அறியப்படுகின்றதென்க)[சுழுத்தியின்கண் பிரஹ்மாநந்தத்தி னநுபவமுண்டென்பதிற் காரணங்கூறுகின்றார்.] சுழுத்தி விட்டு எழுந்தோனும்= சுழுத்தியவஸ்தையை விட்டுச் சாக்கிரத்தை யடைந்த புருஷனும்,சிலகணம்=சொற்ப கால பரியந்தம், நன்றாயின சுகம் அகலான் =(சுழுத்தியிலநுபவித்த)பிரஹ்ம பூதமான ஆநந்தத்தின் வாசனையை விடா துளன், [அதற்குக் காரணம் கூறுகின்றார்.]. வெளியிலும் நடவான்=புறத் துஞ் செல்லானாய், மறதியும் பெறமாட்டான்=தானே யநுபவித்த ஆநந் தத்தையும் விடாதுளன், (இவனைக் கூறியவாற்றால் நிர்விஷயனாய், சுகி யாய்,உதாசீனனா யுளனென்பது பெறப்படுகின்றது: இதனால், பிரஹ்மாநந்த

வாசனை பின்னே தொடர்ந் திருக்கின்ற தென்பது கருத்து. இவ்வாறு பொருளுரைத்தது இதற்கு முன்னூலான பஞ்சதசியைக் கொண்டென்க.) "அன்றுமேனவிருந் துறங்குந் சிலகண மதுவே வாதனை யாநந்தம்" எ - து, இவ்வாசிரியர் கருத்து, அன்று ஆம் என=சுழுத்தியு மன்று சுழுத்தியுமாம், சாக்கிரமு மன்று சாக்கிரமுமாம் என்று கூறும்படி, சிலகணம் இருந்து உறங்கும்=சொற்பகால பரியந்தம் அங்ஙன மிருந்து உறங்கா நிற்கும், அதுவே வாதனை ஆநந்தம்=(சுழுத்தியின் சம்ஸ்காரமாகிய) அத்தூஷ்ணீம் ஸ்திதியே வாசனாநந்தமாம். எ - று.

"ஒழிவான் வருவான்" என்பனவற்றிலுள்ள வான் விகுதி=தொழிற் பெயர்ப்பொருட்டு. (128)

(272) [ஆயின், சர்வதா அங்ஙனம் ஏன் இருக்க வில்லை யெனின், அதற்குக் கூறுகின்றார்.]

அந்தக் கணமுட லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந்தேபோம், முந்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோனந் தருநடு வடிவேகாண், எந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்தே னெனலநு பவமாகும், இந்தப் படிதனு தாசீனச்சுக மிதுவே நிசமெனு மாநந்தம். (129)

இ - ள். அந்தக்கணம்=(சுழுத்தியி னின்றும் வெளியேயெழுத்த பூர்வ கர்மம் அப்படித் தூஷ்ணீம் பூதனாயிருக்க வொட்டாமற் பின்னரும் பிரேரிக்க) அந்தட்சணமே, உடல் அகம் என்று=(சகல பிராணிகளும்) தேகமே தாமென்று (அத்தேகத்தி லபிமானமுற்று), இடர்களில் அலைந்தே=(பலவேறுவகைப்பட்ட)துக்கங்களி லுழன்று (அத்துக்கா நுசந்தானத்தால்) சுகந்தனை=(அநுபவித்த) பிரஹ்மா நந்தத்தை, மறந்தேபோம்=(சொற்பகாலத்தோடு) மறந்தேவிடும், (இவ்வாறு தினந்தோறும மநுடர்க்கு நித்திரைக்கு முன்னும் பின்னும் பிரஹ்மாநந்தத்தின்கண் * பட்சபாத முண்டென்றறிக. "உடலகம்" என்றதால், சீவன் தேகத்தோடு தாதான்மியனாய் உதாசீனன், சுகி, துக்கி என்னும் மூவவஸ்தை யுடையனாயிருப்ப னெனக் கொள்ளக் கிடந்தன; கொள்ளவே, அம்மூவகையுள்), முந்தைச் செயும்வினை=பூர்வ ஜநநங்களிற் செய்த புண்ணிய பாவங்கள், சுக துக்கம் தரும=சுக துக்கமாகிய இரண்டையுந் தரும் (ஆகலின், அவைகள் கர்ம காரியங்களாம்; சுக துக்கங்களும் வாகியபோகத்தினாலும், மனோராசியத்தாலும இருவகையாக வொப்பினர்) [மூன்றாவதான உதாசீனத்தன்மை எப்போது முண்டாமெனின்:—அதற்குக் கூறுகின்றார்.] நடு வடிவே=சுக துக்கங்களின் அந்தராளமே, மோனம் தரும்=(உதாசீன மென்னும)தூஷ்ணீம் ஸதிதியைத் தரும், [இப்படி யோகவஸ்தையுள தென்பதற்கு அநுபவ மென்னையெனின்:—] எந்தப் புருடனும்=எப்புருஷனும், ஒரு சிந்தையும் அற=யாதொரு சிந்தனையுமில்லா

* பட்சபாதம்=சிநேகம்.

மல், இருந்தேன் எனல்=(நான்) சுகமாயிருந்தேனென்று சொல்லுதலே, அநுபவம் ஆகும்=அநுபவமாம், இந்தப்படி, தன் உதாசீனச் சுகம் இதுவே=தன்னுடைய உதாசீன காலத்திற் றோன்றுகின்ற இவ்வானந்தமே, நிசம் எனும் ஆநந்தம்=நிசானந்தமாம். எ-று.

சாக்கிராவஸ்தையின் கண்ணும் நிசாநந்தத்தின் றோற்ற முண்டென் றறியத்தக்கதென்பது தாற்பரியம். (129)

(273) [உதாசீனதசைக் கண்டோன்றுகின்றசுகம் நிசாநந்தமாயின், அது பிரஹ்மாநந்த ரூபமாவதால் முற்சொன்ன வாசனாநந்த ரூபத்தன்மைய தாகாதேயென றசங்கித்து, உதாசீனதசைக் கண் டோன்றுகின்றசுகம் சாமான்ய அகங்காரத்தால் ஆவிருதமாயிருத்தலால், பிரஹ்மாநந்த ரூபத்தன்மைய தன்றென்று பரிகரிக்கின்றார்.]

நிசமானதுமுக் கியமோ குடத்துள நீரன்றெவெளி யீரந்தான்
வசமா மகங்கர மறைந்தா னிசமது படிந்தான் முக்கிய வகையாகும்
திசையார் நிரிசய மறியா தேதுயில் செறியா தேயுட னறிபோல
அசையா தேமதி சமானா கியநிலை யதுதான் முக்கிய வானந்தம். (130)

இ-ள். அகங்கர வசமாமறைந்தால்=(நான் தேவதத்தனாகின்றேன் என்பது முதலிய விசேஷத்தோடு கூடாது நானிருக்கின்றேனென்னும் உருவமுடைய சாமான்ய) அகங்காரவசமாய்ப் பிரஹ்மாநந்த மறைவுற்றால், நிசம்=(அவ்வுதாசீனதசைக்கண் டோன்றுகின்றவானந்தம்) நிசாநந்தவாசனையாம், (ஆகலின்) நிசம் ஆனது=அந்நிசாநந்த வாசனையானது, முக்கியமோ=முக்கிய நிஜாநந்தமா? (அன்று), [முக்கியாநந்தத்தின் வேறாய் வாசனாநந்த முண்டென்பதற்குத் திருஷ்டாந்தங் கூறுகின்றார்.] வெளி ஈரம் தான்=(சலத்தாற் பூர்ணமான கும்பத்தினுடைய) வாகியபாகத்தில் ஸ்பரிசத்தாற் றோன்றுகின்ற சீதளத் தன்மை, குடத்து உள நீர் அன்றே=கும்பத்தினுள்ளேயுள்ள முக்கிய சலமல்லவே, (பின்னை அச்சீதளத் தன்மை யாதெனின்? அது சலத்தின் குணமாம்; சீதளத் தன்மை சலத்தின் குணமென எவ்வாறறியப் படுகின்றதெனின்? அச்சீதளத்தன்மைரூப ஏதுவால் சலத்தின் சற்பாவங் கடத்தின்கண் அநுமானத்தா லறியப்படுகின்றது; அஃதெங்ஙனமெனின், விவாதவிஷயமான கடத்தின்கட் டோற்றுகின்ற சீதளத் தன்மை சலத்தி னின்றும் ஜந்நியமாதற்கு யோக்கியம், சீதளத் தன்மையால், சலத்தின் கட்டோற்றுகின்ற சீதளத்தன்மைபோல என்க.)[அங்ஙனம் சீதளத்தன்மை சலத்தின் அநுமானத்திற் கேதுவாதக; அதனுல், பிரகிருதமான வாசனாநந்தத்திற்கு யாதாயிற்றெனறசங்கித்து அச்சீதலத் தன்மை போல வாசனாநந்தத்திற்கும் முக்யாநந்தத்தி னுடைய அநுமானத்தின் ஏதுத்தன்மை பெறப்பட்டதெனக் கூறுகின்றார்.] அது*படிந்தால்("வாக்கது மனத்

* படிதல்=நிரோதமாதல்.

திடை வைக்கு மம்மனம், போக்கிடும் புந்தியுள் ளந்தி மானிலே, யாக்கிடு மந்தமானிலை யனைத்தினுந், தூக்கறுஞ் சாந்தமாந் தன்னிற் சாந்தமாம்." என்னும் சுருதியாற்) கூறுகின்ற நிரோத சமாதியின் அப்பியாச யோகத்தால் (அகங்காரம் விலயமாய் எத்துணை எத்துணை சித்தத்தின் சூட்சுமத்தன்மை யுண்டாமோ அத்துணை யத்துணை), முக்கியவகை ஆகும்=முக்கிய நிசாநந்தம் ஆவிர்ப்பாவமாம், (என இவ்வாறு அநுமானஞ் செய்யப்படுகின்றதென்பது எஞ்சிநின்றது; இங்கே இஃதநுமானம்; அகங்காரத்தினது சங்கோசத்தின் விலட்சணத் தன்மையோடு கூடியக்ஷணங்களில் இரண்டாவது முதலிய க்ஷணரூபமான பட்சங்கள் பூர்வ க்ஷணத்தினும் அதிக நிசாநந்தத்தின் ஆவிர்ப்பாவ முடையன, அகங்காரத்தினது சங்கோசத்தின் விலட்சணத்தன்மையோடுகூடிய கால ரூபமாகலின், அகங்காரத்தினது சங்கோசத்தோடுகூடிய பிரதம க்ஷணத்தைப் போல. இதற்கு முன்னூலான பஞ்சதசியின் சுலோகம் வியாக்கியானங்களைக் கொண்டே இவ்வாறு பதங்களை அந்நுவயித்துப் பொருளுரைக்கப் பட்டது.)[புத்தியின் சூட்சுமத் தன்மைக்கு அவதியாதென்று சங்கைவரில்:—அநற்றுச் சர்வ அநான்மாகார விருத்திகளும் நிரோதமாய்ப் பிரஹ்மாகாரத்தை யடைந்த அந்தக்கரணத்தின்கண் அது நானென உளதாகும் ஞானரூப சாட்சாத்காரமே அவதி என்று கூறுகின்றார்.]மதி=அகங்காரமானது, திசையார் திரிசயம் அறியாதே=சர்வ திக்குகளிலு நிறைந்துள்ள திருசியங்களை நினையாமல் (மறந்து), துயில் செறியாதே=நித்திரையுமடையாமல், உடல் தறிபோலே=சரீரம் ஸ்தம்பம் போலே, அசையாதே=அசையாமல் இருக்க (பூமியிலே வீழாமலென்றபடி), (பரமமான சூட்சுமத்தன்மையை யடைந்து)சமம் ஆகிய நிலையது தான்=பிரஹ்மாகாரமாகிய ஸ்திதியே, முக்கிய ஆநந்தம்=முக்கிய நிசாநந்தமாம். எ-று.

புத்தியானது சர்வ திருசியங்களையும் ஸ்மரியாமல் சூட்சுமத் தன்மையை யடையின், அப்போது அது நித்திரையாமே யென்று வரும் சங்கையைப்பற்றிச் சர்வ விருத்திகளும் விலயமாயினும் அந்தக்கரணத்தின் சொரூபம் விலயமாகாமையின், அகங்காரத்தின் சூட்சுமத்தன்மை நித்திரை யல்லவென்பார், "துயில் செறியாதே" எ-ம், எங்கே சுழுத்தியாதிகளில் அந்தக் கரணம் விலீனமாமோ அங்கே தேகம் பூமியின்கண் வீழாநிற்பது காணப்படுகின்றது. இங்கே அது வீழாமையின், அகங்காரம் விலீனமாகாமல் சூட்சுமமான அந்தக்கரணரூபமாக வுளதென்பதை அறிதற்குத் தேகம் பூமியின்கண் வீழாததே இலிங்க மென்பார், "உடறறி போலே அசையாதே" என்றுங் கூறினார். எங்கே தோய்தமுந் தோன்றாமல், நித்திரையுமில்லாம லிருக்கின்றதோ அங்கே யுளதாகும் சுகம் பிரஹ்மாநந்தமென்று ஸ்ரீ-பகவானால் கீதையின் ஆறுமத்தியாயத்திற் கூறப்பட்டிருப்பதுங் காண்க. (150)

(274) [முக்கியாநந்தத்தின் மகிமைகூறல்.]

மனுடன் மனுடகந் தருவன் றேவகந் மாகந் தருவனென் பிதிரோடே, பனுமா ஜானர்கள் கருமத் தேவர்கள் பகர்முக் கியரிந் திர

ளாசான், கனமார் பிரஜா பதியென் விராட்டுபொன் கர்ப்பப் பிரம னென் றின்னோர்கள், பினவா நந்தங்க ளுமையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மாநந்தம். (131)

இ-ள். மனுடன்=சார்வபௌமன், மனுடகந்தருவன், தேவகந்தருவன், ஒண் பிதிரோடே=ஒள்ளிய அக்கினிஷ்வாத்தாதி பிதிரரோடு, பனும் ஆஜானர்கள்=பிதிரர்க்கு மேலாகச் சொல்லாநின்ற ஆஜான தேவர்கள், கருமத்தேவர்கள்=(ஆஜான தேவராலும் பூஜிக்கப்பட்ட) கரும தேவர்கள், பகர் முக்கியர்=கருமதேவர்க்கு மேலாகச் சொல்லும் (யமன், அக்கினி முதலிய) முக்கியதேவர்கள், இந்திரன்=(இவர்க்கிறையாகிய) இந்திரன், ஆசான்=(பிருகஸ்பதி யென்னும) தேவகுரு, கனமார் பிரஜாபதி என் விராட்டு=கனம்பொருந்திய பிரஜாபதி யென்னும் நாமமுடைய விராட்டு,பொன் கர்ப்பப் பிரமன் என்ற இன்னோர்கள்=இரணிய கர்ப்ப னென்னு நாமமுடைய பிரமா என்று தைத்திரிய சுருதியிற் கூறுநின்ற இப்பதினொருபேர்களுடைய, பின ஆநந்தங்கள்=(உத்தரோத்தரம் நூறு நூறு பங்கு)அதிகமான ஆநந்தங்கள், நுரை ஆம்=பேன (புற்புத தரங்கங்கள் போல லேச) மாம், பிரளய வெள்ளக்கடல் பிரமாநந்தம்=பிரளயகாலத்து மகோததிபோலும் பிரஹ்மாநந்தமாம். எ-று.

(275) 1-வது—யௌவனனாய், ரூபவானாய், வித்தை, அரோகம், திடசித்தம் இவைகளுடையவனாய்ச் சேனாசமூகங்களோடுகூடிச் சர்வப் பிருதுவியையும் பாலனஞ் செய்பவன், "சார்வபௌமன்." 2-வது—இக்கற்பத்திலேயே மநுடனாயிருந்து புண்ணிய விசேஷத்தால் கந்தருவ பதத்தையடைந்தவன்,"மநுடகந்தருவன்."3-வது—பூர்வ கற்பத்திற் செய்த புண்ணியத்தால் இக்கற்பாதியிலேயே கந்தருவனானவன், "தேவகந்தருவன்." 4-வது—தமதுலகின்கண் சிலகால பரியந்தம் வாசம் பண்ணுநின்ற அக்கினிஷ்வாத்தாதியர் "பிதிரர்." 5-வது—கற்பாதியிலேயே தேவத்துவத்தையடைந்தோர், "ஆஜான தேவர்." 6-வது—வர்த்தமான கற்பத்தில் அசுவமேதாதி கருமங்கள்செய்து மகத்பதத்தை யடைந்து ஆஜான தேவர்களால் சேவியரா யுள்ளோர் "கரும தேவர்." 7-வது—அஷ்டவசு, துவாதசாதித்தியர் ஏகாதச ருத்திரர் இயர் முப்பத்தொருவரும் "முக்கியதேவர்."8-9-வது—"இந்திரன்." "பிரகஸ்பதி." பிரசித்தம். 10-வது—பிரஜாபதி= "விராட்டு." 11-வது "இரணிய கருப்பன."=பிரமன்; இவர்கள் ஒருவர்க்கொருவர் உத்தரோத்தரம் நூறு நூறு மடங்கு அதிகமான சுகத்தைக் கிரமமாக அடைகின்றனர் எனத் தைத்திரிய சுருதி கூறுகின்றதென்ப. (131)

(276) [முக்கிய நிசாநந்தமடைந்தோரைத் துதிக்கின்றது.]

மிவனு கிலுமிந்தத் தூரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந்தானேல், அவனு பதன்சுகன் சிவன்மாலயன்முதலறிவோ ரநுபவ சுக போதம், விவகா ரதிர்சய மிதுவே யநுபவ மெனமுன் சொல்லிய

விவகாரி, உவமா னமுமறி மகனே யவனடி யுதிரும் பொடிகளென் முடிமேலே. (132)

இ - ள். எவன் ஆகிலும்—யாவனொருவ னிருக்கினும் இந்தத் துரியாதீதத்தில் ஏழாம் பூமியில்—இத்துரியாதீத மென்னும் ஏழாவது பூமியில், இருந்தானேல் —இருந்தானுயின், அவன்—அம்மகான் நாரதன்—நாரதனும், சுகன்—சுகனும், சிவன்—சிவனும் மால்—திருமாலும், அயன்—பிரமனும். முதல் அறிவோர்—முதலிய அறிஞர்களுடைய, அநுபவ சுகபோதம்—அநுபவமான ஆநந்தசின்மயமானவன், (அன்றியும்) விவகார அதிர்சயம் இதுவே அநுபவம் என—தொய்தந் தோன்றுததும், நித்திரை யலவாததுமான இந்நிலையே முக்கிய நிசாநந்தாநுபவமாமென்று, முன்சொல்லிய—முன்னே (130 - வது செய்யுளிற) கூறிய, விவகாரி—முக்கியாநந்தாநுபவிக்கு, உவமானமும்—அந்நாரதாதி சிவன் முதலியோர் உவமானமுமாவர், மகனே அறி—மைந்தா (நீ இதனை) அறிவாய், அவன் அடி உதிரும் பொடிகள்—அவன் பாதத்தினின்று முதிராநின்ற துகள்கள், என் முடிமேலே—எனது சிரசின்மீது (தரிக்கத்தக்கனவாம்). எ - று.

பிரஹ்மவித்து பிரஹ்மமே யென்னும் சுருதியால், "அவனாரதன் சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரநுபவ சுகபோதம்." என்றார். வியவகார † அதிர்சயம்—விவகாரதிாசயம் என நிலைமொழியீற்று அகரம் தொகுக்கப்பட்டது.

இப்படியே வாசிட்டத்திலும்,

"மனமெனும் வினையை வென்றோர் மலரடி முடிமேற் கொள்வாம்."—என்றனா. (132)

[121 - வது செய்யுளில் ஆநந்தம் எண்வகை என நுதலிப்புகுதலின், ஏனைய ஆநந்தங்களோ வெனின்? அதற்குக் கூறுகின்றா.]

[வேறு.]

இந்தவா றைந்து சுகஞ் சொல்லினோம் வித்தைசுக மினிமேற் சொல்வோம், முந்தமா யையுஞ்சசி தாநந்தப் பொருளுமே மொழியும் போதில், அந்தமா மத்துவித சுகமான்ம சுகமிரண்டு மங்கே சொன்னோம், தொந்தமாற் றியமகனே யின்னமுனக் கையமுண்டேற் சொல்லுவாயே. (133)

இ - ள். இந்த ஆறு ஐந்து சுகம் சொல்லினோம்—இந்தப்படி (123-வது செய்யுளில் விஷயாநந்தமும், 124-முதல், 127 - வது செய்யுள்வரையினும் பிரஹ்மாநந்தமும், 128 - வது செய்யுளில் வாசனாநந்தமும், 129 - வது செய்யுளில் நிசாநந்தமென்னும் மற்றோர் வாசனாநந்தமும், 130 - வது செய்யுளில் முக்கிய நிசாநந்தமும் ஆக) ஐவகை ஆநந்தங்களையுங் கூறினோம், வித்தை சுகம் இனிமேல் சொல்வோம்—வித்தியாநந்தத்தை இனி இந்

நூலினந்தத்திற் கூறுவாம், முந்த=முன்னே, மாயையும் சத் சித் ஆநந்தப் பொருளும் மொழியும் போதில்=மாயையினிலக்கணத்தையும், சச்சிதாநந்த சத்தங்களின் பொருள்களையுங் கூறுங்காலையில், அந்தம் ஆம்=(சுருதியின் கண்)முடிந்த நிலமாகிய, அத்துவிதசுகம்=அத்துவிதாநந்தமும், ஆன்மசுகம் =ஆன்மாநந்தமும், இரண்டும்=ஆகிய இரண்டனையும், அங்கே சொன்னோம்=முறையே 95-வது செய்யுள்முதல், 12-செய்யுளானும், 114-வது செய்யுள்முதல், 7-செய்யுளானும் கூறினோம், தொந்தம் மாற்றிய மகனே= (பிரஹ்மாநுபூதிவலியால்) சுகதுக்காதி தொந்தங்களைப் போக்கிய மைந்தா, இன்னம் உனக்கு ஐயம் உண்டேல்=இன்னமும் உனக்குச் சந்தேகமுளவாயின், சொல்லுவாய்=வினவியறிவாய். எ-று. (133)

(277) [சச்சிதாநந்தப் பதங்கள் பிரஹ்மத்தின் பரியாய நாமங்களாகவிராமல் வேறுவேறு பொருளுள்ளனவாகத் தோற்றுதலால் என்மனம் ஒன்றென்னு மநுபூதியி லழுந்தவில்லை; ஆதலால், அவற்றை அகண்டைகாசமாகக் காட்டல்வேண்டுமெனச் சீடன் வினாதல்.]

குகன்றனையு மெனையுமுல கினையுமீன் றளித்தருளுங் குருவே கேளீர், புகன்றசச்சி தாநந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள் வேறானால், உகண்டமன முறைப்பதெங்ஙன் பரியாய பதங்களைப் போலுறவுகாணேன், அகண்டமா யொருசுவையாய்த் தேனீக்கூட்டியமதுவா வறிவிப் பீரே. (134)

இ-ள். குகன் தனையும்=சுப்பிரமணியனையும், எனையும்=என்னையும், உலகினையும்=ஆகாச முதலிய சகத்தையும், ஈன்று=படைத்து, அளித்து அருளும் குருவே=அளித்தருளாநிற்குங் குருவே, கேளீர், புகன்ற சத் சித் ஆநந்தப் பதங்கள்=(ஆன்மாவின் சொருபமாக முன்னே)உபதேசித்தருளிய சத்து, சித்து, ஆநந்தம் என்னு முப்பதங்களும், தனித் தனி ஆகிய=(கடபடமென்னுஞ் சத்தங்களைப் போல) வெவ்வேறாகி, பொருள் வேறு ஆனால்= (கடசத்தத்திற்குக் கலசமும், படசத்தத்திற்கு வஸ்திரமுமாக) வேறுவேறான பொருள்கள் தோன்றா நிற்பனபோல நிவிர்த்தி யின்மையது சத்தென்றும், சடத்தின் வேறான பிரகாசரூபஞ் சித்தென்றும், துக்கத்தின் வேறான முக்கியமாகிய பிரீதிக்கு விஷயம ஆநந்த மென்றும் பொருள்களும் பின்னமாகத் தோற்றுமாயின், உகண்ட மனம்=(ஓர் விஷயத்தினின்று மற்றோர் விஷயத்தில்) தாவிச் சஞ்சலப்படாநின்ற அந்தக்கரணம் [illegible] எங்ஙன்=அநுபூதியி லழுந்தாநிற்பது எப்படி, பரியாய பதங்களைப்போல்= ஒரு பொருளைப் போதிப்பவைகளான அஸ்தம், கரம், பாணி என்னும் பரியாய சத்தங்களைப்போல, உறவு காணேன்=சமார்த்தபோதக சத்தங்களாகக் [illegible]டிலேன், (ஆகலின், சச்சிதாநந்த பதங்களை) அகண்டம் ஆய் ஒரு சுவை ஆய்=அகண்டைகரசமாக, தேன் ஈக் கூட்டிய மதுவா அறிவிப்பீர்=

பலபூக்களினின் றெடுத்துத் தேனீக்கள் சேர்த்த மதுப்போல அறிவிப்பீராக. எ - று.

"குகன்" என்பதும், "ஏனை" என்பதும் உபலட்சணமாக நிற்றலின் முறையே ஈசுரவகுப்பும் சீவவகுப்புங்கொள்க. (134)

(278) [முற்செய்யுளிற் சீடன் வினவிய சங்கைக்குச் சுருதி, யுத்தி, அநுபவங்களால் விரித்துச் சமாதானங் கூறத்தொடங்கி அநேக திருஷ்டாந்தமுகமாக அவைகள் அகண்டைகாரமாவுள்ள தன்மையை யுணர்த்துகின்றார்.]

குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்று கூறு
யிற்றோ, ஒளிதவனஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு மொரு
மூன் றாமோ, வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து
விலக்கி வேதம், எளிதறிய மூரண்மொழிந்த சத்தாதி யெனும்பிரம
மேகந் தானே. (135)

இ - ள். குளிர் இளகல் வெண்மை என்ற பதங்களினால்=குளிர்ச்சி, நெகிழ்ச்சி, வெண்மை என்னுஞ் சத்தங்களால், நீர் மூன்று கூறு ஆயிற்றோ=நீரானது மூன்றுபொருளாயினதோ, ஒளி தவனம் செம்மை என்ற பதங்களால் அக்கினியும் ஒரு மூன்று ஆமோ=பிரகாசம், உஷ்ணம், லோகிதம் என்னுஞ் சத்தங்களால் அக்கினி மூன்று பொருளாமோ, (இவைபோல) வெளிமுதல் ஆம் சகம்=ஆகாசமுதல் அகங்கார பரியந்தமான பிரபஞ்சங்கள், (அத்தியாசத்தால் அஸ்திபாதிப் பிரியரூபங்களாகத் தோன்றுகிற்றலால் அவை இரச்சுவிற் சர்ப்பம்போல அத்தியஸ்தமாகலின்), அசத்து மூடம் இடர் எனப்பிரித்து விலக்கி=அசத்துச் சடதுக்கங்கள் எனப் பிரித்து ஒழித்து, எளிது அறிய=எளிதாக (ப் பிரத்தியகபின்ன பிரஹ்மத்தை) அறிதற்பொருட்டு, மூரண்=(அவ்வசத்துச்சட துக்கங்கட்கு) மாறாக, வேதம் மொழிந்த=சுருதி கூறிய, சத்து ஆதி எனும் பிரமம்=சச்சிதாநந்த மாகிய பிரஹ்மம், ஏகம் தானே=ஒன்றே. எ - று.

சச்சிதாநந்தங்கள் பரஸ்பரம்பின்னமல்ல ஏகந்தான்; குணமாயின் பின்னமாம், பிரஹ்மசொரூபமாகலின் பின்னமாகா. பிரஹ்மமொன்றே நிவிர்த்தியின்மையின் சத்தென்றும், சடத்தின் விலட்சணமான பிரகாச ரூபமாகலின் சித்தென்றும், துக்கத்தின்வேறாய், முக்கியப் பிரீதிக்கு விஷயமாகலின் ஆநந்தமென்றுங் கூறப்படுகின்றது. சலமானது எப்படி நெகிழ்ச்சி, குளிர்ச்சி, வெண்மைரூபமோ. அக்கினியானது எப்படி லோகிதோஷ்ணப்பிரகாசரூபமோ! அப்படிப் பிரஹ்மமும் சச்சிதாநந்தரூபமென்றறிக, "வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கிவேத, மெளிதறிய மூரண்மொழிந்த." எ-து, பிரஹ்மத்தைச் சச்சிதாநந்தமென்று சுருதி கூறினதற்குக் காரணங்கூறியது; இப்படியே வாசுதேவ மனனத்திலும், ஆன்மசுபாவமாகிய சத்து அசத்தாகிய ஜகசுபாவமாகவும், ஆன்மசுபாவமாகிய சித்து சடமாகிய

புத்தியாதி சுபாவுமாகவும், ஆன்ம சுபாவமாகிய ஆநந்தம் துக்க ரூபமாகிய புத்திர, பாரியாதி சுபாவமாகவுந் தோற்றிக் கொண்டே சகசுபாவமாகிய அசத்து ரூபத்துவமும், புத்தியாதி சுபாவமாகிய சடரூபத்துவமும், புத்திர பாரியாதி சுபாவமாகிய துக்க ரூபத்துவமும், நான் செத்துப்போகிறேன், நான் சடன், நான் துக்கி என்று ஆன்ம சுபாவமாய்த் தோன்றா நின்றதால், இவ்விபரீதப் பிராந்தியை நிராகரிக்கும் நிமித்தம் ஆன்மா சத்ரூபன், சித்ரூபன், ஆநந்த ரூபன் எனச் சுருதி சொல்லுகின்றதே யல்லாமல் ஆன்ம சொரூபமாகிய சச்சிதாநந்தங்கட்கு அந்நியோந்நியபேதஞ் சொல்லுகின்றதில் அதற்குத் தாற்பரிய மில்லை; அன்றியும். சில மதஸ்தர்கள் ஆன்மா சட ரூபனென் றங்கீகரித்து அவனுக்குச் சத்து தர்ம மென்றும். சிற்சுகங்கள் குணங்க ளென்றுஞ் சொல்லா நிற்பதை மறுத்தற் பொருட்டு ஆன்மா சச்சிதாநந்த சொரூபம் எனச் சுருதி சொல்லுகின்றதே யல்லாமல் அவற்றிற்கு அந்நியோந்நியபேதஞ் சொல்லுகின்றதிற் றாற்பரியமே இல்லை; ஆதலால், சத்தே சித்து, சித்தே ஆநந்தம் எனச் சுருதி தாற்பரியா லோசனையால் அபேதஞ் சித்தித்த தெனக் கூறியிருப்பதுங் காண்க. (135)

(279) [சச்சிதாநந்தங்கள் பரஸ்பரம் பின்ன மல்லவென்பதைச் சுருதிப் பிரமாணத்தா லுணர்த்துகின்றார்.]

நித்தியம் பூரணமே யேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ் சாந்தம், சத்தியஞ் சேவலந் துரியஞ் சாந்திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதம், சித்தமிலக் கியஞ்சா மாஞ்சிவஞ் தத்துவம்விண் சோதியான்மா, முத்தம்விபு சூக்குமம் நிர்மலம் நிர்க்குணம் விகிருணங்கண் மொழியும் வேதம் (136)

இ-ள். நித்தியம்=[லட்சணாவிருத்தி] பின்னமாகிய எத்தேசத்தினும், எக்காலத்தினும் ஆகாச மொருதன்மைத்தா யிருப்பது போலச் சர்வ பிரபஞ்சங்களிலும் பஞ்ச கோசங்களுள்ள விடங்களில் கோசங்களைக் காண்பதாகி எப்போது மிருத்தலின் நித்தியம், பூரணம்=[ல-தி] நீர்நிறைப்பூரிதமான கடம்போலப் பஞ்ச கோசங்கள் பூர்வ பூர்வம், உத்தரோத்தரங்களாற் பூரிதமாய்ச் சீவனும் பூரிதமாகிய கோசங்களாற் பஞ்ச பூதங்கள் பூரிக்கப்பட்டு அப்பூதங்களாற் பூரிக்கப் பட்டிருப்பது சகம்; அச்சகத்தில் எங்கணும் வியாபித்துள்ள மாயா விசிட்டனும் பிரஹ்மத்தாற் பூரிதமாய்த் தன்னைப் பூரிப்பதாய் வேறொன்றின்மையாற் பூரணம், எகம்=[விஷ்ணு சகஸ்திரநாம பாஷியம்] "ஏகமே வாத்துவிதீயம்" என்னும் சுருதியால் மரத்திற்குச் சமானஜாதியான மற்றொரு மரமும், விஜாதீயமான கொடி முதலியவையும், ஸ்வகத பேதமான பத்திர, புஷ்ப, பலபேதங்களு மிருப்பன போலப் பரமார்த்தமாகச் சச்சிதாநந்த பரிபூரண வஸ்துவாக ஒரு சஜாதீய பேதமில்லை, விஜாதீயமென்னும் அநிருத சடதுக்காத்மகமான பிரபஞ்சமும் சுத்தி ரஜதம்போல அதிதுச்சமாதலின் இல்லை, நிரவயவமாகலின் ஸ்வகத பேதமுமில்லை ஆகலின் எகம், பரமார்த்தம்=[ல-தி] சொப்பனம் அபரமார்த்தம், சாக்கிரம் பரமார்த்தம்,

சாக்கிரத்தின் கண்ணும் மின், மேகம் அபரமார்த்தம், மற்றவை பரமார்த்தம் இவற்றுள்ளும், தேக முதலிய இவ்வுலக வத்துக்கள் அபரமார்த்தம், சொர்க்க முதலியவை பரமார்த்தம் இவற்றினும், பிரமலோகம் பரமார்த்தம் என இவ்வாறு தாரதம்மியமாகக் கூறுகிற்கும் சக சீவ பரங்கண் முழுவதும் ஆராயுங் காலையில் பரமார்த்த மாகாமையின், சர்ப்பாதிக்கு இரச்சுவாதிபோலத் தான் பரமார்த்த ரூபமாதலானும், தனக்கழிவு வந்து வேறொரு வஸ்து பரமார்த்த மாகாமையினானும் பரமார்த்தம், பரப்பிரஹ்மம்=[வி - ச - பா - ம்] சத்திய ஞானாநந்தம் பிரஹ்ம மென்னும் சுருதியானும், விஷ்ணு புராணத்தில் சஜாதீய, விஜாதீய, ஸ்வகத பேதரகிதமாகவும், மனவாக்குகட் ககோசரமாகவும், சத்தியஞான சுகமாத்திரமாகவும், சுவயம் பிரகாச சுவவேத்தியமாகவும் இருக்கிற ஞானமாத்திரம் பிரஹ்மமென்று நிர்ணயித்ததானும் பரப்பிரஹ்மம்; நிதானம்=[வி - ச - பா - ம்] காரணமாத்திரம். இதுதானே பிரபஞ்சோற்பத்தியிலே உபாதான காரணமாயிருக்கின்ற பிரகிருதியும், நிமித்தகாரணமா யிருக்கின்ற காலாதியுமாவதால் நிதானமென்னுங் காரணம், சாந்தம்=[வி - ச - பா - ம்] நிஷ்களம், நிஷ்கிரியம், சாந்தம் என்னும் சுருதியால் விஷயபோகங்களில் அசங்கமா யிருத்தலால் சாந்தம், அன்றியும், [ல - தீ] காஷ்டத்திலுண்டான வக்கினி அக்காஷ்டத்தைச சுட்டுத் தானுஞ் சாந்தமாவதுபோலச் சுருதியினானும், குருவினானும் உளதாகா நிற்கும் அகண்டாகார விருத்திஞானம் பிரஹ்மத்திற்கு வேறான சாத்திர முதலியவைகளைச் சுட்டுத் தானும் சாட்சியாகிய தன்னி லிறத்தலால், நிஷ்பிர பஞ்சமாகிய தான் சாந்தம், சத்தியம்=[வி - ச - பா - ம்] பரமார்த்த சத்திய சொரூபமா யிருக்கையினாலே பிரதீதிக சத்தியமா யிருக்கிற சுத்திரஜத, இரச்சு சர்ப்பாதிகளினும், வியவகார சத்தியமா யிருக்கிற ஆகாசாதி பதார்த்தங்களினும் விசேஷமாக நித்திய பரிபூரண சார்வகாலிக சர்வசாட்சியா யிருத்தலின் சத்தியம், கேவலம்=ஏகமாவதால் அல்லது, முழுது மாவதால் அல்லது, நிசசயமா யிருத்தலால் அல்லது, ஞானமா யிருத்தலால் அல்லது, சுத்தமா யிருத்தலால் கேவலம், துரியம்=[ல - தீ] நான்காம்பொருள்; அஃதெங்ஙனம்? ஓரவஸ்தையுண்டாகில், மற்றோரவஸ்தை தோன்றாமல் அழியாநிற்கும் அவஸ்தாத்திரயப் பிரபஞ்ச மூன்றிற்கும் சாட்சியாய், நான்காம் பொருளா யிருத்தலின் துரியம், சமம்=[வி - ச - பா - ம்] சர்வ வுலகங்களினும் சர்வ வியவகார ரகிதமாயிருத்தலால் சமம், அல்லது, [ல - தீ] தாரதம்மியமான உலகங்கள், பிரமா முதற் றம்பபரியந்தம் உத்தம, மத்திம, அதன்மமான உடல்கள், ஞானி, யோகி, உபாசகன் கர்மியென்னும் சீவர் முதல் ஈசுரன் பரியந்தந் தாரதம்மியமாக விளங்காநிற்கும் வஸ்துக்க ளனைத்தினும் சத்தாகாரமாய்த் தாரதம்மியமற எப்போது மிருத்தலால் சமம், திருக்கு=[ல - தீ] அறிவதுயாது அது திருக்கு, பிரஹ்மம் சர்வ திருசியங்களையும் அறிவதா யிருத்தலால் திருக்கு, கூடஸ்தன்=[ஷை.] கூடம்=கொல்லன் அடைகல்லு; அதுபோல நிர்விகார ரூபமாயிருத்தலால் கூடஸ்தன், அல்லது [விசாரசாகரம்] கூடமென்பது மித்தையாகிய புத்தியும், சிதாபாசனுமாம்; அவைகளில் அசங்கரூபமாக இருப்பவன் கூடஸ்தன்,

சாட்சி=[வி-சு-பா-ம்] நேரே மறைவில்லாமற் சொரூபபூத ஞானத்தாலே சகல பிரபஞ்சத்தையும் பார்ப்பதால் சாட்சி, போதம்=[பஞ்சதசி] சத்த முத லான விடயங்க ளெந்தனையும் அறியும் சம்வித்ரூபமாவதால் போதம், சுத்தம் =[ல-தி] சாதிவர்ணாச்சிரமாதித் துடக்குற்றசீவன், இருபையவதார முத லிய துடக்குற்ற ஈசுரன், சீவசங்கத்தால் அசுத்தமுற்ற பூதங்கள், இவைக்கு வேறானதான் இவைகளோடு கூடினுந் தன்னை அசுத்தம் பற்றாமையினாலும், இவை தனது விவர்த்த மாதலாலும் சுத்தம், இலக்கியம்=இலட்சணையினாற் போதிக்கப்பட்ட அர்த்தமாகலின் இலட்சியம், சநாதனம்=[முத்திகண்டம்] சந்ததம் ஒரேவடிவா யிருத்தலால் சநாதனன், சீவன்=[பிருகந்கோசம்] கடாவச்சின் னாகாசம்போலச் சரீரத்திரயங்களால் அவச்சின்னமா யிருத்த லால் சீவன்,

"சீவனா யிருந்து நானுஞ் சிற்பர தத்து வத்தே
மேவிய நனைவை யுற்றோர்."—

என்னும் வாசிட்டத்துங் காண்க. தத்துவம்=[வி-சு-பா-ம்] தத்து வம், அமிர்தம், சத்தியம், பரமார்த்தம், யது, தது, துவம் என்னும் இவ்வேழு சப்தங்களும் பரமார்த்தசத்தா யிருக்கின்ற பிரஹ்மத்தை யுணர்த்துகின்றன வாகலின் தத்துவம் பரப்பிரஹ்மம், விண்=[வாசிட்டம்] "நடமான வதன் புற மில்லாவுமயினால்" விண், அல்லது அசங்கத்துவாதி தர்மத்தால் ஆகாச சதிருச மாவதால் விண், சோதி=[மு-ம்] சூரியன் முதலிய சோதிகளை விள க்கு விக்குஞ் சிற்சோதியாயதால் சோதி, அல்லது [வி-சு-பா-ம்] இதரமாக விருக்கின்ற ஆதித்திய சந்திராதிகளை யபேட்சியாமற் றானேமிகவும் பிரகாச மாகப் பிரகாசிக்கின்றதால் சோதி, ஆன்மா=[ல-தி] நானென் றபிமானத் திற் கிடமாய்த் தோன்றுகின்ற புத்திராதி, காரியகாரணதேகம்,சீவன் இவை வெவ்வேறான நாமமடைந்து நனக்கந்நியமாகத் தோன்றலானும் இவைக்கப் பாலாய், ஞானகனப் பிரஹ்மமாகிய தான் அந்நிய மாகாமையானும் ஆன்மா, [வாசிட்டம்.]

"அகமகமென் றன்னதனுயிரி னிடத்துமிருந் தலவாத முறைப்ப தாகி, மிகமொழியா யான்மதத் துவமான சொரூபத்தை நினைத்தல் செய்வாம்."—என்றது.

[பிரமகீதை.]

"உரையாடு கின்றநா மென்னு முரைக்கு மறிவுக்கு மறிவாய் நாடுகின்ற வுணர்வொன் றுண் டதுவே யான்மா நமக்கெல்லாம்."— என்றது.

முத்தம்=[வி-சு-பா-ம்] விடுபட்டவனென்னும் சுருதியால் சுபாவ மாகச் சம்சாரபந்தம் சர்வாத்மனு இல்லை, ஆகலின் முத்தம், விபு=[வி-சு-பா-ம்] சகல பிரபஞ்சா காரராகவும், இரண்ய கர்ப்பாதி விவிததேவராகவும் நாநாவிதமாக வுண்டாகின்றதால் விபு,அன்றியும் சர்வத்திர பரிபூரணராகவும்,

லோகநாயகராகவும் இருப்பதால், விபு [ல - தி] அவித்தியா விசிட்டனின் விபு லிங்கதேகம், இதனின் விபு தூலதேகம், இதனின் ஒன்றின் ஒன்று விபு பிருதுவியாதி பூதங்கள், இவற்றினொன்றி னொன்று விபு இரண்யகர்ப்பாதி, இவைகளான் மட்டிடக் கூடாது விரிந்த மாயா விசிஷ்டனும் மட்டிடக் கூடாது விரிந்த அஸ்தி பாதிப் பிரிய ரூபமாகலின் விபு, சூக்குமம்=[வி - ச - பா - ம்] "நுண்மை யாமதி னுண்மையாம்"என்னும் சுருதி யானும், "சர்வ கதம் சூட்சுமம்" என்னும் சுருதி யானும் உத்தரோத்தரம் ஸ்தூல காரணமா யிருக்கின்ற பிருதுவியாதி பூதங்களும், கந்தாதி குணங்களும் பிரளயத்திலே யில்லாமையினாற் சூக்குமம், வாசிட்டத்தில், "சூக்கமாயெட் டாமையினாற் சொன்னபரமே பரமாணு" என்றது. என்று இவ்வண்ணம் விதிகுணங் கள் மொழியும் வேதம்=என்றிவ்வாறு விதிகுணங்களைப் பிரதிபாதியாநிற் கும் வேதமானது, எ - று. (136)

(280) [இனி நிடேதநாமங்கள் கூறுகின்றார்.]

அசலநிரஞ் சனமமிர்த மப்பிரமே யம்விமலம் வசனாதீதம்
அசடமநா மயமசங்க மதுலநிரந் தரமசோ சரம கண்டம்
அசமநந்த மவிநாசி நிர்க்குண நிட்களநிரவ யவமநாதி
அசரீர மவிகார மத்துவித மெனவிலக்கா மநேக முண்டே. (137)

இ - ள். அசலம்=[ல - தி] வீடு, ஊர், தேசம் இவைகளில் ஒன்றை விட்டு மற்றொன்றில் அலைகின்ற ஸ்தூல தேகம், உலகங்களில் ஒன்றினின் றொன்றில் அலைகின்ற லிங்க தேகம், காரண தேகங்களோடு பிருதுவியை வளையமாகச்சுற்றி யலைக்கின்ற அப்பு, அக்கினி இவைகளை யலைக்கின்ற வாயு, இவைகட்கிடமாயுள்ள ஆகாசம் இன்னும் பௌதிக சமஷ்டியோடுகூட இவை யனைத்தையும் உடலாகக்கொண்டு அறிவினுள்ளே அலையாநின்ற ஈசுரனும், அதிவேகமாக ஆகாசத்திற் கருடன் போலப் பத்துத் திக்கினும் நூறுகோடி கற்பங்களோடி அளவிட வேண்டுமென்று பார்க்கினும் அளவுகாணக் கூடாது தாய், அங்கங்கே சாட்சியாய் அசைவற் றிருக்கின்றதால் அசலம், நிரஞ்ச னம்=அஞ்சனம்=தமம் : மலின சுபாவத்தால்; அஃதில்லாமையால் நிரஞ் சனம், அன்றியும், ஆத்மபோதடீகா அஞ்சனரகிதன் நிரஞ்சனன்; அஃதெங் ஙனம்? மனோவியாபாரமே அஞ்சனமாகலின், மனமே யில்லாமலிருத்தலால் நிரஞ்சனம், இன்னும் லட்சண விருத்தியிலுங் காண்க, அமிர்தம்=[ல - தி] மிர்தமற்றது அமிர்தம் : யோகாமிர்தம், தேவாமிர்தங்களைப் புசித்து நமக்கு மரணமில்லை யென்றிருப்பவரும் ஈசுரப் பிரளயத்தில் மரணமாவதுபோல அநந்தாநந்த சின்மாத்திரமே நாமென்று மோட்சாமிர்தமான தன்னை யடைந்தோர் மரணயாகாமையின் அமிர்தம்;[வி - ச - பா - ம்] மூர்காலத்தும் மரண மில்லாமல் நித்தியமாயும், சத்தியமாயும் இருத்தலின் அமிர்தம், அப் பிரமேயம்=[வி - ச - பா - ம்] சர்வப்பிரமாணங்கட்கும் விடயமாகாமையின் அப்பிரமேயம் சத்தஸ், பரிச, ரூப, கந்தாதிகளான குணங்கள் இவனிடத்தில் லாமையினான் கடபடாதிகள்போலப் பிரத்தியட்ச விஷயரல்ல, காரியலிங்க

மில்லாமையின் அநுமான விஷயரல்ல, சாதிருசமில்லாமையின் உபமான வேத்தியரல்ல, ஜாதிகுணக்கிரியைகளில்லாமையின் சத்தப்பிரமாண விஷயருமல்ல, உபாதான தர்மமில்லாமையின் அர்த்தாபத்தி விஷயருமல்ல, பாவ [ஹாவ] ரூபமான சிற்சொரூபராகலின் அபாவகோசரருமல்ல, அபாவத்திற்குச் சாட்சியாயிருத்தலானும் அபாவ விஷயரல்ல; இப்படிச் சகல பிரமாணங்கட்கும் விஷயராகாவிடில் வேதாந்த சாஸ்திரங்களாலே எப்படி யறியப்படுவாரெனின், சகலமான பிரத்தியட்ச, அநுமான, உபமான, சத்த, அர்த்தாபத்தி, அபாவசாஸ்திராதிகட்கும் சாட்சியாக அறிகிறவராகவும், சுவயம்பிரகாசராகவும் இருக்தலின் பிரமாணங்கட்கு விஷயராகா விடினும் தம்மிடத்திற் கற்பிக்கப்பட்ட சகலபிரபஞ்ச பிரமாணங்களையும் சொப்பிரகாசத்தினாலே மிதலையென்று நிச்சயித்து ஆநந்த சின்மாத்திரமாயிருத்தலால், சாஸ்திரயோனியென்று சொல்லப்படுகிறார்; ஆகலின் அப்பிரமேயம், விமலம்= [ல-தீ] மலமற்றது, மலமூத்திராதி மலம்பொருந்திய பிருதுவி, கலங்கல், புகை, புழுதி முதலான மலம்பொருந்திய மற்ற நான்கு பூதங்கள், கோழை, சளி, பித்தம், மலம், மூத்திர முதலான மலமுடைய தூலதேகம், காசபடலங் காமக்குரோத முதலான மலமுடைய லிங்கதேகம், ஞானஞ்ஞான மலமுடைய சீவன், பஞ்சகிருத்தியாதி மலமுடைய ஈசுரன் இவைக்கு வேறாயாதொரு மலமுமற்று பிரகாச ஞானாநந்த வடிவாகலின் விமலம், வசனாதீதம்=வாக்கின் சக்திவிருத்திக்குக் கோசரமாகாமையின் வசனத்திறகெட்டாதது, அசடம்=தேக முதலியவைபோலச் சடமாகாமையின் அசடம், அநாமயம்=ஆமயம்=நோய்; அஃதற்றதால் அநாமயம், [ல-தீ] ஆதிவியாதி பாசனையென்னும் மூன்று சரீரத்துச சுரங்களுந் தனக்கு இல்லாமையின் அநாமயன்,

"சுபூஜும்வினை நலனுமன றியதுநமா மமமைமுமபசிமையரு ந; லலகுறாந துயர்முழுது முடையானல் பெருநபொழுதும" —என்னும்,

பிரமகீதையினுநுங் காணக. அசங்கம்=[விசாரசந்திரோதயம்] சங்கமென்பது, சம்பந்தம்; அது சஜாதீய விஜாதீய சுவகதபேதத்தால் மூவகையாம்: பிராமணனுக்கு அந்நிய பிராமணரோ டுளதாகுஞ் சம்பந்தம் சஜாதீய சம்பந்தம், சூத்திரராதியரோ டுளதாகுஞ் சம்பந்தம் விஜாதீயசம்பந்தம், அவயவாதிகளோடுள்ள சம்பந்தம் சுவகதசம்பந்தம். தான் ஏகமாகலின் சாதியில்லை, சீவன், ஈசுரன், பிரமா, விஷ்ணு, சிவன், நான், நீ முதலிய பேதமோ உபாதியாற் பண்ணப்பட்டது ஆகலின், தனக்கு யாதொன்றேனுஞ் சஜாதீய சம்பந்தமில்லை, அப்படியே தான் அத்வைதமாயும், சத்தாயுமிருத்தலின் தனக்குப் பின்னமாக யாயை, மாயாகாரியமான தூல சூட்சுமப் பிரபஞ்சங்கள் அசத்தாம், அசத்து அற்பமும் வஸ்துவன்று ஆகலின், தனக்கு யாதொன்றேனும் விஜாதீய சம்பந்தமில்லை, அப்படியே தான் நிரவயவமாகலின் சச்சிதாநந்தாதிகளோ தன தவயவமல்ல, பின்னையோ ஏகரூபமாகலின் தனது சொரூபமாம் இதனால் தனக்கு யாதொன்றேனும் சுவகத சம்பந்த மில்லை;

இவ்வாறு சர்வசம்பந்தமு மில்லாமையின் அசங்கம், அதுலம்=[வி-ச-பா-ம்] உபமானமற்றது, இதற்குச் சமானவஸ்து ஒருகாலத்தும், ஓரிடத்தும் இல்லாமையின் அதுலம், நிரந்தரம்=அந்தரம்=அவகாசம்; அஃதில்லாதது நிரந்தரம், [நிச்சித்திரம் என்றுபொருள்]. இதனை,

"நிலன்விண் கால்கிரி திசையெலா மேவியு நெடுஞ்சிலை புரை யாகா-"

என்னும் வாசிட்டத்தால் அறிக. அகோசரம்=கோசரம்=விடயம், தானொன்றிற்கும் விடயமாகாமையின் அகோசரம், அகண்டம்=காலதேச வஸ்துக்களால் கண்டித மாகாமையின் அகண்டம், அசம்=ஜநநமில்லாதது, [வி-ச-பா-ம்] நித்திய சித்தமாக இருப்பது கொண்டு ஜநநத்தை யடையாமையின் அசம்,

"ஊறுபட வொன்றினுமே பிறத்தலபிறந் துளவாதல்
வேறுபட வளர்தல்வளர்ந் தயலொன்றாய் விளைந்தமைதல்
மாறுபடத் தேய்தலற மாய்தலென வருகின்ற
வாறியல்பு முடம்பன்றி யறிவடை யா"—

என்னும் கீதையினால் அறிக. அநந்தம்=[வி-ச-பா-ம்] நித்தியமாகவும், சர்வகதமாகவும் இருத்தலின் தேசகால வஸ்துக்களால் பரிச்சேதமில்லாமையான் அநந்தம், அவிநாசி=நாசரகிதமாகலின் அவிநாசி, நிர்க்குணம்=[வி-ச-பா-ம்] பரமார்த்த தசைக்கண் குணத்திரயங்க ளில்லாமையான் நிர்க்குணம், அல்லது சத்த, ஸ்பரிசாதி குணரகிதமாயும், நித்தியசுத்த ஞானசுரூபமாயும் இருத்தலின் நிர்க்குணம், [ல-தீ] சத்துவ குணத்தால் ஈசுரனையும், இரஜோ குணத்தால் சீவரையும், தமோ குணத்தால் சகத்தையு முண்டாக்கி அவைகளை யுகந்தோறும் விரித்தடக்கி விநோதியாநிற்கும் பிரகிருதிக்கு அதீதமாய்ச் சுத்த அதிஷ்டான சுகஸ்வரூபமாகத் தானிருத்தலின் நிர்க்குணம், நிட்களம்=களை=அவயவம்; அஃதின்மையின் நிட்களம், [ல-தீ] பிரஹ்மம் ஆகாசவுருவா யிருக்குமென்றது ஒருவேதம், அதற்கு நாமரூபமில்லை, அமூர்த்தமா யிருக்குமென்றது ஒருவேதம், பிரஹ்மத்திற்கு முன்பின் உட்புறமில்லை, அது சாட்சியாயிருக்குமென்றது ஒருவேதம், அறியப்பட்டது மறியப்படாததும் பிரஹ்மமல்ல, அவைக்கந்நியமாய் அவைகளைப் பிரகாசிப்பிக்கும் அறிவு நிராகாரமென்றது ஒருவேதம்; இவ்வாறு கூறுகின்ற சுருதியானும், சூரியனை நாடாநிற்கும் மனதோடுகூட நீண்ட சிதாபாசனைக் கற்பித சேதன மென்றது கொண்டு வாளால் வெட்டுதலும், அக்கினியாற் சுடுவதும், நீட்டின கரத்திற் றூக்குவதுபோற் றூக்காமற்போமாயின், சுபாவசித்து ரூபரகிதமென்னல் வேண்டுமோ வென்னும் உத்தியானும், தான் உள்ளிந்திரியம், வெளியிந்திரியங்களுக்கு விஷயமாகாமல் அவைகளைப் பிரகாசிப்பிக்கும் அநுபவத்தானும் நிஷ்களம், நிரவயவம்=[ல-தீ] அஸ்தபாதாதி அவயவங்களையுடைய மூவகைச் சரீரங்கட்கும் அந்நியமாய், ஆகாயம்போலும் உருவமாய்,

மூவகை யவஸ்தைகட்குஞ் சாட்சியாய், நித்தியமாகியுள்ள தனக்குத் தனக்கென ஓரவயவமின்மையானும், தன்போல உண்மையாயில்லாமல் தனதவயவமென்று சொல்லத் தக்கதான பொருளும் அல்லாமல் தன்னிற் கற்பிதமாய்த் தோன்றுகின்ற பிரபஞ்சத்தைக் குறித்தும் ஓரவயவமின்மையானும் தான் நிரவயவம், அநாதி=ஆதி=உற்பத்தி, அஃதில்லாதது அநாதி, [வி-ச-பா-ம்] இதற்குக் காரணமில்லை, இதுதானே சகத்பிராந்திக்கு ஆதிகாரணமாயும், அதிஷ்டானமாயு மிருத்தலால் அநாதி [ல-தி] யாவைக்குங் காரணமான தனக்குக் காரணம் இன்மையானும், அநாதியென்று கூறும் கர்மம், அஞ்ஞானம், வேதம், ஈசன், சீவன் என்னும் சோபாதிகசகத்தும், நிருபாதிக சைதந்நியமான பிரஹ்மமும் ஆகிய இவ்வாறினுள்ளே கற்பித அநாதியான ஐந்திற்கும் மூலமான சித்திற்கு ஆதியின்மையின் அநாதி, அசரீரம்=தேகமின்மையது, [ல-தி] சரீரங்களையுடைய கருமி, யோகி, உலகபாலர், வைசுவாநரன் முதலிய சீவர்க்கும், சகசரீரமுடைய ஈசுரனுக்கும் அந்நியமாய் விளங்காநிற்குந் தான் சிற்சதாநந்த ரூபமாவதானும், தனக்கொரு சரீரமின்மையானும், சரீரம் என்னதென்னும் அநுபவத்தாற் றனக்குச்சரீரம் அந்நியம், அநித்தியமென்னும் யுத்தி சர்வலோக சம்மதமாவதானும் தான் அசரீரன், அவிகாரம்=விகாரமின்மையது, [ல-தி] பஞ்சகோசங்களையும், அவைகளின் விகாரங்களையும் அறியும் அறிவே வடிவாதலால் அவிகாரம், அத்துவிதம்=[ல-தி] துவிதமென்பது இரண்டு; அஃதின்மையது அத்துவிதம், துவிதசகந் தோன்றுவதனாற் றான் அத்துவித மென்பது எவ்வாறெனின், மரஞ் செடி கொடி முதலியவை மண்ணிலே யுண்டாய் மண்ணிலேயிருந்து மண்ணாகவே அழிதல்போலச சாக்கிராதிய அவஸ்தைகளிற் றோன்றுகின்ற சகம் சாட்சியாகிய தன்னிலே யுண்டாய்த் தன்னிலே யிருந்து தானாகவே அழிதலானும், தன்னைப்போல மற்றோர் வஸ்து இன்மையானும் தான் அத்துவிதம், என விலக்கு ஆம் அநேகம் உண்டு=என்று விஷேதங்களான நாமங்கள் அநந்தமுள. எ-று.

அநந்தமென்றமையால், இன்னும் அஸ்தூலம், அநணு, அஹ்ரஸ்வம், அதிர்சயம், அக்கிராஹியம், அசப்தம், அஸ்பர்சம், அரூபம், அவ்வியயம் என்பன முதலியவுங் கொள்க. (137)

[இப்படி விதிமுகத்தானும், எதிர்மறை முகத்தானும் பிரஹ்மத்தைச் சுருதிகள்கூறும் சத்தங்கள் அநேகமாயினும் பொருளொன்றே யாவது போலச்சச்சிதாநந்த சத்தங்கட்கும் பொருளொன்றேயெனச் சுருதியாற் சந்தேகநிவிர்த்தி செய்கின்றார்.]

இன்னவகை விதிவிலக்குக் குணங்களன் றாய்ச் சேர்ந்தொருமித் தெல்லாங் கூடிச், சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ் சொற்கள், பின்னபத மாமதனாற் சத்தாதி குணப்பொருளாம் பிரம மேகம், அன்னபொரு ளொருமையற்றிற் றகண்டபரி பூரணமா யாவாய் நீயே. (138)

இ - ள். இன்னவகை=இப்படி (அநேகமாகச் சுருதிகள் கூறுகிற்கும்), விதி விலக்குக் குணங்கள்=விதிநிஷேதங்களாகிய குணங்கள், நன்று ஆய்ச் சேர்ந்து ஒருமித்து எல்லாக்கூடிச் சொன்னபொருள்=நன்றாகச் சார்ந்தொன்றுபட்டு முழுவதுந்திரண்டு சொல்லிய வஸ்துவானது, ஒன்று அன்றி இரண்டு இல்லை=ஒன்றே யல்லாமல் உபயமில்லை, ஒரு பொருளை=அகண்டைகரசமான பிரஹ்மத்தை, சொல்லும் சொற்கள்=பிரதிபாதியாநின்ற சத்தங்கள், பின்னபதம் ஆம்=(பரஸ்பரம்) பின்னமான சத்தங்களாம், அதனால்=அக்காரணத்தால், சத்தாதி குணப்பொருள் ஆம் பிரமம்=சத்து, சித்து, ஆநந்தமென்னும் விசேடணத்தையுடைய வஸ்துவாகிய பிரஹ்மம், ஏகம்=ஏகரூபமாம், அன்னபொருள் ஒருமை அறிந்து=அத்தன்மையான பிரஹ்மத்தின் ஏகரசத்தன்மையை (ச் சுருதிப்பிரமாணத்தால்) உணர்ந்து, அகண்டபரிபூரணம் ஆய் ஆவாய் நீயே=(சஜாதியாதி) பேதரகிதமான பரிபூரணமாயிருப்பாய் நீ. எ - று.

கைமலை. கறையடி, புழைக்கை என்னுஞ் சொற்கள் பின்னபதமாயினும் அவைகளின் பொருளான யானை பின்னமாகாமல் ஒன்றேயாவதுபோலும், ஓர் புருடனைப் பிதா, மகன், தம்பி என்னும் அநேகசொற்களாற் சொல்லினும் அவன் அநேகனாகாமல் ஒருவனே யாவதுபோலும் சச்சிதாநந்தாதி பதங்களாற் சுருதிகூறிய பிரஹ்மமும் அகண்டைகரசமாக இருத்தலாற் சந்தேகமொழிந்து அதுவாயிருத்தி யென்பதாம். (138)

(281) [பிரஹ்மம் நிர்க்குணமென்றதால் அதற்குக் குணங்கூறுதல் என்தாய் மலடி யெனல்போல அசங்கதமா மென்றசங்கித்துக் குணமாயின் அங்ஙனமாம், சொரூபமாகலின் அங்ஙனமாகா தென்று பரிகரிக்கின்றார்.]

நிர்க்குணவத் துவின்குணங்க ளுரைப்பதுதாய் மலடியெனனிக
ரென்றேதே, சற்குணனே வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுரா
ருண்டோ, நற்குணவே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப்பிரமஞானந்
தோன்றச், சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களன்று பிரமமாஞ்
சொரூபந் தானே. (139)

இ - ள். நிர்க்குண வத்துவின் குணங்கள் உரைப்பது=நிர்க்குணவஸ்துவிற்கு (ஆநந்தாதி, அஸ்தூலாதிகளான அநேக) குணங்களைச் சுருதி கூறுவது, தாய் மலடி எனல் நிகர் என்றே=(என்) தாய்மலடியென்னுங் கூற்றிற்கிணையாய், * வியாகாதமாமென்று சங்கியாதே, சற்குணனே=(சமாதி) சற்குணங்களையுடைய மைந்தா, வத்துநிலை உரையாமல்=வஸ்துவினுடைய (ஆநந்தாதி, அஸ்தூலாதி) குணங்களை (ச் சுருதியானும், பெரியோர்களானும்) கற்பியாமல், அறியவல்ல சதுரர் உண்டோ=அறியச்சாமர்த்தியமுடைய அறிஞருளரா? (இலர்), நற்குண வேதங்கள்=(ஆகலின், யாவை

* வியாகாதம்=முன்னுக்குப்பின் விரோதமான வார்த்தை.

ரிடத்துங்) கருணையுடைய சுருதிகள், இந்தச் சீவன் முத்திபெற=(130-வது செய்யுளிற்கூறிய) லட்சணமுடைய சீவன் முத்திச் சுகமடையவும், பிரமஞானம் தோன்ற=(முதற்படலத்தில், 59-60-வது செய்யுளிற்கூறிய பிரஹ்மத்தின் பரோட்ச அபரோட்ச விஞ்ஞானம் அதிகாரிக்குண்டாதற் பொருட்டும், சொல் குணங்கள்=கற்பியாநின்ற குணங்கள், பிரமத்தின் குணங்கள் அன்று=பிரஹ்மத்தினுடைய குணங்களல்ல, [மற்றென்னையெனின்:—] பிரமம் ஆம் சொரூபந்தானே=பிரஹ்மத்தின் சொரூபமே. எ-று.

"வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுரனண்டோ" எ-கு, உ-ம், வாசிட்டம்,

"சத்தியம் பிரமமான்மா பரமுதற் சாற்ற வேண்டி
யித்திறப் பெயர்மே லோரா விடப்பெற்ற விந்த வான்மா"

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"பிரமமாஞ் சொருபந்தானே" எ-கு, உ-ம், வாசிட்டம்,—

"எல்லாமொன் றுரைத்ததெலா மறிவித்தற் பொருட்டேயா மிசையச்சொன்ன,சொல்லாமெலன் வீணன்றே யாதமினு லோமொன்று துணிக வித்தை"— (139)

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

[சச்சிதாநந்தம் ஏகரசமென்பதிற் சுருதிப் பிரமாணத்தால் சந்தேகந்தெளிர்த சீடன் யுத்தியினுலும் சந்தேகநிவிர்த்தி யடைதற்பொருட்டு வினுதல்.]

மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே மொழியக்கேளீர், ஏகபரி பூரணமா மென்சொருபமென் னுளத்தி லிறுகும் வண்ணம், ஆகமங்கள் சொன்னபடி யென்னையகண் டார்த்தமா வறிந்தேனையா, ஊகமுமொத் திடவுரைத்தாற் பரமாநந்த லாகரிமே லுறைக்குநெஞ்சே. (140)

இ-ள். மோக இருள் கெட=(மனது காரியவர்க்கங்களோடு) அஞ்ஞானவிருள் நாசமாக, கோடி அருணன் என வரு குருவே=கோடி ஆதித்தியர்போன் றெழுந்தருளிய குருவே, ஐயா=ஐயனே, மொழியக்கேளீர்=(அடியேன் ஓர்) விண்ணப்பஞ்செய்யக் கேட்டருள்வீராக, ஏக பரிபூரணம் ஆம் என் சொரூபம்=ஏகரச. சச்சிதாநந்த பரிபூரணமாகிய எனது சொரூபவநுபூதி, என் உளத்தில் இறுகும் வண்ணம்=எனது அந்தக்கரணத்தின்கண் ணழுந்தும்படியாக, ஆகமங்கள் சொன்னபடி=சுருதிகள் கூறியவாறு, என்னை அகண்டார்த்தமா அறிந்தேன்=சச்சிதாநந்தமாகிய வென்னை அகண்டைகரசப்பொருளாக நிச்சந்தேகமாயறிந்துகொண்டேன், ஊகமும் ஒத்

திட உரைத்தால்=(சச்சிதாநந்தம் ஏகமென்பதில்) உத்தியும் எனக்குச் சம்மதமாக வருளிச்செய்தால், பசுமரத்தில்ஆணிபோல்=பச்சைமரத்தில்(அறைந்த) ஆணிபோல, நெஞ்சு உறைக்கும்=(அநுபூதியின்கண் என்) மனமழுந்தும். எ - று.

"மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே" எ - து, சமுசயத்திற்குக் காரணமான அஞ்ஞானவிருளை அற்பமுஞ் சேடியாமல் சுலபமாகப் போக்குவிக்கும் சுருதி, யுத்தி, அநுபூதிவலியைப் பூரணமாயுடையீராயிருத்தலினென்க. (140)

(282) [உத்தியினால் சச்சிதாநந்தங்களி னொருமையைத் தெரித்துணர்த்துகின்றார்.]

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தானாற் சாட்சி யெங்கே
சித்தேசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்குத் திதியு மில்லை
ஒத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல சுகமாகு மூகத் துக்கோர்
வித்தேயன் னியமாகிற் சடமசத்தாஞ் சுகாநுபவம் விளைந்தி டாதே.

இ - ள். சத்தே சித்து ஆகும்=இருக்கின்றதே விளங்குகின்றதாம், அயல் எனில்=(இருக்கின்றதற்கு விளங்குகின்றது) அன்னியமெனில், அசத்து ஆம்=(இருக்கின்றதற்கு அந்நியமான சித்து இருப்பில்லாமையின், சசவிஷாணம்போல) அசத்தாம், அசத்து ஆனால்=(அசசித்து இருப்பில்லாமற் சசவிஷாணம்போல்) அசத்தாயின், சாட்சி எங்கே=அது சாட்சியாதல் எவ்விடத்திற்காணப்படும்: (ஓரிடத்துங் காணப்படாது; ஆகலின், சத்தே சித்தெனக்கொள்ளல்வேண்டும்.) சித்தே சத்து ஆகும்=விளங்குகின்றதே இருக்கின்றதாம், அயல் எனில்=(விளங்குகின்றதற்கு இருக்கின்றது) அந்நியமெனில், சடம் ஆம்=(அச்சத்திற்கு விளங்குந் தன்மையில்லாமையின், கடபடாதிகள் போல அச்சத்து) சடமாகும், சடங்களுக்குத் திதியும் இல்லை =சடபதார்த்தங்கட்கு (இரசசு சர்ப்பம்போல) இருப்புமில்லை; (ஆகலின், சித்தே சத்தாகுமெனக் கொள்ளல் வேண்டும்), ஒத்தே தோன்றிய=(இவ்வாறான யுத்திக்குப் பின்னமாகாமல்) ஏகமாகவே தோன்றிய, சத்தும் சித்தும்=சத்துஞ் சித்துமே, நல்ல சுகம் ஆகும்=பரமப்பிரேமாஸ்பதமான ஆநந்தமாம், அன்னியம் ஆகில்=சத்தாகிய சித்துக்கு ஆநந்த மந்நியமாயின், சடம் அசத்து ஆம்=சடமும், அசத்துமாம், (ஆகவே) சுகாநுபவம் விளைந்திடாதே=ஆநந்தாநுபவ முண்டாகாதே? (ஆகலின், சத்தும், சித்துமே ஆநந்தமெனக் கொள்ளல்வேண்டும்; கொள்ளவே, பிரஹ்மம் அகண்டைகரசமென்பது யுத்தியாற் பெறப்படுகின்றது), ஊகத்துக்கு ஓர் வித்து=(சச்சிதாநந்தங்களை அகண்டார்த்தமாக) யூகித்தற்கு இவ்வுத்தியே தலைமையான யுத்தியாம். எ - று.

"ஊகத்துக்கு" என்றதற்கு, ஏனைய நாமங்களையும் ஊகித்தற் கெனினுமாம். (141)

16493

[இன்னும் சச்சிதாநந்தங்கள் அகண்டார்த்த மென்பதை யுத்தியால் வற்புறுத்திக்கூறி முடிக்கின்றார்.]

வீயாத சத்து முன்னம் விளங்குவது தன்னாலோ வேறொன்றா
லோ, வாயால்வே றெனிலதுவு மசத்தோ சத்தோ வசத்தேன் மலடி
மைந்தன், பேயாகாரியஞ் செயுமோ சத்தெனவிப் படியதையும் பிரி
த்துச் சொன்னால், ஓயாத வவத்தையாங் குதர்க்கவிகற் பங்களை விட்
டொழிந்தி டாயே. (142)

இ-ள். வீயாத சத்து=காலத்திரயாபாத்தியமான சத்து, முன்னம் விளங்குவது=ஏற்கெனவே விளங்காநிற்பது, தன்னாலோ வேறு ஒன்றாலோ=(தீபம்போலத்) தன்னாலேயே விளங்குகின்றதா? (அல்லது, தீபத்தினாலே கடம்போலத்) தனக்கு அந்நியமான வேறொரு பதார்த்தத்தினாலே விளங்குகின்றதா, வாயால் வேறெனில்=வாக்கால் தனக்கந்நியமான ஓர் பதார்த்தத்தால் விளங்காநின்றதென்னின், அதுவும்=(ஆன்மசத்திற் கந்நியமான) அப்பதார்த்தமும், அசத்தோ சத்தோ=சத்து விலட்சணமா? அல்லது *சதந்தரமா, அசத்தேல்=சத்து விலட்சணமென்று சொல்லுவாயாகின், பேயா=மதிகேடனே, மலடி மைந்தன் காரியம் செயுமோ=வந்தியாசுதன் ஓர் காரியஞ் செய்வதுமுண்டா, (சத்து விலட்சணம் வந்தியாசுதன்போல அசத்தாகலின், அதற்குச் சத்தைப் பிரகாசிப்பிக்கிற ரூபமான காரியங்கூடாதென்பது கருத்து), சத்து என=சதந்தரமென்று, இப்படி=இவ்விதம், அதையும்=அவ்வந்நியத்தையும், பிரித்துச் சொன்னால்=பகுத்துக் கூறிடில், ஓயாத அவத்தை ஆம்=(அச்சதந்தரம் நிக்கிருஷ்டமா யிருந்துகொண்டு அசசத்தைத் தோற்றுவிக்கிறதா? அல்லது, சமானமா யிருந்துகொண்டு தோற்றுவிக்கிறதா? அல்லது, ஒன்றினால் தான் பிரகாசவதிசயம்பெற்றுத் தோற்றுவிக்கிறதா? அல்லது, தானே தோன்றிக்கொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதா என்று இப்படி நான்குவிதமான விகற்பம் வரும்; வரவே, அச்சதந்தரம் நிக்கிருஷ்டமா யிருந்துகொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதென்னும் முதல் விகற்பங்கூடாது. என்னை? சூரியப்பிரகாசத்திற்கு நிக்கிருஷ்டமாகிய தீபமும் சூரியனைத் தோற்றுவித்தல் வேண்டும்; அங்ஙனங் காணப்படாமையின் என்க. அச்சதந்தரம் சத்துக்குச் சமானமா யிருந்துகொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதென்னும் இரண்டாம் விகற்பமுங் கூடாது. என்னை? தீபத்திற்குச் சமானமான மற்றொருதீபம் அத்தீபத்தைத் தோற்றுவித்தல் வேண்டும்; அங்ஙனங் காணப்படாமையின் என்க. அச்சதந்தரம் ஒன்றினால் தான் பிரகாசவதிசயம்பெற்று அச்சத்தைத் தோற்றுவிக்கிறதென்னும் மூன்றும் விகற்பமுங் கூடாது. என்னை? அச்சதந்தரத்திற்கும் பிரகாசவதிசயந்தருகிற வஸ்து சத்தா? அல்லது; அசத்தா என்று விகற்பிக்க வரும். சத்தென்னின்:—அது சொப்பிரகாசமா? அல்லது, அப்பிரகாசமா என்று விகற்பிக்க வரும்; அது சொப்பிரகாசமாமென்னின், அப்பொழுது சொப்

* சதந்தரம்=வேறு சத்து.

பிரகாசமாகிய சத்தே சித்தாகலின், சத்துக்குச சொப்பிரகாசத்துவமும், அத்துவிதீயத்துவமும் வேதாந்திகட் கந்நியரால் அங்கீகரிக்கப்படவில்லை; ஆதலால், ஆன்மசொரூபமாகிய சத்தைத் தோற்றுவிக்கிற சதந்தரத்திற்குப் பிரகாசவதிசயந் தருகிற சத்து சொப்பிரகாசமென்னல் கூடாது. அப்பிரகாசமென்னின்:—அதுவுங்கூடாது. என்னை? அப்பிரகாசமாகிய வஸ்து பிரகாசமாகிய வஸ்துவுக்குப் பிரகாசவதிசயத்தைத் தருவது கண்டிலேம்; ஆகலின், அப்பிரகாசமெனலுங் கூடாது; ஆனால் அந்நிய வஸ்துவினாற் பிரகாச வதிசயத்தைப் பெற்றுச் சதந்தரம் ஆன்மாவை தோற்றுவிக்கிறதென்னின்:—அந்நியவஸ்து அசத்தாகலின், அங்ஙனஞ் சொல்லுதலும் கூடாது; அங்ஙனமாயின், ஆன்மசொரூபமான சத்திற்குப் பிரகாச வதிசயந் தருஞ்சதந்தரத்திற்குப் பிரகாசாதிசயந்தருஞ் சத்து அந்நியமொன்றுண்டெனல்வேண்டும்; அங்ஙனஞ் சொல்லின்:—அசசதந்துக்குப பிரகாசவதிசயந் தருஞ் சத்து அந்நியமொன்றுண்டென்றும், அச்சதத்திற்குப் பிரகாசவதிசயந் தருகிற சத்து அந்நியமொன்றுண்டென்றும் இப்படி) அநவஸ்தாதோஷமும், (சத்திற்கு அப்பிரகாசத்துவமும், தொய்தத்துவமுமுண்டென்று) வரும். (உலகின்கண்ணே ஒன்றிற்குப் பிரகாசவதிசயந்தரும் அக்கினியாதிகள் தாம் பிரகாசமாயிருந்துகொண்டே அந்நியங்களைப் பிரகாசிப்பிக்கக்கண்டோம்: தாம் அப்பிரகாசமாயிருந்துகொண்டு அந்நியங்களைப் பிரகாசிப்பிக்கக் கண்டிலேம்; ஆதலால், முன்சொன்ன பட்சத்திரயங்களும் கூடாமையின், சதத்தைத் தோற்றுவிக்கிற சதந்தரம்தானே சொப்பிரகாசமாயிருந்துகொண்டு அசசத்தாகிய வஸ்துவைத் தோற்றுவிக்கிறதென்றே சொல்லல் வேண்டும்; இங்ஙனஞ் சொல்லில். சொப்பிரகாசமான சதந்தரமே சித்தென்று சித்தித்தது; இங்ஙனமாமேல், உலகின்கண் ஆகாசத்திற்போல உபாதியன்றிச சததுத் துவயம் நிரூபித்தல் கூடாது. ஏனெனில்—நிருபாதி மாகிய சத்து அத்துவிதீய மென்று சுருதியாதிகளாற் சொல்லப்படுவதால்; ஆகலின், பிரகாசமாகிய சதந்தரத்தால் அவ்வான்மசத்துத் தோன்றாநிற்கின்றதென்னல் கூடாது; மற்றெங்ஙனமெனின்:—ஆன்மசொரூபமாகிய சத்துச சொப்பிரகாசமாயிருத்தலின், அதுவே சித்தென்று சித்தித்தது; அசசித்தான சத்திற்கு விலட்சணமான வஸ்து அசத்தாகலின், அதற்கு இரண்டாம் வஸ்து இல்லை; ஆகையால், அச்சித்தான சத்தே ஆநந்தரூபமாயிற்றென்று இப்படி யூகித்து), குதர்க்க விகற்பங்களை விட்டு ஒழிந்திடாய்=(முன்னே ஆட்சேபித்த) குதர்க்கமாகிய விகற்பங்களை விட்டொழியக்கடவாய். எ - று.

"பேயா" எ - து, சீடன் குதர்க்கங்களைவிட்டு நம்புதற்பொருட்டுத் திருவுள்ளத்தின்கண் சற்றே முனிவுற்றதுபோற் காட்டிக்கூறினது. (142)

(283) [சச்சிதாநந்தங்கள் அகண்டார்த்தமாகவுள்ள தன்மையை, 135-வது செய்யுடொடங்கி, 142-வது செய்யுள் வரையும் சுருதி யுத்திகளா லுணர்த்துவித்து இனி அநுபூதியாலுந் தெரித்துணர்த்துகின்றார்.]

சுருதியுத்தி யொத்ததுபோ லநுபவமுங் கேள்சுழுத்திச் சுகவா நந்
மிருதுவடி வாதலிலவ் வாநந்த மேயறிவாம் வேறங் கில்லை [தம்

கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டி லுநீ யிருந்திருளைக் காண்கின் றாயே
இருதயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்தி டாயே. (143)

இ-ள். சுருதி யுத்தி ஒத்ததுபோல்=(சச்சிதாநந்தங்கள் தம்மில்வேறுபடாமல் அகண்டார்த்தமா யிருப்பதில்) சுருதியுத்திகள் விரோதியாமல் ஒத்ததுபோல, அநுபவமும் கேள்=அநுபவ மொப்பதையுங் கூறக்கேட்பாய், சுழுத்திச் சுக ஆநந்தம்=உனது சுழுத்தியின்கண் (நித்திய, நிருபாதிக, நிரதிசய) சுகசொரூபமாகிய ஆநந்தமானது, மிருதி வடிவு ஆதலில்=(அங்கே அஞ்ஞானத்தைப் பிரகாசிப்பித்துக்கொண்டிருந்து விழித்தபொழுது ஒன்றுமறியாமற் சுகமாயிருந்தேனென்னும்) ஸ்மிருதிரூபமாக உதித்தலால், அவ்வாநந்தமே அறிவு ஆம்=அவ்வாநந்தமே சித்தாகும், [ஆண்டஞ்ஞானம் வேறென்றால் விளங்கிற் றென்பாயேல்], அவருக்கு வேறு இல்லை=அச்சுழுத்தியின்கண் ஆநந்தத்தைத் தவிர பிரகாசாந்தரமில்லை, கருது பிரளயம் சுழுத்தி இரண்டிலும்=கருதுகின்ற பிரளயமும், சுழுத்தியும் ஆகிய இரண்டவஸ்தைகளிலும், நீ இருந்து=(சிதாநந்தரூபனான) நீ இருந்தே, இருளைக் காண்கின்றாய்=(அஞ்ஞானமாகிய) இருளைக் காண்கின்றாய், (ஆகலின், நீ சச்சிதாநந்த சொரூபனும்: சச்சிதாநந்த சொரூபமே சாஸ்திரங்களிற் பிரஹ்மமென்று கூறியிருப்பதால் பிரஹ்மசொரூபமே ஆன்மா. வியாபகமா யிருப்பதற்குப் பிரஹ்மமென்று பெயராம் தேசத்தால் எதற்கந்தமில்லையோ அது வியாபகமென்று சொல்லப்படும்; அதற்கு ஆன்மா பின்னமாமேல், தேசத்தா லந்தமுடையதாம்: எதற்குத் தேசத்தா லந்தமுண்டோ அதற்குக் காலத்தாலும் அந்தமுண்டாம்; இது நியமமாகலின், ஆன்மா அநித்தியமாம்: எதற்குக் காலத்தா லந்தமுண்டோ அஃதநித்தியமெனப்படும்; இதனால், பிரஹ்மத்திற்குப் பின்னமாக ஆன்மா இல்லை; ஆன்மாவிற்குப் பின்னமாகப் பிரஹ்மமில்லை; பின்னமாயின், அநான்மாவாம்; அநான்மாவாகிய கடாதிகள் சடமாகலின், ஆன்மாவிற்குப் பின்னமான பிரஹ்மமும் சடமேயாம்; ஆகலால், ஆன்மாவிற்குப் பின்னமாகப் பிரஹ்மமுமில்லை; பின்னையோ பிரஹ்மசொரூபமே ஆன்மாவாம். சேதன மொன்றே சர்வப் பிரபஞ்சத்திற்கும், மாயைக்கும் அதிஷ்டானமாவதால் பிரஹ்மமென்று சொல்லப்படுகிறது: அவித்தைக்கும், வியஷ்டி தேகாதிகட்கும் அதிஷ்டானமாவதால் ஆன்மாவென்று சொல்லப்படுகிறது. தற்பதலட்சியம் பிரஹ்மமென்றும், துவம்பதலட்சியம் ஆன்மாவென்றுஞ் சொல்லப்படும். ஈசுரசாட்சி தற்பதத்திற்கு லட்சியம், சீவசாட்சி துவம்பதத்திற்கு லட்சியம். வியஷ்டி சங்காத வுபகிதசேதனம் சீவசாட்சி, சமஷ்டி சங்காத வுபகிதசேதனம் ஈசுரசாட்சி. சீவனுக்கும், ஈசுரனுக்கும் ஏகத்தன்மை கூடாதாயினும் சீவசாட்சிக்கும், ஈசுரசாட்சிக்கும் உபாதியினாலன்றிப் பேதமின்மையாற் சொரூபத்தா லவ்விரண்டுமொன்றே; மடத்தின்கண்ணுள்ள கடாகாச மடாகாசங்கட்கு உபாதியினாற் பேதமேயன்றிச் சொரூபத்தாற் பேதமின்மைபோல ஆன்மாவுக்கும், பிரஹ்மத்திற்கும் உபாதிபேதமேயன்றி வேறுபேதமில்லை: இரண்டு மொன்றே; இத்துணையுங் கூறியது.

"கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டிலுமே யிருந்திருவோக் காண்கின் றுயே"—

(என்பதன் கருத்துரை.) இருதயதது இப்படி நோக்கி—உனதிருதயத்தின்கண் இவ்வாறு நாடி, ஏக பரிபூரணம் ஆய் இருந்திடாய்—(சஜாதீய, விஜாதீய, சுவகத) பேதரகிதமான பரிபூரணப் பிரஹ்மமா யிருப்பாய். எ - று.

"சுழுத்திச் சுகவா நந்தம் மிருதிவடி வாதலில்" என்பதை,

"பரமமா யுண்டெனல வடிவாய், மின்னிய சமாா மறிவுகாண் பவற்றின் மேவுற வெழுதல் சங்கற்பம்."—எ - ம்,

"அறிவெனும் விதைசங் கற்பமா முளையாம்."—எ - ம், வரும். வாசிட்டச் செய்யுட்களா னுய்த்துணர்க.

112 - வது செய்யுளில்,

"சச்சிதா நநதநா னெல்லாவிலம் மனுமநு பவமெங்ஙனே"—

என்று சீடன் சங்கையின் மேல்வைத்து உபக்கிரமித்ததை இங்கே உபசம்மாரஞ் செய்தன ரென்றறிக. (143)

(284) [சீடன் குருவருளால் சமாதிரூபமான அநுபூதிவாயிலாகச் சந்தேகந் தெளிந்து ஆநடமடைநததைக் கூறுகின்றது.]

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமநு பவம் விடாமல், பலமலரின் மதுபோலே சச்சிதா நந்தமொன்றும் பரமார்த் தத்தைப், பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்று மொரு படமா னுனே. (144)

இ - ள். பல கலையும் உணர்ந்த—பல ஞானநூல்களையும் உள்ளபடியறிந்து நிஷ்டையினையுமுடைய, குரு—குருவானவர், பல மலரின் மதுப் போலே—பல புஷ்பங்களினின்றும் (தேனீக்களா லெடுத்துச் சேர்த்த) தேனைப்போல, சத் சித் ஆநந்தம் ஒன்று ஆம்—சச்சிதாநந்தங்கள் அகண்டைகரசமான, பரமார்த்ததை—உண்மை நிலையை, மொழிந்தபடி—சுருதி, யுத்தி, அநுபவத்தோடும் உபதேசித்தபடி, இவனும்—இச்சீடனும், அநுபவம்விடாமல்—(சுருதி, யுத்திகளுக் கொத்ததான) தன்னநுபவத்தை விடாமற்கொண்டு, பலபொழுதும்—பலகாலும், கண்மூடி—(திசைகளைப் பாராதிருக்கும்படி) கண்களைத் தனது மூக்கின் நுதிமேலே நிறுத்தி, சமாதி இருந்தான்—சமாதியி லிருந்தனன், விழித்துப் பார்த்தபோது—(பின்னே சமாதியினின்றும்) உத்திதனுகிப் பார்த்தபோது, பல வடிவு ஆம்—அநேகவித ரூபங்களான, சர அசர சித்திரங்கள் எலாம்—சராசரங்களாகிய சித்திரங்க

ளினைத்தும், தோன்றும்=(சித்திரமான கண்ணாடியிற் புரம்போலத்) தோன்றுநிற்கும், ஒருபடம் ஆனான்=அகண்டசச்சிதாநந்தப் பிரஹ்மமே தானானான். எ - று.

சராசரவுருவங்களைச் சித்திர மென்றமையின், அவற்றிற்காதாரமாகிய அகண்டைகரசனான தன்னை, "படம்" என்றார். தியானிக்கிறவனையும், தியானத்தையும் கிரமமாகப் பரித்தியாகஞ் செய்து தியானிக்கப்படுகின்ற ஒரு பிரஹ்மமாத்திரம்கோசரமுடையதாய் நிவாதஸ்தலதீபம்போலிருக்குஞ் சித்தஞ் சமாதி யெனப்படும். "விழித்துப் பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித்திரங்களெலாந் தோன்று மொரு படமானனே" எ-கு, உ-ம், வாசிட்டம்.

" கசனுயர் சமாதி நீங்கி யொருபகற் கழிக்கு நெஞ்சன்
வசமறத் தழு தழுத்த வசனத்தன் யாது செய்கேன்
றிசையுற வெங்கு செல்கேன் நீர்ப்பதென் கொள்வ தென்று
மிசையுயர் கற்ப நீர்போல் மேதினி யெங்கு நானே "—எ - ம்,

" மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்வை யகத்தி லெங்கும் யானன்றி மற்றொன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்றான்."—எ - ம்.

பர்டுதுறை.

"தன்னிலே யெல்லாமி ருக்குமாகிற் றானெல்லாத் துள்ளுமி ருப்பனாகில், பின்னிலன் முன்னில னாவனாகிற் பெரிதுமுடிந்ததென் வாழ்க்கைப் பாடே."—

எனவும் வரும். மற்றும் வருவன வற்றுற் காண்க. (144)

[குருவையும், அவரருளாலே வேதாந்த விசாரத்தின் பயனானகர்த்தவ வியமுத்திநிவிர்த்தி தனக்குண்டானதையும் வியந்து முன்னே (132) - வது செய்யுளில் *உபோத்காதமாகக் குருவருளியதைப் பற்றி விநோதமாகச் சீடன் சங்கிக்கின்றான்.]

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே விநோதமன்றி யினி வேறுண்டோ, அதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றோ ஞா

* உபோத்காதம் எ - து, பிரகிருதத்தைச் சொல்லாநிற்கும் உதாரணம்: பிரகிருதார்த்தத்தை வர்ணித்தற்கு அந்நியார்த்தத்தை வர்ணித்தல். திருஷ்டாந்தம். அந்நியனுடைய கிரகத்திற்குப்போய் மோர்வாங்க ஒருவனுக்கு இச்சைவந்தபோது அவன் அன்னியனுடைய கிரகத்திற்குப்போய் முன்னே மோர்கொடுவென்று சொல்லில், உலோபியாகிய மநுடனால் மோர் கிடைக்க மாட்டாதாகலின், அந்தப் பிரயோஜனத்தை மனதில் வைத்துக்கொண்டு அதன்நிமித்தம் உன்னுடைய பசு கறவல் உண்டா? இல்லையா என்பது முதலிய வார்த்தை யுரைத்தல் உபோத்காதம்.

ஞானிகளுக்கான நீதி, முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக் கியமா மென்ற, பதமுமதின் வகையுமெனக் கெளிதாகத் தெளியும் வண்ணம் பணித்திடீரே. (145)

இ-ள். இதயம் ஒத்த சற்குருவே=எனது மனதுக்கொத்த சத்துப தேசம் பண்ணுகின்ற குருவே, நமக்கு=(கிருதகிருத்தியரான) நமக்கு, இதுவே=(பிரஹ்மாகார விருத்தி யுண்டாதற்குக் காரணமான வேதாந்த வாக்கியங்களால் நமதான்ம சொரூபமான பிரஹ்மத்தைச் சிந்தித்து மகிழா நிற்கும்) இத்தொழில்தானே, விநோதம் அன்றி=விநோதமாக வுரியதல்லா மல், இனி வேறுண்டோ=இனிமேல் இதற்கந்நியமான ஒரு கிரியை செய் யத்தக்கதாகவுண்டா, (இல்லை), அதை உரைத்தும்=(சிஞ்ஞாசையுடை யோர் வரில்) அப்பிரஹ்மத்தைத்தானே அவர்கட் குபதேசித்தும், அதை நினைத்தும்=(தனித்திருக்கில்) அதைத்தானே சிந்தித்தும், இருப்பதன் றே=இருப்பதல்லவா, ஞானிகளுக்கு ஆன நீதி=அறிஞர்கட் குரியதான நியாயம், (ஆகலின்), முதல் உரைத்த=முன்னே (132-வது செய்யுளிற்) கூறிய, துரியாதீதமும், எழாம்பூமியும், முக்கியம் ஆம் என்ற பதமும்=முக்கியமாகுமென்று சொல்லிய பதமும், அதின் வகையும்=அதன் கூறு பாடும், எனக்கு, எளிதாகத் தெளியும் வண்ணம்=இலேசாகப்போதமாகும் படி, பணித்திடீர்=அருள்வீராக. எ-று.

அநேக பிரகாரமாகத் தானுட்சேபித்த ஆட்சேபங்களுக் கெல்லாஞ் சமாதானம் தன் மனத்துக்குச் சம்மதமாகும்படி யருளிச்செய்து சந்தேகங்க ளனைத்தையுந் தெளிவித்தலால், "இதயமொத்த சற்குருவே" என்றான். (145)

(285) [வேதாந்த சாஸ்திரங்களின் சாரபூதமான ஞான சத்த பூமி களை விஸ்தாரமாக வறியவேண்டிச் சீடன்கடாவினதற்கு விடை யாகக் கீர்த்திக்கத் தொடங்கி அவைகளை விரோதியாக வுடைய அஞ்ஞான சப்தபூமிகளின் நாமங்களை முன் னர்க் கூறுகின்றார்.]

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூமிகளேழென்பார், இனியவற்று ளஞ்ஞான பூமிகளே ழையுமுந்தி யியம்பக்கேளாய், தனிவித்துச் சாக்கிரஞ்சாக் கிரமகா சாக்கிரஞ்சாக்கிரத்தைச்சார்ந்த, நனவுகனுக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார் மேலோர். (146)

இ-ள். வினவும் இடத்து=(பூமிகை எத்தனையென்று) ஆசங்கித்தா ராயுமிடத்து, அஞ்ஞான பூமிகள் ஏழ் ஞான பூமிகள் ஏழ் என்பார்=அஞ் ஞான பூமிகள் ஏழென்றும், ஞானபூமிகள் ஏழென்றும் (யோகவாசிட்டமுதலிய கிரந்தங்களிற்) பெரியோர் கூறுவர், இனி அவற்றுள்=இனி அப்பூமி களுள், அஞ்ஞான பூமிகள் ஏழையும்=அஞ்ஞானசத்த பூமிகளையும், முந்தி இயம்பக் கேளாய்=முன்னே சொல்லுகிறோம் கேட்பாய், தனிவித்துச்

சாக்கிரம்=1-வது கலப்பில்லாத பீஜசாக்கிரம், 2-வது சாக்கிரம், 3-வது மகாசாக்கிரம், சாக்கிரத்தைச்சார்ந்த கனவு=4-வது சாக்கிர சொப்பனம், கனு=5-வது சொப்பனம் கனவு சாக்கிரம்=6-வது சொப்பனசாக்கிரம், 7-வது சுழுத்தி, என்று, எழுபேர்=எழுநாமங்கள், கணித்தார் மேலோர்=மதித்தனர் பெரியோர். எ-று.

கணித்தார்=எண்ணினரெனினும் ஆம். (146)

(286) [பீஜசாக்கிரம், சாக்கிரம், மஹாசாக்கிரம், சாக்கிரசொப்பனம் என்னும் இந்நான்கு பூமிகளின் இலக்கணங் கூறுகின்றார்.]

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல்வித் தாகும்
இந்தவறி விற்பண்டில் லாவகந்தை முளைபோலா மிதுநனவாம் [பின்
வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது மகாநனவாம்
நந்துமகங் கொடுநனவின் மனோராசி யஞ்செயலே நனக்கனவே. ()

இ-ள். முந்த=சர்க்காதியில் அல்லது, சாக்கிரத்தினாதியில், அகண்டத்து=மாயா*சபளைசதந்நியத்தினின்றும், எழும் ஓர் அறிவுமாத்திரம் அதுதான்=எழுகின்ற சிதாபாசத்தோடுகூடின ஒரு அறிவுமாத்திரமான அதுவே, முதல் வித்து ஆகும்=பிரதமாவஸ்தையான பீஜசாக்கிரமாம், (பின்னே) இந்த அறிவில்=பீஜசாக்கிர மென்னு மிவ்வறிவின்கண்ணே, பண்டு இல்லா அகந்தை=முன்னில்லாதவையான அகந்தை, (மமதைகள்), முளைபோல் ஆம்=அங்குரம்போலச் சூட்சுமமாக எழாநிற்கும், இது=இவ்வவத்தை, நனு ஆம்=சாக்கிரமாம், வந்து வந்து=உண்டாகி உண்டாகி, பிறவிதொறும்=சநனங்கடோறும், அகம் மமதை வளரும் அது=அகந்தை மமதைகள் திடதரமாயுதியாநிற்குமதுவே, மகா நனு ஆம்=மஹா சாக்கிரமாம், நந்தும் அகங்கொடு=ஆக்கமுடைய அர்தக்கரணத்தைக் கொண்டு, நனவின்=சாக்கிரத்தின்கண், மனோராச்சியம் செயலே=(முன் தான் அறிந்ததேனும், அறியாததேனும் அதன்மயமாய் †லவணன்போல) மனோராச்சியஞ் செயலே, நனுக்கனு=சாக்கிரசொப்பனமாம். எ-று.

"அகந்தை" என ஒன்றைக்கூறினும், இனம்பற்றி மமதையுங்கொள்ளப்பட்டது. இங்கே, "அகண்டம்" என்பதற்கு, மாயாசபளைசதந்நியமென்று பொருள் விரித்தது மாயாரகிதத்திற் சிருஷ்டிகூடாதாகலின் என்க; இது பெரியவாசிட்ட வியாக்கியானத்தின் கருத்து; அது சம்பூர்ணமாகலின், "அகண்டம்" என்றார். சிதாபாச‡சம்வலிதமான சேதனம் நாமமின்றி, மலமின்றி என்பார், "அறிவுமாத்திரம்" எ-ம், தேகோற்பத்தி அநந்தரமுண்டாய் வளராநிற்கும் சித்தம், சீவன்முதலிய நாமசத்தங்கட்கும்,

* சபளம்=கூடியது. ‡ சம்வலிதம்=கூடியது.

† லவணன்=வாசிட்டத்திற் கூறியுள்ள ஓரரசன்.

அவைகளின் அர்த்தங்கட்கும், பீஜபூதமாய் நிற்றலாற் பீஜசாக்கிரமாமென்பார், "வித்துநாதம்" என்றுங் கூறினார்.

"அகந்தை" எ - து, தேகம் நானென்னும் நிச்சயம். "மமதை" எ - து, போக்கியசமூகம் எனதென்னும் நிச்சயம். "பண்டில்லா" எ - து, "முளை போலாம்" என்பதற்கேது கூறினது. சஜாதீயமான பூர்வ பூர்வ சம்ஸ்கார உற்போதத்தால் விசேஷ அறிவு திடதரமா யுதியாநிற்கும் சாக்கிரத்தினிச்சயம், "மஹாசாக்கிரம்" என்பார், "வந்துவந்து பிறவிதோறு மகமமதை வளருமது மகாநனவாம்" என்றார். (147)

[ஏனைய மூன்று பூமிகளின் இலக்கணங் கூறுகின்றார்.]

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொப் பனமெனும்பே ரு
டைய தாகும், பண்டுகனாக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பதுசொப்
பனந னவாம், மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான வகை
கள் சொன்னோம், விண்டுநிறை முத்திதரு ஞானபூமிக ளேழும் விளம்
பக் கேளாய். (148)

இ - ள். உண்டு உறங்கி=போஜனஞ்செய்து (பாயலிற் படுத்து) நித்திரைசெய்து, மனோராச்சியம் செயல்=(அற்பகாலத்தில் அநேககால வியாபாரரூபமான) மனோராச்சியஞ்செய்து (நித்திரையினந்தத்தில் நித்திராகாலத்தில் அநுபவித்ததை) நினைப்பதே, சொப்பனம் எனும பேருடையது ஆகும்=சொப்பனமாம், பண்டு கனாக்கண்டு மறந்ததை=பூர்வஞ் சொப்பனங்கண்டு மறந்ததை, மீண்டும் நினைப்பது=திரும்பவும் (திடமான அபினிவேசத்தால் வெகுகால ஸ்தாயியாகப்) பார்ப்பது, சொப்பன நனவு ஆம்=சொப்பனசாக்கிரமாம் (சொப்பனம் சாக்கிரம்போலச் சாக்கிரத்தின்கண்ணே தோன்றுதலின், சொப்பன சாக்கிரமாம். அரிச்சந்திரனுக்குத் துவாதசாத்மக வருடம் போல ; இது பெரிய வாசிட்டவியாக்கியானக் கருத்து), மண்டும் இருள் மூடுவது=(மேலநுபவிக்கத்தக்க வாசனை கருமங்கள்) நெருங்கியிருக்கும் அஞ்ஞான விருண்மூடிச் சடமாயிருப்பது, சுழுத்தி ஆம்=சுழுத்தி யென்னும் ஏழாம்பூமியாம், முந்தின ஆறவஸ்தைகளும் கர்மபலபோக பூமியாகலின், கர்மஜந்நியங்கள் : சுழுத்தியோ பூர்வகர்மங்கள் போகத்தினால் நாசமாகி மேல்கர்மங்களுண்டாகாமலிருக்கும்போது மத்தியில்*சத்திர நாசத்திற்போலச் சர்வசூட்சும, ஸ்தூலப் பிரபஞ்ச விலயத்தில் அவைகளின் பீஜமான அஞ்ஞான மாத்திரஞ் சேடித்திருப்பதால் அதன் உபகிதமான ஆன்மா மாத்திரஞ் சேடித்திருப்பதான உருவமுடையது சுழுத்தியென்றபிப்பிராயம், [அஞ்ஞான பூமிகளை முடித்து ஞானபூமிகளைச் சீர்த்திக்கத் தொடங்கல்.] அஞ்ஞான வகைகள் சொன்னோம்=அஞ்ஞான சத்தபூமிகளின் கூறுபாடுகளைக் கூறினோம், (இனி) விண்டு நிறை முத்திதரும்=வியாபகமாக நிறைந்துள்ள மோட்சத்தைக்கொடுக்கும், ஞானபூமிகள் ஏழும் விளம்பக் கேளாய்=ஞான பூமிகளேழையுங் கூறக்கேட்பாயாக். எ - று.

---

* சத்திரம்=குடை.

"விண்டு" என்பதற்கு, அஞ்ஞானத்தை யொழித்து எனப்பொருள் கூறினும் அமையும்; அங்ஙனமே "விண்டு" என்னுந் தன்வினை "தடிபோன்றிக் குற்றமுமாங்கேதநம்." என்றாற்போலப் பிறவினைப் பொருடந்து நின்றதெனக் கொள்க. (148)

(287) [ஞானபூமிகளின் நாமங்களை மாத்திரங் கீர்த்திக்கின்றார்.]

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சை விசாரணையிரண்டாம் பூமி
யாகும், நலதநுமானசிமூன்றாம் பூமிசத்துவாபத்தி நாலாம் பூமி,
சொலுமசம்சத் திப்பேரும் பதார்த்தாபாவனைப்பேருந் துரியப் பே
ரும், மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்.

இ-ள். புலவர் புகழ்=(சகலசகத்துந் துக்கமென் றவற்றின்கண்ணே அவாவொழிந்து அறியத்தக்கனவான அனைத்தினையும் அறிந்த) பெரியோர் கீர்த்தியாநிற்கும் (ஞானசத்த பூமிகளுள்), சுபேச்சைமுதல் பூமி—சுபேச்சை யென்பது முதற்பூமியாம், விசாரணை இரண்டாம் பூமி ஆகும்=விசாரணை யென்பது இரண்டாம் பூமியாம், நலதநுமானசி மூன்றாம் பூமி=நல்லதநுமானசி யென்பது மூன்றாம் பூமியாகும், சத்துவாபத்தி நாலாம் பூமி=சத்துவாபத்தியென்பது நான்காம் பூமியாகும், சொலும் அசம்சத்திப்பேரும்=சொல்லுகின்ற அசம்சத்தியென்னு நாமமுடையதையும், பதார்த்தாபாவனைப் பேரும்=பதார்த்தாபாவனையென்னு நாமமுடையதையும், துரியப்பேரும்=துரியமென்னு நாமமுடையதையும், (முறையே) ஐந்து ஆறு ஏழு பூமிகளா=ஐந்தாம்பூமி, ஆறாம்பூமி, ஏழாம்பூமிகளாக, வகுத்தார் மேலோர்=வகுத்தனர் பெரியோர். எ-று.

"மலினமறுமகனே" என்றது, விளி. (149)

(288) [அவற்றுள், முந்தின நான்கு பூமிகளின் இலக்கணங் கூறல்.]

துற்சங்க நிவிர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சை யாகும்
நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசாரணையா நம்பி
முற்சங்க வேடணைகள் விடறநுமானசியிந்த மூன்றினாலும்
சற்சங்க மனதிலுண்மை யறிவுநித்தல் சத்துவாபத்தி தானே. (150)

இ-ள். துற்சங்க நிவிர்த்தி வந்து சிவஞானம் விரும்புவது=மனைவி, புத்திராதிய(குசங்கங்களோடுகூடி இத்துணைநாளும் மூடமாயிருந்தகாரண மென்னை? இனி அங்ஙனம் மோசம்போகாமல) இக்குசங்கங்களை வயிராக்கியத்தாற் றுறந்து (அர்ந்திராசையினால் பிரஹ்மநிஷ்டரான பெரியோர்களானும், ஞானசாஸ்திரங்களானும் அடையவேண்டிய) பிரஹ்மஞானத்தை (அடையக்கடவேமென்று அதனை) இச்சிப்பது, சுபேச்சை ஆகும்=சுபேச்சையென்னும் முதற்பூமியாம், நற்சங்கமொழி=(சுபேச்சை முதிர்ந்து) சற்சங்கமான பெரியோரையடைந்து அவர்கள் வாக்கால், ஞானநூல்வினவி=வேதாந்தசாஸ்திரங்களைக்கேட்டு, பழகல்=அதை மனனம்பண்ணுவது, விசாரணை ஆம்

=விசாரணையென்னு மிரண்டாம்பூமியாம், நம்பி=(முன்சொன்ன இரண்டு பூமிகளின் அப்பியாசவலியால்) குருசாஸ்திர வாக்கியார்த்தங்களை விசுவசித்து, மூற்சங்க வடணைகள் விடல்=(நிதித்தியாசனஞ்செய்து அந்நிதித்தியாசன வப்பியாசவலியால் சவிகற்ப சமாதிபரியந்தஞ் சித்தித்து) முன்னுள்ள மலினவாசனைகளான இச்சைகளை விடுதலே, தநுமானசி=தநுமானசியென்னும் மூன்றாம் பூமியாம், இந்த மூன்றினாலும்=இம்மூன்றுபூமி யப்பியாசவலியினாலும், சற்சங்க மனதில்=(வாகியார்த்த விடயங்களில் சம்ஸ்காரநாசத்தால் ஆத்தியந்திக திடவைராக்கியரூப) சத்துவாசனையோடுகூடிய மனதின்கண், உண்மை அறிவு உதித்தல்=ஆன்ம சாட்சாத்காரமுண்டாதல், சத்துவாபத்தி=சத்துவாபத்தியென்னு நான்காம் பூமியாம். எ - று.

"நற்சங்கநிவர்த்தி" எ - து, சாதன சதுஷ்டய வுபலட்சணம்; இப்படிக் கூறினதனால் நிஷித்தவர்ச்சிதமாயும், நிஷ்காமமாயும் இருக்கின்ற யக்ஞம், தானமுதலிய அநுஷ்டானத்தாலுண்டானதாயும், சந்நியாசம், சாதன சதுஷ்டயம் இவைகளோடு கூடினதாயும், முத்தியை முடிவாகவுடையதாயும், சிரவணதிப் பிரவிர்த்தி பலத்தோடுகூடினதாயுமுள்ள ஆன்ம சாட்சாத்காரத்தின் தீவிரவிச்சையே முதற்பூமி. அந்நியம் சித்தசுத்தி எதுவாகலால் முன்னமே சித்திதிருத்தலின், குருசுசுருஷை, பிட்சாடனம், சௌசமுதலிய யதிதர்மபாலனத்தோடுகூடின சிரவண மனனங்களான சதாசாரமே என்பார். "நற்சங்க மொழிவினவ ஞானநூல் பழகல்விசாரணையாம்" என்றார். சாதனசதுஷ்டய சமபதியாதி பூர்வகமான சிரவண மனனங்களோடு கூடின நிதித்தியாசனத்தினுன் மனதுக்குச் சத்தாதி விஷயங்களில இச்சையொழிந்து சவிகற்ப சமாதியான யாதொரு சூட்சுமத்தன்மையுண்டோ அது, "தநுமானசி" தநு=சூக்குமதமம். மனது சூக்குமதமமான தன்மையையடைதலின், "தநுமானசி" எனப்பெயராயிற்று. இவ்வாறு சுரோத்திர முதலான கரணங்களால் சத்தாதி விஷயங்களைக் கவர்வது எதுவரையிலுண்டோ அதுவரையில் தியானம்; அதற்குமேல் சமாதியென்று யோக சாஸ்திரத்திற் சொல்லியிருக்கின்றது. வாகியார்த்த விஷயங்களில் சம்ஸ்கார நாசத்தால் ஆத்தியந்திகமான சித்தத்தின் கண்ணுள்ள திடவைராக்கியத்தால் மாயை, அதன்காரியம், அவஸ்தாத்திரயம் இவைகளினின்றுஞ் சோதிக்கப்பட்ட சாவாதிஷ்டான சன்மாத்திர ரூபமான ஆன்மாவின்கண் க்ஷீரோதகம் போலுந் திரிபுடி விலயமாய்ச சாட்சாத்கார பரியந்தமாக வுளதான நிருவிகற்ப சமாதி ரூபமாந் திதியே சத்துவாபத்தி. மனது பரமாத்ம சத்துவரூபமாக ஆனமையின், சத்துவாபத்தி என்றறிக. (150)

[ஏனைய மூன்று பூமிகளி னிலக்கணங் கூறல்.]

தத்துவத்தின் மனமொன்றுதலு மித்தையெலா மறத்தலசம சத்தி
யாகும், அத்துவிதானந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபாவனைய
தாகும், வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபாவந் துரிய மாகும்,
இத்துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங் கேளாய். ()

இ-ள். தத்துவத்தின் மனம் உறைத்து=(முன்சொன்ன நான்கு பூமியின் அப்பியாசவலியால் நிரதிசயாநந்த நித்தியாபரோட்ச) பிரஹ்மான்மபாவத்தில் மனதழுந்தி, மித்தை எலாம் மறத்தல்=மித்தையான அஞ்ஞானம், அதன் காரியங்க ளனைத்தையு மினையாதிருத்தலே, அசம் சத்தி ஆகும்=அசம் சத்தியென்னும் ஐந்தாம் பூமியாம், அத்துவித ஆநந்தம் வரும்=(ஐந்து பூமிகளின் அப்பியாசவலியால்) அத்துவிதமான ஆன்மாநந்தம் மேலிடும் (மேலிடவே), திரிபுடி போம்=(வாகியாந்தரங்களாயுள்ள) திரிபுடிரூபமான பதார்த்தங்கள் அபாவமாம், அது பதார்த்த அபாவனை ஆகும்=அதுவே பதார்த்தா பாவனையென்னும் ஆறும் பூமியாம், வத்துநிலை=(ஆறு பூமிகளின் அப்பியாசத்தால்)ஆன்மசுபாவத்தில், இருந்தபடி இருந்த=இருந்தபடியேயிருக்கும், மவுன சுபாவம்=மோனநிஷ்டையே, துரியம் ஆகும்=துரியமென்னும் ஏழாம் பூமியாம், இத்துரிய பூமியை=இந்தத்துரியமென்னும் ஏழாம் பூமியையே, முன் துரியாதீதப்பதம் என்றதும்=முன்னே (132-வது செய்யுளில்) துரியாதீதப்பதமென்று கூறின வகையையும், கேளாய்=இப்போது கூறுதுங் கேட்பாய். எ-று.

உத்தமாதிகாரிகட்கு இரண்டாம் பூமியிலுஞ் சாட்சாத்காரம் சாப்தாபரோட்சத்தாற் பிரசித்தமாயினும் மந்த மத்திமாதிகாரிகட்கும் ஆத்தியந்திகமான துவிதசம்ஸ்கார நாசத்தாலுண்டான உத்கர்ஷமான அதிசயமுடைய நான்காம் பூமியின் முடிவிலுண்டான சாட்சாத்காரம் ஐந்தாம் பூமியில் நிரூடதரமாக உண்டாகுமென்பதைக் குறிப்பித்தற்பொருட்டு, "மனமுறைத்து" என்றார். வாகியாந்தரங்களான ஆகாரங்களோடும், அவைகளின் சம்ஸ்காரங்களோடும் சம்பந்தமில்லாமை * "அசம்சத்தி" வாகியாந்தர பதார்த்தங்களினுடைய அநுசந்தானமில்லாமை, "பதார்த்தாபாவனை" ஆயின், தேகயாத்திரை எங்ஙன் கூடுமெனின், சிரகாலப் பரப்பிரயத்தனத்தாற் கூடுமென்க. † சுபாவிக நிஷ்டத்துவமென்பார், "வத்துநிலை யிருந்தபடி யிருந்த" என்றார். பிரப்பிரயத்தனத்தாலும் பேதத்தை யறியாமலென்பார், "மவுனசுபாவம்" என்றார். சாக்கிராதி மூவவத்தைகளினும் விடுபட்டதால், "துரியம்" பிரஹ்மவித்து முதலியோருள் நான்காமவனை யடைதலின், ஏழாம்பூமியைத் துரியகாவென்றுங் கூறுவர். அஞ்ஞானசத்தபூமி, ஞானசத்தபூமி இவைகட்கு, உ-ம், வாசிட்டத்தில் உற்பத்திப்பிரகரணத்திற் காண்க. (151)

(289) [முன்னே, 132-வது செய்யுளில் துரியபூமியைத் துரியாதீதமென்று கூறினதற்குக் காரணங் கூறுகின்றார்.]

முற்புவிமூன் றினுமுலகந் தோன்றுதலாற் சாக்கிரமா மூன்றற்குப்பால், சொற்பனமா மதுவுமெள்ள நழுவுமைந்தாம் பூமியே சுழுத்தி யாகும், அற்புதமாஞ் சுகாநுபவ மிகுமாறும் புவிதுரிய மதற்கப்

* சம்சத்தி=சம்பந்தம்; அஃதில்லாமை அசம்சத்தி

† சுபாவீக நிஷ்டத்துவம்=சொரூபமாயிருத்தல்.

பாலோர், கற்பனையி லாதவிட மதீதமென்று மௌனமாக் காட்டும் வேதம். (152)

இ-ள். **முற்புவி மூன்றினும் உலகம் தோன்றுதலால்**=சுபேச்சை யாதி மூன்றுபூமிகளிலும் (பூரணஞான மின்மையின்) சகத்துச் சத்தியமாய்த் தோற்றுதலின், **சாக்கிரம் ஆம்**=அம்மூன்றும் சாக்கிரமாம், **மூன்றற்கு அப்பால்**=அம்மூன்றிற்குமேல், (நான்காம் பூமியிற் சகத்துச் சொப்பனம்போல மித்தையாகப் பிரத்தியாவதால்) **சொற்பனம் ஆம்**=அதுசொப்பனமாகும், **அதுவும் மெள்ள நழுவும்**=அம்மித்தியாப் பிரதீதியுங் கிரமமாக நீங்காநிற்கும், **ஐந்தாம்பூமியே, சுழுத்தி ஆகும்**=(சுழுத்திக்குச் சமானமாயிருப்பதாற்) சுழுத்தியாம், **அற்புதம் ஆம் சுகாநுபவம் மிகும்**=ஆச்சரியமான ஆநந்தாநுபவமிகுந்துண்டாகாநிற்கும், **ஆறும் புவி**=ஆறும்பூமி. **துரியம்**=(நான்காமவத்தையாவதால்) துரியமாம், **அதற்கு அப்பால்**=அதற்குமேல், **ஓர் கற்பனை இலாத இடம்**=(சத்து, அசத்து முதலிய) கற்பனைகளுள்ளே யாதொரு கற்பனையுமில்லாத ஏழாம்பூமியை, **அதீதம் என்று**=(சகலவிஷயசம்பந்தங்களு மற்றிருத்தலால்) துரியாதீதமென்று, **மௌனமாக்காட்டும் வேதம்**=சுருதி மௌனமாகத் தரிசிப்பிக்கும். எ-று.

சுருதி மௌனமாக் காட்டுவது அதத்ஜாவியாவிருத்தி லட்சணம், அல்லது, சக்திவிருத்தியாற் காட்டாமல் லட்சணாவிருத்தியாற் காட்டுவதாம் என்க; அதனை இப்படலத்தில், 8-9-வது செய்யுளால் அறிக.

ஏழாம் பூமிக்குமேல் பிராரத்தக்ஷயத்தி லுண்டாவதான விதேககைவல்யமே யல்லாமல் சமாதிபூமி வேறொன்றின்மையின் இதுவே முக்கியமான பதமாமென்பதுதோன்ற, "எவனுகிலுமிந்தத் துரியாதீதத்திலேழாம் பூமியிலிருந்தானேல்" எ-ம், துரியமென்னும் பெயரையுடைய ஏழாம்பூமியையே அவஸ்தாவிபாகத்தாற் றுரியாதீதமாம் எ-ம், முன்னே நம்மால் கீர்த்திக்கப்பட்டதென்பது கருத்து. (152)

(290) [ஆனல், வாசிட்டத்தில் உற்பத்திப் பிரகரணத்தில் இங்ஙனங் கூறாது விதேககைவல்யத்தைத் துரியாதீதப்பதமென்று கூறினது என்னை? என்றாசங்கித்துச் சமாதானங் கூறுகின்றார்.]

துரியங்கலந் தனைத்துரியா தீதமெனின் மயக்கமென்று கருதி மேலோர், அரியதொரு விதேகமுத்தி யதீதமென்பா ரதுகணக்கிலாறும் பூமி, மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்தியென்பா ரென்பது நீ மனத்திற் கொள்வாய், பெருமைதரு ஞானபூ மியின்விகற்ப மின்னமுண்டு பேசக் கேளாய். (153)

இ-ள். **துரியங்கலந் தனைத் துரியாதீதம் எனின்**=(தேகத்தோடு கூடிச் சீவித்திருப்பவர்களால் அடைந்திருக்கும்) துரியமென்னும் பெயரை

யுடையு ஏழாம்பூமியைத் துரியாதீத பதமென்றுகூறிடில், மயக்கம் என்று கருதி=(தூலதிருஷ்டி யுடையோர்க்கு) மயக்கமுண்டாகுமென்றெண்ணி, மேலோர்=பெரியோர், அரியது ஒரு விதேகமுக்தி=அரிதான வொப்பற்ற விதேககைவல்யத்தை, அதீதம் என்பார்=துரியாதீதபதமாமென்று கூறுவர், அது=அங்ஙனங் கூறுகிற்பது, கணக்கில்=பூமியின் கணக்கில், (முதல் மூன்றனையுஞ் சாககிரமென்றும், நான்காவதனைச சொப்பனமென்றும் முற் கூறிய முறைப்படியேகொண்டு) சுழுத்தியில்=(ஐந்தாவதான) சுழுத்தியில், மருவு=கிட்டினதான, ஆரும் பூமி=ஆறும்பூமியான பதார்த்தாபாவனையை (ச் சேர்த்து), காட்சி சுழுத்தி என்பார்=அற்புதமான காடசுழுத்தி யென்று கூறுவர், என்பதும் நீ மனத்தில் கொள்வாய்=என்று இங்ஙனம் கூறு கிற் பதனையும் நீ மனத்தின்கண் தரிப்பாய், பெருமை தரும்=(சிறுமையைப் போக்கிப்) பெருமையைத்தாராநிற்கும், ஞானபூமியின் விகற்பம்=ஞானபூமிகளின் வேறுபாடான விசேடணம், இன்னம் உண்டு=மேலுமுள, பேசக் கேளாய்=அவற்றையுங் கூறக்கேட்பாய். எ - று.

சுருதி மேலோர் என்றும் பாடமுளது. இங்கே மயக்கம் எ - து, ஐயுறவை. காடசுழுத்தி=கனசுழுத்தி; பாரப்பிரயதத்தனத்தால் வெளிப்படுதலி னென்க. "பெருமைதரும்" என்றதால், சிறுமைபோக்கி என்பது, வருவித்தாம்.

"சிறுமைபெருமை" எ - கு, உ - ம், பிரமகீதை,—

"யாவனொருவன் றனையிழந்தே யளவில்வேறு படக்கண்டும்
யாவனொருசொல் வேறுபடக் கேட்டுமறிந்தும் வருகின்றான்
யாவனொருவன் றனக்கென்றுஞ் சிறுமையதுவேயிறப்பிறப்புப்
போவதில்லைக் காரணமு மதுவேயென்று புகன்றனனால்."-எ-ம்,

"அருளினி லியாவன் றன்க ணிவையில்வே றென்று காணு
தருளினால் வேறு கேளா தறிந்திடா திருக்கி லவ்வே
யருளதாம் பெருமை தானு மழிந்திடாச் சுகமு மெல்லா
விருளிலா வீடு தானு மென்றனை னிமையோர்க் கெல்லாம்"

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (153)

(291) [சீடன் வினவிற்கு விடைகூறி முடித்து ஞானபூமிகளின் விசேஷணங்களைக் கூறுகின்றார்.]

முன்னிலங்க ளேறியமூ வருமப்பியாசிகளா முத்த ரல்லர், பின்னிலங்கள் விரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேத மாகும், சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூய முத்தர், இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே. (154)

இ-ள். முன் நிலங்கள் ஏறிய மூவரும்=சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்னும் முன் மூன்று பூமிகளில் ஏறியிருக்கும் மூவரும், அப்பியாசிகள் ஆம்=அப்பியாசிகளாதும், முத்தர் அல்லர்=ஜீவன்முத்தரல்லராம், பின் நிலங்கள்=அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்னும் பின்மூன்று பூமிகளில் (ஏறியிருப்பவர்), வரன் வரியான் வரிட்டன் எனும் சீவன்முத்தர் பேதம் ஆகும்=வரன், வரியான், வரிட்டனென்கின்ற ஜீவன் முத்தரின் வேறு பாடாம், சொன்ன நடுப்பூமி வந்த ஞானிகளே=சொல்லிய (சத்துவாபத்தி என்னும்) மத்திய பூமியில் வந்த அறிஞரே, பிரம வித்து ஆம் தூயமுத்தர்=பிரஹ்மவித்தாகிய பரிசுத்த முத்தராம், இன்னமும்=மேலும், அப்பூமிகளின் பெருமைதனை=அந்த ஞானபூமிகளின் மகிமையை, நீ அறிய யான் சொல்வேன்=நீயறியும்படி யான் கூறுவேன். எ-று.

பிரபஞ்சஞ் சத்தியமென்னும் புத்தியும், தேகந்தாமென்னும் புத்தியும் மறந்தும் வாராமையின், "தூயமுத்தர்." என்றார். (154)

(292) [ஜன்மந் துக்கமென்று கண்டு அது நிவிர்த்தித்தற்பொருட்டுச் சிஞ்ஞாசையினால் யோகபூமி யப்பியாசத்திற்கு நேரே விக்கினங்களாதலாற் பரலோக சாதனங்களான காமாநுஷ்டானங்களைவிட்டு முதற்பூமி, இரண்டாம்பூமி, மூன்றாம்பூமி அப்பியாசத்தோடு கூடிநின்று பிரதிபந்தத்தால் மோக்ஷசாதனமான யோகசித்தியடையாமல் மரணமானவன் மேகமண்டலத்தினின்றும் பிரிந்தமேகம் மற்றோர் மேகத்தோடு கூடாமல் மத்தியினின்று வியர்த்தமாவதுபோல வியர்த்தமாவனோ? அலனோ என்று வருமாசங்கையைப்பற்றிக் கூறுகின்றார்.]

நாலாம்பூமியில்வருமுன் மூன்றுபூ மியுமடைந்து நடந்து மாண்டோர்
மேலான பதமடைந்து பிறந்துமெள்ள மெள்ளவந்து வீடு சேர்வார்
மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்த மைந்தா
காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே. (155)

இ-ள் நாலாம்பூமியில் வரும் முன்=(சத்துவாபத்தியென்னும் ஆரூடபூமியாகிய) நான்காம் பூமியில் வருதற்கு முன்னே, மூன்று பூமியும் அடைந்து நடந்து மாண்டோர்=சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்னும் அப்பியாச பூமிகண் மூன்றனையும் அடைந்து நடந்து மரணமாயினோர், மேல் ஆன பதம் அடைந்து=(தேவவிமானத்தின்மீது ஆரூடராய்ச் சென்று) உயர்வான சுவர்க்க முதலிய பதங்களை யடைந்து (அங்குள்ள திவ்வியபோகங்களைப் புஜித்து), பிறந்து=(பூமியில் சுத்தராயும், ஸ்ரீமான்களாயும் உள்ளோர் மனையின் கண்ணே அல்லது, யோகிகள் வம்சத்தில்) ஜநித்து, மெள்ள மெள்ள வந்து=கிரமமாக ஆரூடதசையாகிய நான்காம் பூமியில் வந்து, வீடு சேர்வார்=மோட்சமடைவார், மால் ஆன பவத்தில் விழார்=மயக்கத்திற்குக் காரணமான ஜநநங்களில் வீழார்கள், (பூர்வவாசநியினும்

நிக்கிருஷ்ட கதியை யடையாரென்றபடி),முதல் பூமி கிடைப்பதுவே வருத்தம்=சுபேச்சை யென்னும் முதற்பூமி கிடைப்பதே பிரயாசம், மைந்தா=மைந்தனே, காலான முதற்பூமி கை வந்தால்=(மற்றைப் பூமிகட்கு) வழியான முதற்பூமி ஒருவனுக்கு வசமாகில், முத்தியும் கை வந்தது ஆம்=முத்தியும் அவனுக்கு வசமானதாம். எ - று.

" முதற்பூமி கிடைப்பதுவே வருத்தம் " எ - து,

" எறியுங் கடலி னுகத்துளையி லாமைக் கழுத்துப் புகுவது போற், பொறியெம் பிறவி யநேகத்தாற் புருடன் விவேகி யெனப் பிறந்து. "—

என்னும் வாசிட்டக் கருத்து.

" மறுபூமிக்கிந்த வொன்றே ஏகந பூமியென முடிவில் வெளியாம். "—

என்று வாசிட்டத்திற் கூறியிருப்பதால், " காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்ததாம் " என்றார். (155)

[ஞானபூமிகளின் மகிமை தோன்றச் சபதத்தோடும் அதனைப் புகழ்ந்து கூறி உபசம்மரிக்கின்றார்.]

இப்புவியி லிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந் திருந்தா ராஞல்
அப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே
தப்புரையென் றவர்கெடுவார் நடுவான மறைகளைநீ சங்கி யாதே
செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந் தெளிந்தி டாயே.

இ - ள்- இப்புவியில்=இப்பூமியின்கண், இஞ்ஞானபூமி ஒன்றில் இரண்டில்=ஞானபூமிகளுள். சுபேச்சை யென்னும் முதற் பூமியிலாவது, விசாரணை யென்னும் இரண்டாம் பூமியிலாவது, அடைந்து இருந்தாராஞல்=அப்பியாச முடையரா யிருப்பார்களாயின், அப்புருடர் = அந்தப் புருடர்கள், மிலேச்சர் ஆகிலும்=மிலேச்சராயினும், முத்தர்=முத்தராவர், குருபாதத்து ஆணை மெய்யே=சற்குரு பாதத்தின் மீதாணை இது சத்தியமே, தப்புரை என்றவர்=இது கபடவார்த்தையென்று சொல்பவர், கெடுவார்=நாசமாவார், நடுவான மறைகளை=(மக்களிடத்துத் தாய்போலும்) பாரபட்சமற்ற சுருதி வாக்கியங்களை, நீ சங்கியாதே=நீ சங்கை செய்யாதே, செப்பும் மொழி வழி=சுருதி உபதேசியா நிற்கும் வாக்கிய நெறியில், திடம் ஆய்=உறுதி யுடையவனாய், அகம் பிரமம் என்று இருந்து=நான் பிரஹ்மமா யிருக்கின்றேனென் றநுசந்தாணித்துப் பிரஹ்மமாகவே யிருந்து,தெளிந்திடாய்=* தெளிந்திடுதி. எ - று.

* தெளிதல்=சந்தேக நீங்குதல்.

"மிலேச்சர்" எ-து, உபலட்சணமாகலின் இராட்சதர், அசுரர், மிருக முதலியனவுங் கொள்க. அசாமளன், கஜேந்திரன் இவர் ஞானபூமி யடைந்ததால் மோட்சமடைந்தனர் என வாசிட்ட ஆறயிர வியாக்கியானத்திலும், அநுமன், கற்கடி, பிரகலாதர் முதலியோர் ஞானபூமியினால் முத்தி யடைந்தனர் எனப் பெரிய வாசிட்ட வியாக்கியானத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது. "குருபாதத்தாணை" என்றதால், இங்ஙனங் கூறினது அர்த்தவாதமன்றென்பதும், "மெய்யே" என்றதால், சுருதி, ஸ்மிருதி, புராணாதிகளின் சித்தாந்தமென்பதும் பெறப்படுகின்றன. உலகில் அரசனுடைய வாக்கியத்தை அவன் குடைக்கீழ் வாழ்வோர் அவமதிக்கில் அவர் க்ஷேமமடையாமல் நாசமடைவதுபோல இறைவன் திருவாக்கான சுருதியை அவமதிப்பவரும் க்ஷேமமடையாமல் நாசமடைவரென்பார், "தப்புரை யென்றவர் கெடுவார்" என்றார். (156)

(293) [வருணாச்சிரம அபிமானிகளான சிலருடைய பிராந்தி வசனத்தைக் குருவாக்கால் நிவிர்த்திப்பிக்கும் நிமித்தம் சீடன் வினாதல்.]

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமியென்று, நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக்கியகுருவே நீர் சொன்னீரே, இல்லாளுங் குடும்பம் விட்டுச் சந்நியாசம்புகுந்தேகாங்கியானோர், அல்லாமன் முத்தி பெறாரென்றுசிலர் சொலுமயக்க மகற்றுவீரே. (157)

இ-ள். பொல்லாத *மிலேச்சருக்கும் = துஷ்டத்தன்மை யுடைய மிலேச்சருக்கும், ஞானபூமி விதேக முத்தி தரும் என்று = (சுபேச்சையாதி) ஞானபூமி (அடையப்படுமாயின்) விதேக கைவல்யத்தைக் கொடுக்குமென்று, நெல் ஆகி முளைக்கும் எனை = (உமியாதிகளோடு கூடி அங்குரியா நிற்கும்) நெல்லைப்போல (ஜநந ஏதுவான அவித்தை, காம, கர்மங்களோடுகூடி) ஜநித்து மரியாநிற்கு மென்னை, தண்டுலம் ஆக்கிய குருவே = (அங்குர ஏதுவான உமியாதிகளைக் குத்திப்போக்கிய) அரிசியைப்போல (ஜநந ஏதுவான அவித்தையாதிகளைச் சுருதி, யுத்தி, அநுபவங்களாற்போக்கி ஜன்மஜராமரணமில்லாத) பிரஹ்மரூபமாகப் பண்ணிய ஆசிரியரே, நீர் சொன்னீரே = தேவரீரருளிச்செய்தீரே, (இதற்கு முரணாக) சிலர் = உலகின்கட் சிலபேர் (நான்கு வருணங்களுட் சிறந்த பிராமண வருணத்திலும்), இல்லாளும் குடும்பம் விட்டு = மனைவியையும், குடும்பத்தையுந் துறந்து, சந்நியாசம் புகுந்து = (தண்டதாரணாதி ரூப) துரியாச்சிரமமடைந்து ஏகாங்கி ஆனோர் அல்லாமல் = (விஜனப்பிரதேசமாகிய, பருவதகுகை முதலானவைகளில் தனித்திருந்து ஞானபூமியை அப்பியாசிப்பவர் மோட்சமடைவரேயல்லது, முத்திபெறார் என்று = (பிராமணரிற் கிரகாச்சிரம முடையோரும், ஏனைய க்ஷத்திரிய, வைசிய,

* மிலேச்சர் = கோமாம் சாதி பட்சிக்கும் கிராதாதி ஜாதி பேதம்.

சூத்திரராதியரும் ஞானபூமி யப்பியாசத்தால்) மோட்ச மடையார்களென்று, சொலும் மயக்கம் அகற்றுவீர்=சொல்லாநிற்கும் பிராந்தியை நீக்குவிப்பீராக. எ-று. (157)

(294) [சீடனையும், அவன் சங்கையையும் புகழ்ந்து சங்கைக்குத் தாங் கூறப்புகுந்து சந்நியாச வகைகளும், அவற்றின் நாமங்களும், சந்நியாசத்துக்கு முக்கிய காரணமுங் கூறுகின்றார்.]

சிஷ்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கைநன்று தெரியக் கேளாய்
கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர்கள்
பட்டதுயர் கெடுங்குடீ சகம்வெகூ தகமஞ்சம் பரம வஞ்சம்
விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேட மன்றே. (158)

இ-ள். சிட்டர் புகழ் மகனே=பெரியோராற் புகழப்படாநின்ற மைந்தா, நீ சங்கித்த சங்கை நன்று=நீஆட்சேபித்த ஆட்சேபம் நல்ல ஆட்சேபம், தெரியக் கேளாய்=(அதற்குச் சமாதானம்) உனக்குத் தோன்றக் கூறுதுங் கேட்பாய், கட்டு அழியும் துறவு=குடும்ப சம்பந்தங் கெடுதற்குக் காரணமான சந்நியாசம், நால்வகை ஆகும்=நான்கு வகுப்பாம், அவைகளுக்கு ஆகும் பேர்கள்=அந்நால்வகை சந்நியாசங்கட்கும் உளவாகு நாமங்கள், குடீசகம், வெகூதகம், அஞ்சம், பரம அஞ்சம் (என்பவையாம்), பட்டதுயர் கெடும்=(இவைகளாற் சம்சாரத்திற்) பட்டதுன்பங் கெடும், விட்டு அகலும் துறவுக்கு=(குடும்பத்தை) விட்டொழியுஞ் சந்நியாசத்திற்கு, விராகம் காரணம் அன்றி வேடம் அன்று=விராகங் காரணமேயல்லாமல்,(காஷாய வஸ்திரதாரண முதலிய) வேஷங் காரணமன்று. எ-று.

"அங்கு"=ஆங்கு என்னும் அசைநிலை யிடைச்சொற்றிரிபு. "நீ சங்கித்த சங்கை நன்று" எ-து, துறவறமடையாதவரும், சூத்திரராதியரும் ஞானபூமி யப்பியாசத்திற்கு அருகரல்லர் என்னும் மித்தியா வசனத்தால் ஞானசாஸ்திரத்திற் புகாதிருப்பவருடைய பெருஞ் சந்தேகத்தைப்போக்கிப் புகச்செய்து ஞானவாயிலால் அநர்த்த நிவிர்த்தி ஆநந்தப்பிராப்தி ரூபமான மோட்சமடையப் பண்ணுவதாமென்க. (158)

[விராகம் மூவகைத்தென்றும், அவற்றின் இலக்கணம், இனையவென்றுங் கூறுகின்றார்.]

மந்தமுந்தீ விரமுநதீ விரதரமு மெனமூன்று வகைவி ராகம்,
வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராக மந்தம், இந்தவுட லளவுமினி தனம்வேண்டா மெனவிடறீ விரமென்பார்கள், அந்தணனூர் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்திடாயே. (159)

இ-ள். விராகம்=வைராக்கியமானது, மந்தமும், தீவிரமும், தீவிரதரமும், என மூன்று வகை=என மூவகையாம், (அம்மூவகையுள்), வெந்துயரம் வரும்பொழுது=(புத்திர தாரதனாதிக ணசித்துப்போனதனுற்)

கொடிய துக்கமுண்டாகும்பொழுது, குடும்பத்தை வெறுத்துவரும் விராகம்=(அத்துக்கஞ் சகிக்கமாட்டாமல் இச்சம்சாரம் மகா கொடியது இதனைச்சுட வேண்டும் என்று அக்காலத்தில் மட்டும்)குடும்பத்தை யுவர்த்துவரும் வைராக்கியம், மந்தம்=மந்த விராகமாம், இந்த உடல் அளவும்=(சொற்ப புண்ணியத்தால்) இத்தேக முள்ளளவும், மனை தனம் வேண்டாம் எனவிடல்=தார தன முதலிய சம்சாரம் நமக்கு வேண்டாம் என்று வெறுத்து விடுகின்ற திடபுத்தியை, தீவிரம் என்பார்கள்=தீவிர வைராக்கியமென்பர், அந்தணன் ஊர்மித்தை எனவிடலது=(மகாபுண்ணிய பலத்தால் மீண்டும் ஜநநத்தை யுடைத்தான) பிரஹ்மலோக முதலியவையும் மித்தையாகலின், நமக்கு வேண்டாம் என்று வெறுத்து விடுதலே, தீவிரதரம் ஆம்=தீவிரதரவைராக்கியமாம், அறிந்திடாய்=(என) அறிவாய். எ - று. (159)

[முன் சொன்ன விராகங்கண் மூன்றனுள் மந்தவிராகம் சந்நியாசங்கட்குக் காரணமன்றென் றெழுந்துந் தீவிரவிராகத்தா லுளவாகுஞ் சந்நியாச வேறுபாடுகளும், அவற்றின் இலக்கணங்களுங் கூறுகின்றார்.]

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்களொன்றும் பலித்தி
டாதே, தீவிரத்திற் குடீசகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்க
ளுண்டாம், தாவிநடந் திடத்திடமி லாதவர்க்குக் குடீசகமுஞ் சக
ங்களெங்கும்,மேவிநடந் திடத்திடமுள் ளவர்க்குவெகூதகமுமென
விதித்தார் மேலோர். (160)

இ - ள், பாவி மந்த விராகத்தில்=பாவியினது மந்த வைராக்கியத்தில், சந்நியாசங்கள் ஒன்றும் பலித்திடாது=(நால்வகைச் சந்நியாசங்களுள்) யாதொரு சந்நியாசமுஞ் சித்திக்கமாட்டாது, தீவிரத்தில்=தீவிரவைராக்கியத்தில், குடீசகமும் வெகூதகமும் என்று இரண்டு திறங்கள் உண்டாம்=குடீசகம், பகூதகமென்று சொல்லும் இருவித சந்நியாசங்களுளவாம், [இனி அவற்றின் இலக்கணங் கூறுகின்றார்.] தாவி நடந்திடத் திடம் இலாதவர்க்குக் குடீசகமும்=தாவி யாத்திரை முதலியவை செய்யச் சததியில்லாதோர்க்குக் குடீசகமும், சகங்கள் எஙகும்=உலகங்களில் எவ்விடத்தும், மேவி நடந்திடத் திடம் உள்ளவர்க்கு=தாவி யாத்திரை முதலிய செய்யச் சத்தி யுள்ளோர்க்கு, வெகூதகமும் என=பகூதகமும் உரியதென்று, விதித்தார் மேலோர்=விதித்தனர் பெரியோர். எ - று.

துக்கம் பாவ பலமாகலின், அதனு லடையப்படும் மந்த விராகமுடையவனை, "பாவி" எ - ம், மயான வைராக்கியம்போலும், கிராமிய தர்மானந்தர வைராக்கியம்போலும் மந்த விராகம் உடனே மாறுதலால், "பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்களொன்றும் பலித்திடாது" என்றுங் கூறினர். "இந்தவுட லளவுமனை தனம்வேண்டா மெனவிடறீவிரவிராகம்" என முன்னே கூறினதனுல் அது காரணமாக வுளவாகும் குடீசகம், பகூதகங்கள் மறுமைப்பயன் குறித்ததென்றும், கர்மசந்நியாசங்க ளென்றும் அறிக. (160)

[தீவிரதர விராகங் காரணமாக உளவாகுஞ் சந்நியாசங்களை
இப்போது கூறுகின்றார்.]

இருவகைதீ விரதரத்து மஞ்சனென்றும் பரமாஞ்சனென்றுஞ்
சொல்வர், வருமஞ்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா
தென்பார், பரமாஞ்ச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்கு
மென்பார், திரமருவும் பரமாஞ்சன் றானுமிரு வகையாகுஞ் செப்பக்
கேளாய். (161)

இ-ள். தீவிரதரத்தும்=தீவிரதர வைராக்கியத்தும், அஞ்சன் என்றும் பரமாஞ்சன் என்றும்=ஹம்சனென்றும், பரமஹம்சனென்றும், இருவகை சொல்வர்=இருவித சந்நியாசாதிகார முண்டென்று சொல்லுவர், (அவ்விரண்டில்)வரும் அஞ்சனுக்கு=வாராநின்ற ஹம்சசந்நியாச முடையோனுக்கு, முத்தி=மோட்சமானது, சத்தியலோகத்து அன்றி வாராது என்பார்=பிரஹ்மலோகத்தில் வருமேயன்றி (இந்த லோகத்தில்) வாராதென்று சொல்லுவர், பரம அஞ்சனுக்கு=பரமஹம்ச சந்நியாச முடையோனுக்கு, முத்தி=மோட்சமானது, இவ்வுலகில் ஞானத்தால் பலிக்கும் என்பார்=இவ்வுலகத்திலேயே தத்துவ ஞானத்தால் வாய்க்குமென்று கூறுவர், திரம் மருவும்=திட (விராகமும், தீவிர சிஞ்ஞாசையும்) பொருந்தாநிற்கும், பரம அஞ்சன் தானும்=பரமஹம்சனும், இருவகை ஆகும்=இருவிதக் கூறுபாடுடைய சந்நியாசமுடையவனா யிருப்பன், செப்பக் கேளாய்=அவ்விருவகைச் சந்நியாசங்களின் நாமமும், இலக்கணமும் இனிக்கூறக் கேட்பாய். எ-று.

பிரஹ்மலோக விச்சையால் முமுட்சுத்துவமில்லாவிடில் ஹம்சனென்றும், கீழ்ப்போன அநந்த ஜநநங்களிற் செய்துவந்த புண்ணிய புஞ்ச பரிபாக வசத்தாலுண்டான சித்தசுத்தியினுன் முமுட்சுத்துவ முண்டா யிருந்தால் நேரே ஞானசாதனமான பரமஹம்ச சந்நியாசமுடையவனென்றுஞ் சொல்லப்படும் என்றறிக. (161)

[பரமஹம்ச சந்நியாசத்தின் கூறுபாடான சந்நியாசங்களின் நாமமும்,
உடையோர இலக்கணமுங் கூறுகின்றார்.]

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ் ஞாசு
மெய்ஞ்ஞான பூமியின்முன் மூன்றுபூ மியுணடக்கும் விவேகி யா
னேன், சுஞ்ஞான வானென்போன் சீவன்முத்தி யடைந்திருக்குந்
தூய மேலோன், அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகையா
மதுவுங் கேளாய். (162)

இ-ள். (பரம ஹம்ஸ) சந்நியாச முடையோரும், சிஞ்ஞாசு ஞானவான் என்று=சிஞ்ஞாசென்றும், ஞானவானென்றும், இரண்டு பேர்கள்=இருவிதபேத முடையராயிருப்பர், அவரில=அவ்விருவருள், சிஞ்ஞாசு=சிஞ்ஞாசென்பவன், மெய்ஞ்ஞான பூமியில்=தத்துவஞான பூமிகளுள், முன்

மூன்று பூமியுள் நடக்கும்=முன்னவையாகிய (சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்னும்) மூன்று பூமி யப்பியாசத்திற் செல்லும், விவேகி ஆனோன்=விவேகியாம், சுஞ்ஞானவான் என்போன்=நல்ல ஞானவானென்று சொல்லப்படுவோன், சீவன் முத்தி அடைந்து இருக்கும்=சீவன் முத்தியை யடைந்துள்ள, தூய மேலோன்=சுத்தனுன பெரியோனும், அஞ்ஞானம் அகலும்=அஞ்ஞானம் கிரமமாக நீங்கப்படும், அந்தச் சிஞ்ஞாசும்=அச்சிஞ்ஞாசு வின் பாகுபாடும், இருவகை ஆம்=இருவிதமாக விருக்கும், அதுவும் கேளாய்=அவ்விருவகைப் பாகுபாட்டையுங் கேட்பாயாக. எ-று.

தன்னை யறிய இச்சிப்பவன், "சிஞ்ஞாசு" தன்னைப் பிரதிபந்த ரகிதமா யறிந்தவன், "ஞானவான்" என்க.

"அஞ்ஞானமகலும்" என்றதை,

"மாறாத வஞ்ஞான முழுதுமகல் வது கூறின்"

என்னும் சொரூபாநந்த உபநிடதத்தின், 30-ம் செய்யுளாலறிக. (162)

[சிஞ்ஞாசுகளின் பாகுபாடானஇருவகை நிலைமையின் இலக்கணங் கூறல்.]

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர் பரம ஞானம்
அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞானம்
இந்தவகைச் சாத்திரத்து முலகத்து நடப்பதுகண் டிருந்து மைந்தா
சிந்தனையின் மயக்கமென்னே சுருதியுத்தி யநுபவத்தாற் றெளிந்தி டாயே. (163)

இ-ள். சிலர்=சிலபேர், பந்த மனை துறந்து=(மமத்துவாபிமானத்தால) பந்தரூபமான மனைவி, புத்திரர், தங்களை (பிரைஷமந்திரோச்சாரண பூர்வமாக)ச் சந்நியாசித்து, * அதிதிகள் ஆய் இருந்து=(தண்டதாரணாதி யாசிரமரூபமான) யதிகளாய் (க் குருவை யடைந்து) நின்று, பரமஞானம் அடைவர்=(ஞானபூமியை அப்பியாசித்துப்) பிரஹ்மஞானமடைவர், சிலர்=(யாதாயினும ஓர் நிமித்தத்தால் பிரசித்தமான வாகிய சந்நியாசஞ் செய்து கொள்ளப் பிரதிபந்த முடையரான) சிலபேர், அந்தணர் மன்னவர் வணிகர் சூத்திரர் ஆய் இருந்து=பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரராய் (மனைவி புத்திராதியரோடுகூடித் தத்தம் வருணத்திற்குரிய தருமங்களைச் செய்துகொண்டு மேன்மேற் சநநத்தைக்கொடுக்கத் தக்கனவான கர்மபலத்தி லிச்சைமாத்திரம் விடுவதான மானச சந்நியாசத்தை யுடையராய்க் குருவை யடைந்து) நின்று, ஞானம் அடைவர்=(ஞானபூமி யப்பியாசத்தால்) பிரஹ்ம ஞானத்தை யடையாநிற்பா, இந்தவகைச சாத்திரத்தும் உலகத்தும் நடப்பது கண்டு இருந்தும்=இந்தப்படி சாத்திரங்களிலும், உலகின்கண்ணும் (முறையே) பிரதிபாதிப்பதையும, நடப்பதையு மறிந்திருந்தும், மைந்தா=

* அதிதி=பரதேசி.

மைந்தனே, சிந்தனையில் மயக்கம் என்னே=(சிலருடைய பிராந்தி வசனத்தால்) உனது மனதின்கண் மயக்கமுண்டாதல் இஃதென்னே, சுருதி யுத்தி அநுபவத்தால் தெளிந்திடாய்=சுருதி யுத்தி யநுபவங்களினாலே இச்சந்தேகமொழிந்து விசதியானந்தமடைதி. எ-று.

"என்னே" என்பது அதிசய இரக்கச்சொல். இவ்வாறு நான்குவிதமான சந்நியாசங்கள் பாராசர ஸ்மிருதியிற் கூறியிருக்கின்றன.

"இல்லாளுங் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கியாஞே, ரல்லாமன் முத்திபெறா தென்றுசிலர் சொலுமயக்க மகற்றுவீர்."—

என்று, 157-ம் செய்யுளிற் சீடனுட்சேபித்தபடி உலகின்கட் பெரும்பாலும் மயக்கத்திற்குக் காரணமாயுள்ள ஆட்சேபத்திற்கு விருத்திப்பிரபாகரகிரந்தத்திற் சமாதானங்கூறியிருப்பதையும் இங்ஙனம் உதாரணமாக எடுத்துக்காட்டுதும்.

(295) ஓர் கிரந்தகாரர் மதம்:—சந்நியாச விதாயகமான வேதவாக்கியங்களிற் பிராமணபத மிருப்பதால், பிராமணர் மாத்திரத்திற்குச் சந்நியாசவதிகாரமிருக்கிறது, சந்நியாசமின்றிக் கிரகஸ்தர் முதலியோருக்குப் பிரஹ்மவிசாரத்திற் கவகாசமில்லை; ஆதலின், சந்நியாசத்திலும், அப்படியே பிரஹ்மசிரவணத்திலும் க்ஷத்திரிய வைசியர்க்கும் அதிகாரமில்லை என்பது.

(296) மற்றோர் கிரந்தகாரர் மதம்:—சந்நியாசத்திற் கேவலம் பிராமணர்க்கு அதிகாரமுளதேனும் பிரஹ்மசிரவணத்தில் க்ஷத்திரிய வைசியர்க்கும் அதிகாரமுளது; ஆயினும், ஜன்மாந்தர சம்ஸ்கார பலத்தால் எவ்வுத்தம புருடர்க்கு விடயங்களிற் றீனத்துவ முதலிய தோடமுண்டாகவில்லையோ அப்படிப்பட்ட சுத்தபுத்தி யுடையோர்க்குச் சந்நியாசமின்றியே ஞானமுண்டாகாநிற்கும்; இக்காரணத்தால், கிரகஸ்தாசிரமத்திலே அநேக ராஜரிஷிகள் பிரஹ்மவித்தென்று சொல்லப்பட்டிருக்கின்றனர் என்பது.

(297) வேறுசிலர்:—எப்படிப் பிரஹ்ம சிரவணாதிகளில் க்ஷத்திரிய வைசியர்க்கு அதிகாரமுளதோ அப்படிச் சந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்க்கு நிஷேதமில்லை. ஞானோதயத்தால் கருத்திருத்துவ, போக் திருத்துவ புத்தியும், அப்படியே ஜாதி ஆச்சிரம வபிமானமும் அபாவமாகா நிற்கும்; கருத்திருத்துவ, போக்திருத்துவ புத்தியன்றியும், ஜாதி ஆச்சிரமங்களி னபிமானமன்றியும் கருமாதிகாரங் கூடாமையின், சர்வகர்ம பரித்தியாக பூர்வகமாக அக்கிரிய, அசங்க ஆன்மசொரூபத்தோடு ஸ்திரரூபமான வித்துவத் சந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்க்கு அதிகாரமுண்டு, கேவலம் விவிதிஷா சந்நியாசத்தில் அதிகாரமில்லை என்பர்.

(298) வார்த்திககாரரான சுரேசுராசாரியர் மதம்:— விவிதிஷா சந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்க்கு அதிகாரமுண்டு: அநேக சுருதிவாக்கி

யங்களில் பிராமணர்க்குச் சந்நியாசஞ் சொல்லியிருந்தாலும் சந்நியாச விதாயக ஜாபாலசுருதியில் பிராமண பதமில்லாமலே கேவலம் வைராக்கிய சம்பத்தியால் சந்நியாசஞ் சொல்லியிருக்கின்றது; ஆகலால், அநேக சுருதி வாக்கியங்களில் * துவிஜர்கட்கு உபலட்சணமாகப் பிராமண பதமுள்ளது; ஸ்மிருதியிலோவென்றால், † 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌵𑍈𑌶𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍𑌗𑍃𑌹𑌾𑌤𑍍। 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌵𑍇𑌦𑌮𑌧𑍀𑌤𑍍𑌯 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌃 ॥

(ப்ராஹ்மண க்ஷத்திரியோவாபி வைஸ்யோ வாப்ரவ்ருஜேத்க்குருஹாத் த்ராயாணம் வர்ணநாம் வேதமதீசத்யத்வார ஆஸ்ரமா:) என்னும் வசனமிருப்பதால் க்ஷத்திரிய வைசியர்க்கும் சந்நியாசத்தில் அதிகாரம் உண்டென்பது.

(299) வேறே ஒரு கிரந்தகாரர் மதம்:—சந்நியாச விதாயக சுருதிவாக்கியங்களிற் பிராமணபதம் உண்டு; அதற்குத் துவிஜர் மாத்திரத்திற்கு உபலட்சண முண்டென்பதிற் பிரமாணமில்லை. ஜாபாலசுருதியில் பிராமண பதமில்லையாயினும், அநேக சுருதி யநுசாரத்தால் அங்கேயும் பிராமணகர்த்தாவுக்கு ‡ அத்தியாகாரம் உண்டு; ஆகலின், க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசத்தி லதிகாரமில்லையாயினும், அநேக ஸ்தானத்தில் கிரகஸ்தரான இராஜாக்கள் ஞானவான்களா யிருந்தனரென்று கூறப்பட்டிருக்கின்றனர்; ஆகலின், பிராமணர்க்குப் பிரஹ்மவிசாரத்திற்குச் சந்நியாசம் அங்கமாம்; சந்நியாசமின்றிக் கிரகஸ்தாதி ஆசிரமத்திலுள்ள பிராமணர்க்குப் பிரஹ்மவிசாரத்தி லதிகாரமில்லை சந்நியாசியாகிய பிராமணனுக்கே பிரஹ்மவிசாரத்தில் அதிகாரமுண்டு. க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசமின்றியே பிரஹ்மவிசாரத்தில் அதிகாரமுண்டென் றறியவேண்டும். என்னை? சந்நியாசவிதாயக வசனத்திற் பிராமணபதமிருத்தலின் என்க. க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசத்தின் விதியில்லை. ஆன்மகாமனுக்கு ஆன்ம சிரவணத்தின் அபாவஞ் சொல்லுகை பொருந்தாது; இதனால், க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானத்தி னுபயோகியான அதிருஷ்டமானது கேவலங் கருமத்தினாலேயே உண்டாகாநிற்கும் சந்நியாச ஜந்நியமான அதிருஷ்டத்தினபேட்சை க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானத்திலில்லை; இதனாற்றான் கீதையிலும்,

"காதலா லரசன் சனகனே முதலோர் கருமமோ டொழுகியே யன்றோ, போதரா யுலகம் புக்கது"

என்றிவ்வாறு பரமேசுரர் கூறியிருக்கின்றனர்; இவ்வாக்கியத்தில், "போதராய்" என்பதற்கு அந்தக்கரணத்தின் சுத்தி அல்லது, ஞானம்

* துவிஜர்=மூவருணத்தர்.

† 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃+𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌃=அந்தணன், க்ஷத்திரியன், வைசியன் இம்மூவரும் கிரஹஸ்தாசிரமத்தைவிட்டு சந்நியாசாசிரமத்தை யடைந்து காட்டுக்குப்போகவேண்டும்; இம்மூன்று வருணத்தரும் வேதம் கற்றுக்கொள்ளலாம்; இவர்க்கு பிரமசரிய, கிரஹஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாசம் என்னும் நான்காச்சிரமங்களும் உண்டு.

‡ அத்தியாகாரம்=அவாய்நிலை; (அது ஒருசொல் மற்றொரு சொல்லை அவாவி நிற்றல்.)

என்றுபொருள்! பாஷியார்த்தம், சந்நியாசரகிதமான கேவலம் கருமத்தால் அந்தக்கரணசுத்தியை ஜனகர் முதலியோர் அடைந்தனர் அல்லது, சந்நியாச ரகிதமான கேவலங் கருமத்தால் ஞானப்பிரதிபந்தக நிவிர்த்திவாயிலாகச் சிரவணத்தால் ஞானத்தையடைந்தனர் என்பது; இவ்விருவகையாலும் க்ஷத்திரிய, வைசியர்க்குச் சந்நியாச நிரபேட்சமான கேவலங் கருமமே ஞானப்பிரதிபந்தகமான பாவநிவிர்த்திக்கேதுவாயிருக்கிறது. பிராமணர்க்குச் சந்நியாச சகிதமானகருமத்தால் ஞானப்பிரதிபந்தகமான பாவநிவிர்த்தியுளதாம். சிரவணத்திற்கங்கம் சந்நியாசமாமென்னும் இப்பட்சத்திலும் சந்நியாசம் பிராமணர்களின் சிரவணத்திற்கே அங்கமாம்: க்ஷத்திரிய, வைசியரின் சிரவணத்திற்கு அங்கமன்று. பின்னையோ பலாபிலாஷையும், குரோதாதி தோஷங்களும் இல்லாமல் ஈசுரார்ப்பணபுத்தியோடு செய்யும் தந்தம் வருணாச்சிரம தருமாநுஷ்டானத்தோடு கூடிய கரும அவகாசகாலத்தில் சிரவணத்தினாலேயே க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானமுண்டாகும். சர்வதா வித்தையினுபயோகியான கருமத்திலும்,சிரவணத்திலும் அதிகாரமுண்டு. என்னை? பிராமணரைப் போல ஞானேச்சை க்ஷத்திரிய, வைசியர்க்குஞ் சமமாம். பலத்தையிச்சித்தவனுக்குச் சாதனத்தில் அதிகாரமுண்டு; ஆகலால், ஆன்மகாமரான க்ஷத்திரிய, வைசியர்க்கு வேதாந்த சிரவணத்தில் அதிகாரம் உளதென்பது.

(300) மற்றோர் கிரந்தகாரர் மதம்: – மநுடர் மாத்திரத்திற்கு ஆன்ம விருப்பம் பொருந்தியிருப்பதால் க்ஷத்திரிய, வைசியர்போல ஞானேச்சையின் சத்பாவத்தால் சூத்திரர்க்கும் சொல்லியவாற்றால் வேதாந்த சிரவணத்தின் அதிகாரமுண்டாகவேண்டியதேயாயினும், சூத்திரர்க்கு உபதேசங்கூடாதென்று நிஷேதித்திருப்பதால் சர்வதா உபதேசரகித புருடர்க்கு விவேகாதி கூடாமையின், ஞானேச்சைகூடாது; அப்படியே சூத்திரர்க்கு யக்ஞாதி கருமங்களும் நிஷேதித்திருப்பதால் வித்தையினுபயோகியான கர்மத்தினபாவத்தால் அவர்க்கு ஞான ஏதுவான சிரவணத்தி னதிகாரமில்லை என்பது.

(301) வேறொரு கிரந்தகாரது மதம்'—உபநயன பூர்வகமாக வேதாத்தியயனஞ் சொல்லியிருக்கிறது. சூத்திரர்க்கு உபநயனஞ்சொல்லவில்லை; ஆதலால், வேதசிரவணத்திலோ சூத்திரர்க்கு அதிகாரமில்லை; அப்படியாயினும்,*"ஶ்ராவயேச்சதுரோவர்ணாந்" என்பது முதலிய வசனத்தால் இதிகாசபுராணாதிகளின் சிரவணத்தில் சூத்திரர்க்கும் அதிகாரமுண்டு. பூர்வஞ் சூத்திரர்க்கு உபதேசநிஷேதஞ் சொல்லியிருத்தற்கு அபிப்பிராயம்; வைதிகமந்திரத்தோடுகூடின யக்ஞமுதலிய கருமவுபதேசம் சூத்திரர்க்குச் செய்யற்க; அப்படியே வேதோக்த பிராணாதிய சகுணோபாசனையைச் சூத்திரர்க்கு உபதேசஞ் செய்யற்க என்பதாம். உபதேசமாத்திரத்தை நிஷேதிக்கவில்லை; உபதேசமாத்திரத்தை நிஷேதித்திருக்கிறதென்றால், தர்மசாஸ்திரத்தில் சூத்திரஜாதியின் தர்மநிரூபணம் நிஷ்பலமாய்விடும். வித்தையினுபயோகியான் கருமத்தி னபாவத்தால் வித்தையில் அதிகாரமில்லை எனச் சொல்

* ஶ்ராவ+வர்ணாந்—நான்கு வருணங்களையும் கேட்பிக்கலாம்.

வார்களாயின், அதற்குச் சமாதானம்; சாதாரணம், அசாதாரணமான சகல சுப கருமங்களுக்கும் வித்தையிலுபயோக மிருக்கின்றது. சத்தியம், அஸ்தேயம், க்ஷமை, சௌசம், தானம், விடயத்தின் விமுகதை, பாகவதநாமோச்சாரணம், தீர்த்தஸ்நாநம், பஞ்சாட்சர மந்திரராஜாதிகளின் ஜபம் இவை முதலிய சகல வருணங்களின் சாதாரண தருமங்களிலும், அப்படியே சூத்திரகமலாகரத்திற் சொன்ன சதுர்வருணங்களின் அசாதாரண தருமத்திலும் சூத்திரர்க்கு அதிகாரமுண்டு; அக்கருமங்களின் அநுஷ்டானத்தால் அந்தக்கரண சுத்திவாயிலாக வித்தையின் பிராப்திகூடும்; ஆகலின், இதிகாச புராணாதிகளின் சிரவணத்தால் விவேகாதிகள் பொருந்தாநிற்பதால் சூத்திரர்க்கும் ஞானேச்சையுண்டு: ஆகலின், வேதத்திற்குப் பின்னமான அத்யாத்மகிரந்தங்களின் சிரவணாதிகளிற் சூத்திரர்க்கும் அதிகாரமுண்டு; பாஷியகாரரும், பிரதமாத்தியாயத்தின் திருதீயபாதத்தில் உபநயனபூர்வகமாக வேதத்தின் அத்தியயனஞ் சொல்லியிருக்கிறது: சூத்திரர்க்கு உபநயனமின்மையின், வேதத்தில் அதிகாரமில்லை ஆயினும் புராணாதிகளின் சிரவணத்தால் சூத்திரர்க்கும் ஞான முண்டாய்விடில், ஞானசமகாலத்திலேயே சூத்திரர்க்கும் பிரதிபந்தரகிதமாக மோட்ச முண்டாகாநிற்கும் எனக்கூறியிருக்கின்றனர்; இவ்வாறான பாஷியகாரருடைய வசனத்தினாலும் வேதத்திற்கு வேறான ஞானவேதுவாகிய அத்தியான்ம கிரந்தத்தின் சிரவணத்தில் சூத்திரர்க்கு அதிகாரம் உண்டு.

(302) ஜன்மாந்தர சம்ஸ்காரத்தால் அந்திய ஜாதிகட்கும் சிஞ்ஞாசையுண்டாய்விடில் பௌருஷேய வசனத்தால் அவர்கட்கும் ஞானமுண்டாகிக் காரியத்தோடுகூட அவித்தையின் நிவிர்த்திரூபமான மோட்சமுண்டாய்விடும். ஆகலின் வேதாநுசாரிகளைப்போலச் சகலமநுடர்க்கும் தத்துவஞானத்தின் அதிகாரம் உண்டு. ஆன்மசொரூபத்தின் யதார்த்தஞானத்தைத் தத்துவஞானமென்பர். ஆன்மஹீனமாய் ஓர் சரீரமுளதாயின், அதற்கு ஞானத்தின் அநதிகாரமுண்டு; ஆகலின், ஆன்மஞானத்தின் சாமர்த்தியம் மநுஷியர் மாத்திரத்திலுண்டு.

(303) ஆயினும், எந்தச் சரீரத்தில் தெய்வசம்பத்துண்டோ அதற்குத் தத்துவஞானமுண்டாகாநிற்கும்; அசுரசம்பத்தில் தத்துவஞான முண்டாக மாட்டாது. சர்வபூதங்களிலும் தயை, க்ஷமை, சத்தியம், * ஆர்ஜவம், சந்தோஷாதிகளான தெய்வசம்பத்தின் பிராப்தி பிராமணரிடத்திலுண்டு. க்ஷத்திரியர்க்குப் பிரஜைகளைப் பாலனஞ்செய்யும் பொருட்டுப் பிரவிர்த்திதருமமுண்டாவதால் பிராமணரினும் கிஞ்சித்து நியூனமான தெய்வசம்பத்து உண்டு. தருமபுத்தியால் பிரஜா சம்ரட்சணத்தின் பொருட்டுத் துஷ்டப்பிராணிகளை இம்சிப்பது அகிஞ்சையாம்; ஆதலால் தெய்வசம்பத்தின் அசம்பவமில்லை. அப்படியே வைசியர்க்கும் கிருஷி, வாணிச்சிய முதலிய சரீரவியாபாரம்

---

* ஆர்ஜவம்=சிரத்தையோடு கேட்பவனிடத்து நிச்சயித்தபொருளை மறையாமை.

க்ஷத்திரியரைப் பார்க்கிலும் அதிகமுண்டாவதால் ஆன்மவிசாரத்திற்கு அவகாசங்கூடாமையின், அவர்க்குச் சாமர்த்தியங் கூடாமலிருக்கிறது; அப்படியானாலும் எத்தனையோ பாக்கியசாலிகளான வைசியர்க்குச் சரீர வியாபாரமில்லாமலே சகல வியவகாரங்களின் நிர்வாகமுமுண்டாகாநிற்கின்றது; அவர்கட்குத் தெய்வசம்பத்தின் பேறுருவான சாமர்த்தியங்கூடும். எவ்வாசிரியர் மதத்தில் க்ஷத்திரிய, வைசியர்க்குச் சந்நியாசத்தின் அதிகாரமுண்டோ அவர் மதத்தில் அநாயாசமாகவே தெய்வசம்பத்து கூடும். சதுர்த்தவருணத்திலும், அப்படியே அந்தியஜாதிகளிலும் தெய்வசம்பத்து துர்லபமாயினும் கர்மபலம் அநந்தவிதமாம்; ஆகலின், ஒருவர்க்கு ஜன்மாந்தரத்தின் கர்மத்தால் தெய்வசம்பத்தின் பேறுண்டாய்விடின், புராணாதிகளின் விசாரத்தால் சதுர்த்தவருணத்திற்கும், பாஷாப் பிரபந்தாதிகளின் சிரவணத்தால் அந்தியஜாதிகட்கும் பகவத்பக்தியும், தத்துவ ஞானப்பேற்றின்வாயிலாக மோட்சப்பேறும் நிர்விக்கினமாகவுளவாம்; இவ்வாற்றால், பகவத்பக்தியும், தத்துவஞானத்தின் அதிகாரமும் சகல மநுடர்க்குமுண்டு; இது சாஸ்திரங்களின் நிர்ணயமாமென்று விருத்திப்பிரபாகரத்தின் அஷ்டமப்பிரகாசத்திற் கூறியிருக்கின்றது. (163)

(304) [133-ம செய்யுளில் இனி வித்தியாநந்தங் கூறுவோமென்றவாறே அதனைக் கூறத்தொடங்கிப் புருடனுனவனாஆன்மாவை இவனே நானென்றறிந்தால் பின்னையாருக்குப் போகநிமித்தமாக, எதைப்போகத்தைக் குறித்து, சர்ரதாபப்படுவன் என்னும் பிரகதாரண்யகசுருதியின் றற்பரியமான இகலோக துக்காபாவமும், புண்ணியம் என்று வரும், பாவம் என்றுபோம் என்னும் சிந்தனுருபமான பரலோக துக்காபாவமும் நான்கு செய்யுளாற் கூறுகின்றார்.]

[வேறு.]

பிறந்ததுண் டானா லன்றோ பிறகு சாவதுதா னுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே
பிறந்தது நானென் றாகிற் பிரமமன் றாந நானே
பிறந்தது மிறந்த தற்ற பிரமமா நானே நானே (164)

இ-ள். பிறந்தது உண்டானால் அன்றோ=(முன் ஒன்றினின்றும் நான்) ஜனித்ததுண்டாயினல்லவா, பிறகு சாவதுதான் உண்டாம்=பின்பு (ஒன்றால்) மரிப்பது எனக்குண்டாகும், [ஜநநமரணம் உமக்கேனில்லை யெனின்:— அதற்குக் கூறுகின்றார்.] பிறந்ததே இல்லை என்னும் பிரமம் ஆவதுவும் நானே=(சகலமும் ஜநநமாதற்கு அதிஷ்டானமாகலின்) அஜன்மம், அசங்கம் என்று சுருதியாதிகள்கூறும் பிரஹ்மரூபமாகிய அப்பொருளும் நானாகிறேன், (ஆகலின், எனக்கு ஜன்மாதி சட்பாவ விகாரங்களின்றென்பது கருத்து.) [ஜன்மாதி சட்பாவ விகாரங்கள் உலகல் பிரசித்தமாயிருப்பதுமன்றி

நீநம் இன்றனுடைய புத்திரன் என்பது பிரசித்தமாக விருத்தலின், உம கித்த ஜநநமரணமுண்டேயென்று மேலுஞ்சங்கித்து அதற்குக் கூறுகின்றார்.] பிறந்தது நான் என்றுகில்=(பூமிபிற்) சநித்தது நானென்று சொல்லப்படு மாயின், அந்த நான் பிரமம் அன்று=(ஜன்ம ஏதுவான அவித்தை காமகர்ம ங்களோடுகூடிச் சநியாநின்ற) அகம்சத்த வாச்சியமான அகங்காரம் பிரஹ்ம மன்று, பிறந்ததும் இறந்தது (ம்) அற்ற பிரமம் ஆம் நானே நானே=ஜநந மும் மரணமுமாகிய விகாரமிறந்த அசங்க பிரஹ்மரூபமாகிய (அகம் சப்தல ட்சியார்த்தமான) கூடஸ்தனே நான். எ-று.

துக்காபாவங் கூறத்தொடங்கி "பிறந்ததுண் டானு லன்றோ" என்று முன்னே ஜன்மத்தை யெடுத்தது ஜன்மப்பிரதீதி யநந்தரம் சர்வவநர்த்தங்க ளுந் தோன்றுகின்றனவாகலின், அது நிஷேதமாகவே சர்வவநர்த்தங்களும் நிஷேதமாமென்னுங் கருத்தால் என்க. (164)

[நான் என்னும் சத்தத்தின் பொருளைப் பிரசித்தமான வநுபவத்திற் காட்டுகின்றார்.]

நானென்ற பிரமமான நானேநா னறியே னென்றால்
நானென்ப தேது பின்னை நம்முடைப் புந்தி யென்னில்
தானது மயக்கந் தன்னிற் சாருமே சாவா தாகி
நானென நிறைந்தி ருந்த ஞானமா நானே நானே (165)

இ-ள். நான் என்ற பிரமம் ஆன நானே நான்=(தூஷ்ணீம்பூதா வஸ் தையில், யாதொரு கும்பசிந்தனையு மில்லாமல்) யான் (இருந்தேன்) என்று கூறுகின்ற பிரஹ்மரூபமான ஆன்மாவே நான், அறியேன் என்றால்=(தூஷ் ணீம் பூதாவஸ்தையில் ஆன்மாவை) அறியேனென்று சொல்லில், பின்னை= பின்னர், நான் என்பது ஏது=(விசேஷமாக) நான் (தேவதத்தன், நான் எக் ஞதத்தன்) என்று கூறுவது யாது, நம்முடைப் புந்தி யென்னில்=நம்மு டைய புத்திதான் அங்ஙனங் கூறுநிற்கின்றதென்று சொல்லில், அதுதான் மயக்கந்தன்னில் சாருமே=அப்புத்தி நித்திராமோகத்தி லபாவமாமே, (அங் ஙனம்), சாவாதாகி நான் என நிறைந்து இருந்த=(சுழுத்தியின் கண்) அபா வமாகாதசாய் நானாக நிறைந்திருந்த, ஞானம் ஆம் நானே நான்=ஞான ரூபமாகிய ஆன்மாவே நான். எ-று.

"நானென்ற" என்று சாமான்யமாகக் கூறினதால், நிஜாநந்த சத்பாவ முள்ள சுகதுக்கங்களி னந்தபாளமாகிய தூஷ்ணீம்பூதா வஸ்தையும், "பின்னை" என்றதால், தேவதத்தன், எக்ஞதத்தன் என்பவைவும் வருவித் தாம். "சாவா தாகி, நானென நிறைந்திருந்த ஞானமா நானே நானே." என்றதால், தன்னிடத்துப் போக்திருத்துவ மிறந்திருப்பதைக் குறிப்பித் தனர். (165)

[அகம்சத்நத்தின் இலட்சியார்த்தமான ஆன்மாவைப் பிரசித்தமான அநுபவத்தாற் காட்டிச் சுழுத்தியில் ஆநந்தமாயிருக்கும் ஏதுவைக் கொண்டு இவ்வான்மாவே பிரஹ்மமென்று சாதிக்கின்றார்.]

நிறைந்தவா றெந்த வாறு நிலைதெரிந் திலனென் றுயேல்
அறிந்ததாகு சுழுத்தி தன்னி லாநந்த மதுவே யாகும்
குறைந்ததற் கானந் தந்தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்ததே யிந்த வான்மா நிதானமிவ் வறிவு தானே (166)

இ-ள். நிறைந்த ஆறு எந்த ஆறு=(ஞானரூபமாகிய ஆன்மா) பூரணமாயிருக்குந்தன்மை எந்த வேதுவினால், நிலை தெரிந்திலன் என்றுயேல்=அந்நிச்சயமான ஏதுவை யானறிந்திலன் என்று நீ சங்கிப்பாயாகில், சுழுத்தி தன்னில்=சுழுத்தியின்கண், அறிந்ததாம்=(அஞ்ஞானத்தை) அறிந்திருந்ததாகிய, அது=அவ்வான்மா, ஆநந்தம் ஆகும்=நிரதிசயாநந்தரூபமாம்; (ஆகலின், ஆன்மாவே பரிபூரணப்பிரஹ்மமாம), [இஃதெங்கேனுங் கண்டதுண்டோவெனின் —உலகில் பிரசித்தமென்று கூறுகின்றார்.] குறைந்ததற்கு ஆநந்தந்தான்=குறைந்திருப்பதற்கு ஆநந்தமானது, குவலயந் தன்னில் இல்லை=உலகில் ஓரிடத்தும் காணப்படவில்லை, (ஆகலின்), இந்த ஆன்மா நிறைந்ததே=(சுழுத்தியின்கண் ஆநந்தமாயுள்ள) இவ்வான்மா பூரணந்தான்; இவ்வறிவுதானே நிதானம்=இப்பரிபூரணப் பிரஹ்ம சைதந்நியமே சகத்திற்கு ஆதிகாரணமாம். எ-று.

உலகில் தனதான்யாதி சம்பத்துணடாயிருப்பினும் புத்திரன் இலனென்னுங் குறையுளதேற் சுகமில்லை; புத்திர, மித்திர, களத்திராதிகள் நிறைந்திருப்பினும் தனமிலலையென்னுங் குறையுளதேற் சுகமில்லை; பிறவும் இங்ஙனம் உலகிற் காணப்படுதலின், "குறைந்ததற் கானந் தந்தான் குவலயந் தன்னி லில்லை" என்றார். (166)

[பிரகாரார்த்தமாக ஆன்மாநந்தவாயிலாற் றன்னிடத்துப் போக்திருத்துவாபாவத்தைக் காட்டித் தோய்நமித்தை யென்னும் சிந்தனுரூபமான அத்துவிதாநந்த வாயிலால் போக்கிய அபாவத்தையுங் குறிப்பாக வுணர்த்துகின்றார்.]

மனத்தினா லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும்
நினைத்திடி லநேக லோக நிற்பதவ் வறிவி லன்றோ
அனைத்தையுங் கடந்தப் பானு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ ரூனே. (167)

இ-ள். இவ்வுலகம்=(ஆகாசமுதற் றேகபரியந்தமான) இப்பிரபஞ்சம், மனத்தினால் எண்ணித்தானே=மனத்தால் பாவனைசெய்தே, வந்தது ஆகும்=உண்டானதாம், நினைத்திடில்=ஆராயின், அநேக லோகம் நிற்பது=(மனதின் பாவனையாலுண்டான) அநேகவித வுலகங்களும் (அம்மனத்தோடுகூட) நிற்பது, அவ்வறிவில் அன்றோ=(வாயுவசத்தால சமுத்திரத்தி

லுண்டான தரங்கபேன புற்புதங்கள் சமுத்திரத்திற்போல மனத்திற்கு ஆதாரமான) அப்பிரஹ்ம சைதந்நியத்திலல்லவா, (ஆகவின்), இது அறிவு ஆம் என்று=(அறிவிலுண்டாகி, அறிவில் நிற்கும்) இம்மன முதலான பிரபஞ்சம் அறிவேயாகுமென்று, எனைத் தனி விசாரித்திட்டால்=(அறிவாகிய) என்னைச் சுத்தமாக (இங்ஙனம்) விசாரித்திடில், அனைத்தையும் கடந்து=(மனமுதலான) பிரபஞ்சமனைத்தையுங் கடந்து, அப்பாலும்=அதற்குமேலும், அந்தம் அற்று=முடிவிறந்து, ஏகம் ஆய்=சுவகதாதி பேதரகிதமாய், நிறைந்தோன் நான்=நிறைந்திருப்பவன் யான். எ - று.

நான்கு செய்யுளின் அபிப்பிராயம்:—சீவான்மா, பரமான்மா என ஆன்மா இருவகைத்தாம்; அவற்றுள், சேதனரூபமான ஆன்மா மூவகைத் தேகத்தோடுகூடத் தாதான்மியத்தாற் சீவனாய்ப் போக்திருத்துவத்தை யடைந்துளது. சச்சிதானந்த சொரூபமான பரமான்மா நாமரூபகற்பனைக் கதிஷ்டானமாகலின், அந்நாமரூபங்களோடு தாதான்மிய மடைந்து போக்கியத்துவத்தை யடைந்துளது. 164, 165, 166 - ம் செய்யுட்களிற் பிரகாராந்தரமாகச் சொன்ன ஆன்மாநந்தவாயிலானும், இந்த 167 - ம் செய்யுளிற் றொகுத்துக்கூறிய அத்துவிதாநந்த வாயிலானும் முறையே மூன்று தேகத்தினின்றும், பிரபஞ்சத்தினின்றும் சீவான்மாவையும், பரமான்மாவையும் பிரித்தறியும்பொழுது போக்தா, போக்கியம் என்னும் இவையில்லாமற் போதலின், போக்தா, போக்கியங்களின் சம்பந்தத்தால் உளவாகாநிற்கும் மூவகைச் சரீரங்களின் சுரங்களான இகலோகதுக்கமும், அக்கினியிலிடும் பஞ்சுபோலச் சமுச்சயரகிதமான பிரமான்மவயிக்கிய ஞானத்தால் சகல சஞ்சித கர்மங்களும் வெந்து போனதனாலும், தாமரையிலையிற் சலம்போல அகர்த்திருத்துவ ஞானத்தால் ஆகாமியகர்மங்கள் பற்றுமற்போனதனாலும், புண்ணிய பாவ சிந்தனரூபமான பரலோகதுக்கமும் அபாவமாயின என்பதாம். (167)

(305) [இனிச் சாவகாமாப்தி கூறத்தொடங்கிச் சார்வபௌமன் முதல், இரண்யகர்ப்பாந்தமான 131 - ம் செய்யுளில் முன்சொன்ன சர்வாநந்தங்களிலும் ஞானிஆசையில்லாமல் அருந்தினவன்போல வமைந்திருப்பானனும், தனதுதேகத்தின்கண் ஆநநதாகாராமான புத்திக்குச் சாட்சியா யிருப்பதால் ஆநநதியாயிருப்பதுபோலச் சார்வபௌமன்முதலிய தேகங்களிலும் ஆநந்தாகார புத்திக்குச் சாட்சியாயிருப்பதால் ஆநந்தியாயிருப்பதனனும், சாமவேதத்திற் சொல்லிய படி சர்வான்மபாவத்தால் சர்வபோக்கிய ரூபமுநானுகிறேன், சர்வபோக்தா ரூபமுநானுகிறேன் எனனும் அநுபவத்தானும் சர்வகாமாப்தி ஞானிக்குண்டேன்று முன்னூலான பஞ்சதசியிற்கூறியிருப்பதை இங்கே ஆட்சேப சமாதான வாயிலாக 168 - ம் செய்யுண் முதல் நான்கு செய்யுட்களாற்கூறுகின்றார்.]

அந்தவா றிருந்து கொண்டே யாநீர்த மநுப விக்க
எந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னில்

இந்தமூன் றவஸ்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கில்
அந்தவா றிருந்து நீயு மாநந்த மடைய லாமே. (168)

இ-ள். அந்த ஆறு இருந்துகொண்டு=முன்சொன்னபடி சர்வாதீதமாய், அநந்தமாய், ஏகமாய்ப் பூரணமா யிருந்துகொண்டு, ஆநந்தம் அநுபவிக்க=சர்வகாமாப்தியென்னும் வித்தியாநந்தத்தை யநுபவிக்க, எந்த ஆறு இருந்து கொண்டால்=எவ்வாறிருந்தால், எனக்கு, இது தெரியும் என்னில்=இச் சர்வகாமாப்தி தோன்றுமென்று நீ சங்கிக்கில், இந்த மூன்று அவஸ்தை தம்முள்=இச்சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூவித அவஸ்தைகளில், எழுந்திடும் விருத்தி நீக்கில்=எழாநிற்கும் கோர, மூடமுதலிய விருத்திகளை ஒழிப்பாயாகில், அந்த ஆறு இருந்து=முன் கூறிய வழியேநின்று, நீயும், ஆநந்தம் அடையலாம்=வித்தியாநந்தம் பெறலாம். எ-று.

[விருத்திநாசவுபாயங் கூறல்.]

வாதனை வசத்தி னாலே வருகிற விருத்தி யெல்லாம்
எதினா லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யில்
போதமா மிராசன் றானாய்ப் புந்தியைம புலன்க ளெல்லாம்
தாதரா யிருக்கப் பெற்றாற் சகலமு மடங்குந் தானே. (169)

இ-ள். வாதனை வசத்தினாலே=சம்ஸ்காரவசத்தால், வருகிறவிருத்தி எல்லாம்=(அந்தக்கரணத்தினின்றும்) எழுகின்ற விருத்திகளனைத்தையும், ஏதினால் அடக்கல் ஆகும் என்று=யாதோருபாயத்தால் நிரோதித்தல் கூடும் என, விசாரம் செய்யில்=நீ ஆராயில், போதம் ஆம் இராசன் தான் ஆய்=ஞானரூபமாகிய (ஆன்மதத்துவ) அரசன்றானாகி, புந்தி ஐம்புலன்கள் எல்லாம்=அந்தக்கரணமும், ஐவகை ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும் ஆகிய வனைத்தும், தாதர் ஆய் இருக்கப்பெற்றால்=(தனது) ஆளாக விருக்கப்பெறில், (தனது வசமாக விருக்கப்பெறில் என்றபடி), சகலமும் தானே அடங்கும்=சகலவாசனைகளுந் தானே நிரோதமாம். எ-று.

இரண்டாம் பாதத்திலுள்ள தான் அசை.

"போதமா மிராசன் றானாய்ப்புந்தியைம் புலகன்க ளெல்லாந், தாதரா யிருக்கப் பெற்றால்" எ-து,

"அந்தமந் திரியந்த வேந்தா லௌிதுவென் றிடில் வணங்குறும்"—

என்னும் வாசிட்டக் கருத்து. "விருத்தி" எ-து, அகந்தை, மமதை, காமக்குரோதாதிரூப அந்தக்கரணத்தின் பரிணாமங்களை. (169)

[விருத்திநாசத்திற்கு இன்னும் அநேகவுபாயங்கூறல்.]

விருத்திக ளடக்க வின்னம் விஞ்ஞேதமாம யோகத் தாலே
துருத்திபோ லூது மூச்சைச் சுகமுட னடக்கி னிற்கும்

கருத்ததற் கில்லை யென்னிற் காரண சரீர மாகிப்
பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே. (170)

இ - ள். விருத்திகள் அடக்க=விருத்திகளையடக்க (வேண்டின்), இன்னம்=மேலும், விநோதம் ஆம் யோகத்தாலே=(வாசிட்டத்தில், வீதகவ்வியர் கதையிற் கூறியிருக்கிறபடி) விநோதமாக (ச் செய்யாநிற்கும் ரேசக, பூரக, கும்பகாதிப் பிரயத்தனரூபமான) யோகாப்பியாசத்தால், துருத்திபோல் ஊதும் மூச்சை=(கொல்லன்) துருத்திபோல (நாசித்துளை வழி) வீசாநிற்கும் பிராணவாயுவை, சுகம் உடன் அடக்கில்=அநாயாசமாக நிரோதஞ்செய்யில், நிற்கும்=(வாயுவடங்கினால் ஆகாசத்திற் றூளியடங்குவதுபோல) விருத்திகளடங்கும், அதற்குக் கருத்து இல்லை என்னில்=அவ்வியோகமப்பியாசித்தற்கு விருப்பமில்லையாயின், காரணசரீரம் ஆகி=(தூல சூக்கும சரீரங்கட்குக்) காரணசரீரமாய், பெருத்தது ஓர் அவித்தை தன்னை=(காடாந்தகாரம்போலுங்) கனத்திருப்பதான ஓரவித்தையை, பிடுங்கிடில்=நாசஞ்செய்யில், தானே அடங்கும்=(உபாதான நாசத்தால் வேறொருநிமித்தத்தை யபேட்சியாமலே விருத்திகள் நாசமாம். எ - று.

விருத்திகடாமும் என்றும் பாடமுளது. பேரிடரை யளிப்பதாகிய அடயோகமல்லாத தானவென்பார், "விநோதமாம்" என்றார். இதில் "பிடுங்கிடில்" என்பதும், பின்வருஞ் செய்யுளில், "களைவது" என்பதும் விருட்சத்திற்கு வேர்போல விருத்திகட்கு அவித்தை உபாதான காரணமான மூலமாகலின், அது நீங்கவே விருத்திகள் நிச்சயமாக நீங்காநிற்கும் என்னும் பொருளைக் குறிப்பித்து நின்றன.

"காரண சரீர மாகிப், பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே" என்று இவ்வாசிரியர் கூறினதுபோலவே வாசிட்டத்தில்,

"உலகமெலாம் பிரமமெனும் பாவனையா லஞ்ஞானமோழிந்து பேர்ஞன், மலமுறுவா தனைதோன்று"—

என்று கூறியிருப்பது காண்க. (170)

காரண சரீரத்தைப் போக்கும் உபாயம் யாதென் றாட்சேபித்து அவ்வுபாயங் கூறுகின்றார்.]

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றோதில்
ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்தி லுய்த்துப்
பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே. (171)

இ - ள். காரணசரீரம் தன்னைக் களைவது=காரணதேகமான அவித்தையைப் போக்குவது, எவ்வாறு என்று ஓதில்=எத்தன்மையான உபாயத்தாலாம் என்று ஆட்சேபிக்கில், ஆரணம் பொய் சொல்லாதே=(ஏனைய் நூல்போலச்) சுருதி அசத்தியஞ் சொல்லமாட்டாதே, (ஆகலின்), அதன்

பொருள் அகத்தில் உய்த்து=("ஈண்டு நாநாவானவை அற்பமுமில்லை, ஈதனைத்தும் பிரஹ்மமல்லவா" என்பனமுதலிய) சுருதியின் அர்த்தத்தை மனத்தின்கண்ணே (திடமாகத்) தரித்து, பூரணம் ஆகும் என்மேல்=பரிபூரண சொரூபமான என்கண், புவனங்கள் தோற்றம் என்று=பிரபஞ்சங்கள் பிரதிபாசமாத்திரமாம் என்று, தாரணை வந்தது ஆகில்=*நிச்சயம் வந்ததாயின், எங்கே தரித்திடும் அவித்தை=அவித்தை எங்கேயிருக்கும்: (ஓரிடத்தும் இராமல் நாசமாய் விடும்). எ - று.

"பூரண மாத மென்மேற் புவனங்க டோற்றம்" எ - து, கண்ணாடியிற் பிரதிவிம்பியாநின்ற நகரம்போலும், அருகின் மரங்கள் வாவிசலத்திற்போலும் என்றறிக. சூரியோதயமாயின், அந்தகாரம் ஓரிடத்துங் காணாமல் ஒழிந்து போவதுபோலச் சமுசயரகிதமான திடஞானத்தால் ஆவரணரூபாம்சமான அஞ்ஞானம் லேசமுமில்லாமல் ஒழிந்துபோவதால், "தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே" என்றார்.

சமுசயரகிதமாகப் பரிபூரண பிரஹ்மானுபூதி எழவே அவித்தை நிவிர்த்தியாம்; உபாதானகாரணமான அவித்தை நீங்கவே, அநாதி காலவாசனைகள் ஒழிந்துபோம்; அவை ஒழியவே, அவற்றின் வசத்தால் எழாநிற்கும் விருத்திகள் அடங்கிவிடும்; விடவே, தன்தேகத்தில் ஆநந்தாகார விருத்திக்குச் சாட்சியா யிருப்பதுபோலச் சார்வபௌமன் முதலியோர் தேகங்களிலும் ஆநந்தாகார விருத்திக்குச் சாட்சியாயிருப்பதால், சர்வகாமாப்தியுளதாம் என்பதாம்.

(306) [இனிக் கிருதகிருத்தியத்தன்மை கூறுகின்றார்.]

அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவகா ரத்தில்
எப்படி கூடு மென்னி லென்னைவிட் டொன்று மில்லை
இப்படி கண்ட வெல்லா மென்மய மென்க ளுப்போல்
கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே. (172)

இ - ள். அப்படி இருக்க=முன்சொன்னபடி (பரிபூரணமான என்கண் அகங்காராதி, ஆகாசாதிப் பிரபஞ்சந் தோற்றரவு மாத்திரம் என்னுந் தாரணையோடுகூடி) நிற்க, விவகாரத்தில் சித்தம் அலைதலால்=(பிராரத்த வசத்தால் வராநின்ற லௌகிகமோ அல்லது, வைதிகமோ யாதானுமொரு) வியவகாரத்திற் (பிரவிர்த்திக்குங்கால்) சித்தம் விட்சேபப்படுவதால், எப்படி கூடும் என்னில்=எங்ஙனங்கூடும் என்று சங்கிக்கில், என்னை விட்டு ஒன்றும் இல்லை=(அசங்க சிதான்மாவான) என்னைத் தவிர யாதொரு (பிரபஞ்சமும் சசவிஷாணம்போலும், வந்தியாசுதன்போலும்) இல்லை, [அநுபவகோசரமான பிரபஞ்சத்திற்குச் சசவிஷாணம் போலும், வந்தியாசுதன் போலும் திரைகாலிக அபாவத்துவங் கூடாதே யெனின்:—அதற்குக் கூறுகின்றார்.]இப்படிகண்ட எல்லாம்=இங்ஙனம் (நாமரூபங்களாகக்) காணுகின்ற (பிரபஞ்சங்கள்) அனைத்தும், என் மயம்=(தரங்கபேனபுற்புதங்கள் எப்படிச்

* நிச்சயம்=சமுசயத்தின் வேறான ஞானம்.

சலமயமோ, கடகமகுடாதி பூடணங்கள் எப்படிச் சுவர்ணமயமோ அப்படி அகண்டைகரச சச்சிதாநந்தரூபனுன) எனது மயமாம், (அல்லது), என்கனு போல் கற்பிதம்=எனது சொப்பனப் பிரபஞ்சம்போல மித்தையாம், என்று =என்று (நிச்சயித்து உபேட்சித்து), தானே காண்கின்ற=(வாகியமாயும், ஆந்தரமாயுமுள்ள பிரபஞ்சங்களைச்) சுயமே அறியாநின்ற, சித்தே நான்= அசங்கசிதான்மாவே நான். எ - று. (172)

[இதுவுமது.]

சித்துநா னிறைந்தோ னென்ற நிடமற வாதி ருந்தால்
எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன
நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனவே போல
அத்தனை யும்பொய் தானே யாநந்த வடிவு நானே. (173)

இ - ள். சித்து நான்=அசங்க சிதான்மாவாகிய நான், நிறைந்தோன் =பரிபூரணப்பிரஹ்ம மானேன், என்ற திடம்=என்னுமுறுதி, மறவாது இருந்தால்=(பிராமணனுக்குப் பிராமணத்துவம்போல) மறவாதிருக்கின் (கிருதகிருத்தியனுன என்னுடைய புத்தியானது லோகானுக்கிரகவிச்சை யால்) எத்தனை யெண்ணினாலும்=எத்துணை (விஷ்ணுவாதி மூர்த்திகளைத்) தியானிக்கினும் (தியானிக்க, அன்றிப் பிரஹ்மாநந்தத்தின்கண்ணே லீனமா யினும் ஆகுக), ஏதுசெய்தாலும்=(சரீரமானது தேவார்ச்சனை, ஸ்நானம், சௌசம், பிட்சை முதலியவற்றில்) யாதுசெய்யினும் (செய்க, வாக்கானது பிரணவ ஜபம், வேதாந்தசாஸ்திரபாடம் முதலியவற்றுள், யாதுசெய்யினுஞ் செய்க), என்ன=(அவைகளை நான்செய்பவனும், செய்விப்பவனும் அலனுக லின்) அவைகளால் எனக்கு என்ன (ஆனி: ஒன்றுமில்லை), நித்திரை உணர் ந்த பின்பு=நித்திரையினின்றும் விழித்த பின்னர், நிற்கின்ற கனவே போல =(பிரயத்தனமில்லாமலே மித்தையாகத்தோன்று) நிற்குஞ்சொப்பன(வியவ கார)ம் போல, அத்தனையும் பொய்தான்=(காயவியவகாரமான தேவார்ச் சனை முதலியனவும், வாக்கின் வியவகாரமான ஜப முதலியனவும், புத்திவிய வகாரமான மூர்த்தித்தியானுதிகளும் ஆகிய) அவ்வளவும் மித்தைதான், ஆந ந்த வடிவு நான்=பரமாநந்த பூரணரூபன் நானும். எ - று.

இங்ஙனங் கூறியவாற்றல் எனக்குச் செய்யற்பாலனவனைத்துஞ்செய்து முடிந்தனவாம் என்பது கருத்து. (173)

(307) [இனி பிராப்தப் பிராப்பியத்தன்மை:—கிருத கிருத்தியத் தன்மையால் திருப்தனுனவன் பின்னர், பிராப்தப்பிராப்பி யத்தன்மையாற் றிருப்தனுய்த் தனது மனதினுல் நிரந்தரம் இவ்வாறு கருதுகின்றனன் என்பதைத் தன்மையிடத்து வைத்துக் கூறுகின்றனர்.]

நானென வுடலைத் தானே நம்பினே னநேகசன்மம்
ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது

கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி னாலே
நானென வென்னைத் தானே நம்பியீ டேறி னேனே. (174)

இ-ள். அநேக சன்மம்=(கீழ்ப்போன) அநந்த ஜநநங்களில், நான் என [illegible]டலேத்தானே நம்பினேன்=யானென்று (சுர, நர, திரியக்காதி ரூபங்களான) தேகங்களையே (அறியாமையால்) விசுவசித்திருந்தேன், (அப்போது) ஈனர் ஆய் பெரியோர் ஆகி இருந்தவை எலாம்=இழிந்தோராயும், உயர்ந்தோராயும் இருந்த அவையனைத்தையும், இப்போது=இப்பொழுது, சற்குருவினாலே=(கிருபாமூர்த்தியான சற்குருவினாலே, கானலில் வெள்ளம்போலக் கண்டு=கானலிடத்து (த் தோன்றுநின்ற பிராதிபாசிக) சலம்போல (மித்தையாக) க் கண்டு, நான் என என்னைத்தானே நம்பி=நானென்று (பிரத்தியகபின்ன பரமான்மாவான) என்னையே விசுவசித்து, ஈடேறினேன்=உய்யப்பேற்றேன். எ-று.

இது குருவை வியந்தது. (174)

[இதுவுமது.]

என்னபுண் ணியம்மோ செய்தே னேதுபாக் கியமோ காணேன்
நன்னிலந் தனிலெ ழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னியீ னானே னுத் தரீயந் தை வீசு கின்றேன்
தன்னிய னின்னு நானே தாண்டவ மாடு கின்றேன். (175)

இ-ள். என்ன புண்ணியமோ செய்தேன்=எப்படிப்பட்ட (அதிகிருஷ்டமான) புண்ணியங்களை யான் செய்தேனோ, ஏது பாக்கியமோ=யாது அதிஷ்டமோ, காணேன்=யான் அறியேன், நன்னிலந்தனில் எழுந்த=நன்னிலமென்னும் மதுவனத்தில் (அருளே உருவமாய) எழுந்தருளிய, நாரணன் கிருபையாலே=நாராயணதேசிகருடைய பெருங்கருணையினாலே, நான் தன்னியன் ஆனேன்=நான் கிருதார்த்தனானேன், உத்தரீயத்தை வீசுகின்றேன்=ஆகாசத்தை ஆகாசத்திலெறிந்து விளையாடுகின்றேன், தன்னியன் நான்=கிருதார்த்தனான யான், இன்னும் தாண்டவம் ஆடுகின்றேன்=மேலும் ஆநந்தக் கூத்தாடுகின்றேன். எ-று. (175)

[குருவை வியநது நுதித்தல்.]

தத்துவ ஞானம் வந்த சந்தோட வதிச யத்தால்
நித்தமா டுவன்கா ணென்ற நிலைமுன்ன மேய றிந்த
சத்திய மதனை லன்றோ தாண்டவா வென்ற ழைத்தார்
அத்தனை மகிமை யுள்ளோ ரன்னையும் பிதாவுந் தாமே. (176)

இ-ள். தத்துவ ஞானம் வந்த=(சகல வநர்த்தங்களையுமொழித்து நிரதிசயாநந்தத்தை நேரே பயக்கவல்ல) தத்துவ ஞானத்தா லுண்டான, சந்தோட அதிசயத்தால்=வித்தியாநந்த மேலீட்டால், நித்தம் ஆடுவன்காண் என்ற

நிலே=நாடோறும் (இவ்வாறுநந்த) நடனஞ்செய்யாநிற்பனென்னும் நிர்ணயத்தை, முன்னமே அறிந்த=திருவடியை யடைந்தவன்றே, திருவுளத்தின்கண்ணே யுணர்ந்த, சத்தியம் அதனுல் அன்றோ=உண்மையான சர்வஞ்ஞத்வத்தாலல்லவா, தாண்டவா என்று அழைத்தார்=தாண்டவாவென்று (காரண) நாமமிட்டு விளித்தனர், (ஆகலின்) அத்தனை மகிமை உள்ளோர் தமே=அவ்வளவு மகிமையுள்ள எனதுகுருவே, அன்னையும் பிதாவும்=(எனக்குத்) தாயுந் தந்தையுமாம், எ - று.

> "இந்தவி டும்பையு டம்புறு மேது
> தந்தையெ னப்புகழ் கின்றிலர் தக்கோ
> ரந்தமி லாதவ கண்டமு நம்முட்
> டந்தவர் தந்தையெ னச்சமை வுற்றார்."—

என்று பிரமகீதையிற் கூறியிருப்பதால், இவரும் "அன்னையும் பிதாவும்" என்று குருவையே கூறினர் எனக்கொள்க. அன்றியும்,

> "தந்தை தாயுமெய்த் தகையுடை யுறவும்"—

என்னுஞ் செய்யுளானுமறிக. "தாண்டவராயன்" என்னுந் திருநாமம் குருவினுல் இடப்பட்டது. (176)

[இன்னும் குருசாஸ்திராதிகளைப் புகழ்ந்து வணங்குதல்.]

> வந்ததோ ரிவ்வா நந்த மகிழ்ச்சியா ருடன்சொல் வேன்யான்
> சிந்தையி லெழுந்து பொங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி
> அந்தமில் லாத தாயிற் றப்படி குருவே தாந்த
> மந்திர மருளு மீசன் மலரடி வணங்கி னேனே (177)

இ - ள். வந்தது ஓர் இவ்வாநந்த மகிழ்ச்சி=பிரஹ்மவித்தையாலுண்டானதான ஒப்பற்ற இவ்வித்தியாநந்தத்தின் மகிழ்ச்சியை, ஆருடன் சொல்வேன் யான்=யான் யாவரோடு கூறுவேன், சிந்தையில் எழுந்து பொங்கி=புத்திவிருத்தியின்கண் ணுதயமாகி மேலிட்டு, செகம் எலாம் நிறைந்து தேங்கி=ஜகத்தனைத்தினும் வியாபித்துப் பூரணமாய்.அந்தம் இல்லாதது ஆயிற்று=கரையிறந்த தாயினது, அப்படி (அருளும்)=அப்படி (ப் பட்ட வித்தியாநந்தத்தை) அருளாநிற்கும், குரு=பிரஹ்மநிஷ்டரையும், வேதாந்தமந்திரம்=வேதாந்த வாக்கியங்களையும், அருளும் ஈசன்=(குருரூபமாகவும், வேதாந்தவாக்கிய ரூபமாகவும் இருந்து) அருளாநிற்கும் (சர்வக்ஞசிகா மணியாகிய) ஈசுரனுடைய, மலர் அடி வணங்கினேன்=மலர்போலுந் திருவடியையும் பணிந்தேன். எ - று. (177)

(308) [சொல்லிவந்த வித்தியாநந்தத்தை முடிப்பதோடு நூற் பயன் கூறல்.]

> வித்தியா நந்த மிந்த விதமென விளம்பி னேமே
> பத்தியா லிந்த நூலைப் பார்த்தது பவித்த பேர்கள்

நித்திய தரும நிட்டை நிலைதனை யறிந்து சீவன்
முத்தியை யடைந்தி ருந்த முனிவர ராகு வாரே. (178)

இ - ள். வித்தியாநந்தம் இந்த விதம் என விளம்பினோம்=தத்துவ ஞான (த்தா)ல் ஆவிர்ப்பவியாநின்ற) ஆநந்தம் இந்தப்படி (துக்காபாவம், சர்வகாமாப்தி, கிருதகிருத்தியம், பிராப்தப்பிராப்பியம்) என (நான்குவகைத்தா (மென்று) கூறினோம், பத்தியால் இந்த நூலைப்பார்த்து=விசுவாசத்தோடு (கூடிப் பிரஹ்மநிஷ்டரான குருவையடைந்து அவர் முகத்தினால்) இந்நூலை (க் கேட்டு) விசாரித்து, அநுபவித்தபேர்கள்=(இந்நூலின் விடயமான பிரஹ்மான்ம வயிக்கியத்தை இதிற் கூறியபடியே) அநுபவித்தோர்கள், நித்திய தருமநிட்டை நிலைதனை அறிந்து=நித்தியமான புண்ணிய விசேஷத்தை யுடைய சமாதியின் ஆரூடத்தை அநுபவித்து, சீவன்முத்தியை அடைந்து இருந்த=சீவன்முத்தியையடைந்து (பூர்வம்) இருந்த, முனிவரர் ஆகுவாரே=* முனிவரர் நிகராவர். எ - று.

இங்கே, "தருமம்" எ - து, தனது † விலாசத்தோடுகூட அவித்தையை நிவிர்த்தித்தற்கு நேரேகாரணமான சாட்சாத்காரத்திற்குப் பிரதிபந்தங்களான மலவிட்சேப தோடங்களை நிவிர்த்திப்பிப்பதுவாயிலாகச சாதனபூதமான புண்ணிய விசேஷத்தை. (178)

(309) [குருவின் ஆக்ஞாபலங்கொண்டு இப்பிரபந்தம் முற்றுவித்தேனெனல்.]

ஆரணப் பொருளாம் வித்தி யாநந்தம் விளங்கவேதும்
காரணங் குறைவி லாமற் கைவல்ய நவநீ தந்தனைப்
பூரண மாக்க வேண்டிப் பூர்வமா நன்னி லத்தில்
நாரணகுருந மக்கு நவின்றனர் யோகில் வந்தே (179)

இ - ள். ஆரணப் பொருள் ஆம்=சுருதியின் பொருளான, வித்தியாநந்தம் விளங்க=(சாதனசதுஷ்டய முதல்) வித்தியாநந்த (பரியந்தம் அதிகாரிக்கு நன்கு) விளங்க, காரணம் ஏதும் குறைவு இலாமல் (எடுத்துக்கூறவேண்டுங்)காரணங்களுள், யாதொன்றுங் குறைவுபடாமல், கைவல்ய நவநீதத்தை=கைவல்யநவநீத (மென்னு நாமமுடைய இப்பிரபந்த) த்தை, பூரணம் ஆக்கவேண்டி=சம்பூரணமாக்கி (உலகுக்களித்தற்பொருட்டுக் கருணை கூர்ந்து) பூர்வம் ஆம் நன்னிலத்தில்=பழைமையாகிய நன்னிலமென்னும் ஸ்தலத்தின்கண், நாரணகுரு=நாராயண ரென்னுந் திருநாமமுடைய குருவரன், நமக்கு, யோகில் வந்து=தியான (ம் பண்ணுங்) காலையில் ஆவிர்ப்பவித்து, நவின்றனர்=ஆக்ஞாபித்தனர். எ - று.

---

* முனி=மனனசீலர் : வரர்=சிரேஷ்டர்; இவர் சுகர், நாரதர் முதலியோர்.

† விலாசம்=காரியசமூகம்.

இங்ஙனங் கூறினது கொண்டு கல்வி, கேள்விகளா லுள்ளதாகிய எனது புத்திவலிகொண்டு இந்நூல் கூறினனல்லன் என அவையடக்கங் கூறின வாறு மாயிற்று. (179)

(310) [அநேக ஞானசாஸ்திரப் பொருள்களையும் இந்நூல் ஒன்றிலேயே அறியலாகுமெனத் திருஷ்டாந்த முகத்தாற் கூறுகின்றார்.]

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனற் றலைமேற் கொண்டால்
உலகினிற் றீர்த்த மெல்லா முற்றபே றடைவார் போல
நலமையா குங்கை வல்ய நவநீத நூலைக்கற்றோர்
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய் வாழ்வார். (180)

இ-ள். குலவுசற்குருவின்=(அகண்டைகரசப் பிரஹ்மசொரூபமாய்ப்) பிரகாசியாநிற்குஞ் சற்குருவினுடைய, பாதக்குளிர்புனல் = சீர்பாதத்தில் அபிஷேகஞ்செய்த சீதளதீர்த்தத்தை, தலைமேல் கொண்டால்=சிரசின் மீது புரோட்சித்துக்கொள்ளில், (அப்படிக்கொண்டவர்) உலகினில் தீர்த்தம் எல்லாம் உற்றபேறு=உலகின்கண்ணுள்ள கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களனைத்திலுஞ் சென்று ஸ்நாநஞ்செய்தோர் பெற்ற பேறனைத்தும், அடைவார்போல=(எப்படிப்) பெறுவாரோ அதுபோல, நலமை, ஆகும்=(அநர்த்தநிவிர்த்தி, ஆநந்தப்பிராப்திரூபமான) பயனைக் கொடுப்பதாகிய, கைவல்ய நவநீத நூலைக் கற்றோர்=கைவல்யநவநீத மென்னு நாமமுடைய இந்நூலைக் கற்றோர்கள், பலகலை ஞான நூல்கள=பலகலைகளாகிய ஞான நூல்களனைத்தையும், படித்த ஞானிகள் ஆய் வாழ்வார்=கற்றுணர்ந்த ஞானிகட்கொப்பாய் வாழ்வார்கள், எ - று.

இங்ஙனங் கூறினமையின் உலகில் தீர்த்தங்களோ அநந்தம்; அவ்வநந்த தீர்த்தத்திலும் ஆடி அவைகளால் வரும் பேறடைதல் யாவர்க்கும் அரிது: குருபாதோதகந் தலைமேற்கொள்ளப்பெறில், அவ் வளவிறந்த தீர்த்தப்பேறும் பெறுதல் எளிதாவதுபோல, அளவிறந்த ஞான நூல்களையு மாராய்ந்து அவற்றின் பொருள்களையறிதல் யாவர்க்கு மரிது: இக்கைவல்ய ஞானநூலினைக் கற்கப்பெறில், அளவிறந்த ஞானநூற்பொருள்களனைத்தையும் இதனாற் பெறுதல் யாவர்க்கும் எளிதாகும்; ஆகலின், சிஞ்ஞாசையுடையோர் வேதாந்தத்தின் சூத்திரரூபமான இந்நூலை அவசியங் கற்கவேண்டும் என்பது கருத்து. (180)

சந்தேகந்தெளிதற்படலம்
முற்றிற்று.

இப்படலம் 2-க்கு செய்யுள் - 288.
கைவல்லிய நவநீதம் தத்துவார்த்த தீபவுரை
முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

[இந்நூலாசிரியர் மாணாக்கர்,
இவ்வாசிரியரையும், இந்நூலாலடையும்
அநுபூதியையுந் துதித்தல்.]

அண்ணறனை னருளி னாலே யகம்புற மன்றி யொன்றாய்
எண்ணமி லக்கி யார்த்தத் தின்பொரு ளாதுநா னென்ன
நண்ணின சரீர மாதி நாதத்தி னுபாதி யென்றே
கண்ணிதா யனைத்துங் காணக் காட்டினன் றண்ட வேசன். (1)

ஆன்ற பதமா மூன்றற்கு மதுரீ யானு யெனும்பொருளிற்
சான்ற துரியா தீதமெனுந் தடையற் றிலங்கொண் சைதந்நியம்
ஊன்றியுணர்ந்தோர் விகற்பமயக் கொழித்துத் தடையு மூடறுத்துத்
தோன்றித்தானே தானுவர் துலங்குந் தமக்கே சுவாநுபவம். (2)

என்னு மாவாக் கியநான்கு மிசைக்கும் வித்தியா நந்தம்
சொன்ன நாரா யணன்பாதந் தொழுது துதித்தோர் துகளற்றோர்
இன்னமாணாக் கன்குருவாற் சந்தே கந்தீர்ந் திடபேதத்தே
துன்னி நிறைந்து நின்றோர்க ளேயே முத்த ராகுவரே. (3)

தத்துவ விளக்கத் தாலுஞ் சந்தேகந் தெளித லாலும்
ஒத்திருள் விடாத மாயா வுள்ளிரு ளிரிய வோங்கும்
சித்ததா மொளிவி ளங்கச் செய்துபின் விருத்தி பேதப்
புத்தியால் வருமை யத்தைப் புரையறத் தெளிவித் தாண்டான். (4)

ஆண்டதே சிகனு மைய னாரண னனந்தன் பாதம்
பூண்டவா ரோபத் தான்மூன் பொய்ம்மயக் காய்வந் தத்தை
மாண்டகல் லபவா தத்தான் மாய்த்தரு ளேக்கத் தென்றும்
காண்டிட வைத்த ளித்த காரணா போற்றி போற்றி. (5)

சற்குருவே துணை.

உ

சிவமயம்

க. சிவப்பிரகாச சுவாமிகள் புஸ்தகசாலை

வியாசர்பாடி சென்னை.

புத்தக விளம்பரம்.

	விலை.
ஸ்ரீ ஆத்மபுராணம	,,
பகவற்கீதை கூடார்த்த தீபிகை (வசனம்)	,,
வேதாந்த மகா சிந்தாமணி	,,
நியாயப்பிரகாசம்	,,
தத்துவாநு சந்தானம்	,,
பகவற்கீதை (ஸ்ரீ பொன்னம்பலசுவாமிகள்) உரை	,,
கீதாத்திரயம் (பகவற்கீதை, ஈசுரகீதை, பிரமகீதை (வியாக்யானத்துடன்)	,,
சித்தாந்த லேசசங்கிரகம்	,,
நியாயமுக்தாவலி	,,
ஞானசாதகசகாயம்	,,
அணுகீதை	,,
உபதேச சகஸ்ரீ	,,
ஆத்திசூடி (பாஷிய ஆந்தரார்த்தம) உரை	,,
வேதாந்த முக்தாவலி	,,
பிரமகீதை மூலம் சுத்தப்பதிப்பு	,,
மகாவாக்கிய இரகசியம்	,,
ஸ்ரீ பஞ்சாக்ஷர பாஷியம்	,,
பர்த்ருஹரி வைராக்கிய சதகம் உரையுடன்	,
சொரூபாநு சந்தானம்	,,
கிரதிசயாரந்தத்திரட்டு	,,
அஷ்டோத்ரசதநாமாவளி	,,

விலாசம்:—

மூர்த்தி ஸ்வாமிகள்,

ஸ்ரீ கர. சிவப்பிரகாச ஸ்வாமிகள் மடாலயம்

வியாசர்பாடி.

கெ. 45, அருகசைநுமசா ரோட்டு

பெரம்பூர், பாரக்ஸ், சென்னை.

வி. அ. தயால் சார்லு பிரதிநிதி.